# பெரியார் ஆயிரம்

## வினா-விடை

(புதிய அத்தியாயங்கள் இணைக்கப்பட்ட மக்கள் பதிப்பு)



தொகுப்பு : கி.வீரமணி

**திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**

பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை - 600 007.

# நூல் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **பெரியார் ஆயிரம் (வினா–விடை)** |
| தொகுப்பாசிரியர் | : | **கி. வீரமணி** |
| பொருள் | : | வரலாறு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு : 2003<br>முப்பத்தொன்றாம் பதிப்பு : ஜூலை 2015 |
| நூல் அளவு | : | டெம்மி (140 mm x 220 mm) |
| அச்சு எழுத்து அளவு | : | 12 points |
| பக்கங்கள் | : | 344 பக்கங்கள் |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| வெளியீடு மற்றும் உரிமை | : | **திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**<br>சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161 |
| அச்சுக் கோப்பு | : | பெரியார் கணினி ஆய்வுக் கல்வியகம்,<br>சென்னை - 600 007. |
| அச்சிட்டோர் | : | ‘விடுதலை’ ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 007. |
| விற்பனை உரிமை | : | **பெரியார் புத்தக நிலையம்**<br>● பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,<br>வேப்பேரி, சென்னை -600 007. ☎: 044-26618163<br>● பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-2771815<br>info@periyar.org \| www.dravidianbookhouse.com<br>ISBN: 978-93-80972-74-9 |

# தொகுப்பாளரின் அறிமுக உரை

தந்தை பெரியார் அவர்கள் ஓர் ஒப்பற்ற சுய சிந்தனையாளர். அவரது சிந்தனைச் செறிவு, சமூக வளர்ச்சியின் வித்து, சமூகப் புரட்சிக்கான போர்க் கருவி.

அது மட்டுமா? அவரது பகுத்தறிவுச் சிந்தனை முழுக்க முழுக்க அறிவியலை அடிப்படையாகக் கொண்ட சிந்தனை. ஆதலால்தான் அவரை ஈடு இணையற்ற **சமுதாய விஞ்ஞானி** என்று அழைப்பதில் நாம் பெருமிதம் கொள்கிறோம்.

விஞ்ஞானம் என்றால் என்ன?


விஞ்ஞானி என்பவர் யார்?

விஞ்ஞான மனப்பாங்கு என்றால் என்ன?

விஞ்ஞான ஆசிரியர்கள் பலருக்குக்கூட விஞ்ஞானம் என்றால் அது ஒரு பாடம், படிப்பு என்ற அளவில்தான் சொல்லத் தெரிகிறது.

அதற்குரிய சரியான விளக்கத்தை ஏனோ அவர்கள் அறிந்து அல்லது புரிந்து சொல்வதில்லை.

அறிவியல் என்பது வரலாறு, குடிமையியல் (சிவிக்ஸ்) சட்டம் போன்று வெறும் பாடம் மட்டுமல்ல; அது ஒரு படிப்படியான வழிமுறை (Process) ஆகும். அது ஒரு முடிவு ஆகி நிற்பதில்லை; தொடர்ச்சி. வரலாற்று உண்மைகளுக்கும், அறிவியல் உண்மைகளுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு, அதுதான்!



‘அலெக்சாண்டர் படையெடுத்தார்; போரஸ் என்ற மன்னரைத் தோற்கடித்தார்’ என்பது வரலாற்று உண்மை. எத்தனை ஆண்டுகளுக்கும் இந்த வரலாற்று உண்மை மாறுவதில்லை. ஆனால் அறிவியல் உண்மை அப்படி முடிந்த முடிவாக ஒரு போதும் நிற்காது;

வளர்ந்து கொண்டே சென்று, பழையன கழித்து, புதியன அவ்விடத்தைப் பிடிப்பதற்குத் தயங்காத ஒன்று.

வெறும் கருதுகோள் (Hypothesis) தான் படிப்படியாக ஆதாரங்கள், ஆய்வுகளுக்குப் பிறகு அது அதற்குரிய பாடத் தத்துவமாக ஆகிறது. இந்தப் பாடத் தத்துவங்கள் புதியவை வந்தால் அவ்விடத்தைக் காலி செய்துவிட்டு அவைதாமே ஓடி மறைந்து விடுகின்றன.

புவிஈர்ப்புத் தத்துவம் சர். அய்சக் நியூட்டனால் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்று என்றாலும் கூட அது கணித மேதைகள் ஆய்வுகள் மூலமே உறுதிபடுத்தப்பட்டதாகிறது.

சார்லஸ் டார்வினின் பரிணாம வளர்ச்சி (Evolution Theory) தத்துவத்திற்கு முன்பு ‘லாமார்க்கியன் தத்துவம்’ (Lamarckian Theory) என்ற ஒன்றை அறிஞர்கள் நம்பினர்; ஏற்றனர்.

இயற்கையொட்டிய பல்வேறு சுற்றுச் சூழல்களுக்கேற்பத் தம்மை மாற்றிக்கொண்டு வளர்ச்சி அடைவது பிராணிகளின் இயல்பு என்பது அந்தத் தத்துவம். உதாரணமாக, ஒட்டகச் சிவிங்கிக்கு நீண்ட கழுத்து அமைந்தது - காடுகளில் வளர்ந்துள்ள மரங்களில் உள்ள தழைகளை, இலைகளை எளிதில் பறித்துத் தின்பதற்கான வசதிக்காகவே என்பது அத்தத்துவம்.

இது பிறகு உடைபட்டது. சார்லஸ் டார்வினின் சித்தாந்தம் மக்களால் மெல்ல ஏற்றுக் கொள்ளப்பட்டு, இன்று அதன் அடுத்த வேகமான கட்டம் மரபு அணுக்கள் பற்றிய (Genes and Chromosomes) தத்துவங்களின் வளர்ச்சியாகும்.

மேலும் மேலும் வளர்ச்சி, அய்சக் நியூட்டனின் புவிஈர்ப்பு மய்யத்தின் தத்துவம் போலவே ஆல்பர்ட் அய்ன்ஸ்டைனின் சார்பியல் கோட்பாடு (Relativity Theory) ஆகும்.

இதற்குமேல் இப்பொழுது தேவையில்லை. ‘இன்றைக்கு என்னைப் புரட்சிக்காரன் என்று சொல்லுகிறீர்கள். இன்னும் 2 நூற்றாண்டுக்குப் பிறகு என்னையே ‘இராமசாமி’ என்ற மிகவும் பிற்போக்கானவன் ஒருவன் இருந்தான்’ என்று கூறக் கூடிய நிலையும் வரலாம், என்றார் தந்தை பெரியார்.

என்னே அவரது அறிவுக் கூர்மை! இந்தத் தொலைநோக்குப் பார்வை எதை உணர்த்துகிறது? அவர் ஒரு அறிவியல் அடிப்படையில் சிந்தித்த தலைவர்.

அறிவுக்கு, அறிவியலுக்கு எல்லைக்கோடு எது?

அறிவியல் அடிப்படையில் சிந்திக்கும் எவருக்கும் அவர் கூறும் கருத்து முதலில் சமுதாயத்திற்கு அதிர்ச்சியைத் தரும். அதனால் எதிர்ப்புப் புயல் கிளம்பும்! அப்புயலையும் எதிர் கொண்ட பிறகு அக்கருத்திற்கான செல்வாக்கும் வெற்றியும் கூடிக் கொண்டே போகும்.

காரல்மார்க்ஸ் கூறியதுபோல, மாறுதல் ஒன்றுதான் மாறுதலுக்கு ஆளாகாதது!

தந்தை பெரியார் சொன்னார்: “எனக்கு எந்தப் பற்றும் இல்லை. எனக்குள்ள பற்று அறிவுப் பற்று, வளர்ச்சிப் பற்று - மானிடப் பற்று” என்றார்!

மனிதனின் பகுத்தறிவுச் சிந்தனையால்தான் வளர்ச்சிக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. 200 ஆண்டுகளுக்கு முன்பு உதைத்த கழுதை அப்படியேதான் இன்றும் பின்னங்காலால் உதைக்கிறது! இதில் மாற்றமில்லையே! மாறாக, வில்லும் வேலும் வைத்து இருந்த காட்டுமிராண்டி மனிதன் இன்று AK 47 Automatic Machine Gun போன்ற இயந்திரத் துப்பாக்கியை அல்லவா ஏந்தி நிற்கிறான்? மறுக்க முடியுமா? ஏவுகணை போர்க் கருவிகள் வளர்ச்சி சாதாரணமானவைகளா?

இந்தக் கண்ணோட்டத்துடன்தான் மேற்காட்டிய கருத்தினைத் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் கூறியுள்ளார்கள்.

வளர்ச்சி, முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் ‘ஏன்?’ ‘எதற்கு?’ ‘எப்படி?’ ‘யாரால்?’ எனக் கேள்விக்கு மேல் கேள்வி போட வேண்டும். கேள்வி கேட்டுக் காரண காரியம் அறிந்து தெளிவடைவதே அறிவியல் சிந்தனை வயப்பட்டவனாக ஆகும் வாய்ப்பைத் தரும்.

இந்தப் பின்னணியோடு தந்தை பெரியாரின் புது உலகச் சிந்தனைத் தத்துவங்களை உற்றுப் பாருங்கள்; ஊன்றிப் படியுங்கள்; உண்மைகள் தெளிந்த நீரோடையைப் போல் அது விளக்கிடும்!

எனவே தான் பெரியாரின் 'மண்டைச் சுரப்பை' உலகு ஏற்க ஆயத்தமாகி வருகிறது!

உலக அனுபவம், வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளே தான் தந்தை பெரியார் படித்த புத்தகங்கள் ஆகும்!

மக்களின் ஜீவ சுபாவத்தை நன்கு அளந்து அறிந்தவர் அவர்! எனவேதான் எதிர்ப்பு, ஏகடியம், ஏச்சுப் பேச்சுகள் அவரை அசைக்க முடியவில்லை!

முறைசாராப் படிப்பு என்பது ஏதோ அறியாமை, கல்லாமையைத் தரும்; முறையான பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகங்கள் இவற்றில் பயின்ற மேதைகளால்தான் புதுமைகளும், கண்டுபிடிப்புகளும் மலரும் என்பதைக் 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாகவே' காலமெல்லாம் வாழ்ந்த தந்தை பெரியார் பொய்யாக்கினார்!

மனித குலத்தின் சுயமரியாதைதான் அவரது கவலை!! மானுடத்தின் சமத்துவமும், சம உரிமையும் அவரது இலக்குகள்!!!

அவற்றை அடையத் தடைகள் எங்கே, எந்த ரூபத்தில் இருந்தாலும் துணிவுடன் புயலாய், பூகம்பமாய், எரிமலையாய் - எதிர்த்து எழுவதுதான் அவரது வாழ்க்கை வாடிக்கையாகும்!

மானுடத்திற்கு அவர்தம் அருட்கொடை மானம், மரியாதை, பகுத்தறிவுச் சிந்தனை!

தமக்கென வாழா இந்தத் தகைமை சால் தலைவர், தமது சொத்துக்கள், தம்மிடம் கொடுத்தவைகள் அனைத்தையும் மக்களுக்கே விட்டுச் சென்று, செயற்கரிய சாதனை செய்த பெரியார்!

அவர்தம் தத்துவங்கள், வாழ்க்கை நிகழ்வுகள், அவரது பொதுத் தொண்டு, கொள்கைப் பயணம் ஆகியவை பற்றி இளைய தலைமுறையினரும் அறிந்து அவர் வழி நடப்பது அவசர, அவசியப் பணியாகும். அந்த நோக்குடன் 'பெரியார் ஆயிரம்' என்ற வினா - விடை நூல் ஓர் அரிய தொகுப்பாக வெளியிடப்படுகிறது.

பக்குவப்பட்ட பெரியாரியல் சிந்தனையாளர்கள் இப்பணியை மிகுந்த கவனத்தோடும், உற்சாகத்தோடும் செய்து முடித்துத் தந்துள்ளார்கள்.

இவர்களுக்குக் கழகம் மட்டுமன்று, பெரியாரைப் பெற்ற மானுடமும் நன்றி செலுத்தும் என்பது உறுதி.

இவற்றுடன் தந்தை பெரியார் ஒரு தொலைநோக்காளர் என்பதை விளக்கும் வண்ணம் 1942ஆம் ஆண்டு அவர்கள் ஆற்றிய உரையான "இனிவரும் உலகம்" என்னும் நூலும், தந்தை பெரியாரின் வாழ்க்கை குறிப்புகளும் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த அரிய நூல், இங்கிலீஷ், இந்தி மற்றும் பல மொழிகளில் மொழியாக்கம் செய்து வெளிவர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

21 - ஆம் நூற்றாண்டைப் பெரியார் நூற்றாண்டாகக் காண இது ஓர் அற்புதமான அறிவாயுதம் ஆகும்!

இதனை நன்கு கற்க,

கசடு அறக் கற்க,

பின், நிற்க அதற்குத் தக!

19.7.2001 **கி.வீரமணி**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | **குடும்ப வாழ்க்கையும் தம் வரலாறும்**<br>பேராசிரியர் **ப. சுப்பிரமணியன்,** எம்.எஸ்சி., எம்.எட்., | - | 1 |
| 2. | **வைக்கம் - சேரன்மாதேவி - காஞ்சிபுரம்**<br>டாக்டர் **பு. இராசதுரை,** எம்.ஏ., பிஎச்.டி., | - | 30 |
| 3. | **தேசிய இயக்கத்தில் பெரியாரின் பங்கு**<br>பேராசிரியர் **நம். சீனிவாசன்,** எம்.ஏ., எம்.பில்., | - | 62 |
| 4. | **சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம் - வளர்ச்சி - பருவம் (1925 - 1931)**<br>மானமிகு **சு. அறிவுக்கரசு** எம்.ஏ., எம்.பில்., | - | 81 |
| 5. | **தத்துவம் - சிந்தனை - இலட்சியங்கள்**<br>பெரியார் பேருரையாளர் **கு.வெ.கி. ஆசான்,** எம்.ஏ., பி.எல்., | - | 114 |
| 6. | **இலக்கியம்**<br>பேராசிரியர் **ந.வெற்றியழகன்,** எம்.ஏ., பி.எட்., | - | 152 |
| 7. | **அமைப்புகளும் நிறுவனங்களும்**<br>மானமிகு **துரை. சக்ரவர்த்தி,** எம்.ஏ., | - | 175 |
| 8. | **சமகாலத்தவர்**<br>பெரியார் பேருரையாளர் பேராசிரியர் **அ. இறையன்,** பி.ஏ., பி.டி., | - | 199 |
| 9. | **பட விளக்கம்**<br>கவிஞர் **கலி. பூங்குன்றன்** | - | 227 |
| 10. | **இனி வரும் உலகம்** | - | 251 |
| 11. | புதிய இணைப்பு 1 : **பெரியாரின் தமிழ்த் தொண்டு**<br>பேராசிரியர் **இரா.கலைச்செல்வன்,** எம்.ஏ., எம்.எட்.,எம்.ஃபில்., | - | 267 |
| 12. | புதிய இணைப்பு 2 : **தந்தை பெரியாரும் தாழ்த்தப்பட்டோரும்**<br>பேராசிரியர் **மஞ்சை வசந்தன்,** எம்.ஏ., எம்.எட்.,எம்.ஃபில்., | - | 287 |
| 13. | **தேர்வு பற்றிய விவரக் குறிப்புகள்** | - | 307 |
| 14. | **விடைத்தாள் மாதிரி படிவம்** | - | 309 |
| 15. | **மாதிரி வினாத்தாள்** | - | 310 |
| 16. | **விண்ணப்பப் படிவம்** | - | 321 |



# தந்தை பெரியார் ஈ.வெ.ரா.

அவர்களின்

# வாழ்க்கைக் குறிப்புகள்

(முக்கிய நிகழ்ச்சிகளின் சுருக்கம்)

**1879 செப்டம்பர் 17** ஈரோட்டில் வெங்கிட்ட (நாயக்கர்) சின்னத்தாயம்மாள் ஆகியோரின் மகனாகத் தோன்றினார். தமையனார்: ஈ.வெ.கிருஷ்ணசாமி தங்கைகள்: பொன்னுத்தாயி, கண்ணம்மாள்

**1885 வயது 6** திண்ணைப்பள்ளியில் பயின்றார்.

**1889 வயது 10** ஈரோடு நகராட்சித் தொடக்கப்பள்ளியில் நாலாம் வகுப்புவரை பயின்றபின் பள்ளிப்படிப்பு நிறுத்தப்பட்டது.

**1891 வயது 12** தந்தையாரின் மண்டிக்கடை வாணிபத்தில் ஈடுபடுத்தப்பட்டார்.

**1895 வயது 16** தனது வீட்டுக்கு வரும் புராணச் சொற்பொழிவாளர்களைக் குறுக்குக் கேள்வி கேட்டுத் திணறவைக்கும் சிந்தனை வளம் மிக்க குறும்புக்காரராக இளம் வயதிலேயே விளங்கினார்.

**1898 வயது 19** பதின்மூன்று வயது நாகம்மையைத் திருமணம் புரிந்தார்.

**1900 வயது 21** ஒரு பெண் மகவுக்குத் தந்தையானார். ஆனால், அக்குழந்தை அய்ந்து மாதங்களிலேயே இறந்தது. பின்னர் குழந்தையே இல்லை.

**1901 வயது 22** மண்டிக்கடையில் ஈட்டிய லாபத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு கொடுத்து. முன் மாதிரியாக விளங்கினார்.

**1902 வயது 23** அனைத்து ஜாதி மதத்தினருடன் சமபந்தி போஜனம் நடத்தினார். வேளாள வகுப்புப் பெண்ணுக்கும் நாயுடு வகுப்பு ஆணுக்கும் ஜாதிமறுப்புத் திருமணம் செய்வித்தார்.

**1904 வயது 25** தந்தையார் கண்டிப்புக்கு அஞ்சி, வீட்டைவிட்டு வெளியேறி, துறவுக் கோலம் பூண்டு, விஜயவாடா, காசி, கல்கத்தா முதலிய இடங்களில் சுற்றித்திரிந்து பரந்த அனுபவம் பெற்றார். புரோகிதப் பார்ப்பனர்களின் சுய நலம், கயமை, வைதிகத்தின் பொய்ம்மை ஆகியவற்றை நேரில் கண்டுணர்ந்து தெளிவு பெற்றார். தந்தையாரால் அழைத்து வரப்பட்டு, ஈ.வெ.ராமசாமி நாயக்கர் மண்டி என்று தன் பெயரிலேயே வாணிபம் நடத்தினார்.

**1905-1908 வயது 26-29** பொது வாழ்வில் விருப்பங்கொண்டு மக்கள் நலப்பணி ஆற்றினார். ஈரோட்டில் பிளேக் நோய் பரவிய போது மீட்புப்பணி ஆற்றிய துடன், இறந்த சடலங்களை உறவினர்களே கைவிட்டுச் சென்ற போதும், தன் தோள்மீது சுமந்து சென்று

அப்புறப்படுத்தி அரும்பணி ஆற்றினார். காங்கிரஸ் இயக்கத்தில் நாட்டங்கொண்டார்.

**1909 வயது 30** இளம் விதவையான தனது தங்கையின் மகளுக்கு எதிர்ப்புக்கிடையில் விதவைத்திருமணம் செய்வித்தார்.

**1911 வயது 32** தந்தையாரை இழந்தார்.

**1914-1918 வயது 35-39** காங்கிரஸ் மாநாடுகளை முன்னின்று நடத்தினார். ஈரோடு நகர்மன்றத் தலைவராக சிறப்பாகப் பணியாற்றியதுடன், குடிநீர்த்திட்டம், சுகாதார வசதி போன்ற பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றினார். ஏறத்தாழ 28 மதிப்புறு பதவிகளை ஏற்றுப் பணியாற்றினார். ஈரோட்டில் பெருவணிகராகத் திகழ்ந்தார்.

**1919** சமுதாயப்பணி ஆற்றவும், வகுப்புரிமைக் கொள்கையை நிறைவேற்றிக் கொள்ளவும் ஒரு வாய்ப்பாகக் கருதி, காங்கிரசில் உறுப்பினரானார். நகர் மன்றப் பதவியை விட்டு விலகினார். திருச்சி காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

**1920** தான் வகித்துவந்த மதிப்புறு பதவிகள் அனைத்தினின்றும் தானே விலகினார். வாணிபத்தைத் துறந்து, காங்கிரசின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்தார். திருநெல்வேலி காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். மாநாட்டுத் தலைவரால் அனுமதி மறுக்கப்பட்டது.

**1921** காந்தியாரின் நிர்மாணத் திட்டத்தை ஏற்று எளிய வாழ்வை மேற்கொண்டதுடன், ஆடம்பர ஆடையைத்துறந்து கதர் ஆடையை உடுத்தினார். தன் அன்னையார் உட்பட குடும்பத்தினர் அனைவரையும் கதராடை அணியச் செய்தார். கதர் மூட்டையைத் தோளில் சுமந்து, ஊர் ஊராகச் சென்று விற்பனை செய்தார்.

ஈரோடு கள்ளுக்கடை மறியலில், தங்கை கண்ணம்மாள், மனைவி நாகம்மாள் ஆகியோருடன் பங்கேற்றுச் சிறைசென்றார். கள் உற்பத்திக்குக் காரணமாய் அமைந்தவை என்பதால், தனது தோப்பில் இருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார். ஒத்துழையாமை இயக்கத்தின் நீதிமன்றப் புறக்கணிப்புக் கொள்கையின் அடிப்படையில் தன் குடும்பத்துக்கு வரவேண்டிய பெருந் தொகையை நீதிமன்றத்தின் மூலம் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்காமல் இழந்தார். தஞ்சை காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன் மொழிந்தார். எனினும் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படாமல் தந்திரமாகத் தடுக்கப்பட்டது.

1922 கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு, கோவை சிறையில் இருந்தபோது 'குடி அரசு' எனும் இதழைத் தொடங்கத் திட்டமிட்டார். திருப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். ஆதிதிராவிடர்களை கோவிலுக்குள் வழிபாடுசெய்ய அனுமதிக்க வேண்டும் என்னும் தீர்மானத்தையும் முன்மொழிந்தார். தீர்மானங்கள் ஏற்கப்படவில்லை. சினமுற்ற பெரியார் மனுதர்ம சாஸ்திரத்தையும் இராமாயணத்தையும் தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்று முழங்கினார்.

1923 சேலம், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடுகளில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். நிறைவேற்ற இயலவில்லை.

1924 கேரளத்தில் வைக்கம் கோவில் வீதியில் தாழ்த்தப்பட்டோர் நடக்க உரிமை கோரி, தீண்டாமையொழிப்புப் போர் நடத்தி இருமுறை சிறை சென்ற பெரியார் இறுதியில் வெற்றி பெற்று 'வைக்கம் வீரர்' என்று புகழப்பட்டார். வ.வே.சு. அய்யரால் நிறுவப்பட்ட சேரமாதேவி குருகுலத்தில் நிலவிய ஜாதி வேறுபாட்டை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து, அக்குருகுலம் தானே ஒழியும்படி செய்தார். திருவண்ணாமலை காங்கிரஸ் மாநாட்டில், தானே தலைவராயிருந்து வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானம் தோல்வியுற்றது. நீதிக் கட்சி ஆட்சியின் இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார்.

1925 'குடிஅரசு' வார இதழை ஈரோட்டில் 02.05.1925 இல் தொடங்கினார். 'குடிஅரசு' பத்திரிகாலயத்தை திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் திறந்து வைத்தார். காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானம் ஏற்கப்படாததால் மாநாட்டை விட்டு வெளியேறினார். பார்ப்பனரல்லாதாருக்குச் சுயமரியாதை ஏற்படுத்த ஓர் இயக்கம் காண வேண்டும் என்ற எண்ணங்கொண்டார். நீதிக்கட்சித் தலைவர் சர். பிட்டி. தியாகராயர் மறைவுக்கு வருந்தினார்.

1926 சுசீந்திரத்தில் தீண்டப்படாதார் கோவில் நுழைவுக் கிளர்ச்சியை ஆதரித்துக் குரல் கொடுத்தார். இந்தி புகுத்தப்படுவதால் வரக்கூடிய கேட்டினை அறிந்து முன்கூட்டியே எச்சரித்தார். நாடெங்கும் சுயமரியாதைச் சங்கங்களை நிறுவினார். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் கூட்டிய மதுரை பார்ப்பனர் அல்லாதார் மாநாட்டில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்தார். சுயமரியாதை இயக்கம் முகிழ்த்தது.

**1927** காந்தியாரைப் பெங்களூரில் சந்தித்து உரையாடியபின், கொள்கை மாறுபாடு காரணமாக காந்தியாரிடம் கொண்டிருந்த நம்பிக்கையை விட்டொழித்தார். சைமன் கமிஷனை வரவேற்றார். 'திராவிடன்' தினசரியில் சிலகாலம் ஆசிரியராக இருந்தார். திருக்குறள், புத்தர், கொள்கைகளைப் பரப்பினார். நாயக்கர் பட்டத்தைத் துறந்தார்.

**1928** நாகை இரயில்வே தொழிலாளர் கிளர்ச்சியில் சிறை ஏகினார். நீதிக்கட்சியின் தலைவர் பனகால் அரசர் மறைவுக்குக் கவலையுற்றார். 'ரிவோல்ட்' ஆங்கில வார ஏட்டைத் தொடங்கினார். வகுப்புரிமையை நிலை நிறுத்திய அமைச்சர். எஸ்.முத்தையா முதலியாரைப் பாராட்டினார்.

**1929** செங்கல்பட்டில் முதலாவது சுயமரியாதை மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார். மலேயாவில், நாகம்மையாருடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டு சுயமரியாதைக் கொள்கையைப் பரப்பினார்.

**1930** மலேயாவிலிருந்து திரும்பும் போது கப்பலில் தாடி வளர்க்க நேர்ந்தது. ஈரோட்டில் இரண்டாவது சுயமரியாதை மாநாட்டை நடத்தினார். 'குடும்பக் கட்டுப்பாட்டை' விளக்கும் வகையில் 'கர்ப்ப ஆட்சி' என்ற நூலை வெளி யிட்டார். 'மார்க்ஸ் ஏங்கல்ஸ்' அறிக்கையையும், 'லெனினும் மதமும்' என்ற நூலையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். தேவதாசி ஒழிப்பு மசோதாவை ஆதரித்து, அது சட்டமாக நிறைவேறக் காரணமானார்.

**1931** விருதுநகரில் மூன்றாவது சுயமரியாதை மாநாட்டை நடத்தினார். கதர்த்திட்டத்தின் பொருந்தாத் தன்மையை விளக்கிப் பிரச்சாரம் செய்தார். அய்ரோப்பிய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். கொழும்பு, ஏடன், சூயஸ் கால்வாய், போர்ட் சைட் ஆகிய இடங்களுக்குச் சென்றார்.

**1932** எகிப்து, கிரீஸ், துருக்கி, ரஷ்யா, இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்பெயின், ஜெர்மனி, போர்ச்சுக்கல், இத்தாலி, பிரான்ஸ் முதலிய நாடுகளில் 11 மாதம் பயணம் செய்து, கொழும்பு வழியாக நாடு திரும்பினார்.

**1933** நாகம்மையார் 11.05.1933 இல் இயற்கை எய்தினார். 'புரட்சி' வார ஏட்டைத் துவக்கினார். சமதர்மப்பிரச்சாரத்தை தீவிரமாக மேற்கொள்ள எண்ணி திட்டம் தீட்டினார். ஈரோடு சமதர்மத்திட்டம் என்று இது அழைக்கப்பெற்றது. திருச்சியில் கிறிஸ்துவ கலப்புத் திருமணத்தைத் தடையை மீறி நடத்தி வைத்தமைக்காகவும், 'திராவிடன்' இதழ்க் கடன் தொடர்பாகவும், "இன்றைய ஆட்சி ஒழிய வேண்டும் ஏன்?"என்று "குடிஅரசில்" தலையங்கம் எழுதியதற்காகவும் கைது செய்யப்பட்டு சிறை ஏகினார்.

1934 ‘பகுத்தறிவு’ வார ஏட்டைத் துவக்கினார். பகுத்தறிவு தினசரி இதழை சில காலம் நடத்தினார். ‘பகுத்தறிவு’ வார ஏட்டில் முதன் முதலாகத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைப் புகுத்தினார். ஜெயப்பிரகாஷ் நாராயண் பெரியாரை ஈரோட்டில் சந்தித்து உரையாடினார்.

1935 ஈ.வெ.ரா. வேலைத்திட்டத்தை நீதிக்கட்சி ஏற்றுக் கொண்டதால், பெரியார் நீதிக்கட்சியை தீவிரமாக ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார். ‘பகுத்தறிவு’ வார ஏடு நிறுத்தப்பட்டு, மாத ஏடாக வெளிவந்தது. ‘விடுதலை’ இதழ் வாரம் இருமுறை ஏடாக வெளிவரத் துவங்கியது. குடிஅரசு மீண்டும் வார ஏடாக வரத் தொடங்கியது.

1936 பெரியாரின் அன்னையார் சின்னத்தாய் அம்மையார் 28.07.1936இல் இயற்கை எய்தினார். நீதிக்கட்சியை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரம் செய்தார்

1937 டாக்டர்.சி.நடேசனார் 18.02.1937 இல் மறைவுற்றதற்குப் பெரிதும் வருந்திக் ‘குடிஅரசி’ல் இரங்கலுரை தீட்டினார். தேர்தலில் நீதிக்கட்சி தோல்வியுற்றுக் காங்கிரஸ் வெற்றிபெற்றது. எனினும் உடனடியாகப் பதவி ஏற்க காங்கிரஸ் முன்வராததால், கவர்னரின் வேண்டுகோளின்படி ஜஸ்டிஸ் கட்சியினரின் இடைக்கால ஆட்சி சிறிது காலம் நடைபெற்றது. பின்னர் காங்கிரஸ் அமைச்சரவை அமைக்க முன்வந்தது. ராஜாஜி, காங்கிரஸ் முதலமைச்சராகப் பதவி ஏற்று இந்தித் திணிப்பு , கல்வி ஒழிப்பு போன்ற தமிழர் விரோத ஆட்சியை நடத்தினார். இந்தித் திணிப்பை எதிர்த்து திருச்சியில் நடைபெற்ற தமிழர் மாநாட்டில் பெரியார் எழுச்சியுரை ஆற்றினார்.

1938 இந்தித்திணிப்பை எதிர்த்துப் பெரும்போர் மூண்டது. இந்தியை எதிர்த்துத் தமிழர்பெரும் படை சென்னை நோக்கி அணிவகுத்துச் சென்று திருவல்லிக் கேணி கடற்கரையை அடைந்தது. கடற்கரையில் கூடிய பெருங்கூட்டத்தில் “தமிழ்நாடு தமிழருக்கே!” என்று பெரியார் முழங்கினார். சென்னையில் கூடிய தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாட்டில் 13.11.1938 இல் ‘பெரியார்’ என்ற சிறப்புப் பட்டம் அளிக்கப்பட்டார். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் பல்லாயிரவர் கைதாகிச் சிறை ஏகினர். பெரியார் 2 ஆண்டுச் சிறைத்தண்டனை பெற்றுச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருக்கும் போதே நீதிக்கட்சித் தலைவராகப் பெரியார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1939 இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் சிறைசென்ற பெரியார்

விடுதலையானார். சிறை மீண்டதும் "திராவிட நாடு திராவிடருக்கே!" என்று குரலெழுப்பினார்.

1940 நீதிக்கட்சியின் செயலாளர் சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் மறைவுக்குப் பெரிதும் துயரடைந்தார். வட இந்தியப் பயணத்தை மேற்கொண்ட பெரியார் பம்பாயில் ஜின்னாவைச் சந்தித்து உரையாடினார். அம்பேத்கரும் உடனிருந்தார். காங்கிரஸ் அமைச்சரவை பதவி விலகிய நிலையில் மாற்று அமைச்சரவை அமைக்குமாறு கவர்னர் வேண்டியும், பதவி ஏற்கப் பெரியார் மறுத்தார்.

1941 எம்.என். ராய் சென்னையில் பெரியாரைச் சந்தித்து உரையாடினார். பெரியார், முயற்சியால் தென்னிந்திய ரயில்வே உணவு விடுதிகளில் 'பிராமணாள்' 'இதராள்'என்று ஜாதி பேதம் காட்டுவது ஒழிந்தது.

1942 தம் குழுவினருடன் ஸ்டாபோர்டு கிரிப்சை 30.03.1942 இல் சந்தித்து தனி நாடு கோரிக்கையை வலியுறுத்தினார். இரண்டாம் முறையாக கவர்னர் வேண்டியும் அமைச்சரவை அமைக்க மறுத்தார்.

1943 பெரியார் அவர்களை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டின் பிரதிநிதி, சர். வில்லியம்ஸ் பிலிப்ஸ் சந்தித்து உரையாடினார். சோதனைக் குழாயில் எதிர்காலத்தில் குழந்தை உருவாக்கப்படும் என்று சுயசிந்தனையில் தோன்றிய தன் கருத்தை உலகுக்கு அறிவித்தார். உலகில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் பற்றிய பெரியாரின் சிந்தனைகளை விளக்கும் "இனி வரும் உலகம்"எனும் நூல் வெளியிடப்பட்டது. தமிழிசை இயக்கத்தை ஆதரித்துக் குரல் கொடுத்தார்.

1944 சேலம் மாநாட்டில் தென்னிந்திய நல உரிமைச்சங்கம் என்ற பெயர், பெரியார் அவர்களால் 'திராவிடர் கழகம்' என்று மாற்றப்பட்டது. இந்து மகாசபைத் தலைவர் மூஞ்சேயைச் சந்தித்து உரையாடினார். கல்கத்தாவில் எம்.என்.ராய் அவர்களின் 'ராடிகல் டெமாக்ரடிக் கட்சி' மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். கான்பூரில் பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் கலந்து கொண்டார்.

1945 திருச்சியில் திராவிடர் கழக மாகாண மாநாட்டை நடத்தினார். கருஞ்சட்டைத் தொண்டர்படை என்ற அமைப்பை ஏற்படுத்தினார். ஈரோட்டில் 'ஜஸ்டிசைட்' என்ற ஆங்கில இதழைத் துவக்கினார்.

1946 திராவிடர் கழகக் கொடி உருவாக்கப்பட்டு பெரியாரால் அங்கீகரிக்கப் பட்டது. மதுரையில் நடைபெற்ற கருஞ்சட்டைப் படை மாநாட்டுப்பந்தல் பார்ப்பனர் தூண்டுதலால் எரிக்கப்பட்டுக்

கலவரம் மூண்டது. இந்திய அரசியல் நிர்ணயசபை உருவாக்கப்பட்ட முறையைப் பெரியார் எதிர்த்தார்.

**1947** ஆகஸ்ட் 15 'சுதந்திர நாள்' அன்று; துக்கநாளே என்று அறிவித்தார். ஜூலை 1-ஆம் நாள் நாடெங்கும் 'திராவிட நாடு பிரிவினை நாள்' கொண்டாடச் செய்தார். கடலூரில் திராவிட நாடு பிரிவினை மாநாடு கூட்டினார்.

**1948** கருஞ்சட்டைப்படை தடைசெய்யப்பட்டு அடக்குமுறை ஏவிவிடப்பட்டது. இந்தி மீண்டும் திணிக்கப்பட்டதால் இரண்டாம் இந்தி எதிர்ப்புப் போர் துவங்கியது. கவர்னர் ஜெனரல் சி. ராஜகோபாலாச்சாரியாருக்குக் கருப்புக் கொடி காட்டியதால், கழகத் தோழர்களுடன் கைது செய்யப்பட்டார்.

ஈரோட்டில் பெரியார் கூட்டிய திராவிடர் கழக ஸ்பெஷல் மாநாட்டில் 'திராவிட நாடு' படத்தைத் திறந்து வைத்து திரு.வி.க விடுதலை முழக்கமிட்டார். தூத்துக்குடியில் பிரசித்திபெற்ற திராவிடர் கழக மாநாட்டினை நடத்தினார்.

**1949** திருக்குறள் மாநாடு நடத்திப் பாமரரும் அந்நூலை அறியும் வண்ணம் பரப்பினார். திருவண்ணாமலையில் கவர்னர் ஜெனரல் சி.ராசகோபாலாச்சாரியாரைச் சந்தித்து உரையாடினார். மணியம்மையாரை 09.07.1949 இல் திருமணம் புரிந்து கொண்டார். உடுமலைப்பேட்டையில் தடை உத்தரவை மீறிக் கைதானார். இந்திய அரசமைப்புச்சட்டம் 26.11.1949 இல் நிறைவேற்றப்பட்டதைக் கண்டித்தார். அறிஞர் அண்ணா திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக்கழகம் எனும் தனி அமைப்பை ஏற்படுத்தினார்.

**1950** 'பொன்மொழிகள்'என்ற நூலுக்காகச் சிறை ஏகினார். ஜனவரி 26 குடிஅரசு நாளைத் துக்க நாளாகக் கடைப்பிடிக்கக் கோரினார். அரசியல் சட்டம் ஒழிக! என்று முழங்கினார். வடநாட்டவர் துணிக்கடை, உணவுக்கடைமுன் மறியல் செய்தார். வகுப்புரிமை செல்லாது என்ற நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து திருச்சியில் வகுப்புரிமை மாநாடு நடத்தினார். மத்திய அமைச்சர்களுக்கு எதிராகக் கறுப்புக்கொடி பிடித்து எதிர்ப்பைக் காட்டும்படி அறிவுறுத்தினார். பெரியாரின் தமையனார் ஈ.வெ.கிருஷ்ணசாமி 04.02.1950இல் இயற்கை எய்தினார்.

**1951** பெரியாரின் வகுப்புரிமைப் போர் வெற்றிபெற்று, வகுப்புரிமை வழங்கும் வகையில் இந்திய அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யப்பட்டது. கம்யூனிஸ்ட் தலைவர் எஸ்.ஏ. டாங்கே திருச்சியில் பெரியாரைச் சந்தித்து உரையாடினார்

1952 கொல்லைப்புற வழியில் முதலமைச்சரான ஆச்சாரியார் குலக் கல்வித் திட்டத்தினைக் கொண்டுவந்தார். பெரியார் வெகுண்டெழுந்தார். திருச்சி ரயில் நிலையத்தில் இந்திப் பெயர்ப்பலகையை தார் கொண்டு அழித்தார். சுயமரியாதைப் பிரச்சார ஸ்தாபனத்தைப் பதிவு செய்தார். திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கங்கள், தென்பகுதி ரயில்வே தொழிலாளர் யூனியன் போன்றவற்றைத் துவக்கினார்.

1953 சென்னை தமிழ்நாட்டுக்கே சொந்தமானது என்று முழங்கினார். நாடெங்கும் கணபதி உருவப் பொம்மையை, புத்தர் விழாக் கொண்டாடி, பொதுக்கூட்டத்தில் உடைக்கும்படி வேண்டினார். தமிழகமெங்கும் பல்லாயிரக்கணக்கான பிள்ளையார் பொம்மைகள் உடைந்து நொறுங்கின. சுயமரியாதைத் திருமணம் செல்லாது என்ற நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டு வெகுண்டெழுந்தார்

இரண்டாம் முறையாக ஆகஸ்ட் 1 ஆம் நாளில் ரயில் நிலையங்களில் இந்திப் பெயர்ப்பலகையை தார்கொண்டு அழிக்கும் கிளர்ச்சியை நடத்தினார். ஈரோடு சண்முகவேலாயுதத்தின் “ஈரோட்டுப்பாதை”எனும் வார இதழைத் துவக்கிவைத்தார்.

1954 மூன்றாம் முறையாக ரயில் நிலையங்களில் உள்ள பெயர்ப் பலகையில் இந்தி எழுத்துக்களை அழிக்கும் கிளர்ச்சியை நடத்தினார். ஈரோட்டில் புத்தர் கொள்கை மாநாடு; குலக்கல்வித்திட்ட எதிர்ப்பு மாநாடு ஆகியவற்றை நடத்தினார். நாகையில் திராவிடர் கழக மாநாட்டில் குலக்கல்வி ஒழிப்பு பிரச்சாரப்படை அமைக்கப்பட்டு பயணம் தொடங்கியது.

குலக்கல்வித் திட்டத்திற்கு நாடெங்கும் எழுந்த எதிர்ப்பினால் ராஜாஜி பதவி விலகியபின், காமராசர் முதலமைச்சர் ஆனார். குலக்கல்வித் திட்டத்தை காமராசர் ஒழித்தார். காமராசர் ஆட்சியை பெரியார் ஆதரித்தார். பர்மாவில் நடைபெற்ற உலக பவுத்தர் மாநாட்டில் கலந்து கொண்ட பெரியார் , அங்கு அம்பேத்கர், இலங்கை புத்தமத அறிஞர் மல்லல சேகரா ஆகியோரைச் சந்தித்து உரையாடினார். இரண்டாம் முறையாக மலேயா சுற்றுப்பயணம் மேற்கொண்டார். நாடெங்கும் இராமாயண எதிர்ப்புப் பிரச்சாரம் நடத்தினார். நடிகவேள். எம்.ஆர்.ராதா “இராமாயணம்” நாடகம் நடத்தி இராமனின் இழிசெயலை அம்பலப்படுத்தினார். இராமாயண நாடகத்தின் விளைவாக அரசினரால் நாடகத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

1955 இந்தித் திணிப்பை எதிர்த்து, தேசியக் கொடியை எரிக்கும் கிளர்ச்சியை நடத்தப் போவதாக அறிவித்தார். காமராசர் உறுதிமொழியை ஏற்று, அக்கிளர்ச்சியை ஒத்திவைத்தார்.

1956 தட்சிணப்பிரதேசம் எனும் கேடான அமைப்பைக் கைவிடுமாறு காமராசர், நேரு ஆகியோரைத் தந்தி மூலம் கேட்டுக் கொண்டார். காமராசர் தட்சிணப் பிரதேச அமைப்பை நிராகரித்தார். இராமன் பட எரிப்புக் கிளர்ச்சி தொடர்பாகப் பெரியார் கைது செய்யப்பட்டார். மொழிவாரிப் பிரிவினைக்குப்பின் தனித் தமிழ்நாடு பிரிவினைக் கொள்கையை வலியுறுத்தினார்.

1957 திருச்சியில் வினோபா பாவேயைச் சந்தித்து உரையாடினார். திருச்சி கலெக்டர் மலையப்பன் மீது பார்ப்பன நீதிபதிகள் அளித்த தீர்ப்புக்கு எதிராகப் பேசியதாக கோர்ட் அவமதிப்புக் குற்றம் சுமத்தப்பட்டு பெரியார் மீது வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் பெரியார், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஸ்டேட்மென்டை தாக்கல் செய்தார். தஞ்சையில் 03.11.1957 இல் நடைபெற்ற ஜாதி ஒழிப்பு மாநாட்டில் பெரியாருக்கு எடைக்கு எடை வெள்ளி ரூபாய் நாணயங்கள் அளிக்கப்பட்டன. அம்மாநாட்டில் ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப்பிரிவைக் கொளுத்தும் கிளர்ச்சியை அறிவித்தார். அக்கிளர்ச்சியில் பல்லாயிரம் பேர் கலந்து கொண்டனர். சில ஆயிரம் பேர் சிறைபிடிக்கப்பட்டனர். சிறையில் இருவரும், விடுதலையானவுடன் உடல்நலிவுற்று இருபதுபேரும் மாண்டனர். பார்ப்பனருக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் வகையில் பேசியதாகக் குற்றம் சுமத்தி நீதிமன்றத்தால் ஆறுமாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையேகினார்.

1958 சோசலிச இயக்கத் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோகியா பெரியாரைக் கண்டு உரையாடினார். பல மாதங்களாக சென்னை முரளி கபே முன் நடை பெற்ற பிராமணாள் பெயர் அழிப்புக் கிளர்ச்சி வெற்றிபெற்றது.

திராவிடர் கழகத்தின் சார்பில் பல மாவட்டங்களில் நடைபெற்ற சுதந்திரத் தமிழ்நாடு மாநாடுகளில் பெரியாரும் ‘நாம் தமிழர்’இயக்கத் தலைவர் சி.பா. ஆதித்தனாரும் கலந்து கொண்டனர். திருச்சி பெரியார் மாளிகையில் தோழர் கி. வீரமணி மோகனா வாழ்க்கை ஒப்பந்தத்தை 7.12.58இல் பெரியார் நடத்தி வைத்தார். புரட்சிக் கவிஞர் வாழ்த்துக் கவிதை வழங்கிச் சிறப்பித்தார்.

1959 வடநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு லக்னோ, டில்லி, கான்பூர், பம்பாய் முதலிய இடங்களுக்குச் சென்று பகுத்தறிவு சுயமரியாதைக் கொள்கைப் பிரச்சாரம் செய்தார். முத்தமிழ்க்

காவலர் கி. ஆ.பெ. விசுவநாதம் நடத்திய ‘ஆகாஷ்வாணி’ பெயர் ஒழிப்புக் கிளர்ச்சிக்கு ஆதரவு நல்கினார்.

**1960** தமிழ்நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தி தமிழ்நாடு நீங்கிய தேசப்படத்தை எரிக்கும் கிளர்ச்சியை நடத்தி சிறை ஏகினார். பல்லாயிரவர் தேசப்படத்தைக் கொளுத்தி சிறை சென்றார்கள்.

**1961** பொதுத் தேர்தலில் காமராசரை ஆதரிக்க வேண்டும் என்று பொது மக்களைக் கேட்டுக் கொண்டார்.

சென்சஸ் கணக்கெடுப்பின் போது “நாத்திகர்” என்று கூறும்படி திராவிடர்கழகத் தோழர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

**1962** பொதுத்தேர்தலில், உடல்நலம் குன்றிய நிலையிலும், கடுமையாக உழைத்து, காமராசருக்கு ஆதரவு திரட்டி வெற்றியைத் தேடித் தந்தார். சென்னையில் ‘வாக்காளர்’ மாநாட்டை நடத்தினார். தோழர் கி. வீரமணி அவர்கள் திராவிடர் கழகத்துக்கு முழுநேரத் தொண்டராக வர இசைந்தமையறிந்து மகிழ்ந்து, பெரியார் அவரைப் பாராட்டி ஆகஸ்ட் 10ஆம் நாள் விடுதலையில் “வரவேற்கிறேன்” என்று தலையங்கம் தீட்டினார்.

**1963** கட்சிப்பணிக்காக, முதலமைச்சர் பொறுப்பை விட்டு விலகத் தீர்மானித்த காமராசருக்கு பெரியார் தனது எதிர்ப்பைத் தெரிவித்து, அவர் விலகுவது, ‘தமிழருக்கும் தமிழ் நாட்டுக்கும் , காமராசருக்கும் தற்கொலையாக முடியும்’ என்று முன் கூட்டியே தந்தி மூலம் அறிவித்தார். பெரியார் திடலில் ‘ராதா மன்றம்’ திறப்பு விழாவை நடத்தினார்.

**1964** நில உச்சவரம்புச் சட்டம் செல்லாது என உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து நாடெங்கும் சுப்ரீம் கோர்ட் கண்டன நாள் கடைப்பிடிக்க அறிவுறுத்தினார். புரட்சிக்கவிஞர் 21.04.1964இல் மறைவுக்குப் பெரிதும் வருந்தினார்.

**1965** பெரியார் வேண்டுகோளின்படி திராவிடர் கழகத்தினரால் நாடெங்கும் ‘இராமாயணம்’ கொளுத்தப்பட்டது. பார்ப்பனர், பத்திரிகைகாரர்கள் தூண்டுதலின் பேரில் இந்தி எதிர்ப்புப் போரில் நிகழ்ந்த வன்முறையைக் கண்டித்தார். பெரியார் அளித்த நன்கொடையால் கட்டப்பட்ட திருச்சி ஈ.வெ.ரா. அரசினர் கலைக் கல்லூரியை முதலமைச்சர் பக்தவத்சலம் திறந்து வைத்தார்.

**1966** சங்கராச்சாரியாரை பகிஷ்கரிக்க அவர் சென்ற இடமெல்லாம் கருப்புக்கொடி காட்டச் செய்தார். ‘பசுவதை’ என்ற பெயரால் டில்லியில் காமராசர் வீட்டுக்குத் தீ வைக்க முயன்ற பார்ப்பனக் கூட்டத்தைக் கண்டித்து, காமராசர் கொலை முயற்சிக் கண்டன நாள் கடைப்பிடிக்கும்படி அறிவுறுத்தினார்.

1967 பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழகம் வெற்றிபெற்று ஆட்சி அமைத்தது.

அறிஞர் அண்ணா, முதலமைச்சராகப் பொறுப்பேற்று, பார்ப்பன சூழ்ச்சிக்கு ஆட்படாமல், ஆட்சியை பெரியாருக்குக் காணிக்கையாக்கினார். பெரியார் ஆதரவு நல்கினார். பெரியார் மகிழும்வண்ணம், சுயமரியாதைத் திருமணச் சட்ட முன்மொழிவு, தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானம், இந்தியை ஒழிக்கும் வகையில் இரு மொழித்திட்டம் ஆகிய முப்பெருஞ் சாதனைகளை அண்ணாவின் ஆட்சி நிகழ்த்தியது.

தஞ்சை மாவட்டம் விடயபுரத்தில் 24,25.05.1967 நாட்களில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில், பெரியார் அவர்களால் உருவாக்கப்பட்டு உலகுக்கு அளிக்கப்பட்ட புகழ்பெற்ற கடவுள் மறுப்பு வாசகம் வருமாறு;

“கடவுள் இல்லை, கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை.
கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்;
கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்;
கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி”

திருச்சியில் பெரியார் சிலையை காமராசர் திறந்தார்.

1968 சுயமரியாதைத் திருமணச்சட்டம் ஜனவரி 17இல் நடைமுறைக்கு வந்தது கண்டு மகிழ்ந்தார். தமிழ் நாடெங்கும் டில்லி ஆதிக்கக் கண்டன நாள் கடைப் பிடிக்கச் செய்தார். வடநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு லக்னோவில் தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மாநாட்டில் உரையாற்றினார்.

1969 தமிழ்நாடு பெயர் மாற்றம் 14.01.1969 முதல் நடைமுறைக்கு வந்தது குறித்து மகிழ்ந்தார். அறிஞர் அண்ணா மறைவுக்குப் பெரிதும் வருந்தி இரங்கலுரை பகன்றார். நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. இது 4 கோடி மக்களையும் பொறுத்த பரிகாரம் காண முடியாத துக்க சம்பவமாகும் என்று குறிப்பிட்டார். ஜாதி இழிவை ஒழிக்க கோவில் கருவறை நுழைவுக் கிளர்ச்சியை அறிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற அண்ணா மறைவு இரங்கல் கூட்டத்தில் பெரியார், இந்திராகாந்தி, ராஜாஜி ஆகியோர் ஒரே மேடையில் உரையாற்றினர்.

1970 ‘உண்மை’ எனும் பகுத்தறிவு இதழைத் துவக்கினார். முதலமைச்சர் கலைஞர் வேண்டுகோளுக்கு இணங்கி கோவில் கருவறை நுழைவுப் போராட்டத்தை ஒத்திவைத்தார். சட்டநாதன் தலைமையிலான பிற்பட்டோர் நலக் குழுவினர் பெரியாரைச் சந்தித்து அரிய ஆலோசனைகளைப் பெற்றனர். உலகநாடுகள்

அவையைச் சேர்ந்த கல்வி , அறிவியல் பண்பாட்டுக் கழக மன்றத்தினரால் 27.06.1970 இல் (UNESCO) பெரியார் அவர்களுக்கு ‘விருது’ வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

விருது வாசகம் வருமாறு: “பெரியார்-புது உலகின் தொலை நோக்காளர்; தென் கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்; சமூக சீர்திருத்த இயக்கத்தின் தந்தை; அறியாமை, மூடநம்பிக்கை, பொருளற்ற பழக்கவழக்கங்கள், இழிவான நடவடிக்கைகள் ஆகியவற்றின் கடும் எதிரி ”.

தமிழ்நாடெங்கும், சிந்தனையாளர் கழகங்கள், பகுத்தறிவாளர் கழகங்களைத் துவக்கினார். பம்பாயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார். டாக்டர் எஸ்.சந்திரசேகர் பெரியாரைக் கண்டு குடும்பநலத் திட்டம் பற்றி உரையாடினார்.

**1971** “கலைஞர் ஆட்சியில்” அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் எனும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

பெரியாரின் தங்கை ‘குடிஅரசு’பதிப்பாசிரியரான கண்ணம்மாள் 25.02.1971 இல் மறைந்தார்.

சேலத்தில் பெரியார் கூட்டிய மூட நம்பிக்கை ஒழிப்பு மாநாட்டில் இராமன் உருவப் பொம்மை செருப்பால் அடிக்கப்பட்டது. பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பெருவெற்றி பெற்று கலைஞர், மீண்டும் முதலமைச்சர் ஆனார். பெரியார் மகிழ்ந்தார். “மாடர்ன் ரேஷனலிஸ்ட்” என்னும் ஆங்கில இதழைத் துவக்கினார்.

**1972** ஈழத் தந்தை செல்வநாயகம் பெரியார் திடலுக்கு வந்து பெரியாரை 22.02.1972 இல் சந்தித்து உரையாடினார். டில்லி அரசின் தாமிர பத்திர விருதை இந்திரா காந்தி வழங்க, அதனை கலைஞர் மூலம் பெற்றார். தமிழ்நாடு அர்ச்சகர் சட்டம் செல்லாது என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பைக் கண்டு பெரியார் வெகுண்டெழுந்தார்.

**1973** பெரியார் பிறந்தநாளில் எம்.ஜி.ஆர் பெரியார் திடலுக்கு வந்து பெரியாரைச் சந்தித்து நேரில் வாழ்த்தியதுடன் ரூ 5000/- பணமுடிப்பும் அளித்தார். மதுரையில் கருஞ்சட்டைப்படை மாநாடு நடத்தினார். கடும் குளிரில் தமிழகமெங்கும் பிரச்சாரத் தொடர்பயணம் மேற்கொண்டார். சென்னையில் நடத்திய இழிவு ஒழிப்பு மாநாட்டில் கோவில் கருவறை நுழைவுக் கிளர்ச்சியை 24.01.1974 இல் நடத்தப்போவதாக அறிவித்தார்.

சென்னை தியாகராயர் நகர் சிந்தனையாளர் மன்றத்தின் சார்பில் 19.12.1973 இல் நடைபெற்ற கூட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இறுதிப் பேருரையை நிகழ்த்தினார்.

உடல் நலம் குன்றி சென்னை பொது மருத்துவமனையிலும் , பின்னர் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டார். கவலைக்கிடமான நிலையை அடைந்து 24.12.1973 அன்று காலை 7.40 மணிக்கு இயற்கை எய்தினார்.

பெரியார் மறைவுக்கு மாநில அரசே துயரத்தைக் கடைப்பிடிக்கும் என்று முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அறிவித்தார். அரசுப்பதிவு இதழிலும் (Gazette) பெரியார் மறைவுச் செய்தியை தமிழக அரசு வெளியிட்டு தனிச் சிறப்புச் செய்தது. பெரியார் இயற்கை எய்திய நாள் அரசு விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது.

இலட்சக்கணக்கானோர் தாங்கொணாத்துயரத்துடன் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள அந்தத் துயரக் கடலின் ஊடே பல்லாயிரக்கணக்கான கருஞ்சட்டைத் தொண்டர்கள் பெரியார் வாழ்க! பெரியார் வாழ்க! என்று எழுப்பிய முழக்கம் சோகக் கடலின் உணர்ச்சி வெள்ளம். வீரவணக்கமாக மாற்றப்பட்டது. அரசு மரியாதையுடன் 25.12.1973 மாலை 5.05 மணிக்கு சென்னை பெரியார் திடலில் அன்னாரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

பெரியார் மறைவுக்குப்பின் தலைவராகப் பொறுப்பேற்ற அன்னை ஈ.வெ.ரா மணியம்மையார் அவர்களும், பொதுச் செயலாளரும் ‘‘விடுதலை’’ ஆசிரியருமான கி.வீரமணி அவர்களும் கொள்கை விளக்கை ஏந்தி வழிகாட்டும் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

■

இயல் ஒன்று

# குடும்ப வாழ்க்கையும் தம் வரலாறும்

### தோற்றமும் இளமையும்

தந்தை பெரியார் அவர்கள் 1879ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதி ஈரோட்டில் வெங்கட்ட நாயக்கர், சின்னத்தாய் அம்மாள் ஆகியோர்க்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். பெரியாரின் பெற்றோர்கள் தொடக்கத்தில் வறுமையில் வாழ்ந்ததாலும் கல்தச்சராக வேலை பார்த்ததாலும் கடின உழைப்பாலும் துணைவியாரின் விடா முயற்சியாலும் ஈரோட்டில் நாயக்கர் என்றாலேயே வெங்கட்ட நாயக்கர் என தெரியும் அளவிற்கு செல்வந்தராக, சிறந்த வணிகராக, தான தர்மங்கள் செய்பவராக வாழ்ந்தார். வெங்கட்ட நாயக்கருக்கு இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள். பெரியாருக்கு தாய் தந்தையர் வைத்த பெயர் ராமசாமி. இவர் சிறுவயது முதலே துடுக்காகவும், குறும்புகள் நிறைந்தவராகவும், எதற்கும் ஏன் எதற்கு என்று கேள்வி கேட்பவராகவும் வளர்ந்தார். சிறுவயதில் குழந்தை இல்லாத அவருடைய சிறிய பாட்டிக்கு தத்து கொடுக்கப்பட்டு அங்கு யாருடைய கட்டுப்பாடுமின்றி சுயசிந்தனையாளராக வளர்ந்ததால் திரும்பவும் தாய் தந்தையிடம் வந்துவிட்டார். 5 வயதில் திண்ணை பள்ளிக்கூடட்தில் சேர்க்கப்பட்டார்.

பெரியாருக்கு நேர்மாறாக அவரின் மூத்த சகோதரர் ஈ.வெ.கிருஷ்ணசாமி எல்லோராலும் பாராட்டப்படும் பிள்ளையாக இருந்தார். பெரியார் பள்ளிக்கு செல்லும் வழியில் உள்ள பெட்டிக்கடை ராமநாத அய்யரிடம் மூடப்பழக்கங்கள்பற்றி விவாதம் செய்வார். ஒருநாள் ராமநாத அய்யர் எது நடந்தாலும் அதற்குக் காரணம் "தலைவிதிதான்" என்று கூறினார். அவருக்கு பாடம் புகட்டுவதற்காக அவரது கடைக்கு முன்னால் நிழலுக்காக போடப்பட்டிருந்த கீற்றுட்தட்டியின் முட்டுக்கம்பை தட்டிவிட்டார். அந்த தட்டி ராமநாத அய்யரின் தலையில் விழுந்தது. ஏன் இப்படி செய்தாய் என ராமநாத அய்யர் கேட்டதற்கு எல்லாம் தலைவிதிப்படிதான் நடக்கும் என்றீர்கள். இதுவும் உங்கள் தலைவிதிப்படிதான் நடந்துள்ளது என பெரியார் கூறிவிட்டு வீட்டிற்கு சென்று விட்டார்.

பெரியார் 10 வயது இருக்கும்போது மிகவும் குறும்பு செய்பவராகவும் புழங்கக்கூடாத ஜாதியினருடன் புழங்கி அவர்கள் வீட்டிலேயே உணவும் உண்டதாலும் கோபமுற்ற அவரது தந்தை அவருடைய இரண்டு கால்களிலும் விலங்கு கட்டைகளை பூட்டிவிட்டார்.

பெரியாருக்கு பத்தொன்பது வயதாகும்போது 13 வயது நிரம்பிய நாகம்மையாரை திருமணம் செய்து வைத்தார்கள். நாகம்மையார் அவர்கள் பெரியார் செய்கிற அனைத்து காரியங்களுக்கும் துணையாக நின்றார். மேலும் வீட்டிற்கு வரும் அனைவரையும் வரவேற்று விருந்தளித்தார். நாகம்மையாருக்கும் பெரியாருக்கும் ஒரு குழந்தை பிறந்து 5 மாதத்தில் இறந்து விட்டாலும் நாடெங்கும் குடும்பக் கட்டுப்பாட்டை பரப்பினார்.

"நாகம்மையார் அவர்கள் வாழ்ந்ததும் வாழ நினைத்ததும் எனக்காகவே அன்றி தனக்காக அல்ல" என்று பெரியாரால் பாராட்டப்பட்ட நாகம்மையார் 1933இல் காலமானார். நாகம்மையாரின் மறைவிற்குப் பின் தீவிரமாக பொதுப்பணி செய்ய வாய்ப்பு கிடைட்துள்ளது என்றார் பெரியார். நாகம்மையார் மறைவுற்ற மறுநாளே திருச்சியில் 144 தடை உத்தரவை மீறி சீர்திருத்த திருமணத்தை செய்து வைத்து சிறை சென்றார்.





**காசி பயணம் கற்ற பாடங்களும்:**

உயர் ஜாதிக்காரர்களின் தில்லுமுல்லுகளை வெளிக் கொணர்ந்த காரணத்தினாலும் ஆச்சாரங்களுக்கு எதிராக நடந்து கொண்டதாலும் பெரியாரின் தந்தை அவர்மீது கோபம் கொண்டு செருப்பால் அடித்தார். கோபம் கொண்ட பெரியார் தனது 25 வயதில் வீட்டை விட்டு வெளியேறி காசிக்குச் சென்றார். செல்வதற்கு முன்பாக தான் அணிந்திருந்த தங்க நகைகளை தந்தையின் நண்பரிடம் கொடுத்துவிட்டு சென்றார். அவரோடு இரண்டு பார்ப்பனர்களும் தொடர் வண்டியில் காசிக்குச் சென்றனர். காசியைப் பற்றி பெருமையாக நினைத்துக் கொண்டிருந்த பெரியாருக்கு அங்கு கண்ட காட்சிகள் அதிர்ச்சியாக இருந்தன. அங்கு சத்திரங்களில் பார்ப்பனர்களுக்கு மட்டும் உணவளித்தார்கள். அதனால் அவரோடு வந்த பார்ப்பனர்கள் இருவரும் அவரைப் பிரிந்து சென்றனர். காசியில் ஒழுங்கீனமும் விபசாரமும் மலிந்து கிடந்ததைக் கண்டார். ஒருவேளை உணவிற்காக எச்சிலைக்கு ஏங்கி நிற்கும் நிலை ஏற்பட்டது. வெறுப்புற்ற பெரியார் மீண்டும் தாய் தந்தையரிடம் வந்தார். கொடுத்து வைத்திருந்த நகைகளையும் மீண்டும் கொண்டு வந்து தந்தையிடம் கொடுத்தார். மகன் திரும்பியதில் பெருமகிழ்ச்சி அடைந்த அவரின் தந்தை தன்னுடைய வியாபார பொறுப்புகள் அனைத்தையும் மகனிடம் ஒப்படைட்தார். காசியில் இருந்த காலத்தில் சாப்பாட்டுக்கு என்ன செய்தாய் எனக் கேட்ட தந்தையிடம் “நீங்கள் செய்த தானங்களை அங்கே வசூல் செய்தேன் என நகைச்சுவையாக சொல்லி விட்டார்.

**பொது வாழ்க்கை**

பெரியாரின் தந்தை 1911இல் மறைந்தார். தந்தையின் பணிகளை ஊரில் செய்த பெரியார் பல தேவஸ்தானங்களுக்கு தலைவராக இருந்தார். 1919இல் ஈரோட்டில் நகரமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது ஈரோட்டில் பிளேக் என்னும் உயிர்க்கொல்லி நோயால் பலர் மாண்டனர். பிணங்களைத் தொட எல்லோரும் அஞ்சிய வேலையில் பெரியார் அநேக பிணங்களை தன் தோல் மீது தூக்கிச் சென்று அடக்கம் செய்தார்.

ஈரோட்டில் நகரமன்ற தலைவராக இருந்தபோது 3 உறுப்பினர்கள் கொண்ட வருமான வரி அலுவலகக் குழு உறுப்பினர் போன்ற 29

பொது நிறுவனங்களில் பொறுப்பேற்று சமுதாயப் பணி செய்தார். பெரியாருக்கு “ராவ் பகதூர்” பட்டமும் பரிந்துரை செய்யப்பட்டது.

பெரியார் ஈரோட்டில் நகரமன்ற தலைவராக இருந்தபோது சேலத்தில் ராஜகோபாலாச்சாரி நகரமன்ற தலைவராக இருந்தார். இருவரும் உயிர் நண்பர்களாக இருந்தனர். ஈரோட்டில் இருக்கும் சிறப்பான சுகாதார நிலையைக் கண்டு ஈரோட்டில் உள்ள சுகாதார அதிகாரிகளை சேலத்திற்கு அனுப்புமாறு கேட்டார். இருவரும் நண்பர்கள் எனினும் அவரவர் கொள்கையில் சிறிதளவும் விட்டுக்கொடுக்கவில்லை.

ஈரோட்டிற்கு வருகை புரிந்த சிங்கம்பட்டி ஜமீன்தாருக்கு சாதாரண கடை சாப்பாட்டை கொடுத்து தனது சிக்கனத்தைக் காண்பித்தார். ஈரோட்டில் பெரியாரின் வீட்டிற்கு மரியாதைக்குரிய மகாத்மா காந்தி, ஜெயப்பிரகாஷ் நாராயண், இராஜகோபாலாச்சாரியார், திருவிதாங்கூர் மன்னர் போன்றவர்கள் வந்து தங்கி பெரியாரோடு அளவளாவி சென்றுள்ளார்கள்.

அவரது சகோதரியின் மகள் சிறுவயதிலேயே விதவையானது அவரது மனதில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. அதன் காரணமாக 1909லேயே அவருக்கு விதவை திருமணம் நடட்தி வைத்தார்.

காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது நாடெங்கும் கடும் கலவரம் நடந்தபோது பெரியாரின் போதனையால் தமிழகம் மட்டும் அமைதித் தீவாக திகழ்ந்தது. இந்தியாவிற்கு ‘காந்தி தேசம்’ என பெயரிட வேண்டும் என பெரியார் கூறினார்.

**பெரியாரிடமிருந்த அருங்குணங்கள்**

❖ சிக்கனத்தின் சின்னமாக விளங்கிய பெரியார் எப்போதும் புகைவண்டியில் மூன்றாம் வகுப்பில்தான் பயணம் செய்வார். அதை அவரிடம் கேட்டால் நான்காம் வகுப்பு என்று ஒன்று இல்லையே என்றார்.

❖பயணத்தின் போது ரோட்டு ஓரக் கடைகளிலேயே சாப்பிடுவார். வரவுக்கு மீறி செலவு செய்வதை விபசாரத்திற்கு ஒப்பிடுவார்.





❖பொதுக் கூட்டங்களில் மாலை அணிவிப்பதை பொருள் விரயம் என்றார். அது எதற்கும் பயன்படாது என்றார். இருந்தாலும் அவருக்கு அணிவிக்கப்பட்ட மாலைகள் அனைத்தையும் தனது மனித நேயப் பணியாக திருச்சியில் நடந்து வருகிற நாகம்மையார் குழந்தைகள் இல்லத்து குழந்தைகளுக்கு கொண்டு வந்து கொடுப்பார்.

**மேடையில் பெரியார் பேசும்போது நடந்த சுவையான சம்பவங்கள்**

❖ ஒரு மேடையில் பேசும்போது பார்ப்பனர் ஒருவர் கேள்விகளை எழுதி அனுப்பிக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் அவர் எழுதிக் கொண்டிருந்த பென்சிலில் பல்ப்பம் உடைந்து விட்டதை கண்ணுற்ற பெரியார் தன் பையில் இருந்து பேனாவைக் கொடுத்து கேள்விகளை எழுதச் சொன்னார்.

❖ இந்து மதத்தை ஒழித்து விட்டு அந்த இடத்தில் எதை வைக்கப் போகிறீர்கள் என்று கேட்பவர்களுக்கு “வீட்டில் அசிங்கம் இருக்கிறது நாற்றம் அடிக்கிறது எடுட்து எறியுங்கள் என்றால் அதற்கு மாற்றாக அந்த இடத்தில் எதை வைக்கலாம் என்பது சரியா?” என்றார். எல்லா மதங்களுமே ஒழிய வேண்டும் என்று சொன்ன பெரியார் மனிதனை மனிதன் இழிவுபடுத்தும் நிலை இந்து மதத்தில் அதிகம் இருப்பதால் இந்து மதத்தை அதிகமாகச் சாடினர்.

❖ கடவுள் இல்லை என்கிறீர்களே கடவுள் வந்துவிட்டால் என்ன செய்வீர்கள் எனக் கேட்டதற்கு “வந்து விட்டால் உண்டு என்று ஏற்றுக் கொள்வேன்” என்றார்.

பெரியார் தன்னுடைய தள்ளாத வயதிலும் இராஜகோபாலாச்சாரியரின் இறுதிச் சடங்கில் சக்கர நாற்காலியில் சென்று கலந்து கொண்டது மட்டுமல்லாமல் குடியரசு தலைவருக்கு மரியாதை கொடுக்கும் வண்ணம் சக்கர நாற்காலியில் இருந்து எழுந்து அதனை தரையில் உட்கார்ந்திருந்த குடியரசுத் தலைவர் வி.வி.கிரி அவர்களுக்கு நாற்காலியை கொடுத்தார்.

மக்கள் விரும்பியதை கூறாமல் மக்களுக்கு வேண்டியதைக் கூறினார்.

அவருடைய சமுதாயப் பணியானது பெரும்பகுதி மக்களுக்கு எதிராக இருந்ததால் “நான் மயிரைக் கட்டி மலையை இழுக்கிறேன்.

வந்தால் மலை போனால் மயிறு" என்பார். வேட்டியைக் கூட கைலியாகக் கட்டினால் அதிக நாட்கள் உழைக்கும் என்பார்.

'ஒரு பெண்ணை விதவையாக வைத்து சாகாமல் பாதுகாப்பது ஒரு உயிரை பட்டினியோடு சாகடிப்பதை விடக் கொடுமையானது' என்றார். இந்து மதம் என்பது மனித நேயத்திற்கு எதிரானது. எனவே அதை ஒழிக்க வேண்டும் என்றார்.

ஒரு தெருவில் உள்ள ஒரு வீட்டில் "இது பதிவிரதை வீடு" என்று எழுதினால் பக்கத்து வீடுகள் தேவடியாள் வீடுகள் என்பது போல் பிராமணாள் ஹோட்டல் என்று எழுதினால் மற்றவர்கள் சூத்திரர்கள் என்றுதான் அர்த்தம் என்றார்.

அனைவரும் கல்வி அறிவு பெற 6 மாதத்தில் கையெழுத்துப் போட தெரியாதவர்களுக்கு மூன்று மாத சிறைத்தண்டனை என சட்டம் கொண்டு வரவேண்டும் என்றார்.

மனுதர்மத்தில் ஜாதிக்கு ஒரு நீதி இருந்ததைக் கண்டித்து தாடிக்கு ஒரு சீயக்காய் தலைக்கொரு சீயக்காய் என்றார்.

கல்வி அறிவும் சுயமரியாதை எண்ணமுமே மனிதனை மாண்புரச் செய்யும் என்றார். மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு என்றார். பொதுக் கூட்டங்களில் தான் சொல்ல வந்த கருத்துக்கள் அனைத்தையும் சொல்லித்தான் முடிப்பார். மயிலாடுதுறையில் நடந்த பொதுக்கூட்டத்தில் நாலரை மணி நேரம் பேசினார்.

பெரியார் 78ஆம் பிறந்த நாள் விழாவில் பெரியாருக்கு குன்றக்குடி அடிகளார் அவர்கள் "தன்மான வீரர்" என சிறப்பு பெயர் வைத்தார்.

நன்றி உணர்வென்பது உதவியை பெற்றுக் கொண்டவர் காட்டவேண்டிய கடமையே தவிர உதவி செய்தவன் அதை எதிர்பார்க்கக் கூடாது என்றார். தோழர்கள் கொடுத்த உணவு மிகவும் காரமாக மோசமாக இருந்தாலும் "அன்போடு கொடுத்த தோழர்கள் மனம் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக அந்த உணவினை சாப்பிட்டு" பாராட்டுவார். செல்வராகப் பிறந்து செல்வராக வாழ்ந்து,

செல்வச் செழிப்பிலே செல்வக் களிப்பிலும் சிக்கி சீரழியாது தான் கண்ட சொத்துக்கள் அனைத்தையும் அறக்கட்டளை மூலம் பொதுச் சொத்தாக்கினார்.

1954இல் இராஜகோபாலாச்சாரியார் கொண்டு வந்த குலக்கல்வி திட்டட்தை எதிர்த்து பிரச்சாரம் செய்து வெற்றிகண்டார். பெரியாரின் வாதத்திறமையை கண்டு வியந்த “இராஜகோபாலாச்சாரியார் நல்ல வேளை நீங்கள் வக்கீலாகாமல் போனீர்கள் வந்திருந்தால் வழக்கறிஞர்கள் பாடு திண்டாட்டம்தான் என்றார்.

19.12.1973இல் சென்னை தியாகராய நகரில் தனது உடல் வலியையும் பொருட்படுத்தாது தனது இறுதி சொற்பொழிவை நிகழ்த்தினார். மக்களுக்காக போராடி 88 முறைகள் சிறைக்குச் சென்றார். தன்னுடைய பிறந்த நாட்கள் கொள்கை விளக்க நாட்களாக கொண்டாட அனுமதி அளித்தார்.

வெண்தாடி வேந்தர், வைக்கம் வீரர், பகுத்தறிவுப் பகலவன் என எல்லோராலும் பாராட்டப்பட்ட **தந்தை பெரியார் வேலூர் சி.எம்.சி மருத்துவமனையில் 24.12.1973இல் காலமானார்**. கடவுள் இல்லை என்று சொன்ன பெரியார் 94 வருடம் 3 மாதங்கள் 7 நாட்கள் வாழ்ந்தார். தனது வாழ்நாளில் 8200 நாட்கள் சுற்றுப்பயணம் செய்தார். 10700 பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். பூமியின் சுற்றளவைப் போல 33 மடங்கு தூரம் வாழ்நாளில் சுற்றுப்பயணம் செய்தார்.

பெரியார் வாழ்ந்த காலத்தில் 1970இல் பெரியாருக்கு யுனெஸ்கோ விருது வழங்கப்பட்டது. முதன்முதலில் அவர் வாழும் காலத்திலேயே திருச்சியில் பெரியாரின் முழு உருவச் சிலை வைக்கப்பட்டது. பெரியாருக்கு 76 வயதில் 76 பவுன் தங்கம் நாகப்பட்டினத்தில் வழங்கப்பட்டது.

தன்னுடைய கருத்துக்கள் பல திருக்குறளில் உள்ளதால் திருக்குறளை மக்களிடம் பரப்பினார். இருந்தாலும்

“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை” போன்ற திருக்குறளை மிகவும் சாடினார்.

பெரியாருக்குப் பணி செய்வதற்காகவே பெரியாருடன் சுற்றுப்பயணம் செய்து பெரியாரை நன்றாகப் பார்த்துக் கொண்டார் மணியம்மையார். அவரின் இயற்பெயர் காந்திமதி. தன்னுடைய சொத்துக்கள் அனைத்தும் தனிப்பட்ட யாருக்கும் சென்றுவிடக் கூடாது. பொது உடைமையாக்க வேண்டுமென நினைத்த பெரியார் அதற்கான ஓர் ஏற்பாட்டை செய்தார். பெரியாரின் மறைவுக்குப் பிறகு பெரியாரை 95 ஆண்டுகாலம் பாதுகாத்த மணியம்மையார் அவர்கள் இந்த இயக்கத்தை வழிநடத்தினார்கள். மணியம்மையாரின் மறைவுக்குப் பிறகு காங்கிரசின் மூத்த தலைவர் G.K.மூப்பனார் அவர்களால் "பெரியாரின் பிள்ளை" என பாராட்டப்பட்ட தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்கள் திராவிடர் இயக்கத்தை சிறப்புடன் வழி நடத்திச் செல்கிறார். பெரியாரை பெரியாரின் உலகமெங்கும் எடுத்துச் செல்கிறார்.

■

# குடும்ப வாழ்க்கையும் தம் வரலாறும்

– ப. சுப்பிரமணியன் –

1) **பகுத்தறிவுப் பகலவன் எந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 17ஆம் தேதி பிறந்தார்?**
அ) 1869 ஆ) 1879 இ) 1901 ஈ) 1885

2) **தந்தை பெரியாரின் தந்தை பெயர் என்ன?**
அ) கிருஷ்ணசாமி நாயக்கர் ஆ) வெங்கட்டப்ப நாயக்கர்
இ) வெங்கட்ட நாயக்கர் ஈ) இராமசாமி நாயக்கர்

3) **தந்தை பெரியாரின் அன்னையின் பெயர் என்ன?**
அ) சின்னத்தாயம்மாள் ஆ) கண்ணம்மாள்
இ) பொன்னுத்தாயம்மாள் ஈ) நல்லம்மாள்

4) **1880 - களில் ஈரோட்டில் நாயக்கர் என்று கூறினால் அது இவரையே குறிக்கும்**
அ) கிருஷ்ணசாமி நாயக்கர் ஆ) வெங்கட்ட நாயக்கர்
இ) வேலு நாயக்கர் ஈ) ராமசாமி நாயக்கர்

5) **பெரியார் தம் பெற்றோருக்கு எத்தனாவது பிள்ளை?**
அ) முதலாம் ஆ) இரண்டாம் இ) ஏழாம் ஈ) பத்தாம்

6) **புரட்சியாளர் தந்தை பெரியார் பிறந்ததால் பெருமை அடைந்த ஊர் எது?**
அ) திருச்சி ஆ) வைக்கம் இ) ஈரோடு ஈ) தருமபுரி

**7) ஈ.வெ. ராமசாமி சிறு வயதில் அவருடைய தந்தையின் சிறிய தாயாருக்குத் தத்து கொடுக்கப்பட்டதால் . . .**

அ) தறுதலையாக வளர்ந்தார்

ஆ) அமைதியின் உருவமாக வளர்ந்தார்

இ) யாருடைய கட்டுப்பாடுமின்றிச் சுயசிந்தனையாளராக வளர்ந்தார்

ஈ) படிப்பில் மிக்க ஆர்வம் காட்டினார்

**8) அறிவு ஆசான் பெரியார் பள்ளியில் பயின்ற ஆண்டுகள்**

அ) 5 ஆண்டுகள் ஆ) 10 ஆண்டுகள்

இ) 8 ஆண்டுகள் ஈ) இன்டர் மீடியேட்

**9) தந்தை வெங்கட்ட நாயக்கர் ஈ.வெ.ராமசாமி சிறுவனாக இருந்த போது செய்த தொழில்**

அ) விவசாயம் ஆ) கல்தச்சர் இ) ஆசிரியர் ஈ) வணிகம்

**10) வறுமையில் வாடிய வெங்கட்ட நாயக்கர் செல்வச் சீமானாய் ஆனதற்குக் காரணம்**

அ) மாமியார் வீட்டுச் சொத்து கிடைத்ததால்

ஆ) கடின உழைப்பும், துணைவியாரின் விடா முயற்சியும்

இ) கல் உடைக்கும்போது புதையல் கிடைத்தது

ஈ) ஆங்கிலேயருக்கு விசுவாசமாய் இருந்ததால் அவர்கள் கொடுத்த பெரும் தொகை

**11) பெரியார் அவர்கள் குழந்தைப் பருவத்தில் அருந்திய பால்**

அ) பசும்பால் ஆ) தாய்ப்பால் இ) ஆட்டுப்பால் ஈ) எருமைப்பால்

**12) தாய் தந்தையருக்கு ஏற்ற பிள்ளை என்று எல்லோராலும் பாராட்டப்பட்ட பெற்றோருக்குப் பிடித்த பிள்ளை**

அ) ஈ.வெ. ராமசாமி ஆ) ஈ.வெ. கண்ணம்மாள்

இ) ஈ.வெ. கிருஷ்ணசாமி ஈ) ஈ.வெ. பொன்னுத்தாய்

**13) பெரியார் அவர்கள் 10 வயதுச் சிறுவனாக இருந்தபோது இரண்டு கால்களிலும் விலங்குக் கட்டைகள் பூட்டப்பட்டதற்கான காரணம்**

அ) மரங்களின் உச்சியிலும் வீட்டின் மாடியிலும் ஏறி விளையாடியமையால்

ஆ) புழங்கக்கூடாத சாதியினருடன் புழங்கி, அவர்களின் வீட்டுத் தின்பண்டங்களைத் தின்று அவர்களோடு விளையாடியமையால்

இ) ஊரைவிட்டு அடிக்கடி ஓடிப்போனமையால்

ஈ) பெற்றோரையும் ஆசிரியர்களையும் மதிக்காமையால்





**14) எது நடந்தாலும் "தலைவிதிதான்" காரணம் என்று கூறி வந்த ராமநாத அய்யருக்குப் பாடம் புகட்ட அவரது கடையில் தட்டியைத் தாங்கி நின்ற முட்டுக்கம்பைத் தட்டி விட்டு, ராமநாத அய்யர் தலையில் விழுந்து கோபமுற்றபோது பெரியார் கூறிய பதில்**

அ) மன்னிக்கணும். தவறுதலாகத் தட்டி விட்டுட்டேன்
ஆ) இதுவும் உன் தலைவிதியே
இ) நான் தட்டிவிடவில்லை, காற்றடித்ததால் விழுந்தது
ஈ) முட்டுக்கம்பு ஒடிந்ததால் விழுந்தது

**15) நாகம்மையாரை மணக்கும் போது பெரியார் வயது?**

அ) 19 ஆ) 15 இ) 24 ஈ) 21

**16) பெரியாரை மணக்கும் போது நாகம்மையாரின் வயது**

அ) 18 ஆ) 17 இ) 13 ஈ) 9

**17) பெரியார் அவர்கள் கோயிலுக்குப் போகும் தம் மனைவியின் மனப் போக்கை மாற்றிடக் கையாண்ட வழிமுறை யாது?**

அ) சண்டை போட்டார்
ஆ) ரவுடிகளை விட்டு மிரட்டுவது போல் நடிக்க வைத்தார்
இ) பொதுக் கூட்டங்களுக்கு மனைவியை அழைத்துச் சென்றார்
ஈ) ஒன்றுமே செய்யவில்லை

**18) பெரியாரின் மனைவி நாகம்மையாரின் இரு கொள்கைகளாக எவற்றைச் சாமி. சிதம்பரனார் குறிப்பிடுகிறார்?**

அ) விரதங்களைக் கடைபிடிப்பதோடு கணவருக்குப் பணிவிடை செய்வது
ஆ) பெரியாரின் எல்லாக் காரியங்களுக்கும் துணை நிற்பது, இல்லத்திற்கு வரும் அனைவருக்கும் சோறு போடுவது
இ) பார்ப்பனர்களுக்குத் தானம் வழங்குவதும், சமயச் சொற்பொழிவுகள் நடத்துவதும்
ஈ) மாமனார் – மாமியார்க்குச் சேவை செய்வது, வீட்டு வேலை பார்ப்பது

**19) பெரியார் அவர்கள் காசிக்குச் சென்று துறவு பூண்டபோது அவரின் வயது?**

அ) 24 ஆ) 26 இ) 25 ஈ) 23

**20) பெரியார் காசிக்குச் சென்றபோது அவரோடு சென்ற இரு பார்ப்பனர்கள் காசியை அடைந்ததும் அவரைப் பிரிந்து சென்றமை ஏன்?**

அ) அவர்களுடைய உறவினர் வீட்டிற்குச் சென்றுவிட்டனர்

ஆ) வேத மந்திரங்கள் தெரிந்ததால் கோவில்களில் பூஜை செய்யச் சென்றுவிட்டார்கள்.

இ) எல்லாச் சத்திரங்களிலும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே சோறு என்பதால்

ஈ) பெரியாரின் பிடிவாதத் தன்மை பிடிக்காததால்

**21) வாழ்க்கை செம்மையாகவும் தூய்மையாகவும் இருக்கும் என்று நம்பிக் காசி சென்ற பெரியார் அங்கு கண்ட காட்சி யாது?**

அ) காசி புனிதத் தலமாக இருந்தது

ஆ) அவர் நினைத்தபடியே செம்மையாகவும் தூய்மையாகவும் இருந்தது

இ) ஒழுக்கமும், நேர்மையும், நாணயமும் நிறைந்து இருந்தது

ஈ) ஒழுக்க ஈனமும் விபச்சாரமும் மலிந்து கிடந்தமை

**22) செல்வத்தில் திளைத்துச் சிறிதும் பசிப் பிணி அறிந்திராத நமது ராமசாமியார் காசியில் எச்சிலைக்கு ஏங்கி நின்ற நிலை ஏற்படக் காரணம்**

அ) செல்வத்தை ஏழை எளியவருக்கு வாரி வழங்கியமையால்

ஆ) குடும்ப ஆச்சாரத்தைக் கைவிட்டமையால்

இ) தந்தையிடம் கோபித்துச் சில காலம் துறவியாக வாழ்ந்தமையால்

ஈ) பெற்றோர்கள் வீட்டை விட்டுத் துரத்தியமையால்

**23) கடவுள் இல்லை என்று கூறிய பெரியார் பல தேவஸ்தானங்களுக்குத் தலைவராக இருந்ததற்குக் காரணம்**

அ) அவர் மறைமுகமாகக் கடவுளை வணங்கினார்

ஆ) தெய்வ குற்றத்திற்குப் பயந்து

இ) தந்தையின் பணியாதலால் அதை ஏற்றுக்கொண்டார்

ஈ) நல்ல வருமானம் வந்ததால் ஏற்றுக்கொண்டார்

**24) பெரியாரின் தந்தை இறந்த ஆண்டு?**

அ) 1911 ஆ) 1912 இ) 1919 ஈ) 1949

**25) பெரியார் மனித நேய மாண்பாளர் என்பதற்கு எடுத்துக்காட்டு**

அ) பல்வேறு ஊர்களிலும் மருத்துவமனை அமைத்தார்

ஆ) பக்தர்களையும் மதித்தார்

இ) தம் தொண்டர்கள் மூலம் நூற்றுக்கணக்கான தண்ணீர்ப் பந்தல்களை அமைத்தார்

ஈ) ஈரோட்டில் பிளேக் நோயால் பலர் மாண்டபோது அனேக பிணங்களைத் தம் தோள்மீது தூக்கிச் சென்று அடக்கம் செய்தார்.

**26) ஈரோடு நகர் மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது பெரியாரின் சமுதாய அந்தஸ்து என்ன?**

அ) 29 பொது நிறுவனங்களில் பதவியில் இருந்தார்

ஆ) சாதாரணக் குடிமகன்

இ) ஆயிரம் வேலி நிலத்திற்குச் சொந்தக்காரர்

ஈ) சாப்பாட்டிற்கு வழி இல்லாமல் கல் உடைக்கும் வேலை செய்தார்

**27) பெரியார் ஈரோட்டில் நகர் மன்றத் தலைவராக இருந்த ஆண்டு**

அ) 1905 ஆ) 1910 இ) 1919 ஈ) 1925

**28) சேலத்தில் ராஜகோபாலாச்சாரியாரும் ஈரோட்டில் ஈ.வெ. ராமசாமியும் நகர் மன்றத் தலைவர்களாக இருந்தபோது, ஈரோட்டின் நிர்வாகத்தைக் கண்டு வியந்த ராஜகோபாலாச் சாரியார் பெரியாரிடம் கேட்ட உதவி யாது?**

அ) நீங்களே சேலத்திற்கும் சேர்மனாக இருங்கள் என்றார்

ஆ உங்களுடைய சானிட்டரி இன்ஸ்பெக்டரை எங்களுக்குக் கொடுங்கள் என்றார்

இ) ஈரோட்டின் நிர்வாக அதிகாரியைச் சேலத்திற்கு மாற்றுங்கள் என்றார்

ஈ) தாங்களே ஒரு வாரம் சேலத்தில் தங்கி நிர்வாகத்தைச் சீர்படுத்துங்கள் என்றார்

**29) ஈரோடு நகர் மன்றத் தலைவராக இருந்தபோது பெரியாருக்குப் பரிந்துரை செய்யப்பட்ட பட்டம் யாது?**

அ) ராவ் பகதூர் ஆ) ராவ் சாகிப்

இ) டாக்டர் பட்டம் ஈ) சர் பட்டம்

**30) பெரியார் அவர்கள் அங்கம் வகித்த சென்னை மாகாண வருமானவரி அலுவலகக் குழுவில் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை**

அ) 15 ஆ) 7 இ) 9 ஈ) 3

**31) சிங்கம்பட்டி ஜமீன்தார் அவர்கள் ஈரோட்டிற்கு வந்தபோது அவரை வரவேற்று மரியாதை செய்யும் முகமாகப் பெரியார் அவருக்கு அளித்த உணவு என்ன?**

அ) அசைவ சாப்பாடு

ஆ) உயர்தர சைவ உணவு

இ) சாதாரணக் கடைச் சாப்பாடு

ஈ) வீட்டில் தயாரித்த சாதாரண உணவு

**32) பெரியாரின் மனதில் பெரும்பாதிப்பை ஏற்படுத்திய அவர் குடும்பத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சி**

அ) பார்ப்பனர்களுக்குத் தானம் தருவது
ஆ) புராண இதிகாசக் கதாகாலட்சேபங்கள்
இ) சாதி வேற்றுமை பார்ப்பது
ஈ) சகோதரியின் மகள் விதவையானது

**33) "ஆணுக்குப் பெண் அடிமையில்லை" என்று சொன்ன பெரியார் தமது குடும்பத்தில் 1909 ஆம் ஆண்டிலேயே யாருக்கு விதவைத் திருமணம் நடத்தி வைத்தார்?**

அ) சகோதரிக்கு ஆ) தங்கையின் மகளுக்கு இ) மகளுக்கு
ஈ) அண்ணனின் மகளுக்கு

**34) குடும்பக் கட்டுப்பாட்டைப் பரப்பிய பெரியாருக்கும் நாகம்மையாருக்கும் எத்தனை குழந்தைகள் பிறந்தன?**

அ) 13 பிள்ளைகள் ஆ) ஒன்றுமில்லை
இ) ஒருபெண் குழந்தை பிறந்து 5 மாதத்தில் இறந்துவிட்டது
ஈ) 2 ஆண், 1 பெண்

**35) "நாகம்மையார் வாழ்ந்ததும், வாழ நினைத்ததும் எனக்காகவே அன்றித் தனக்காக அல்ல" என்று பெரியார் அவர்களால் பாராட்டப்பெற்ற அம்மையார் அவர்கள் மறைந்த ஆண்டு**

அ) 1933 ஆ) 1961 இ) 1947 ஈ) 1952

**36) மலேசிய நாட்டில் நாகம்மையார் அவர்களின் சுயமரியாதை இயக்கப் பிரச்சாரம் பற்றி எழுதிய சிங்கப்பூர் பத்திரிகை எது?**

அ) இனமுரசு ஆ) முன்னேற்றம்
இ) காலைக்கதிர் ஈ) தமிழ்முரசு

**37) தம் மனைவி நாகம்மையார் இறந்தபோது பெரியார் அவர்கள் எடுத்த முடிவு**

அ) வாழ்க்கையையே வெறுத்துவிட்டார்
ஆ) அனாதை ஆகிவிட்டேன் என்றார்
இ) இனிமேல் இன்னும் தீவிரமாகப் பொதுப் பணி செய்யும் வாய்ப்புக் கிடைத்துள்ளது என்றார்
ஈ) நான் விதவன் ஆகிவிட்டேன், நான் இனி மங்கல நிகழ்ச்சியில் கலந்து கொள்ளமாட்டேன் என்றார்





**38) 144- தடை உத்தரவையும் மீறித் தம் மனைவி மறைவுற்றதற்கு மறுநாளாகிய 12.5.1933 அன்று பெரியார் கிறித்துவத் திருமணத்தை செய்து வைத்ததால் கைது செய்யப்பட்ட ஊர் எது?**

அ) தஞ்சை ஆ) சேலம் இ) திருச்சி ஈ) காரைக்குடி

**39) ஈரோட்டில் தற்போது இயங்கி வரும் வெங்கட்ட நாயக்கர் தர்ம வைத்திய சாலையைத் தொடங்கி நடத்தியவர்**

அ) சின்னத்தாய் அம்மாள் ஆ) வெங்கட்ட நாயக்கர்
இ) கிருஷ்ணசாமி நாயக்கர் ஈ) ஈ.வெ. ராமசாமி நாயக்கர்

**40) பெரியாரின் தாய் சின்னத்தாய் அம்மையார் வாழ்ந்த ஆண்டுகள்**

அ) 95 ஆண்டுகள் ஆ) 60 ஆண்டுகள்
இ) 90 ஆண்டுகள் ஈ) 85 ஆண்டுகள்

**41) 1938 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த மகளிர் மாநாட்டில் ஈ.வெ.ராமசாமிக்கு வழங்கப்பட்ட பட்டம்**

அ) வைக்கம் வீரர் ஆ) பெரியார்
இ) ஈரோட்டுச் சிங்கம் ஈ) வெண்தாடி வேந்தர்

**42) திரு. வி.க. அவர்கள் பெரியாரைப் பற்றி எழுதிய பத்திரிகை**

அ) குடிஅரசு ஆ) திராவிடன் இ) நவசக்தி ஈ) நவமணி

**43) 8.1.1940 அன்று பம்பாயில் பெரியார், முகமது அலி ஜின்னா, அம்பேத்கர் ஆகிய மூவரும் கலந்து பேசிய உரை**

அ) இந்து முஸ்லிம் ஒற்றுமைபற்றி ஆ) இன இழிவை ஒழிப்பதற்காக
இ) நாட்டுப் பிரிவினை பற்றி ஈ) கடவுளை ஒழிப்பது பற்றி

**44) காந்தி மறைந்தபோது இந்தியாவுக்கு என்ன பெயர் வைக்க வேண்டுமென்று பெரியார் கூறினார்?**

அ) இந்து தேசம் ஆ) மகாத்மா தேசம்
இ) காந்தி தேசம் ஈ) அகிம்சா தேசம்

**45) பெரியார் அவர்கள் 1934 முதல் 1959 முடிய 25 ஆண்டு காலத்தில் தாம் ஒத்துக்கொண்ட ஒரே ஒரு நிகழ்ச்சிக்கு மட்டும் போக முடியாமல் போனதற்குக் காரணம்**

அ) உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்
ஆ) மனைவி மறைவுற்றதால்
இ) கடுமையான வெள்ளத்தில் கார் சிக்கி ஓட முடியாமல் பழுதானதால்
ஈ) காவல் துறை அனுமதிக்காததால்

**46) பெரியார் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக வதந்தி பரவிய நாள் எது?**

அ) 14.7.1949 ஆ) 5.8.1961 இ) 31.10.1984 ஈ) 30.1.1948

**47) "அரசியல் மணி" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட மணியம்மையாரின் இயற்பெயர் என்ன?**

அ) சாந்திமதி ஆ) காந்திமதி இ) பானுமதி ஈ) சந்திரமதி

**48) 70 வயதில் பெரியார் அவர்கள் அன்னை மணியம்மையார் அவர்களை மணம் செய்து கொண்டதற்கான காரணம்**

அ) குழந்தைப் பேற்றுக்காக
ஆ) இல்லற இன்பம் அனுபவிக்க
இ) தம்மை வயதான காலத்தில் கவனிக்க
ஈ) சொத்தையும் இயக்கத்தையும் பாதுகாக்கச் சட்டப்படி செய்த ஏற்பாடு

**49) சமதர்மம் பொதுவுடைமை பற்றிப் பெரியார் பேசியதைக் கேட்ட ஒருவர் நான் உங்கள் மனைவி நாகம்மையைத் திருமணம் செய்ய விரும்புகிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்ட போது பெரியாரின் பதில் . . . . . . . . . . .**

அ) ஆத்திரம் அடைந்தார்
ஆ) இக்கேள்வி நாகம்மையாரிடம் கேட்கப்படவேண்டிய கேள்வி என்றார்
இ) கேட்டவனை ஆட்கள் வைத்து அடித்தார்
ஈ) நான் இதற்குச் சம்மதிக்கமாட்டேன் என்று மறுத்தார்

**50) "அவர் தமிழர்களின் பொதுச் சொத்து, பொதுச் சொத்து நாதியற்றதாகும் என்று அவரை விட்டு விடாமல் எல்லோரும் தங்கள் சொந்த சொத்தைப் போல் கவனமாகக் காப்பாற்றியாக வேண்டும்" யார் யாரைப்பற்றிக் கூறியது?**

அ) அறிஞர் அண்ணாவைப்பற்றிப் பெரியார்
ஆ) பெரியாரைப்பற்றி அன்னை மணியம்மையார்
இ) பெரியாரைப்பற்றிக் காமராசர்
ஈ) அன்னை நாகம்மையாரைப் பற்றிப் பெரியார்

**51) பெரியார்அவர்களைஅவரது தள்ளாத வயதிலும் குழந்தையைப் போல் போற்றிப் பாதுகாத்து 95 ஆண்டுகள் வாழவைத்த பெண் யார்?**

அ) நாகம்மையார் ஆ) சின்னத்தாய் அம்மையார்
இ) மணியம்மையார் ஈ) கண்ணம்மாள்

**52) உலகப் புத்தர் மாநாட்டில் கலந்து கொள்ள மணியம்மையாரோடு பெரியார் அவர்கள் சென்ற நாடு எது?**

அ) ரஷ்யா ஆ) பர்மா இ) சீனா ஈ) சிங்கப்பூர்

**53) பெரியாருக்குப்பின் பெரியார் இயக்கத்திற்குத் தலைமையேற்றவர் யார்?**

அ) குத்தூசி குருசாமி ஆ) அண்ணாதுரை
இ) கி. வீரமணி ஈ) மணியம்மையார்

**54) சென்னையில் அன்னை மணியம்மையார் தலைமையில் ராவணலீலா நடந்த நாள் எது?**

அ) 10.8.1971 ஆ) 5.6.1944 இ) 6.8.1998 ஈ) 25.12.1974

**55) பெரியாருக்குப் பின் சுயமரியாதை இயக்கத்தைக் கட்டிக்காத்த மணியம்மையார் அவர்கள் மறைந்த நாள் எது?**

அ) 1978 மார்ச்–16 ஆ) 1978 மார்ச் 12
இ) 1978 ஜனவரி 8 ஈ) 1978 மார்ச் 10

**56) வினாயகர் சிலை உடைப்பு ஊர்வலத்தைப் பெரியார் அவர்கள் நடத்திய ஆண்டு**

அ) 1953 ஆ) 1948 இ) 1965 ஈ) 1921

**57) இராசகோபாலாச்சாரியாரின் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து பெரியார் அவர்கள் வெற்றி பெற்ற ஆண்டு . . .**

அ) 1949 ஆ) 1960 இ) 1954 ஈ) 1965

**58) 1958 - இல் பெரியார் உரையாற்றிய வட இந்தியப் பல்கலைக்கழகம் எது?**

அ) நாலந்தா பல்கலைக்கழகம் ஆ) கல்கத்தா பல்கலைக்கழகம்
இ) லக்னோ பல்கலைக்கழகம் ஈ) காசி பல்கலைக்கழகம்

**59) 1959 இல் வடநாட்டில் சாதி ஒழிப்புப் பிரச்சாரம் செய்யப் பெரியாரை அழைத்த கட்சி எது?**

அ) காங்கிரஸ் கட்சி
ஆ) கம்யூனிஸ்டு கட்சி
இ) அகில இந்திய ரிபப்ளிக்கன் கட்சி
ஈ) அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் கட்சி

**60) ஈரோட்டில் பெரியார் வீட்டிற்கு வராதவர் யார்?**

அ) லால் பகதூர் சாஸ்திரி ஆ) ஜெயப் பிரகாஷ் நாராயண்
இ) மகாத்மா காந்தி ஈ) சி. ராஜகோபாலாச்சாரியார்

**61) சிக்கனத்தின் சின்னம் பெரியார் அவர்கள் புகை வண்டியில் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்வது குறித்து அன்பர் ஒருவர் கேட்டதற்கு அய்யாவின் பதில்**

அ) பணம் இல்லை என்றார்

அ) நிறைய மக்களைப் பார்ப்பதற்காக என்றார்

இ) நான்காம் வகுப்பு என்று ஒன்று இல்லை என்றார்

ஈ) முதல் வகுப்புப் பயணச் சீட்டு கிடைக்கவில்லை என்றார்

**62) தன்னிகரற்றத் தலைவராக விளங்கிய பெரியார் தம்முடைய தலைவராக ஏற்றுக் கொண்டது யாரை?**

அ) காந்தியடிகள் ஆ) சாக்ரடீஸ்

இ) ஞானியாரடிகள் ஈ) யாருமில்லை

**63) தங்கநிறத் தந்தைக்கு 76 வயதில் 76 பவுன் தங்கம் வழங்கிய ஊர் எது?**

அ) காஞ்சிபுரம் ஆ) சேலம் இ) நாகப்பட்டினம் ஈ) தஞ்சை

**64) பெரியார் கண்டித்த குறள் எது?**

அ) குடி செய்வார்க்கில்லை பருவம் மடிசெய்து மானம் கருதக் கெடும்

ஆ) எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு

இ) கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக

ஈ) தெய்வம் தொழாஅள் கொழுநன் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

**65) பெரியார் அவர்கள் தமது சொற்பொழிவுகளில் திருக்குறளை மேற்கோள்களாகக் கையாண்டதற்குக் காரணம்**

அ) அது உலகப் பொதுமறை என்பதால்

ஆ) அவருடைய சொற்பொழிவுக்கு ஆதாரம் சேர்க்க

இ) பெரியாருடைய கருத்துக்கள் திருக்குறளில் இருந்தமையால்

ஈ) திருக்குறளை எல்லாரும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதால்

**66) சாதி இல்லை, மதம் இல்லை என்று சொன்ன பெரியார் மதவாதிகளைப் போலத் தாடி வைத்துக்கொண்டதற்கான காரணம் என்ன?**

அ) ரஷ்ய அறிஞர்கள் தாடி வைத்திருந்ததால்

ஆ) காலச் செலவையும், பொருட்செலவையும் குறைக்க

இ) தம்மை மற்றவர்கள் மகான் என்று நினைக்க

ஈ) அழகிற்காக





**67) “எனக்குப் பெண்டு பிள்ளை இல்லை; நான் செத்தால் எனக்காக அழக்கூடியவர் பெரியார் மட்டுமே” என்று கூறியவர் யார்?**

அ) காமராசர் ஆ) புலவர் கோ. இமயவரம்பன்

இ) திரு.வி.க. ஈ) முத்துராமலிங்கத்தேவர்

**68) கொள்கையில் மாறுபாடு கொண்டிருந்தாலும் பெரியாருக்கு உற்ற நண்பராய் இருந்தவர்**

அ) ராஜகோபாலாச்சாரியார் ஆ) ராஜாராம் மோகன் ராய்

இ) உ..வே.சாமிநாத அய்யர் ஈ) சீனிவாச சாஸ்திரி

**69) புரட்சிக் கவிஞர் கடவுள், மதம்பற்றிப் பாடுவதை விட்டுவிடுவதற்குக் காரணமாக இருந்த பெரியார் அவர்களின் சொற்பொழிவு நடந்த இடம்**

அ) திருச்சி ஆ) மயிலாடுதுறை

இ) தஞ்சை ஈ) சிதம்பரம்

**70) பெரியார் தம்முடைய பேச்சில் அடிக்கடி வெங்காயத்தைப் பயன்படுத்தியதற்குக் காரணம்**

அ) அவருக்கு வெங்காயம் பிடிக்கும்

ஆ) அவர் வெங்காய மண்டி வைத்திருந்தார்

இ) வெங்காயம் மிகவும் காரம் என்பதால்

ஈ) உரித்தால் ஒன்றும் இல்லாதது என்பதால்

**71) “மேற்கோள் என்ற சாய்காலில் நிற்காமல் சொந்தமாகக் கருத்துக்களைக் கூறுபவர் பெரியார் ஒருவர் மட்டுமே” என்று கூறியவர் யார்?**

அ) ராஜகோபாலாச்சாரியார் ஆ) நீலகண்ட சாஸ்திரி

இ) நீதி அரசர் ஏ.எஸ்.பி அய்யர் ஈ) ஏ.எஸ்.கே.

**72) காங்கிரஸ் ஆட்சியில் தீண்டாமை ஒழிப்புக்கும், அரிஜன சேவா சங்கத்திற்கும் பார்ப்பனரைத் தலைவராக நியமித்ததைக் கண்டித்துப் பேசிய போது பெரியார் அவர்கள் கையாண்ட பழமொழி**

அ) நான் ஓயாமல் அழுகிறேன். நீ நோகாமல் அடி

ஆ) நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்ததுபோல

இ) பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பாம்பை விட்டு விட்டுப் பார்ப்பானை அடி

ஈ) குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வது போல

**73) முதன் முதலாகப் பெரியார் அவர்களுக்கு எடைக்கு எடை வெள்ளி நாணயம் கொடுத்த ஊர் எது?**

அ) திருச்சி ஆ) சேலம்

இ) ஈரோடு ஈ) தஞ்சை

**74) தந்தை பெரியார் அவர்கள் தமது கடுமையான சமுதாயப் பணி யானது எதைப் போன்றது என்பதை விளக்கிடக் கூறிய உவமை...**

அ) வானத்தை வில்லாய் வளைப்பது போன்றது

ஆ) மணலைக் கயிறாய்த் திரிப்பது போன்றது

இ) மயிரைக்கட்டி மலையை இழுக்கிறேன் வந்தால் மலை போனால் மயிர்

ஈ) உலகைத் தலையில் சுமப்பது போன்றது

**75) சிக்கனத்தைப் போதித்த பெரியார் வரவுக்கு மீறிச் செலவு செய்வதை எதோடு ஒப்பிட்டார்?**

அ) விவசாயம் ஆ) விபச்சாரம்

இ) வாணிபம் ஈ) கள்ளச்சாராய விற்பனை

**76) ஓர் உயிரைப் பட்டினிபோட்டுச் சாகடிப்பதைவிடக் கொடுமையானது எது என்று பெரியார் கூறினார்?**

அ) ஒருவனுக்குக் கல்வி அறிவைக் கொடுக்காமலிருப்பது

ஆ) அனாதையாக வாழ்வது

இ) குழந்தைத் தொழிலாளர் முறை

ஈ) ஒரு பெண்ணை விதவையாக வைத்துச் சாகாமல் பாதுகாப்பது

**77) இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறியதைக் கேட்ட ஒருவர் இந்து மதத்திற்கு மாற்றாக என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டதற்குப் பெரியார் சொன்ன பதில்**

அ) புத்த மதத்தில் சேரலாம் என்றார்

ஆ) வீட்டிற்குள் அசிங்கம் இருக்கிறது, நாற்றம் அடிக்கிறது, எடுத்து எறியுங்கள் என்றால் அதற்கு மாற்றாக அந்த இடத்தில் எதை வைக்கலாம் என்பது சரியா?

இ) முகமதியர் மதத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்றார்

ஈ) மதம் இல்லாத சுயமரியாதை இயக்கத்தில் அனைவரும் இருக்கலாம் என்றார்.

கடவுளுக்கும் – கருமத்திற்கும் அடிமைப்பட்டவனிடம் பகுத்தறிவுள்ள ஒன்றுமே கிடையாது. தண்ணீர் அலையில் அலையும் மரக்கட்டை போன்றவனேயாவான். **– தந்தை பெரியார்**





**78) பின்வருவனவற்றுள் பெரியார் கூறிய சொற்றொடர் யாது?**

அ) நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் எதற்கு?

ஆ) பார்ப்பான் நீதிபதியாய், ஆட்சியாளனாய் வாழும் நாடு கடும்புலி வாழும் காடு

இ) சிறுத்தைக்குப் புள்ளி மாறினாலும் பார்ப்பானுக்கு பிறவிப் புத்தி மாறாது

ஈ) பார்ப்பானையும், பாம்பையும் பார்த்தால் பார்ப்பானை முதலில் அடி

**79) கடவுள் இல்லை என்று கூறுகிறீர்களே கடவுள் வந்து விட்டால் என்ன செய்வது? என்று கேட்ட அன்பருக்கு அய்யாவின் பதில்**

அ) நீதான் கடவுள் என்பதற்கான ஆதாரம் கேட்பேன்

ஆ) வந்து விட்டால் கடவுள் உண்டு என்று ஒத்துக் கொள்வேன்

இ) கடவுளிடம் மன்னிப்பு கேட்பேன்

ஈ) கடவுளை அடித்துத் துரத்தி விடுவேன்

**80) எல்லா மதங்களும் ஒழிய வேண்டும் என்று சொன்ன பெரியார் இந்து மதத்தை அதிகமாகச் சாடியதற்குக் காரணம்**

அ) இந்தியாவில் இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் அதிகம் என்பதால்

ஆ) உலக மக்கள் இந்து மதத்தை ஏற்றுக் கொள்ளாமையால்

இ) இந்தியாவில் இந்து மதம் கல்விப் பணி செய்யாததால்

ஈ) மனிதனை மனிதனே இழிவுபடுத்தும் நிலை இந்து மதத்தில் மட்டும்தான் என்பதால்

**81) பிராமணாள் ஹோட்டல் பெயர்ப் பலகையை ஏன் அழிக்க வேண்டும் என்பதற்கான அய்யாவின் பதில் . . . . . . . . .**

அ) பிராமணாள் ஹோட்டல் என்பது தமிழ் அன்று என்பதால்

ஆ) பிராமணர்கள் தமக்குப் பிடிக்காதவர்கள் என்பதால்

இ) தெருவில் உள்ள ஒரு வீட்டில் இது பதிவிரதை வீடு என்று எழுதினால் பக்கத்து வீடுகள் தேவடியாள் வீடுகள் என்பது போல் பிராமணாள் என்று எழுதினால் மற்றவர்கள் சூத்திரர்கள் என்றுதானே அர்த்தம்என்பதால்

ஈ) தமிழகத்தில் பிராமணர்கள் கை ஓங்கக் கூடாது என்பதால்

**82) படிப்பறிவின்மையை முற்றிலும் நீக்கப் பெரியார் சொன்ன வழி . . .**

அ) 6 மாதத்திற்குள் கையெழுத்துக் கூடப் போடத் தெரியாதவர்களுக்கு 3 மாத சிறைத்தண்டனை கொடுக்க வேண்டும்

ஆ) வீதிக்கு வீதி பள்ளிகள் தொடங்கி எல்லோருக்கும் படிப்பறிவைக் கொடுக்க வேண்டும்

இ) எல்லாப் பள்ளிகளிலும் முதியோர் கல்வி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்

ஈ) ஆசிரியர்களுக்கு அதிக ஊதியம் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும்.

**83) "விடுதலையும் பெரியாரும் எனது அன்பார்ந்த எதிரிகள்" - எழுதியவர் யார்?**

அ) கருணாநிதி ஆ) காமராசர்
இ) சங்கராச்சாரியார் ஈ) இராசகோபாலாச்சாரியார்

**84) உலகம் விரும்பியதைக் கூறாது உலகுக்கு வேண்டியதைக் கூறிய பெரியார் அவர்களுக்கு முதன்முதலில் முழு உருவச்சிலை வைத்தது எந்த ஊரில்?**

அ) சென்னை ஆ) ஈரோடு இ) திருச்சி ஈ) தஞ்சை

**85) 1970 இல் பெரியாருக்குக் கொடுக்கப்பட்ட விருது**

அ) பத்ம பூஷண் விருது ஆ) செவாலியர் விருது
இ) யுனெஸ்கோ விருது ஈ) நோபல் பரிசு

**86) 1971 இல் சேலத்தில் பெரியாருக்குச் செய்யப்பட்ட சிறப்பு யாது?**

அ) வெள்ளி சிம்மாசனம் வழங்கல்
ஆ) வேன் ஊர்தி வழங்கல்
இ) எடைக்கு எடை வெள்ளி வழங்கல்
ஈ) எடைக்கு எடை பொன் வழங்கல்

**87) ராஜகோபாலாச்சாரியாரின் இறுதிச் சடங்கின் போது தள்ளாத வயதிலும் தாம் அமர்ந்திருந்த நாற்காலியிலிருந்து தன்னைத் தூக்கித் தரையில் வைக்கச் செய்தது எந்தக் குடியரசுத் தலைவருக்கு மரியாதை செய்வதற்காக?**

அ) நீலம் சஞ்சீவரெட்டி ஆ) வி.வி. கிரி
இ) டாக்டர் இராதாகிருஷ்ணன் ஈ) ராஜேந்திர பிரசாத்

**88) மனுதர்மத்தில் சாதிக்கு ஒரு நீதி இருந்ததைக் கண்டித்துப் பேசும்போது பெரியார் வெளிப்படுத்திய தொடர்**

அ) ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
ஆ) சுருட்டுப் பாயும், முரட்டுப் பொண்டாட்டியும்
இ) தாடிக்கொரு சீயக்காய் தலைக்கொரு சீயக்காய்
ஈ) உடும்பு போனாலும் கையை விட்டால் போதும்

**89) பின்வருவனவற்றுள் பெரியாருக்குத் தொடர்பற்ற வாக்கியம் எது?**

அ) கடவுள் இல்லை, கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை
ஆ) கடவுளை நம்பினோர் கைவிடப்பட்டார்
இ) மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு
ஈ) சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு

**90) 8.9.1956 இல் மயிலாடுதுறையில் பெரியார் தொடர்ந்து ஒரே பொதுக் கூட்டத்தில் அதிகமாக எவ்வளவு நேரம் பேசியுள்ளார்?**

அ) 2 மணி 30 நிமிடம் ஆ)4 மணி 30 நிமிடம்

இ) 3 மணி 25 நிமிடம் ஈ) இரண்டு மணி 48 நிமிடம்

**91) 1944-இல் கடலூரில் பெரியார் மீது செருப்பு வீசப்பட்டது. அதே இடத்தில் 1972 இல் பெரியார் சிலை வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி குறித்துக் கவிஞர் கருணானந்தத்தின் கவிதை யாது?**

அ) ராமன் செருப்பு நாட்டை ஆண்டது

ஆ) ஆதிக்கக்காரரை அடியோடு வெட்டிய அஞ்சா நெஞ்சன்

இ) மூடக் கொள்கையாம் முட்புதரை வெட்டி வீழ்த்திய வேந்தன்

ஈ) செருப்பு ஒன்று போட்டால் சிலை ஒன்று முளைக்கும்

**92) பெரியாரின் மலேசியப் பயணத்தின்போது அவரது காலில் விழுந்து வணங்கிய பெண்மணியின் வேண்டுகோள் யாது?**

அ) செல்வம் கேட்டு ஆ) நோய்நீங்கக் கேட்டு

இ) மகப்பேறு கேட்டு ஈ) தன் ஒரே பிள்ளையின் பிணி நீக்கக்கேட்டு

**93) சிக்கனமாக வாழ்ந்த பெரியார் தம் சொத்துக்களைத் தம் உறவினர்களில் யாருக்கு எழுதி வைத்தார்?**

அ) அவரது சகோதரர் கிருஷ்ணசாமிக்கு

ஆ) அண்ணன் மகன் ஈ.வெ.கி சம்பத்துக்கு

இ) மணியம்மையின் சகோதரருக்கு

ஈ) அனைத்தும் தவறானவை

**94) பெரியாருக்கு அணிவிக்கப்பட்ட மாலைகளைப் பெரியார் அவர்கள் என்ன செய்தார்?**

அ) திருச்சியில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்து வந்தார்

ஆ) மாலையை நாராகவும் நூலாகவும் பிரித்து விற்கச் செய்தார்

இ) கூட்டத்திலேயே ஏலம் போட்டு விட்டார்

ஈ) மேடையிலேயே விட்டுவிட்டு வந்து விட்டார்

**95) பொது நிகழ்ச்சிகளில் தலைவர்களுக்கு மரியாதை செய்யுமுகமாக மாலை அணிவிப்பது என்பது பொருள் விரையம் என்றும், மீண்டும் அது எதற்கும் பயன்படாது என்றும் சொன்ன பெரியார் அதற்கு மாறாக என்ன செய்யச் சொன்னார்?**

அ) காலில் விழுந்து வணங்கி மரியாதை செய்யச் சொன்னார்

ஆ) எட்டி நின்று இருகைகளையும் கூப்பி வணங்கச் சொன்னார்

இ) பணமாகக் கொடுக்கச் சொன்னார்

ஈ) கை குலுக்கி மரியாதை செய்யச் சொன்னார்

**96) பெரியார் அவர்களின் இறுதிச் சொற்பொழிவு நடந்த ஆண்டும் இடமும் யாது?**

அ) 15.2.1973 தஞ்சை திலகர் திடலில்
ஆ) 12.3.1972 சென்னை பெரியார் திடலில்
இ) 19.2.1975 மதுரை தமுக்கம் மைதானம்
ஈ) 19.12.1973 சென்னை தியாகராயர் நகரில்

**97) 1973 - இல் பெரியார் அவர்கள் சென்னையில் இறுதியாக நடத்திய மாநாடு எது?**

அ) பகுத்தறிவு எழுத்தாளர் மாநாடு
ஆ) தமிழர் சமுதாய இன இழிவு ஒழிப்பு மாநாடு
இ) சமுக நீதி மாநாடு
ஈ) பகுத்தறிவாளர் மாநாடு

**98) பகுத்தறிவுப் பகலவனின் இறுதி மூச்சு நின்று போன நாள் எது?**

அ) 24.12.1973 ஆ) 24.7.1977 இ) 17.9.1972 ஈ) 19.11.1978

**99) பெரியாரின் இறப்பு நிகழ்ந்த மருத்துவமனை எது?**

அ) திருச்சி சி.எஸ்.அய்.
ஆ) தஞ்சை அரசு பொது மருத்துவமனை
இ) வேலூர் சி.எம்.சி.
ஈ) சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனை

**100) செல்வராகப் பிறந்தும் செல்வராக வாழ்ந்தும் செல்வச் செழிப்பிலும் செல்வக் களிப்பிலும் சிக்கிச் சீரழியாது சிக்கனமாக வாழ்ந்த பெரியார் தம் சொத்துக்கள் முழுமையையும் என்ன செய்தார்?**

அ) அறக்கட்டளை மூலம் பொதுச் சொத்தாக்கினார்
ஆ) தன் வாரிசுகளுக்குப் பிரித்துக் கொடுத்தார்
இ) திராவிடர் கழகத் தொண்டர்களுக்குக் கொடுத்தார்
ஈ) சட்ட எரிப்புப் போராட்டத்தில் சிறை சென்றோருக்குப் பகிர்ந்தளித்தார்

**101) கடவுள் இல்லை என்று சொன்ன பெரியார் வாழ்ந்த ஆண்டுகள்?**

அ) 49 வருடங்கள் 5 மாதங்கள் 8 நாட்கள்
ஆ) 101 வருடங்கள் 9 மாதங்கள் 3 நாட்கள்
இ) 94 வருடங்கள் 3 மாதங்கள் 7 நாட்கள்
ஈ) 95 வருடங்கள் 9 மாதங்கள் 9 நாட்கள்





102) **மனித நேயக் கொள்கையைப் பரப்பப் பெரியார் அவர்கள் தம் வாழ்நாளில் சுற்றுப்பணம் மேற்கொண்ட நாட்களின் எண்ணிக்கை**

அ) 8200 ஆ) 8100 இ) 3600 ஈ) 4200

103) **சமதர்ம சமுதாயத்தைப் படைக்கப் பெரியார் அவர்கள் தம் வாழ்நாளில் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை**

அ) 9989 ஆ) 3074 இ) 10700 ஈ) 10600

104) **உலகம் சுற்றும் வாலிபராகப் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பப் பெரியார் அவர்கள் பயணம் செய்த தூரம் பூமியின் சுற்றளவைப் போல் எத்தனை மடங்கு?**

அ) 15 மடங்கு ஆ) 8 மடங்கு இ) 33 மடங்கு ஈ) 3 மடங்கு

105) **சிறைக்கஞ்சாச் சிங்கம் தந்தை பெரியார் தம் வாழ்நாளில் எத்தனை முறை சிறைக்குச் சென்றார்?**

அ) 121 ஆ) 88 இ) 19 ஈ) 5

106) **மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களால் “பெரியாரின் பிள்ளை”என்று பாராட்டப்பட்டவர் யார்?**

அ) கலைஞர் கருணாநிதி ஆ) பேரறிஞர் அண்ணா

இ) கி. வீரமணி ஈ) மணியம்மையார்

107) **காந்திமதி என்றிருந்த அன்னை மணியம்மையாரின் பெயரை அரசியல் மணி என்று பெயர் மாற்றம் செய்தது எங்கு - எப்போது?**

அ) 1944 ஆம் ஆண்டு சேலத்தில் நடந்த நீதிக்கட்சி திராவிடர் கழகமாக மாறிய மாநாட்டில்

ஆ) 1938இல் சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில்

இ) 1938இல் காஞ்சிபுரத்தில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில்

ஈ) 1937இல் திருச்சியில் நடந்த தமிழர் மாநாட்டில்

108) **12.9.1956 இல் பொன்மலையில் நடைபெற்ற பெரியாரின் 78 ஆம் பிறந்தநாள் விழாவில் பெரியாருக்குக் குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பட்ட சிறப்புப் பெயர் யாது?**

அ) வைக்கம் வீரர் ஆ) பகுத்தறிவுப் பகலவன்

இ) தந்தை பெரியார் ஈ) தன்மான வீரர்

**109) நல்ல வேளையாக நீங்கள் சட்டப்படிப்புப் படித்து வழக்கறிஞராக வராமல் போனீர்கள், வந்திருந்தால் வழக்கறிஞர்கள் பாடு திண்டாட்டமாய் இருந்திருக்கும் என்று பெரியாரிடம் கூறியவர் யார்?**

அ) வ.உ.சிதம்பரனார் ஆ) சோமசுந்தர பாரதியார்
இ) இராஜகோபாலாச்சாரியார் ஈ) சீனிவாச அய்யங்கார்

**110) சேலம் ஜில்லா திருச்செங்கோடு தாலுகா மல்ல சமுத்திரம் என்ற ஊரில் மாநாட்டிற்குச் சென்ற பெரியார் (பசி மேலீட்டால்) சாப்பிட்ட உணவு என்ன?**

அ) வீட்டிலிருந்து கொண்டு வந்த உணவு
ஆ) கடையில் வாங்கிய உணவு
இ) ஒரு அம்மாள் திண்ணையில் வைத்து சுட்டு விற்ற பிட்டு
ஈ) மாநாட்டிற்காகத் தயாரிக்கப்பட்ட உணவு

**111) இராமாயணத்தைக் கொளுத்தவேண்டும் என்று பெரியார் கூறியபோது மகாபாரதத்தையும் சேர்த்துக் கொளுத்துங்கள் என்று கூறியவர் யார்?**

அ) சுப்ரமணிய பாரதியார் ஆ) சோமசுந்தர பாரதியார்
இ) சுத்தானந்த பாரதியார் ஈ) பாரதிதாசனார்

**112) பெரியார் தமது இந்தி எதிர்ப்புக் கருத்துக்களை எழுதிய பத்திரிகை**

அ) நவமணி ஆ) தமிழ்நாடு இ) குடி அரசு ஈ) இந்தியா

**113) 'விடுதலை' ஏடு நடத்திட பொருளாதார ரீதியாக உதவி செய்த பெருமகன்**

அ) அரசர் அண்ணாமலையார் ஆ) ஆர். கே. சண்முகம்
இ) பழையகோட்டை அர்ச்சுனன் ஈ) அழகப்பர்

**114) பெரியார் அவர்கள் வேட்டியை அப்படியே கட்டுவதை விட அதைக் கைலியாகத் தைத்து உடுத்துவது நல்லது என்றார். ஏன்?**

அ) கைலி காற்றில் பறக்காது என்பதால்
ஆ) முஸ்லீம் போல லுங்கி அணியவேண்டும் என்பதற்காக
இ) அழகாய் இருக்கும் என்பதற்காக
ஈ) கைலியைச் சுற்றிச் சுற்றிச் கட்டுவதால் எளிதில் கிழியாது என்பதற்காக





**115) பெரியார் பள்ளியில் படித்த காலத்தில் அவர் பெற்றோர், 'தண்ணீர் வேண்டுமானால் வாத்தியார் வீட்டில் குடி, அருகில் இருக்கும் புழங்கக் கூடாத சாதியினர் வீட்டில் குடிக்காதே' என்று கூறியனுப்பியும் அவர் வாத்தியார் வீட்டில் நீர் அருந்தாதற்குக் காரணம் என்ன?**

அ) வாத்தியாரிடம் பெரியாருக்கு மிகவும் பயம்

ஆ) வாத்தியார் வீடு பள்ளியிலிருந்து வெகு தொலைவில் இருந்ததால்

இ) வாத்தியார் பெண் இவர் தண்ணீர் குடித்த டம்ளரை நன்றாகக் கழுவி உள்ளே வைப்பதாலும், டம்ளரைத் தூக்கித் தண்ணீர் குடிக்கும்போது புரையேறி இருமல் வந்ததாலும், கோபித்துத் திட்டியதாலும்

ஈ) ஆசிரியர் வீட்டில் உப்புத் தண்ணீர் என்பதால்

**116) ஈரோட்டுக்கு அருகில் உள்ள ஈங்கூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் பெரியாருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் விரோதமாகச் செய்யப்பட்ட செயல்**

அ) கல்வீச்சு

ஆ) முட்டை வீச்சு

இ) சாம்பல் வீச்சு

ஈ) செருப்பு வீச்சு

**117) 1933இல் நாகம்மையாரின் இறப்புச் செய்தி பற்றி பெரியாருக்கு எந்த ஊரில் நடந்த பொதுக்கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது?**

அ) ஈரோடு

ஆ) ஜோலார்பேட்டை

இ) மயிலாடுதுறை

ஈ) தஞ்சாவூர்

**118) ஈரோட்டில் ஈ.வெ.ராமசாமியின் மண்டிக் கடையில் மாட்டப்பட்டிருந்த பெரிய சுவர்க்கடிகாரத்தின் பெண்டுலம் ஆடி மணி அடித்து நேரம் காட்டுவது பார்த்து வாடிக்கையாளர் ஒருவர் வியந்து கடிகாரத்தில் மணி அடிப்பது யார் எனக் கேட்டதற்கு, உள்ளே ஆள் இருக்கிறான் என்று வேடிக்கையாகப் பெரியார் சொன்ன பதிலைக் கேட்டு வியந்த வாடிக்கையாளர் என்ன கூறினார்?**

அ) இதை நான் நம்பவில்லை; என்னை ஏமாற்றுகிறீர்கள்

ஆ) நீங்கள் மந்திர சக்தியால் மணி அடிக்க வைக்கிறீர்கள்

இ) இதற்கு ஒரு ஆளா? உங்களுக்கென்ன மகராசர் எத்தனை ஆள் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்

ஈ) மண்டிக் கடையில் மணி அடிப்பது நல்ல சகுனமல்ல; அதை எடுத்து விடுங்கள்

**119) நன்றிபற்றி பெரியார் அவர்களின் கருத்து என்ன?**

அ) நன்றி உணர்வென்பது உதவிசெய்யப் பெற்றுக் கொண்டவர் காட்ட வேண்டிய கடமையே தவிர, உதவி செய்தவன் அதை எதிர்பார்ப்பது சிறுமைக் குணமாகும்.

ஆ) ஒருவர் மற்றொருவருக்கு உதவிசெய்ய வேண்டுமென்பது அவரவரது ஊழ்வினைப் பயனே. எனவே நன்றி என்பது தேவையற்றது

இ) ஒரு செயலைச் செய்தவன் அந்தப் பலனை எதிர்பார்ப்பது இயற்கை எனவே உதவி செய்தவன் நன்றியை எதிர்பார்ப்பது தவறு அல்ல

ஈ) நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று.

**120 தோழர்கள் கொடுத்த உணவு மிகவும் காரமாகவும் மோசமாகவும் இருந்தால்கூட அந்த உணவை அந்தத் தோழர் முன்னிலையிலேயே உண்பதோடு மிகவும் நன்றாக உள்ளது எனப் பாராட்டுவார் பெரியார். ஏன்?**

அ) அவருக்குப் பசி அதிகமாக இருந்ததால்

ஆ) அன்போடு கொடுத்த தோழர்கள் மனம் மகிழ்ச்சி அடைய வேண்டுமென்பதற்காக

இ) அதிகநேரம் வைத்திருந்தால் மேலும் கெட்டு விடும் என்பதால்

ஈ) மற்றவருக்கு உணவு கொடுக்கும் பழக்கத்தைத் தோழர்களிடம் வளர்க்க

**121) அன்னை மணியம்மையார் செயலாளராக வந்தபோது அவர் இயக்கத்திற்குச் செய்த பெருந்தொண்டு யாது?**

அ) புத்தக விற்பனை செய்தார்

ஆ) பெரியாரைப் பேணிக் காத்தார்

இ) பிரச்சாரப் பயணம் செய்தார்

ஈ) "விடுதலை" நிர்வாகம் செய்தார்

**122) மணியம்மை இயக்கப் பொறுப்பேற்றபோது 'குடிஅரசு'ப் பதிப்பகத்தில் தேங்கிக்கிடந்த புத்தகங்களின் ரூபாய் மதிப்பு எவ்வளவு?**

அ) 2 இலட்சம் ஆ) 4 இலட்சம் இ) 5 இலட்சம் ஈ) 50 ஆயிரம்

**123) காசிக்குச் சென்று திரும்பிவந்த பெரியாரிடம் 'அடே ராமசாமி இவ்வளவு நாளாய் எப்படியடா சாப்பிட்டாய்? ' என்று கேட்ட? தந்தைக்குப் பெரியார் அளித்த பதில்**

அ) உணவு விடுதியில் சாப்பிட்டேன்

ஆ) உறவினர் வீட்டில் சாப்பிட்டேன்

இ) நண்பர் வீட்டில் சாப்பிட்டேன்

ஈ) நாம் ஈரோட்டில் கொடுக்கும் சதாவிருத்தியை (பிச்சை) எல்லாம் வசூல் பண்ணிவிட்டேன்.





**124) பெருஞ்செல்வராக இருந்த காலத்திலும் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்திய பெரியார், சிறுவனாக இருந்த போது அவருடைய அண்ணனுக்காகத் தந்தையிடம் பணம் கேட்ட போது ஏன் இப்படி ஆடம்பரச் செலவுகள் செய்கிறீர்கள் என்று கேட்டுக் கண்டித்த தந்தையாருக்குப் பெரியார் அளித்த பதில் என்ன?**

அ) பிள்ளைகளுக்குப் பணம் கொடுக்க வேண்டியது தந்தையின் கடமை

ஆ) நாங்கள் செய்வது ஆடம்பரச் செலவல்ல; தேவையான செலவுதான்

இ) என்ன செய்வது உன் அப்பா வண்டிக்காரர். என் அப்பா மண்டிக்காரர்

ஈ) கொடுக்கற பணத்தைக் கணக்குப் போட்டு எதிர் காலத்தில் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்.

**125) வாழ்க்கையில் பயம் என்பது என்னவென்று தெரியாதவர் என்று பெரியாரைப் பற்றிக் கூறிய கவர்னர் யார்?**

அ) சர்.கே.வி.ரெட்டி ஆ) குரானா

இ) பி.சி.அலெக்சாண்டர் ஈ) கே.கே.ஷா

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.ஆ | 2.இ | 3.அ | 4.ஆ | 5.ஆ | 6.இ | 7.இ | 8.அ | 9.ஈ | 10.ஆ |
| 11.இ | 12.இ | 13.ஆ | 14.ஆ | 15.அ | 16.இ | 17.ஆ | 18.ஆ | 19.இ | 20.இ |
| 21.ஈ | 22.இ | 23.இ | 24.அ | 25.ஈ | 26.அ | 27.இ | 28.ஆ | 29.அ | 30.ஈ |
| 31.இ | 32.ஈ | 33.ஆ | 34.இ | 35.அ | 36.ஆ | 37.இ | 38.இ | 39.இ | 40.அ |
| 41.ஆ | 42.இ | 43.இ | 44.இ | 45.இ | 46.அ | 47.ஆ | 48.ஈ | 49.ஆ | 50.ஆ |
| 51.இ | 52.ஆ | 53.ஈ | 54.ஈ | 55.அ | 56.அ | 57.இ | 58.இ | 59.இ | 60.அ |
| 61.இ | 62.ஈ | 63.இ | 64.ஈ | 65.இ | 66.ஆ | 67.இ | 68.அ | 69.ஆ | 70.ஈ |
| 71.இ | 72.ஆ | 73.ஈ | 74.இ | 75.ஆ | 76.ஈ | 77.ஆ | 78.ஆ | 79.ஆ | 80.ஈ |
| 81.இ | 82.அ | 83.ஈ | 84.இ | 85.இ | 86.அ | 87.ஆ | 88.இ | 89.ஆ | 90.ஆ |
| 91.ஈ | 92.இ | 93.ஈ | 94.ஆ | 95.இ | 96.ஈ | 97.ஆ | 98.அ | 99.இ | 100.அ |
| 101.இ | 102.அ | 103.இ | 104.இ | 105.இ | 106.இ | 107.அ | 108.ஈ | 109.இ | 110.இ |
| 111.ஆ | 112.இ | 113.ஆ | 114.ஈ | 115.இ | 116.இ | 117.ஆ | 118.இ | 119.அ | 120 ஆ |
| 121.ஆ | 122.இ | 123.ஈ | 124.இ | 125.அ | | | | | |

**இயல் இரண்டு**

# வைக்கம் - சேரன்மாதேவி - காஞ்சிபுரம்

தந்தை பெரியார் அவர்கள் நிகழ்த்திய சமூகப் புரட்சி வரலாற்றில் இரண்டு போராட்டங்கள் மிக மிக முக்கியமானவை இவை. இந்தியாவின் சமூக இழிவைத் துடைத்தெறிந்து மனித உரிமைகளையும் சமத்துவத்தினையும் மக்களிடையே நிலைநாட்டும் அறப்போர்களுமாகும். 1924, 1925 ஆகிய இரு ஆண்டுகள் சமூகப் புரட்சி துவங்கப்பட்ட ஆண்டுகள் ஆகும்.

**ஒன்று:** கேரளத்து வைக்கம் தெருக்களில் நடக்க கீழ் ஜாதியினருக்கு உரிமையை மீட்டெடுத்த வைக்கம் போராட்டம்.

**மற்றொன்று:** திருநெல்வேலி மாவட்ட சேரன்மாதேவியில் உடன் உண்ணலுக்கு எதிராக உயர்ஜாதி, தாழ்ந்த ஜாதிப் பிள்ளைகள் என இனம் பிரித்து வைத்து அவர்களுக்கு பாரபட்சமான நடத்தை காட்டபட்ட கொடுமையை ஒழித்து சம உரிமையை மீட்டெடுத்தது ஆகும்.

### வைக்கம் போராட்டம்

கேரள மாநிலத்தில் உள்ள வைக்கம் என்ற ஊரில் 1924ஆம் ஆண்டில் தந்தை பெரியார் அவர்கள் நடத்தி வெற்றி கண்ட போராட்டம்தான் வைக்கம் போராட்டம் ஆகும்.

வைக்கத்தில் உள்ள வைக்கத்தப்பன் என்ற கோயிலைச் சுற்றி இருந்த தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள், ஈழவர்கள், தீயவர்கள்,




புலையர்கள் போன்றோர் நடக்கக் கூடாது என்ற ஒரு கட்டுப்பாடு இருந்தது. மூன்று ஃபர்லாங் தூரத்திலேயும் 4 ஃபர்லாங் தூரத்திலேயும் இருக்கிற ரோட்டில் கூட நடக்காமல் ஒரு மைல் தூரம் வேறு ரோட்டில் சுற்றிக் கொண்டுதான் எதிர் ரோட்டுக்குப் போக வேண்டும்.

வைக்கத்தில் கோயிலுக்குப் பக்கமாக வாசலுக்கு எதிராக அமைந்த தெருக்களில் தான் எல்லா முக்கிய ஆபீசுகளும், கோர்ட், போலீஸ் ஸ்டேஷன் முதலியனவும் இருந்தன. ஏதாவது போலீஸ்காரர்களையோ இன்ஸ்பெக்டர்களையோ, குமாஸ்தாக்களையோ மாற்றுவதானாலும் கூட கீழ்ஜாதியார்களை அங்கு மாற்றமாட்டார்கள். ஏனென்றால் அந்தப் போலீஸ் ஸ்டேஷன், கோர்ட்டுக்கள் இருக்கும் இடத்திற்குப் போக கீழ் ஜாதியார்களுக்கு அனுமதி கிடையாது என்பதால், முக்கியமான தடைகளும் அந்த வீதிகளில்தான் ஆனதால் கீழ்ஜாதிகள், கூலிகள் அங்கு செல்ல முடியாது.

மாதவன் என்ற பி.ஏ.பி.எல். படித்த ஒரு வக்கீல் ஒரு வழக்குக்காக ஆஜராகப் போனார். வழக்கு விசாரணைக்கான கோர்ட் ராஜாவுடைய கொட்டாரத்திற்கு அருகில் (அரண்மனையில்) அமைந்திருந்தது. ஒரு நாள் ராஜாவின் பிறந்த நாள் விழாவிற்கு அந்த ராஜாவுடைய கொட்டாரத்தின் (அரண்மனையின்) எல்லாப் பாகத்திலும் பந்தல் போடப்பட்டதில் கோர்ட் நடக்கும் இடமும் பந்தலுக்குள் அடங்கிவிட்டது. இந்த மாதவன் வக்கீல் ஒரு கேசில் ஆஜராக அங்கே போக வேண்டிய அவசியம் வந்தது. இராஜாவின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக முறை ஜெபம் ஆரம்பமாயிற்று. இந்த வக்கீல் ஈழவ (நாடார்) சமுதாயத்தைச் சேர்ந்தவராதலால் அங்கே போகக் கூடாது என்று தடுத்தார்கள்.

“இந்த மாதவன் (வக்கீல்) சங்கதியை வைத்தே திருவனந்தபுரத்து ஈழவ சமுதாயத் தலைவர்கள் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். வக்கீல் மாதவன், டி.கே.மாதவன், கேரள காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.பி.கேசவ மேனன் இவர்களோடு இன்னும் சிலரும் சேர்ந்து முடிவு செய்தார்கள்.

சத்தியாக்கிரகம் ஆரம்பமானவுடன் வக்கீல் மாதவன் பாரிஸ்டர் கேசவமேனன், டி.கே.மாதவன், ஜார்ஜ் ஜோசப் முதலியவர்களைப் போல் சுமார் 19 பேரை ராஜா அரஸ்ட் செய்யும்படி உத்தரவிட்டு அதன்படி அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். மீண்டும் போராட்டம் செய்ய யாரும் முன் வராததால் ஜார்ஜ் ஜோசப்பும், குரூர் நீலகண்ட நம்பூதிரிபாத் அவர்களும் சேர்ந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்த தந்தை பெரியார் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி, வைக்கம் வந்து போராட்டத்தை தொடர்ந்து நடத்தும்படி கேட்டுக் கொண்டார்கள். பண்ணையபுரத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த தந்தை பெரியார் அவர்கள் தனது காங்கிரஸ் தலைமைப் பொறுப்பை தற்காலிகமாக இராஜாஜியிடம் ஒப்படைத்துவிட்டு வைக்கத்திற்குப் புறப்பட்டு சென்றார். ஒருமுறை திருவிதாங்கூர் மகாராஜா டில்லிக்கு ஈரோடு வழியாக ரயில் மூலம் சென்றார். அப்படி செல்லும்போது ஒரு நாள் இரவு தந்தை பெரியார் அவர்களுடைய பங்களாவில் இராஜாவும் பெரியார் அவர்களுடைய சத்திரத்தில் சிப்பந்திகளும் தங்கினார்கள். அவர்களுக்கு வேண்டிய உணவு மற்ற வசதிகளை பெரியார் அவர்கள் செய்து தந்தார்கள். அதன் காரணமாக வைக்கம் சென்ற பெரியாருக்கு இராஜா அரசு அதிகாரிகளை அனுப்பி வரவேற்கச் செய்தார். ஆனால் பெரியார் "நான் போராட்டத்திற்காக வந்திருக்கிறேன்; விருந்தினராக வரவில்லை" எனக் கூறி வரவேற்பை மறுத்து விட்டார்.

வைக்கம் சத்தியாக்கிரகம் பற்றி பெரியார் பல பொதுக்கூட்டங்களை நடத்தியதன் விளைவாக 144 தடை உத்தரவு என்பது போன்று கேரளாவில் பி.சி. 26 என்ற தடை உத்தரவை இராஜா பிறப்பித்தார். தந்தை பெரியார் அவர்களும், கோவை அய்யாமுத்து மற்றும் இரு தோழர்களும் கைது செய்யப்பட்டார்கள். தந்தை பெரியார் அவர்களை அருவிக்குத்தி சிறையில் ஒரு மாதம் அடைத்தார்கள். பின்பு பெரியாரின் மனைவி நாகம்மையாரும், தங்கை கண்ணம்மாவும் சத்தியாக்கிரகத்தை ஆதரித்து பிரச்சாரம் செய்தார்கள். இராஜாஜி அவர்களும் எஸ்.சீனிவாசய்யங்கார் அவர்களும் போராட்டத்தை

நிறுத்திவிட்டு சென்னைக்கு வரும்படி பெரியார் அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள்.

காந்தியார் வைக்கம் போராட்டத்தை எப்படியாவது நிறுத்த வேண்டுமென்று எதிரிகளோடு சேர்ந்து கொண்டு முஸ்லிம், கிறித்தவர், சீக்கியர் ஆகிய பிற மதங்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று கடிதம் எழுதினார். இந்தச் சமயத்தில் தந்தை பெரியார் அவர்களை மறுபடியும் பிடித்து 6 மாத கடுங்காவல் தண்டனை விதித்து சிறையில் அடைத்தனர்.

சத்தியாக்கிரத்தை நிறுத்துவதற்காகவும் போராட்டக்காரர்களை அழிப்பதற்காகவும் பெரியார் சிறையில் உள்ள சமயத்தில் நம்பூதிரிப் பார்ப்பனர்களும் சில வைதீகர்களும் சேர்ந்து “சத்ரு சங்கார யாகம்” என்ற ஒரு யாகத்தை நடத்தினார்கள். சத்ரு சங்கார யாகம் என்றால் எதிரிகளை அழிப்பதற்கான ஒரு யாகம் ஆகும். இந்த யாகம் நடந்து கொண்டிருக்கும்போது மகாராஜா திடீரென்று இறந்து விட்டார். அவர்கள் பண்ணிய யாகம் பெரியாரை அழிக்காமல், இராஜாவை அழித்துவிட்டதாக எண்ணி இராஜாவின் கருமாதியை முன்னிட்டு பெரியார் உடன் போராட்டக்காரர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இராணி, பெரியாரையும், போராட்டக்காரர்களையும் கூப்பிட்டு சமாதான உடன்பாட்டுக்கு வர விருப்பம் தெரிவித்தார். சமாதானம் பேச காந்தியார் திருவாங்கூர் அழைக்கப்பட்டார்.

காந்தியார் தந்தை பெரியாருடன் பேசிய பிறகு இராணியாருடன் பேசினார். இராணியார் அவர்கள் அடுத்து போராட்டக்காரர்கள் கோயிலுக்குள் நுழைவதாக உள்ளார்களாம் அதை பெரியார் செய்யக் கூடாது என்றும், கோவில் பிரவேசத்தைப் பற்றி கிளர்ச்சி பண்ணவில்லை என்று சொன்னால் தெருவில் நடக்க விதித்த தடையை உடனே நீக்கிவிடுகிறேன் என்றும் கூறினார்.

காந்தியாரும் சரி என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நேராக பெரியார் இருந்த இடத்திற்கு வந்து இந்த மாதிரி கோவில்

பிரவேசத்துக்குப் போகக் கூடாது என்று இராணி சொல்லுகிறார் என்று கூறியவுடன் பெரியார் நம்முடைய முதல் இலட்சியம் தெருவிலே நடக்க உரிமை வேண்டும் என்பதுதான். அதனால் கோவில் நுழைவு பற்றி இப்போது பிரஸ் பண்ணுவதில்லை. மக்களை அதற்குப் பக்குவப்படுத்திக் கொண்டுதான் செய்ய வேண்டும் என்று கூறினார். பின்பு காந்தி இராணியாரிடம் போய் கோவில் பிரவேசம் இப்பொழுது இல்லை என்று கூறியவுடன் கோவில் கர்ப்பக் கிரகம் ஒன்றைத்தவிர சத்திரம், சாவடி, எல்லாத் தெருக்களும் சகலமும் எல்லா இந்து ஜாதியருக்கும் அனுமதி உண்டு என்று இராணி சட்டம் போட்டு விட்டார்கள்.

இந்த வைக்கம் போராட்டத்தின் வெற்றியாக தந்தை பெரியார் அவர்களுக்கு “வைக்கம் வீரர்” என்ற பட்டத்தை திரு.வி.க. அவர்கள் தமது நவசக்தி ஏட்டின் மூலம் அறிவித்தார். இத்தகு போராட்டத்தைப் பற்றிய தகவல்கள் வினா விடை வடிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

# சேரன்மாதேவி
# குரு குலப் போராட்டம்

“தமிழ் குருகுல வித்யாலயா” என்ற பெயருடன் வ.வே.சுப்பிரமணிய அய்யர், பரத்வாஜ் அவர்களால் திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவியில் ஒரு தேசிய நிலையம் 1923இல் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதற்குப் பெயர் தமிழ் குருகுல வித்யாலயா. அதற்கு பண உதவி செய்தவர்கள் தமிழ் மக்கள். அந்த குருகுலத்திற்கு ரூ.30,000 மதிப்புள்ள இடத்தை வாங்க காங்கிரசிலிருந்தும் பத்து ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. அதன் வளர்ச்சிக்காக பெரியார், டாக்டர் வரதராஜுலு, திரு.வி.கல்யாணசுந்தரனார் போன்றோர் உழைத்தனர்.

குருகுலத்தில் கடும் வேற்றுமைப் பாராட்டப்பட்டது. பார்ப்பனப் பிள்ளைகளுக்குத் தனி உணவு, பார்ப்பனரல்லாத பிள்ளைகளுக்கு





வேறு உணவு, வெவ்வேறு இடங்கள், வெவ்வேறு பிரார்த்தனைகள். அதன் மூலம் ஜாதிப் பிரிவுக்கு ஆக்கம். இவை குருகுலத்தில் நடைபெற்றன. இப்பிரிவினை தவறு, குருகுல நோக்கம் மாறுபட்டது, தேசிய ஒற்றுமைக்கு ஏற்றதன்று, சமபந்தி உணவே அளிக்கப்பட வேண்டும் என்று பெரியார் கூறினார். அப்போது பெரியார் காங்கிரஸ் காரியதரிசி. காங்கிரசில் குருகுலத்திற்கு 10,000 ரூபாய் கொடுக்கப்பட்டது. ரூபாய் 5,000 முதலில் கொடுத்ததால் மீதி ரூபாய் 5,000த்தை வ.வெ.சு. அய்யர் கேட்டார். குருகுலத்தில் ஜாதி பேதம் இருப்பதால் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டார். வ.வெ.சு. அய்யர் பெரியாரின் கூட்டுக் காரியதரிசியாய் இருந்த ஒரு பார்ப்பனரிடம் செக் வாங்கிக் கொண்டு போய்விட்டார். இதை பெரியார் அறிந்ததும் குருகுலத்தோடு போர் தொடுத்தார். இதற்கு டாக்டர் வரதராஜுலு ஆதரவளித்தார். திரு.வி.கல்யாணசுந்தரனார் ஆதரவளித்தார். அப்போது திரு.எஸ்.ராமநாதன் அவர்கள் வீட்டில் முதன்முதல் குருகுலத்தை எதிர்த்து, அதை ஒழித்துவிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அப்போது கூடி ஏற்பாடு செய்தவர்கள் திரு.ராமநாதன், பெரியார், திரு.வி.கல்யாணசுந்தரனார், வரதராஜுலு, என்.தண்டபாணிப் பிள்ளை ஆகியோர் ஆவர்.

தந்தை பெரியாரும் வரதராஜுலுவைத் தலைவராக வைத்துக் கொண்டு பார்ப்பனீய வளர்ச்சிக்காக இருந்த இக்குருகுலத்தை அடியோடு ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். வ.வெ.சு. அய்யர் இக்கொள்கையை ஒப்புக் கொள்ளவில்லை. அய்யரின் கொள்கை நாடெங்கும் கண்டிக்கப்பட்டது. தந்தை பெரியாரும் வரதராஜுலுவும் இதைப்பற்றி நாடெங்கும் சென்று கண்டித்துப் பேசினர். இக்கிளர்ச்சியை அடக்க காந்தியாரும் தலையிட்டார். “குருகுலத்தில் ஜாதிப் பிரிவினைக்கு இடந்தருதல் கூடாது. சமபந்தி உணவுதான் அளிக்க வேண்டும்” என்ற காந்தியாரின் கருத்தையும் அய்யர் ஏற்கவில்லை. “பார்ப்பனப் பிள்ளைகளும் ஒன்றாக உட்கார்ந்து உணவருந்துவதற்கு நான் ஒருபட முடியாது. அப்படிச் செய்தால் குருகுலம் கெட்டுவிடும்” என்று அய்யர் கூறிவிட்டார்.

இக்குருகுலப் போராட்டத்தால் தமிழ்நாட்டில் ஒரு பெரும் பரபரப்பு உண்டாயிற்று. பார்ப்பனர்கள் தீண்டாமையைப் பற்றி பேசுவது வெறும் பேச்சு, அவர்கள் தேசியத்தைப் பற்றி பேசுவது நிரந்தரமான உண்மையை உணர்ந்து கொண்டனர் தமிழ் மக்கள். குருகுலத்துக்குப் பண உதவி செய்து வந்த பார்ப்பனரல்லாத மக்கள் தங்கள் உதவியை நிறுத்திக் கொண்டனர். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இதன் பொருட்டுச் சேர்க்கப்பட்ட தொகைகள் பெரியார், வரதராஜுலு, திரு.வி.க. ஆகியவர்களின் முயற்சியால் அங்கங்கே நின்று விட்டன. எரிவதை இழுத்துவிட்டால், கொதிப்பது எங்கே? குருகுலம் ஒழிந்தது. தேசியத்தின் பேரால் வருணாச்சிரம தருமத்தை நிலை நிறுத்த ஏற்பட்ட ஒரு நிலையம் ஒழிந்ததைப் பற்றித் தமிழர் மகிழ்ந்தனர்.

# காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாடு

தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசிலேயே வகுப்புரிமைக்கும் சமுதாய உரிமைக்கும் போராடி வந்தார். பார்ப்பனரல்லாதாருக்கு அரசியலில் தக்க பாதுகாப்பளிக்க வேண்டுமென்று கூறி வந்தார். வகுப்பு எண்ணிக்கைக்குத் தக்கவாறு உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்பதை ஆதரித்தார். நீதிக்கட்சி தோன்றிய காலத்தில் பெரியார் போன்றவர்கள், நீதிக்கட்சியுடன் சேர்ந்து விடாமலிருப் பதற்காக சென்னை மாகாண சங்கம் என்றும் தேசிய சங்கமென்றும் இரண்டு உண்டாக்கப்பட்டன. காலஞ்சென்ற கேசவப் பிள்ளை அவர்கள் முந்தியதற்குத் தலைவர். இதைத் தோற்றுவித்தவர்கள் பார்ப்பனர்களே. பார்ப்பனரல்லாதார் கட்சியைத் திட்டுவதே இச்சங்கத்தாரின் பணி. அக்காலத்தில் பெரியார் இப்பணியை ஆற்றவில்லையென்றாலும் அச்சங்கத்திற்குப் பொருளுதவி செய்து

ஆதரித்து வந்தார். அச்சங்கம் பார்ப்பனரல்லாதார் பெயரால் நடைபெற்றாலும் சங்கத்தை ஆட்டி வைத்தவர்கள் பார்ப்பனர் களேயாவர். இச்சங்கத்திலும், தேசிய சங்கத்திலும் பெரியார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தார் என்றாலும் அது காரணமாகவே அச்சங்கங்கள் உடனே கொல்லப்பட்டு விட்டன. அதற்குப்பின் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் மாகாண மாநாடுகளில் எல்லாம் பெரியார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வற்புறுத்தி வந்திருக்கிறார்.

1925 நவம்பர் மாதத்தில் காஞ்சிபுரத்தில் தமிழ் மாகாண மாநாடு நடைபெற்றது. திரு.வி.க. அம்மாநாட்டின் தலைவர். அம்மாநாட்டில் பெரியாரின் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. தீர்மானம் தலைவரால் நிராகரிக்கப்பட்டது. அப்பொழுதுதான் தந்தை பெரியார் “காங்கிரசால் பார்ப்பனரல்லாதார் நன்மை பெற முடியாது. காங்கிரசை ஒழிப்பதே இனி எனது வேலை” என்று மாநாட்டிலேயே எழுந்து கூறிவிட்டு வெளியேறினார். உடனே ஒரு பெருங்கூட்டம் அவருடன் மாநாட்டை விட்டு வெளியேறிவிட்டது.

காஞ்சி மாநாட்டின்போது அங்கேயே பெரியாரின் முயற்சியால் ஒரு பார்ப்பனரல்லாதார் மாநாடு கூட்டப்பட்டது.

■

# வைக்கம் - சேரன்மாதேவி - காஞ்சிபுரம்

– பு. இராசதுரை –

1) **வைக்கம் என்னும் ஊர் எந்த மாநிலத்தில் உள்ளது?**

அ) ஆந்திரம் ஆ) கேரளம்

இ) கர்நாடகம் ஈ)தமிழ்நாடு

2) **திராவிட நாட்டில் பழங்காலத்தில் சாதிப்பிரிவுகளைக் காண முடியாது. சாதிப்பிரிவை இந்நாட்டில் ஏற்படுத்தியவர்கள் யார்?**

அ) மங்கோலியர் ஆ) பார்சிக்கள்

இ) ஆரியர் ஈ) ஆங்கிலேயர்

3) **சாதி அமைப்பின் அடித்தளம் என்ன?**

அ) பிறப்பினால் உயர்வு தாழ்வு

ஆ) பணிச்சிறப்பால் உயர்வு தாழ்வு

இ) பொருட்சிறப்பால் உயர்வு தாழ்வு

ஈ) தோற்றப் பொலிலால் உயர்வு தாழ்வு

4) **வைக்கத்தில் நடந்த மனிதநேய போர் எதை அடிப்படையாகக் கொண்டு தொடங்கப் பெற்றது?**

அ) தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர் ஆகவேண்டும்.

ஆ) வழிபடு மொழியாக மலையாளம் இருத்தல் வேண்டும்.

இ) கோயிலைச் சுற்றியுள்ள நான்கு பாதைகளிலும் நடப்பதற்குத் தாழ்த்தப்பட்டவர்கட்கு உரிமை வேண்டும்

ஈ) தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலில் நுழைய உரிமை வேண்டும்





**5) வைக்கம் போராட்டத்திற்கு வித்திட்டவர் யார்?**

அ) பெரியார் ஈ.வெ.ரா　　ஆ) காந்தியார்

இ) டி.கே.மாதவன்　　ஈ) ஜார்ஜ் ஜோசப்

**6) 1919இல் (1093 தனு முதல்நாள்) கோயில் நுழைவுபற்றிக் கேரளப் பத்திரிகை ஒன்றின் தலையங்கத்தில் விவாதம் எழுந்தது. அந்தக் கேரளப் பத்திரிகையின் பெயர் என்ன?**

அ) வெஸ்ட்கோஸ்ட் ஸ்பெக்டேட்டர்　　ஆ) மலையாள மனோரமா

இ) தேசாபிமானி　　ஈ) கேரளகவுமுடி

7) ஸ்ரீமத் மன்னத் கிருஷ்ணன் நாயர் திவானாக இருந்தபோது கோயில் நுழைவு பற்றிய ஒரு வேண்டுகோள் மனு யாரால் திருவாங்கூர் அசெம்பிளியில் அளிக்கப்பட்டது?

அ) டி.கே. மாதவன்　　ஆ) சங்குண்ணி நாயர்

இ) ஜார்ஜ் ஜோசப்　　ஈ) கேளப்பன்

**8) வைக்கத்தில் அவர்ணதத்தாருக்குக் கோயில் நுழைவு வேண்டும் என்று ஆர்வத்துடன் பேசிக் கொண்டிருந்தவர் யார்?**

அ) மூலூர் எஸ்.பத்மநாபப் பணிக்கர்　　ஆ) ஏ.கே பிள்ளை

இ) கே.பி.கேசவமேனன்　　ஈ) கேளப்பன்

**9) கோயில் நுழைவு பற்றிய மனுவை டி.கே.மாதவன் அசெம்பிளியில் அளித்தபோது அதை எதிர்த்தவர் யார்?**

அ) மூலூர் எஸ்.பத்மநாபப் பணிக்கர்　　ஆ) ஏ.கே பிள்ளை

இ) சங்குண்ணி நாயர்　　ஈ) கேளப்பன்

**10) டி.கே.மாதவனின் துணைவியார் தம் கண்பார்வையை திடீரென இழந்தவிட்டதை நம்பூதிரி ஒருவர் எவ்வாறு கேலி செய்தார்?**

அ) செய்தி அறிந்து வருந்துகிறேன்

ஆ) விரைவில் குணமாகக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்

இ) ஆறுதலடையுங்கள்

ஈ) ‘‘நேற்றுத்தான் கோயில் நுழைவு உரிமை வேண்டும் என நீவிர் கோரினீர்; எவ்வளவு விரைவில் அதன் விளைவு ஏற்பட்டுவிட்டது!’’(கலியில் அனுபவம் உடனே கேட்டோ)



**11) டி.கே.மாதவன் அவர்களின் கோயில் நுழைவு மனு பற்றி கொல்லத்திலிருந்து வெளியான சவர்ணா ஏடு என்ன எழுதியது.?**

அ) அவர்ணத்தாருக்குக் கோயிலில் நுழைவு தரவேண்டும்

ஆ) அவர்கள் அர்ச்சகராக உரிமை வழங்கப்பட வேண்டும்

இ) சாதிகாரணமாக அவர்கள் கோயிலில் நுழைய மறுப்பது அநீதி

ஈ) அவர்களுக்குக் கோயில் நுழைவு உரிமை தரக்கூடாது. மாறாக அவர்களுக்கு அடி கொடுக்க வேண்டும்.

**12) கோயில் நுழைவு பற்றி டி.கே.மாதவன் காந்தியாரை எந்த ஊரில் சந்தித்து கூறினார்?**

அ) மதுரை ஆ) சென்னை

இ) திருநெல்வேலி ஈ) திருச்செந்தூர்

**13) டி.கே.மாதவன் இரண்டாம் முறையாக கோயில் நுழைவு பற்றிய மனுவை யாரிடம் யார்?**

அ) ஸ்ரீமத் மன்னத் கிருஷ்ணன் நாயர்

ஆ) திவான் பகதூர் கிருஷ்ணன் நாயர்

இ) திவான்பகதூர் இராகவய்யா

ஈ) சி.பி.இராமசாமி அய்யர்

**14) டி.கே.மாதவன் மூன்றாம் முறையாக கோயில் நுழைவு பற்றிய மனு கொடுத்ததை தடுத்து நிறுத்தியவர் யார்?**

அ) ஸ்ரீமத் மன்னத் கிருஷ்ணன் நாயர்

ஆ) திவான் பகதூர் கிருஷ்ணன் நாயர்

இ) திவான்பகதூர் இராகவ அய்யா

ஈ) சர்.சி.பி. இராமசாமி அய்யர்

தந்தை பெரியாரின் சொற்பொழிகளும், கட்டுரைகளும் தொகுக்கப்பட்டு “தந்தை பெரியார் சிந்தனைச் செல்வங்கள் வரிசை” என்னும் பெயரில் சிறு நூல்களாக திராவிடர் கழக இயக்க வெளியீடாக வெளியிடப்படுகின்றன.

**15) கோயில் நுழைவு பற்றிய மனுவை தடை செய்த திவான் இராகவய்யா டி.கே.மாதவனிடம் என்ன பதில் கூறினார்?**

அ) கொஞ்சம் பொறுத்திருங்கள்

ஆ) பின்னால் கவனிப்போம்

இ) உங்கள் துயரங்கள் நீங்க வேண்டுமானால் நீங்கள் திருவாங்கூரை விட்டு வெளியேறுங்கள்

ஈ) மகாராஜாவைக் கேட்டுக் கொள்கிறேன்

**16) திவான் இராகவய்யா மனுவைப் படைக்கவோ, மகாராஜாவை சந்திக்கவோ டி.கே.மாதவனுக்கு ஒப்புதல் மறுத்தபின் டி.கே.மாதவன் என்ன செய்தார்?**

அ) சும்மா இருந்தார்

ஆ) புலம்பிக் கொண்டிருந்தார்

இ) 1923ஆம் ஆண்டு இறுதி வாரத்தில் நடைபெற்ற காக்கி நாடா காங்கிரசுக்குச் சென்று காங்கிரசில் சேர்ந்தார்

ஈ) பத்திரிகைத் தொழிலில் நாட்டம் கொண்டார்

**17) காக்கிநாடா காங்கிரசில் டி.கே. மாதவன் நிகழ்த்திய சாதனை என்ன?**

அ) நல்ல உரை ஆற்றினார்

ஆ) தேச விடுதலைக்குப் பாடுபடப் போவதாக உரைத்தார்

இ) காங்கிரஸ் தீண்டாமையை ஒழிக்கத் திட்டம் மேற்கொள்ள வேண்டுமென்று மகாநாட்டின் தலைவர் முகம்மது அலி அவர்களிடம் வலியுறுத்தினார்

ஈ) சாதிக் கொடுமைகளைச் சாடினார்

**18) காங்கிரஸ் தீண்டாமை ஒழிப்பையும் தன் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் என்ற டி.கே.மாதவன் கோரிக்கையை ஏற்றதன் விளைவாகக் காங்கிரஸ் உருவாக்கிய திட்டம் என்ன?**

அ) மதவிஷயங்களில் காங்கிரஸ் தலையிடக் கூடாது

ஆ) தேச விடுதலையே முதல் லட்சியம்

இ) முதலில் சுதந்திரம் பிறகுதான் எல்லாம்

ஈ) மாநிலக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் தம் இடச் சூழ்நிலை கட்குத் தக்கபடி தீண்டாமையை எதிர்த்து வேலை செய்யலாம்

**19) காங்கிரஸ் கமிட்டிகள் தீண்டாமையை எதிர்த்து வேலை செய்யலாம் என்ற திட்டப்படி கேரளக் காங்கிரஸ் கமிட்டியின் நேர் பொறுப்பில் தொடங்கப்பபட்ட போர் எது?**

அ) கல்பாத்தி அக்ரகார நுழைவுப் போர்

ஆ) வைக்கம் உரிமைப் போர்

இ) அனைவரும் அர்ச்சகர் ஆகும் போர்

ஈ) தாய்மொழியில் வழிபடும் உரிமைப் போர்

**20) குளத்திலும் கிணற்றிலேயும் பார்ப்பானும் பறையனும் சூத்திரனும் ஒன்றாகத் தண்ணீர் எடுக்க கூடாது. கோயிலுக்குள் போகக் கூடாது. மேல் சாதிக்காரனுக்குத் தனிக்குளம் கட்டித்தர வேண்டும் என்பதுதான் காந்தியின் திட்டம் என்பதை விளக்கி பெரியார் எந்தெந்த ஊர்களில் உரை ஆற்றினார்?**

அ) மார்த்தாண்டம், இரணியல்

ஆ) நெல்லை, கன்னியாகுமரி

இ) மதுரை, கொட்டாம்பட்டி

ஈ) விருதுநகர், அருப்புக்கோட்டை

**21) பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு செயலாளராக இருந்தபோது பறையன், சக்கிலி, பார்ப்பனர்களுக்கு வேறு பள்ளிக்கூடம், பறையனுக்கு வேறு கோயில் கட்டிக் கொடு என்று சொல்லி மேலிடம் எவ்வளவு தொகையை கிராண்ட் ஆக வழங்கியது?**

அ) ஒரு லட்சம்

ஆ) அய்ம்பதினாயிரம்

இ) நாற்பத்தெட்டாயிரம்

ஈ) இரண்டு லட்சம்

**22) இராஜாவின் அரண்மனையில் ஒரு பகுதியில் நீதிமன்றம் இருந்தது. மாதவன் பி.ஏ., பி.எல்., என்ற வழக்கறிஞர் அப்பகுதியில் நுழைய தடை செய்யப்பட்டார். இதுவே வைக்கம் போராட்டத்திற்கான காரணமாகும். அந்த வழக்கறிஞர் எந்த சமுதாயத்தை சார்ந்தவர்?**

அ) தீயர்

ஆ) ஈழவர்

இ) நாயாடி

ஈ) நாயர்





**23) ஈழவ சமுதாயத் தலைவர்களான டி.கே. மாதவன், வக்கீல் மாதவன் இவர்களோடு கே.பி.கேசவமேனன் போன்றோரும் சேர்ந்து கோயிலைச் சுற்றி நான்கு சாலைகள் உள்ள ஓர் ஊரில் சத்தியாக் கிரகத்தைத் தொடங்க முடிவு செய்தார்கள் அந்த ஊர் எது?**

அ) வைக்கம் ஆ) கொல்லம்

இ) திருவனந்தபுரம் ஈ) சங்கணாச்சேரி

**24) போராட்டத்தைத் தொடங்கக் காந்தியார் கே.பி. கேசவமேனனுக்கு ஒப்புதல் அளித்து எழுதிய கடிதம் எப்போது எழுதப்பட்டது?**

அ) 15.3.24 ஆ) 16.3.24 இ) 17.3.24 ஈ) 18.3.24

**25) போராட்டக்குழு ஊர்வலம் நடத்தத் திட்டமிட்டதைத் தடுக்க அரசாங்கம் முதல் தடை உத்தரவைப் பிறப்பித்தது. அந்த நாள் எது?**

அ) 26.2.1924 ஆ) 28.2.1924 இ) 27.2.1924 ஈ) 29.2.1924

**26) ஊர்வலத்திற்குத் தடை விதிக்கப்பட்டதால் ஊர்வலத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டுச் சத்தியாக்கிரகத்தையே நேரடியாகத் தொடங்கப் போராட்டக் குழு முடிவு செய்தது. போராட்டம் எப்போது தொடங்கியது?**

அ) 28.3.1924 ஆ) 29.3.1924 இ) 30.3.1924 ஈ) 31.3.24

**27) வைக்கம் போராட்டத்திற்காக ஒரு விளம்பர அலுவலகம் திறக்கப்பட்டது. அதற்குப் பெயர் என்ன?**

அ) சத்தியாக்கிரக அலுவலகம் ஆ) போராட்டக் குழு அலுவலகம்

இ) சத்தியாக்கிரக ஆஸ்ரமம் ஈ) சத்தியாக்கிரகக் காரியாலயம்

**28) வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்ட கே.பி.கேசவமேனன், டி.கே.மாதவன் ஆகிய இருவரும் என்று கைதானார்கள்.**

அ) 7.4.24 ஆ) 8.4.24 இ) 9.4.24 ஈ)10.4.24

**29) வைக்கம் சத்தியாகிரகிகளுக்கு உதவுமாறு 7.4.1924 அன்று வேண்டுகோள் விடுத்த பெண்மணி யார்?**

அ) திருமதி. டி.கே. மாதவன்

ஆ) திருமதி.கே.பி. கேசவமேனன்

இ) திருமதி ஜார்ஜ் ஜோசப்

ஈ) திருமதி ஏ.கே. பிள்ளை

**30) வைக்கம் போராட்டத்தில் ஏ.கே.பிள்ளை, கேளப்பன், வேலாயுத மேனன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.**

அ) 8.4.24 ஆ) 9.4.24 இ) 10.4.24 ஈ) 11.4.24

**31) வைக்கம் போராட்டத்தில் ஜார்ஜ்ஜோசப் எப்போது கைது செய்யப்பட்டார்?**

அ) 11.2.24 ஆ) 12.2.24 இ) 10.4.24 ஈ) 15.4.24

**32) வைக்கம் போராட்டத்தில் தலைவர்களெல்லாம் கைது செய்யப்பட்டது பற்றி வருத்தம் தெரிவித்து சென்னையில் இருந்து வெளியான பத்திரிகையின் பெயர் என்ன?**

அ) தி ஹிந்து ஆ) ஜஸ்டிஸ் இ) நியூ இந்தியா ஈ) மெட்ராஸ்

**33) தலைமையில்லாமல் போராட்டம் நின்று விடும் நிலை ஏற்படவே பெரியார் ஈ.வெ.ரா வந்து போராட்டத்தை நடத்தவேண்டும் என்று கோரி அவருக்கு ஒரு கடிதத்தை இரு தலைவர்கள் கையேழுத்திட்டு அனுப்பினார்கள். அத்தலைவர்கள் யார்?**

அ) பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப், கேசவமேனன்

ஆ) டி.கே.மாதவன், வக்கீல் மாதவன்

இ) ஏ. கே. பிள்ளை, வேலாயுதமேனன்

ஈ) கேளப்பன், திருமதி டி.கே.மாதவன்

**34) வைக்கம் போராட்டத்தை வந்து நடத்துமாறு எழுதிய கடிதத்தை எந்த ஊரில் சொற்பொழிவு நடத்திக் கொண்டிருந்தபோது பெரியார் ஈ.வெ.ரா. பெற்றார்?**

அ) கைலாசபுரம் ஆ) விசுவாசபுரம்

இ) பண்ணைப்புரம் ஈ) விழுப்புரம்

**35) பெரியார் ஈ.வெ.ரா வைக்கத்திற்கு வந்த நாள் எது?**

அ) 13.4.24 ஆ) 14.4.24

இ) 15.4.24 ஈ) 16.4.24

**36) ஈ.வெ.ராமசாமி அவர்கள் தலைமையில் கூடிய தீண்டாமை ஒழிப்பு குழுவின் தலைமை இடத்தை எந்த ஊருக்கு மாற்றுவதாக தீர்மானம் செய்யப்பட்டது?**

அ) திருவனந்தபுரம் ஆ) கொச்சி

இ) கொல்லம் ஈ) கோட்டயம்

**37)** **வைக்கம் வந்து சேர்ந்த 13.4.1924 அன்று மாலையே பெரியார் ஈ.வெ.ரா மூன்று மணி நேரம் உரையாற்றினார். அவர் உரையாற்றிய இடம் எது?**

அ) கொச்சி　　ஆ) திருவனந்தபுரம்

இ) எர்ணாகுளம்　　ஈ) வைக்கம் குளக்கரை

**38)** **17.4.1924 அன்று நடைபெற்ற வைக்கம் போராட்டம் பற்றிய பொதுக்கூட்டத்தில் ஆண்களுடன் பெண்களும் சேர்ந்து போராடுவார்கள் என்று கூறியவர் யார்?**

அ) கோவிந்தன் சாணார்　　ஆ) அய்யாமுத்துக் கவுண்டர்

இ) இராமகிருஷ்ணதாஸ்　　ஈ) நாராயணி அம்மாள்

**39)** **பெரியார் ஈ.வெ.ரா, டாக்டர் எம்பெருமாள் நாயுடு, கோவிந்தன் சாணார் ஆகியோர் ராஜ்யத்தின் பல பாகங்களுக்கும் சென்று பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி அறிக்கை எப்போது வெளியிடப்பட்டது?**

அ) 20.4.24　　ஆ) 21.4.24　　இ) 22.4.24　　ஈ) 23.4.24

**40)** **பெரியார் ஈ.வெ.ராமசாமியும், கோவை அய்யாமுத்துக் கவுண்டரும் பிரசாரம் செய்வதற்குத் திருவனந்தபுரம் மாஜிஸ்திரேட் தடை உத்தரவு பிறப்பித்தார். அந்த நாள் எது?**

அ) 27.4.24　　ஆ) 28.4.24

இ) 29.4.24　　ஈ) 30.4.24

**41)** **பெரியார் ஈ.வெ.ராமசாமியும், கோவை அய்யாமுத்துக் கவுண்டரும் பிரசாரம் செய்வதற்குத் திருவனந்தபுரம் மாஜிஸ்திரேட் தடை உத்தரவு பிறப்பித்தார். இந்தத் தடை உத்தரவைக் கண்டித்து எழுதிய சென்னைப் பத்திரிகை எது?**

அ) ஜஸ்டிஸ்　　ஆ) திராவிடன்

இ) சுதேசமித்திரன்　　ஈ) இந்து

**42)** **திருவனந்தபுரம் மாஜிஸ்திரேட் தடையை மீறிப் பேசித் தண்டனையைப் பெற்றவர் யார்?**

அ) அய்யா முத்துக் கவுண்டர்

ஆ) எம்பெருமாள் நாயுடு

இ) மன்னத் பத்மநாப பிள்ளை

ஈ) சித்தேடு சங்குப் பிள்ளை

**43) நாயர் ஈழவர் கூட்டுக்கூட்டத்தில் போராட்டம் குறித்த தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அளிக்கப் பெரியார் ஈ.வெ.ரா. தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் கூட்டம் எப்போது நடைபெற்றது?**

அ) 8.5.24 ஆ) 9.5.24 இ) 10.5.24 ஈ) 11.5.24

**44) தூதுக்குழு திரும்பி வரும் வரையிலோ, பெரியார் ஈவெ.ரா திரும்பி வரும் வரையிலோ சத்தியாக்கிரகத்தின் பொறுப்பாளராக என்.சிவதாணுப் பிள்ளை நியமிக்கப்பட்டார். அந்த நாள் எது?**

அ) 8.5.24 ஆ) 9.5.24 இ) 10.5.24 ஈ)11.5.24

**45) வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு ஜார்ஜ் ஜோசப் தலைமை தாங்கக் கூடாது என்று காந்தியார் எப்பத்திரிகையில் எழுதினார்?**

அ) ஹிந்து ஆ) வெஸ்ட் கோஸ்ட் ஸ்பெக்டேட்டர்

இ) யங் இந்தியா ஈ) நியூ இந்தியா

**46) வைக்கம் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்று உழைத்த ஜார்ஜ் ஜோசப்பிற்கு “ இந்துமதச் சார்பிலுள்ள இந்தக் காரியத்தில் நீ சேர்ந்திருப்பது தவறு” என்று கடிதம் எழுதியவர் யார்?**

அ) சி. இராசகோபாலாச்சாரியார்

ஆ) விஜயராகவாச்சாரியார்

இ) சத்தியமூர்த்தி அய்யர்

ஈ) வைத்தியநாத அய்யர்

**47) பெரியார் ஈ.வெ.ரா மீது மூன்றாம் தடையுத்தரவை மாஜிஸ்திரேட் எப்போது பிறப்பித்தார்?**

அ) 13.5.24 ஆ) 14.5.24 இ) 15.5.24 ஈ) 16.5.24

**48) தடையை மீறிய பெரியார் ஈ.வெ.ரா தண்டிக்கப்பட்டு எந்த ஊர்ச் சிறையில் வைக்கப்பட்டார்?**

அ) வைக்கம் லாக்கப் ஆ) கரூர் காவல் நிலைய லாக்கப்

இ) பூஜப்புரம் சிறை ஈ) கோட்டயம் லாக்கப்

**49) அகாலிகளின் (சீக்கியர்களின்) தர்ம பட்சண சாலையிலிருந்து இலவசமாக உணவு பெறுவது சத்தியாக்கிரகிகளுக்கு நல்லதன்று என்றும், இதை அவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கட்டளையிட்டவர் யார்?**

அ) சி. இராசகோபாலாச்சாரியார் ஆ) காந்தியார்

இ) தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஈ) கேரளக் காங்கிரஸ் கமிட்டி

**50)** **பெரியார் ஈ.வெ.ரா மீண்டும் சிறையில் அடைக்கப்பட்ட போது சத்தியாக்கிரகத்தை அழிப்பதற்காகவும் பெரியார் ஈ.வெ.ரா போன்றவர்களை அழிப்பதற்காகவும் நம்பூதிரி பார்ப்பனர்களும் சில வைதீகர்களும் சேர்ந்து ஒரு யாகம் நடத்தினார்கள். அந்த யாகத்தின் பெயர் என்ன?**

அ) அஸ்வமேதயாகம் ஆ) புத்திர காமேஷ்டி யாகம்

இ) சத்துரு சங்கார யாகம் ஈ) இராஜசூயாகம்

**51)** **காங்கிரஸ் கமிட்டி சத்தியாக்கிரகத்தில் பங்கேற்கக் கூடாது என்றும் ஹிந்து அல்லாத மற்றவரும் அவ்வாறே பங்கேற்கக் கூடாது என்றும் காந்தியார் கூறியதைக் கண்டித்து 24.5.1924 அன்று எழுதிய கேரளப் பத்திரிகை எது?**

அ) மலையாள மனோரமா ஆ) ஸ்ரீ வாழும்கோடு

இ) பௌரன் ஈ) மலையாளி

**52)** **திருமதி நாயக்கர் (ஈ.வெ.ரா நாகம்மையார்), பெரியாரின் சகோதரியார் கண்ணம்மாள், திருமதி எம்பெருமாள் நாயுடு, திருமதி கோவிந்தன் சாணார், திருமதி தாணுமாலைய பெருமாள் பிள்ளை ஆகிய அய்ந்து மகளிரும் கோபுரவாசலுக்குச் செல்ல முயன்றபோது திருமதி சாணார் தவிர மற்றவர்கள் உள்ளே செல்லலாம் என்று காவல்துறை இன்ஸ்பெக்டர் சொன்னபோது திருமதி கோவிந்தன் சாணாரை விட்டு விட்டு நாங்கள்மட்டும் உள்ளே செல்லமாட்டோம் என்றார் ஈ.வெ.ரா.நாகம்மையார். இது எப்போது நிகழ்ந்தது?**

அ) 18.5.24 ஆ) 19.5.24 இ) 20.5.24 ஈ) 21.5.24

**53)** **திருமதி ஈ.வெ.ரா. நாகம்மையார், திருமதி முத்துசுவாமி, திருமதி கோவிந்தன் சாணார் உள்ளிட்ட மகளிர் ஆறுபேர் சத்தியாக்கிரகம் செய்த நாள் எது?**

அ) 2.6.24 ஆ) 3.6.24 இ) 4.6.24 ஈ) 5.6.24

**54)** **கோவிந்தன் சாணாரும் பஜனை சங்கத்தாரும் சிறையிலிருந்து விடுதலையாக இருந்த பெரியார் ஈ.வெ.இராமசாமியை வரவேற்க அருகுட்டி என்ற அருவிக்குத்திச் சிறைக்குச் சென்றார்கள். அந்த நாள் எது?**

அ) 20.6.24 ஆ) 21.6.24

இ) 22.6.24 ஈ) 23.6.24

**55) ஈ.வெ.ரா.நாகம்மையாருக்கும் அவர் கோவில் உள்ளே செல்லுவதற்கு வழிவிட மறுத்த காவல் துறையினர்க்கும் இடையே வாக்குவாதம் எப்போது நடந்தது?**

அ) 10.7.24 ஆ) 11.7.24 இ) 12.7.24 ஈ) 13.7.24

**56) ஈ.வெ.ரா. நாகம்மையாரின் கேரளப் பிரச்சாரச் சுற்றுப் பயணத் திட்டம் என்று அறிவிக்கப்பட்டது?**

அ) 24.8.1924 ஆ) 25.8.1924
இ) 26.8.1924 ஈ) 27.8.1924

**57) “கால்களில் விலங்குச் சங்கிலி, தலையிலே கைதிகள் அணியும் ஒரு குல்லாய், முழங்கால்களுக்குக் கீழே தொங்குகின்ற ஒரு வேட்டி, கழுத்தில் கைதி எண் குறிப்பிட்ட ஒரு மரப்பட்டை இவற்றோடு ஈ.வெ.ராமசாமி கொலைகாரர்களோடும், கொள்ளைக்காரர்களோடும் வேலை செய்துகொண்டிருக்கிறார். தண்டனை அடைந்த சாதாரண கைதி எவ்வளவு வேலை செய்வானோ அது போல் இருமடங்கு வேலை செய்கிறார். வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறையில் இருந்த பெரியார் ஈ.வெ.ரா. பற்றி இவ்வாறு தம் வரலாற்றில் எழுதியவர் யார்?**

அ) கே.பி.கேசவமேனன் ஆ) டி.கே.மாதவமேனன்
இ) கேளப்பன் ஈ) கோவிந்தன் சாணார்

**58) திருவாங்கூர்ச் சிறைச்சாலையில் பெரியார் ஈ.வெ.ராமசாமி கேவலமாக நடத்தப்படுவது பற்றிப் பத்திரிகைகளுக்கு சி.இராச கோபாலாச்சாரியார் எழுதிய செய்திகள் பற்றி ‘நவசக்தி’ சத்தியாக் கிரகத்தின் கொள்கையில் நன்கு ஊறிய திரு.ஈ.வெ.ரா.வுக்கு எத்தகைய கொடுமைகளையும், தொல்லை களையும் தாங்கும் ஆற்றல் உண்டு என்று எந்த நாளில் எழுதியது?**

அ) 26.8.24 ஆ) 27.8.24 இ) 28.8.24 ஈ) 29.8.24

**59) வைக்கம் சத்தியாக்கிரக ஆசிரமத்திற்கு வந்து நாராயணகுரு சில நாள் தங்கினார் என்றும், பல அறிவுரைகள் வழங்கினார் என்றும் ‘தேசாபிமானி’ பத்திரிகை எந்த நாளில் தலையங்கம் எழுதியது?**

அ) 8.10.24 ஆ) 9.10.24 இ) 10.10.24 ஈ) 11.10.24

**60) காவல்துறையின் முன்னிலையிலேயே உயர்சாதி ரவுடிகள் வைக்கம் சத்தியாக்கிரகிகளைத் தாக்கியது பற்றித் “தமிழ்நாடு” இதழ் எந்த நாளில் கடுமையாகக் கண்டித்து எழுதியது?**

அ) 4.7.24 ஆ) 5.7.24
இ) 6.7.24 ஈ) 7.7.24

61) **வைக்கம் கோவிலைச் சுற்றியுள்ள சாலைகளில் செல்லத் தாழ்த்தப்பட்டவர்களை அனுமதிக்கும்படி அரசாங்கத்தைக் கோரித் திருவாங்கூர் லெஜிஸ்லேடிவ் கவுன்சிலில் ஒரு தீர்மானம் கொணரப்பட்டது. இத்தீர்மானம் ஒரு வாக்குக் குறைவினால் தோற்கடிக்கப்பட்டது. இக்கொடுமையைக் கண்டு வருந்திச் சென்னை 'தமிழ்நாடு' இதழ் எப்போது எழுதியது?**

அ) 1..3.25 ஆ) 2.3.25 இ) 3.3.25 ஈ) 4.3.25

62) **வைக்கம் கோவிலைச் சுற்றியுள்ள நான்கு சாலைகளில் மூன்றைத் தாழ்த்தப்பட்டவர்கள் பயன்படுத்தலாம் என்று அனுமதி அளித்தும், நான்காம் சாலையைப் பயன்படுத்தக் கூடாது என்று தடை செய்தும் உள்ள திருவாங்கூர் தர்பாரின் செயல்குறித்து வியப்படைந்து நான்காம் சாலையையும் திறக்க ஏன் பயப்பட வேண்டும் என்று சென்னையிலிருந்து நீதிக்கட்சி ஏடான "திராவிடன்" எந்நாளில் எழுதியது?**

அ) 24.6.1925 ஆ) 25.6.1925 இ) 26.6.1925 ஈ) 27.6.25

63) **22.12.1924 அன்று நடைபெற்ற பெல்காம் காங்கிரஸ் மாநாட்டில் தம்மைச் சந்தித்த டி.கே.மாதவன் முதலியவர்களிடம் "என் பெயரையோ காங்கிரஸ் பெயரையோ சொல்லாமல் நீங்கள் எங்கிருந்தும் பணத்தை வசூலித்துக் கொள்ளலாம்" என்று சொன்னவர் யார்?**

அ) காந்தியார் ஆ) இராசகோபாலாச்சாரியார்

இ) மாளவியா ஈ) மோதிலால்

64) **காந்தியார் வைக்கம் வந்து சேர்ந்த நாள் எது?**

அ) 7.3.25 ஆ) 8.3.25 இ) 9.3.25 ஈ) 10.3.25

65) **காந்தியார்-உயர்சாதிக்காரர் உரையாடல் எப்போது நடைபெற்றது?**

அ) 9.3.25 ஆ) 10.3.25 இ) 11.3.25 ஈ)12.3.25

66) **காந்தியார் உடன் உரையாற்றிய எம்.கே.இராமன் பிள்ளை முற்பிறவியில் செய்த தீவினை காரணமாய் ஈழவர் என நாம் அழைக்கும் பஞ்சமர் இச்சண்டாளவர்க்கத்தில் பிறந்திருக்கிறார்கள் என்று கூறியதற்கு காந்தியார் அளித்த பதில் என்ன?**

அ) ஆம் ஆ) இல்லை

இ) ஆய்ந்து சொல்கிறேன் ஈ) பண்டிதர்களைக் கேட்டுச் சொல்கிறேன்.

**67) காந்தியார் மகாராணியை வர்க்கலையில் எப்போது சந்தித்துப் பேசினார்?**

அ) 10.3.1925 ஆ) 11.3.1925 இ) 12.3.1925 ஈ) 13.3.1925

**68) பெரியார் ஈ.வெ.ரா. வர்க்கலைக்கு எப்போது வந்து சேர்ந்தார்?**

அ) 10.3.25 ஆ) 11.3.25 இ) 12.3.25 ஈ) 13.3.25

**69) நாராயணகுரு காந்தியார் சந்திப்பு எப்போது நடந்தது?**

அ) 10.3.1925 ஆ) 11.3.1925 இ) 12.3.1925 ஈ) 13.3.1925

**70) வைக்கம் கேயிலின் கிழக்குச் சாலையும் திறந்து விடப்படும் என்ற அறிவிப்பு பற்றி "மாத்ருபூமி" எப்போது தலையங்கம் எழுதியது?**

அ) 20.11.25 ஆ) 21.11.25 இ) 22.11.25 ஈ) 23.11.25

**71) வைக்கம் கேயிலின் 40 கிழக்குச்சாலையும் திறந்துவிடப்பட்டதால் சத்தியாக்கிரகம் எப்போது நிறுத்தப்பட்து?**

அ) விருச்சிகம் 8, 1101 (23.11.25)

ஆ) விருச்சிகம் 9, 1101 (24.11.25)

இ) விருச்சிகம் 10, 1101 (25.11.25)

ஈ) விருச்சிகம் 11, 1101 (26.11.25)

**72) பெரியார் ஈ.வெ.ராமசாமி தலைமையில் வைக்கம் சத்தியாகிரகம் வெற்றி விழா கொண்டாடுவது பற்றி 29.11.2015ஆம் நாள் ஆலோசனை கூட்டம் நடைபெறும் என்று அறிக்கை வெளியிட்டவர் யார்?**

அ) கே.கேளப்பன் ஆ) ஏ.கே.பிள்ளை

இ) டி.கே.மாதவன் ஈ) வக்கீல் மாதவன்

**73) வைக்கம் சத்தியாகிரக ஆலோசனை கூட்டத்தில் தலைவர் ஈவெ.ரா. திருமதி ஈ.வெ.ரா. நாகம்மையார் மற்றும் பலர் தீண்டாமை ஒழிப்பு போராட்டத்தில் ஈடுபட்டதற்காக நம்முடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கிறோம் என்று உரை நிகழ்த்தியவர் யார்?**

அ) மன்னத் பத்மநாப பிள்ளை

ஆ) டி.கே.மாதவன்

இ) கே.கேளப்பன்

ஈ) கேசவப்பிள்ளை





**74) அம்பேத்கர் போராட்டங்களுக்கு வைக்கம் வரலாறு ஓர் உந்து சக்தியாக இருந்தது என்று "பகீஷ் கரித் பாரத்" என்ற பத்திரிகை எந்த ஆண்டு எழுதியது?**

அ) 1925 ஆ) 1926 இ) 1927 ஈ) 1928

**75) 29.11.1925 இல் வைக்கம் வெற்றி விழாவில் பெரியார் ஆற்றிய உரை 6.12.1925 இல் "குடிஅரசு" வெளியிட்டது. அவ்வுரையின் ஒரு பகுதி இங்கே தரப்பட்டுள்ளது. அதில் கோடிட்ட இடத்தை நிரப்பச் சரியான சொல் யாது?**

**" .......................... போவதானால் பொருள் இல்லாத (அர்த்தமற்ற) பூணூல் போட்டுக்கொள்வதோடு, பொருளறியாத சந்தியாவந்தனமும் செய்து கொள்ளவேண்டும். அந் நிலைமைக்கு நீங்கள் வரக்கூடாது.**

அ) பிரம்ம சமாஜம் ஆ) பிரார்த்தன சமாஜம்

இ) ஆரிய சமாஜம் ஈ) தியசாபிகல் சங்கம்

**76) பின் வரும் கூற்று யாருடையது?**

**"வைக்கத்தில் அவர் செய்துள்ள வேலை அளவிடற்பாலது. அவர் ஒரு காலத்தில் தேசியப் போராட்டத்தில் அமிதவாத (தீவிரவாத)க் கொள்கையை உடையவராக இருந்தார். சீர்திருத்தக்காரர்கள் பின்பற்றத்தக்க தலைவர் ஈ.வெ.ராமசாமி ஒருவரே ஆவார்"**

அ) என் சிவராஜ் பி.ஏ.பி.எல்., ஆ) கக்கன்

இ) சிவசண்முகம் பிள்ளை ஈ) தொண்டு வீராசாமி

**77) தந்தை பெரியார் போராட்டத்தில் இறங்கிய பின்னர்தான் "எழுச்சி அதிகமாயிற்று என்றும், புத்துயிர் பெற்றது" என்றும் வைக்கம் போராட்டம் பற்றி எழுதிய சிறப்பு அறிக்கையில் குறிப்பிட்ட ஆங்கிலேய அலுவலர் யார்?**

அ) மிஸ்டர் பிட் ஆ) காட்டன் அய்.சி.எஸ்.

இ) மிஸ்டர் நார்டன் ஈ) மிஸ்டர் வுட்.

**78) வைக்கத்தில் பெரியார் நடத்திய போராட்டத்திற்காகப் பணம் பெற்றமைக்குச் சரியாகக் கணக்குக் காட்டவில்லை என்று பெரியார்மீது குற்றம் சுமத்திய காங்கிரஸ்காரர் யார்?**

அ) சி.என். முத்துரங்க முதலியார் ஆ) வ.உ. சிதம்பரம்

இ) தண்டபாணி பிள்ளை ஈ) சீநிவாச அய்யங்கார்.

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.ஆ | 2.இ | 3.அ | 4.இ | 5.இ | 6.இ | 7.அ | 8.அ | 9.அ | 10.ஈ |
| 11.ஈ | 12.இ | 13.ஆ | 14.இ | 15.இ | 16.இ | 17.இ | 18.ஈ | 19.ஆ | 20.அ |
| 21.இ | 22.ஆ | 23.அ | 24.அ | 25.ஈ | 26.இ | 27.இ | 28.அ | 29.அ | 30.ஆ |
| 31.அ | 32.ஆ | 33.அ | 34.இ | 35.அ | 36.ஆ | 37.ஈ | 38.ஈ | 39 ஆ | 40 ஆ |
| 41 இ | 42 .அ | 43.அ | 44.ஆ | 45.இ | 46.அ | 47.ஆ | 48.இ | 49.ஆ | 50.இ |
| 51.இ | 52.அ | 53.ஈ | 54.ஆ | 55.ஆ | 56.இ | 57.அ | 58.ஈ | 59.ஈ | 60.இ |
| 61.அ | 62.ஆ | 63.அ | 64.இ | 65.ஆ | 66.அ | 67 இ | 68.இ | 69.இ | 70.ஆ |
| 71.அ | 72.அ | 73.அ | 74.இ | 75.இ | 76.அ | 77.ஆ | 78.அ | | |



### ஆண்-பெண் சமரசம் ஏற்பட...

ஆண்களைப் போலவே பெண்களும் செய்யத் தயாராக இருக்கவேண்டும். ஆண் இரண்டு வைப்பாட்டிகளை வைத்துக் கொண்டால், பெண் மூன்று ஆசை நாயகர்களை வைத்துக்கொள்ள முற்பட வேண்டும். உடனே நிலைமை சரிப்பட்டுப் போகும்; உண்மையான சமரசம் தோன்றிவிடும்.

**(8-2-1931 “குடிஅரசு”)**

# சேரன்மாதேவி

1) **சேரன்மாதேவி என்ற ஊர் எந்த மாவட்டத்தில் உள்ளது?**

அ) திருச்சி ஆ) தஞ்சை

இ) திருநெல்வேலி ஈ) கோவை

2) **சேரன்மாதேவியில் தொடங்கப்பட்ட தேசியக் கல்வி நிறுவனத்தின் பெயர் என்ன?**

அ) கல்வி ஆசிரமம் ஆ) பள்ளிக் கூடம்

இ) தமிழ்க் குருகுல வித்யாலயா ஈ) பாடசாலை

3) **தமிழ்க் குருக்குல வித்யாலயா நிலையத்தை நிறுவியவர் யார்?**

அ) பாரதியார் ஆ) சத்திய மூர்த்தி அய்யர்

இ) மதுரை வைத்திய நாதய்யர் ஈ) வ.வே.சு.அய்யர்

4) **வ.வே.சு அய்யர் எந்த ஊரைச் சேர்ந்தவர்?**

அ) ஆறுமுகநேரி ஆ) வரகநேரி

இ) வேப்பேரி ஈ) குறும்பலாப்பேரி

5) **வா.வே.சு. அய்யர் எதை நிலை நிறுத்தவேண்டும் என்று குருகுலத்தை நிறுவினார்?**

அ) தமிழ் இலக்கிய மேம்பாடு ஆ) ஆங்கிலக் கல்வி முறை

இ) பாரதப் பண்பாடு ஈ) இந்துமதக் கோட்பாடுகள்

6) **சேரன்மாதேவி குருகுலம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?**

அ) 1923 ஆ) 1924 இ) 1925 ஈ) 1926

7) **கல்லிடைக்குறிச்சி ஆசிரியர் சிலர் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார்கள். இவர்கள் தாலுகா போர்டு பள்ளியை விட்டு விலகிப் புதிய பள்ளிக் கூடம் நிறுவினார்கள். அப்பள்ளியின் பெயர் என்ன?**

அ) காந்தி வித்யாலயம் ஆ) நேரு வித்யாலயம்

இ) பாரதி வித்யாலயம் ஈ) திலகர் வித்யாலயம்

**8) சேரன் மாதேவியில் குருகுலம் அமைக்க வ.வே.சு. அய்யர் முயன்றபோது அங்கு முப்பது ஏக்கர் நிலம் மூவாயிரம் ரூபாய் விலைக்கு வந்தது. அந்த நிலத்தைக் குருகுலத்திற்காக வாங்க ரூபாய் மூவாயிரத்தையும் அளித்தார் செட்டிநாட்டு வள்ளல் ஒருவர். அவர் யார்?**

அ) ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்
ஆ) அழகப்ப செட்டியார்
இ) கானாடு காத்தான் வயி.சு.சண்முகம் செட்டியார்
ஈ) சி.வி.சி.டி வெங்கடாசலம் செட்டியார்

**9) சேரன் மாதேவி குருகுலத்திற்குப் பண உதவி கோரி எந்த அமைப்புக்கு வ.வே.சு அய்யர் விண்ணப்பித்தார்?**

அ) தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி ஆ) நீதிக் கட்சி அரசு
இ) அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி ஈ) திருநெல்வேலி நகராட்சி

**10) அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தவர் யார்?**

அ) ஓ.பி. இராமசாமி ஆ) இராசகோபாலாச்சாரியார்
இ) வரதராஜுலு நாயுடு ஈ) என்.எஸ். வரதாச்சாரி

**11) தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் காரியதரிசிகளாக அப்போது இருந்த இருவர் யார்?**

அ) ஈ.வெ.ராமசாமி, கே.சந்தானம்
ஆ) திரு.வி.க., எஸ். சந்தானம்
இ) தங்கப்பெருமாள் பிள்ளை, ஆதி நாராயணன் செட்டியார்
ஈ) டி.எஸ்.எஸ். ராஜன், ஹாலாஸ்யம் அய்யர்

**12) குருகுலத்திற்கு எவ்வளவு நன்கொடை தமிழ்நாடு காங்கிரசால் வாக்களிக்கப்பட்டு முதலில் அய்யாயிரம் ரூபாய் வழங்கப்பெற்றது?**

அ) இருபதினாயிரம் ரூபாய் ஆ) பதினைந்தாயிரம் ரூபாய்
இ) பத்தாயிரம் ரூபாய் ஈ) ஆறாயிரம் ரூபாய்

**13) சேரன்மாதேவி குருகுலத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பிற்காலத்தில் விளங்கிய ஒருவரின் பிள்ளையும் மாணவராயிருந்தார். அவர் யார்?**

அ) பி.எஸ். குமாரசாமி ராஜா ஆ) எம்.பக்தவத்சலம்
இ) ஓ.பி.இராமசாமி ரெட்டியார் ஈ) டாக்டர் பி.சுப்பராயன்





**14) சேரன்மாதேவி குருகுலத்தில் பார்ப்பன மாணவர்களுக்கும், பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கும், தனித்தனியாக உணவு பரிமாறப்படுகிறது என்று கூறிய தன் மகனிடம் ஓமந்தூரார் யாரைப் பார்க்கச் சொன்னார்?**

அ) வரதராஜுலு நாயுடு ஆ) திரு.வி.க.

இ) எஸ்.இராமநாதன் ஈ) ஈ.வெ.ராமசாமி

**15) சேரன்மாதேவி குருகுலத்தில் ஜாதி பிரிவு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டவுடன் மீதி ரூபாய் அய்யாயிரத்தை தரக்கூடாது என்று முடிவெடுத்தவர் யார், யார்?**

அ) வரதராஜுலு நாயுடு, பெரியார் ஈ.வெ.ரா.

ஆ) எஸ்.இராமநாதன் – தங்கப்பெருமாள் பிள்ளை

இ) திருவி.க. – ஹாலாஸ்யம் அய்யர்

ஈ) சந்தானம் – கணபதி சங்ககிரி சாஸ்திரி

**16) சேரன்மாதேவியில் ஆய்வுக்குழுவின் முடிவு வெளியானதும் மறுநாளே மீதி ரூபாய் அய்யாயிரத்தை யாருக்கும் தெரியாமல் யாரிடமிருந்து வ.வே.சு.அய்யர் வாங்கிச் சென்றார்?**

அ) கே.சந்தானம் ஆ) எஸ்.இராமநாதன்

இ) திரு.வி.க. ஈ) தங்கப் பெருமாள் பிள்ளை

**17) சேரன்மாதேவி குருகுலம் நடத்துவதற்காக காங்கிரசிடமிருந்து பெற்ற பணத்தை வ.வே.சு.அய்யர் திருப்பித் தரவேண்டும் என்று அறிவித்தவர் யார்?**

அ) திரு.வி.க.

ஆ) பி.வரதராஜுலு நாயுடு

இ) தங்கப் பெருமாள் பிள்ளை

ஈ) இராசகோபாலாச்சாரியார்

**18) சேரன்மாதேவி குருகுலப் பிரச்சினையையொட்டி பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டாக வேண்டுமென்று சேலத்தில் உரையாற்றியவர் யார்?**

அ) பி.வரதராஜுலு நாயுடு ஆ) திரு.வி.க.

இ) எஸ். இராமநாதன் ஈ) பெரியார் ஈ.வெ.ராமசாமி

**19) குருகுலத்தில் தலைமைப் பதவியை விட்டு விலகுவதாக எந்தச் செய்தித்தாளில் 21.4.1925 அன்று வ.வே.சு.அய்யர் அறிவித்தார்?**

அ) ஹிந்து ஆ) நியூ இந்தியா

இ) ஜஸ்டீஸ் ஈ) தி வெஸ்ட்கோஸ்ட் ஸ்பெக்டேட்டர்

**20) 28.4.1925 அன்று குருகுலத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

அ) டி.ஆர்.மகாதேவ அய்யர் ஆ) ஹாலாஸ்யம் அய்யர்

இ) டி.எஸ்.எஸ்.ராஜன் ஈ) டி.வி.சாமிநாதன்

**21) ஈ.வெ.இராமசாமி நாயக்கர் காங்கிரசை விட்டு நீங்கிப் பார்ப்பனர்களையும் பார்ப்பன ஆதிக்கத்தையும் தமிழ்நாட்டிலிருந்து நீக்கி வைப்பதற்காகவும் தாமே ஓரியக்கத்தை உருவாக்கிய தற்கான காரணங்களுள் சேரன்மாதேவி தமிழ்க் குருகுல வித்யாலயா பிரச்சினையும் ஒன்று என்று எழுதிய ஏடு எது?**

அ) நியூஇந்தியா ஆ) ஜஸ்டிஸ்

இ) தி ஹிந்து ஈ) தி வெஸ்ட் கோஸ்ட் ஸபெக்டேட்டர்

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.இ | 2.இ | 3.ஈ | 4.ஆ | 5.இ | 6.அ | 7.ஈ | 8.இ | 9.அ | 10.ஆ |
| 11.அ | 12.இ | 13.இ | 14.ஈ | 15.அ | 16.அ | 17.ஆ | 18.ஈ | 19.அ | 20.அ |
| 21.இ | | | | | | | | | |

# காஞ்சிபுரம்

1) **பெரியார் ஈ.வெ.ரா.வின் அரசியல் வாழ்வில் ஏற்பட்ட திருப்பத்திற்குக் காரணம் எது?**

அ) எல்லாச் சாதியினரும் அர்ச்சகர் ஆதல்

ஆ) கோவிலில் தமிழில் வழிபடுதல்

இ) இந்தி ஆதிக்க எதிர்ப்பு

ஈ) வகுப்புரிமை (இட ஒதுக்கீடு)

2) **பெரியார் ஈ.வெ.ரா. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த போது அடியிற் கண்டவர்களுள் செயலாளராக இருந்தவர் யார்?**

அ) கோவை அய்யாமுத்து

ஆ) தங்கப் பெருமாள் பிள்ளை

இ) எஸ்.இராமநாதன்

ஈ) சிங்காரவேலு செட்டியார்

3) **தஞ்சையில் 1921 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் மாநாடு நடந்தபோது பார்ப்பனரல்லாதார் பிரதிநிதிகள் தங்கியுள்ள இடத்தில் ஒரு கூட்டம் நடைபெறும் எனப் பெரியார் ஈ.வெ.ரா. அறிவித்தார். எதற்காக இக்கூட்டம் அவரால் கூட்டப்பட்டது?**

அ) இந்திய விடுதலை குறித்து ஆராய

ஆ) மொழிச்சிக்கல் குறித்து முடிவு எடுக்க

இ) பார்ப்பனரல்லாதார் குறித்துப் பேச

ஈ) தேர்தல் குறித்து ஆய்வு நடத்திட

4) **பார்ப்பனரல்லாதார் குறித்து பேச ஈ.வெ.ரா. கூட்டிய கூட்டத்தில், இதெல்லாம் எனக்கு பிடிக்கவில்லை. சுதந்திரம் பெற வேண்டியதுதான் முக்கியம் என்று கூறியவர் யார்?**

அ) டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு

ஆ) திரு வி.கலியாணசுந்தரனார்

இ) எஸ்.இராமநாதன்

ஈ) சிங்காரவேலு செட்டியார்

**5) அப்போது பெரியார் ஈ.வெ.ரா. எஸ்.இராமநாதனைப் பார்த்து “இது பார்ப்பனர் அல்லாதார் கூட்டம், இங்கு பார்ப்பனருக்கு எதுவும் சொல்ல உரிமை இல்லை” என்றார். அதைக் கேட்டதும் எஸ்.இராமநாதன் சிரித்தார். அவர் ஏன் சிரித்தார்?**

அ) ஈ.வெ.ரா. கோபத்தைத் தணிக்க
ஆ) தான் பார்ப்பனர் அல்லாதார் என்பதால்
இ) சாதிப் பிரச்சினையைப் பேசுவது கண்டு
ஈ) காங்கிரசுக்கு இதற்கு தொடர்பில்லை எனக்கொண்டு

**6) 1924 ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் நடந்த காங்கிரஸ் மாகாண மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் யார்?**

அ) ஈ.வெ.இராமசாமி
ஆ) திரு.வி.க.
இ) எஸ்.இராமநாதன்
ஈ) டாக்டர் வரதராஜுலு நாயுடு

**7) தம் தலைமை உரையில் பார்ப்பனர் அல்லாதார் பற்றி ஈ.வெ.ரா. பேசியபோது அவரை எதிர்ப்பதற்காகத் தாம் காசுகொடுத்து அழைத்துவந்த 100 பார்ப்பனரல்லாதாரைக் கொண்டு எதிர்க்கச் செய்தவர் யார்?**

அ) சீனிவாச அய்யங்கார் ஆ) சி.இராசகோபாலாச்சாரியார்
இ) சந்தானம் ஈ) சத்தியமூர்த்தி அய்யர்

**8) மாநாட்டில் பெசண்ட் அம்மையாரையும் சீனிவாச சாஸ்திரியையும் சேர்த்துக் கொண்டு அவர்கள் ஆதரவைப் பெற வேண்டும் என்ற கருத்து எழுப்பப்பட்டபோது அவர்கள் இருவரையும் சேர்த்துக் கொள்வது என்றால் ஏன் நீதிக்கட்சித் தலைவர் தியாகராயரையும் அழைத்துப் பேசக் கூடாது என்று குறிப்பிட்டவர் யார்?**

அ) டாக்டர் வரதராஜுலு நாயுடு
ஆ) கோவை அய்யாமுத்து
இ) எஸ். இராமநாதன்
ஈ) தஞ்சாவூர் வெங்கட கிருஷ்ணபிள்ளை

**9) அப்போது சீனிவாச அய்யங்காரின் ஆட்கள் என்ன சொற்கள் கூறித் தியாகராயரைத் திட்டினார்கள்?**

அ) விவரம் தெரியாதவர் ஆ) டயர்–அரக்கர்
இ) தேசத்துரோகி ஈ) காங்கிரசின் எதிரி

**10) 1925 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாகாண மாநாடு தமிழ்நாட்டில் எந்த ஊரில் நடைபெற்றது?**

அ) மதுரை ஆ) திருநெல்வேலி

இ) காஞ்சிபுரம் ஈ) சென்னை

**11) 1925 காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் யார்?**

அ) எஸ்.இராமநாதன்

ஆ) சீனிவாச அய்யங்கார்

இ) திரு.வி.கலியாணசுந்தரனார்

ஈ) சிங்காரவேலு செட்டியார்

**12) பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டாதார் ஆகியோருக்கு அவரவரர் ஜனத்தொகைக்கு ஏற்ப சகல பதவிகளையும் கிடைக்கும்படி செய்ய காங்கிரசை வலியுறுத்தி தீர்மானம் இயற்றி முன்மொழிந்தவர் யார்?**

அ) டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு ஆ) எஸ்.இராமநாதன்

இ) சர்க்கரை செட்டியார் ஈ) ஈ.வெ.ராமசாமி

**13) பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டாதார் ஆகியோருக்கு அவரவர் ஜனத்தொகைக்கு ஏற்ப சகல பதவிகளையும் கிடைக்கும்படி செய்ய காங்கிரசை வலியுறுத்தி தீர்மானம் இயற்றி வழிமொழிந்தவர் யார்?**

அ) ஆரியா மேனன்

ஆ) தஞ்சாவூர் வெங்கட கிருஷ்ணபிள்ளை

இ) சர்க்கரைச் செட்டியார்

ஈ) எஸ். இராமநாதன்

**14) பிரிட்டிஷ் ஆட்சி புரிகிற இக்காலத்திலேயே மனிதர்களைத் தெருவில் நடக்கக் கூடாது; குளம் குட்டைகளில் தண்ணீர் எடுக்கவிடக்கூடாது என்னும் பல கொடுமைகள் நடைபெறுகின்ற போது, இராஜ்ய அதிகாரம் ஒரு வகுப்பார் கைக்கே வந்து விடுமானால் இனி என்ன கொடுமைகள் செய்ய அஞ்சுவார்கள் என்று பயப்படுகிறார்கள் என்ற கருத்தைப் பெரியார் ஈ.வெ.ரா. எது கருதி அம்மாநாட்டில் உரைத்தார்?**

அ) இடஒதுக்கீடு இந்த அச்சத்தை நீக்கும்

ஆ) சாதிப்பகைமை நீங்கும்

இ) தீண்டாமை அழியும்

ஈ) சமத்துவம் ஏற்படும்

**15) காஞ்சிபுரம் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தைப் பெரியார் ஈ.வெ.ரா. முன்மொழிவதற்கு மாநாட்டின் தலைவர் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் ஒப்புதல் அளிக்காமைக்குத் திரு.வி.க கூறிய காரணம் யாது?**

அ) தீர்மானம் ஒழுங்கு தவறானது

ஆ) தீர்மானம் தேவையில்லாதது

இ) தீர்மானம் மக்களைப் பிளவுபடுத்தும்

ஈ) தீர்மானம் தேசவிரோதமானது

**16) வகுப்புரிமை தீர்மானத்தை சில பார்ப்பனர் பேச்சைக் கேட்டுக்கொண்டு ஏற்க முடியாது என்கிறீர்கள் என்று ஈ.வெ.ரா. கூறியபோது தலைமை தாங்கிய திரு.வி.க. என்ன கூறி பதிலளித்தார்.**

அ) தேச நன்மையைக் கருதி

ஆ) மாநாடு குழப்பமின்றி நடைபெறுவதற்கு

இ) இடஒதுக்கீடு நீதிக்கட்சியின் கொள்கை

ஈ) இடஒதுக்கீடு காங்கிரஸ் கொள்கைக்கு எதிரானது

**17) வகுப்புரிமை தீர்மானத்தை ஏற்க மறுத்தவுடன் பெரியார் ஈ.வெ.ரா. காங்கிரஸ் பார்ப்பனர்களின் கூடாரமாக இருக்கிறது. எனவே இந்தக் காங்கிரசை ஒழித்துக் கட்டுகிறேனா இல்லையா பார் என்று நான்காயிரம் பேர் நிறைந்திருந்த காஞ்சிபுரம் மாநாட்டு பந்தல் நடுவே நின்று என்ன செய்தார்?**

அ) மனம் வருந்தினார்

ஆ) மாநாட்டை விட்டும் காங்கிரசை விட்டும் வெளியேறினார்

இ) தக்க சமயம் வரட்டும் என்று காத்திருந்தார்

ஈ) தம் ஆதரவாளர்களைத் திரட்டினார்

எனக்கு விவரம் தெரிய ஆரம்பித்த காலம் முதற்கொண்டே நான், அதாவது 1910-லிருந்தே காங்கிரஸ் ஸ்தாபனத்தின் போக்கை கவனித்து வந்திருக்கிறேன். அது அரசியலைக் கைப்பற்றுவதிலேயே தான் நாட்டம் காட்டி வந்திருக்கிறது.

**– தந்தை பெரியார்**



18) **மாநாட்டுப் பந்தலை விட்டும் காங்கிரசை விட்டும் வெளியேறிய பெரியார் தம் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைச் செயல் வடிவத்திற்குக் கொண்டு வர உடனடியாக மேற்கொண்ட திட்டம் என்ன?**

அ) சுயமரியாதை இயக்கம் கண்டார்

ஆ) காங்கிரஸ் தலைமைக்கு வேண்டுகோள் விடுத்தார்

இ) மக்களிடம் பிரச்சாரம் செய்தார்

ஈ) நீதிக் கட்சியை ஆதரிக்கத் தொடங்கினார்

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.ஈ | 2.இ | 3.இ | 4.இ | 5.ஆ | 6.அ | 7.அ | 8.இ | 9.ஆ | 10.இ |
| 11.இ | 12.ஈ | 13.இ | 14.அ | 15.அ | 16.அ | 17.ஆ | 18.அ | | |

## சுயமரியாதைக்காரர் வேலை



சுயமரியாதைக்காரர்கள் கடவுளை ஒழிப்பதில்லை. என்றைய தினம் மனிதனுக்கு ஆராய்ச்சி அறிவு ஏற்பட்டதோ, அன்றே கடவுள் செத்துப்போய்விட்டது.

ஆனால், நமது நாட்டில் செத்தபிணம் அழுகி நாறிக்கொண்டிருப்பதை எடுத்துப் புதைத்து நாறின இடத்தை லோஷன் போட்டுக் கழுவிச் சுத்தம் செய்கின்ற வேலையைத்தான் சுயமரியாதைக்காரர்கள் செய்கின்றார்கள்.

## சம உரிமையே சுகவாழ்வு



ஒரு தகப்பன்வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு எப்படிச் சம அந்தஸ்த்தும் சம உரிமையும் உண்டோ, அப்படியே ஒரு தேசத்தில் பிறந்தவர்களுக்கும் இருக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் மக்கள் சுகமாக வாழமுடியும்.

**(9–9–1934 "பகுத்தறிவு" பக்கம் 4)**

**இயல் மூன்று**

# தேசிய இயக்கத்தில் பெரியாரின் பங்கு

**காங்கிரசில் இணைதல்**

தந்தை பெரியார் ஜில்லா போர்டு, தாலுக்கா போர்டு, தேவஸ்தானம், போர்நிதி, அர்பன் பாங்க், ஆனரரி மாஜிஸ்திரேட், வணிகர் சங்கம், சங்கீத சபை, விவசாயிகள் சங்கம், நாயுடு சங்கம், வாசகசாலை, மகாஜன ஹைஸ்கூல், சமரசக் கமிட்டி, சண்டைக்கு ஆள் சேர்க்கும் கமிட்டி உள்ளிட்ட 29 பதவிகளை வகித்தார். ஈரோட்டில் ராமசாமியார் சேர்மென், சேலத்தில் திருவாளர் சி.ராஜகோபாலாச்சாரியார் சேர்மென். இவர் அடிக்கடி ஈரோட்டுக்குச் செல்வதுண்டு. அங்கு நகரசபை நிர்வாகத்தைக் கண்டு மிகவும் புகழ்ந்து பேசுவார்.

திரு.வரதராஜலு நாயுடுவும், திரு.ராஜகோபாலாச்சாரியாரும் அடிக்கடி பெரியாரின் வீட்டிற்குச் செல்வது வழக்கம். அதன் பயனாகவும், பொதுநிலையங்கள் பலவற்றில் ஏற்கெனவே தொடர்பு வைத்துக் கொண்டு ஊக்கமாய் வேலை செய்து வந்த பழக்கத்தினாலும் அவ்விருவரும் பெரியாரை காங்கிரசிற்கு இழுத்தார்கள். சி.ராஜகோபாலாச்சாரியாரும், பெரியாரும் சேர்ந்தார்போல் சேர்மென் பதவிகளை ராஜினாமாச் செய்தார்கள். “தமிழ்நாட்டில் காங்கிரஸ் இயக்கம் என்ற கரு வளர்வதற்கான மூல விதையைக் கரத்தினில் ஏந்தி மண்ணில் விதைத்துத் தண்ணீர் வார்த்து அது முளைவிட்டு இலைவிட்டு கிளைவிட்டு ஆணிவேர் சல்லிவேர் பரப்பி ஆலவிருட்சமாய் விழுதுகள் இறங்கித் தழைத்துச் செழித்துக்

கொழுத்துப் படர ஒரே காரணகர்த்தா தந்தை பெரியார்'' என்று கவிஞர் கருணானந்தம் அவர்கள் வடித்த எழுத்தோவியத்தைப் படித்தால் காங்கிரஸ் வளர பெரியார் செய்த தொண்டும் தியாகமும் புரியும். 1922 முதல் 1924 வரை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும் பெரியார் இருந்தார்.

**கதர் பரப்பல்**

பெரியார் கதர் வளர்ச்சிக்காக ராட்டினத்தைத் தூக்கிக் கொண்டு ஊர் ஊராகச் சுற்றி வந்தார். கதர் மூட்டை தூக்கி விற்றார். அந்நிய நாட்டுத் துணியை விலக்க வேண்டுமென்பதற்கும், கதரையே அணிய வேண்டுமென்பதற்கும் இவர் சொல்லும் விதவிதமான காரணங்கள் கேட்பவர்கள் மனதை அவ்வினாடியிலேயே கவ்வி விடும். சுருங்கக் கூற வேண்டுமானால் தமிழ்நாட்டில் இன்று கதர் உடுத்துபவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேரும், இதுவரையில் கதர் உடுத்தி இப்போது கைவிட்ட பல்லாயிரக்கணக்கானவரும் பெரியாரின் சொற்பொழிவைக் கேட்டுக் கதர் அணிந்தவர்களேயாவார்கள். தந்தை பெரியார் அவர்கள் தம் கை வீங்கும் அளவிற்கு நூல் நூற்றதால் காந்தியார் "இனி நீங்கள் இராட்டினத்தைப் பயன்படுத்த வேண்டாம். உங்களுக்கு விதிவிலக்கு அளிக்கிறேன்'' என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

**ஒத்துழையாமை இயக்கம்**

ஒத்துழையாமையில் ஈடுபட்டிருந்த காந்தியார் கோர்ட்டுகளை விலக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அதை செயலில் காட்டியவர் தந்தை பெரியார் ஆவார். இக்கொள்கையின் பயனாய்த் தம் குடும்பத்திற்கு வரவேண்டிய சுமார் 50,000 ரூபாயை இழந்தார். அதில் 28,000 ரூபாய்க்கு ஓர் அடமானப் பத்திரம் இருந்தது. ஒத்துழையாமை காரணமாகக் கோர்ட்டுக்குப் போய் அதை வசூலிக்க பெரியார் விரும்பவில்லை. காங்கிரசுக்குத் தலைவராகயிருந்த சேலம் சி.விஜயராகவாச்சாரியார் அவர்கள் இதையறிந்தார். இந்தப் பத்திரத் தொகைக்காக தாவா செய்ய உமக்கு இஷ்டமில்லையானால் நீர் அதை 'மேடோவர்' (மாற்றி) செய்து கொடுத்து விடும். நான் இனாமாகவே வாதாடி வசூல் செய்து தருகிறேன். அந்தப் பணத்தையடைய உமக்கு இஷ்டமில்லையானால் வசூல் செய்ததும் அதை திலகர் சுயராஜ்ய நிதிக்காவது கொடுத்துவிடும் என்று பெரியாரிடம் வலியுறுத்திக்

கேட்டார். ஆயினும் அவர் இணங்கவில்லை. அவ்வளவு பெரிய தொகையை மனதார இழந்தார். அதுசமயம் அவர் திரு.விஜயராகவாச்சாரியாருக்குச் சொன்னதாவது, “நானே வழக்காடுவதும் ஒன்றுதான் உங்களிடம் எழுதிக் கொடுத்து வழக்காடச் செய்வதும் ஒன்றுதான். இது என் கொள்கைக்கு ஒத்ததல்ல. கொள்கையே பெரிது! பணம் பெரிதல்ல, என்பதாகும்.

ஒரு பொதுக் கூட்டத்தில் இந்த பிரஸ்தாபம் வந்தபோது இந்தச் சேதி உண்மையா? என்று திருச்சி தோழர் ச.ம.சி.பரமசிவம் அவர்கள் சேலம் திரு.விஜயராகவாச்சாரியாருக்கு கடிதம் எழுதிக்கேட்டார். அதற்கு விஜயராகவாச்சாரியார் “ஆம்” என்று பதில் எழுதியதோடு பெரியாரின் விஷயத்தில் இதைப்பற்றி தமக்கு எழுதிக்கேட்டது அதிசயமாயிருந்ததென்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

**மதுவிலக்கு**

மதுவிலக்குப் பிரச்சாரம் மும்முரமாக நடந்தபோது காந்தியார் “கள்ளுக்கு உதவும் மரங்களையெல்லாம் வெட்டிவிட வேண்டும்” என்று கட்டளையிட்டார்.

இதைக் கேட்ட பெரியார் தமது தோட்டங்களிலிருந்த 500 தென்னை மரங்களையும் வெட்டி சாய்த்தார். அக்காலத்தில் காந்தீய வெறியினால் தென்னைகளை வெட்டி வீழ்த்தியவர்களில் இவரே தலைசிறந்தவர் என்று கூறலாம்.

1921ஆம் ஆண்டில் கள்ளுக்கடை மறியல் மிகவும் புகழ் பெற்றது. ஈரோட்டில் மறியல் மும்முரம் மிகுதி. ஈ.வெ.ரா. மறியலைத் தலைமை தாங்கி நடத்தியவர். இதற்காக 144 தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது. மறியல்காரர்கள் தடையுத்தரவைப் பொருட்படுத்த வில்லை. எண்ணற்ற தொண்டர்கள் சிறை புகுந்தனர். 1921 நவம்பரில் பெரியாரும் – அவரோடு சுமார் 100 தொண்டர்களோடு சிறை பிடிக்கப்பட்டனர்.

ஒரு மாதம் தண்டனை பெற்றார். இதனால் ஊரெங்கும் அமளி; நாடெங்கும் கலவரம். இச்சமயம் நாகம்மையாரும், பெரியாரின் தங்கை கண்ணம்மாளும் மறியலுக்குப் புறப்பட்டனர். இவர்களுடன் பல பெண்களும் தொடர்ந்தனர். மறியல் செய்பவர்களில் ஒரு நாளில் ஆயிரக்கணக்கில் பெருகினர். நாகம்மையாரும் அவருடன் சென்ற

தோழர்களும் சிறைப்படுத்தப்பட்டால், ஈரோட்டின் நிலைமை மிக்க மோசமாகி, 10,000 பேர்களுக்கு சிறை வேண்டியிருக்குமென்று அதிகாரிகள் கருதி, சென்னை அரசாங்கத்துக்குத் தந்தி கொடுத்து முன்னறிவுடன் தடை உத்தரவை நீக்கினர். அச்சமயம் சர்க்கார் 144க்கு மதிப்பற்று வாய்தா காலத்திற்குள் ரத்து செய்யப்பட்டது இது ஒன்றேயாகும். இச்சம்பவத்திற்குப் பிறகு, தமிழ்நாட்டில் கள்ளுக்கடை மறியல் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்து விட்டது.

இச்சமயம், பொதுவாகவே இந்தியாவில் நடந்துவந்த ஒத்துழையாமை கிளர்ச்சி சம்பந்தமாகக் காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்கும் ஒரு சமாதான ஒப்பந்தப் பேச்சு நடைபெற்றது. இதற்காக பம்பாயில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அதற்குக் காலஞ்சென்ற சர்.சங்கரன் நாயர் தலைவர். இம்மாநாட்டின் பெயர் மாளவியா மாநாடு. இம்மாநாட்டின் நடவடிக்கை தொடங்கப்படும் முன்பு திரு.பண்டிட் மாளவியா அவர்களும் சர்.சங்கரன் நாயர் அவர்களும் மறியலை நிறுத்திவிட்டு நடவடிக்கை தொடங்கலாம் என்று காந்தியாரை கேட்டுக் கொண்டார்கள். அப்போது காந்தியார் மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை. அது ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்களிடம் இருக்கிறது. அவர்களை கேட்க வேண்டும் என்று பதிலுரைத்தார். இச்செய்தி 19.1.1922ஆம் தேதி வெளியான ஹிந்து பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. காந்தியார் இவ்வாறு சொன்னதற்குக் காரணம் பெரியாரின் மனைவி நாகம்மையார், அவருடைய தங்கை கண்ணம்மாள் ஆகிய இரு பெண்மணிகளும் மறியலுக்கு முக்கிய காரணமானவர்கள். ஆதலால், அவர்களின் கருத்தையறிந்த பின்பே முடிவு செய்ய வேண்டுமென்று கருதிக் கூறியதேயாகும்.

கள்ளுக்கடை மறியல் செய்வதாக முதன்முதலில் முடிவு செய்த இடம் ஈரோடுதான். பெரியார் அவர்கள் வீட்டில் காந்தியார் முதலிய தலைவர்கள் கூடின காலத்தில் கள்ளுக்கடை மறியல் செய்ய வேண்டுமென்று பேசி முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவுக்கு அடிப்படை தந்தை பெரியாரின் முழு ஆதரவேயாகும்.

■

# தேசிய இயக்கத்தில் பெரியாரின் பங்கு

– நம். சீனிவாசன் –

1) **தந்தை பெரியார் காங்கிரசில் உறுப்பினராகச் சேர்ந்த ஆண்டு எது?**
அ) 1909 ஆ) 1914 இ) 1919 ஈ) 1924

2) **தந்தை பெரியார் காங்கிரசில் தீவிரமாகப் பணியாற்றிய காலம் எது?**
அ) 1920–1925 ஆ) 1925–1930 இ) 1930–1935 ஈ) 1935–1940

3) **தந்தை பெரியாரைக் காங்கிரசில் ஈடுபடத் தூண்டியவர்கள் யார்?**
அ) இராஜகோபாலாச்சாரியார் ஆ) காந்தி–நேரு
இ) பாரதியார்–சத்தியமூர்த்தி ஈ) தியாகராயர் செட்டியார்– டி.எம்.நாயர்

4) **தந்தை பெரியார் காங்கிரசில் சேர்ந்தவுடன் . . . . . . . . . . . .**
அ) அமைச்சர் பதவியேற்றார்
ஆ) கவர்னர் பதவியேற்றார்
இ) தாம் வகித்து வந்த 9 கவுரவப் பதவிகளைத் துறந்தார்
ஈ) தாம் வகித்து வந்த 29 கவுரவப் பதவிகளைத் துறந்தார்

5) **ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிராகப் பெரியாரைத் துணைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட சங்கத்தின் பெயர்**
அ) ஹோம் ரூல் இயக்கம்
ஆ) சென்னை மாகாணச் சங்கம்
இ) தென்னிந்திய நல உரிமைச் சங்கம்
ஈ) அதி தீவிரவாதிகள் சங்கம்





**6) ஹோம் ரூல் இயக்கத்தை எதிர்த்துப் பெரியாரைத் துணைத் தலைவராகக் கொண்டு தொடங்கப்பட்ட சங்கத்தின் பெயர் யாது?**

அ) தென்னிந்திய நல உரிமைச் சங்கம்

ஆ) அதி தீவிரவாதிகள் சங்கம்

இ) ஹோம் ரூல் இயக்கம்

ஈ) சென்னை மாகாணச் சங்கம்

**7) காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கம் தந்தை பெரியாரைக் கவர்ந்திடக் காரணம்**

அ) தீண்டாமை விலக்கும் சாதிபேத ஒழிப்பும்

ஆ) உத்தியோக விலகல்

இ) சட்டசபைக்குப் போவதோ பதவியேற்பதோ கூடாது

ஈ) இவை அனைத்தும்

**8) பஞ்சாப் படுகொலையைக் கண்டித்து நாடெங்கும் பிரச்சாரம் செய்த தமிழ்த் தலைவர்?**

அ) பாரதியார் ஆ) தந்தை பெரியார்

இ) காமராசர் ஈ) சத்திய மூர்த்தி அய்யர்

**9) தமிழ் நாட்டில் கதர் இயக்கத்தைப் பலமடையச் செய்தவர் யார்?**

அ) தந்தை பெரியார் ஆ) இராசகோபாலாச்சாரியார்

இ) பனகல் அரசர் ஈ) கைவல்ய சாமியார்

**10) "தமிழ் நாட்டில் காங்கிரஸ் இயக்கம் என்ற கரு வளர்வதற்கான மூல விதையைக் கரத்தினில் ஏந்தி மண்ணில் விதைத்துத் தண்ணீர் வார்த்து அது முளைவிட்டு இலைவிட்டு கிளைவிட்டு ஆணிவேர் சல்லிவேர் பரப்பி ஆலவிருட்சமாய் விழுதுகள் இறக்கித் தழைத்துச் செழித்துக் கொழுத்துப் படர ஒரே காரணகர்த்தா தந்தை பெரியார்" என்று எழுத்தோவியம் வடித்தவர்**

அ) திரு.வி.க. ஆ) பாரதிதாசன்

இ) சாமி.சிதம்பரனார் ஈ) கவிஞர் கருணானந்தம்

**11) தந்தை பெரியார் அவர்களால் திறந்து வைக்கப் பெற்ற திருச்செங்கோடு கதர் அங்காடியில் பணியாற்றிய எழுத்தாளர்**

அ) கல்கி ஆ) மறைமலையடிகள்

இ) ம.பொ.சி. ஈ) புதுமைப்பித்தன்

**12)** **கை வீங்குகின்ற அளவுக்கு நூல் நூற்றதால் "இனி தக்ளி இராட்டினத்தைப் பயன்படுத்த வேண்டாம். உங்களுக்கு விதி விலக்கு அளிக்கிறேன்" என்று பெரியாரிடம் கூறிய தேசியத் தலைவர் யார்?**

அ) மோதிலால் நேரு  ஆ) ஜவகர்லால் நேரு
இ) சுபாஷ் சந்திர போஸ்  ஈ) காந்தி

**13)** **காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்தின் நீதிமன்றப் புறக்கணிப்புக் கொள்கையின்படி தந்தை பெரியார் துறந்த தொகை எவ்வளவு?**

அ) 12000  ஆ) 16000  இ) 19000  ஈ) 50000

**14)** **கள் தயாரிக்க உதவும் மரத்தை வெட்டச் சொன்ன காந்தியாரின் கட்டளையை ஏற்று ஒரே நாளில் பெரியார் வெட்டிச் சாய்த்த தென்னைமரங்களின் எண்ணிக்கை எவ்வளவு?**

அ) 40  ஆ) 400  இ) 500  ஈ) 1500

**15)** **தந்தை பெரியார் ஈரோட்டில் கள்ளுக்கடை மறியல் செய்து சிறை சென்ற ஆண்டு எது?**

அ) நவம்பர் 1921  ஆ) நவம்பர் 1925
ஈ) நவம்பர் 1929  ஈ) டிசம்பர் 1930

**16)** **கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற பெண்மணிகள்**

அ) கஸ்தூரிபாய்–வள்ளியம்மை
ஆ) சாரதா தேவி–நிவேதிதா
இ) அன்னிபெசன்ட் அம்மையார்–விஜயலெட்சுமி பண்டிட்
ஈ) கண்ணம்மாள்–நாகம்மையார்

**17** **"கள்ளுக்கடை மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை. அது ஈரோட்டில் உள்ள இரு பெண்களிடம் (கண்ணம்மாள், நாகம்மையார்) இருக்கிறது அவர்களைத்தான் கேட்க வேண்டும்". இது யாருடைய கூற்று?**

அ) காந்தி  ஆ) நேரு
இ) சங்கரன் நாயர்  ஈ) மாளவியா

**18)** **"கள்ளுக்கடை மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை, அது ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்களிடம் (கண்ணம்மாள், நாகம்மையார்) இருக்கிறது. அவர்களைத்தான் கேட்கவேண்டும்" என்று பம்பாயில் நடைபெற்ற மாநாட்டில் காந்தியார் கூறிய கருத்து எப்போது, எந்த பத்திரிகையில் வெளியானது?**

அ) 19.1.1922 தி ஹிந்து  ஆ) 19.1.1922 இந்தியன் எக்ஸ்பிரஸ்
இ) 19.1.1922 சுதேசமித்திரன் ஈ) 19.1.1922 யங் இந்தியா





**19) கள்ளுக்கடை மறியல் போராட்டம் நடத்துவது தொடர்பாகக் காந்தியாரும் காங்கிரஸ் தலைவர்களும் கூடி முடிவு செய்த இடம்**

அ) சபர்மதி ஆசிரமம் ஆ) வார்தா

இ) ஈரோடு பெரியார் இல்லம் ஈ) சேவா கிராமம்

**20) தந்தை பெரியார் கதர் பிரச்சாரம் செய்த போது சென்னையில் பேசிய பேச்சுக்காக அரசு வெறுப்பு, வகுப்பு வெறுப்பு குற்றம் சாட்டப்பட்டுச் சென்னை சிறையில் அடைக்கப்பட்ட நாள் எது?**

அ) 11.9.1902 ஆ) 11.9.1924 இ) 11.9.1935 ஈ) 11.9.1946

**21) நீதிக்கட்சியின் செல்வாக்கைக் குறைக்கத் தந்தை பெரியார் 1919 ஆம் ஆண்டு ஈரோட்டில் நடத்திய மாநாடு?**

அ) தமிழர் மாநாடு

ஆ) சுயமரியாதை மாகாண மாநாடு

இ) சென்னை மாகாணச் சங்க மாநாடு

ஈ) பார்ப்பன ஆதிக்க ஒழிப்பு மாநாடு

**22) 1922 ஆம் ஆண்டு தந்தை பெரியாரின் ஈரோடு இல்லத்தில் தங்கிச் சென்ற காங்கிரஸ் தலைவர் . . . . . . . . . . . . . . . . .**

அ) பண்டித மோதிலால் நேரு ஆ) வித்தல் பாய் பட்டேல்

இ) டாக்டர் அன்சாரி ஈ) மூவரும்

**23) தந்தை பெரியார் ஈரோட்டில் 1922 முதல் 1924 வரை 30 மாணவர்களுக்கு . . . . . . . . . . . . . . . . . . . . . கற்பிக்கும் பள்ளியினைத் தம் சொந்தச் செலவில் நடத்தி வந்தார்**

அ) தமிழ் ஆ) மலையாளம்

இ) சமஸ்கிருதம் ஈ) இந்தி

**24) அரசுடன் ஒத்துழைத்துச் சட்டமன்றங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்க வேண்டும் என்ற கருத்துடன் சித்தரஞ்சன் தாஸ் தலைமையில் தொடங்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியை எதிர்த்தவர் யார்?**

அ) காந்தி ஆ) பெரியார்

இ) ராஜகோபாலாச்சாரியார் ஈ) மூவரும்

**25) தந்தை பெரியாருக்கு "வைக்கம் வீரர்" என்று பட்டம் அளித்தவர் யார்?**

அ) காந்தி ஆ) சாமி.சிதம்பரனார்

இ) திரு.வி.க. ஈ) அண்ணா

**26) வைக்கம் போராட்டம் என்பது . . . . . . . . . . . . . . . .**

அ) கோயில் நுழைவுப் போராட்டம்
ஆ) கோயிலைச் சுற்றி இருந்த தெருக்களிலே தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்டவர்களுக்கு நடக்க உரிமை வேண்டி போராட்டம்
இ) தேச விடுதலைப் போராட்டம்
ஈ) உப்பு சத்தியாக்கிரகம்

**27) வைக்கம் போராட்டத்திற்குப் புறப்படும் போது தந்தை பெரியார் தலைவர் பதவியை யாரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றார்?**

அ) திரு.வி.க. ஆ) வ.வே.சு அய்யர்
இ) வரதராஜுலு (நாயுடு) ஈ) ராஜகோபாலாச்சாரியார்

**28) வைக்கம் மகாதேவர் ஆலயத்திலிருந்து 100 கெஜ தூரத்தில் ஒரு விளம்பரப் பலகையில் எழுதப்பட்டிருந்த வாசகம்**

அ) தீண்டத்தகாதவர்கள் இங்கிருந்து கும்பிடலாம்
ஆ) தீண்டத்தகாதவர்கள் இதற்கப்பால் பிரவேசிக்கக் கூடாது
இ) தீண்டத்தகாதவர்கள் மேலாடையின்றி உள்ளே போகலாம்
ஈ) தீண்டத்தகாதவர்கள் கழுத்தில் கலயத்தைக் கட்டிக் கொண்டுப் போகலாம்

**29) வைக்கம் போராட்டத்தில் பங்கேற்க பெரியாருக்கு தந்தி கொடுத்தவர். . . . .**

அ) ஜார்ஜ் ஜோசப் ஆ) டி. எம். நாயர்
இ) கே. கேளப்பன் ஈ) நீலகண்டன் நம்பூதிரி

**30) வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்ளப் பெரியாரை அழைத்திடக் காரணம் . . . . . . . . . . . . . . . .**

அ) தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர்
ஆ) தீண்டாமையை ஒழிப்பதில் தீவிரமானவர் என்பதால்
இ) திருவாங்கூர் அரசருக்கு நண்பர் என்பதால்
ஈ) காந்தியாரின் நம்பிக்கைக்கு உரியவர் என்பதால்

**31) வைக்கம் போராட்டத்தில் பெரியார் கைது செய்யப்பட்ட நாள் எது?**

அ) 22.4.1923 ஆ) 22.4.1924 இ) 22.4.1925 ஈ) 22.4.1929

**32) வைக்கம் போராட்டத்தில் ஒரு மாத சிறைத் தண்டனை பெற்ற பெரியார் எந்தச் சிறையில் அடைக்கப்பட்டார்?**

அ) அருவிக்குத்தி ஆ) திருவாங்கூர் சென்ட்ரல் ஜெயில்
இ) அந்தமான் சிறை ஈ) சென்னை மத்திய சிறை

**33) வைக்கம் போராட்டத்தில் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை பெற்ற பெரியார் எந்தச் சிறையில் அடைக்கப்பட்டார்?**

அ) அருவிக்குத்தி ஆ) திருவாங்கூர் சென்ட்ரல் ஜெயில்

இ) பெல்லாரி சிறை ஈ) அந்தமான் சிறை

**34) வைக்கம் போராட்டத்தில் ஒரு மாத சிறைத் தண்டனை அனுபவித்து வெளிவந்த தந்தை பெரியார் . . . . . . . .**

அ) போராட்டத்தை நிறுத்திக் கொண்டார்

ஆ) ஈரோட்டுக்குத் திரும்பினார்

இ) காந்தியாரின் ஆதரவை வேண்டினார்

ஈ) நாடு கடத்தல் உத்தரவை மீறி மீண்டும் கைதானார்

**35) வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியாருடன் கைது செய்யப்பட்டவர்**

அ) காந்தி ஆ) ராஜகோபாலாச்சாரி

இ) அய்யாமுத்து ஈ) காமராசர்

**36) வைக்கம் போராட்டத்தில் பெரியார் கைது செய்யப்பட்டவுடன் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி எழுச்சியூட்டிய பெண்மணிகள் . . . . . . . . . . . . . . .**

அ) கஸ்தூரிபாய்–அன்னிபெசன்ட்

ஆ) நாகம்மையார்–கண்ணம்மாள்

இ) மணியம்மையார்–திருமதி பிட்

ஈ) எவருமில்லை

**37) வைக்கம் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு ஆறுமாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட தந்தை பெரியார்.......**

அ) சிறைக்குச் செல்லாமல் புதுவையில் தலைமறைவானார்

ஆ) கைது செய்யப்பட்டு 6 மாதத்திற்கு மேல் சிறையில் இருந்தார்

இ) நான்கு மாதத்திலேயே விடுதலை செய்யப்பட்டார்

ஈ) இவற்றில் எதுவுமில்லை

**38) "வைக்கம் சத்தியாக்கிரகத்தைக் கைவிடுங்கள். அதை நடத்தாதீர்கள். தேவையில்லை. அதற்குப் பதிலாக மனமாற்றத்தை உண்டாக்க வேண்டும். மற்ற மதக்காரர்கள் இப்போராட்டத்தில் ஈடுபடக் கூடாது" என்று கூறிப் போராட்டத்திற்கு எதிராகச் செயல்பட்டவர் யார்?**

அ) காந்தி ஆ) காமராசர்

இ) நேரு ஈ) சுபாஷ்சந்திரபோஸ்

**39) பொருத்துக**

காந்தி – வைக்கம் சத்தியாக்கிரகத்தைக் கைவிடுங்கள்
பெரியார் – தீண்டாமையை ஒழிக்க இதுதான் நல்ல வாய்ப்பு
ராஜகோபாலாச்சாரி – கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த ஜோசப் இதில் ஈடுபடக்கூடாது
டி.கே.இரவீந்திரன் – ஈ.வெ.ராமசாமி நாயக்கரின் தலைமை இயக்கத்திற்குப் புத்துயிர் ஊட்டியது

அ) அனைத்தும் சரி ஆ) அனைத்தும் தவறு
இ) 1 மற்றும் 3 மட்டும் சரி ஈ) 1 மட்டும் தவறு

**40) பெரியார் வைக்கம் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தியதைக் கூட்டத்திலிருந்து வேடிக்கை பார்த்த தொண்டன் நான் - இது யார் கூற்று?**

அ) அண்ணா ஆ) காமராசர்
இ) இராசகோபாலாச்சாரி ஈ) அய்யாமுத்து

**41) வைக்கம் போராட்டத்தில் பெரியார் குதித்த நாள் எது?**

அ) 14.4.1919 ஆ) 14.4.1924
இ) 14.4.1927 ஈ) 14.4.1929

**42) தந்தை பெரியார் வைக்கம் போராட்டச் சத்தியாக்கிரகத் தலைமை யகத்திற்குத் தளபதியாக (O.C.) பொறுப்பேற்ற நாள் எது?**

அ) 17.4.1919 ஆ) 17.4.1924 இ) 17.4.1927 ஈ) 17.4.1929

**43) தந்தை பெரியார் கலந்து கொண்ட வைக்கம் வெற்றிவிழாக் கூட்டம் நடைபெற்ற நாள் எது?**

அ) 29.11.1920 ஆ) 29.11.1925 இ) 29.11.1927 ஈ) 29.11.1929

**44) வைக்கத்தில் இந்திரா காந்தி, மணியம்மையார், ஆசிரியர் கி.வீரமணி ஆகியோர் கலந்து கொண்ட வைக்கம் போராட்ட பொன்விழா நடைபெற்ற நாள் எது?**

அ) 26.4.1970 ஆ) 26.4.1975 இ) 26.4.1980 ஈ) 26.4.1984

**45) “வைக்கம் போராட்டக்காரர்கள் என்னை நம்பிக் கொண்டிருப்பார்களானால் ஒடிந்து நாணல் குச்சியின்மீது சாய்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும். அவர்களிடமிருந்து நான் பத்திரமாக தூரத்தில் வசித்து வருகிறேன்.” இது யாருடைய கூற்று?**

அ) காந்தி ஆ) நேரு
இ) தந்தை பெரியார் ஈ) ஜோசப்

**46) பொருத்துக**

**பெரியார் சிறைப்படுத்தப்பட்ட ஆண்டு**

1) கள்ளுக்கடை மறியல் – 1921

2) கதர்ப் பிரச்சாரம் – 1924

3) தீண்டாமை எதிர்ப்பு –1924

அ) அனைத்தும் சரி ஆ) அனைத்தும் தவறு

இ) 1 மற்றும் 2 சரி ஈ) 2, 3 தவறு

**47) தந்தை பெரியார் தொடங்கிய முதல் "குடிஅரசு" இதழ் வெளிவந்த நாள் எது?**

அ) 2.5.1923 ஆ) 2.5.1925 இ) 2.5.1928 ஈ) 2.5.1930

**48) பெரியாரின் "குடி அரசு" வார இதழினை வெளியிட்டு உரை நிகழ்த்தியவர் யார்?**

அ) ஞானியார் சுவாமிகள் ஆ) கைவல்யம்

இ) மறைமலை அடிகள் ஈ) காந்தியடிகள்

**49) தந்தை பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த ஆண்டு எது?**

அ) 1920 மற்றும் 1921 ஆ) 1922 மற்றும் 1924

இ) 1925 மற்றும் 1927 ஈ) 1926 மற்றும் 1928

**50) தந்தை பெரியார் காங்கிரஸ் கட்சிச் செயலாளராக இருந்த ஆண்டு எது?**

அ) 1920 ஆ) 1925 இ) 1927 ஈ) 1929

**51) கள்ளுக்கடை மறியல் செய்து தந்தை பெரியார் எந்த ஊர்ச்சிறையில் அடைக்கப்பட்டார்?**

அ) ஈரோடு ஆ) சென்னை இ) வேலூர் ஈ) கோவை

**52) 1925 இல் வெளியிடப்பட்ட "குடிஅரசு" இதழ் எப்போது அரசிடம் பதிவு செய்யப்பட்டது?**

அ) 19.1.1923 ஆ) 19.1.1924 இ) 19.1.1925 ஈ) 18.5.1925

**53) பெரியார் நடத்திய "குடிஅரசு" இதழின் தலைப்புப் பகுதியில் இடம் பெற்ற படம் எது?**

அ) பகுத்தறிவுச் சுடர் ஆ) பெரியாரின் படம்

இ) குத்து விளக்கு ஈ) ராட்டினம்

**54) காந்தி நெசவு நெய்யும் படம் “குடி அரசு” இதழில் பிரசுரிக்கப்பட்ட ஆண்டு எது?**

அ) 1923–1924 ஆ) 1925–1927 இ) 1928–1930 ஈ) 1931–1934

**55) தந்தை பெரியார் பாரதமாதா படத்தை முகப்பில் போட்டு வெளியிட்ட பத்திரிகை எது?**

அ) குடிஅரசு ஆ) விடுதலை
இ) உண்மை ஈ) மாடர்ன் ரேஷனலிஸ்டு

**56) 18.4.1926 முதல் 25.12.1927 வரை “குடி அரசு” இதழின் முதல் பக்கத் தலைப்பில் இடம் பெற்ற முழக்கம் எது?**

அ) தமிழ் வாழ்க ஆ) பகுத்தறிவு வெல்க
இ) மனிதநேயம் காப்போம் ஈ) மகாத்மா காந்தி வாழ்க

**57) காங்கிரசிலிருந்து தந்தை பெரியார் வெளியேறிய பிறகும் . . . . . . ஆண்டுவரை காந்தியாரின் நிர்மாணத் திட்டங்கள்மீது பெரியார் மதிப்பு வைத்திருந்தார்?**

அ) 1926 ஆ) 1927 இ) 1930 ஈ) 1932

**58) வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியாரின் கருத்தைக் கேட்பதற்கு பெரியாரைக் காந்தி சந்தித்த இடம் எது?**

அ) திருவனந்தபுரம் ஆ) அருவிக்குத்தி
இ) பெங்களூர் ஈ) கொட்டாரம்

**59) காந்தி – பெரியார் சந்திப்பு பெங்களூரில் எப்போது நடை பெற்றது?**

அ) ஆகஸ்டு 1927 ஆ) ஆகஸ்டு 1930
இ) ஆகஸ்டு 1937 ஈ) ஆகஸ்டு 1947

**60) வைக்கம் போராட்டத்ததிற்குக் காங்கிரஸ் முதன்முதலாக எப்போது ஆதரவு தெரிவித்தது?**

அ) 26.12.1923 ஆ) 26.12.1924 இ) 26.12.1925 ஈ) 1.2.1924

**61) வைக்கம் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த பெல்காம் காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் யார்?**

அ) காந்தி ஆ) நேரு
இ) பெரியார் ஈ) ராஜகோபாலாச்சாரியார்

**62) குருகுலப் போராட்டம் நடைபெற்ற ஆண்டு**

அ) 1922 ஆ) 1925 இ) 1929 ஈ)1932

**63) சேரன்மாதேவியில் வ.வே.சு. அய்யர் நடத்திய குருகுலம் மாணவர்களிடையே . . . . . . . . . . . . . . . .**
அ) தேசிய உணர்வை ஏற்படுத்தியது
ஆ) ஜாதிபேதத்தை ஏற்படுத்தியது
இ) பகுத்தறிவு உணர்வை ஊட்டியது
ஈ) தீவிரவாத உணர்ச்சியை உண்டாக்கியது

**64) "குடி அரசு" இதழைப் பெரியார் துவக்கியது.....**
அ) சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கியப் பின்
ஆ) நீதிக் கட்சி தலைவரான பின்
இ) காங்கிரசில் இருந்தபோதே
ஈ) 2ஆம் உலகப் போரின்போது

**65) தந்தை பெரியார் "காங்கிரசிலிருந்தபோது ஜாதிப்பிரச்சினைக்குப் பிரிட்டிஷ்காரர் இங்கு இருக்கும்போதே முடிவு காணவேண்டும் இல்லையெனில் ஜனநாயகத்திற்குப் பதில் பார்ப்பனநாயகம்" நிலவும் என்று பேசிய ஊர் எது?**
அ) சேலம் ஆ) ஈரோடு இ) திருச்சி ஈ) தஞ்சை

**66) தந்தை பெரியார் "காங்கிரசிலிருந்தபோது ஜாதிப்பிரச்சினைக்குப் பிரிட்டிஷ்காரர் இங்கு இருக்கும்போதே முடிவு காணவேண்டும் இல்லையெனில் ஜனநாயகத்திற்குப் பதில் பார்ப்பனநாயகம் நிலவும்" என்று பேசிய ஆண்டு**
அ) 1919 ஆ) 1920 இ) 1924 ஈ) 1925

**67) தந்தை பெரியார் "காங்கிரசிலிருந்தபோது ஜாதிப்பிரச்சினைக்குப் பிரிட்டிஷ்காரர் இங்கு இருக்கும்போதே முடிவு காணவேண்டும் இல்லையெனில் ஜனநாயகத்திற்குப் பதில் பார்ப்பனநாயகம் நிலவும்" என்று பேசியனார் தந்தை பெரியார். இதற்கு மூல காரணமாக இருந்த சம்பவம்**
அ) வைக்கம் போராட்டம் ஆ) குருகுலப்போராட்டம்
இ) ஒத்துழையாமை இயக்கம் ஈ) கள்ளுக்கடை மறியல்

**68) சேரன்மாதேவி குருகுல பிரச்சினையில் காந்தியார் கருத்தையும் ஏற்காதவர் பெரியாருடன் இணைந்த மற்றொரு தலைவர் ....**
அ) பி. வரதராஜுலு ஆ) திரு.வி.க.
இ) சி. ராஜகோபாலாச்சாரி ஈ) வ.உ.சி.

**69) சேரன்மாதேவியில் பார்ப்பனரல்லாதாருக்குத் தனிப் பந்தியை எதிர்த்து காங்கிரஸ் செயற்குழுவில் நடைபெற்ற வாக்கெடுப்பில் அதற்கு ஆதரவும் எதிர்ப்பும் எப்படி இருந்தது?**
அ) 20க்கு 6 ஆ) 15க்கு 11 இ) 13க்கு 13 ஈ) 19க்கு 6

**70) சேரன்மாதேவி குருகுலப் பிரச்சினைக்குக் காந்தியார் கூறிய தீர்வு யாது?**
அ) குருகுலத்தை மூடி விட வேண்டும்
ஆ) தனித்தனியே அமர்ந்து உணவு உண்ண வேண்டும்
இ) பார்ப்பனர் சமைக்க வேண்டும்
ஈ) குருகுலப் பொறுப்பாளரை மாற்றவேண்டும்

**71) குருகுலத்தை ஒழிக்கப் பெரியார் கையாண்ட முறை யாது?**

அ) வ.வே.சு. அய்யர்மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தார்
ஆ) வ.வே.சு. அய்யரின் பார்ப்பனத் திமிரை காந்தியாரிடம் முறையிட்டார்
இ) தமிழ் மக்கள் செய்து வந்த பண உதவியை நிறுத்தச் செய்தார்
ஈ) வ.வே.சு. அய்யரைக் காங்கிரஸ் கட்சியிலிருந்து நீக்கினார்

**72) தேசிய நிலையம் எனும் பெயரில் ஜாதி பேதத்தை வளர்த்த சேரன்மாதேவி குருகுலத்தை ஒழிப்பதற்குத் தந்தை பெரியாருடன் சேர்ந்து போரிட்டவர் யார்?**

அ) டாக்டர் வரதராஜுலு ஆ) எஸ்.இராமநாதன்
இ) திரு.வி.க. ஈ) மேற்சொன்ன மூவரும்

**73) திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பார்ப்பனத் துவேஷப் பிரச்சாரம் செய்துவருவதாய்க் கூறிக் கண்டனத் தீர்மானம் யார்மீது கொண்டுவரப்பட்டது?**

அ) தந்தை பெரியார் ஆ) டாக்டர் வரதராஜுலு
இ) எஸ்.இராமநாதன் ஈ) தண்டாயுதபாணிப் பிள்ளை

**74) திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் டாக்டர் வரதராஜுலு நாயுடுமீது பார்ப்பன துவேஷப் பிரச்சாரம் செய்து வருவதாய்க் கூறி கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசித் தோற்கடிக்கச் செய்தவர் யார்?**

அ) பெரியார் ஆ) திரு.வி.க.
இ) எஸ்.ராமநாதன் ஈ) அய்யாமுத்து

**75) தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி செயலாளர் பதவிக்குப் பெரியாரை எதிர்த்துப் போட்டியிட்டவர் யார்?**

அ) ராஜகோபாலாச்சாரியார் ஆ) சீனிவாச அய்யங்கார்
இ) தியாகராயர் செட்டியார் ஈ) ஆதிநாராயணன் செட்டியார்

**76) காங்கிரஸ் கட்சியிலிருந்து பெரியார் வெளியேறக் காரணமாயிருந்த மாநாடு எது?**

அ) திருச்சி மாநாடு ஆ) காஞ்சிபுரம் மாநாடு
இ) திருநெல்வேலி மாநாடு ஈ) சென்னை மாநாடு

**77) 30 ஆம் காங்கிரஸ் மாகாண மகாநாடு காஞ்சிபுரத்தில் எப்போது நடைபெற்றது?**

அ) நவம்பர் 21,22–1923 ஆ) நவம்பர் 21,22–1924
இ) நவம்பர் 21,22–1925 ஈ) நவம்பர் 21,22–1926





**78) காங்கிரஸ் கட்சி வகுப்புரிமைக் கொள்கையினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பெரியார் போராடிய மாநாடு எது?**

அ) 1919 திருச்சி மாநாடு, 1920 திருநெல்வேலி மாநாடு

ஆ) 1921 தஞ்சை மாநாடு, 1923 திருப்பூர் மாநாடு, 1924 திருவண்ணாமலை

இ) 1925 காஞ்சிபுரம் மாநாடு

ஈ) இவை அனைத்தும்

**79) பொருத்துக**

| **மாநாடு** | – | **தலைவர்** |
|---|---|---|
| 1. திருச்சி | – | சோமசுந்தர பாரதியார் |
| 2. திருநெல்வேலி | – | சீனிவாச அய்யங்கார் |
| 3. திருவண்ணாமலை | – | தந்தை பெரியார் |

அ) அனைத்தும் சரி ஆ) அனைத்தும் தவறு

இ) 1 சரி ஈ) 2 மற்றும் 3 தவறு

**80) தந்தை பெரியார் காங்கிரசில் இருந்த போது ஆலயப் பிரசேவம் தீர்மானத்தைக் கொண்டு வந்த மாநாடு எது?**

அ) 1919 திருச்சி மாநாடு ஆ) 1921 தஞ்சை மாநாடு

இ) 1922 திருப்பூர் மாநாடு ஈ) 1925 காஞ்சிபுரம் மாநாடு

**81) திருப்பூர் காங்கிரஸ் மாகாண மாநாட்டில் தந்தை பெரியார் கொண்டு வந்த ஆலயப் பிரவேசம் தீர்மானத்தை எதிர்த்தவர் யார்?**

அ) மதுரை ஏ.வைத்தியநாதய்யர் ஆ) எஸ்.சத்தியமூர்த்தி

இ) கும்பகோணம் பந்தலு அய்யர் ஈ) மூவரும்

**82) இந்தியா விடுதலை பெற நாம் செய்யவேண்டிய காரியங்களாகக் காந்தியாரிடம் பெரியார் கூறியது யாது?**

அ) காங்கிரசை ஒழிக்க வேண்டும்

ஆ) சாதியை ஒழிக்க இந்து மதத்தை ஒழிக்க வேண்டும்

இ) பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும்

ஈ) இவை மூன்றையும் செய்யவேண்டும்

**83) இந்தியாவுக்குப் பிரிட்டிஷார் செய்த கெடுதியைவிடப் பிராமணர்கள் செய்த கெடுதி குறைவானதல்ல- இது யார் கூற்று?**

அ) காந்தி ஆ) விவேகானந்தர்

இ) காஞ்சி சங்கராச்சாரியார் ஈ) நேரு

**84) காங்கிரஸ் மாநாடுதோறும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை வலியுறுத்திப் பெரியார் கொண்டு வந்த தீர்மானத்தை நிராகரித்தவர் யார்?**

| மாநாடு | நிராகரித்தவர் |
|---|---|
| 1920 திருநெல்வேலி | எஸ்.சீனிவாசய்யங்கார் |
| 1921 தஞ்சாவூர் | ராஜகோபாலாச்சாரியார் |
| 1922 திருப்பூர் | விஜயராகவாச்சாரியார் |
| 1924 திருவண்ணாமலை | எஸ்.சீனிவாசய்யங்கார் |
| 1925 காஞ்சிபுரம் | திரு.வி.க. |

அ) அனைத்தும் தவறு ஆ) எல்லாம் சரி
இ) 1,3,5, சரி ஈ) 1,5, சரி

**85) 1920 முதல் 1925 வரை 5 ஆண்டுகளில் காங்கிரஸ் கட்சியில் பெரியார் வகித்த பதவிகள்**

அ) கோவை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்
ஆ) இரண்டு முறை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர்
இ) இரண்டு முறை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர்
ஈ) மேற்சொன்ன இவையனைத்தும்

**86) தந்தை பெரியார் காங்கிரஸ் கட்சியில் தீவிரமாக பணியாற்றிய காலம்**

அ) 6 ஆண்டுகள் ஆ) 10 ஆண்டுகள்
இ) 14 ஆண்டுகள் ஈ) 18 ஆண்டுகள்

**87) ‘ஒரு தேசம் அன்னியர்களால் ஆளப்படாமல் தன்னைத் தானே ஆண்டு கொள்ளுவதுதான் சுயராஜ்யம் என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளமுடியாது. பெரியாரின் இக்கூற்று எப்போது சொல்லப்பட்டது?**

அ) பொது வாழ்வுக்கு வரும் முன்
ஆ) காங்கிரஸ் கட்சியில் இருந்தபோது
இ) ஜஸ்டீஸ் கட்சியை ஆதரித்தபோது
ஈ) திராவிடர் கழகம் தோற்றுவிக்கப்பட்டபின்

**88) ‘சுயராஜ்யம் வேண்டுமென்றால் செல்வர் இறுமாப்பும், ஏழைகள் இழிவும், இந்து முஸ்லீம் அச்சமும், அய்யமும், உயர்ந்த வகுப்பாரின் ஆதிக்கமும், தாழ்ந்த வகுப்பார் கஷ்டங்களும் ஒழியுமாறு முயல வேண்டும். அதுவே சுயராஜ்யப் போராகும் – இது யாருடைய கூற்று?**

அ) காந்தி ஆ) தந்தை பெரியார்
இ) விக்டோரியா மகாராணி ஈ) மவுண்ட்பேட்டன்

**89) தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராகப் பெரும்பான்மையோரால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் பெரியார் மீது நம்பிக்கையில்லை என்னும் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் யார்?**

அ) இராஜகோபாலாச்சாரியார் ஆ) சீனிவாசய்யங்கார்
இ) வ.வே.சு.அய்யர் ஈ) விஜயராகவாச்சாரியார்

**90) காங்கிரசிலிருந்து பெரியார் விலகக் காரணம்**

அ) பார்ப்பனர்களின் சூழ்ச்சியான செயல்பாடுகள்
ஆ) வகுப்புவாரி உரிமைக் கொள்கையினை ஏற்காமை
இ) பார்ப்பன ஆதிக்கம்
ஈ) இவை யாவும்

**91) காங்கிரசில் பார்ப்பனர் ஆதிக்கத்தை எதிர்த்து வந்த பெரியாரிடம், உங்களை விட ஜஸ்டீஸ் கட்சிக்காரர்கள் நூறு மடங்கு தேவலாம் என்று கூறியவர் யார்?**

அ) டி.எம்.நாயர் ஆ) ராஜகோபாலாச்சாரியார்
இ) தியாகராயர் ஈ) வ.வே.சு.அய்யர்

**92) பெரியார் காங்கிரசில் இருந்து போது**

அ) வகுப்புவாரி உரிமையை வலியுறுத்தினார்
ஆ) தீண்டாமையை எதிர்த்தார்
இ) ஆலயப்பிரவேசத்தை வலியுறுத்தினார்
ஈ) இவையாவும்

**93) காங்கிரசில் இருந்தபோதே நீதிக்கட்சி ஆட்சியின் இந்தச்சட்டத்தை பெரியார் ஆதரித்தார்**

அ) வகுப்புரிமை
ஆ) இந்து அறநிலையத் துறைப் பாதுகாப்பு
இ) மருத்துவத் துறையை இந்தியர் மயமாக்கியது
ஈ) பெண்களுக்கு வாக்குரிமை

எங்களது நோக்கம் பதவிக்கோ – பெருமைக்கோ, ஆட்சி பீடத்தில் அமரவோ அல்ல. காங்கிரசாரே ஆளட்டும்; அவர்களே சட்டசபைக்குப் போகட்டும். ஆனால், வடநாட்டானுக்கு அடிமைப்பட்டிருந்தால், நாங்கள் அவ்வாட்சியை எதிர்த்தே தீருவோம். **– தந்தை பெரியார்**

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.இ | 2.அ | 3.அ | 4.ஈ | 5.ஆ | 6.ஆ | 7.ஈ | 8.ஆ | 9.அ | 10.ஈ |
| 11.அ | 12.ஈ | 13.ஈ | 14.இ | 15.அ | 16.ஈ | 17.அ | 18.அ | 19.இ | 20.ஆ |
| 21.இ | 22.ஈ | 23.ஈ | 24.ஈ | 25.இ | 26.ஆ | 27.ஈ | 28.ஆ | 29.அ | 30.ஆ |
| 31.ஆ | 32.அ | 33.ஆ | 34.ஈ | 35.இ | 36.ஆ | 37.இ | 38.அ | 39.அ | 40.ஆ |
| 41.ஆ | 42.ஆ | 43.ஆ | 44.ஆ | 45.அ | 46.அ | 47.ஆ | 48.அ | 49.ஆ | 50.ஆ |
| 51.ஈ | 52.அ | 53.ஈ | 54.ஆ | 55.அ | 56.ஈ | 57.ஆ | 58.ஈ | 59.அ | 60.ஆ |
| 61.அ | 62.ஆ | 63.ஆ | 64.இ | 65.அ | 66.இ | 67.ஆ | 68.அ | 69.ஈ | 70.இ |
| 71.இ | 72.ஈ | 73.ஆ | 74.அ | 75.ஈ | 76.ஆ | 77.இ | 78.ஈ | 79.அ | 80.இ |
| 81.ஈ | 82.ஈ | 83.அ | 84.ஆ | 85.ஈ | 86.அ | 87.ஆ | 88.ஆ | 89.இ | 90.ஈ |
| 91.ஆ | 92.ஈ | 93.ஆ | | | | | | | |

## ஆத்திகம் - நாத்திகம் இயற்கை உணர்ச்சியல்ல



ஆஸ்திகமும், நாஸ்திகமும் 100–க்கு 99 பேர்களின் அபிப்பிராயங்கள் பழக்க வழக்கங்களால்–பிறர் சொல்லிக் கொடுப்பதால்–சேர்க்கையால் ஏற்படுவதே ஒழிய, ஓர் இயற்கை உணர்ச்சியல்ல, அன்றி பசி, தூக்கம், பஞ்சேந்திரிய உணர்ச்சி ஆகியவற்றைப்போல் இயற்கையாய் ஏற்படும் எண்ணம் அன்று.

**(14-10-1934 "பகுத்தறிவு" பக்கம் 13)**

**இயல் நான்கு**

# சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சிப் பருவம் 1925-1931

சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம் வளர்ச்சிப் பருவம் (1925-1931) பாடத்தின் வினா - விடை பகுதியில் 144 வினா விடைகள் தொகுக்கப்பட்டுள்ளது. இவற்றில் வரலாற்று சிறப்புமிக்க பல்வேறு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

வினா - விடையில் இடம்பெற்றுள்ள

சுயமரியாதை இயக்கம்

குடி அரசு

வகுப்புவாரி உரிமை

ஆகியவை குறித்து சிறு குறிப்பினைக் காண்க.

**சுயமரியாதை இயக்கம் தோற்றம்**

தந்தை பெரியார் அவர்கள் ஈரோடு நகரவைத் தலைவராக இருந்து செயற்கரிய காரியங்களாக அக்காலத்தில் கருதப்பட்ட பல காரியங்களைச் செய்தார். இதே காலத்தில் சேலத்தில் நகரவைத் தலைவராக இருந்த இராஜகோபாலாச்சாரியார், பெரியார் ஈரோடு

நகரவை சார்பில் நிகழ்த்திக் கொண்டிருக்கும் தொண்டுகளைப் பாராட்டினார். பெரியாருக்கு இயல்பில் அமைந்த தன்னலம் சிறிதும் எண்ணாத உளப்பாங்கும், தொண்டுணர்ச்சியும், பொது வாழ்வில் நல்லவற்றைச் செய்ய வேண்டுமென்ற துடிதுடிப்பும், எதிர்ப்புக்கு அஞ்சாத உளத்திண்மையும் அவருக்கு நன்கு புலனாயிற்று.

வீட்டளவிலும், ஈரோடு நகர அளவிலும் பெரு வெற்றி கண்டு விளங்கிய பெரியாரை இராஜகோபாலாச்சாரியார் – நாட்டளவிலான பொது வாழ்வுத் தொண்டுக்கு இவர் சிறந்தவர் என்று அடையாளம் கண்டு இவரைக் காங்கிரசில் சேரும்படிச் செய்தார். காங்கிரசில் சேர்ந்ததும் அக்காலத்தில் தமிழர் யாருக்கும் கிடைக்க முடியாத தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் – செயலாளர் போன்ற பொறுப்புமிக்க பதவிகள் பெரியாருக்குக் கிடைக்க வழி செய்தார். இக்காலத்தில் பெரியாரின் தன்னலம் கருதாத தொண்டின் சிறப்பு தமிழ்நாடு முழுவதும் அல்லாமல், இந்திய நாடு முழுமையிலும் பேசப்பட்டது. **ஒத்துழையாமைப் போராட்டம் – கள்ளுக்கடை மறியல் – கதர் பெருக்கும் திட்டம் – தீண்டாமை ஒழிப்பு** போன்ற காங்கிரசின் திட்டங்களை நிறைவேற்றுவதில், பெரியாருக்கு இணையாக இந்திய அளவில் யாருமில்லை என்ற புகழைப் பெரியார் பெற்றார். பெரியார் தம்முடைய பேச்சாலும், உழைப்பாலும் காங்கிரசிற்குத் தொண்டு செய்ததோடு பெரும் பணத்தைச் செலவழித்தும், கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்ற கொள்கைக்காகத் தமக்கு வரவேண்டிய பெரும் பணத்தை இழந்தும், காங்கிரசில் பணி செய்தார். காங்கிரசில் இருந்தபோது பெரியார் தமிழ்நாட்டில் வாழும் பெரும்பாலான தமிழர்களின் நன்மைக்கானவற்றைச் செய்யவே முனைந்து நின்றார். நன்மை செய்ய முடியுமென நம்பித்தான், நீதிக்கட்சியில் சேராது காங்கிரசில் சேர்ந்தார். காங்கிரசில் பயனில்லையென்று கண்டதும் காங்கிரசை விட்டு, 1925இல் வெளியேறினார்.

**இச்சூழ்நிலையில் தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்ற ஓர் இயக்கத்தை சுயமரியாதை இயக்கம் என்ற பெயரில் கண்டார். தம் கொள்கையைப் பரப்பவே குடிஅரசு என்னும் வார இதழைக் கண்டார்.**

**சுயமரியாதை இயக்கத்தின் இலக்கு**

- சமூக வாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு தாழ்வும் இருக்கக் கூடாது.
- மனித சமூகம் பொருளாதாரத் தன்மையில் ஏழை-பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுகள் இல்லாமல் எல்லாப் பொருளும் பூமியும் எல்லாருக்கும் சரிசமமாக இருத்தல் வேண்டும்.
- மக்கள் சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் சகல துறைகளிலும் சமத்துவம் இருக்க வேண்டும்.
- மனித சமூகத்தில் ஜாதி, மதம், தேசம், வருணம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக ஒற்றுமையே நிலவ வேண்டும்.
- உலகில் உழைப்பாளி என்றும் முதலாளி என்றும் உயர்வு-தாழ்வு இல்லாமல் சமூகத்தின் தேவைகளுக்கு சகல மனிதர்களும் பாடுபட்டு அவற்றின் பயனைச் சரிசமமாக அனுபவிக்க வேண்டும்.
- ஒவ்வொரு மனிதனும் எவற்றுக்கும் எவ்விதத்துக்கும் அடிமையாகாமல் அவரவர் அறிவு ஆராய்ச்சி, காட்சி, உணர்ச்சி ஆகியவைகளுக்கு இணங்கி நடக்க சர்வ சுதந்திரம் இருக்க வேண்டும் என்ற கொள்கைகளை மய்யமாக வைத்து சுயமரியாதை இயக்கத்தை உருவாக்கினார்கள்.

**குடிஅரசு இதழ் தோற்றம்**

குடிஅரசு வாரப் பத்திரிகையை ஈரோட்டில் தொடங்கினார். இதன் பதிப்பாளராக நாகம்மையார் பொறுப்பேற்றார். இவரது அச்சகத்துக்கும் ‘உண்மை விளக்கம் அச்சகம்’ என்றே பெயரிட்டார். 12.05.1925 அன்று திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் குடிஅரசு முதல் இதழை வெளியிட்டார்.

மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும்.

உயர்வு தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால் இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்து உயிர்களும் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும் என்ற நோக்கங்களை குடிஅரசு அடிப்படையாகக் கொண்டிருந்தது.

குடிஅரசு குறித்து தந்தை பெரியார் அவர்கள் “நான் ஏடு நடத்துவது என்னுடைய புகழையோ, செல்வாக்கையோ வளர்த்துக் கொள்ளவும், அதை வைத்து பிழைப்பு நடத்தவும் அல்ல. இக்கருத்துகளைச் சொல்லும் நிலையில் நான்தான் இருக்கிறேன். சொல்ல வேண்டிய கருத்துகளை நானே எழுதி, நானே அச்சுக்கோர்த்து, நானே அச்சிட்டு நானே படித்துக் கொள்ளும் நிலைக்குப் போனாலும் இழப்பை பொருட்படுத்தாமல் வெளியிடுவேன்” என்று சூளுரைத்தார்.

**முதல் மாகாண சுயமரியாதை மாநாடு**

செங்கற்பட்டில் முதல் மாகாண சுயமரியாதை மாநாடு 1929 பிப்ரவரியில் நடைபெற்றது. இம்மாநாடு W.P.A.சவுந்தர பாண்டியனாரைத் தலைவராகக் கொண்டு நடைபெற்றது. இதில் பெண்களுக்கு சொத்துரிமை உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**வகுப்பு வாரி உரிமை - கம்யூனல் ஜி.ஓ.**

1915ஆம் ஆண்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 100க்கு 7 அல்லது 9 பேர் மட்டுமே. அதில் 3 சதவீதம் உள்ள பார்ப்பனரோ தங்களில் 100க்கு 75 சதவிகிதத்திற்கு மேல் படித்திருந்தனர். மற்ற மக்கள் எல்லோரும் 100க்கு 5 சதவிகிதத்தினரே படித்திருந்தனர். பார்ப்பனரல்லாத இந்துக்களோ 100க்கு 3 சதவிகிதத்தினர்தான் படித்திருந்தனர்.

1915இல் கல்வி இலாக்காவில் இருந்த மொத்த உத்தியோகங்கள் 518. அந்த 518 இடங்களில் பார்ப்பனர் மட்டுமே 399 பேர் இருந்தனர்.

மக்கள் தொகையில் 100க்கு 3 பேராக உள்ள 3 விழுக்காடு பார்ப்பனருக்கு 399 உத்தியோகங்கள் கிடைத்திருக்கையில் 100க்கு 84 விழுக்காடு பேர்களாக உள்ள பார்ப்பனரல்லாத இந்துக்களாகிய நமக்குக் கிடைத்த உத்தியோகங்கள் 18 மட்டுமே ஆகும்.





பார்ப்பனர்களின் இந்த ஆதிக்கத்தை, தகர்த்தெறிந்த போராட்டம்தான் வகுப்புரிமை போராட்டமாகும்.

**வகுப்புரிமை குறித்து பெரியார் கருத்துகள்**

“எப்பொழுது ஒருவனுக்கு அவனுக்கு என்று தனி மதம், தனி ஜாதி, தனி வகுப்பு என்பதாக பிரிக்கப்பட்ட பின்பு அவன் தனது மதம், தனது ஜாதி, தனது வகுப்புக்கு என்று ஒரு உரிமை கேட்பதில் என்ன தப்பிதமோ அயோக்கியத்தனமோ இருக்க முடியும்?”

– குடிஅரசு, 8.11.1931

“வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது ஒரு தேசத்தின் கட்சியின் பொது உரிமையும் அந்நாட்டின் குடிமக்களின் உரிமை சகலமும் எல்லா வகுப்பாரும் ஏற்றத் தாழ்வின்றி சமமாய் நடத்த வேண்டியதென்பது தான்.”

– குடிஅரசு, 18.4.1926

“பதவிகள் வழங்குவதில், உத்தியோகம் வழங்குவதில் அரசாங்கம் எந்த ஜாதியாருக்கும் எந்த மதத்தினருக்கும் பாரபட்சம் காட்டக்கூடாது. ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு மதத்திற்கும் அதைச் சேர்ந்த மக்கள் எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறதோ அந்த எண்ணிக்கை விகிதப்படி பதவி, உத்தியோகம் முதலியவைகளை வழங்க வேண்டும்.”

– விடுதலை, 5.03.1969

என்று தனது நியாயமான மனிதநேய உணர்வுகளை தந்தை பெரியார் போராட்டமாக வடித்தெடுத்தார்.

தந்தை பெரியாரின் போராட்டத்தின் விளைவாக மிகப்பெரிய புரட்சி உருவானது. அதன் பயனே இன்று தமிழ்நாட்டில் கல்வி, வேலைவாய்ப்புகளில் சட்டப்படி நாம் அனுபவிக்கும் 69 விழுக்காடு இட ஒதுக்கீடு ஆகும்.

**தென் இந்திய நல உரிமைச் சங்கம் (நீதிக்கட்சி)**

பார்ப்பனரல்லாத மக்களின் உரிமைகளை மீட்டெடுக்க டாக்டர் நடேசன், டாக்டர் டி.எம்.நாயர், சர்.பிட்டி தியாகராயர் ஆகிய பெருமக்களின் முயற்சியில் உருவானதே நீதிக்கட்சி, ஜஸ்டிஸ் கட்சி என்று அழைக்கப்பட்ட ‘தென்னிந்திய நல உரிமைச் சங்கமாகும்’.

**நீதிக்கட்சியின் தொடர்பும் சாதனைகளும்**

காங்கிரசில் இருந்து விலகி சுயமரியாதை இயக்கத்தை தொடங்கிய பின் நீதிக்கட்சியின் செயல்பாடுகளைக் கூர்ந்து கவனித்து அவர்களின் செயல்பாடுகளை ஆதரித்தார். அதன்மூலம் சில நல்ல விளைவுகள் ஏற்பட்டன.

1928இல் முத்தையா முதலியாரால் வகுப்புவாரி உரிமை அரசாணையாக வெளியிடப்பட்டது.

1929இல் தேவதாசி ஒழிப்புச் சட்டம் டாக்டர் முத்துலெட்சுமி அவர்களால் முன்மொழியப்பட்டு 1930இல் சட்டமாக ஆனது.

1931இல் இந்தி கட்டாயப் பாடமாக சொல்லித்தரப்பட வேண்டும் என்னும் சென்னை மாநகராட்சியில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நீதிக்கட்சியினர் தோற்கடித்தனர்.

முழுமையாக ஆங்கிலேயரிடம் இருந்த மருத்துவத் துறையை தமிழர்களைக் கொண்டு மாற்றியவர் பனகல் அரசர். மருத்துவப் படிப்புக்குச் சமஸ்கிருதப் படிப்பு தேவையில்லை என்று பெரியாரின் கருத்தை ஆணையாகப் பிறப்பித்தார் பனகல் அரசர். 1928 டிசம்பர் 16இல், அவர் மறைந்தபோது “யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது சேனாதிபதி இறந்துபட்டதுபோல” என்று பனகல் அரசர் மறைவு ஆகிவிட்டது என்று தந்தை பெரியார் தெரிவித்துள்ளார்.

■

# சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சிப் பருவம் 1925-1931

– சு. அறிவுக்கரசு –

1) **இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் 1924இல் நீதிக்கட்சியினரால் கொண்டுவரப்பட்டபோது ஆதரவு தெரிவித்துப் பேசிய காங்கிரசுத் தலைவர் யார்?**

அ) குத்திகேசவப் பிள்ளை ஆ) வரதராசுலு நாயுடு

இ) பெரியார் ஈ) வ.உ.சி.

2) **"குடிஅரசு" ஏடு தொடங்கப்பட்ட நாள் எது?**

அ) 2.5.1925 ஆ) 9.1.1927

இ) 11.5.1933 ஈ) 22.11.1925

3) **"குடிஅரசு" ஏட்டின் பதிப்பாளர் யார்?**

அ) நாகம்மையார் ஆ) ஈ.வெ. கிருட்டினசாமி

இ) பெரியார் ஈ) தங்கப்பெருமாள்

4) **"குடிஅரசு" ஏட்டினைத் தொடங்கிவைத்தவர் யார்?**

அ) பெரியார் ஆ) திரு.வி.க.

இ) வ.உ.சி. ஈ) ஞானியார் அடிகள்

5) **வைக்கம் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு ஜெயம் பெறும்படி செய்த நமது தேச பக்தர் ஸ்ரீமான் ஈ.வெ.ரா. நாயக்கர் அவர்களும் மற்றுமுள்ள சத்தியாகிரகிகளும் செய்த தேச சேவையை இம்மாநாடு பாராட்டி வாழ்த்து கூறுகிறது என்கின்ற தீர்மானம் காங்கிரசுக் கட்சியின் எந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது?**

அ) கேரள காங்கிரசு மாநாட்டில்

ஆ) திருவிதாங்கூர் – கொச்சி காங்கிரசு மாநாட்டில்

இ) காஞ்சிபுரம் காங்கிரசு மாநாட்டில்

ஈ) திருவண்ணாமலை காங்கிரசு மாநாட்டில்

6) **சுயமரியாதை இயக்க முதல் மாநில மாநாட்டினைக் கூட்ட வேண்டுமென 1928இல் மதுரை, இராமநாதபுரம் பார்ப்பனர் அல்லாதார் மாநாட்டில் தீர்மானம் முன்மொழிந்தவர் யார்?**

அ) கரிவரதசாமி

ஆ) பட்டுக்கோட்டை அழகிரிசாமி

இ) சிவகங்கை இராமச்சந்திரன்

ஈ) சவுந்தரபாண்டியன்

7) **வைக்கம் போராட்டம்பற்றிக் காந்தி "யங் இந்தியா" பத்திரிகையில் எழுதிய 48 பக்கக் கட்டுரையில் வைக்கம் வீரர் பெரியார் பெயரை எத்தனை இடத்தில் குறிப்பிட்டு எழுதினார்?**

அ) ஒரு இடத்திலுமில்லை

ஆ) ஒரே ஒரு இடத்தில்

இ) மூன்று இடங்களில்

ஈ) 17 இடங்களில்

8) **எந்த விசயம் எப்படியிருந்த போதிலும் நாம் இன்னும் ஒரு வருடம் மகாத்மா ஆணைப்படி வேலை செய்து வரவேண்டும் என்று 8.1.1925இல் தந்தை பெரியாருக்கு வேண்டுகோள் கடிதம் எழுதியவர் யார்?**

அ) இராசகோபாலாச்சாரி

ஆ) திரு. வி. க.

இ) பி. வரதராசுலு (நாயுடு)

ஈ) வ. உ. சி.



**9) சுயமரியாதை இயக்க இரண்டாம் மாநாட்டை ஈரோட்டில் நடத்த வேண்டுமென அழைப்பு விடுத்தவர் யார் ?**

அ) சி.எசு. இரத்தினசபாபதி ஆ) பெரியார்

இ) ஈ.வெ. கிருட்டினசாமி ஈ) சிக்கய நாயக்கர்

**10) 1928 நவம்பர் 26,27 நாட்களில் சென்னை விக்டோரியா மண்ட பத்தில் நடந்த தென்இந்திய சீர்திருத்தக்காரர்களின் மாநாட்டுத் தலைவராகப் பெரியார் பெயரை முன்மொழிந்தவர் யார்?**

அ) பனகல் அரசர் ஆ) ம. சிங்காரவேலர்

இ) புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஈ) குத்தூசி குருசாமி

**11) நீதிக்கட்சியில் பார்ப்பனர் நுழைவை எதிர்த்து தந்தை பெரியார் கடுமையாக எழுதியதால்...... என்ற இதழை நீதிக்கட்சியினர் தந்தை பெரியாரிடமிருந்து பறிக்கத் திட்டமிட்டனர்**

அ) குடிஅரசு ஆ) திராவிடன்

இ) விடுதலை ஈ) ஆந்திர பிரகாசா

**12) சேரன்மாதேவி குருகுலப் போராட்டத்தின் விளைவாக நிகழ்ந்தது:....**

அ) பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறினார்

ஆ) வ.வே.சு. அய்யர் குருகுலக் குழுவிலிருந்து வெளியேறினார்

இ) குருகுலத்தைக் காங்கிரசே நடத்தியது

ஈ) குருகுலக் குழு தலைவராக பி. வரதராசுலு நாயுடு நியமிக்கப்பட்டார்

**13) தந்தை பெரியார் தலைமையில் முதன்முதலில் பார்ப்பன ரல்லாதார் கூட்டம் எங்கு எந்நாளில் கூட்டப்பட்டது?**

அ) மதுரையில் 1926 டிசம்பர் 25,26இல்

ஆ) காஞ்சிபுரத்தில் 1925 நவம்பர் 22இல்

இ) கோவையில் 1927 சூலையில்

ஈ) செங்கற்பட்டில் 1929 பிப்ரவரி 17,18இல்

**14) பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறக் காரணமான நிகழ்ச்சி எது?**

அ) சேரன்மாதேவி குருகுலப் போராட்டம்

ஆ) வகுப்புவாரி உரிமைத் தீர்மானத்தை காங்கிரசு ஏற்க மறுத்தது

இ) வைக்கம் போராட்டத்தில் பெரியார் பெயரை இருட்டடிப்பு செய்து காந்தி கட்டுரை எழுதியதால்

ஈ) கட்சிக்கட்டுப்பாட்டை மீறினார் என்று நீக்கப்பட்டார்

15) **சேரன்மாதேவி குருகுலப் போராட்டத்தின்போது வ.வே.சு. அய்யருக்கு ஆதரவாகச் செயல்பட்ட பார்ப்பனர்கள் சி.இராசகோ பாலாச்சாரி, என்.எஸ்.வரதாச்சாரி, டி.டி.கிருஷ்ணமாச்சாரி, ஹாலாஸ்யம், கே.சந்தானம், டி.எஸ்.எஸ்.ராசன், சாமிநாத சாஸ்திரி ஆகியோர் இறுதியாக மேற்கொண்ட நடவடிக்கை யாது?**

அ) குருகுலத்தைக் கலைத்தனர்

ஆ) காங்கிரஸ் செயற்குழுவிலிருந்து விலகினர்

இ) வேறு அமைப்பு ஏற்படுத்தினர்

ஈ) பெரியாரை எதிர்த்துப் போராட்டம் நடத்தினர்

16) **சேரன்மாதேவி குருகுலப் பிரச்சினையில் குமரன், தமிழ்நாடு, (பி. வரதராசுலு நாயுடு) நவசக்தி (திரு.வி.க.) ஆகிய ஏடுகள் வ.வே.சு. அய்யரை.......**

அ) ஆதரித்தன ஆ) எதிர்த்தன

இ) நடுநிலை வகித்தன ஈ) எதையுமே எழுதவில்லை

17) **ஒரு பார்ப்பனச் சிறுவன் பார்ப்பனரல்லாத சிறுவனுடன் உட்காந்து சாப்பிட்டதாகத் தான் கேள்வியுற்றால், தாம் இதற்காகப் பத்து தினங்கள் பட்டினி கிடப்பேன் என்று பேசிய பச்சை வர்ணா சிரமவாதிப் பார்ப்பனர் யார்?**

அ) எம்.கே. ஆச்சாரி ஆ) சி. இராசகோபாலாச்சாரி

இ) வ.வே.சு. அய்யர் ஈ) சத்தியமூர்த்தி அய்யர்

18) **வைக்கத்தில் ஈழவர்கள் எல்லாத் தெருக்களிலும் நடக்கலாம் என திருவாங்கூர் அரசி ஆணை பிறப்பித்த நாள் எது?**

அ) 2.5.1925 ஆ) 21.6.1925

இ) 29.11.1925 ஈ) 9.3.1925.

19) **“நான் ஏடு நடத்துவது என்னுடைய புகழையோ செல்வாக்கையோ வளர்த்துக்கொள்ளவும் அதை வைத்துப் பிழைப்பு நடத்தவும் அல்ல. இக்கருத்துக்களைச் சொல்லும் நிலையில் நான்தான் இருக் கிறேன். சொல்ல வேண்டிய கருத்துக்களை நானே எழுதி நானே அச்சுக் கோர்த்து நானே அச்சிட்டு, நானே படித்துக்கொள்ளும் நிலைக்குப் போனாலும் இழப்பைப் பொருட்படுத்தாது வெளி யிடுவேன்” என்று தந்தை பெரியார் கொள்கை உரத்துடன் சூளுரைத்தது எந்த ஏடு பற்றி?**

அ) விடுதலை ஆ) புரட்சி

இ) குடிஅரசு ஈ) ரிவோல்ட்

**20) மற்ற ஏடுகளைபோல் இல்லாமல் மனத்தில் பட்டதைத் துணிச்சலோடு பொது மக்களுக்கு உள்ளதை உள்ளபடி தெரிவிக்க வேண்டும் என்பது என் எண்ணமாகும் என்று சொல்லி தந்தை பெரியார் தொடங்கிய ஏடு எது?**

அ) விடுதலை ஆ) திராவிடன்

இ) புரட்சி ஈ) குடிஅரசு

**21) "குடிஅரசு இதழினிடத்து திரு. நாயக்கருக்கு எவ்வளவு அக்கறை உண்டோ அவ்வளவு அக்கறை எனக்கும் உண்டு" என்று கூறிய சைவப் பெரியார் யார்?**

அ) ஞானியார் அடிகள் ஆ) மறைமலை அடிகள்

இ) திரு.வி.க. ஈ) குன்றக்குடி அடிகள்

**22) "குடிஅரசு" ஏட்டில் "அவியல்" என்ற தலைப்பில் "அகப்பையார்" என்ற புனை பெயரில் எழுதியவர் யார்?**

அ) பெரியார் ஆ) கைவல்யம்

இ) சாமி. சிதம்பரம் ஈ) திருமலைச்சாமி

**23) தந்தை பெரியார், திரு.வி.க., எஸ். இராமநாதன், சிதம்பரம், தண்டபாணி (பிள்ளை) ஆகியோர் கலந்துகொண்ட இசை வேளாளர் மாநாடு 1925இல் நடத்தப் பெற்ற இடம் எது?**

அ) திருவாரூர் ஆ) திருக்குவளை

இ) மயிலாடுதுறை ஈ) திருக்கோகர்ணம்

**24) "தமிழுக்குத் துரோகமும் இந்தியின் இரகசியமும்" என்ற கட்டுரையைத் தந்தை பெரியார் குடிஅரசில் எந்த ஆண்டில் எழுதினார்?**

அ) 1936 ஆ) 1938 இ) 1926 ஈ) 1927

**25) தாழ்த்தப்பட்டோர் சுசீந்திரம் கோயிலில் நுழைய அனுமதிக்கப்பட வேண்டும் எனக் "குடிஅரசு" தலையங்கம் எழுதிய ஆண்டு எது?**

அ) 1934 ஆ) 1928 இ) 1926 ஈ) 1927

**26) திருவாரூர் தேர் தீக்கிரையானது என்ற செய்தியை நல்ல சேதியாக நினைக்கிறோம் என்றும், தேர் உற்சவம் நடத்துவதற்குப் பதில் தொழிலாலயம் கட்டலாம்; கல்லூரி கட்டலாம் என்றும் தந்தை பெரியார் குடிஅரசில் எழுதியது எப்போது?**

அ) 10. 4. 1934 ஆ) 9. 6. 1926

இ) 7. 3. 1923 ஈ) 1. 11. 1942

**27) மருத்துவ படிப்புக்குச் சமஸ்கிருதம் படித்திருக்க தேவையில்லை என்ற பெரியார் கருத்தை ஆணையாக பிறப்பித்த நீதிக்கட்சித் தலைவர் யார்?**

அ) பனகல் அரசர் ஆ) பொப்பிலி அரசர்

இ) ஏ. பி. பாத்ரோ ஈ) ஏ. சுப்புராயலு (ரெட்டி)

**28) “ நம் ஜாதியில் பிறந்து, நம் தேசத்தில் வளர்ந்து நம் மதத்திலிருந்து, நம் பேரையேவைத்து, நம் சாமியையே கும்பிட்டு, நம்மையே குருவாக நினைத்து வணங்கி நிற்கும் ஒரு சிஷ்யனை நம் சாமியின் ரதோற்சவம் பார்க்க வீதியில் விடாத நமக்கு யாராவது சுயராஜ்யம் கொடுப்பார்களா? நம்மை எந்த உலகமாவது மதிக்குமா? ஆதலால் உங்களை நம்பி வெள்ளைக் காரரிடமிருக்கும் அதிகாரத்தைப் பிடுங்கி உங்களிடம் ஒப்புவிக்கலாமா?” என்ற கருத்துள்ள கட்டுரையை 31.10.1926இல் “குடிஅரசு” ஏட்டில் எழுதியவர் யார்?**

அ) பெரியார் ஆ) நாகம்மையார்

இ) கைவல்யம் ஈ) ம. சிங்காரவேலர்

**29) சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைப் பிரகடனம் எனக் கருதத் தக்க “சுயராஜ்யமா ? சுயமரியாதையா?” எனும் கட்டுரையைப் பெரியார் எழுதியது எப்போது?**

அ) 23. 11. 1925 ஆ) 24. 1. 1926

இ) 17. 1. 1925 ஈ) 2. 5. 1925

**30) பாலக்காடு கல்பாத்தியில் பார்ப்பனர் குடியிருப்புப் பகுதியில் தாழ்த்தப்பட்டோர் நடக்கத் தடை விதித்த பார்ப்பன அலுவலரின் செயலைக் கண்டித்த பெரியார் “குடிஅரசு” ஏட்டில் 20.12.1926இல் “இதற்குக் கவர்னர் கவுன்சிலில் இருந்த சட்ட உறுப்பினர் ஒருவர் காரணம் என்பதை எழுதி” எனவே “பார்ப்பானிலும் வெள்ளையனே மேல்” என்று தெரிவித்தார். அந்த கவர்னர் கவுன்சில் சட்ட உறுப்பினர் யார்?**

அ) ஜட்ஜ் முத்துசாமி அய்யர்

ஆ) ஜட்ஜ் டி.சிவசாமி அய்யர்

இ) சி.பி. இராமசாமி அய்யர்

ஈ) டி.எல். வெங்கட்ராம சாஸ்திரி

**31) 1926 தேர்தலில் தோல்வியடைந்த நீதிக்கட்சி 1930 தேர்தலில் வெற்றி பெற்றதற்குக் காரணம் எது?**

அ) சுயமரியாதை இயக்கமும் பெரியாரும்

ஆ) பனகல் அரசரின் மறைவால் ஏற்பட்ட அனுதாப அலை

இ) காங்கிரசுப் பற்றுள்ள நீதிக்கட்சித் தலைவர் முனுசாமி நாயுடுவின் அமைப்பு

ஈ) காங்கிரசு ஆட்சியின் மீது மக்களுக்கிருந்த வெறுப்பு

**32) பார்ப்பனர் அல்லாதாருக்கு ஏற்பட்ட பல ஆபத்துகளில் இந்தியும் ஒன்றாய் முடியும் என்று 1926-லேயே எச்சரித்த தலைவர் யார்?**

அ) மறைமலை அடிகள் ஆ) பெரியார்

இ) நாவலர் சோமசுந்தரபாரதி ஈ) பனகல் அரசர்

**33) "இந்தி திராவிட நாட்டில் புகுத்தப்படுவதை அடியோடு எதிர்க்க முன்வரவேண்டும் என்று மானமுள்ள பார்ப்பனர் அல்லாதோர் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்" என்று தந்தை பெரியார் அறைகூவல் விடுத்தது எப்போது?**

அ) 1937இல் ஆ) 1948இல் இ) 1926இல் ஈ) 1927இல்

**34) 22.11.1925இல் காஞ்சிபுரம் காங்கிரசு மாநாட்டில் வகுப்புவாரி இடஒதுக்கீடு தீர்மானம் வாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோரி 50 பேர் ஒப்பமிட்டுக் கொடுத்தும் (விதி முறைப்படி 30பேர் போதும்) நிராகரித்த காரணத்தால் தந்தை பெரியார் "இனி காங்கிரசை ஒழிப்பதே என் வேலை" என்று சொல்லி வெளியேறினார். இதன் தொடர்பாகக் கட்சியின் 15ஆம் விதியின்படி வேறொருவர் பெரியாருக்குப் பதிலாக நியமிக்கப்படுவார் எனக் காங்கிரசுக்கட்சி செயற்குழு முடிவு செய்தது எந்நாள்?**

அ) 22.11.1925 ஆ) 29.8.1926

இ) 2.12.1927 ஈ) 17.9.1927

**35) சுயமரியாதை இயக்கத்திற்கு எதிராக எழுதிய ஏடுகள் எவை?**

அ) தார்மீக இந்து , தி இந்து ஆ) தமிழ்நாடு, தேசபந்து

இ) நவசக்தி, சுதேசமித்திரன் ஈ) தினசரி, தி மெயில்

**36) கதர்த்துறையில் பார்ப்பனர் ஆதிக்கம் என 8.10.1927இல் "குடிஅரசு" கண்டனம் தெரிவித்தபோது அ. இ. கதர் சங்கச் செயலாளராக இருந்தவர் யார்?**

அ) சி. இராசகோபாலாச்சாரி

ஆ) எம். கே. ஆச்சாரி

இ) எஸ் . இராமநாதன்

ஈ) கோவை அய்யாமுத்து

37) **தம் தாய் மனைவி உட்பட அனைவரையும் முரட்டுத்கதர் கட்டச் செய்த தந்தை பெரியார், நான்காம் ஜாதியான சூத்திரர்கள் கடைத் தேறவொட்டாமல், என்றும் கீழ் நிலையிலேயே இருக்கும்படிக்கான சூழ்ச்சித் தத்துவம்தான் கதர் இயக்கம் என கூறியது எப்போது?**

அ) 1927இல் ஆ) 1925இல் இ) 1928இல் ஈ) 1937இல்

38) **பெரியார் 11.12.1927 "குடிஅரசு" தலையங்கத்தில் "பார்ப்பனர்களாலும் அரசாங்கத்தாலும் எவ்வளவோ கொடுமைகள் செய்யப்பட்டு வாயில்லாப் பூச்சிகளாய் கிடக்கின்ற பாமர மக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் பிரதிநிதிகள்" என்று எந்தக் குழுவை மதிப்பிட்டார்?**

அ) சைமன் குழு ஆ) மாண்டேகு – செம்ஸ்போர்டு குழு

இ) வட்டமேசை மாநாடு ஈ) சென்னை கவர்னர் ஆளுகைக் குழு

39) **சைமன் கமிசன் எனும் இராயல் கமிசன் 1927இல் வந்தபோது அதனைப் புறக்கணிக்க வேண்டும் எனக் காங்கிரசுக் கட்சி விடுத்த வேண்டுகோளை ஏற்கும் நிலையில் இருந்த அப்போதைய டாக்டர் சுப்பராயன் அமைச்சரவைக்குச் சைமன் கமிசனை வரவேற்க வேண்டும் என்ற அறிவுரையைக் கூறியவர் யார்?**

அ) பனகல் அரசர் ஆ) பெரியார்

இ) ஆரோக்கியசாமி முதலியார் ஈ) பொப்பிலி அரசர்

40) **"யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது சேனாதிபதி இறந்துபட்டது போல" என்று எந்தத் தலைவரின் மறைவு குறித்து பெரியார் 16.12.1928இல் எழுதினார்?**

அ) டி.எம். நாயர் இ) பனகல் அரசர்

ஆ) சர். தியாகராயர் ஈ) சர். ஏ.டி. பன்னீர்செல்வம்

41) **உள்ளாட்சி நிறுவனங்களில் தலைமைப் பதவிகளாகிய மாவட்ட நாட்டாண்மைக் கழகம் (ஜில்லா போர்டு) தலைவர் முதலிய பதவிகளை வகிக்கத் தகுந்த இந்தியர்கள் இல்லையென்றும் இந்தியர்கள் சுயராஜ்யத்திற்குத் தகுதியுடையவர்கள் அல்லரென்றும் காங்கிரசுப் பார்ப்பனத் தலைவர் ஒருவர் தெரிவித்த நிகழ்ச்சி எந்த அமைப்பில் நடந்தது?**

அ) மாண்டேகு செம்ஸ் போர்டு விசாரணையில்

ஆ) சைமன் கமிசன் விசாரணையில்

இ) வட்ட மேசை மாநாட்டில்

ஈ) காங்கிரசு செயற்குழுக் கூட்டத்தில்

**42) நாகப்பட்டினத்தில் தென் இந்திய ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் நடந்த ஆண்டு எது?**

அ) 1920 ஆ) 1916 இ)1927 ஈ) 1948

**43) இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தக் குழுத்தலைவர் யார்?**

அ) பி. இராமமூர்த்தி ஆ) ம. சிங்கார வேலர்

இ) நாகை காளியப்பன் ஈ) டி. கிருஷ்ணசாமி

**44) இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தை நடத்திய தலைவர் எந்த இயக்கத்தை சார்ந்தவர்?**

அ) சுயமரியாதை இயக்கம் ஆ) பொது உடைமை இயக்கம்

இ) இந்திய கிசான் – லேபர் இயக்கம் ஈ) காங்கிரசு கட்சி

**45) "ராசாங்க உத்தியோகங்களும், ஸ்தல ஸ்தாபன உத்தியோ கங்களும் பொதுஉத்தியோகங்களும் நம் தேசத்தில் உள்ள ஒவ்வொரு ஜாதியாருக்கும் அந்தந்த ஜாதியாரின் எண்ணிக்கை விகிதப்படி பகிர்ந்து கொடுக்கப்பட்டாலன்றி நம்தேசத்தினருள் ஒற்றுமை உண்டாகப் போவதே இல்லை என்பதும் நமக்குள் ஒற்றுமை உண்டாகாமல் நாம்உண்மையான சுய அரசாட்சி அடையப்போவது இல்லை என்பதும் மனித அறிவுள்ள எவருக்கும் தெளிவாக விளங்கத்தக்கவை. இவ்வுண்மைக்கு மாறாகப் பேசுகின்றவர் யாவராயினும் மனித அறிவில்லாதவர்" என்று 1927இல் சேலம் மாவட்ட காங்கிரசு மாநாட்டில் பேசிய பெரியாரின் நண்பர் யார்?**

அ) சிதம்பரம் தண்டபாணி ஆ) எஸ். இராமநாதன்

இ) வ.உ. சிதம்பரம் ஈ) பி. வரதராசுலு நாயுடு

**46) "குடிஅரசு "வாரஏடு 1927 முதல் எந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது?**

அ) குடிஅரசுப் பதிப்பகம் ஆ) திராவிடன் அச்சகம்

இ) உண்மை விளக்கம் பிரஸ் ஈ) சு.ம. பிரச்சார நிறுவனம்

**47) 1927இல் "வடமொழி ஆகமங்களிற் சிலவற்றைத் தமதெனக் கொண்டு பிறப்பால் சாதிவேற்றுமைகள் கற்பித்தும் சிவாலயங்களிற் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வணங்கியும் வருகின்ற சைவர்களும் ஞானசூரியன் கிரகணங்களின்று தப்பவில்லை. தாம் மதிக்கப் படுவதற்குரிய ஒரு சாதியார் என்று சொல்லிக் கொள்ள விரும்புவா ராயின் அச்சைவர் வடமொழி ஆகமங்களைத் தமதெனக் கொள்ளும் தவறை ஒழித்தலும் சிவாலயங்கள் சிலவற்றில் காணப் படும் சிவலிங்க உருவினை மாற்றலும் இன்றியமையாதவை" என விழுமிய கருத்து தெரிவித்த பெரியாரின் நண்பர் யார்?**

அ) குன்றக்குடி அடிகளார் ஆ) மறைமலை அடிகள்

இ) திரு. வி. க. ஈ) வ.உ. சிதம்பரம் (பிள்ளை)

**48) “ஒவ்வொரு வருணத்தாருக்கும் ஒவ்வொரு தர்மம் விதிக்கப் பட்டிருக்கிறது. அவரவருக்கு விதிக்கப்பட்ட தர்மத்தை அந்தந்த வருணத்தார் செய்யவேண்டும். அப்படிச்செய்யும்போது அவர்கள் உயர்ந்தவர்கள் ஆகிறார்கள் ...இப்படியிருக்கும் போது உயர்வு தாழ்வு எங்கிருந்து வருகிறது? வருணாசிரம தர்மம் சமுதாய நலத்தை ரட்சிப்பதற்காகவே ஏற்பட்டது. மற்றபடி ஒரு சமூகத்தார் மற்றோரு சமூகத்தாரை ரட்சிப்பதற்கு ஏற்பட்டதல்ல” என்று நால் வருணப்பாகுபாட்டை நியாயப்படுத்தி 1927இல் பேசிய பிற்போக்காளர் யார்?**

அ) இராசகோபாலாச்சாரி ஆ) வ. வே. சு. அய்யர்
இ) காந்தியார் ஈ) எம். கே. ஆச்சாரி

**49) "என்றைக்கு, மக்களுக்குள் வருணம் நான்கு உண்டு; அதுவும் அவை பிறவியில் ஏற்படுகின்றன; அந்தந்த வருணத்தாருக்கும் ஒரு தருமம் உண்டு என்று சொன்னாரோ, அன்றே அவரிடம் மகாத்மா தன்மை இல்லை என்று தீர்மானித்து விட்டோம் ... மகாத்மா பட்டம் ஒருவரின் அபிப்பிராயத்தையும் நடவடிக்கையையும் பொறுத்துதான் வழங்கப்படுவதே தவிர வெறும் உருவத்திற்காக வழங்கப்படுவதல்ல என்று காந்தியைச் சந்தித்து வாதிட்டபின் எழுதியவர் யார்?**

அ) பெரியார் ஆ) எஸ். இராமநாதன்
இ) கைவல்யம் ஈ) பொன்னம்பலனார்

**50) 22.9.1927இல் செட்டிநாட்டுக்கு வருகை தந்தபோது “ஆலயம் நிர்மாணிப்பதில் நீங்கள் தாராளமாகப் பணத்தைச் செலவிடுகிறீர்கள் என்று அறிகின்றேன்” ஆலயம் என்று ஒரு கட்டடத்தைக் கட்டி விடுவதால் கடவுள் அங்கு இருக்கிறார் என்று எண்ணுவது மூடநம்பிக்கை. தாசி வீட்டில் எந்த அளவு இறைவன் இருப்பாரோ - அந்த அளவே அவர் இருக்கும் ஆலயங்கள் பலவற்றை நான் அறிவேன் ” என்று சொல்லிப் பார்ப்பனர்களின் கண்டனத்துக்கு ஆளான தலைவர் யார்?**

அ) காந்தியார் ஆ) பெரியார்
இ) நேரு பண்டிதர் ஈ) வயி. சு. சண்முகம்

**51) “.....பிரெஞ்சு தேசத்தில் ரூசோ என்பவர் அந்நாட்டின் சுயமரியாதையைக் காப்பாற்ற உழைத்ததுபோல் நம் நாட்டின் சுயமரியாதையைக் காக்க உழைக்கும் நமது நாயக்கர் தமிழ் நாட்டின் ரூசோ ஆவார்” என்ற புகழுரைகளை 1927 சூலைத் திங்களில் தந்தை பெரியாரைப் பற்றிக் கூறிய அறிஞர் யார்?**

அ) சர் . தியாகராயர் ஆ) சர்.ஆர்க்காடு இராமசாமி
இ) கல்கி. கிருட்டினமூர்த்தி ஈ) வ.ரா.

**52) ஆங்கிலேயருக்கு ஆதரவு அளித்தவர்கள் என்ற பொய்ப்புகார் நீதிக்கட்சியினருக்கும் தந்தைபெரியார் அவர்களுக்கும் உண்டு. ஆனால் ஆங்கில (சென்னை) கவர்னர்மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மாநாடு எது?**

அ) 1927 சூலையில் நடைபெற்ற பார்ப்பனரல்லாதார் சிறப்பு மாநாடு
ஆ) 1927 சூலையில் நடைபெற்ற சு.ம.இ. மாநாடு
இ) 1927 சூலையில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாடு
ஈ) 1945இல் நடைபெற்ற தி. க. மாநாடு

**53) 1927இல் கோயில் குருக்கள் பார்ப்பனரல்லர்; ஆதிசைவர் எனும் கருத்தை மறைமலை அடிகள், கா.சு. பிள்ளை ஆகியோர் தெரிவித்த போது எதிர்த்து குருக்கள் பார்ப்பனரே என நிறுவியவர் யார்?**

அ) திரு. வி. க. ஆ) குன்றக்குடி அடிகளார்
இ) பெரியார் ஈ) ஞானியார் அடிகள்

**54) 'குடிஅரசில்' பெரியார் உள்ளத்தில் உள்ளதை அப்படியே எடுத்துச் சொல்வது அதுவும் மிகச் சாதாரண தமிழிலேதானிருக்கிறது. நாயக்கர் படிப்பில் பட்டதாரியல்ல. எத்தகைய கல்வியாரும் கோடிக்கணக்கான ஜனசமூகமும் திகைக்க தக்க வன்மையுடைய பத்திரிகையை இவர் கொடுத்தது நமக்கு பாக்கியமே என 1927 திருநெல்வேலி சுயமரியாதை மாநாட்டில் பேசியவர் யார்?**

அ) நாவலர் சோமசுந்தர பாரதி ஆ) டி.கே. சிதம்பர நாத (முதலியார்)
இ) ஞானியார் அடிகள் ஈ) ம.சு. பூரணலிங்கம் பிள்ளை

**55) கல்யாணத்தில் சூத்திரன் என்ற சொல்லைப் பயன்படுத்திய பார்ப்பனரை " யாரடா சூத்திரன்" என்று கேட்டுத் தாடையில் அறைந்த சுயமரியாதை வீரர் யார்?**

அ) சவுந்தரபாண்டியன் ஆ) பட்டுக்கோட்டை அழகிரி
இ) கைவல்யம் ஈ) மாயவரம் நடராசன்

**56) 1928-இல் 'எங்கள் நிலையில் ஈனத்தைக் காண உள்ளம் நானியோ உன்றன் உளியிற் குன்றிக்குன்றி மேற்றிசை சென்றிடுகின்றாய்" எனச் சூரியனை வினவிக் 'குடிஅரசு' ஏட்டில் எழுதிய கவிஞர் யார்?**

அ) பேனாநர்த்தனம் திருமலைச்சாமி
அ) சந்திரசேகரப் பாவலர்
இ) புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்
ஈ) பேரா. இ.மு. சுப்பிரமணியன்

**57) வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ ஆணை (கம்யூனல் ஜி.ஓ) சீர்காழி முத்தையா (முதலியார்) அவர்களால் ஆணையாகப் பிறப்பிக்கப்பட்ட ஆண்டு எது?**

அ) 1921 ஆ) 1925 இ) 1928 ஈ) 1929

**58) "சமூக சீர்திருத்தத் துறையில் இடைவிடாத சேவை செய்து வரும் நண்பர் நாயக்கர் அவர்கள் தென் இந்தியாவிலேயே ஓர் இளைஞராவார்" என்று 50 வயதுப் பெரியாரை 1928இல் பாராட்டியது யார்?**

அ) திரு. வி. க. ஆ) சர்.ஏ. இராமசாமி
இ) ரெவரெண்டு பிட்மென் ஈ) எம். ஆர். ஜெயகர்

**59) பாலக்காடு கல்பாத்தியில் பார்ப்பனர் குடியிருப்பில் தாழ்த்தப் பட்டோர் (ஈழவர்) நடக்கும் உரிமைக் கிளர்ச்சி வெற்றி பெறக் காரணமான இயக்கம் எது?**

அ) நாராயணகுரு இயக்கம் ஆ) கேரள தீயர் இயக்கம்
இ) காங்கிரசுக் கட்சி ஈ) சுயமரியாதை இயக்கம்

**60) காந்தியாருக்கு முன்பே, கோயிலில் தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் அனுமதிக்கப்பட வேண்டும் எனக் குரல் கொடுத்து மயிலாடுதுறை, திருச்சி மலைக்கோட்டை, திருவானைக்கோயில் ஆகிய ஊர்களில் கோயில் நுழைவுப் போராட்டத்தை சுயமரியாதை இயக்கம் நடத்தியது எந்த ஆண்டுகளில்?**

அ) 1930 – 1931 ஆ) 1919 – 1917
இ) 1919 – 1920 ஈ) 1927 – 1928

**61) 42ஆம் காங்கிரசு மாநாடு 1927இல் சென்னையில் நடைபெற்ற போது " ஒற்றுமை உணர்வை வளர்த்து இந்தியரை ஒன்று படுத்திட இந்திப்பிரச்சார இயக்கம் நடைபெறுகிறது" எனப்பேசிய காங்கிரசுத் தலைவர் யார்?**

அ) காந்தியார் ஆ) நேரு பண்டிதர்
இ) புருசோத்தம் தாஸ் தாண்டன் ஈ) சரோஜினி நாயுடு

**62) இந்தி படித்துத் தேர்வு பெறாவிட்டால் அவன் படிப்பறிவு உள்ளவனாகக் கருதப்படமாட்டான் என சொன்ன பார்ப்பனத் தலைவர் யார்?**

அ) சி. இராசகோபாலாச்சாரி ஆ) டி. விஜயராகவாச்சாரி
இ) எம். கே. ஆச்சாரி ஈ) சத்தியமூர்த்தி அய்யர்

**63) கருத்தடையை (குடும்பக் கட்டுப்பாடு) ஆதரித்துக் 'கர்ப்ப ஆட்சி' எனும் தலைப்பில் பெரியார் எழுதிய ஆண்டு எது?**

அ) 1925 ஆ) 1928 இ) 1931 ஈ) 1940

**64) சாரதா சட்டத்தை எதிர்த்து டில்லி மத்திய சட்டசபையில் பேசிய தமிழ்நாட்டுக் காங்கிரசுக்காரர் யார்?**

அ) சத்தியமூர்த்தி அய்யர் ஆ) இராசகோபாலாச்சாரி

இ) சீனிவாச அய்யங்கார் ஈ) எம். கே. ஆச்சாரி

**65) சாரதா சட்டத்தை எதிர்த்ததற்காக 1928இல் பெரியாரால் கடுமையாகக் கண்டனம் செய்யப்பட்ட நீதிக்கட்சி அமைச்சர் யார்?**

அ) ஏ.பி. பாத்ரோ ஆ) பனகல் அரசர்

இ) பொப்பிலி ராசா ஈ) டாக்டர் சுப்பராயன்

**66) "நீங்கள் சாமியைக் கல் என்று சொன்னீர்களே இது சரியா?" என்று கேட்ட காப்பிக்கடை நாராயண அய்யங்காரிடம் "ஆம் வேண்டுமானால் எல்லோரும் என்னுடன் வாருங்கள் காட்டுகிறேன்" என்று பெரியார் 1928இல் சவால் விட்டுப் புறப்பட்டது எந்த ஊரில் நடைபெற்றது?**

அ) சிறீரங்கம் ஆ) மதுரை

இ) நாங்குநேரி ஈ) சிதம்பரம்

**67) "கிராமங்களில் துன்புறுத்தப்பட்டால் நகரங்களுக்குப் போய்விட வேண்டும். அங்கும் வழியில்லாவிட்டால் கொடுமையான மதத்தை விட்டுவிட்டு சமத்துவமுள்ள மதத்திற்குப் போய்விட வேண்டும். உங்கள் மீது சுமத்தப்பட்ட இழிவு சுலபத்தில் ஒழியாது என்றே சொல்வேன். கஷ்டப்படவும் கட்டுப்பாட்டை உடைத்தெறியவும், உயிரை விடவும் தயாரில்லாமல் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது" என்று 1928இல் தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் பெரியார் பேசியது எங்கு?**

அ) சென்னை ஆ) சிதம்பரம்

இ) இராமநாதபுரம் ஈ) கள்ளக்குறிச்சி

**68) இந்தியை எதிர்த்து 1930இல் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றிய சுயமரியாதை மாநாடு எங்கு நடைபெற்றது?**

அ) இலால்குடி ஆ) ஈரோடு

இ) நன்னிலம் ஈ) திருநெல்வேலி

**69) பெரியார் பொது உடைமைக் கொள்கையைக் கொண்டதற்கு காரணம்?**

அ) சோவியத்நாடு போய் வந்ததால்
ஆ) இயல்பாகவே பொது உடைமைக் கொள்கை கொண்டிருந்ததால்
இ) ம. சிங்காரவேலரின் தொடர்பால்
ஈ) ப. ஜீவானந்தத்தின் தொடர்பால்

**70) ஆதி திராவிடர்கள் மாநாட்டில் கள்ளக்குறிச்சியில் " மீறுங்கள் நிராகரியுங்கள் பிராமணர்களோடும் பிராமணியத்தோடும் மோதுங்கள் " என்று பெரியார் எந்த ஆண்டில் பேசினார்?**

அ) 1929 ஆ) 1939 இ) 1949 ஈ) 1919

**71) "சைவப் புராணங்கள் பொய் எனக் கண்டுபிடித்துச் சொன்னவர்கள் வைணவப் பண்டிதர்கள், வைணவப் புராணங்களைப் பொய் என்று கண்டுபிடித்துச் சொன்னவர்கள் சைவப் பண்டிதர்கள். இந்த இரண்டு புராணங்களுமே பொய்யாக இருக்குமோ என்று நான் எண்ணியதுண்டு" என்று 1929இல் பெரியார் பேசியது எந்த ஊரில்?**

அ) ஈரோடு
ஆ) செங்கல்பட்டு
இ) திருநெல்வேலி
ஈ) விருதுநகர்

**72) "நமது பெரியார் படத்தை நான்தான் திறந்து வைப்பேன் என்று வாதாடினேன். தான் திறக்கப்போவதாக தலைவர் கோவிந்தன் கூறினார். பிறகு தலைவர் தயவு செய்து, அப்பணியை ஆற்றும் பெருமையை எனக்கு அளித்தார். அதற்காக அவருக்கும் மற்றும் எனது நண்பர்களுக்கும் நான் நன்றி செலுத்துகிறேன்"என்று கூறி தந்தை பெரியார் படத்தைத் திறந்து வைத்து 20.7.1929இல் பேசிய பண்பாளர் யார்?**

அ) கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.
ஆ) இரசிகமணி டி.கே.சி
இ) மறைமலை அடிகள்
ஈ) திரு . வி. க.

**73) தாழ்ந்த ஜாதியாராகக் கருதப்பட்ட நாடார்களால் சமையல் செய்யப்பட்ட உணவு வழங்கப்படும் என்று சிறப்பாக விளம்பரப் படுத்தி எல்லா ஜாதியினரும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்டு தமிழ்நாட்டுச் சமூக இயலில் குறிப்பிடத்தக்க பெருமாற்றத்தை ஏற்படுத்திய இயக்கம் எது?**

அ) காங்கிரசு
ஆ) நீதிக்கட்சி
இ) சுயமரியாதை இயக்கம்
ஈ) பொது உடைமை இயக்கம்





**74) கேரளாவில் கோட்டயத்தில் ஈழவ சமுதாய சார்பாக நடத்தப்பட்டுப் பெரியார் கலந்து கொண்ட சுயமரியாதை இயக்க மாநாடு எந்த நாள் நடைபெற்றது?**

அ) 7. 5 1929 ஆ) 2. 12. 1933
இ) 17. 9 . 1931 ஈ) 1. 11. 1936

**75) செங்கற்பட்டு சுயமரியாதை மாநாடு எப்போது நடைபெற்றது?**

அ) 17, 18 .2.1929 ஆ) 17, 18. 2. 1928
இ) 27, 28. 2. 1929 ஈ) 10, 11. 3. 1930

**76) தந்தை பெரியார் அவர்களால் இராமாயண ஆராய்ச்சி , பெரியபுராண ஆராய்ச்சி, பாரத ஆராய்ச்சி முதலிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவரச் செய்யப்பட்ட காலம் எது?**

அ) 1945 ஆ) 1929 அ) 1946 ஈ) 1925

**77) இனி இந்தக் கையால் எந்தப் பார்ப்பனருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கமாட்டேன் எனச் சூளுரைத்த தாலுகா போர்டு தலைவரும், அமைச்சர் பதவியை வேண்டாம் எனத் துறந்தவரும் செங்கற்பட்டுச் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானத்தையொட்டி ஜாதிப் பட்டத்தை விட்டவருமான தென் மாவட்டச் சிங்கம் யார்?**

அ) சவுந்தரபாண்டியன் ஆ) வி. வி. இராமசாமி
இ) சிவகங்கை இராமச்சந்திரன் ஈ) நாகர்கோவில் சிதம்பரம்

**78) “சமத்துவம், சகோதரத்துவம், பிறப்பில் உயர்வு தாழ்வின்மை, பெண் சுதந்திரம் முதலிய அரிய நீதிகளைப் போதிக்கும் சிறந்த பண்டைத் தமிழ் நூலாகிய ... உரையுடன் 8 அணாவிற்கு கொடுக் கின்றோம், தேவைக்கு உடனே எழுதுங்கள். தாமதித்தால் கிடைக்காது” என்று “குடிஅரசு” பதிப்பகம் 1929இல் கூவி விற்ற நூல் எது?**

அ) சிலப்பதிகாரம் ஆ) திருக்குறள்
இ) முத்தொள்ளாயிரம் ஈ) கல்லாடம்

**79) செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் “ஈ. வெ. இராமசாமி சகாப்தம் பிறந்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன”என்று பேசியவர் யார்?**

அ) சவுந்தரபாண்டியன் ஆ) பி. டி. இராசன்
இ) சூ.ஆ. முத்து (நாடார்) ஈ) டாக்டர் சுப்பராயன்

**80) எந்த அரசுப் பணியாளருக்கும் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் தரக்கூடாது என காங்கிரசு தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முன்னோடியாக மாதம் 1000ரூபாய்க்கு மேல் தரக்கூடாது எனத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது எந்த மாநாட்டில்?**

அ) பொது உடைமைக்கட்சி மாநாட்டில்
ஆ) காங்கிரசு சோசலிஸ்ட் மாநாட்டில்
இ) செங்கற்பட்டுச் சுயமரியாதை இயக்க மாநாட்டில்
ஈ) நீதிக்கட்சி மாநாட்டில்

**81) புதுச்சேரியில் சுயமரியாதை மாநாடு நடைபெற்றது எப்போது?**

அ) 21.1.1929 ஆ) 28.2.1929
இ) 10.3.1931 ஈ) 1.11.1944

**82) நால்வருணப் பிரிவை ஒழிக்க வேண்டும், ஜாதி மதக் குறிகளை இட்டுக்கொள்ளக்கூடாது, ஜாதிப்பெயரைத் தம் பெயருடன் சேர்க்கக் கூடாது, வகுப்புவாரி உரிமை இந்திய வருங்கால அரசியல் அமைப்பில் ஒப்புக்கொள்ளப்படவேண்டும் என்பன போன்ற சமுதாய சீர்திருத்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட மாநாடு எது?**

அ) புதுவை சுயமரியாதை மாநாடு ஆ) முதல் சுயமரியாதை மாநாடு
இ) ஈரோடு சுய மரியாதை மாநாடு ஈ) மதுரை பார்ப்பனரல்லாதார் மாநாடு

**83) பெண்களின் திருமணவயது 16 ஆக இருக்கவேண்டும் (அன்றைய சட்டப்படி14) திருமண விலக்கு உரிமை, மறுமண உரிமை, ஆசிரியப் பணிக்கு பெண்கள்மட்டுமே நியமிக்கப்படவேண்டும் என்பன போன்ற பெண்ணுரிமைத் தீர்மானங்களை முதலில் நிறைவேற்றிய மாநாடு எது?**

அ) 1938 பெண்கள் மாநாடு ஆ) 1929 சுயமரியாதை மாநாடு
இ) 1931 சுயமரியாதை மாநாடு ஈ) லால்குடி சுயமரியாதை மாநாடு

**84) புதிதாகக் கோயில்கட்டக்கூடாது, அர்ச்சகர் முறைகூடாது, வடமொழி கூடாது, கடவுள் கோயில் போன்றவற்றுக்கு ஒருகாசு கூட செலவழிக்கக் கூடாது, கோயில், மடம் சொத்துக்களை தொழில், வணிகம், ஆராய்ச்சிப் பணிகளுக்குச் செலவிட வேண்டும் என்பன உள்ளிட்ட புரட்சிகரத் தீர்மானங்களை நிறைவேற்றிய மாநாடு ஏது?**

அ) 1933 நாத்திகர் மாநாடு
ஆ) 1929 செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாடு
இ) 1930 ஈரோடு சுயமரியாதை மாநாடு
ஈ) 1929 புதுவை சுயமரியாதை மாநாடு

**85) தேவதாசி ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்த நாள் எது?**

அ) 02. 03. 1929 ஆ) 10. 03. 1932

இ) 02. 02. 1929 ஈ) 02. 12. 1929

**86) தேவதாசி ஒழிப்புச் சட்ட முன்வரைவை தாக்கல் செய்த சட்டமன்ற உறுப்பினர் யார்?**

அ) டாக்டர் நாயர் ஆ) டாக்டர் முத்துலெட்சுமி

இ) ஏ. பி. பாத்ரோ ஈ) பனகல் அரசர்

**87) தேவதாசி ஒழிப்புச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்து சட்டசபையில் பேசிய காங்கிரசுக்காரர் யார்?**

அ) இராசகோபாலாச்சாரி ஆ) சத்தியமூர்த்தி அய்யர்

இ) பரவஸ்து இராசகோபாலாச்சாரி ஈ) கே.எஸ்.இராமசாமி சாஸ்திரி

**88) தியாகராயர் நகர், பனகல்அரசர் பந்தல், டி.எம். நாயர் அரங்கத்தில் நடைபெற்ற சுயமரியாதை மாநாடு எந்த ஊரில் நடைபெற்றது?**

அ) செங்கல்பட்டு ஆ) விருதுநகர்

இ) ஈரோடு ஈ) திருநெல்வேலி

**89) 1929இல் ப. ஜீவானந்தம் முதன்முதலில் பங்கேற்ற சுயமரியாதைத் தொண்டர்கள் மாநாடு நடைபெற்ற இடம் எது?**

அ) தஞ்சாவூர் ஆ) மாயூரம்

இ) ஈரோடு ஈ) பட்டுக்கோட்டை

**90) சுயமரியாதை இயக்கத்தைக் கண்டித்து 1929இல் சைவப் பெரியார் மாநாடு, சைவ சமரச மாநாடு, சைவ சித்தாந்த மாநாடு, வருணாசிரம மாநாடு, ஆஸ்திக சங்க மாநாடு எனச் சிலரே பல பெயர்களில் மாநாடு நடத்தியது எந்த ஊரில்?**

அ) திருப்பாதிரிப் புலியூர் ஆ) திருநெல்வேலி

இ) கல்லிடைக் குறிச்சி ஈ) நாகபட்டினம்

**91) சுயமரியாதை இயக்கத்தினர் கடவுளை நிந்திக்கும் கயவர்கள் எனத் திருவரங்கம் சைவசித்தாந்தக் கழகத் தலைவர் கூறியதற்குப் பதிலாகக் "கடவுளை நித்திக்கும் கயவர்கள் யார்?" எனப்பதில் நூல் அ. இராகவன் எப்போது எழுதினார்?**

அ) 17, 18. 2. 1929 ஆ) 10, 11. 5. 1930

இ) 25. 8. 1929 ஈ) 2. 12. 1931

**92)** **தந்தை பெரியார் மலேயா, சிங்கப்பூர் நாட்டில் சுற்றுப்பயணம் செய்வதைத் தடை செய்திட வேண்டும் எனப் பினாங்கு "இந்து சபை"யினர் கோரியும் அரசு தடை விதிக்காததால் வெற்றிகரமான பெரியாரின் பிரச்சாரத்தால் மலேசியாவில் கடவுளுக்கும் மதத்திற்கும் சாத்திர சம்பிரதாயங்களுக்கும் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என ஓலமிட்டு எழுதிய மலேயா ஏடு எது?**

அ) தமிழ் முரசு
ஆ) இந்து நேசன்
இ) தமிழ் நேசன்
ஈ) இந்து தேசாபிமானி

**93)** **அன்னை நாகம்மையார், எஸ். இராமநாதன், அ. பொன்னம் பலனார், சாமி .சிதம்பரனார், என். பி. காளியப்பன், மாயவரம் நடராசன் ஆகியோருடன் தந்தை பெரியார் மலேசிய சுற்றுப்பயணம் செய்தது எப்போது?**

அ) 15. 12. 1929
ஆ) 10. 12. 1931
இ) 7. 11. 1930
ஈ) 2. 12. 1931

**94)** **தந்தை பெரியார் தாடியுடன் காட்சியளித்தது எப்போது ?**

அ) வைக்கம் போராட்ட முடிவில்
ஆ) அய்ரோப்பிய சுற்றுப் பயணமுடிவில்
இ) மலேயா சுற்றுப்பயண முடிவில் (11. 01. 1930)
ஈ) இந்தி எதிர்ப்புச் சிறைவாசம் முடிவில்

**95)** **"ஒருவன் உழைப்பில் ஒருவன் நோகாமல் சாப்பிடுகிறது என்கிற தன்மை இருக்கும் வரையிலும், ஒருவன் தினம் ஒரு வேளை கஞ்சிக்கு வழியின்றிப் பட்டினி கிடந்து சாவதும், மற்றொருவன் தினம் 5 வேளை சாப்பிட்டு விட்டு வயிற்றைத் தடவிக் கொண்டு சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கிறதுமான தன்மை இருக்கிறவரையிலும், பணக்காரர்கள் எல்லாம் தங்கள் செல்வம் முழுவதையும் தங்களது சுய வாழ்வுக்கே என்று எண்ணிக் கொண்டிருக்கிற வரையிலும் (இது) இருந்தே தீரும்" என்று பெரியார் 1930இல் குறிப்பிட்டது எதை ?**

அ) தென் இந்திய நல உரிமைச் சங்கம்
ஆ) பொது உடைமை இயக்கம்
இ) சுயமரியாதை இயக்கம்
ஈ) திராவிடர் கழகம்

**96)** **முதல் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்ற ஆண்டு எது ?**

அ) 1925 ஆ) 1928 இ)1930 ஈ) 1934



**97) முதல் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்ற ஊர் எது?**

அ) அருப்புக்கோட்டை ஆ) ஈரோடு

இ) சுக்கிலநத்தம் ஈ) திருத்தங்கல்

**98) மூடநம்பிக்கைகளைக் கண்டித்தும், கடவுள், பேய், பிசாசு, சாமி ஆடுதல் முதலியவற்றைக் கண்டித்தும் கட்டுரைகள் "குடிஅரசி"ல் எழுதி, உலகத் தோற்றத்தை விளக்கும் 'கடவுளும் பிரபஞ்சமும்' என்ற நூலையும் எழுதியவருமான சுயமரியாதை வீரர் யார்?**

அ) கைவல்யம் ஆ) நாத்திகன் குப்புசாமி

இ) பெரியார் ஈ) ம. சிங்காரவேலர்

**99) 1930இல் "...நீங்கள் நெடுநாளாய்ப் பாரபட்சமின்றியும் தாட்சண் யங்களுக்கு உட்படாமலும் ஜீவகாருண்யம் உள்ளவராயும் சுயநன்மையைக் கருதாமல் லோக நன்மையையே முக்கியமாகக் கருதி சுக துக்கங்கள் பாராமல் மானாபிமானத்தைக் கவனியாமல் ஜனனமெடுத்ததற்கு பரோபகாரமே சாதனமென்று கருதி உங்கள் தர்மபத்தினி சமேதராய் பாடுபட்டு வருவது எங்களுக்கு மிகவும் சந்தோசத்தை உண்டாக்கியிருக்கிறது" என்று தந்தை பெரியாருக்குக் கடிதம் எழுதிய மடத்தலைவர் யார் ?**

அ) சிருங்கேரி சங்கராச்சாரி ஆ) காஞ்சிபுரம் சங்கராச்சாரி

இ) குன்றக்குடி மடாதிபதி ஈ) ஞானியார் மடாதிபதி

**100) எந்த சத்தியாகிரகத்தினால் இந்தியாவுக்கு ஒரு வளைந்துபோன குண்டூசி அளவுகூட நன்மை ஏற்படாது என்று கோபுரத்தின் மீதிருந்து கூறுவோம் என்று பெரியார் குறிப்பிட்டார்?**

அ) அந்நிய துணி புறக்கணிப்பு ஆ) உப்புக் காய்ச்சும் இயக்கம்

இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ) தனிநபர் சத்தியாக்கிரகம்

**101) ஈரோட்டில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க இரண்டாம் மாநாடு எந்தெந்த நாட்களில்நடைபெற்றது ?**

அ) 10, 11. 5. 1930

ஆ) 17, 18. 3. 1930

இ) 17, 18. 5. 1930

ஈ) 27, 28. 2. 1928

102) **“சுயமரியாதை இயக்கத்திற்கு நாயக்கர் அவர்கள் தந்தையாவார். நான் தாயாவேன். நாங்களிருவரும் மாயூரம் சமரச சன்மார்க்கக் கூட்டத்தில் சேர்ந்து பெற்ற பிள்ளையே சுயமரியாதை இயக்க மாகும்யாகும். அக்குழந்தை தாயுடன் வாழாது இதுகாறும் தந்தை யுடன் சேர்ந்து வாழ்கிறது. அதன் வளர்ச்சியைக் கண்டு யான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்” எனப் பெருமை பொங்கப் பேசியவர் யார்?**

அ) திரு. வி. க. ஆ) ஞானியார் அடிகள்
இ) வ. உ. சி. ஈ) சவுந்தரபாண்டியன்

103) **“பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குச் சற்று அளவுக்கு மீறிய நாணயமும் கட்டுப்பாடும் உறுதியும் தியாகபுத்தியும் வேண்டும். உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு இவை வேண்டியது இல்லை என்பதோடு, இவை உள்ளவர்கள் உத்தியோகத்தில் வெற்றிபெறவும் முடியாது” என்று பொது வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தவர் யார்?**

அ) காந்தியடிகள் ஆ) பெரியார்
இ) டி.எம். நாயர் ஈ) சர். தியாகராயர்

104) **“சுயமரியாதை இயக்கம் ஏழைகள், கஷ்டப்படுகிறவர்கள், அநீதிக்கு உட்படுத்தப்பட்டவர்கள் சமத்துவத்தை அடையாதவர்கள் ஆகியோரை முன்னேற்றுவதற்காக ஏற்பட்டது. இந்த இயக்கத்தில் ரோமன் கத்தோலிக்க கிறித்துவர்களும் மகமதியர்களும் சேர்ந்திருப்பது விசேசமாகும். மதத் தலைவர்களும் காங்கிரசுத் தலைவர்களும் செய்யமுடியாத காரியத்தை நீங்கள் செய்து முடித்திருக்கிறீர்கள்” என்று சுயமரியாதை இயக்கத்திற்குப் புகழாரம் சூட்டிய அகில இந்தியத் தலைவர் யார் ?**

அ) டாக்டர் அம்பேத்கர் ஆ) எம். ஆர். ஜெயகர்
இ) ஜோதிராவ் புலே ஈ) எம். என். ராய்

105) **“கண்டவர்க்கெல்லாம் குனிந்து சலாம் செய்து மண்ணோடு மண்ணாய் ஒட்டிக்கொண்டு மார்பால் ஊர்ந்து செல்ல வேண்டாம் என்று சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டினால் ‘பாவி’ நமஸ்காரத்தைக் கண்டிக்கிறான் என்று அபத்தம் பேசுவதா.?... நாயக்கரை நாஸ்திகன் என்று அழைக்கும் அன்பர்கள் நாஸ்திகம் யாது என்றே தெரிந்துகொள்ளவில்லை என்றே சொல்லுவேன் ... செய்ய வேண்டும் என்று தோன்றியதைத் தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம் காணப்படுவதைப் போல தமிழ்நாட்டில் வேறு எவரிடமும் காணப்படுவதில்லை. தமிழ் நாட்டின் வருங்காலப் பெருமைக்கு நாயக்கர் அவர்கள் முன்னோடும் பிள்ளை, தூதுவன் வருங்கால வாழ்வின் அமைப்பு”’ என்றெல்லாம் புகழ்மாலை சூட்டி எழுதிய எழுத்தாளர் பெருமகன் யார் ?**

அ) கல்கி கிருட்டினமூர்த்தி ஆ) எஸ்.எஸ். வாசன்
இ) வ. ரா. ஈ) திரு. வி. க.

**106) தேவதாசி முறை ஒழிப்பு, பூசாரி மான்ய ஒழிப்பு, பொது நிகழ்ச்சிகளில் கடவுள் வணக்கம் ஒழிப்பு முதலிய தீர்மானங்களை நிறைவேற்றிய மாநாடு எது?**

அ) 1929 முதல் சுயமரியாதை மாநாடு

ஆ) 1931 விருதுநகர் சுயமரியாதை மாநாடு

இ) 1930 ஈரோடு சுயமரியாதை மாநாடு

ஈ) 1929 புதுவை சுயமரியாதை மாநாடு

**107) இந்தி கட்டாயமாகச் சொல்லித் தரப்பட வேண்டும் எனச் சென்னை மாநகராட்சியில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நீதிக் கட்சியினரால் தோற்கடிக்கப்பட்ட ஆண்டு எது ?**

அ) 1938 ஆ) 1927 இ) 1948 ஈ) 1931

**108) மார்க்சும் ஏங்கெல்சும் எழுதிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரகடனம் முதலில் எந்த இந்திய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது ?**

அ) இந்தி ஆ) வங்காளி

இ) தமிழ் ஈ) மலையாளம்

**109) கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையைத் தமிழில் மொழி பெயர்க்கச் செய்து வெளியிட்டவர் யார் ?**

அ) பெரியார் ஆ) ம. சிங்காரவேலர்

இ) சக்லத்வாலா ஈ) ஹிரேன் முகர்ஜி

**110) கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை இந்தியாவில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்ட நாள் எது ?**

அ) 4. 10. 1931 ஆ) 25. 12. 1925

இ) 2. 12. 1933 ஈ) 1. 11. 1940

**111) லெனினும் மதமும் என்ற நூலைப் பெரியார் வெளியிட்ட நாள் எது?**

அ) 2. 10. 1932 ஆ) 11. 12. 1931

இ) 17. 09. 1937 ஈ) 30. 01. 1948

**112) பெரியார் சோவியத் நாட்டில் பயணம் செய்த காலம் எது?**

அ) 10.4.1935 – 21.7.1935

ஆ) 7.8.1933 – 13. 11.1933

இ) 15. 12. 1932 – 27. 4. 1933

ஈ) 19. 4. 1932 – 17. 5. 1932

**113) அய்ந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மாநிலத்தில் தொடங்கப்பட்டு, மக்களால் நெடுங்காலமாக மரியாதை செய்யப்பட்டு வந்த கருத்துகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் அடிப்படையில் ஆட்டம் காணச் செய்து விட்டது" எனச் சுயமரியாதை இயக்கத்தை 1931இல் வருணித்த வெளிநாட்டு இயக்கம் எது?**

அ) இலண்டன் ரேஷனலிஸ்ட் பிரஸ் அசோஷியேஷன்
ஆ) பெர்லின் நாத்திக சங்கம்
இ) மாஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சி
ஈ) அமெரிக்க உண்மை நாடுவோர் சங்கம்

**114) 1931 ஈரோடு சுயமரியாதை இயக்க மாநாட்டுத் தொண்டர் படைத் தலைவர் யார்?**

அ) மணவை திருமலைசாமி ஆ) மாயூரம் நடராசன்
இ) பட்டுக்கோட்டை அழகிரி ஈ) நாகை மணி

**115) ஈரோடு சுயமரியாதை மாநாட்டின் பந்தல் அலங்காரப் பொறுப்பேற்றவரும், அந்தக் காலத்திலேயே தம் மகனுக்கு லெனின் என்று பெயர் சூட்டியவருமான தந்தை பெரியாரின் மெய்க்காப்பாளர் யார் ?**

அ) பட்டுக்கோட்டை அழகிரி ஆ) மாயூரம் நடராசன்
இ) நாகை . கிருட்டினசாமி ஈ) கைவல்யம்

**116) தன்தோளுக்கிட்ட மாலையைத் தலைவர் பெரியாரின் தாளுக்கு இடுகிறேன் என்று கூறியவரும், திருவையாறு சமஸ்கிருதக் கல்லூரியில் தமிழ் படிக்க வாய்ப்பு ஏற்படுத்தியவருமான திராவிடத் தளபதி யார் ?**

அ) சிவகங்கை இராமச்சந்திரன்
ஆ) பட்டிவீரன்பட்டி சவுந்தரபாண்டியன்
இ) தூத்துக்குடி கே.வி. கே. சாமி
ஈ) சர். ஏ. டி. பன்னீர்செல்வம்

**117) மதங்கள் மூடநம்பிக்கையை வளர்ப்பதால் அவை அழிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி இந்து, இசுலாமிய மதக்காரர்களின் எதிர்ப்பை எதிர் நோக்கவேண்டிய வாய்ப்பை உண்டாக்கிய மாநாடு எது?**

அ) கோவை பார்ப்பனரல்லாதார் மாநாடு
ஆ) மதுரை பார்ப்பனரல்லாதார் மாநாடு
இ) ஈரோடு சுயமரியாதை மாநாடு
ஈ) விருதுநகர் சுயமரியாதை மாநாடு

**118) 14.05.1931இல் கடிதம் எழுதும் போது "நான் மூட்டை தூக்குவதில் பாரத்தினால் கஷ்டப்பட்டிருப்பேனேயொழிய மூட்டை தூக்குவது அவமானம் என்று ஒருபோதும் கஷ்டப்பட்டதில்லை" என்று எழுதியவர் யார்?**

அ) சர். ஏ. டி. பன்னீர் செல்வம் ஆ) பெரியார்
இ) கைவல்யம் ஈ) சவுந்தரபாண்டியன்

**119) "....நாம் அவரை ஒரு உண்மையான மனிதர் என்று சொல்வோம், இந்தியாவுக்கும் அவருடைய கொள்கைதான் உண்மையாக வேண்டியது என்பது நமது பலமான அபிப்பிராயமாகும் ... அவரை வாயார, மனமார, கையாரப் பாராட்டுகிறோம், பாராட்டுகிறோம், பாராட்டுகிறோம்" என்று 27. 03. 1931 "குடிஅரசில்" பெரியார் பாராட்டியது யாரை?**

அ) லாலா லஜபதிராய் ஆ) வாஞ்சி அய்யர்
இ) பகத்சிங் ஈ) ராஷ் பிகாரி கோஸ்

**120) முதல் சுயமரியாதை மாநாட்டின் தலைவர் யார் ?**

அ) சிவகங்கை இராமச்சந்திரன் ஆ) சர். பி.டி. இராசன்
இ) பெரியார் ஈ) ஊ.பு. அ. சவுந்தரபாண்டியன்

**121) முதல் சுயமரியாதை மாநாட்டில் கொடியேற்றி வைத்து "பிறப்பினால் பேதம் கற்பிப்பதை ஒழிப்பதே சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை " என முழங்கியவர் யார்?**

அ) பெரியார் ஆ) சர். பி.டி இராசன்
இ) அ. பொன்னம்பலனார் ஈ) பட்டுக்கோட்டை அழகிரி

**122) இளைஞர் மாநாடு, பெண்கள் மாநாடு, மதுவிலக்கு மாநாடு, சங்கீத மாநாடு ஆகியவையும் சேர்த்து நடத்தப்பெற்ற சுயமரியாதை மாநாடு எவ்வூரில் நடைபெற்றது?**

அ) செங்கல்பட்டு ஆ) விருதுநகர்
இ) ஈரோடு ஈ) புதுச்சேரி

**123) விருதுநகர் சுயமரியாதை மாநாட்டுத் தலைவர் யார்?**

அ) சர். ஆர். கே. சண்முகம் ஆ) வி. வி. இராமசாமி
இ) ஏ.வி. பி. ஆசைத் தம்பி ஈ) பெரியார்

**124) பெரியார் உலகச்சுற்றுப் பயணம் மேற்கொண்ட நாள் எது?**

அ) 2. 12. 1928 ஆ) 13. 12. 1931
இ) 1. 11. 1930 ஈ) 17. 9. 1929

125) **“மனிதனுக்கு மூடநம்பிக்கைகள் ஒழிந்து, அறிவுச்சுதந்திரமும் சுயமரியாதையும் ஏற்பட வேண்டுமானால் மதமும் கடவுளும் ஒழிய வேண்டும்” என பெரியார் எந்த ஆண்டில் எழுதினார் ?**

அ) 1925 ஆ) 1919
இ) 1928 ஈ) 1970

126) **பெரியாரின் ஆதரவோடு அவரது நண்பரான சுரேந்திரநாத் ஆர்யாவால் உருவாக்கப்பட்ட பார்ப்பனரல்லாத இளைஞர் மாநாடு 26. 2. 1928இல் எந்த ஊரில் நடைபெற்றது ?**

அ) தஞ்சாவூர் ஆ) ஈரோடு
இ) சென்னை ஈ) திருநெல்வேலி

127) **“தென்இந்திய நலஉரிமைச் சங்கத்தில் (நீதிக்கட்சி) பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்” என்ற தீர்மானத்தை 1929இல் நெல்லூர் மாநாட்டில் சர். ஆர்.கே. சண்முகம் எதிர்த்தபோது அவருக்கு ஆதரவாகப் பேசித் தீர்மானத்தைத் தோற்கடித்தவர் யார்?**

அ) பனகல் அரசர் ஆ) சர். பன்னீர்செல்வம்
இ) ஏ. பி. பாத்ரோ ஈ) பெரியார்

128) **“ஆணுடைய போக இச்சைக்கு விலைமாதரையும், மாடுகளின் தினவைத் தீர்த்துக்கொள்ள சொறிகற்களையும் ஏற்பாடு செய்த இந்து தருமம் பெண் (விதவை) களிடம் ஏன் ஜீவகாருண்யம் காட்டவில்லை” என்று 1929இல் பெரியார் பேசியது எம்மாநாட்டில்?**

அ) செங்கற்பட்டுச் சுயமரியாதை மாநாடு
ஆ) சென்னை பிரம்ம சமாஜ மாநாடு
இ) விருதுநகர் சுயமரியாதை மாநாடு
ஈ) சென்னை சீர்திருத்தக்காரர்கள் மாநாடு

129) **விவாகரத்து சட்டம் பெண்களுக்குப் பாதுகாப்புக் கருவியாக இருக்கும் நிலையில் அதைக் கண்டித்து எழுதிய ஒரு பத்திரிகையின் நிலையை பெரியார் பெரிதும் கண்டித்தார். அப்பத்திரிகை எது?**

அ) ஜஸ்டிஸ் ஆ) திராவிடன்
இ) தி இந்து ஈ) சுதேசமித்திரன்

130) **பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறிய 1925 ஆம் ஆண்டில் காங்கிரசு மாநாட்டில் காங்கிரசுக் கொடியேற்றி வைத்தவர் யார்?**

அ) திரு. வி. க. ஆ) வ. உ. சி.
இ) ம. சிங்காரவேலர் ஈ) எ. சு. ஆர்யா

131) விருதுநகர் சுயமரியாதை மாநாடுப்பற்றி பாராட்டியும் பூணூலையும் சந்தியாவந்தனத்தையும் வைத்துக் கொண்டு தீண்டாமை ஒழிப்பு பற்றிப் பேசுவது காங்கிரசுக்காரர்களின் கபடநாடகமும் பித்தலாட்டமுமாகும் என 30.08.1931 "குடிஅரசில்" எழுதிய சிந்தனையாளர் யார் ?

அ) ம. சிங்காரவேலர் ஆ) கைவல்யம்

இ) பெரியார் ஈ) வ. உ. சி.

132) பச்சையப்பன் கல்லூரியில் தாழ்த்தப்பட்டவர்களும் இசுலாமியரும் சேர்க்கப்படாமை குறித்து 1927இல் கண்டித்த அகில இந்தியத் தலைவர் யார்?

அ) காந்தியார் ஆ) நேரு

இ) மாளவியா ஈ) பட்டேல்

133) ஆதி திராவிடர் கோயில் நுழைவை ஏற்பது சாத்திர நம்பிக்கையாளர்களை மனம் நோகச் செய்யும் இம்சையாகும் என்று 1927இல் காந்தியாரிடம் கூறியவர் யார் ?

அ) எம். கே. ஆச்சாரி ஆ) இராசகோபாலாச்சாரி

இ) காஞ்சி சங்கராச்சாரி ஈ) சிருங்கேரி சங்கராச்சாரி

134) பெண்களை ஆசிரியர் வேலைக்கும் செவிலியர் வேலைக்கும் மட்டும் தேர்ந்தெடுக்காமல் காவல் துறைப் பணிகட்கும் இராணுவத் துறைக்கும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தீர்மானித்த மாநாடு எது ?

(அ) விருதுநகர் சுயமரியாதை மாநாடு

(ஆ) செங்கற்பட்டு சுயமரியாதை மாநாடு

(இ) புதுச்சேரி சுயமரியாதை மாநாடு

(ஈ) ஈரோடு சுயமரியாதை மாநாடு

135) மே நாள் கொண்டாடவேண்டும் என்று பெரியார் அறிக்கை விடுத்த ஆண்டு எது?

(அ) 1933 (ஆ) 1931 (இ) 1935 (ஈ) 1952

136) தந்தை பெரியார் பற்றியும் அன்னை நாகம்மையார் பற்றியும் சென்னை மாநில யார்? எவர்? எனும் நூல் எந்த ஆண்டில் சிறப்புக் குறிப்புகள் எழுதிற்று?

(அ) 1933 (ஆ) 1923

(இ) 1944 (ஈ) 1947.

**137) 1938 இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்ற நடராசன் 15-1-1939இல் இறந்தார். மற்றொருவரான தாளமுத்து இறந்த நாள் எது?**

(அ) 15.1.1939 (ஆ) 10.12.1938

(இ) 15.3.1939 (ஈ) 12.3.1939

**138) தொடர்வண்டி நிலையப் பெயர்ப்பலகைகளில் இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத்தைப் பெரியார் நடத்திய நாள் எது?**

(அ) 10.8.1952 (ஆ) 1.8.1952

(இ) 15.8.1952 (ஈ) 30.1.1952

**139) இரண்டாம் கட்ட இந்தி எதிர்ப்பு போர் 1938இல் பள்ளி முன்பு மறியல் தொடங்கிய நாள் எது?**

(அ) 10.8.1938 (ஆ) 2.12.1938

(இ) 1.11.1938 (ஈ) 17.9.1938

**140) தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டதற்காகப் பெரியாருக்குப் பொது மக்களிடமிருந்து பணம் வசூலிக்கப்பட்டு அதன்மூலம் பிரசாரவேன் எத்தனை முறை வழங்கப்பட்டன?**

(அ) ஒரு முறை (ஆ) இரண்டு முறை

(இ) மூன்று முறை (ஈ) நான்கு முறை

**141) சுயமரியாதை இயக்கத் தொடக்க காலத்தில் பெரியார் தமது பிரச்சாரகர்களான அ.பொன்னம்பலனார், தளபதி பட்டுக்கோட்டை அழகிரி, நாகை காளியப்பன், ஜே.எஸ். கண்ணப்பர் போன்றோரின் பயணத்திற்காகப் பெரியார் செய்த ஏற்பாட்டு முறை என்ன?**

(அ) சொந்தப்பணத்தைக் கொடுத்துப் பயணச் சீட்டு வழங்கல்

(ஆ) மொத்தமாகப் பயணச் சீட்டுப் புத்தகமூலம்

(இ) தனிக்கார் மூலம்

(ஈ) அவரவரே பயணச்சீட்டு வாங்கிக் கொள்ளச் செய்தமை

**142) முதல் சுயமரியாதை மாநாட்டில் கலந்து கொண்ட தாழ்த்தப்பட்ட வகுப்புத் தலைவர் யார்?**

(அ) டாக்டர் அம்பேத்கர் (ஆ) அயோத்திதாஸ் பண்டிதர்

(இ) இரட்டைமலை சீனிவாசன் (ஈ) சாமி சகஜானந்தா

**143) முதல் சுயமரியாதை மாநாட்டில் மூட நம்பிக்கையை எதிர்த்துப் பேசிய ஏழு வயதுச் சிறுமி யார்?**

(அ) சத்தியவாணிமுத்து (ஆ) திருவண்ணாமலை லலிதா

(இ) டாக்டர் தர்மாம்பாள் (ஈ) பூங்கோதை

**144) முதல் சுயமரியாதை மாநாட்டில் கீழ்க்கண்ட எந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை?**

(அ) கல்வி நிறுவனங்களில் தாய்மொழி தவிர்த்து வேறு மொழி கற்கப் பொதுப்பணம் செலவிடப்படக்கூடாது.

(ஆ) விதவைகள் மறுமணம் செய்து கொள்ள உதவி செய்ய வேண்டும்.

(இ) புதிதாக ஒரு கோவிலும் கட்டக்கூடாது.

(ஈ) சுயமரியாதைத் திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம் அளிக்க வேண்டும்.

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.இ | 2.அ | 3.அ | 4.ஈ | 5.இ | 6.ஆ | 7.அ | 8.அ | 9.இ | 10.அ |
| 11.ஆ | 12.ஆ | 13.ஆ | 14.ஆ | 15.ஆ | 16.ஆ | 17.அ | 18.ஆ | 19.இ | 20.ஈ |
| 21.அ | 22.ஆ | 23.இ | 24.இ | 25.இ | 26.ஆ | 27.அ | 28.இ | 29.ஆ | 30.இ |
| 31.அ | 32.ஆ | 33.இ | 34.ஆ | 35.ஆ | 36.இ | 37.அ | 38.அ | 39.ஆ | 40.இ |
| 41.ஆ | 42.இ | 43.ஈ | 44.அ | 45.இ | 46.இ | 47.ஈ | 48.இ | 49.அ | 50.அ |
| 51.ஆ | 52.அ | 53.இ | 54.ஆ | 55.இ | 56.இ | 57.இ | 58.இ | 59.ஈ | 60.ஈ |
| 61.ஈ | 62.ஆ | 63.ஆ | 64.ஈ | 65.அ | 66.ஈ | 67.இ | 68.இ | 69.ஆ | 70.அ |
| 71.இ | 72.ஆ | 73.இ | 74.அ | 75.அ | 76.ஆ | 77.இ | 78.ஆ | 79.இ | 80.இ |
| 81.அ | 82.ஆ | 83.ஆ | 84.ஆ | 85.இ | 86.ஆ | 87.ஆ | 88.அ | 89.ஈ | 90.ஆ |
| 91.இ | 92.இ | 93.அ | 94.இ | 95.இ | 96.ஆ | 97.இ | 98.ஈ | 99.அ | 100.ஆ |
| 101.அ | 102.அ | 103.ஆ | 104.ஆ | 105.இ | 106.இ | 107.ஈ | 108.இ | 109.அ | 110.அ |
| 111.ஆ | 112.ஈ | 113.அ | 114.இ | 115.ஆ | 116.ஈ | 117.ஈ | 118.ஆ | 119.இ | 120.ஈ |
| 121.ஆ | 122.இ | 123.அ | 124.ஆ | 125.இ | 126.அ | 127 .ஈ | 128 .ஆ | 129.அ | 130.இ |
| 131.அ | 132.அ | 133.இ | 134.அ | 135.ஆ | 136.அ | 137.ஈ | 138.ஆ | 139.அ | 140.இ |
| 141.அ | 142.ஈ | 143.ஆ | 144.ஈ | | | | | | |

**இயல் அய்ந்து**

# தத்துவம் - சிந்தனை - இலட்சியங்கள்

## அனைவர்க்கும் அனைத்தும்

தத்துவம் - சிந்தனை - இலட்சியங்கள் என்ற இந்த 5ஆம் இயலில் மொத்தம் 143 வினா விடைகள் உள்ளது. அவற்றில் ஒழுக்கம், நாகரிகம், கற்பு, கடவுள், மதம், சமவுரிமை, பெண்ணுரிமை ஆகிய அனைத்திற்கும் தந்தை பெரியாரின் கருத்துகள் தனித்தன்மை வாய்ந்த சுய சிந்தனைகளாக விளங்குகின்றன. மனிதநேயத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவையாகும். அவற்றை வினா விடைகளாகப் படித்து தெளிவு பெறும் விதத்தில் தொகுக்கப்பட்டுள்ளது. வினாக்களில் வரும் சில முக்கிய சொற்களுக்கான விளக்கங்கள் தரப்படுகின்றன.

தந்தை பெரியார் அவர்கள் அறிவு ஆசானாக நின்று போதித்த பொழுது சொன்னார்: என்னுடைய இயக்கம் மக்கள் இயக்கம் - மனித நேய இயக்கம் - பகுத்தறிவு இயக்கம். **இந்த இயக்கத்தினுடைய தத்துவம் இரண்டே வார்த்தைகளில் சொல்லுகிறேன். "அனைவர்க்கும் அனைத்தும்".** எல்லார்க்கும் எல்லாமும் இருப்பதான இடம் நோக்கி நடக்கட்டும் இந்த வையகம்" என்று புரட்சிக்கவிஞர் அவர்கள் அழகாகச் சொன்னார். அதற்குப் பெயர்தான் சமதர்மம், அதற்குப் பெயர்தான் மனித தர்மம், அதற்குப் பெயர்தான் சுயமரியாதை.




**பிறவிபேதம்**

மனிதர்களை பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்று நான்கு வர்ணங்களாகப் பிரித்து பிராமணர்களுக்கு சலுகையும், சூத்திரர்களுக்கு அநீதியும் வழங்குவது மனுதர்மம்.

ஆண் எஜமான் என்றும், பெண் அடிமை என்றும் பிரித்து அநீதி வழங்குவதுதான் மனுநீதி. இப்படிப்பட்ட பிறவி பேதத்தை ஒழித்து சமத்துவம் உள்ள மனிதர்களாக மாற்றுவதற்கே பெரியார் போராடினார். வெற்றி கண்டார்.

## குறிப்பு:

**வர்ணசிரம தர்மம்:**

பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற நான்கு வருணங்கள் என்னால் உண்டாக்கப்பட்டவை அவரவர்களுக்குரிய கருமங்களை அவரவர் மீறாமல் செய்யவேண்டும். அதனை மாற்றச் செயல்பட வைக்க அந்த வருண தர்ம உற்பத்தியாளராகிய (கிருஷ்ணன்) என்னால் கூட முடியாது" என்று கீதை அத். 4 சுலோ. 13இல் உள்ளது.

**தர்மம்**

தர்மம் என்று இதிகாசங்களான இராமாயணத்திலும், பாரதத்திலும, பகவத் கீதையிலும், அதற்கு முன் பழக்கத்திலிருந்த வேதங்களிலும் கூறப்பட்டது வர்ண தர்மத்தையே ஆகும்.

**ஆட்சி முறை:**

வர்ணதர்மப்படி வைசியர்களும், சூத்திரர்களும் பெண்களும் கீழானவர்களாவார்கள் எனக் கருதப்படும் நிலையில் அம்மக்கள் பிறவி அடிப்படையில் அமைந்த அவரவர் குல தர்மத்தைத்தான் தொழிலாகச் செய்திகிறார்களா என்று பார்த்து 'ராஜ்யபரிபாலனம்' செய்வதே மன்னர்கள் ஆட்சி முறையாக இருந்து வந்தது.

**குற்றவியல் சட்டத் தண்டனைகள்:**

முந்தைய ஆட்சிகளில் வர்ணதர்ம முறைப்படிதான் குற்றவியல் சட்ட தண்டனைகள் தரப்பட்டன. எடுத்துக்காட்டாக மனுதர்மப்படி “சூத்திரன் தன் தொழிலை விட்டு உயர் குலத்தோனுடைய தொழிலைச் செய்தால் அவன் பொருள் முழுவதும் பறித்துக் கொண்டு அரசன் அவனை நாட்டை விட்டுத் துரத்திவிட வேண்டும்.

(மநு. அத். 10, சுலோகம் 96)

“பிராமணன் கொடிய குற்றம் செய்தானாயினும் அவனைக் கொலை செய்யாமலும் துன்பப்படுத்தாமலும் அவனுக்குப் பொருளைக் கொடுத்து அயலூருக்கு அனுப்ப வேண்டும்.”

(மநு. அத். 8, சுலோகம் 380)

“பிராமணனுக்குத் தலையை மூண்டிதஞ் செய்வது (மொட்டை யடிப்பது) கொலைத் தண்டனையாகும். மற்ற வருணத்தாருக்குக் கொலை தண்டனை உண்டு.”

(மநு. அத். 8, சுலோகம் 379)

**மனுதர்மம்**

மனுதருமத்தின் ஆசிரியர் “மனு” என்பவர் என்றும், அவர் எழுதியதால் அந்த நூலுக்கு “மனுதருமம்” என்று பெயர் வந்தது என்றும் ஒரு சிலர் கருதுகின்றனர்.

ஆனால் மனுதருமத்தின் ஆசிரியர் பலர் என்ற கருத்தினையே ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பிறப்பின் அடிப்படையில் மக்களிடையே வேற்றுமையை ஏற்படுத்தி அவர்களுக்குள் உயர்வு தாழ்வுகளைக் கற்பித்தது பிளவுபடுத்தியது மனுதர்மம்.

பெண்களை இழிவுபடுத்தும் நீதியை தர்மமாக கொண்டது.

மனித நேயத்திற்கு எதிரான நீதிமுறையைக் கொண்டது மனுதர்மம்.

நாகரிக உலகில் சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்ற உலக நீதிக்கு எதிராக ஆளுக்கொரு நீதி, குலத்துக்கொரு நீதி கூறுவதுதான் மனுதர்மம் ஆகும்.

மனுதர்மத்தை எதிர்த்து மனித தர்மத்தை நிலைநாட்ட தந்தை பெரியார் அயராது போராடினார். வெற்றி கண்டார்.

**பொதுத் தொண்டு**

தந்தை பெரியாரைப் பொருத்தவரை பொது வாழ்க்கைக்கு வருவோருக்கு இருக்க வேண்டிய சூழல்களாக இரண்டை குறிப்பிடுகிறார்.

ஒன்று அவர்கள் செய்யும் பொது நலப் பணியால் பிழைப்பவர்களாக அவர்கள் இருக்கக் கூடாது.

மற்றொன்று அவர்கள் செய்யும் பொதுப்பணியில் பதவி, பெருமை, இலாகம், தனி அந்தஸ்து போன்ற எந்தப் பலனும் பெற நினைக்கக்கூடாது.

தந்தை பெரியார் கருத்துப்படி ஒரு பொதுத் தொண்டர் என்பவர் நேரம், காலம், தனிப்பட்ட மான அவமானம் என்று எதையும் பார்க்கக் கூடாது என்கிறார்.

**ஒழுக்கம்**

தந்தை பெரியார் பார்வையில் ஒழுக்கம் என்பது, “மற்றவர் தம்மிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறாரோ அதுபோலவே தாமும் மற்றவரிடம் நடந்து கொள்ள வேண்டும்” என்பதாகும்.

கடவுள், மதம், பக்தி முதலியவை தனி நம்பிக்கைகள் என்றும், அவை இல்லாவிட்டால் நட்டமில்லை என்றும் ஒழுக்கம், நாணயம், உண்மை ஆகியவை பொதுச் சொத்துக்கள் என்றும் நாணயமும் உண்மையும் அற்றவன் பிறரை ஏமாற்றித் தொல்லையும் வேதனையும் உண்டாக்குகிறான் என்றும் கூறுகிறார்.

**நாகரீகம்**

பெரியாரின் பார்வையில் நாகரீகம் என்பது மனித நேயமே ஆகும். தனக்கு என்னென்ன வசதிகள், நன்மைகள், பெருமைகள் தேவை என்று கருதப்படுகிறதோ, அவற்றை சமுகத்தில் உள்ள அனைவருக்கும் அடையச் செய்யும் வழியில் நடப்பதே உண்மையான நாகரீகமாகும்.

**பெண்ணுரிமை**

பெரியாரின் பார்வையில் பெண்ணுரிமை என்பது புரட்சிகர சிந்தனையாகும். பெண் விடுதலையை பற்றிக் கூறும்போது பெரியார்: கல்வி, வேலைவாய்ப்பு, பதவி, சொத்து ஆகியவற்றில் சம உரிமை அளிப்பதும் மணமகனைத் தேர்வு செய்யும் உரிமை, கருத்தடை செய்து கொள்ளுதல், மணவிலக்கு பெறும் உரிமை, மறுமணம் செய்யும் உரிமை போன்றவையே பெண் விடுதலைக்கான வழிகள்.

கற்பு என்பதை பெரியார் சுகாதாரம், உடல் நலம், பொது ஒழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் இருபாலருக்குமானதாக ஆதரிக்கிறார்.

மேலும், பெண்களை படிக்க வைத்துவிட்டால் பெண்கள் தங்கள் கற்பை காப்பாற்றிக் கொள்வதுடன் ஆண்களின் கற்பையும் காப்பாற்றுவார்கள் என்பது தந்தை பெரியாரின் கருத்தாகும்.

**சுயமரியாதை**

சுயமரியாதையை மக்கள் தங்கள் உயிருக்கு சமமானதாகக் கருத வேண்டும் என்பது தந்தை பெரியாரின் கருத்தாகும்.

சுயமரியாதை இயக்கத்தின் தத்துவமாக தந்தை பெரியார் கூறுவது உலகம் உள்ளவரை காக்கப்பட வேண்டிய கருத்துப் பெட்டகமாகும்.

**சுயமரியாதைத் தத்துவம்**

“எந்தக் காரியமானாலும் காரண காரியம் அறிந்து செய், சரியா - தப்பா என்பதை அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் விட்டு விடு எந்த நிர்ப்பந்த சமயத்திலும் அதன் முடிவுக்கு மரியாதைக் கொடு.”

■

# தத்துவம் - சிந்தனை - இலட்சியங்கள்

– கு.வெ.கி. ஆசான் –

## I பொதுத் தொண்டு

1) **பொதுப்பணிக்கு வருவோர்க்கு இருக்க வேண்டிய இரண்டு சாதகமான சூழல்கள் எவை எனப் பெரியார் கூறுகிறார்?**

அ) பரம்பரையான குடும்பப்பெருமையும் செல்வமும்

ஆ) பெரிய படிப்பும் பெரியவர்கள் தொடர்பும்

இ) பொதுநலப் பணியால் பிழைக்கிறோம் என்பதும், அதனால் பதவி, பெருமை அந்தஸ்து லாபம் எனும் வகையில் சிறு பலனாவது பெறுகிறோம் என்பதும் இல்லாமை

ஈ) நல்ல அரசியல் அனுபவம், பொருளாதார அறிவு

2) **பொதுத் தொண்டன் எதைப் பார்க்க(லட்சியம் செய்ய)க் கூடாது என்கிறார் பெரியார்?**

அ) பட்டம் பதவி

ஆ) நேரம் , காலம், தனிப்பட்ட மான அவமானம்

இ) நாட்டுப் பற்று, மொழிப் பற்று

ஈ) இவை எல்லாமும்

3) **“அவர்களுடைய குடும்பங்கள் மக்களின் சராசரி வாழ்க்கைத் தரத்துக்கு மேல் வாழக்கூடாது, வாழவே கூடாது” - இங்கு யாருடைய குடும்பங்களைப் பற்றிப் பெரியார் கூறுகிறார் ?**

அ) அலுவலர்கள்

இ) பொதுத் தொண்டர்கள்

ஆ) அரசியல்வாதிகள்

ஈ) ஆசிரியர்கள்

# II இனம், அரசியல். நிருவாகம்

**4) வெள்ளிப்பூண் பூட்டிய பழைய அடிமை விலங்கு மாற்றப்பட்டு, தங்கப்பூண் பூட்டிய புதுவிலங்கு பூட்டப்பட்டது. இந்த வாசகத்தை எதைக் குறித்துப் பெரியார் பயன்படுத்தினார்?**

அ) பெரியார் காங்கிரசில் இருந்தபோது, 1920 இல் வெற்றி பெற்ற நீதிக் கட்சி, ஆங்கிலேயர் ஏற்படுத்திய 1919 ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் ஆட்சியை ஏற்றதைக் குறித்து

ஆ) 1947இல் வெள்ளையர் ஆட்சி முடிந்து, பார்ப்பன பனியா ஆட்சி ஏற்படும் என்பதைக் குறிக்க

இ) 1950 இல் இந்தியக் குடியரசு அரசியல் சட்டம் வந்தபொழுது

ஈ) இவை எவற்றையும் குறிக்கவில்லை

**5) 1938 டிச 29, 30, 31 இல் சென்னையில் நடந்த நீதிக்கட்சி மாநாட்டில், அப்போது சிறையில் இருந்த பெரியாரை, அக் கட்சியின் தலைவராக முதன்முறையாகத் தேர்ந்தெடுத்தனர். அவர் எழுதிய தலைமை உரை மாநாட்டில் படிக்கப்பட்டது. அதில் இந் நாட்டில் உள்ள திராவிடர்கள் அனைவரையும் புரோகிதர்கள் ஆதிக்கம் செலுத்துவதாகக் குறிப்பிட்டார். திராவிடர் எனும் இனத்துள் அடங்குவோரைப் பற்றியும் அதில் குறிப்பிடுகிறார். அவர்கள் யார்?**

அ) சூத்திரர் ஆ) முஸ்லீம்கள் மற்றும் கிறித்துவர்

இ) தாழ்த்தப்பட்டவர்கள் ஈ) மேலே குறிப்பிட்ட எல்லோரையும்

**6) புரோகிதர் ஆட்சி ஒழியத் தேவையானவை எவை எனப் பெரியார் 1938 நீதிக்கட்சி மாகாண மாநாட்டுத் தலைமையுரையில் குறிப்பிடுகிறார்?**

அ) அரசியல் விழிப்புணர்வு

ஆ) தலைமைக்குக் கட்டுப்படல்

இ) திராவிட மக்களுக்குள் அபார ஒற்றுமையும் அபார பகுத்தறிவு ஆராய்ச்சியும்

ஈ) மொழி, இனப்பற்று

**7) " நான் இன்று பிரிவினை கேட்கவில்லை; கேட்கிறேன் என்றால் நிபந்தனை இல்லாமல் இல்லை" என 7.3.1973இல் கூறிய பெரியாரின் நிபந்தனை யாது?**

அ) இந்திய ஆட்சியில் ' பிராமணர்கள் 'இல்லை; 'சூத்திரன்' இல்லை,; பார்ப்பானின் தாசிமகன் இல்லை; எல்லாக் குடிமக்களும் சம அந்தஸ்துள்ள, சகோதரத் தன்மையுள்ள மக்களாவார்கள் என்று சட்டம் செய்ய வேண்டும்

ஆ) மாநிலத் தன்னாட்சி அளிக்க வேண்டும்

இ) தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும்

ஈ) இந்தித் திணிப்பைக் கைவிட வேண்டும்

**8) இந்தியாவின் பூர்வகுடிகள், ஆரியர்களுக்குக் கீழான மக்களாக ஆக்கப்பட்டது எதனால் எனப் பெரியார் கருதுகிறார்?**

அ) ஆரியர்களின் வெள்ளைத் தோலுக்கு மயங்கியது

ஆ) ஆரியர்களின் கூர்த்த மதியை எதிர்கொள்ள முடியாமை

இ) ஆரியர்கள், பூர்வகுடிகளின் கலாச்சாரத்தை நீக்கித் தங்களுடைய கலாச்சாரத்தைப் புகுத்திவிட்டனர்

ஈ) ஆரியர்களின் போர்க்கள வெற்றி

**9) மாநில மற்றும் மத்திய அரசுப் பணியாளர்களிடையில் ஒரு விசயத்தில் கண்டிப்பாகப் பேதம் (வேற்றுமை) கூடாது எனப் பெரியார் குறிப்பிடுகிறார். அது எது?**

அ) கல்வித் தகுதி ஆ) ஒய்வு பெறும் வயது

இ) வகுப்புரிமை ஈ) சம்பளம்

**10) "சர்க்கார் (அரசாங்க) உத்தியோகத்தை. . . . . என்று கருதாமல் பொறுப்புடன் வேலை செய்யக் கண்டிப்பு வைக்க வேண்டும்" பெரியாரின் இந்த கூற்றில் விடுபட்ட இடத்திற்கான சரியான சொற்கள் யாவை ?**

அ) சுயலாபத்திற்கு ஆனது ஆ) நமது சொந்த வேலை அல்ல

இ) சத்திரம், சோம்பேறி மடம் ஈ) யாருக்கோ பணி செய்கிறோம்

**11) அண்மைக் காலம் வரை இந்திய நாட்டை ஆண்ட அரசர்கள் எத்தன்மையராய் இருந்தனர் எனப் பெரியார் கூறுகிறார் ?**

அ) ஒருவருக்கு ஒருவர் சண்டை போடுகிறவர்கள்

ஆ) குடிமக்களைக் கொடுமைப்படுத்தியவர்கள்

இ) பார்ப்பனருக்கு அடிமைகள்

ஈ) குடிகளிடம் அதிக வரி வாங்கினர்

# III பொது

**12. "தமிழும் ஒருகாலத்தில் உயர்ந்த மொழியாகத்தான் இருந்தது. இன்று அது வடமொழிக்கலப்பால் இடது கைபோலப் பிற்படுத்தப்பட்டு விட்டது. இந் நோய்க்கு முக்கியக் காரணம் . . " பின்வருவன வற்றில் எதைக் கொண்டு பெரியாரின் இக் கூற்றில் உள்ள கோடிட்ட இடத்தை நிரப்ப வேண்டும் ?**

அ) தமிழ்மொழி மதச் சார்புடையாரிடம் சிக்கிக் கொண்டதுதான்.

ஆ) பல்லவர் காலம் முதல் தமிழ் அரசர்கள் பார்ப்பன ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர்

இ) கோயிலில் சமற்கிருதம் அர்ச்சக மொழி ஆகிவிட்டது.

ஈ) இல்லச் சடங்குகளில் சமற்கிருதம் இடம் பெற்றுவிட்டது

**13) ஒழுக்கம் எனப் பெரியார் குறிப்பது எதை ?**

அ) கடவுள் பக்தி அற்றவர்களாக இருக்க வேண்டும்

ஆ) எந்த மதத்திலும் சாராதவர்களாக இருக்க வேண்டும்

இ) மற்றவர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று நினைக்கிறோமோ, அதன்படியே நாம் மற்றவரிடத்தில் நடந்துகொள்ளவேண்டும்

ஈ) பொய் பேசாமை, திருடாமை, நாணயம்

**14) பொதுவுடைமை ஏற்படுவதற்கு முன்பு எதைப் பெறவேண்டு மென்கிறார் பெரியார்?**

அ) நாட்டு விடுதலை

ஆ) மூடநம்பிக்கையிலிருந்து அறிவுக்கு விடுதலை

இ) பொதுவுரிமை

ஈ) இவை அனைத்தும்

**15) கடவுள், மதம், பக்தி முதலியவை தனிநம்பிக்கைகள் என்றும், அவை இல்லாவிட்டால் நட்டம் இல்லை என்றும், ஒழுக்கம் நாணயம், உண்மை ஆகியவை பொதுச் சொத்து என்றும் கூறி அவற்றின் தேவையைப் பெரியார் எவ்வாறு வலியுறுத்துகிறார் ?**

அ) ஒழுக்கம், உண்மை, நாணயம் இல்லாவிட்டால் மனித சமுதாயத்திற்குக் கேடு

ஆ) ஒழுக்கம் இல்லாதவன் பிறர் செய்யும் காரியத்திற்குத் தொல்லை விளைவிக்கிறான்

இ) நாணயமும் உண்மையும் அற்றவன், பிறரை ஏமாற்றித் தொல்லையும் வேதனையும் உண்டாக்குகிறான்

ஈ) மேலே சொல்லப்பட்டவை அனைத்தும்

**16) பின்வரும் கூற்றுக்களில் எவை பெரியாருடையவை?**

அ) ஆசையும் மடமையும் அச்சமும் சேர்ந்தே மனிதனுக்குக் கடவுள் கற்பிக்கப்பட்டு, புகுத்தப்பட்டு அறிவின் பயனைக் கெடுத்துக்கொண்டு கவலைக்கும் துக்கத்திற்கும் ஆளாகி அழிகிறான்

ஆ) எல்லாம் இயற்கை என்று எண்ணி இருப்பவர்களுக்குத் துக்கம், கவலை இல்லை

இ) கடவுள் நம்பிக்கை, பக்தி ஆகியவை இருப்பதற்குக் காரணம் ஆசையே தவிர , மனிதனை ஒழுக்கம் உடையவனாகவோ மற்றவர்களுக்குப் பயன்படும்படி செய்யவோ அல்ல

ஈ) மேற்கூறிய அனைத்தும்

17) **“நாம் ஒரு காலத்தில் தேசம், தேசியம், தேசப்பற்று என்பதை நாகரிகமாகக் கருதிவந்தோம். ஆனால் இன்று அவைகளை உதறித் தள்ளி விட்டோம்” எனச் சொல்லும் பெரியார் எவற்றைப் பெரிதும் நாகரிகமாகக் கருதுகிறார்?**

அ) விஞ்ஞானக் கண்டுபிடிப்புப் பொருள்களைப் பயன்படுத்துவதை
ஆ) உலக மனிதநேயம்
இ) உலக சகோதரத்துவம்
ஈ) எந்தப் பற்றும் இல்லாதிருத்தல்

18) **நாகரிகத்தைப்பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் எது பெரியாருடையது இல்லை?**

அ) எம்மதமும் சம்மதம் எனக் கொள்வதே நாகரிகத்தைக் குறிக்கும்
ஆ) தனக்கு என்னென்ன வசதிகள், நன்மைகள், பெருமைகள் தேவை என்று கருதப்படுகிறதோ, அவற்றைச் சமுதாயத்தில் உள்ள அனைவரும் அடையச் செய்யும் வழியில் நடப்பதே உண்மையான நாகரிகம்.
இ) சமுதாயத்தின் பொதுவான (ஒட்டுமொத்த) முன்னேற்றமே நாகரிகம்
ஈ) இந்தக்கால விஞ்ஞான அறிவுப் பெருக்கத்திற்கு ஏற்றவகையில் முன்னேறியும் மாறியும் வாழ்க்கையை இன்ப மயமாகத் திகழச் செய்வதே நாகரிகம்.

19) **பின்வரும் கூற்றில் கோடிட்ட இடத்திற்கான சொற்றொடர் யாது? “ஏற்கக்கூடிய அளவுக்கும், நற்பயன் தரவேண்டிய அளவுக்கும்.... உபயோகித்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்பதை நாம் வலியுறுத்துவதில் பின் வாங்க மாட்டோம்”**

அ) பழையவைகளை ஆ) திரைப்படங்களை
இ) பத்திரிகைகளை ஈ) தேர்தல் அரசியலை

20) **கொடுக்கப்பட்டுள்ள பெரியார் கூற்றில் கோடிட்ட இடத்திற்கான சொற்றொடர் யாது? “ஆனால் புதியவற்றிலேயே முயற்சியும், ஆராய்வதில் ஆர்வமும் இருக்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில் அவற்றினால்தான் . . . . என்பதோடு புதியவற்றைக் கண்டுபிடிப்பதும் (இன்வென்சன்) முற்போக்கு அடைவதும் (ப்ராக்ரஸ்) சுலபத்தில் சாத்தியமாகலாம்” ?**

அ) உலக நடப்பைத் தெரிந்து கொள்ளலாம்
ஆ) வேலை வாய்ப்பைப் பெருக்கிக் கொள்ளலாம்
இ) இயற்கையைப் படிப்பது
ஈ) மூட நம்பிக்கையிலிருந்து விடுபடலாம்

21) “. . . . . என்கிற கொள்கையானது, உயரிய சரியான முறையில் நம்முடைய நாட்டில் ஏற்பட்டு விடுமானால், ஜன சமூகமானது கவலையற்று, சஞ்சலமற்று, நாளைக்கு என்ன செய்வது என்று ஏங்கித் தத்தளித்துக்கொண்டிருக்கும் நிலைமையற்று நிம்மதியாக, சாந்தியாக, திருப்தியுடன் குதூகலமாக வாழ வழியேற்பட்டு விடும்”, பெரியார். கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கான சொல் யாது?

அ) சமதர்மம் ஆ) கூட்டுறவு

இ) பொதுவுடைமை ஈ) சுயமரியாதை

22) கொடுக்கப்பட்டுள்ள பெரியார் வாசகத்தை நிறைவு செய்யத் தகுந்த சொற்றொடர் யாது ? “மனிதன் ஒரு காரியத்தை எப்போதும் ஒரே மாதிரி செய்து கொண்டு வருபவன் அல்லவே. மனிதன் பகுத்தறிவுச் சிந்தனை உடையவன் ஆதலால் அவன் ஒரு . . . .”

அ) வளர்ச்சிப் பிராணி ஆ) உயர்ந்த பிறவி

இ) ஒழுக்கம் உடையவன் ஈ) மற்ற உயிர்களை ஆளக்கூடியவன்

23) உண்மையான இன்பம் என்பதாகப் பெரியார் எதைச் சொல்கிறார்?

அ) பிறர்க்குத் தொண்டு செய்வதால் ஏற்படும் இன்பம்

ஆ) ஒருவனும் ஒருத்தியும் இல்லறம் நடத்தும் இன்பம்

இ) உயர்ந்த இலக்கியங்களில் இருந்து பெறும் இன்பம்

ஈ) தெளிந்த கொள்கையாளர்களின் கூட்டுறவு தரும் இன்பம்

24) ஒரு மொழியின் சிறப்பையும் அதைப் பேசும் மக்களின் நாகரிகத்தையும் அறிவையும் எதைக்கொண்டு அறிந்து கொள்வது என்கிறார், பெரியார் ?

அ) அந்த மொழியில் உள்ள தொன்மை நூல்களைக் கொண்டு

ஆ) பெரும்பாலும் அந்த மொழியின் மூலம் அறியக்கிடக்கும் கருத்துக்களைக் கொண்டு

இ) அந்த மொழியின் எளிமையைக் கொண்டு

ஈ) அந்த மொழியின் பாடல்களின் இனிமையைக் கொண்டு

25) பெரியார் கருத்தில் வாழ்க்கையில் வெற்றியை உண்டாக்க வல்ல ஆயுதங்கள் யாவை?

அ) கல்வி ஆ) தொழிற்பயிற்சி

இ) கேள்விஞானம் ஈ) கனிவு, துணிவு, பணிவு

**26) 1938 டிச. 5,6- இல் கட்டாய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி வழக்கில், நீதி மன்றத்தில் பெரியார் கொடுத்த அறிக்கையின் ஒரு பகுதியில் உள்ள விடுபட்ட இடத்தை நிரப்பச் சரியான சொற்றொடர்கள் யாவை? "எவ்வளவு நியாயமான லட்சியத்தை அடைய வேண்டுமானாலும் அதற்காக . . . என்னும் விலையைக் கொடுக்க வேண்டும்"**

அ) சிறைக்குப் போதல் ஆ) தண்டனை அடைதல்
இ) கஷ்ட நஷ்டங்களை அடைதல் ஈ) இழப்புகளை ஏற்றல்

**27) ஒரு நண்பருக்குப் பெரியார் 14. 05. 1931இல் எழுதிய மடலின் கருத்துக்களைக் கீழே தந்துள்ளோம். அதில் ஒன்று மட்டும் அவருடையது அன்று. அது எது ?**

அ) தம்மைப் பெரிதாகவும், தம் தகுதிக்கு மேற்பட்ட சன்மானம் வேண்டும் என்றும் எண்ணிக் கொண்டிருப்பவர்கள் எப்போதும் கஷ்டப்பட்டே தீருவார்கள்
ஆ) ஒருவரின் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்றால், மற்றவரைப் போல் உயர்ந்த பதவியும், நிறைந்த செல்வமும் வேண்டும் என எண்ணக் கூடாது.
இ) வருவாய் போதாமல் இருப்பதற்கும், கடன்காரர்களாயிருப்பதற்கும் காரணம் நமது பலவீனத்தின் பயனான பேராசையும் அவசரமுமேயாகும்.
ஈ) நான்மூட்டைதூக்குவதில் பாரத்தினால் கஷ்டப்பட்டிருப்பேனே யொழிய மூட்டை தூக்குவது அவமானம் என்று ஒருபோதும் கருதியதில்லை. அதுபோல் மனத்தைக் கட்டுப்படுத்தச் சக்தியிருந்தால் எல்லாம் தானாகவே சரிப்பட்டுவிடும்.

**28) இங்குள்ள பெரியாரின் வாசகத்தில் உள்ள கோடிட்ட இடத்திற்குரிய சரியான சொற்றொடர் யாது?**

". . . . வாழும் இயற்கையைக் கொண்ட மக்களுக்கு, அது கவலையையும் பொறாமையையும் கொடுத்துக் கொண்டிருக்கும்"

அ) உடல் உழைப்பால் மட்டும் ஆ) பேராசையுடன்
இ) சிந்திக்கும் குணம் இன்றி ஈ) சோம்பேறியாக இருந்து

**29) வெறும் உத்தியோகத்திற்குப் பயன்படுவதாக இல்லாமல், பிறவற்றிக்குப் பயன்படும்படியாகக் கல்வியை மாற்றியமைக்க வேண்டும் எனப் பெரியார் கூறுகிறார். எவ்வாறு?**

அ) தூய அரசியல் நடத்துவதற்கு
ஆ) வெளிநாட்டில் வேலை பெறுவதற்கு
இ) பொதுத் தொண்டு செய்வதற்கு
ஈ) அறிவு வளர்ச்சிக்கும் சொந்தமாகத் தொழில் செய்யவும்





**30) 20.6.1956இல் பெரியார் தெரிவித்த கருத்து இது: “. . . . . இல்லையானால் மனித சமுதாயமே வேண்டாம் என்று தோன்றுகிறது.” எவை இல்லை என்றால் ?**

அ. சுயமரியாதை

ஆ) சுதந்திரம்

இ) கடமை உணர்வு

ஈ) ஒழுக்கமும் அன்பும்

**31) ஒருநாட்டில் ஒரு குறிப்பிட்ட இரண்டு பிரிவுகள் இருக்கும் வரை, மேல் - கீழ் நிலை இருந்துதான் தீரும் எனப் பெரியார் கூறுகிறார். அவை எவை?**

அ) முதலாளி – தொழிலாளி

ஆ) பாடுபட்டு உண்கிறவன் – பாடுபடாமல் உண்கிறவன்

இ) ஏழை – பணக்காரான்

ஈ) நிலப்பிரபு – பண்ணையாள்

**32) பெரியார் தமது இயக்கத்தையும் சுயமரியாதைக் கொள்கைகளையும் எப்படி வளர்ச்சியடைய செய்யலாம் என்கிறார்?**

அ) பலாத்காரத்தால்

ஆ) அரசாங்க ஒத்துழைப்புடன்

இ) அறிவுத் தெளிவை மக்களுக்கு உண்டாக்குவதால்

ஈ) பார்ப்பனரை அடக்குவதால்

**33) மனிதருக்கு அழகு எது என்கிறார், பெரியார்?**

அ) எளிய உடை ஆ) உடல் தூய்மை இ) மானமும் அறிவும்

ஈ) அடக்க ஒடுக்கம் உ) பெண்ணியம்

**34) எந்த ஒரு அரசாங்கமும் இழிவான கெட்ட பழக்கம் கடவுள் பேராலும், மதத்தின் பேராலும், சமூகத்தின் பேராலும் தேசீய வழக்கத்தின் பேராலும் இருந்துவர ஒரு கண நேரமும் விட்டுக்கொண்டு வந்திருக்காது - பெரியார் இங்கு குறிப்பிடும் பழக்கம் யாது?**

அ) வருணாசிரம தர்மம்

ஆ) தீண்டாமை

இ) உயிர்ப்பலி

ஈ) தேவதாசி முறை

**35) கற்பு என்பதைப் பெரியார் எந்த அடிப்படையில் ஆதரிக்கிறார்?**

அ) சுகாதாரம், உடல்நலம், பொதுஒழுக்கம் ஆ) தமிழர் பண்பாடு

இ) நற்பெயர் ஈ) பகுத்தறிவு

**36) பின்வரும் பெரியார் வாசகத்தில் கோடிட்ட இடத்தில் எந்தச் சொல்லைப் போடவேண்டும்? "பெண்களுத்தான் கற்பு, ஆண்களுக்கு வலியுறுத்தக் கூடாது என்கிற தத்துவமே . . . . தத்துவத்தைப் பொறுத்தது."**

அ) கடவுள் ஆ) இதிகாச புராண வழிவந்த

இ) ஆரியர் வழிவந்த ஈ) தனியுடைமை

**37) எங்காவது பூனைகளால் எலிக்கு விடுதலை உண்டாகுமா ? நரிகளால் ஆடு, கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? முதலாளிகளால் தொழிலாளிகளுக்கு விடுதலை உண்டாகுமா? வெள்ளைக்காரர் களால் இந்தியருக்குச் செல்வம் பெருகுமா? பார்ப்பனர்களால் பார்ப்பனர் அல்லாதாருக்குச் சமத்துவம் கிடைக்குமா? இந்தக் கேள்விகளைக் கேட்டுப் பெரியார் வற்புறுத்தும் உண்மை யாது?**

அ) ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது

ஆ) வெள்ளையர்களால் கறுப்பர்களுக்கு உரிமை வராது

இ) மதவெறியர்களிடம் இருந்து மனிதநேயம் பிறக்காது

ஈ) இவை எவையும் அல்ல.

**38) ஆண்கள் பார்க்கும் எல்லா வேலைகளையும், தொண்டுகளையும் பெண்கள் பார்த்துச் செய்யமுடியும் எனும் பெரியார், நகைப் பித்து, துணி அலங்காரப் பித்து ஆகியவற்றை அணிந்து கொண்டு சாயல் நடை போடும் பெண்கள் எத்தன்மையவர் என்கிறார் ?**

அ) அடிமைத் தன்மை ஆ) இழிவுத் தன்மை

இ) சுயமரியாதை அற்ற தன்மை ஈ) மேலே சொன்ன மூன்று தன்மைகளும்.

**39) இல் வாழ்வில் ஆணுக்குப் பெண் துணை; பெண்ணுக்கு ஆண் துணை எனக்கூறும் பெரியார் துணை என்பதற்கு என்ன விளக்கம் அளிக்கிறார்?**

அ) நட்பு ஆ) உதவி

இ) சமபங்கு ஈ) மேலே சொன்ன மூன்றும்





**40) பெண்களின் கல்விக்கும் கற்புக்கும் உள்ள தொடர்பு என்னவென்று பெரியார் கூறுகிறார்?**

அ) பெண்கல்வி கற்பை பாதிக்காது

ஆ) படித்துவிட்டால் கற்பைப் பற்றிக் கவலை கொள்ளமாட்டார்கள்.

இ) பெண்களுக்கான கல்வியில் கற்பை வலியுறுத்த வேண்டும்

ஈ) பெண்களைப் படிக்கவைத்துவிட்டால், தங்கள் கற்பு மாத்திரம் அல்லாமல் ஆண்கள் கற்பையும் காப்பாற்றக்கூடிய தன்மை வந்துவிடும்.

**41) பெண்களின் விடுதலைக்குப் பெரியார் சொல்லும் வழிமுறைகள் யாவை?**

அ) கல்வி, வேலைவாய்ப்பு, பதவி, சொத்து ஆகியவற்றில் சமஉரிமை

ஆ) மணமகனைத் தேர்ந்தெடுக்கவும் கருத்தடை செய்து கொள்ளவும் உரிமை

இ) மணவிலக்குப் பெறவும் மறுமணம் செய்யவும் உரிமை

ஈ) மேலே சொன்ன எல்லாமும்

**42) தமிழில் உள்ள கற்பு ஆங்கிலத்தில் சேஸ்டிடி எனும் சொற்கள் பெண்களுக்கு மாத்திரம் கற்பைத் தொடர்பு படுத்தவில்லையென்றும், ஆரிய பாஷையில் (வடமொழியில்) கற்பைக் குறிக்கும் சொல், பெண்களை ஆண்களுக்கு அடிமையாக்குவதாக இருப்பதாகவும் பெரியார் எழுதியுள்ளார். அந்தச் சொல் யாது?**

அ) பாரியை ஆ) ஸ்திரீ இ) பதிவிரதை ஈ) நாரி

**43) கர்ப்பத் தடைக்குப் பெரியார் கூறும் தலையாய காரணம் என்ன?**

அ) பெண்கள் விடுதலையும் சுயேச்சையும் பெறல்

ஆ) பெண்களின் உடல்நலம்

இ) நாட்டின் பொருளாதார உயர்வு

ஈ) குடும்பச் சொத்துக் குலையாமல் இருக்க

**44) “. . . . . . . . . . . எனது நினைவுக்கு வரும் பொழுதும், நேரில் காண நேரும் போதும், இது உலக இயற்கை அல்ல. எளியாரை வலியார் அடக்கி ஆண்டு இம்சிப்பதே யாகும் என்று முடிவு செய்வேன்”. பெரியாரின் இந்தக் கூற்றில் கோடிட்ட இடத்திற்கான சொற்றொடர் யாது?**

அ) முதலாளிகள் தொழிலாளிகளைச் சுரண்டுவது

ஆ) நிலப்பிரபுக்கள் பண்ணையாட்களை நடத்துவது

இ) விதவைகள் விஷயம்

ஈ) மேல் ஜாதியார் கீழ் ஜாதியாரை ஒடுக்குதல்

**45) உலகில் மனித வர்க்கத்தினருக்குள் இருக்கும் அடிமைத்தன்மை நீங்கப் பெரியார் சொல்லும் ஒரு வழி யாது?**

அ) வெள்ளையரும் கருப்பரும் வேற்றுமையின்றி வாழ வேண்டும்
ஆ) பொருள் சமத்துவம் நிலவ வேண்டும்
இ) பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும் கொடுமையும் அழிய வேண்டும்
ஈ) ஓர் உலக அரசு அமைய வேண்டும்

**46) இங்கே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் பெரியார் சொல்லாத வாக்கியம் எது?**

அ) உடைகளில் ஆண்–பெண் வித்தியாசம் கூடாது. வீண் அலங்காரம் செய்வது பெண்சமுதாயத்தைக் கீழ்மைப்படுத்தும்
ஆ) உடையில் வீண் ஆடம்பரத்தை ஒழிக்க வேண்டும்
இ) மேல் நாட்டாரைப் போன்று ஆண்–பெண் ஆடை அணிய வேண்டும்
ஈ) பெண்கள் கூந்தலை நீண்டு வளர்த்துக் கொள்வது அநாகரிகமும் தேவையற்ற தொல்லையும் ஆகும். கிராப் வைத்துக்கொள்ள வேண்டும்

**47) இரண்டு குழந்தைகளோடு குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள வேண்டும் என்று வருகிறபோது இரண்டும் பெண் குழந்தைகளாக இருந்துவிட்டால் ஓர் ஆண் குழந்தைக்காக அடுத்த முயற்சியில் ஈடுபடுகிறார்கள். அதற்கு என்ன செய்வது என, 1970-இல் மத்திய அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் வினவியபோது பெரியார் அளித்த பதில் என்ன?**

அ) கருத்தடையை கட்டாயமாக்க வேண்டும்
ஆ) மூன்றாவது குழந்தை பெறுவோர்க்கு வாக்குரிமை மறுக்க வேண்டும்
இ) வேலை வாய்ப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம எண்ணிக்கையில் 50–50 என்னும் வகையில் வாய்ப்பு அளிக்க வேண்டும்
ஈ) ஆணும் பெண்ணும் சம அறிவும் ஆற்றலும் உள்ளவர்கள் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும்

பார்ப்பனீயத்தின் கடைசி மூச்சு ஒழியும்வரை திராவிடர் இயக்கம் மட்டும் இருந்தே தீரும். அதுவரை எப்பேர்ப்பட்ட கொடுமை - அடக்குமுறை - சூழ்ச்சி - வஞ்சகம் ஆகியவைகளை அதன் எதிரிகளோ அரசியலாரோ கையாண்டாலும் சரி, இறுதியில் இயக்கக் கொள்கை வெற்றியுற்றே தீரும்.





# IV. சாதி, மதம், கடவுள்

**48) பின்வரும் கூற்றுக்களில் பெரியார் கூற்று எது?**

அ) இன்று நம்மை கறுப்புப் பண முதலைகள்தான் ஆள்கிறார்கள்

ஆ) இப்பொழுது நம்மை ஆள்வது சுயநல அரசியல்வாதிகள்

இ) ஜாதிதான் இன்றைக்கு நம்மை ஆளுமே தவிர, உள்ளபடி ஜாதியைக் காப்பாற்றுவதை அடிப்படையாக வைத்து ஆட்சி நடத்துறாங்க

ஈ) வெள்ளையன் ஆட்சிபோய் இப்பொழுது கொள்ளையன் ஆட்சி நடக்கிறது

**49) ஒருத்தி தன் தெருவில், தன் வீட்டில், இது பதிவிரதை வீடு என்று போர்டு போட்டுக் கொண்டால் மற்றவர்கள் வீடு என்ன என்று அர்த்தம்?- எனப் பெரியார் எதைக்குறித்துச் சொன்னார்?**

அ) பார்ப்பனர் தம்மைப் பிராமணர் என அழைத்துக்கொள்வதால், மற்றவர்களைச் சூத்திரர் என இழிவுபடுத்தும் வருண தருமத்தை நிலைநாட்டுகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த

ஆ) எவரும் சாதிச்சங்கம் வைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக

இ) மொழியின் பெயரால் அடையாளம் காட்டுவதைக் கண்டிக்க

ஈ) மக்கள் தங்கள் நாட்டைப் பற்றிப் பெருமை பேசக்கூடாது எனத் தெரிவிக்க

**50) கொசுவலை உபயோகிப்பதால் நாம் கொசுக்களுக்குத் துவேஷிகளாகி விடுவோமா? மூட்டைப் பூச்சி கடிக்காமலிருப் பதற்கு நம் வீட்டை அடிக்கடி சுத்தம் செய்வதால் நாம் மூட்டைப் பூச்சி துரோகிகள் ஆகி விடுவோமா? எந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலாக பெரியார் இந்த எடுத்துக்காட்டுகளைக் கூறுகிறார்?**

அ) வகுப்புரிமையை விடாது வலியுறுத்துகிறார்

ஆ) பார்ப்பனர்களை வெறுப்பவர்

இ) மதத்தை மறுப்பவர்

ஈ) கடவுள் சிலைகளை உடைப்பவர்

**51) ஆரியச் சூழ்ச்சியாலும், ஆரிய சமய ஆதாரங்களாலும், திராவிட சமூகத்திடை நுழைக்கப்பட்ட சமுதாய உயர்வு தாழ்வு வேற்றுமைகளை வேரோடு களைந்து எறிய வேண்டும். திராவிடருக்குள்ளாகவே இன்று காணப்படும் உயர்வு தாழ்வுகளும் நீக்கப்படவேண்டும். அதற்காகத் தகுந்த வழிகளை வகுத்து தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - இப்படி ஒரு தீர்மானம் எந்த ஆண்டு, எந்த ஊரில் நடந்த மாநாட்டில் நிலைவேறிற்று?**

அ) 1930 – ஈரோடு சுயமரியாதை மாநாடு

ஆ) 1940 – திருவாரூர் நீதிக்கட்சி மாநாடு

இ) 1944 – சேலம் நீதிக்கட்சி மாநாடு

ஈ) இவை எவற்றிலும் இல்லை

**52) பின்வரும் பெரியாரின் கூற்றில் கோடிட்ட இடத்தில் இருக்க வேண்டிய சொல் யாது? "இன்றுள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் எங்களை ஒழிக்கப் பாடுபடுகிறார்களே தவிர ............ ஒழிய வேண்டியதற்கான பரிகாரம் என்னவென்பது பற்றி ஒருவனும் கவலைப்படுவது கிடையாது"**

அ) படிப்பு இன்மை ஆ) மூடநம்பிக்கை இ) சாதி ஈ) மதவெறி

**53) இந்து மதத்தை ஏற்க மறுப்பதற்கு அடையாளமாக 1953 மே 27 இல் கணபதி அல்லது விநாயகர் எனப்படும் கடவுள் சிலையைச் சொந்தச் செலவில் வாங்கி உடைக்கும் போராட்டத்தைப் பெரியார் நடத்தினார். அப்போழுது அவர் வெளிப்படுத்திய கருத்தின் ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது. அதில் கோடிட்ட இடத்தில் இட வேண்டிய சொற்றொடர் யாது? "எந்த நாட்டிலும் இல்லாத, நாட்டு நலனுக்காகவோ கல்வி நலனுக்காகவோ ஆட்சி நலனுக்காகவோ மக்கள் நலனுக்காகவோ அல்லாமல், பார்ப்பன நலனுக்கும் சர்வ ஆதிக்க நலனுக்கும் ஆகவுமே ஏற்படுத்தப்பட்டு இருந்து வருகிற .............. புதுப்பிப்புக்காகவே இந்த ஜனநாயக ஆட்சி என்பது இருக்கிறது"**

அ) மனுதர்மம் ஆ) வருணாசிரம தர்மம்
இ) சனாதன தர்மம் ஈ) வேதிய புராண தர்மம்

**54) வருணாசிரம தர்மத்தை அடிப்படையாகக்கொண்டு, மக்களைப் பல ஜாதிகளாகப் பிரித்து வைத்து, ஏற்றத் தாழ்வைக் கற்பித்து, அதை அரசாங்க அடக்கு முறையால் நிறுவி, அவர்களிடையே சமுதாய ஒற்றுமையைக் குலைத்து, பார்ப்பனர்கள் தங்களுடைய ஆதிக்கத்தை உண்டாக்கிக் கொண்டார்கள். அதற்குக் காப்புகளாகவும் கவசங்களாகவும் அவர்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள் எனப் பெரியார் கூறுபவை எவை?**

அ) மதமும் கடவுளும் அவைபற்றிய மூடநம்பிக்கைகளும்
ஆ) தேசமும் தேசியமும்
இ) வேத இதிகாச புராண தர்ம சாத்திரங்கள்
ஈ) மேலே சொன்ன எல்லாம்

**55) இந்தியாவில் பொதுவுரிமைக்குத் தடையாக இருப்பது எது என்கிறார், பெரியார்?**

அ) பிறப்பில் ஏற்றத்தாழ்வும் இழிவும் பாராட்டும் சாதி அமைப்பு
ஆ) மத நம்பிக்கை
இ) அரசாங்க அடக்குமுறை
ஈ) முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களின் ஆதிக்கம்





**56) மனிதனுக்கும் அவன் கற்பித்துக்கொண்ட கடவுளுக்கும் உள்ள வேற்றுமை யாது எனப் பெரியார் கூறுகிறார்?**

அ) கடவுள் எல்லாம் வல்லவர்

ஆ) அனைத்தும் அறிந்தவர்

இ) அவர் எங்கும் இருப்பவர்

ஈ) மனிதனைப் போன்ற எண்ணங்களை உடையவனாகக் கடவுள் இருந்தாலும் அந்த எண்ணங்களை நிறைவேற்ற (மனிதனைப் போன்று) காரியத்தில் செய்யாமல், நினைத்த மாத்திரத்தில் ஈடேறக் கூடிய மாதிரி, நினைப்பிலேயே செய்து விடுகிறான்

**57) கஷ்டப்பட்டு இழிவுபடுத்தப்பட்டு பட்டினி கிடந்து துன்பப்படும் மக்களில் அநேகர், தங்கள் நிலைக்குக் காரணம் அநியாயமான அரசாங்கச் சட்டம், செல்வர்களின் சூழ்ச்சி, சோம்பேறிகளின் தந்திரம் ஆகியவற்றால் அடிமைப்படுத்தப்படுவதே என்பதை எதனால் உணருவதில்லையெனப் பெரியார் சொல்கிறார்?**

அ) தலைவிதியில் நம்பிக்கை

ஆ) முன் ஜன்மக் கர்மபலன் என்ற நம்பிக்கை

இ) கடவுள் சித்தம், ஆண்டவன் கட்டளை அவ்வாறு செய்துவிட்டன என்று நம்புவது

ஈ) மேற்சொன்ன எல்லாம்

**58) இங்கே தரப்பட்டுள்ள கூற்றுகளில் பெரியார் சொல்லாதது எது?**

அ) கஷ்டப்படும் மக்களின் துன்பம் நீங்கி, அவர்களுடைய அறிவு ஆற்றல், இன்பம் ஆகியவற்றில் உள்ள கட்டுப்பாட்டை உடைத்து விடுதலை உண்டாக்க வேண்டும் என்பதே நமது முக்கியக் கவலை

ஆ) பலர் நம்முடைய இம்முயற்சியில் கடவுளையும் மதத்தையும் கொண்டுவந்து குறுக்கே போட்டு விட்டதால்தான் நாம் அதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியது ஆயிற்றே ஒழிய, உண்மையில் கடவுளையும் மதத்தையும் பற்றிப் பேசவேண்டும் என்கின்ற அவசியத்தையோ, ஆசையையோ கொண்டு நாம் அதில் பிரவேசிக்கவில்லை

இ) உண்மையே கடவுள் எனும் காந்தியாரின் கொள்கையை ஏற்கிறேன்

ஈ) காரணகாரியம், ஆதாரம் முதலிய விவரங்களைக் கண்டுபிடிக்க முடியாதவைகளையே கடவுள் செயல் என்றும், கடவுள் சக்தி என்றும் சொல்லி வருகிறோம்

**59) இந்தியாவில் நாலாம் சாதி (சூத்திரர்), அய்ந்தாம் சாதி (அவர்ணர், பஞ்சமர்) எனப்படுவோரின் பொருள் , செல்வாக்கு, மதி, திறமை, ஊக்கம், உணர்ச்சி ஆகியவை முதன்மையாக எதற்குச் செலவிடப் பட வேண்டும் என்பது பெரியாரின் விருப்பம் ?**

அ) அறிவும் மானமும் பெறுவதற்கு
ஆ) பிறவித் தாழ்வையும் இழிவையும் நீக்குவதற்கு
இ) முற்போக்கும் வளர்ச்சியும் பெறுவதற்கு
ஈ) மேலே சொல்லப்பட்ட எல்லாவற்றிற்கும்

**60) பின்வரும் இரண்டு வரிசைகளையும் சரியாகப் பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. | கடவுள் இல்லை, கடவுள்இல்லை | அ) – காட்டுமிராண்டி |
| 2. | கடவுளைக் கற்பித்தவன் | ஆ) – அயோக்கியன் |
| 3. | கடவுளைப் பரப்பியவன் | இ) –கடவுள் இல்லவே, இல்லை |
| 4. | கடவுளை வணங்குகிறவன் | ஈ) – முட்டாள் |

**61) கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வரிகளையும் சரியாகப் பொருத்துக.**

| | |
|---|---|
| 1. ஆத்மா ,மோட்சம், நரகம், பிதிர்– லோகம் இவைகளைக் கற்பித்தவன் | அ– மகா மகா அயோக்கியன் |
| 2. இவற்றை நம்புகிறவன் | ஆ– மடையன் |
| 3. இவற்றால் பலன் அடைகிறவன் | இ– அயோக்கியன் |

**62) "மதம் எப்படி ஏற்பட்டது ? மனிதன் காட்டுமிராண்டியாக இருந்து, . . . . . .அவரவர்கள் புத்திக்கு ஏற்றபடி, ஏதோ மக்கள் நன்மைக்கு என்ற கருத்திலே எடுத்துச் சொல்லப்பட்ட விசயங்கள்தான்" பெரியாரின் இந்தக்கூற்றில் விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான சொற்கள் யாவை?**

அ) விலங்குகளை வேட்டையாடிப் பிழைத்தபோது
ஆ) ஆராய்ச்சித் திறமையற்ற காலத்தில்
இ) முறையான கல்விக் கூடங்கள் ஏற்படாத காலத்தில்
ஈ) மக்கள் சிறுசிறு கூட்டங்களாக வாழ்ந்த காலத்தில்

**63) மதக் கொள்கைகளைப் பற்றி மதவாதிகளால் வலியுறுத்தப்படுவன எவை எனப் பெரியார் கூறுகிறார்?**

அ) அவற்றை மாற்ற முடியாது, மாற்றக்கூடாது, எக்காலத்திற்கும் ஏற்றது
ஆ) பழங்காலத்தில் பெரியோர்களால் மக்கள் நன்மையை முன்னிட்டுச் சொல்லப்பட்டவை.
இ) கடவுள், அவருடைய அவதாரம், அவருடைய பிள்ளை, அவரால் அனுப்பப்பட்ட நபர்கள் ஆகியவர்களின் அறிவுரைகள்; அவற்றை நம்பித்தான் ஆகவேண்டும்
ஈ) மேலே குறிப்பிட்டுள்ள எல்லாம்

**64) . . . . ......... என்றால், அறிவும் மடமையும் என்பது கருத்து, இயற்கையும், இயற்கைக்கு மாறுபட்டதும் என்பது கருத்து ஆகும். பெரியாரின் இந்த வாசகத்தில் விடுபட்ட சொற்கள் யாவை?**

அ) மனிதனும் மதமும்
ஆ) விஞ்ஞானமும் அஞ்ஞானமும்
இ) அமைதியும் போரும்
ஈ) சமத்துவமும் ஏற்றத்தாழ்வும்

**65) இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறைகள் எவற்றை மதத்தில் பெரியார் காண்கிறார்?**

அ) மக்களை ஒழுக்கமாய் நாணயமாய் நடக்கச் செய்ய முடியவில்லை
ஆ) கூடிவாழும் தன்மையை மக்களுக்கு ஊட்டவில்லை
இ) வேசங்களிலும் பக்தியிலும் மக்களைத் திருப்தியடையச் செய்கிறது
ஈ) மேற்கூறிய எல்லாம்

**66) மனிதர்களை, அறிவாளி, மடையன் என்றும், நல்லவன்- கெட்டவன் என்றும், பொதுமக்களுக்கு உழைக்கிறவன் - தன்சுயநலத்திற்கு உழைக்கின்றவன் என்றும்தான் பிரிக்க முடிகிறதே தவிர, அவர்கள்...... என்று பிரிப்பதற்கு இடமில்லை. எந்த வகையில் மனிதர்களைப் பிரிக்க முடியாதெனப் பெரியார் கூறுகிறார் ?**

அ) கடவுள் சக்தி, கடவுள் தன்மை பெற்றவர்கள் – அவற்றைப் பெறாதவர்கள்
ஆ) உயர்ந்தவர்கள் – தாழ்ந்தவர்கள்
இ) மூளையுள்ளவர்கள் – மூளையற்றவர்கள்
ஈ) தீண்டத்தகுந்தவர் தீண்டப்படாதவர்

**67) “எவ்வளவு உயர்வான மதம் ஆனாலும் , அது ஒரு அறிவாளியான நல்ல பொது நலக் கவலையுள்ள ஒரு பெரியாரால் உண்டாக்கப் பட்டது என்றுதான் கொள்ளலாமே தவிர,....... ஏற்படுத்தப்பட்டது என்பது தத்துவ ஆராய்ச்சிக்கு நிற்காது”. உரிய சொற்களால், பெரியாரின் வாசகத்தில் உள்ள விடுபட்ட இடத்தை நிரப்புக.**

அ) கடவுளால்
ஆ) கடவுள் அவதாரத்தால்
இ) கடவுளின் தூதர்களால்
ஈ) தெய்வத்தின் தனிச்சக்தி, தெய்வத்தின் தனிச்செயல் கொண்டவர்களால்

**68) உயிர் என்பதைப் பற்றிப் பெரியாரின் விளக்கம் யாது?**

அ) அதுவே ஆன்மா

ஆ) அது காற்று

இ) அதைப் பற்றித் தெரிந்து கொள்ளமுடியாது

ஈ) சரீரக் கூட்டு அமைப்பாலும், அதற்கு அளிக்கப்படும் உணவாலும் இயங்கிக்கொண்டு இருக்கும் தன்மையே உயிர்

**69) ஈரோடு நகரத்தில் 08. 02. 1961இல் சொற்பொழிவு ஆற்றிய பெரியார், தமது நோக்கம் மக்கள் எல்லோரும் மனிதத் தன்மையாக வேண்டும் என்பதாகக் கூறினார் (தனிப்பட்டமுறையில் நண்பராகவும், பொதுவாழ்வில் மாறுபட்டவராகவும் இருந்த) இராஜகோபாலாச்சாரியாரின் நோக்கம் வேறு என்பதைக் குறிப்பிட்டார். அது என்ன?**

அ) மக்களைப் பக்திமான் ஆக்குவது

ஆ) முதலாளியின் கட்சியான சுதந்திராக் கட்சியை வளர்ப்பது

இ) மனுதர்ம முறைப்படி ஆட்சியை ஆக்கவேண்டும் என்பது

ஈ) பார்ப்பனர் அல்லாதாரின் படிப்புக்கும் பதவிக்கும் தடை உண்டாக்குவது

**70) ஆத்திகனுக்கும் நாத்திகனுக்கும் உள்ள உண்மையான வித்தியாசம் எதுவெனப் பெரியார் கூறுகிறார்?**

அ) ஆத்திகன் கடவுளை நம்புகிறான், நாத்திகன் மறுக்கிறான்.

ஆ) புராணங்கள் கூறுவனவற்றை எல்லாம் உண்மை என்று நம்பவேண்டும் என்கிறான், ஆத்திகன் , நாத்திகன் அவற்றை அப்படியே ஒப்புக்கொள்ள மறுக்கிறான்

இ) ஆத்திகன் கோயிலுக்குச் செல்வான்; நாத்திகன் செல்வதில்லை

ஈ) ஆத்திகன் முன்னோர் சொல் கேட்பான்; நாத்திகன் கேட்பதில்லை

## V. சுயமரியாதை

**71) மக்கள் தங்கள் உயிருக்கு நிகராக எதைக் கருதவேண்டும் என்கிறார் பெரியார்?**

அ) தாய்நாட்டின் விடுதலை ஆ) குடும்பப் பெருமை

இ) சுயமரியாதை ஈ) பகுத்தறிவு





**72) பெரியார் கருத்தில் காட்டுமிராண்டித் தனத்திலிருந்து மனிதத்தன்மைக்கு வந்த மக்களின் முக்கியத் தன்மைகள் யாவை?**

அ) மானமுடையவர்களாகவும், சுதந்திர உணர்வு உடையவர்களாகவும், அறிவாளர்களாகவும், பொதுத் தொண்டு செய்வோராகவும், முற்போக்கு உள்ளவர்களாகவும் இருப்பார்கள். நாட்டின் வளவாய்ப்புகளைச் சமநீதியுடன் அனுபவிப்பார்கள்

ஆ) செயல்வீரர்களாகவும் துணிவுள்ளவர்களாகவும் இருப்பார்கள்

இ) மதத்தையும் கடவுளையும் மறுப்பார்கள்

ஈ) கலையிலும் இலக்கியத்திலும் ஈடுபடுவார்கள்

**73) பின் வரும் பெரியார் வாசகத்தில் உள்ள கோடிட்ட இடங்களுக்கான உரிய ஒரு சொல் யாது? "..... மற்றும் சுதந்திரம் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல; ...... அற்றவர்களுக்குச் சுதந்திரம் பலனளிக்காது".**

அ) பொருளாதாரச் சமத்துவம் ஆ) பகுத்தறிவு

இ) சுயமரியாதை ஈ) ஆங்கிலப் படிப்பு

**74) 1931இல் விருதுநகரில் சுயமரியாதை வாலிபர் மாநாடு நடந்தது. அதில் மக்களுக்குச் சமத்துவமும் விடுதலையும் அடையும்படி செய்ய முடியாதவர்களைக் குறித்த ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவர்கள் யாவர்?**

அ) வர்ணாசிரமத்திலும், கடவுள் செயல் என்பதிலும் நம்பிக்கை கொண்டிருப்பவர்கள்.

ஆ) காங்கிரசுக்காரர்கள்

இ) மதவாதிகள்

ஈ) ஆங்கில ஆட்சியாளர்கள்

**75) பெரியார் உண்டாக்கிய சுயமரியாதைத் திருமணத்தின் தன்மைகள் யாவை?**

அ) வாழ்க்கைத் துணைவர்கள் ஆவோர் சாதி, மதம், மொழி, தேசம் முதலியன கடந்தவராக இருக்கலாம்

ஆ) நேரம், சகுனம், சோதிடம் முதலியன பார்க்காமலும், பார்ப்பனப் புரோகிதரின் மந்திரம் இல்லாமலும் சடங்குகள் எவையும் செய்யாமலும் உறுதிமொழி எடுத்துக்கொண்டும் மாலைமாற்றிக் கொண்டும் இல்லறம் ஏற்கலாம்.

இ) ஆணும் பெண்ணும் சம உரிமையும் பொறுப்பும் பங்கும் உள்ள கூட்டாளிகளாகவும் நண்பர்களாகவும் ஒத்த மதிப்பும் அன்பும் உள்ள பகுத்தறிவாளர்களாகவும் பொது நல உணர்வுள்ளவர்களாகவும் இணைகிறார்கள்

ஈ) மேலே குறிப்பிட்ட எல்லாம் பொருந்தும்

**76) சுயமரியாதை இயக்கத்தின் தத்துவம்** (Philosophy) **என்று பெரியார் எதைக் குறிப்பிடுகிறார்?**

அ) மறுபிறப்பிலும் மறுபிறவியிலும் நம்பிக்கை இன்மை
ஆ) கடவுள் நம்பிக்கை இன்மை
இ) அய்ம்புலன் அனுபவத்திற்கு அப்பால் எதுவும் இல்லை.
ஈ) எந்தக் காரியம் ஆனாலும் காரணகாரியம் அறிந்து செய், சரியா– தப்பா என்பதை அந்தக் காரணகாரிய அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் விட்டு விடு, எந்த நிர்ப்பந்த சமயத்திலும் அதன் முடிவுக்கு மரியாதை கொடு.

**77) "நாங்கள் வந்து இந்தப் பிரச்சினையில் கடவுளைக் கும்பிடாதீர்கள் என்று சொல்லவில்லை. கடவுள் என்றால் என்ன எனச் சொல்லுங்கள் என்று தான் கேட்கிறேன்" - இங்கு பெரியார் குறிப்பிடும் பிரச்சினை யாது?**

அ) தீண்டாதவர் கோயில் நுழைவு
ஆ) இந்து முஸ்லீம் ஒற்றுமை
இ) அனைத்துச் சாதியாரும் அர்ச்சகர் ஆகும் உரிமை
ஈ) தமிழை அர்ச்சனை மொழி ஆக்குதல்

**78) கொடுக்கப்பட்ட நான்கு வாசகங்களில் ஒன்று பெரியார் கூறாதது. அது எது?**

அ) நாத்திகக் கொள்கையே சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படை
ஆ) சுயமரியாதைச் சங்கத்தின் கொள்கை என்னவெனில் பிறப்பில் உயர்வு– தாழ்வு இல்லை என்பதும், மேல் கீழ் இல்லை என்பதுந்தான்
இ) சுயமரியாதை இயக்கம் இந்நாட்டு மக்களுக்கு மான உணர்ச்சி ஏற்படவும் எல்லா மக்களையும் சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றில் சமப்படுத்தி ஒன்று சேர்க்கவும் ஏற்றபட்டதாகும்
ஈ) மனிதனுக்கு, அவனுடைய சுயமரியாதை என்னும் தன்மானத்தைக் காப்பாற்றிக்கொள்வதுதான் பிறப்புரிமையே அல்லாமல், அரசியலான சுயராஜ்யம் ஒருக்காலும் பிறப்புரிமை ஆகமாட்டாது

## எனது ஆசை

எனக்கு ஆசை எல்லாம் – மக்கள் பகுத்தறிவாளர்கள் ஆகவேண்டும்; சாதி ஒழியவேண்டும்; உலகில் 'பார்ப்பனர்' இருக்கக் கூடாது. இது தான் எனது கொள்கை.

**(28-8-1972 "விடுதலை")**

## VI சமூகநீதி

**79) பெரியார் 2. 5. 1925இல் தொடங்கிய " குடிஅரசு" இதழின் குறிக் கோளாக, அதன் முதல் இதழில் சொல்லப்படுவன:**

அ) ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும். மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும்

ஆ) ஆங்கிலேயரைப் படிப்படியாக வெறியேற்றி விடுதலை பெற வேண்டும்

இ) இந்து முசுலீம் ஒற்றுமையை வளர்க்க வேண்டும்

ஈ) கடவுளையும் மதத்தையும் மறுத்தல் வேண்டும்

**80) 1948இல் தூத்துக்குடியில் திராவிடர்கழக மாநாடு நடந்தது அதில் கூறப்பட்டிருந்த வகுப்புரிமைத் தீர்மானம்?**

அ) வகுப்புரிமை ஏற்பாட்டிற்குக் காலவரையறை செய்யலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது

ஆ) சாதிகள் இந்நாட்டில் ஒழிக்கப்படும்வரை, சாதிவாரிப் பிரதி நிதித்துவ முறை இருந்துவர வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது

இ) சாதியுடன் பொருளாதார அளவுகோலையும் இடஒதுக்கீட்டிற்குச் சேர்த்தது

**81) பெரியாரால் ஆதரிக்கப்பட்ட ஒரு தமிழக முதலமைச்சர் இவ்வாறு கேட்டார்: "எந்தத் தாழ்த்தப்பட்ட டாக்டர் தவறாக ஊசிபோட்டதால் நோயாளி மாண்டுவிட்டார் என்று காட்டுங்கள், எந்தத் தாழ்த்தப்பட்ட பொறியியல் அதிகாரி கட்டிய முறையால் எந்தக் கட்டடம் ,இடிந்து விழுந்துவிட்டது என்று காட்டுங்கள்". இப்படிக் கேட்டவர் யார்?**

அ) ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்    ஆ) காமராசர்

இ) அறிஞர் அண்ணா    ஈ) கலைஞர் மு. கருணாநிதி

## VII பகுத்தறிவு

**82) பெரியாரின் பிரச்சாரத்தின், மூலப் பொருள், வழிமுறை என்ன?**

அ) பகுத்தறிவு    ஆ) இனப்பற்று

இ) நாட்டுப்பற்று    ஈ) மத எதிர்ப்பு

**83) தமது மூடநம்பிக்கை ஒழிப்புக் கொள்கைக்கு வெற்றியளிப்பவை எனப் பெரியார் கூறியவை எவை?**

அ) இயற்கை போக்கு, விஞ்ஞான வளர்ச்சி

ஆ) மக்களின் கூர்ந்த அறிவும் ஆர்வமும்

இ) அரசாங்கத்தின் ஆதரவும் சட்டமும்

ஈ) கல்விக் கூடங்கள் அதிகரித்தல்

**84) தமக்குத் தொடக்கத்தில் அறிவு வளர்ந்ததற்குக் காரணம் எனப் பெரியார் எதைப் பற்றிக் கூறுகிறார்?**

அ) பொதுஅறிவு நூல் பல படித்தமை

ஆ) இதிகாச, புராணப் பிரச்சாரங்களின் பேச்சுக்களைப்பற்றி அவர்களிடமே கேள்வி கேட்கும் தன்மை; அவர்களுடனும் புலவர்களுடனும் தர்க்கம் (விவாதம்) செய்தமை

இ) அரசியல் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டமை

ஈ) இவை எவையும் இல்லை

**85) தமிழ்ப் புலவர்களைப் பெரியார் குறைகூறக் காரணம் என்ன?**

அ) பழைய குப்பையைத் தேடி, அதிலிருந்து பெருமை பெறவேண்டும் என்ற நோக்கம் இருப்பது அன்றித் தமக்கு எனக் கருத்துக்களை உருவாக்கிக் கொள்வதில்லை

ஆ) இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய புராணநூல் புலமை பெற்றுள்ளனர்: சுய அறிவில் புலமை பெறவில்லை

இ) புதுக்கருத்தை மக்களிடம் சொல்வதில்லை

ஈ) மேலே சொன்ன எல்லாமும்

**86) எந்தக் காரணத்தைக் கொண்டும் மனிதத் தன்மைக்கு மீறிய எந்தக் குணத்தையும் என்மீது சுமத்திவிடாதீர்கள் ..... இவ்வாறு பெரியார் சொல்லக் காரணம் என்ன?**

அ) மதங்களை நிறுவியவர்களோடு தாமும் இடம்பிடிக்க விரும்பவில்லை

ஆ) அப்படி ஓர் உயர்ந்த குணம் தமக்கு இல்லை என்றும் அவதாரபுருசர்களுக்கே உண்டு என்றும் நம்பினார்

இ) தெய்வீக ஆற்றலிலும் தன்மையிலும் மக்கள் நம்பிக்கை வைத்தால், அவர்களுக்குத் தங்கள் முயற்சியின்மீதும் அறிவின்மீதும் நம்பிக்கை இல்லாமல் போய்விடும்; அதனால் சமுதாயச் சமத்துவமும் முன்னேற்றமும் தடைப்படும்.

ஈ) தெய்வத்தின்மீது அவருக்கு இருந்த மதிப்பு

**87) "குடிஅரசு" முதல் இதழில், உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும் எனப் பெரியார் எழுதினார். அதில் உண்மை அறிவு என்பதாகப் பெரியார் எதைக் குறிக்கிறார்?**

அ) நாத்திகம்

ஆ) நாட்டு விடுதலை நாட்டம்

இ) வேண்டாத பழையன கழிதல்

ஈ) அனைத்து உயிர் ஒன்று என்று எண்ணுதல்

**88) இந்தியாவை விடப் பிறநாடுகள் முன்னேறி, மேன்மை அடைந்தது எவ்வாறு எனப்பெரியார் சுட்டுகிறார்?**

அ) அந்த நாட்டு மக்கள் மூடப்பழக்கங்களையும் குருட்டு நம்பிக்கைகளையும் ஒழித்துவிட்டார்கள்

ஆ) பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள்

இ) ஆராய்ச்சித் துறையில் அறிவு, பணம், ஊக்கம், முயற்சி ஆகியவற்றைச் செலவு செய்கிறார்கள்

ஈ) மேற்கூறிய எல்லாமும்

**89) நாம் மூடப்பழக்க வழக்கம் எனச் சந்தேகமற நன்றாய் அறிந்த சிறு விசயத்தை மாற்றிக் கொள்ளவேண்டுமானாலும் நடுங்குவது எதனால் எனப் பெரியார் சொல்கிறார் ?**

அ) சாமி, மதம், ஸ்மிருதி, புராணம் ஆகியவை தடைக்கல்லாய் இருக்கின்றன.

ஆ) பெரியவர்கள் ( முன்னோர்கள்) நடந்த வழியை மீறக்கூடாது என அஞ்சுகிறோம்

இ) ஜாதி, சம்பிரதாய முறைக்கு மாறாக நடக்கக்கூடாது என நினைக்கிறோம்

ஈ) மேற்கூறிய எல்லாமும்

**90) நம்மில் பெரும்பாலோர் அறிவற்றவர்களாக இருக்கக் காரணங்கள் எனப் பெரியார் எவற்றைக் குறிப்பிடுகிறார் ?**

அ) கல்விக் கூடங்கள் போதிய அளவு இன்மை

ஆ) மெகாலே புகுத்திய கல்வித் திட்டம்

இ) இயற்கைத் தன்மையைப்பற்றிச் சிறிதும் சிந்திப்பது இல்லை; இயற்கைக்கு மாறுபாடான கடவுள், மதம், தெய்வீகம், தெய்வீக முன்னோர்கள் கண்ட முடிவு என்பனவற்றிக்கு அடிமையாகி விட்டோம்

ஈ) தேர்தல், அரசியல், திரைப்படங்கள், பத்திரிகைகள்



**91) கொடுக்கப்பட்டுள்ள பெரியார் கூற்றில், கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கான சரியான சொற்றொடர் யாது? "நம் பண்டிதர் என்பவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது அவர்களது .......காரணமே ஒழிய அவர்களது அறிவுக் குறைவன்று"**

அ) ஆங்கில மேல்நாட்டுக் கல்வியின்மை
ஆ) புராண இதிகாசக் கலைப் படிப்பு
இ) சமுதாயத் துறையில் அனுபவம் இன்மை
ஈ) அரசியல் தெரியாமை

**92) எத்தகைய சிந்தனையால் உயர்ந்த எண்ணங்கள் தோன்றுவதாகப் பெரியார் சொல்கிறார் ?**

அ) உண்மையும் பகுத்தறிவும் இடைவிடாத ஆர்வமும் உள்ள சிந்தனை
ஆ) மதத்தை மறுக்கும் சிந்தனை
இ) பொது நன்மையைக் கருதும் சிந்தனை
ஈ) கடவுளை நம்பாத சிந்தனை

**93) கொடுக்கப்பட்டிருக்கும் பெரியார் கூற்றில் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு வேண்டிய தகுந்த சொல் யாது? "உலகில் எதுவானாலும் அதைப் பற்றிய உண்மையை ஆராய்ந்து அறிந்து அதனை முழுமையாகத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். இது தான். . ."**

அ) கல்வி கற்றதன் பயன் ஆ) படிப்பாளிக்கு அடையாளம்
இ) பகுத்தறிவின் வேலை ஈ) நாத்திகத்தின் சிறப்பு

**94) ஒரு பொருளின் மீது தாம் பற்றுவைப்பதற்குக் காரணம் யாது எனப் பெரியார் சொல்கிறார்?**

அ) பொருளின் பழைமை
ஆ) பொருளின் அழகு
இ) பொருளின் புதுமை
ஈ) பொருளின் குணமும் அதனால் ஏற்படும் நற்பயனும்

**95) பெரியார் தமது சொற்பொழிவுகளில் அடிக்கடி வற்புறுத்துவது யாது?**

அ) நான் சொல்லுவதை அப்படியே நம்பாதீர்; அதன்படி நடக்க வேண்டுமென உடனே இறங்கிவிடாதீர்.
ஆ) சொல்வதைச் சிந்திக்க வேண்டும்; சரியா, தப்பா என்று ஆராய வேண்டும் ; உங்களுக்கு எது சரி என்று பட்டதோ அதை ஒத்துக் கொள்ள வேண்டும்.
இ) எந்தக் காரியம் சரியென்று அறிவுக்கும் அனுபவத்திற்கும் தோன்றுகிறதோ அதைச் செய்ய வேண்டும்
ஈ) மேற்கூறிய எல்லாமும்





**96) "நம்மால் செய்ய முடியாத காரியங்களைச் சில ஜீவன்கள் செய்யும். நமக்குத் தெரியாத வாசனை, எறும்பிற்குத் தெரியும். நம்மால் பறக்க முடியாமல் இருக்கும்போது பறவை பறக்கும், நாம் தாவ முடியாத அளவுக்குக் குரங்கு தாவும். இந்த மாதிரி மனிதனால் முடியாத சிலவற்றை மற்ற உயிர்கள் செய்கின்றன. ஆனால், சிந்தித்து, வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணம், தன்னுடைய வாழ்வு நிறைவுபெறும் வகையில் பயன்படுத்துகிற. . . . மனிதனுக்குத் தான் உண்டு". பெரியாரின் இந்த வாசகத்தில் விடுபட்டுள்ள இடத்திற்கான சொற்றொடரைத் தேர்க.**

அ) பகுத்தறிவு　　ஆ) கைகள்
இ) உடல் அமைப்பு　　ஈ) நல்ல வாய்ப்பு

**97) பகுத்தறிவாளர் கழகம் எதற்கு விரோதமாக இருந்தாலும், . . . . விரோதம் அல்ல, எனப் பெரியார் சொல்வதில் கோடிட்ட இடத்திற்கான சொல்லைக் காண்க.**

அ) சட்டம் ஒழுங்கிற்கு　　ஆ) நியாயத்திற்கு
இ) சமத்துவத்திற்கு　　ஈ) சுயமரியாதைக்கு

**98) கொடுக்கப்பட்டுள்ள பெரியார் கூற்றை நிறை செய்யச் சரியான சொற்கள் யாவை? "பகுத்தறிவு என்பது . . . . . ., மூடநம்பிக்கை என்பது ஆராயாமல் ஏற்றுக் கொள்வது"**

அ) ஆதாரத்தைக் கொண்டு தெளிவடைவது
ஆ) நடுநிலைச் சிந்தனை
இ) பழையனவற்றை மறுப்பது
ஈ) புதியனவற்றை ஏற்பது

## VIII இலட்சியம்

**99. பெரியாரின் இலட்சியம் என்பதாகத் 'தினமணி' சார்பில் செப்டம்பர் 1994இல் பேட்டி கண்ட மாலன் அவர்களுக்குப் பொதுச் செயலாளர் மானமிகு கி. வீரமணி அவர்கள் கூறியது யாது?**

அ) வடவர் எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு
ஆ) இந்தி எதிர்ப்பு
இ) கடவுள் மறுப்பு
ஈ) சுயமரியாதை, பகுத்தறிவு, மனிதநேயம், சமத்துவம்

**100) கோவை, குறிச்சியில் 22. 10. 2000த்தில் நடந்த பயிற்சி வகுப்பில், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் பெரியாரின் மூலக் கருத்து எனக் குறிப்பிட்டது எதை?**

அ) தமிழ்நாட்டு விடுதலை ஆ) இந்தி ஆதிக்க ஒழிப்பு

இ) ஜாதி ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்பு ;
அதற்காக மூடநம்பிக்கை ஒழிப்பு ;
அறிவியல் மனப்பான்மை வளர்ப்பு

ஈ) மதத்தையும் கடவுளையும் மறுத்தல்

**101) தொடக்கம் முதல் இறுதிவரை தம்முடைய பொதுவாழ்வின் இலக்காகவும் அதை அடைவதற்கான வழிமுறையாகவும் பெரியார் கொண்டிருந்தவை யாவை ?**

அ) சாதியையும் வருணதர்மத்தையும் ஒழித்தல்

ஆ) சாதியிருக்கும் வரை அதன் அடிப்படையில் வகுப்புரிமை பெற்றுச் சமூகநீதியை நிலைநாட்டல்

இ) பகுத்தறிவு நெறியைப் பரப்பி அதன் அடிப்படையில் கிளர்ச்சிகள் செய்தல்

ஈ) மேற்கூறிய மூன்றும்.

**102) 6.3.1967இல் 'விடுதலை' தலையங்கமாகப் பெரியார் எழுதியுள்ள இந்த வாசகத்தில் விடுபட்டுள்ள இடத்தை நிரப்புக: " எனது கொள்கை, சாதி ஒழிப்பு, பகுத்தறிவு; சாதி ஒழிப்புப் பூரணமாக ஏற்படும் வரை. . . . ."**

அ) தொடர்ந்த கிளர்ச்சிகள் ஆ) விடாத பிரச்சாரம்

இ) வகுப்புவாரி உரிமை ஈ) பார்ப்பன எதிர்ப்பு

**103) பெரியார் கருத்தில் அதிகாரிகளின் கடமை யாது?**

அ) மக்களுக்கு நாணயமாக, நடுநிலையாகத் தொண்டாற்றுவது.

ஆ) தயவு, தாட்சண்யம், அனுதாபம் ஆகியவைகளுடன் மக்களிடம் நடந்து கொள்வது.

இ) மேற்சொன்ன இரண்டும்

ஈ) நேரம் பார்க்காமல் காலம் கருதாமல் கடமையாற்றுவது

**104) சமுதாயத்தின் எலும்புருக்கி நோய் போன்றவர் எவர் எனப் பெரியார் கருதுகிறார்?**

அ) அரசியல் மூலம் பணம், புகழ், பதவி முதலியவற்றைச் சம்பாதிக்கத் திட்டமிடும் கூட்டத்தினர்.

ஆ) மூடநம்பிக்கையாளர்

இ) மதவெறியர்

ஈ) கறுப்புச் சந்தை, கள்ளக் கடத்தல் செய்வோர்





**105) பெரியார் இலக்கணப்படி யார் மனிதன் எனப் பெயர் பெறுவர்?**

அ) படித்தவர்
ஆ) பிறருக்கு உதவுகிறவர்
இ) சமுதாயப் பணிபுரிகிறவர்
ஈ) மானம் உடையவர்

**106) கருப்புச் சட்டையைக் குறித்துப் பெரியார் கூறுவது யாது?**

அ) அது ஒரு படையெடுப்பின் எண்ணமல்ல
ஆ) சமுதாயத்தில் இழிவுபடுத்தப்பட்டுள்ளோம் என்பதற்கு அறிகுறி; இழிவிற்காக அவமானப்டுகிறோம், துக்கப்படுகிறோம்
இ) இழிவைப் போக்கப் போராடுகிறோம் என்பதற்கு அடையாளம்
ஈ) மேற் சொன்ன எல்லாமும்

**107) ஜோசியன், மந்திரவாதி, கோயில் குருக்கள் ஆகியோர் எதற்குச் சரியான கர்த்தாக்கள் எனப் பெரியார் கூறுகிறார்?**

அ) மக்களின் அடிமைத் தன்மைக்கு
ஆ) மக்களின் பேராசைக்கும் முட்டாள்தனத்திற்கும்
இ) விழாக்களுக்கும் வீண்செலவுகளுக்கும்
ஈ) சடங்குகளுக்கு

**108) தேசமோ மக்களோ முன்னேறத் தேவையானது என்ன எனப் பெரியார் சொல்கிறார்?**

அ) மக்கள் தொகைக் குறைப்பு
ஆ) மதமும் கடவுளும் ஒழிய வேண்டும்
இ) அறிவும் விஞ்ஞான தத்துவமும் ஒழுக்கமும் முன்னேற வேண்டும்
ஈ) லஞ்ச ஒழிப்பு

**109) தமது கடவுள் மறுப்பு வாசகங்களைப் பெரியார் எந்த ஆண்டு? எங்கு அறிவித்தார்?**

அ) 1929– முதல் சுயமரியாதை மாநாடு –செங்கல்பட்டு
ஆ) 1946 – திராவிடர் கழகக் கறுப்புச் சட்டை மாநாடு – மதுரை
இ) 24.5.1967இல் நடந்த பகுத்தறிவுப் பயிற்சி வகுப்பு – விடையயுரம்
ஈ) டிசம்பர் 1973இல் நடந்த இனஇழிவு ஒழிப்பு மாநாடு – சென்னை

**110) கீழ்க்கண்டவற்றுள் 10.01. 1947இல் சாதி ஒழிப்புக்கான சில முறைகளைப்பற்றிப் பெரியார் ‘விடுதலை’ யில் எழுதாதது எது?**

அ) சாதிப் பட்டங்கள் சட்ட பூர்வமாகத் தடுக்கப்பட வேண்டும்
ஆ) அரசியல் விடுதலையும் பொதுவுடைமையும் வந்தால் சாதி தானாக ஒழியும்
இ) புதிதாக மணம் புரிவோர் அத்தனை பேரும் கலப்புமணம் செய்யுமாறு தூண்டக்கூடிய சட்டங்கள் இயற்றவேண்டும்
ஈ) ஜாதியைக் குறிக்கும் நெற்றிக்குறி , உடை, பூணூல் முதலிய சின்னங்களைச் சட்டபூர்வமாகத் தடை செய்யவேண்டும்

**111) ஆசையும் சுயநலமும் அற்றவனுக்கு எவை தேவையில்லை என்கிறார், பெரியார் ?**

அ) பெண்ணும் பொருளும் ஆ) பட்டமும் பதவியும்
இ) அரசியலும் பொருளியலும் ஈ) கடவுளும் மோட்சமும்

**112) ஒரு குறிப்பிட்ட வேலையை அல்லது தொழிலை, பிறப்பினடிப்படையில் ஒரு குறிப்பிட்ட கூட்டத்திற்கு (சாதிக்கு) ஒதுக்காமல் பொதுவாகக் கருதுவதால் ஏற்படும் நன்மை என்ன வெனப் பெரியார் கூறுகிறார்?**

அ) முன்னேற்றம் நிகழும்
ஆ) சமுதாயப் பிளவு நீங்கும்
இ) குறிப்பிட்ட தொழிலுக்கு இழிவோ பெருமையோ இருக்காது; உழைப்பு மதிக்கப்படும்
ஈ) வேலை இன்மை நீங்கும்

**113) சீர்திருத்தம் என்பதற்குப் பெரியார் அளிக்கும் ஒரு பொது விளக்கம் யாது ?**

அ) தேவையற்றதை நீக்கிவிட்டுத் தேவையுள்ளதை மட்டும் வைத்துக் கொள்ளுதல்
ஆ) மூடநம்பிக்கைகளை விட்டுவிடல்
இ) வருணாசிரமத்தை ஒழித்தல்
ஈ) கடவுளையும் மதத்தையும் மறுத்தல்

**114) தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தக் கூடியவை எனப் பெரியார் சொன்ன மூன்று செய்திகளோடு அவர் சொல்லாத ஒன்று இங்கு கொடுக்கப்பட்டுள்ளது அது எதுவெனக் கூறுக:**

அ) கல்வி அறிவு ஆ) சுயமரியாதை எண்ணம்
இ) அரசியல் விழிப்பு ஈ) பகுத்தறிவுத் தன்மை

**115) வாழ்க்கைத் துணைவர்களாக இல்லறம் ஏற்போருக்குப் பொருத்தம் பார்க்கும் பொறுப்பு யாருடையது எனப் பெரியார் கூறுகிறார் ?**

அ) மணமக்கள் ஆ) மருத்துவர்
இ) பெற்றோர் ஈ) சோதிடர்

**116 கொடுக்கப்பட்டுள்ள பெரியார் வாசகத்தை நிறைவு செய்யச் சரியான சொற்கள் யாவை? "ஆடு நரிக்குப் பயன்படுவது போல் உணவாய்ப் பயன்படுகிறான்?"**

அ) தொழிலாளி முதலாளிக்கு ஆ) இந்தியன் அந்நிய நாட்டானுக்கு
இ) படிக்காதவன் படித்தவனுக்கு ஈ) கீழ்சாதியான் மேல் சாதியானுக்கு

**117) பொதுவுடைமை மலர்ச்சி காண திராவிடர் கழகம் எவ்வாறு முயல்கிறது என்கிறார் பெரியார் ?**

அ) அறிவு வழியிலும் அமைதி வழியிலும்

ஆ) நாட்டுப் பிரிவினையின் மூலம்

இ) புரட்சியின் மூலம்

ஈ) பொதுவுடைமை நாடுகளின் துணையுடன்

**118) உணவுமுறை பற்றிய பெரியாரின் பொதுக் கருத்து யாது?**

அ) இப்போது உள்ள முறையே தொடரலாம்

ஆ) சத்துள்ள எளிய உணவைப் போதிய அளவு எல்லாவகைப் பொருட்களில் இருந்தும் தயாரித்து வீணாக்காது உண்ணவேண்டும்

இ) மேல்நாட்டு உணவுகளையே உட்கொள்ள வேண்டும்

ஈ) இறைச்சி உணவே சிறந்தது

**119) சமைக்கும் முறைபற்றிய பெரியாரின் கருத்து யாது ?**

அ) நவீன கருவிகளையும் எந்திரங்களையும் கொண்டு அறிவியல் முறையில் விரைவில் சமையலை முடித்துக் கொள்ள வேண்டும்

ஆ) சமையல் முறையை ஆணும் பெண்ணும் பகிர்ந்துகொள்ள வேண்டும்

இ) நேரம், செலவு ,உழைப்பை, மீதமாக்கும் வகையில், பொது இடத்தில் சமைத்ததை ஒவ்வொருவீட்டாரும் வாங்கிக் கொள்ளலாம்

ஈ) மேற்சொன்ன எல்லாமும்

**120) நல்ல குடும்பம் யாது எனப் பெரியார் கூறுகிறார் ?**

அ) சுற்றத்தாருக்கு உதவுந் தன்மையது

ஆ) குடும்பத்தார் அனைவரும் பொதுத் தொண்டு செய்ய வேண்டும்

இ) வரவுக்கு மிஞ்சிய செலவு செய்யாமல் இருக்க வேண்டும்

ஈ) அரசியலை ஒதுக்க வேண்டும்

**121) இயந்திரம் கூடாது என்றால் அதற்கு என்ன பொருள் என்கிறார், பெரியார்?**

அ) மனிதனுக்கு அறிவு விருத்தியாகக் கூடாது என்றுதான் பொருள்

ஆ) உற்பத்தி பெருகக் கூடாது எனப் பொருள்

இ) பொருள்களுக்கு தரம் உயராது

ஈ) உடல் உழைப்பு மிகுதியாகும்

**122) வேண்டியன எல்லாம் எல்லோருக்கும் கிடைக்கப் பெரியார் கூறும் வழி யாது?**

அ) ஒருவனும் தன் தேவைக்கு மேல் எடுத்துக் கொள்ளக் கூடாது

ஆ) ஒன்று அல்லது இரண்டு குழந்தைக்கு மேல் கூடாது

இ) வேளாண்மை எந்திரமயமாக்க வேண்டும்

ஈ) திட்டமிட்ட பொருளாதாரம் வேண்டும்

**123) பொதுத் தொண்டில் உள்ளவர்களுக்குப் பெரியார் கருத்தில் உரைகல்லாகப் பயன்படுவது யாது?**

அ) சிறைத் தண்டனை பெறுவது

ஆ) தொல்லையை ஏற்பது

இ) பிறருடைய தூற்றுதலைச் சகிப்பது

ஈ) புகழ் பெறுவது

**124) 1950இல் நடப்பிற்கு வந்த இந்திய அரசியல் சட்டத்தின் முதல் திருத்தம் எதற்காகச் செய்யப்பட்டது ?**

அ) தீண்டாமை ஒழிப்பிற்காக

ஆ) வகுப்புரிமைக்கான இட ஒதுக்கீட்டை உறுதி செய்வதற்காக

இ) பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும் என்பதற்காக

ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

**125) முதல் அரசியல் சட்டத் திருத்தம் செய்யவேண்டும் என்பதற்கான கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் யார்?**

அ) பாபு ஜெகஜீவன் ராம் ஆ) அன்னை மணியம்மையார்

இ) அம்பேத்கர் ஈ) தந்தை பெரியார்

**126) முதல் அரசியல் சட்டத் திருத்தம் செய்யப்பட்ட ஆண்டு எது?**

அ) 1952 ஆ) 1955 இ) 1950 ஈ) 1951

**127) வகுப்புரிமைக்காக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் எனப் பெரியார் கிளர்ச்சி செய்யக் காரணமான சூழல் யாது ?**

அ) வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு குறைவாக இருந்ததால்

ஆ) இடஒதுக்கீடு செல்லாது என மத்திய அமைச்சரவை முடிவு செய்ததால்

இ) இடஒதுக்கீடு செல்லாது என மாநில அமைச்சரவை முடிவு செய்ததால்

ஈ) தொழில்படிப்புக் கல்லூரிகளுக்கு இட ஒதுக்கீடு ஏற்பாடு செல்லாது என உயர்நீதி மன்றமும் உச்ச நீதிமன்றமும் தீர்ப்பளித்ததால்

**128) உரிமைகளின் அடிப்படையில் வகுப்புரிமை செல்லாது எனத்தீர்ப்பு அளிக்கக்கோரி, அரசியல் அமைப்புச் சட்ட வரைவுக்குழுவில் இருந்த பார்ப்பனர் ஒருவர் வாதாடினார், அவர் யார்?**

அ) சத்தியமூர்த்தி அய்யர் ஆ) அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்

இ) சீனிவாச அய்யர் ஈ) கிருஷ்ணமாச்சாரி

**129) சென்னை மாநிலத்தில் நடந்த கிளர்ச்சியின் காரணமாக முதல் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டியதாயிற்று எனப் பெரியாரின் போராட்டத்தைக் குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றியவர் யார்?**

அ) விஜயலெட்சுமி பண்டிட்

ஆ) இந்தியாவின் முதல் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு

இ) இந்திராகாந்தி

ஈ) லால்பகதூர் சாஸ்திரி

**130) முதல் அரசியல் சட்டத்திருத்த மசோதாவைச் சமர்ப்பித்த பெரியாரின் உற்ற நண்பர் யார்?**

அ) இராஜகோபாலாச்சாரியார்

ஆ) 1951இல் மைய அரசின் சட்ட அமைச்சராக இருந்த அண்ணல் அம்பேத்கர்

இ) முகமது அலி ஜின்னா

ஈ) ஜெயப்பிரகாஷ் நாராயண்

**131) 1957இல் பெரியார் நடத்திய சாதி ஒழிப்புப் போரில் 10,000 பேர் கலந்துகொண்டு 3000 பேர் சிறைபட்டனர். அதில் மணல்மேடு வெள்ளைச்சாமி, இராமசாமி உட்பட எத்தனைபேர் மாண்டனர்?**

அ) 15பேர் ஆ) 13 பேர் இ) 16 பேர் ஈ) 20 பேர்

**132) 1940இல் தந்தை பெரியாரின் கட்டாய இந்தி நீக்கக் கிளர்ச்சி வெற்றி பெற்றபொழுது அதைப்பாராட்டித் தந்திகொடுத்து, வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட ஒரு உலகத் தலைவர் யார்?**

அ) முகமது அலி ஜின்னா ஆ) பெர்னாட்ஷா

இ) கார்பச்சேவ் ஈ) குருஷேவ்

**133) "காந்தியார் சாந்தி அடைக" எனும் நூல் எழுதி, அரசியலுக்குச் சென்றாலும் சுயமரியாதைக்காரராக இறுதிவரை இருந்தவர் யார்?**

அ) ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆ) என். வி. நடராசன்

இ) ஈ.வெ.கி. சம்பத் ஈ) அறிஞர் அண்ணா

**134) பிள்ளையார் உருவப்பொம்மையை உடைக்கும் போராட்டத்தை பெரியார் நடத்திய நாள் எது?**

(அ) 10.3.1953 (ஆ) 27.5.1953
(இ) 2.12.1954 (ஈ) 1.11.1953

**135) சுயமரியாதைத் திருமணங்கள் முன்தேதியிட்டு செல்லும் என்ற சட்டத்தை அண்ணா நிறைவேற்றிய நாள் எது?**

(அ) 27.11.1967 (ஆ) 10.12.1968
(இ) 17.9.1968 (ஈ) 10.1.1969

**136) 1-8-1938இல் திருச்சி உறையூரில் புறப்பட்டு 234 ஊர்களைக் கடந்து 87 பொதுக்கூட்டங்கள் பேசி 42 நாட்கள் நடந்து சென்னை அடைந்த தமிழர் பெரும்படையின் சேனாதிபதி எவர்?**

(அ) மணவை திருமலைசாமி
(ஆ) பட்டுக்கோட்டை அழகிரி
(இ) மூவலூர் இராமாமிர்தம்
(ஈ) அறிஞர் அண்ணா

**137) வகுப்புவாரி உரிமைக்காக மாணவர்கள் வேலை நிறுத்தம், கடை அடைப்பு முதலிய போராட்டங்களைப் பெரியார் நடத்திய நாள் எது?**

(அ) 26.1.1950 (ஆ) 14.8.1950
(இ) 2.12.1951 (ஈ) 1.11.1950

**138) சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்த நாள் எது?**

(அ) 26.1.1950 (ஆ) 30.1.1952
(இ) 26.8.1953 (ஈ) 1.8.1956

**139) இராமன் படத்தைப் பெரியார் கொளுத்திய போராட்ட நாள் எது?**

(அ) 1.8.1956 (ஆ) 2.12.1956
(இ) 10.3.1971 (ஈ) 28.02.1971

**140) இராமன் பட எரிப்பைக் கண்டித்துக் கடுமையாக எதிர்த்துப் பேசிய தலைவர் யார்?**

(அ) ராஜாஜி (ஆ) டாக்டர் சுப்பராயன்
(இ) காமராசர் (ஈ) எம். பக்தவச்சலம்.

**141) கழகம் பிரிவதற்கு முன் கோவையில் பெரியாரும் அண்ணாவும் கலந்து கொண்ட மாநாட்டின் பெயர் என்ன?**

(அ) முத்தமிழ் மாநாடு (ஆ) சுயமரியாதை மாநாடு
(இ) திராவிடர் கழக மாநாடு (ஈ) பார்ப்பனரல்லாதார் மாநாடு

**142) முத்தமிழ் மாநாட்டினை முன்னின்று நடத்திய அறிஞர் யார்?**

(அ) சி.எஸ். இரத்தின சபாபதி முதலியார்

(ஆ) ஆர். கே. சண்முகம் (இ) ஜி.டி. நாயுடு

(ஈ) தி.சு. அவிநாசிலிங்கம் செட்டியார்

**143) சென்னை எஸ்.அய். ஏ.ஏ. திடலில் ஜி.டி. நாயுடுவின் கண்டுபிடிப்புகளைக் கண்காட்சியாக்கி மாநாட்டில் பேசிய பலகட்சித் தலைவர்களில் மாநில அரசு இக்கண்டுபிடிப்புகளை அலட்சியப்படுத்துவதால் அவை எல்லாவற்றையும் உடைத்துப் போடவேண்டும் என்று பேசிய தலைவர் யார்?**

(அ) பெரியார் (ஆ) அறிஞர் அண்ணா

(இ) மோகன் குமாரமங்கலம் (ஈ) ப. ஜீவானந்தம்.

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.இ | 2.ஆ | 3.இ | 4.ஆ | 5.ஈ | 6.இ | 7.அ | 8.இ | 9.ஈ | 10.இ |
| 11.இ | 12.அ | 13.இ | 14.இ | 15.ஈ | 16.ஈ | 17.ஆ | 18.ஆ | 19.அ | 20.இ |
| 21.ஆ | 22.அ | 23.அ | 24.ஆ | 25.இ | 26.இ | 27.ஆ | 28.ஈ | 29.ஈ | 30.ஈ |
| 31.ஆ | 32.இ | 33.இ | 34.ஈ | 35.அ | 36.ஈ | 37.அ | 38.ஈ | 39.ஈ | 40.ஈ |
| 41.ஈ | 42.இ | 43.அ | 44.இ | 45.இ | 46.இ | 47.இ | 48.ஈ | 49.அ | 50.ஆ |
| 51.ஆ | 52.இ | 53.ஆ | 54(ஈ | 55.அ | 56.ஈ | 57.ஈ | 58.இ | 59.ஈ | |
| 60 (1இ 2ஈ, 3ஆ, 4அ) | | | 61 (1இ, 2ஆ, 3அ) | | | 62.ஆ | 63.இ | 64.அ | 65.ஈ |
| 66.அ | 67.ஈ | 68.ஈ | 69.இ | 70.ஆ | 71.இ | 72.அ | 73.இ | 74.அ | 75.இ |
| 76.ஈ | 77.இ | 78.அ | 79.அ | 80.ஆ | 81.ஆ | 82.அ | 83.அ | 84.ஆ | 85.ஈ |
| 86.இ | 87.ஈ | 88.ஈ | 89.ஈ | 90.இ | 91.ஆ | 92.அ | 93.இ | 94.ஈ | 95.ஈ |
| 96.அ | 97.ஆ | 98.அ | 99.ஈ | 100.இ | 101.ஈ | 102.இ | 103.இ | 104 .அ | 105.ஈ |
| 106.ஈ | 107.ஆ | 108.இ | 109.இ | 110.ஆ | 111.ஈ | 112.இ | 113.அ | 114.இ | 115.அ |
| 116.இ | 117.அ | 118 .ஆ | 119 .ஈ | 120.இ | 121.அ | 122.அ | 123.இ | 124.ஆ | 125.ஈ |
| 126.ஈ | 127.ஈ | 128.ஆ | 129.ஆ | 130.ஆ | 131.இ | 132.அ | 133.அ | 134.ஆ | 135.அ |
| 136.ஆ | 137.ஆ | 138.இ | 139.அ | 140.அ | 141.அ | 142.இ | 143.ஆ | | |

**இயல் ஆறு**

# இலக்கியம்

தந்தை பெரியார் அவர்கள் தமது உள்ளத்தில் தோன்றிய கருத்துக்களை ஒளிவு மறைவு இன்றி ஒப்பனை இன்றி, உண்மை உணர்வுகளை மட்டுமே எடுத்துரைத்தார்.

அன்னை நாகம்மையார் அவர்கள் மறைந்தபோது தந்தை பெரியார் எழுதிய கையறு நிலைக் கட்டுரை **இரங்கல் இலக்கியம்** என்று சொல்லத்தக்க பெருமைக்கும் சிறப்புக்கும் உரியது.

இந்த ஆறாம் இயலில் பெரியாரின் சிந்தனைகள் அடங்கிய நூல்கள் சிலவற்றைப் பற்றிய குறிப்புகள் இங்கு வினா விடையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

- ➪ பெரியாரின் கருத்துகளை - புத்துலகை உருவாக்கும் சிந்தனை முத்துக்களை தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்கள் பல தொகுதிகளாக தொகுத்துருவாக்கி, பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் சார்பில் ‘‘பெரியார் களஞ்சியம்’’ எனும் பொதுத் தலைப்பில் வெளியிட்டுள்ளார்கள்.

- ➪ தந்தை பெரியாரின் நூல்களில் குடும்பத் தலைவியின் சிறப்பைக் கூறும், பெண்ணுரிமை பேசும் நூல்தான் வாழ்க்கைத் துணைநலம் எனும் நூலாகும்.

- ➪ 24.4.1927 இல் போளூரில் நடைபெற்ற ஆரம்ப ஆசிரியர்கள் மாநாட்டில், தந்தை பெரியார் ஆற்றிய உரை பகுத்தறிவுச் சுடரேந்துவீர் எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.





- கல்லூரியில் படிக்காத பெரியார் பல கல்லூரிகளுக்கு அழைக்கப்பட்டு, பல அரிய தத்துவ உரைகளை ஆற்றினார்கள். அவற்றில் ஒன்று 10.2.1960 இல் சென்னை சட்டக் கல்லூரியில் 10.2.1960 இல் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் நீதிபதி ஏ.எஸ்.பி.அய்யர் தலைமையில் ஆற்றிய உரை. ‘‘தமிழும் தமிழ் இலக்கியங்களும்’’ எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது.

- ‘மனிதநேய மாண்பாளராம் தந்தை பெரியார் பெண்ணுரிமைக்காக சித்தரித்துள்ள கருத்துகள் தனிச் சிறப்பானவை. ஒரு பெண்ணே இப்படி பெண்ணுரிமைக்கு சிந்தித்திருக்க முடியாது என்பதே அந்நூலின் சிறப்பு. அந்நூலின் பெயர்தான் ‘‘பெண் ஏன் அடிமையானாள்?’’ என்பதாகும்.

- மனுதர்மத்தின் கொடுமைகளை தோளுரித்து பெரியார் எழுதிய நூலின் பெயர் மனுநீதி ஒரு  ஒரு குலத்துக்கொரு நீதி 1938 இல் காந்தி எனும் இதழில் பெரியாரைப் புகழ்ந்து எழுதிய புகழ்மிக்க பார்ப்பனர்தான் வ.ரா. அவர்கள். அதேபோல், தந்தை பெரியாரைப்பற்றி ‘‘பகுத்தறிவின் சிகரம் பெரியார்’’ என்று எழுதிய பார்ப்பனர்தான் அறிஞர் ஏ.எஸ்.கே. ஆவார்.

- தந்தை பெரிய தனது பெற்றோரைப்பற்றி தான் எழுதிய கட்டுரையில் குறிப்பிடும்பொழுது, ‘‘என்னைப் பெற்ற ஏழைகள்’’ என்று குறிப்பிட்டுள்ளார்.

- பெரியார் அவர்களின் புரட்சி எனும் பெயர் தாங்கிய ஏடு அடக்குமுறைக்கு ஆளானது. எனவே, அது நிறுத்தப்பட்டு, உடன் பகுத்தறிவு எனும் ஏட்டினை பெரியார் தொடங்கினார்.

- தந்தை பெரியார் குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்தி எழுதியுள்ள நூலின் பெயர் ‘‘கர்ப்ப ஆட்சி’’.

- பெரியார் இராமாயணப் பாத்திரங்கள் எனும் ஆராய்ச்சி நூலை எழுதியுள்ளார். 1945 இல் இராமாயணப் பாத்திரங்கள், 1964 இல் இராமாயணக் குறிப்புகள் ஆகிய நூல்களை பெரியார் எழுதியுள்ளார்.

- பெரியாரின் Ramayana a True Reading என்ற ஆங்கில நூலை லாலாபாய்சிங் யாதவ் அவர்கள் சச்சி இராமாயண் என இந்தியில் மொழி பெயர்த்துள்ளார்.

- தந்தை பெரியார் தான் எழுதிய சுயசரிதையை ஈ.வெ.ராவுக்குத் தோன்றியது எனும் தலைப்பில் வெளியிட்டுள்ளார்.

- அன்னை மணியம்மையார் எழுதிய கந்தபுராணமும் - இராமாயணமும் ஒன்றே என்ற புராண நூலுக்கு பெரியார் முன்னுரை எழுதியுள்ளார்.

- கடவுள், மதம், ஆத்மாபற்றி பெரியார் எழுதிய தத்துவ விளக்க நூலுக்கு மெட்டீரியலிசம் அல்லது பிரிகிருதிவாதம் என்று பெயர்.

- பெரியார் நீதி கெட்டது யாரால்? என்ற நூலில் பார்ப்பனர் நீதிபதியாய் வாழும் நாடு கடும் புலி வாழும் காடு என்கிறார்.

- தந்தை பெரியார் இந்துக்கள் கொண்டாடும் விழாக்களைத் தோலுரிக்கும் வண்ணம் இந்து மதப் பண்டிகைகள் என்ற நூலையும், ‘ஆரிய மத வண்ட வாளம்’ என்ற கட்டுரைத் தலைப்பிட்டு ‘‘இந்து மதமும் தமிழர்களும்’’ என்ற நூலையும் எழுதியுள்ளார்.

- கிராமச் சீர்திருத்தம் என்ற நூலில், கிராமங்கள் பஞ்சம நிலையில் இருக்கிறது என்று எழுதியுள்ளார்.

- கி.பி.1957 இல் 2501 ஆம் ஆண்டு புத்தர் விழாவில் பெரியார் பேசியது புத்தநெறி என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளது.

- தந்தை பெரியார் எதிர்காலத்தை தொலைநோக்குப் பார்வைகொண்டு எழுதிய நூல், ‘‘இனிவரும் உலகம்’’ என்பதாகும்.

- தந்தை பெரியாரின் இறுதிப் பேருரை ‘‘மரண சாசனம்’’ எனும் பெயரில் வெளிவந்துள்ளது.

- தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்களின் தொடர் சொற்பொழிவுகளில் ஒன்று ‘‘பெரியாரியல்’’ எனும் நூலாக வெளிவந்துள்ளது.

- ‘‘பெரியாரின் பொன்மொழிகள்’’ என்ற நூல் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. தண்டனையும் வழங்கப்பட்டது.

- பெரியார்‘விடுதலை’ நாளேட்டை முதலில் வாரம் இருமுறை ஏடாகவும், பின் வார ஏடாகவும் தொடக்கத்தில் நடத்தினார்கள். பெரியாரின் வைக்கம் போராட்டமே அம்பேத்கரின் மனதில் தாக்கத்தை உருவாக்கியது என அவரே கூறியதை, அவரது தனிச் செயலாளராக இருந்த தனஞ்செய்கீர் தான் எழுதிய ‘‘அம்பேத்கர் வாழ்வும் தொண்டும்’’ என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

- விபச்சாரத்தில் தொடங்கி கற்பில் வளர்ந்து, முட்டாள்தனத்தில் முடிந்த கதைதான் சிலப்பதிகாரம் என்று பெரியார் தனது கருத்தை பதிவு செய்தார்.

- தந்தை பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் அவரது குடியரசு ஏட்டில் 1935 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

**தந்தை பெரியாரின் தனித்தன்மைகள் பற்றிய ஆய்வு நூல்களும் அறிஞர்களும்**

- புரட்சியாளர் பெரியார் - நெ.து.சுந்தரவடிவேலு
- பெரியார் ஈ.வெ.ரா. (வினா-விடை வடிவில்) - தமிழ்வாணன்
- பெரியார் பன்முகம் - சு.அறிவுக்கரசு
- பெரியார் ஒரு வாழ்க்கை நெறி - கவிஞர் கலி.பூங்குன்றன்
- பெரியார் ஒரு நடைச் சித்திரம் - மயிலை நாதன்
- தந்தை பெரியாரின் இலக்கியச் சிந்தனைகள் - ரெ.இராஜேஸ்வரி
- பகுத்தறிவின் சிகரம் பெரியார் - ஏ.எஸ்.கே.
- தந்தை பெரியார் (வாழ்க்கை வரலாறு) - கவிஞர் கருணானந்தம்
- பெரியார் பிள்ளைத் தமிழ் - டாக்டர் மு.சிங்காரவேலர்
- பெரியார் காணும் புத்துலகு - கருவூர் பாரி
- எனது வாழ்க்கைக் குறிப்புகள் - திரு.வி.க.




- பெரியார் சிந்தனையில் பெண்கள் - அரசு மணிமேகலை
- Periyar Era - ஏ.எம்.தர்மலிங்கம்
- Periyar E.V.Ramaswamy - A study of the influence of a personality in contemporary south India – அறிட்டா டயேல்
- தமிழ் வரலாற்றில் தந்தை பெரியார்
  – டாக்டர் பொன்.கோதண்டராமன்
  – பேராசிரியர் கு.வெ.கி.ஆசான்
  – டாக்டர் சு.ப.அறவாணன்
- History of South India - ஆர்.எடிசன்ராஜா
- மனித உரிமைப் போரில் பெரியார் பேணிய அடையாளம் - பேராசிரியர் கு.வெ.கி.ஆசான்
- 100 கேள்விகளுக்குத் தந்தை பெரியாரின் பதில்கள்
- Periyar. Father of the Tamil Race - எம்.டி.கோபாலகிருஷ்ணன்
- பெரியார் ஒரு முழுப்புரட்சியாளர் – புலவர் ந.இராமநாதன்
- தமிழர் தலைவர் – சாமி.சிதம்பரனார்
- சுயமரியாதைத் திருமணம் தத்துவமும் வரலாறும் – கி.வீரமணி
- 21ஆம் நூற்றாண்டு பெரியார் நூற்றாண்டே – கி.வீரமணி
- உலகத் தலைவர் பெரியார் – குன்றக்குடி அடிகளார்
- நான் கண்ட பெரியார் – கோவை அய்யாமுத்து
- தந்தை பெரியார் பங்களிப்புச் செய்த வைக்கம் போராட்டம் - ஆங்கில நூல் – டாக்டர் டி.கே.இரவீந்திரன்
- பெரியார் ஒரு சரித்திரம் – ஏ.எஸ்.வேணு
- சுயமரியாதைத் தத்துவ கீதங்கள் – கடம்பங்குளம் ப.நாராயணன்
- பெரியார் – சுயமரியாதை – சமதர்மம் – எஸ்.வி.இராசதுரை, வ.கீதா
- எனது நினைவுகள் – கோவை அய்யாமுத்து
- Periyar - A Penpertrair – எம். பாலசுப்ரமணியன்

**உலகு தொழுகிறது**

அறிவுலகப் பேராசான் தந்தை பெரியாரைப்பற்றி பல்துறை அறிஞர்களின் பல்வேறு கோணங்களில் செய்துள்ள மதிப்பீட்டில் மிகப்பெரும் ஒப்பற்ற மதிப்பீடு என்றால், அது புரட்சிக்கவிஞரது மதிப்பீடுதான் என்பதில் இரு கருத்து இருக்காது. இதோ புரட்சிக்கவிஞர் எழுதுகிறார், **“உயர் எண்ணங்கள் மலரும் சோலை”** என்றும், **“பெரியாரின் மண்டைச் சுரப்பை உலகு தொழும்”** என்றும் குறிப்பிடுகிறார்.

தந்தை பெரியாரைப்பற்றி புகழ்ந்து எழுதிய நாவலர் சோமசுந்தர பாரதியார், ‘‘உண்மையை அஞ்சாது உரைக்கும் உரமுடைய நெஞ்சச் செவ்வி மிகப் படைத்தவர் பெரியார் என்பது எல்லாரும் ஒப்ப முடிந்த உண்மை’’ என்று அழகுற கூறுகிறார். பெரியாரைப்பற்றி சர்.ஏ.இராமசாமி முதலியார் அவர்கள் குறிப்பிடுகையில், தமிழ்நாட்டின் ரூசோ என்கிறார்.

ஆர்.எடிசன்ராஜா எனும் வரலாற்று அறிஞர் தான் எழுதிய, ‘‘History of South India’’ எனும் நூலில், ‘‘பாமர மக்களிடையே பகுத்தறிவுச் சிந்தனைகளை பரப்பியதில் பெரியாருக்கு இணையாக ஆசியாவிலேயே எவரும் இல்லை’’ என்று குறிப்பிடுகிறார்.

சிங்கப்பூர் தமிழ்முரசு ஏடு, தமிழர் தலைவர் வீரமணி அவர்கள் பெரியார் பணியை அலுப்பு சலிப்பின்றி ஆற்றிடும் பணியைப் பாராட்டி எழுதியுள்ளது. எம்.டி.கோபாலகிருஷ்ணன் அவர்கள், ‘‘Periyar, Father of the Tamil Race எனும் நூலை எழுதியுள்ளார்.

ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து வெளிவரும் சோசலிஸ்டு கட்சியின் ஆங்கில ஏடான, The Guardian பெரியாரின் படத்துடன் ஆய்வுக் கட்டுரை ஒன்று பெரியாரைப்பற்றி தீட்டியுள்ளது. அதே ஏட்டில் 1996 இல் நார்மன் டெய்லர் என்பவர் நாத்திக இயக்கத்தை, மக்கள் இயக்கமாக்கிய உலகின் ஒரே தலைவர் பெரியார்தான் என்று புகழ்ந்து எழுதியுள்ளது.

# இலக்கியம்

## - ந. வெற்றியழகன் -

1) **'உயர் எண்ணங்கள் மலரும் சோலை' - எனத் தந்தை பெரியாரைப் புகழ்ந்து பாடிய கவிஞர்**

அ) கவிஞர் கண்ணதாசன் ஆ) பாவலர் பாலசுந்தரம்

இ) புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஈ) கவிஞர் சுரதா

2) **தந்தை பெரியாரின் கருத்துக்களைத் தமிழர் தலைவர் கி.வீரமணி பல தொகுதி நூல்களாகப் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் சார்பாக வெளியிட்டுள்ளார்; அந்தத் தொகுதிகளின் பெயர்.**

அ) பெரியார் திரட்டு ஆ) பெரியார் கருத்துக்களஞ்சியம்

இ) பெரியார் களஞ்சியம் ஈ) பெரியார் கருவூலம்

3) **ஒரு குடும்பத் தலைவியின் சிறப்புகளைப் பற்றிய தந்தை பெரியாரின் நூல்**

அ) குடும்ப விளக்கு ஆ) குடும்பத் தலைவி

இ) குடும்பச் சுடர் ஈ) வாழ்க்கைத் துணைநலம்

4) **24.4.1927இல் போளூரில் நடந்த ஆரம்ப ஆசிரியர்கள் மாநாட்டில் தந்தை பெரியார் பேசிய உரை நூலாக வெளிவந்துள்ளது. அந்த நூலின் பெயர் இது:**

அ) பகுத்தறிவுச் சுடரேந்துவீர்! ஆ) புரட்சிச் சுடரேந்துவீர்!

இ) கல்விச் சுடரேந்துவீர்! ஈ) சுயமரியாதைச் சுடரேந்துவீர்!

5) **தந்தை பெரியார் பற்றி நெ.து சுந்தரவடிவேலு எழுதிய நூலின் பெயர்**

அ) புரட்சிச் சுடர் பெரியார் ஆ) அறிவுப் பேரொளி பெரியார்

இ) புரட்சியாளர் பெரியார் ஈ) கல்விச் சுடரேந்துவீர்!





**6) சென்னை சட்டக்கல்லூரியில் 10.2.1960 இல் முத்தமிழ் மன்ற விழாவில் நீதிபதி ஏ.எஸ்.பி அய்யர் தலைமையில் தந்தை பெரியார் பேசிய உரை நூலாக வெளியாகியுள்ளது. அந்நூலின் பெயர்**

அ) தமிழ் இலக்கியங்கள் ஆ) தமிழ் இலக்கியச் சோலை
இ) தமிழ்ப் பண்பாடு ஈ) தமிழும் தமிழ் இலக்கியங்களும்

**7) பெரியாரின் சிறப்புகளைப்பற்றி வினா - விடை வடிவில் தமிழ்வாணன் எழுதியுள்ள நூல்:-**

அ) ‘பெரியார்’ ஆ) ‘பெரியார் யார்?’
இ) ‘தலைவர் பெரியார்’ ஈ) ‘பெரியார் ஈ.வெ.ரா.’

**8) ‘பெரியார் பன்முகம்’ என்னும் நூலாசிரியர்**

அ) க.த.திருநாவுக்கரசு ஆ) பழனி அரங்கசாமி
இ) சு.அறிவுக்கரசு ஈ) டாக்டர் கலையரசு

**9) பெண்ணடிமை பற்றித் தந்தை பெரியார் விளக்கி எழுதியுள்ள நூல்**

அ) ‘பெண் விடுதலை’ ஆ) ‘பெண்ணடிமை ஒழிப்போம்’
இ) ‘பெண் ஏன் அடிமையானாள்?’ ஈ) ‘ பெண்ணுரிமை முழக்கம்’

**10) ‘பெரியார் ஒரு வாழ்க்கை நெறி’ எனப் பெரியாரின் வாழ்வியல் கோட்பாடுகளை நூல் வடிவில் தந்தவர்**

அ) கவிஞர் குடியரசு ஆ) கவிஞர் முடியரசன்
இ) கவிஞர் கலிபூங்குன்றன் ஈ) கவிஞர். தமிழமுதன்

**11) பெரியார் பற்றி மயிலை நாதன் எழுதிய நூல்**

அ) ‘பெரியார் பாதை’ ஆ) ‘ பெரியாரின் பெருவாழ்வு’
இ) ‘பெரியார் ஒரு நடைச்சித்திரம்’ ஈ) ‘பெரியார் ஈ.வெ.ரா.’

**12) ‘தந்தை பெரியாரின் இலக்கியச் சிந்தனைகள்’ என்னும் ஆய்வுக் கட்டுரை நூலை டாக்டர் பட்டத்திற்காக எழுதியவர்**

அ) அ.அருள்மொழி ஆ) டாக்டர் பிறைநுதல் செல்வி
இ) அரசு. மணிமேகலை ஈ) ரெ.இராஜேஸ்வரி எம்.ஏ.,

**13) மநுதர்ம சாத்திரத்தின் கொடுமையை விளக்கத் தந்தை பெரியார் எழுதிய நூல்**

அ) மநுதர்மம் ஆ) ஆரிய அநீதி
இ) மநுநீதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி ஈ) மநு அநீதி

**14) “நான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர் அவர் பெரியார்” எனக் கூறியவர் யார்?**

அ) பட்டுக்கோட்டை அழகிரிசாமி ஆ) குத்தூசி குருசாமி
இ) அறிஞர் அண்ணா ஈ) கி.ஆ.பெ.விசுவநாதம்

**15) தந்தை பெரியாருடன் சேர்ந்து பணியாற்றிய காலத்தை அறிஞர் அண்ணா பின்வரும் தொடரால் குறிப்பிடுகிறார். அத்தொடர்**

அ) எனது பொற்காலம் ஆ) எனது இனிய நாட்கள்
இ) எனது வசந்தம் ஈ) அந்தச் சிறந்த காலம்

**16) மக்கள் தொகைப் பெருக்கம் குறித்து தந்தை பெரியாரிடம் பேட்டி கண்ட மத்திய அமைச்சர் யார்?**

அ) சந்தானம் ஆ) சி. சுப்பிரமணியம்
இ) மரகதம் சந்திரசேகர் ஈ) டாக்டர் சந்திரசேகர்

**17) "ஸ்மரணை அற்றுக்கிடந்த தமிழர்களின் உள்ளத்தை அடி தெரியும்படி கலக்கிய பிரமாண்ட பாக்கியம் நாயக்கரைப் பெரிதும் சார்ந்தது" எனப் பெரியாரைப் புகழ்ந்து 1938 - இல் காந்தி என்னும் இதழில் எழுதிய பார்ப்பன அறிஞர்**

அ) ஆக்கூர் அனந்தாச்சாரி ஆ) சேலம் விஜயராகவாச்சாரி
இ) ஜி.சுப்ரமணிய அய்யர் ஈ) வ.ரா.

**18) அறிஞர் ஏ.எஸ்.கே. தந்தை பெரியார் பற்றி எழுதியுள்ள நூலின் பெயர்**

அ) 'தன்மானத் தலைவர்' ஆ) 'சீர்திருத்தச் செம்மல்'
இ) 'சிந்தனைச் சிகரம்' ஈ) 'பகுத்தறிவின் சிகரம் பெரியார்'

**19) "மூடப்பழக்க வழக்கங்களில் மூழ்கிப்போன சமுதாயத்தைத் தூக்கி நிறுத்தி, தலைநிமிரச் செய்து சுயமரியாதை உணர்வோடு வாழ வழிவகுத்த வரலாற்று நாயகர்" எனப் பெரியாரைப் புகழ்ந்து அவர்தம் 114 ஆம் பிறந்தநாள் விழாச் சிறப்பு மலரில் எழுதியவர் இவர்**

அ) பேராசிரியர் ஞானசம்பந்தன் ஆ) பேராசிரியர் அன்புகணபதி
இ) செல்வி ஜெயலலிதா ஈ) நாவலர் இரா.நெடுஞ்செழியன்

**20) தம் பெற்றோர் பற்றித் தந்தை பெரியார் எழுதிய கட்டுரையின் தலைப்பு**

அ) ' எனது பெற்றோர்' ஆ) 'என்னை ஈன்ற தாய் தந்தையர்'
இ) 'என்னைப் பெற்றவர்கள்' ஈ) 'என்னைப் பெற்ற ஏழைகள்'

**21) "இயற்கையின் புதல்வர்; மண்ணை மணந்த மணாளர்" எனப் பெரியாரைப் புகழ்ந்து எழுதிய அறிஞர் யார்?**

அ) வ.ரா ஆ) மறைமலை அடிகள்
இ) கா. அப்பாத்துரை ஈ) கலைவாணர் என்.எஸ்.கே.





**22) தந்தை பெரியாரின் முழுமுதல் வாழ்க்கை வரலாற்றுத் தமிழ் நூலைத் 'தந்தை பெரியார்' என்னும் தலைப்பில் எழுதியவர்**

அ) கவிஞர் கலி. பூங்குன்றன் ஆ) புலவர் செங்குட்டுவன்

இ) கவிஞர் கருணானந்தம் ஈ) புலவர் இராமானுசம்

**23) போரசிரியர் டாக்டர் மு.சிங்காரவேலன் பெரியார் பற்றி எழுதிய சிற்றிலக்கிய வகையில் அமைந்த நூல்**

அ) பெரியார் தூது ஆ) பெரியார் பிள்ளைத்தமிழ்

இ) பெரியார் அந்தாதி ஈ) பெரியார் உலா

**24) 'பெரியார் காணும் புத்துலகு' என்னும் குறுங் காவியத்தை எழுதியவர்**

அ) கவிஞர் சுரதா ஆ) கவிஞர் முடியரசன்

இ) கருவூர் பாரி ஈ) கவிஞர் கன்னல்

**25) அடக்கு முறைக்கு ஆளாகிப் புரட்சி ஏடு நிறுத்தப்பட்டதும் 26.08.34 இல் பெரியார் தொடங்கிய நாளேடு**

அ) புயல் ஆ) மக்களாட்சி

இ) போராட்டம் ஈ) பகுத்தறிவு

**26) "நான் செத்துப் போனால் எனக்காக அழுகின்ற ஒரு நண்பர் இருந்தால் அவர் பெரியார் ராமசாமியாகத்தான் இருக்க முடியும்; இந்நாட்டில் பெரிய காரியம் செய்தவர் பெரியார் ஒருவர்தான்!" எனப் பெரியார் பற்றித் திரு.வி.க. எழுதியுள்ள நூலின் பெயர்?**

அ) எனது இலங்கைச் செலவு

ஆ) மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்

இ) எனது வாழ்க்கைக் குறிப்புகள்

ஈ) முருகன் அல்லது அழகு

**27) பெரியார் அவர்களால் 'குடி அரசு' ஏடு தொடங்கப்பெற்ற ஆண்டு**

அ) 1926 ஆ) 1925 இ) 1935 ஈ) 1928

**28) 1928 நவம்பர் 7 -இல் சவுந்தரபாண்டியனார் தொடங்கி வைத்த பெரியாரின் ஆங்கில ஏடு இது**

அ) The fire ஆ) Agitation இ) Liberation ஈ) Revolt

**29) ``Periyar and D.K`s Influence on Religion and Society in Tamilnadu" என்னும் ஆய்வு நூல் அமெரிக்க அறிஞரால் எழுதப்பட்டது. அந்த நூலை எழுதியவர் இவர்**

அ) ஹென்றி ரிச்சர்ட் ஆ) லெவிஃபிராகல்

இ) கார்ல்சான் ஈ) டக்ளாஸ்.இ.கெல்டன்

**30) குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்திப் பெரியார் வெளியிட்ட முதல் நூல்**

அ) கருத்தடை　　ஆ) கர்ப்ப ஆட்சி

இ) கர்ப்பத் தடுப்பு　　ஈ) குடும்பக்கட்டுப்பாடு

**31) "சுறுசுறுப்பின் மறுபெயர் ஈ.வெ.ரா." என்று புகழ்ந்து எழுதிய தமிழறிஞர்**

அ) டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார்

ஆ) டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

இ) டாக்டர் முத்துக் கண்ணப்பர்

ஈ) டாக்டர் மா. இராசமாணிக்கனார்

**32) பெரியாரின் பெண்ணுரிமை பற்றி அரசுமணிமேகலை எழுதிய நூல் எது?**

அ) பெரியாரும், பெண்களும்!

ஆ) பெரியார் கண்ட பெண் விடுதலை

இ) பெரியார் பார்வையில் பெண்ணியம்

ஈ) பெரியார் சிந்தனையில் பெண்கள்.

**33) "நாத்திகக் கோட்பாட்டில் இங்கிலாந்தின் பெர்ட்ரண்டுரசல் மெக்சிகோ செகுவாரா (Sequieros in Mexico)" எனப் பெரியாரைப் புகழ்ந்து எழுதிய ஆங்கில வார ஏடு**

அ) சங்கர்ஸ் வீக்லி　　ஆ) இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி

இ) பிளிட்ஸ்　　ஈ) ஆன்லுக்கர்

**34) பெண்களைப் பற்றிப் பெரியார் என்னும் பொருளில் 'மகிளேயரா பகே பெரியார்' என்னும் நூலைக் கன்னடத்தில் எழுதியவர்**

அ) தேவராஸ்அர்சு　　ஆ) பசவலிங்கப்பா

இ) நிக்கோபா　　ஈ) நிஜலிங்கப்பா

**35) பெரியாரானா (Periyarana) என்னும் ஆங்கில நூலை எழுதியவர்**

அ) க.ப.அறவாணன்　　ஆ) கே.எம்.பாலசுப்ரமணியம்

இ) ஏ.எம்.தர்மலிங்கம்　　ஈ) ஏ.பி.ஜனார்த்தனம்

**36) Periyar E.V.Ramaswamy - A study of the influence of a personality in contemporary South India என்ற ஆய்வு நூலை 1978 இல் எழுதிய வெளிநாட்டுப் பெண் அறிஞர்**

அ) மேரி மில்டன்　　ஆ) அகதா கிறிஸ்டி

இ) அனிட்டா டயேல்　　ஈ) ஆஞ்சலின் மேரி



**37) டாக்டர். பொன்.கோதண்டராமன், பேராசிரியர் கு.வெ.கி. ஆசான், டாக்டர் க.ப.அறவாணன் ஆகியோர் எழுதிய "தமிழ் வரலாற்றில் தந்தை பெரியார்" எனும் நூலை வெளியிட்டது**

அ) பெங்களூர்த் தமிழ்ச்சங்கம் ஆ) டில்லித் தமிழ்ச்சங்கம்
இ) மதுரைத் தமிழ்ச்சங்கம் ஈ) பம்பாய்த் தமிழ்ச்சங்கம்

**38) இரங்கல் இலக்கியம் என்று சொல்லத்தக்க கையறு நிலைக் கட்டுரையைப் பெரியார் எழுதியது இவர்களில் ஒருவர் இறந்தபோது, அவர்**

அ) கண்ணம்மை ஆ) நீலாவதி சுப்ரமணியம்
இ) நாகம்மையார் ஈ) பனகல் அரசர்

**39) "உண்மையில் அம்பேத்கர், பெரியார், இராம் மனோகர் லோகியாவின் கனவு நனவாகிவிட்டது" என மண்டல் குழு தொடர்பான உச்சநீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்ட நீதிபதி**

அ) நீதிபதி வெங்கடாசலையா ஆ) நீதிபதி இரத்தினவேல் பாண்டியன்
இ) நீதிபதி சின்னப்பா ஈ) நீதிபதி வரதராசன்

**40) தமிழர் தலைவர் கி.வீரமணியை ஆசிரியராகக் கொண்ட 'உண்மை' என்னும் இதழ் பெரியார் முன்னிலையில் வெளியிடப்பட்ட ஆண்டு**

அ) 1975 ஆ) 1960 இ) 1970 ஈ) 1972

**41) சோதனைக்குழாய் குழந்தை பற்றிய பெரியாரின் பேச்சு முதன் முதலில் "குடி அரசு" இதழில் வெளிவந்த நாள்**

அ) 31.8.1940 ஆ) 31.7.1939 இ) 31.1.1938 ஈ) 31.5.1938

**42) "உண்மையை அஞ்சாது உரைக்கும் உரமுடைய நெஞ்சச் செவ்வி மிகப் படைத்தவர் பெரியார் என்பது எல்லாரும் ஒப்பமுடிந்த உண்மை" என்று புகழ்ந்து எழுதியவர்**

அ) கா.சுப்ரமணியபிள்ளை
ஆ) அவ்வை துரைசாமிபிள்ளை
இ) டி.கே.சிதம்பரநாத முதலியார்
ஈ) நாவலர் சோமசுந்தர பாரதியார்

**43) தந்தை பெரியார் குறித்து சர்.ஏ.இராமசாமி முதலியார் இவ்வாறு கூறினார்**

அ) தமிழ்நாட்டின் சாக்ரடீஸ் ஆ) தமிழ்நாட்டின் ரூசோ
இ) தமிழ்நாட்டின் இங்கர்சால் ஈ) தமிழ்நாட்டின் லெனின்

**44) “பாமர மக்களிடையே பகுத்தறிவுச் சிந்தனைகளைப் பரப்பியதில் பெரியாருக்கு இணையாக ஆசியாவிலேயே எவரும் இல்லை” என ஆர்.எடிசன்ராஜா என்னும் வரலாற்று அறிஞர் தமது நூலில் எழுதியுள்ளார் அந்த நூலின் பெயர்**

அ) History of TamilNadu ஆ) History of Modern India
இ) History of South India ஈ) History of Modern Tamil Nadu

**45) இராமயாணம் பற்றிப் பெரியாரால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல்களுள் இதுவும் ஒன்று. அந்நூல்**

அ) இராவணன் வரலாறு ஆ) இராவணன் சரித்திரம்
இ) இராவண மாவீரன் ஈ) இராமாயணப் பாத்திரங்கள்

**46) “இராமாயாணப் பாத்திரங்கள்” என்னும் நூல் பெரியாரால் வெளியிடப்பட்ட ஆண்டு**

அ) 1935 ஆ) 1944 இ) 1945 ஈ) 1948

**47) 1964இல் இராமாயண ஆராய்ச்சித் தொடர்பாகத் தந்தை பெரியார் எழுதிய நூல்**

அ) இராமாயண சாரம் ஆ) இராமாயண ஆய்வு
இ) இலங்கை வேந்தன் ஈ) இராமாயணக் குறிப்புகள்

**48) பெரியாரின் Ramayana, a True Reading என்ற ஆங்கில நூலை லால்பாய்சிங் யாதவ் கீழ்கண்ட பெயரால் இந்தியில் மொழியாக்கம் செய்து வெளியிட்டார்?**

அ) சத்திய இராமாயணா ஆ) இராமாயின்கதா
இ) இராமகதா ஈ) சச்சி இராமாயண்

**49) சோதிடம் பற்றி பெரியார் எழுதிய ஆய்வு நூல்**

அ) சோதிடப்பொய் ஆ)சோதிடம் தேவையா?
இ) சோதிட ஆராய்ச்சி ஈ) சோதிடப்பித்தலாட்டம்

**50) தந்தை பெரியார் தமது சுயசரிதையைப் பின்வரும் தலைப்பில் வெளியிட்டுள்ளார்**

அ) எனது வரலாறு ஆ) எனது நினைவுகள்
இ) ஈ.வெ.ரா. வுக்குத் தோன்றியது ஈ) என் நெஞ்சில் நிலைத்தவை

**51) அன்னை மணியம்மையார் எழுதிய புராணம் தொடர்பான ஒரு நூலுக்குப் பெரியார் அவர்கள் முன்னுரை எழுதியுள்ளார். அந்நூலின் பெயர்**

அ) ‘கந்த புராணமும் இராமாயணமும் ஒன்றே’
ஆ) ‘பெரிய புராண ஆராய்ச்சி’
இ) ‘புராண ஆபாசங்கள்’ ஈ) ‘புராணப் புளுகு’

**52) கடவுள், மதம், ஆத்மா முதலிய தலைப்புகளை உள்ளடக்கிய பெரியாரின் தத்துவ விளக்க நூல் எது?**

அ) ஆத்ம விசாரணை

ஆ) ஆத்மவாதம்

இ) மெட்டீரியலிசம் அல்லது பிரகிருதி வாதம்

ஈ) கடவுள் புரட்டு

**53) "பார்ப்பான் நீதிபதியாய், ஆட்சியாளனாய் இருக்கும் நாடு கடும்புலி வாழும் காடேயாகும்" என்ற பெரியாரின் கருத்து இடம் பெற்ற நூல்**

அ) நியாயம் எங்கே? ஆ) நீதி எது?

இ) நீதியின் நிழல் ஈ) நீதி கெட்டது யாரால்?

**54) இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள் குறித்துத் தந்தை பெரியார் எழுதிய நூல்**

அ) பாழ்படுத்தும் பண்டிகைகள்

ஆ) இந்து மதப்பண்டிகைகள்

இ) பண்டிகைகளைக் கொண்டாடலாமா?

ஈ) பண்டிகைகளால் பயன் உண்டா?

**55) "ஆரியமத வண்டவாளம்" என்ற தலைப்பிட்ட கட்டுரை இடம் பெற்ற பெரியாரின் நூல்**

அ) இந்துமதத்தின் இழிவுகள் ஆ) தமிழர்கள் இந்துக்களா?

இ) இந்துமதமும் தமிழர்களும் ஈ) அர்த்தமற்ற இந்துமதம்

**56) "ஊர்த்தன்மையில் அல்லது ஊர் வரிசையில் பஞ்சமன் நிலையில் கிராமம் இருக்கிறது" என்னும் பெரியாரின் எழுத்து இடம் பெற்றுள்ள நூல்**

அ) வகுப்புரிமை ஆ) கிராமமும் நகரமும்

இ) கிராமச்சீர்திருத்தம் ஈ) தென்னிந்திய சீர்திருத்தம்

**57) 15.5.1957-இல் 2501 ஆம் ஆண்டு புத்தர் விழாவின் போது பெரியார் பேசிய தலைமையுரை நூலாக வெளிவந்துள்ளது. நூலின் பெயர்**

அ) புத்தரின் போதனைகள் ஆ) ஆரிய எதிரி புத்தர்

இ) புத்த மார்க்கம் ஈ) புத்த நெறி

**58) "கழகத்திற்குக் கிடைத்த நல்வாய்ப்பு" என 10.8.1962 ஆம் நாளிட்ட 'விடுதலை' நாளேட்டில் பெரியார் குறிப்பிட்டது இவருள் ஒருவர்**

அ) குத்தூசி குருசாமி ஆ) அறிஞர் அண்ணா

இ) தி.பொ.வேதாசலம் ஈ) கி.வீரமணி

**59) "தமிழ் நாட்டில் இனி எந்தக் கட்சி ஆட்சி புரிந்தாலும் அது பெரியார் ஈ.வெ.ரா. ஆட்சி புரிவது போலத்தான் இருக்கும்" என்று வரலாற்று அறிஞர் என்.சுப்ரமணியன் எந்த ஆங்கில நூலில் எழுதியுள்ளார்?**

அ) The Tamil Brahmins

ஆ) The Brahmins' Role in the Tamil Nadu History

இ) The Brahmins in the History

ஈ) The Brahmins in the Tamil Country

**60) "கீதையின் வண்டவாளத்தை வெளியிட ஆசைப்படுகிறேன்" என்ற பெரியாரின் கடைசி ஆசையை நிறைவேற்றும் வண்ணம் தமிழர் தலைவர் கி.வீரமணி எழுதிய நூல்**

அ) கீதை ஒரு போதை ஆ) கீதையா? கிறுக்கலா?

இ) பாதை மாறிய கீதை ஈ) கீதையின் மறுபக்கம்

**61) பெரியாரின் கொள்கை விளக்கம் பற்றிப் பேராசிரியர் கு.வெ.கி. ஆசான் எழுதிய நூல்?**

அ) மனிதநேயம்

ஆ) மனித உரிமைப் போரில் பெரியார் பேணிய அடையாளம்

இ) பெரியாரின் மானிடப்பற்று

ஈ) பெரியாரின் மாந்த நேயம்

**62) பொதுமக்கள் வினாக்களுக்குப் பெரியார் விடையளிப்பது போன்ற பாணியில் பேராசிரியர் ந.வெற்றியழகன் தொகுத்து வெளியிட்ட நூலின் பெயர்**

அ) பெரியார் வினா–விடை

ஆ) பெரியார் அளித்த விடைகள்

இ) தந்தை பெரியாரின் பதில்கள்

ஈ) 100 கேள்விகளுக்குத் தந்தை பெரியாரின் பதில்கள்

**63) "பெரியார் ஒரு முழுப் புரட்சியாளர்" என்னும் நூலின் ஆசிரியர்**

அ) புலவர் மா.நன்னன் ஆ) புலவர் ந.இராமநாதன்

இ) பேராசிரியர் இறையன் ஈ) புலவர் தங்கப் பிரகாசம்

**64) "ஆங்கில ஆட்சியிலே பார்ப்பனர் பிரச்சினைகளைத் தீர்க்கா விட்டால் பார்ப்பனரல்லாதார் பார்ப்பன நாயகத்தின் கீழ்க் கொடுமைகள் அனுபவிப்பர்" என்ற கருத்தை உள்ளடக்கிய ஆங்கில தொகுப்பு நூல்**

அ) Illustrated weekly ஆ) A Hundred years of The Hindu

இ) The Indian Express ஈ) The Madras Mail

**65) “பெரியார் போலவே அலுப்போ சலிப்போ இல்லாமல் பெரியாருடைய ஆதாரக் கொள்கைகளைச் சுருதி பேதமோ, தாள பேதமோ இல்லாமல், பிசிறு தட்டாமல் இன்று வரையில் பிரச்சாரம் செய்து வருகிறார் வீரமணி” எனச் சிங்கப்பூரில் இருந்து வெளியாகும் ஒரு இதழ் எழுதியுள்ளது. அந்த இதழின் பெயர்**

அ) பொன்னி ஆ) சிங்கை முரசு

இ) சிங்கப்பூர் தூதுவன் ஈ) தமிழ் முரசு

**66) ``Periyar, Father of the Tamil Race” என்னும் ஆங்கில நூலின் ஆசிரியர்**

அ) ஏ.எஸ்.வேணு ஆ) சண்டே அப்சர்வர் பாலசுப்ரமணியம்

இ) எம்.டி.கோபாலகிருஷ்ணன் ஈ) கே.எம்.பாலசுப்ரமணியம்

**67) ஆஸ்திரேலியாவின் சோசலிஸ்டு கட்சியால் வெளியிடப்படும் ஒரு ஆங்கில ஏடு பெரியார் பற்றி அவருடைய படத்துடன் ஒரு பக்க ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளது. அந்த ஏட்டின் பெயர்**

அ) The Nature ஆ) The Free Thinker

இ) The Guardian ஈ) Humanist

**68) “ மேலை நாடுகளில் பகுத்தறிவு அமைப்பானது பொதுவாக உரையரங்க அளவுக்குள்ளேயே கட்டுப்பட்டு நடப்பதாக உள்ளது. ஆனால் தந்தை பெரியார் அவர்கள் அதனை ஒரு மக்கள் இயக்கமாகவே வளர்த்துள்ளார்”என The Guardian என்னும் மார்ச் 27, 1996 இதழில் Peoples’ Movement என்னும் தலைப்பில் கட்டுரை எழுதிய ஆஸ்திரேலிய நாத்திக அறிஞர்**

அ) பவுல் பவர் ஆ) லூயி பிசர்

இ) ஜே.ஆர்.ஜோன்ஸ் ஈ) நார்மன் டெய்லர்

**69) தந்தை பெரியாரின் முற்பகுதி வாழ்க்கை வரலாற்றைத் “தமிழர் தலைவர்” என்னும் நூலாக முதன் முதலில் எழுதியவர்**

அ) கோவை அய்யாமுத்து ஆ) ஏ.எஸ்.வேணு

இ) புலவர் இமயவரம்பன் ஈ) சாமி. சிதம்பரனார்

**70) தந்தை பெரியாரின் சுயமரியாதைத் திருமணத் தத்துவத்தை விளக்கித் தமிழர் தலைவர் கி.வீரமணி 1997-இல் வெளியிட்ட நூல்**

அ) தமிழர் திருமணம்

ஆ) திராவிடர் திருமணம்

இ) சுயமரியாதைத் திருமணம் ஏன்?

ஈ) சுயமரியாதைத் திருமணம் தத்துவமும் வரலாறும்



**71) பெரியாரின் கர்ப்பத்தடை பற்றிய கருத்தினைப் புகழ்ந்து பாராட்டி 22.3.92 "தி வீக்" இதழில் கட்டுரை எழுதியவர்**

அ) ஏ.எஸ். இராமன் ஆ) குஷ்வந்த் சிங்
இ) கரஞ்சியா ஈ) ரேஸ்மி சாக்சேனா

**72) "முற்றும் உணர்ந்த பேராசிரியர்" எனப் பெரியார் பற்றி எழுதியவர்**

அ) எஸ்.எஸ். வாசன் ஆ) கல்கி கிருஷ்ணமூர்த்தி
இ) டி.எஸ்.சொக்கலிங்கம் ஈ) ஏ.என். சிவராமன்

**73) "தலைகீழாக இருந்த சமுதாயத்தை நேராக நிற்கச் செய்தவர் பெரியார்" எனப் பாராட்டி எழுதியவர்**

அ) ஜி.டி.நாயுடு ஆ) கே.வி.ரெட்டி நாயுடு
இ) எஸ்.முத்தையா முதலியார் ஈ)ஊ.பு.அ. சவுந்தரபாண்டியன்

**74) "மதத்தை எதிர்த்த மாபெரும் புரட்சியாளர் பெரியார்"என எழுதிய ஆங்கில வார ஏடு**

அ) பிளிட்ஸ் ஆ) விஸ்டம்
இ) காரவான் ஈ) டெய்லி டெலிகிராப்

**75) "மதமும் கடவுளும் மக்களுக்குத் தொண்டு செய்யவா? மக்கள் மதத்திற்கும் கடவுளுக்கும் தொண்டு செய்யவா? என்பதே பெரியாரின் கேள்வி" என எழுதியவர்**

அ) மறைமலை அடிகளார் ஆ) திரு.வி.க.
இ) அறிஞர் அண்ணா ஈ) குன்றக்குடி அடிகளார்

**76) "பெரியார் புதிய காலத்தின் தொலை நோக்காளர்;தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்; சமுக சீர்திருத்தத்தின் தந்தை; அறியாமை, மூடநம்பிக்கை, பொருளற்ற பழக்க வழக்கங்கள், அடிப்படையற்ற நடைமுறைகள் ஆகியவற்றின் கடும் எதிரி" எனப் பாராட்டி 1970 இல் விருது வழங்கிய அமைப்பு**

அ) சென்னைப் பல்கலைக் கழகம் ஆ) யுனெஸ்கோ அமைப்பு
இ) லெனின் கிராடு பல்கலைக் கழகம் ஈ) சிகாகோ பல்கலைக் கழகம்

**77) "நெஞ்சு திக் திக் என்று அடித்துக் கொள்கின்றது; மெய் நடுங்கு கின்றது- எழுதக் கை ஓடவில்லை. கண் கலங்கி மறைக்கின்றது; கண்ணீர் எழுத்துக்களை மறைக்கின்றது" என்று யாருடைய மறைவிற்கு தந்தை பெரியார் இரங்கல் உரை எழுதியுள்ளார்**

அ) அறிஞர் அண்ணா ஆ) சர்.ஏ.டி. பன்னீர் செல்வம்
இ) டாக்டர் அம்பேத்கர் ஈ) காந்தியடிகள்

**78)** **மலையப்பன் பற்றிய நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தந்தை பெரியார் அளித்த வாக்குமூல அறிக்கை பற்றி ஆசிரியர் கி.வீரமணி இவ்வாறு எழுதியுள்ளார்**

அ) தமிழர்களின் பிரகடனம்

ஆ) திராவிடர்களின் உரிமை முழக்கம்

இ) தமிழினத்தின் உள்ளக் கொதிப்பு

ஈ) தமிழர்களின் உரிமைச் சாசனம்

**79)** **“ 21 ஆம் நூற்றாண்டு பெரியார் நூற்றாண்டே” என்னும் குறுநூலின் ஆசிரியர்**

அ) வா.செ.குழந்தைசாமி ஆ) மா.இளஞ்செழியன்

இ) கி.வீரமணி ஈ) தா.பாண்டியன்

**80)** **பெரியாரைப் பாராட்டித் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆற்றிய உரை, நூலாக வெளிவந்துள்ளது. அந்நூலின் பெயர்**

அ) தலைவர் பெரியார் ஆ) மானிடப் பற்றாளர் பெரியார்

இ) பெருந்தகை பெரியார் ஈ) உலகத் தலைவர் பெரியார்

**81)** **பெரியாரின் புகழ் வாய்ந்த புனைபெயர் இது**

அ) இந்திர சித்தன் ஆ) இராவண மித்ரன்

இ) சித்திர புத்திரன் ஈ) இரணியன்

**82)** **“கருப்புடை போர்த்த சிவப்பு ஞாயிறு” என பெரியாரைப் பாராட்டிப் பாடிய பாவலர்**

அ) பெருஞ்சித்திரனார் ஆ) ஆடலரசன்

இ) புலவர் புலமைப்பித்தன் ஈ) கவிஞர் சுரதா

**83)** **“வான் தவழும் வெண் மேகத் தாடி ஆடும்; வளமான சிந்தனைக்கோர் ஆட்டம் இல்லை” எனப் பெரியாரைப் புகழ்ந்து பாடியுள்ள கவிஞர்**

அ) நாரா.நாச்சியப்பன் ஆ) கவிஞர் முடியரசன்

இ) கவிஞர் வாணிதாசன் ஈ) கவிஞர் கண்ணதாசன்

**84)** **“நான் கண்ட பெரியார்” என்னும் நூலின் ஆசிரியர்**

அ) கோவை அய்யாமுத்து ஆ) ஏ.எஸ்.கே.

இ) சாத்தான்குளம் இராகவன் ஈ) ஜே.எஸ்.கண்ணப்பர்

**85)** **“தந்தை பெரியார் பங்களிப்புச் செய்த வைக்கம் போராட்டம்” பற்றி டாக்டர் பட்டம் பெற எழுதப்பட்ட ஆங்கில நூலின் ஆசிரியர்**

அ) டாக்டர் குணசேகரன் ஆ) டாக்டர் டி.கே.இரவீந்திரன்

இ) டாக்டர் தமிழண்ணல் ஈ) டாக்டர் வணங்காமுடி

86) **தந்தை பெரியார் பற்றி ஏ.எஸ்.வேணு அவர்கள் எழுதிய தமிழ் நூலின் பெயர்**

அ) பெரியாரின் பெருவாழ்வு ஆ) பெரியாரின் வரலாறு
இ) வரலாற்று மாமனிதர் பெரியார் ஈ) பெரியார் ஒரு சரித்திரம்

87) **எதிர்கால அறிவியல் கண்டுபிடிப்புகள்பற்றித் தொலை நோக்கோடு பெரியார் எழுதிய கருத்துக் கருவூல நூல்**

அ) இலங்கைப் பேருரை ஆ) அறிவு விருந்து
இ) இனிவரும் உலகம் ஈ) உயர் எண்ணங்கள்

88) **பெரியாரின் இறுதிப் பேருரை நூல் வடிவில் வெளிவந்துள்ளது; அந்நூலின் பெயர்**

அ) தந்தை பெரியாரின் இறுதிப் பேருரை (மரண சாசனம்)
ஆ) புரட்சி
இ) சிந்தனையும் பகுத்தறிவும்
ஈ) பகுத்தறிவுச் சுடர் ஏந்துவீர்!

89) **“ஆத்மா, மோட்சம், நரகம், பிதுர்லோகம் முதலியவற்றால் பலன் அனுபவிக்கிறவனைப்” பெரியார் இவ்வாறு குறிப்பிடுகிறார்**

அ) மடையன் ஆ) வஞ்சகன்
இ) அயோக்கியன் ஈ) மகா மகா அயோக்கியன்

90) **பெரியார் முகவுரையுடன் ‘சுயமரியாதைத் தத்துவ கீதங்கள்’ என்னும் நூலை 1930 இல் தம் சொந்தப் பொறுப்பில் எழுதி வெளியிட்ட பாவலர் யார்?**

அ) பாவலர் பாலசுந்தரம் ஆ) பாவலர் தி.அ.வேங்கடசாமி
இ) கடம்பங்குளம் ப.நாராயணன் ஈ) புதுவைச் சிவப்பிரகாசம்

91) **பெரியாரின் கருத்துக்களைத் தாங்கி மூன்று தொகுதிகளாக வெளி வந்துள்ள நூல்**

அ) பெரியாரின் சிந்தனைகள் ஆ) பெரியாரின் கருத்துகள்
இ) பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் ஈ) பெரியாரின் கொள்கைகள்

92) **‘பிளிட்ஸ்’ என்னும் ஆங்கில வார ஏடு தந்தை பெரியாரை இவ்வாறு சிறப்பித்து எழுதியது**

அ) தமிழ்நாட்டு லெனின் ஆ) இந்திய சாக்ரடீஸ்
இ) தென்னாட்டுக் கார்ல்மார்க்ஸ் ஈ) தென்னகத்துக் கமால் பாட்சா





**93) எஸ்.வி.இராசதுரை - வ.கீதா இவர்கள் எழுதிய பெரியார் கொள்கை பற்றிய திறனாய்வு நூல் இது**

அ) பெரியாரும் சமதர்மமும் ஆ) பெரியாரின் சுயமரியாதைக் கொள்கை

இ) பெரியார் கண்ட சமதர்மம் ஈ) பெரியார்–சுயமரியாதை–சமதர்மம்

**94) பெரியாரின் கொள்கைகளை விளக்கிச் சென்னை – பெரியார் திடலில் ஆசிரியர் கி.வீரமணி ஆற்றிய தொடர் சொற்பொழிவு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அந்தத் தொகுதி நூலின் பெயர்**

அ) பெரியாரியல் ஆ) பெரியாரியம்

இ) பெரியார் கோட்பாடு ஈ) பெரியாரின் சிந்தனை ஓவியம்

**95) தமிழ்மொழிபற்றிய பல சீர்திருத்தங்களைப் பெரியார் வற்புறுத்தி யுள்ளார். அவற்றுள் ஒன்று எம்.ஜி.ஆர் அரசால் ஆணையாக வெளியிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது**

அ) தமிழ் ஆட்சி மொழி ஆ) எழுத்துச் சீர்திருத்தம்

இ) தமிழ் வழிக் கல்வி ஈ) தனித் தமிழ்

**96) "தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் பெரியாரின் நிரந்தர நினைவுச்சின்னம்" என்று குறிப்பிட்டவர்**

அ) டாக்டர் அம்பேத்கர்

ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயண்

இ) டாக்டர் மல்லல சேகரா

ஈ) டாக்டர் இராம் மனோகர் லோகியா

**97) "2500 ஆண்டுகளுக்கு முன் புத்தர் இந்த நாட்டு மக்களுக்கு என்ன செய்தாரோ அதே காரியத்தை இந்தக் காலத்தில் மறைந்த தந்தை பெரியார் செய்தார்." இவ்வாறு புகழ்ந்து எழுதியவர்**

அ) மு.கருணாநிதி ஆ) நாவலர் நெடுஞ்செழியன்

இ) அன்னை மணியம்மையார் ஈ) டாக்டர் பு.இராசதுரை

**98) "இயற்கையின் அருமைப் புதல்வர் இவர்; ஆதலால்தான் காந்தி யையும் மிஞ்சிய அளவிற்கு அகிம்சாவாதியாகவும் சாக்ரடீஸையும் மிஞ்சிய அளவிற்குச் சமுதாய சீர்திருத்தக்காரராகவும் பெரியார் விளங்குகிறார்" இவ்வாறு 27.11.48 "குடி அரசு" இதழில் எழுதிய அறிஞர்**

அ) சாமி. கைவல்யம் ஆ) சந்திர சேகரப் பாவலர்

இ) ஞானியார் சுவாமிகள் ஈ) திரு.வி.க.

**99) "நாயக்கர் ஒரு சிறந்த உழைப்பாளி; அவரது அயராத உழைப்பும் ஊக்கமும் எங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தன" என்று எந்த நூலில் எழுதப்பட்டுள்ளது?**

அ) திரு.வி.க.வின் வாழ்க்கைக் குறிப்புகள்

ஆ) பட்டுக்கோட்டை அழகிரிசாமியின் " இதோ பெரியாரில் பெரியார்"

இ) கோவை அய்யாமுத்துவின் "எனது நினைவுகள்"

ஈ) சமூக விஞ்ஞானி தந்தை பெரியார்

**100) "ஒரு சாதி இந்து எனச் சொல்லக்கூடிய நிலையில் உள்ள ஒருவர் கேரளத்தில் உள்ள தீண்டத்தகாத மக்களுக்கு உரிமைகள் வாங்கிக் கொடுப்பதற்காகச் செய்த தியாகம் நமக்குப் புது வாழ்வைத் தந்திருக்கிறது"- இவ்வாறு தமது வரலாற்று நூலில் எழுதியுள்ளவர்**

அ) போத்தன் ஜோசப் ஆ) நாராயண மேனன்

இ) கே.பி.கேசவமேனன் ஈ) இராமு காரியத்

**101) தந்தை பெரியர் பேச்சு, எழுத்துக்களைத் தொகுத்து வெளியிடப்பட்ட நூல் ஒன்று தடை செய்யப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்டுத் தண்டனையும் விதிக்கப்பட்டது.அந்த நூல்**

அ) பெரியாரின் மணி மொழிகள்

ஆ) பெரியாரின் வைர வார்த்தைகள்

இ) பெரியாரின் முத்து மொழிகள்

ஈ) பெரியாரின் பொன்மொழிகள்

**102) முதலில் வாரம் இருமுறை ஏடாகவும், பிறகு வார ஏடாகவும் பெரியாரால் வெளியிடப்பட்டு திராவிடர் கழக நாள் ஏடு ஆகப் பெரியாரால் தொடங்கப்பெற்ற இதழ்**

அ) குடிஅரசு ஆ) புரட்சி இ) உண்மை ஈ) விடுதலை

**103) தந்தை பெரியாரின் வைக்கம் போராட்டம், அண்ணல் அம்பேத்கரின் மனதில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என டாக்டர் அம்பேத்கர் குறிப்பிடுவதை 'அம்பேத்கர் வாழ்வும் தொண்டும்' என்ற நூலில் எழுதிய அறிஞர்**

அ) சீதாராம் கேசரி ஆ) சந்திரசித் யாதவ்

இ) இராம்விலாஸ் பாஸ்வான் ஈ) தனஞ்சய் கீர்

**104) Periyar - A Pen Portrait என்னும் ஆங்கில நூலை An Admirer பெயரால் எழுதியவர்**

அ) பி.ஆர். குப்புசாமி ஆ) எம்.பாலசுப்ரமணியன்

இ) தி.இராசகோபாலன் ஈ) அ.இராமசாமி

**105) "இராஜதந்திரிகளையும் கவரும் அளவுக்குப் பொல்லாத அரசியல் மேதை; புரிந்து கொள்ள முடியாத பெரிய மூளை; பொறுமை மிகும் தலைவர்" எனப் பெரியார் 78-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா மலரில் எழுதியவர் யார்?**

அ) புலவர் இராமநாதன் ஆ) பேரறிஞர் அண்ணா

இ) கலைவாணர் என்.எஸ்.கே. ஈ) நீதியரசர் சோமசுந்தரம்

**106) கடவுளை வணங்குகிறவன் எப்படிப்பட்டவன் எனப் பெரியார் கூறியுள்ளார்?**

அ) அயோக்கியன் ஆ) மகாமகா அயோக்கியன்

இ) பைத்தியக்காரன் ஈ) காட்டுமிராண்டி

**107) "தந்தை பெரியாரின் தத்துவத்தை எவ்வளவு முடியுமோ அவ்வளவு பாதுகாத்து வளர்ப்பதையே தனது இலக்காகக் கொண்டவர்"என செக்யூலர் சப்ஜெக்ட் எனும் அமெரிக்க ஆங்கில இதழ் குறிப்பிட்டது யாரை?**

அ) சி.என்.அண்ணாதுரை ஆ) மு.கருணாநிதி

இ) கி.வீரமணி ஈ) பட்டுக்கோட்டை அழகிரி

**108) "பிரதமர்களை விடச் செல்வாக்கு மிக்கவர் பெரியார்" 10.7.47-இல் கட்டுரை எழுதிய ஆங்கில வார இதழ்**

அ) ஓரியண்டல் இல்லஸ்ட்ரேட்டட் ஆ) ஸ்டேட்ஸ் மேன்

இ) தி நியூ ஏஜ் ஈ) கரண்ட்

**109) "இன்றைய சமுதாய அமைப்பையே அடியுடன் ஒழித்து விட்டுப் புதியதொரு சமுதாய அமைப்பை, சாதி அல்லது இன பேதமற்ற சமுதாயத்தைக் காணவேண்டும் என்பதே என் நோக்கம்" என வடபுலத்திலிருந்து 24-9-1958இல் வெளியான ஆங்கில இதழில் எழுதியுள்ளார் பெரியார். அந்த இதழின் பெயர்**

அ) அவுட்லுக் ஆ) ஆர்கனைசர்

இ) கரண்ட் ஈ) தி வீக்

**110) "சொல்வதையே செய்பவர்; செய்வதையே சொல்பவர் பெரியார் ஈ.வெ.ராமசாமி" இவ்வாறு பெரியார் 96 ஆம் ஆண்டு பிறந்த நாள் மலரில் எழுதியவர் யார்?**

அ) எம்.என்.ராய் ஆ) எம்.ஆர்.ஜெயகர்

இ) டி.கே.சிதம்பரநாதன் ஈ) டாக்டர் கோவூர்

**111) பிரான்சிலேயோ ஜெர்மனியிலேயோ பெரியார் பிறந்திருந்தால் பகுத்தறிவாளர் கழகங்கள் பெரிதும் பயன் பெற்றுப் பலப்பல வெற்றிகள் பெற்றிருக்கும். அந்தோ! அவர் பண்டாரங்கள் பரதேசிகள் நிறைந்த இந்தத் துயர பூமியில் பிறந்துவிட்டாரே!! - எனத் தமிழகப் பொறியாளர் ஒருவர் 1978ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா மலரில் எழுதியவர் யார்?**

அ) பா.வே.மாணிக்க நாயக்கர் ஆ) வி.பி.அப்பாத்துரை
இ) பொ.குமாரசாமி ஈ) மணவாள ராமானுஜம்

**112) ‘விதவையர் விடுதலை முழக்கம்’ என்ற கவிதை நூலை எழுதிப் பெரியாரின் ‘‘குடிஅரசு’’ இதழில் பாராட்டப்பெற்ற சுயமரியாதைப் பாவலர் இவர்**

அ) தி.அ.வேங்கடசாமிப் பாவலர் ஆ) புலவர்.இராமசாமி
இ) பாவலர் வெங்கடசாமி ஈ) பாவலர் அருணகிரியார்.

**113) விபசாரத்தில் தொடங்கி, கற்பில் வளர்ந்து, முட்டாள் தனத்தில் முடிகிறது என்று எந்தக் காப்பியத்தைக் கணித்தார் பெரியார்?**

அ) பெரியபுராணம் ஆ) இராமாயணம்
இ) சிலப்பதிகாரம் ஈ) சீவகசிந்தாமணி

**114) பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் அவரது ‘குடி அரசு’ ஏட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு எது?**

அ) 1926 ஆ) 1929 இ) 1935 ஈ) 1936

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.இ | 2.இ | 3.ஈ | 4.அ | 5.இ | 6.ஈ | 7.ஈ | 8.இ | 9.இ | 10.இ |
| 11.இ | 12.ஈ | 13.இ | 14.இ | 15.இ | 16.ஈ | 17.ஈ | 18.ஈ | 19.இ | 20.ஈ |
| 21.அ | 22.இ | 23.ஆ | 24.இ | 25.ஈ | 26.இ | 27.ஆ | 28.ஈ | 29.ஈ | 30.ஆ |
| 31.ஈ | 32.ஈ | 33.அ | 34.இ | 35.இ | 36.இ | 37.அ | 38.இ | 39.ஆ | 40.இ |
| 41.இ | 42.ஈ | 43.ஆ | 44.இ | 45.ஈ | 46.இ | 47.ஈ | 48.ஈ | 49.இ | 50.இ |
| 51.அ | 52.இ | 53.ஈ | 54.ஆ | 55.இ | 56.இ | 57.ஈ | 58.ஈ | 59.ஈ | 60.ஈ |
| 61.ஆ | 62.ஈ | 63.ஆ | 64.ஆ | 65.ஈ | 66.இ | 67.இ | 68.ஈ | 69.ஈ | 70.ஈ |
| 71.ஈ | 72.ஆ | 73.அ | 74.இ | 75.ஈ | 76.ஆ | 77.ஆ | 78.இ | 79.இ | 80.ஈ |
| 81.இ | 82.இ | 83.ஈ | 84.அ | 85.ஆ | 86.ஈ | 87.இ | 88.அ | 89.ஈ | 90.இ |
| 91.இ | 92.ஈ | 93.ஈ | 94.அ | 95.ஆ | 96.ஆ | 97.இ | 98.ஈ | 99.இ | 100.இ |
| 101.ஈ | 102.ஈ | 103.ஈ | 104.ஆ | 105.இ | 106.ஈ | 107.இ | 108.அ | 109.இ | 110.ஈ |
| 111.இ | 112.அ | 113.இ | 114.இ | | | | | | |

**இயல் ஏழு**

# அமைப்புகளும், நிறுவனங்களும்

உலக நாடுகளில் எங்குமே இல்லாததும்,மனித நேயத்திற்கு மிகவும் எதிரானதுமாக உள்ள ஜாதி எனும் கொடிய சமுதாயக் கொல்லியை தந்தை பெரியார் அறிந்து - தெரிந்து - அதன் கொடுமையை நேரில் உணர்ந்து அதை ஒழிப்பதே தனது முதற்பணி என முடிவுசெய்து பொதுவாழ்வில் ஈடுபடலானார்.

காங்கிரஸ் இயக்கம் ஜாதியை ஒழிக்கவும், அதற்குப் பயன்படும் வகையில் ஜாதியால் புறக்கணிக்கப்பட்டோருக்கு சமூகநீதி கிடைக்கவும் (இடஒதுக்கீடு) பயன்படும் என நம்பி அதில் சேர்ந்தார். ஆனால், காங்கிரஸ் அதற்கு பயன்படாது என்றும், பார்ப்பனர் ஆதிக்கத்திற்கே பாதுகாப்பானது என்றும் உணர்ந்து, காங்கிரசை விட்டு வெளியேறினார்.

1925ஆம் ஆண்டு, ஜாதியை ஒழித்திட - சமூகநீதியைக் காப்பாற்றிட, பார்ப்பனர் ஆதிக்கத்தை ஒழித்து தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட திராவிடர் இன மக்களை மானமும் அறிவும் உள்ள மக்களாக்கிட “அனைவர்க்கும் அனைத்தும்” அமைந்திட, பகுத்தறிவே - சிந்தனையே இத்தகு மாற்றத்தை உருவாக்கிட ஒரே வழி என்று சூளுரைத்து சுயமரியாதை இயக்கத்தை தந்தை பெரியார் ஈரோட்டில் தொடங்கினார்.

சுயமரியாதை இயக்கத்தின் தாக்கம் நாட்டில் பெரும் மாற்றத்திற்கு அடித்தளமிட்டது. அதன் பணி மேலும் மேலும் சிறக்க - தொய்வின்றி தொடர “பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்” என்னும் பெயரில் ஓர் அறக்கட்டளையை தந்தை பெரியார் திருச்சியை தலைமை இடமாகக் கொண்டு தொடங்கினார்.

இந்த அறக்கட்டளை 1952ஆம் ஆண்டு சட்டப்படி பதிவு செய்யப்பட்டு தொடர்ந்து மக்களை பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் வாழவைக்கும் நோக்கம் வெற்றியடைய பாடுபட்டு வருகிறது. இதன் தலைவராக தந்தை பெரியாரும், முதல் ஆயுள் செயலாளராக மணியம்மையாரும் திகழ்ந்தார்கள்.

ஈரோட்டில் பிறந்து, வளர்ந்து, சுயமரியாதை இயக்கத்தை உருவாக்கிய தந்தை பெரியார் தனது பொதுத் தொண்டிற்கு – இயக்கப் பணி நாடெங்கும் தழைப்பதற்கு தமிழ்நாட்டின் மய்யமாக உள்ள திருச்சி நகரமே சரியானது என்று முடிவெடுத்து, திருச்சியை தலைமை இடமாக்கி அங்கிருந்து பணியாற்றிடத் திட்டமிட்ட பெரியார் அய்யா அவர்கள், திருச்சி புத்தூரில் அதற்கான இடத்தை வாங்கினார். அவ்விடத்தில் 1950இல் பெரியார் மாளிகையை உருவாக்கி, அதனை வேலூர் திருநாவுக்கரசு அவர்களைத் திறந்து வைக்கச் செய்தார்.

திருச்சியினை மய்யமாகக் கொண்டு சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை பெரியார் பரப்பியதோடு, கல்வி மற்றும் அறப்பணிகள் ஆற்றிட பல நிறுவனங்களையும் திருச்சியில் உருவாக்கினார். நாகம்மை குழந்தைகள் காப்பகம் 1951இல் 39 குழந்தைகளுடன் தொடங்கப்பட்டது. இந்த இல்லத்து குழந்தைகளுக்கு முன்னெழுத்து பெரியார்-மணியம்மை இருவரின் பெயர்களின் முன்னெழுத்தைக் கொண்டு “EVRM” என்றே அனைத்துக் குழந்தைகளும் குறிக்கப்பட்டனர். இந்த இல்லத்தில் வளர்ந்து – கல்வி பயின்று பெருமை பெற்று உள்ளோரில் கலைமணி என்ற பெண் பி.இ. பட்டயத்தில் தேர்ந்து சாதனை படைத்துள்ளார் என்பது இதன் சாதனையில் ஒரு மைல் கல் ஆகும்.

தாய்-தந்தை இல்லாக் குழந்தைகள் பெரியாராலும் மணியம்மையாராலும் தத்தெடுக்கப்பட்டு வளர்த்து ஆளாக்கப்பட்டு வருகிறார்கள். இவ்விடுதிக்கு நாகம்மையார் அனாதைக் குழந்தைகள் இல்லம் என்று இருந்த பெயரை தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்கள் “அனாதை” என்ற சொல்லை நீக்கி “நாகம்மையார் குழந்தைகள் இல்லம்” என்று பெயரிட்டார்கள்.

பெரியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் திருச்சி புத்தூரில் 1957இல் தொடங்கப்பட்டது. பெரியார் தொடக்கப்பள்ளி 1957இல்

தொடங்கப்பட்டது. நாகம்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனம் 1961இல் தொடங்கப்பட்டது.

திருச்சி அரசு பொது மருத்துவமனையில் குழந்தைகள் நலப் பிரிவு கட்டிடம் கட்டிட பெரியார் அவர்கள் ரூ. 1 லட்சம் தமிழ்நாடு அரசுக்கு கொடையாக வழங்கினார்கள். அதன் பயனாய் உருவான குழந்தைகள் நலப் பிரிவுக் கட்டிடத்திற்கு முதல்வராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் ‘‘மணியம்மையார் குழந்தைகள் நலப் பிரிவு’’ என்று பெயர் சூட்டி சிறப்பித்தார்கள்.

தந்தை பெரியார், அன்னை மணியம்மையார் ஆகியோருக்குப் பிறகு இயக்கத்தை தலைமையேற்று வழிநடத்தும் தமிழர் தலைவர் மானமிகு கி.வீரமணி அய்யா அவர்கள் அய்யா-அம்மா விட்ட பணியைச் செவ்வனே தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். இருபால் இளைஞர்களிடையேயும் பெரியாரின் கொள்கைகளை பரப்பி திருச்சி புத்தூர் பெரியாரியல் பயிற்சிக் கல்லூரி, இதில் 2 மாத காலத்திற்கு உரிய படிப்பு கற்பிக்கப்படுகிறது. மேலும் 1973இல் தொடங்கப்பட்ட பெரியார் மணியம்மை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, 1982இல் பெரியார் மகளிர் மருந்தியல் கல்லூரி, பெரியார் கணினி மய்யம், 1995இல் பெரியார் உயர்நிலைக் கணினிக் கல்லூரி, பெரியார் நூற்றாண்டு நினைவு மெட்ரிகுலேசன் பள்ளி, சாமி கைவல்யம் முதியோர் இல்லம் ஆகியவை திருச்சியில் 17 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள பெரியார் நூற்றாண்டு கல்வி வளாகத்தில் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றன. தஞ்சை மாவட்டம் உரத்தநாட்டில் கிராமப்புற மாணவர்கள் கணினிப் பயிற்சி பெற வாய்ப்பாக பெரியார் கணினிக் கல்லூரி ஜெ.ஜெயலலிதா அம்மையார் அவர்களால் தொடங்கப்பட்டது.

தந்தை பெரியார் காலத்திலேயே திராவிடர் கழகத்தின் தலைமையகம் சென்னையில் அமைந்தது. அங்கு பெரியார் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு, அதில் பெரியாருக்கு அன்பளிப்பாக மக்கள் வழங்கிய பொருட்கள் இடம் பெற்றுள்ளது. முத்தாய்ப்பாக சேலத்தில் வழங்கப்பட்ட வெள்ளி சிம்மாசனம் குறிப்பிடத்தக்கது.

தமிழர் தலைவர் கி.வீரமணி அய்யா அவர்களால் சென்னை பெரியார் திடலில் தொடங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் பல உள்ளன.

பெரியார் ஆவணக் காப்பகம், பெரியார் நூலகம் – ஆய்வகம் (1974இல் தொடங்கப்பட்டது). 2000 நிகழ்ச்சிகளுக்கு மேல் நடத்தியுள்ள பெரியார் பகுத்தறிவு நூலக வாசகர் வட்டம் (170 உறுப்பினர்கள் கொண்டது), பெரியார் தத்துவ கொள்கை பரப்பும் பன்னாட்டு அமைப்பு (இதன் மூலம் பெரியார் அஞ்சல் வழிக் கல்லூரி சென்னையில் தொடங்கப்பட்டது.) பெரியார் அஞ்சல்வழிக் கல்லூரி முதல்வராக பேரா.ந.இராமநாதன் அவர்கள் 1982இல் முதலில் பொறுப்பேற்றார்.

பெரியார் தத்துவங்கள் ஆய்வு செய்து விரிவுரை – விளக்கவுரை ஆற்றிவரும் அறிஞர்க்கு "பெரியார் பேருரையாளர்" விருது அருப்புக்கோட்டை கைலாசம் நினைவு அறக்கட்டளை சார்பில் வழங்கப்படுகிறது. முதன்முதல் இவ்விருது பேரா. ந.இராமநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. பெரியார் அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். பயிற்சி மய்யம் 1987ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. பெரியார் சுயமரியாதை திருமண நிலையம், பெரியார் பயிலகம், பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் ஆகியன சென்னையில் இயங்கி வருகின்றன. இயக்க நூல்கள் விற்பனை செய்யும் அமைப்பு திராவிடர் புத்தக நிலையம் திருச்சியில் இயங்கி வருகிறது. பெரியார் இலவச சட்ட உதவி மய்யம், 1989இல் தொடங்கப்பட்ட பழங்குடியினருக்கு வழிகாட்டும் வேலைவாய்ப்பு உதவி மய்யம், வாழ்வியல் சிக்கலுக்கு வழிகாட்டும் "பெரியார் வாழ்வியல் மய்யம்", அதன் தலைவராக நீதியரசர் எம்.மருதமுத்து அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். பெரியார் நகர குடும்பநல மய்யம் என பல்வேறு நிறுவனங்கள் சென்னை பெரியார் திடலில் இயங்கி வருகின்றன.

பெரியார் அறப்பணிக் கழகத்தின் தொண்டினைப் பாராட்டி செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் முதல்வராக இருந்தபோது பரிசு வழங்கி சிறப்பித்தார். பெரியார் அறப்பணிக் கழகத்தின் சார்பில் நாடெங்கும் 5 இடங்களில் இலவச மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. சென்னை பெரியார் மணியம்மை மருத்துவமனையில் 7 பிரிவுகள் இயங்கி வருகின்றன.

ஈரோடு நகரில் தந்தை பெரியார் வாழ்ந்த இல்லத்தை அய்யா மறைவிற்குப் பின் அன்னை மணியம்மையார் அவர்கள் அதனை தமிழக அரசிடம் ஒப்படைத்தார். அவ்வில்லத்தில்தான் அறிஞர்





அண்ணா சில காலம் தங்கியிருந்து குடிஅரசு ஏட்டிற்கு எழுதியும் - மேடையில் பிரச்சாரம் செய்தும் வாழ்ந்தார்கள். அதனை நினைவூட்டும் வகையில் பெரியார் வாழ்ந்த இல்லத்திற்கு தமிழ்நாடு அரசு "பெரியார்-அண்ணா நினைவகம்" என்று பெயர் சூட்டியுள்ளது. அங்குதான் பெரியார் பயன்படுத்திய பொருள்களில் அதிகமானவை இடம் பெற்றுள்ளன.

பெண்கள் தொழிற்கல்வி பெறவேண்டும் என்ற பெரியாரின் எண்ணப்படி பொதுமக்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு ரூபாய் நன்கொடையாகப் பெற்று உருவானதே பெரியார் நூற்றாண்டு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி ஆகும். இதன் பணி மகளிர் மேம்பாட்டிற்கு பெரிதும் துணைநிற்பதைப் பாராட்டி கனடா நாடு ஆசியாவிலேயே சிறந்த பாலிடெக்னிக் என தேர்ந்தெடுத்து சர்வதேச சாதனை விருதினை வழங்கியுள்ளது.

உலகிலேயே முதல் பெண்கள் பொறியியல் கல்லூரி தஞ்சை வல்லத்தில் 1988இல் தொடங்கப்பட்டது. இக்கல்லூரிதான் பெரியார் கல்வி நிறுவனங்களிலேயே முதல் ISO9002 என்ற உலகத் தரச் சான்றிதழ் பெற்ற கல்லூரியாகும். இக்கல்லூரியின் சிறப்பு அறிந்து கல்லூரியில் இயங்கும் மணியம்மையார் விடுதிக்கு உ.பி. முதல்வர் திருமதி மாயாவதி அவர்கள் ரூ. 10 லட்சம் வழங்கினார்கள்.

வல்லத்தில் இயங்கிவரும் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பெரியார் உயிரி தொழில்நுட்ப மற்றும் உயிர் மண்டல ஆராய்ச்சிக் கழகம், உலகச் சுற்றுச்சூழல் அமைப்பின் விருதினை 2000ஆம் ஆண்டு பெற்றது. தமிழர் தலைவர் அய்யா அவர்களால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தந்தை பெரியார் அறக்கட்டளை தொடங்கப்பட்டு, அதன் வழி ஆண்டுதோறும் ஆய்வுச் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் பெரியார் உயராய்வு மய்யம் அமைக்கப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் அவர்கள் ஒடுக்கப்பட்ட மாணவர்கள் கல்லூரிப் படிப்பு பயில்வதற்கு ரூ.அய்ந்தரை லட்சம் தமிழ்நாடு அரசுக்கு நன்கொடையாக கொடுத்தார். அதன் பயனாக திருச்சியில் பெரியார் ஈ.வெ.ரா. அரசு கலைக்கல்லூரி தொடக்கப்பட்டது. மேலும்,

அக்கல்லூரிக்கு அன்னை மணியம்மையார் அவர்களால், பெரியார் பெயரில் தொடங்கப்பட்ட அறக்கட்டளைக்கு ரூ.10,000 அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

உலகத் தலைவராய் உயர்ந்து – ஓங்கு புகழ் புரட்சியாளராய் ஒப்பற்ற சுயசிந்தனையாளராய்த் திகழும் தந்தை பெரியார் பிறந்த ஊரான ஈரோட்டில் அமைந்துள்ள அரசு பொது மருத்துவமனைக்கு தமிழக அரசு 31.08.1974 அன்று பெரியார் ஈ.வெ.ராமசாமி தலைமை மருத்துவமனை என்று பெயர்சூட்டி சிறப்பித்தது. அதுபோல் வேலூரில், தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி அரசினர் தொழிற்பயிற்சிக் கல்லூரி என்று பெயரிடப்பட்டுள்ளது. சேலத்தில், பெரியார் பல்கலைக்கழகம் என்று தொடங்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் தலைநகராம் சென்னை கிண்டியில் அமைந்துள்ள அரசு பொறியியற் கல்லூரி வளாகத்தில் 22 ஏக்கர் பரப்பில் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மய்யம் அமைக்கப்பட்டுள்ளது.

தந்தை பெரியாரின் சமூக நீதிக் கொள்கை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இன்று கல்வி, வேலைவாய்ப்பு கிடைக்கச் செய்து உயர்த்தியுள்ளது. இக்கொள்கை தமிழ்நாட்டில் மட்டுமின்றி இன்று இந்தியா முழுவதும் சமூகநீதிப் புயலாக வீசிக்கொண்டுள்ளது. இத்தகு சிறப்புமிகு சமூகநீதிக்கொள்கை பரவிட பாடுபடுவோருக்கு தமிழ்நாடு அரசு “சமூகநீதிக்கான தந்தை பெரியார் விருது” என்று பெயரிட்டு 5 பவுன் மதிப்பிலான விருதினை வழங்கி வருகிறது. முதல் சமூகநீதி விருது திராவிடர் கழகத் தலைவர் மானமிகு கி.வீரமணி அவர்களுக்கு வழங்கப்பட்டது. தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களால் இவ்விருது தோற்றுவிக்கப்பட்டது.

இந்தியாவின் மூலைமுடுக்கெல்லாம் ஒலிக்கும் பெரியார் முழக்கம் தொடர்ந்து பரவிட டில்லியில் 5 அடுக்குமாடி கட்டிடம் ஒன்று பெரியார் மய்யம் என்ற பெயரில் பாம்நொலி என்ற பகுதியில் தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மய்யத்திற்கு மேனாள் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். உலக நாத்திக மய்யத்தின் மேனாள் தலைவர் லெவிபிராகல் அவர்கள் இம்மய்யத்தைத் திறந்து வைத்தார்கள். திறப்பு விழா அக்டோபர் 2000இல் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம்மய்யத்தின் பணி சிறக்க

டில்லி மாநில மேனாள் முதல்வராயிருந்த ஷீலா தீட்சித் ரூ.5 இலட்சம் வழங்கினார்கள்.

சென்னை பெரியார் திடலில் அமைந்துள்ள நடிகவேள் எம்.ஆர்.இராதா மன்றத்தை உள்ளடக்கிய சென்னை பெரியார் மய்யத்தை மேனாள் பிரதமர் திரு.வி.பி.சிங் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

உலகெங்கும் பெரியார் கொள்கையைப் பரப்பிடும் பணி சிறக்க அமெரிக்க அய்க்கிய நாடுவாழ் தமிழர்கள் சார்பில், 13.11.1994 அன்று சிகாகோவில் பெரியார் பன்னாட்டு அமைப்பு தொடங்கப்பட்டது. இந்த அமைப்பு இந்தியாவில் சமூகநீதிக்குப் பாடுபடுவோருக்கு “கி.வீரமணி சமூகநீதி விருது” என்ற பெயரில் விருது வழங்க தீர்மானிக்கப்பட்டு, முதல் விருது மேனாள் இந்தியப் பிரதமர் திரு.வி.பி.சிங் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறி 1925இல் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். சுயமரியாதை இயக்கத்தின் தலைவராகயிருந்த பெரியார் பெல்லாரி சிறையிலிருக்கும்போது, நீதிக்கட்சிக்கும் பெரியார்தான் தலைவர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டார். மேற்கண்ட இரு அமைப்புக்கும் 1944 ஆகஸ்ட் 27ஆம் நாள் ஒருங்கிணைக்கப்பட்டு, திராவிடர் கழகம் என்று பெயரிடப்பட்டது. அரசு ஊழியர்கள் நேரடியாக திராவிடர் கழகத்தில் சேருவதற்கு வாய்ப்பாக 1973இல் தந்தை பெரியார் அவர்கள் பகுத்தறிவாளர் கழகத்தை உருவாக்கினார்கள். திராவிடர் விவசாய தொழிலாளர் கழகம் 1952இல் தொடங்கப்பட்டது. தென்பகுதி திராவிடர் இரயில்வே தொழிலாளர் யூனியன் திருச்சியில் பெரியாரால் தொடங்கப்பட்டது. குன்றக்குடி மடத்துக்குச் சொந்தமான இடத்தில் தந்தை பெரியார் முந்திரித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தை தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்கள் 27.7.1979இல் தொடங்கி வைத்தார்கள். திருநெல்வேலி மாவட்டம் கீழப்பாவூரில் தந்தை பெரியார் குருதிக்கொடைக் கழகம் சிறப்பாக இயங்கி வருகிறது. அமெரிக்காவிலுள்ள சிகாகோவில் திராவிடர் கழகம் தொடங்கி நடைபெற்று வருகிறது.

உலக நாத்திகர் சங்கத்தில் திராவிடர் கழகம் இணைந்தது. உலக நாத்திகர்கள் 49 நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடி தஞ்சை வல்லத்தில் பெரியார் சிலையைத் திறந்துவைத்தார்கள். பெரியார் மணியம்மை அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம் நடத்தும் கணினி கிராபிக்ஸ் ஆய்வு மய்யத்தின் பெயர் VIBGYOR எனப்படும். தமிழகத்திலுள்ள பெரியார் கல்வி நிறுவனங்களில் அதிக கிளைகளைக் கொண்டது பெரியார் சமூகத் தொடர் கல்விக் கல்லூரி ஆகும்.

இந்தியாவின் முதல் மனித உரிமைப் போர் நடந்த வைக்கத்தில் பெரியாருக்கு சிலை வைக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார் மேனாள் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள். அதன் வழி சிலை எழுப்பி சிறப்பித்தார் முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள். அந்நிகழ்ச்சிக்கு மறைந்த டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் தலைமை வகித்தார். 1994இல் இந்நிகழ்வு சிறப்பாக வைக்கத்தில் நடைபெற்றது. வைக்கத்திற்கு காந்தியே வருகைதந்து பேச்சு வார்த்தை செய்தபோது வீட்டிற்கு வெளியே தனிக்குடில் கட்டி உட்கார வைத்து பேசியவர்தான் இண்டன் துருத்தி நம்பீசர் எனும் நம்பூதிரி ஆவார். அன்னை மணியம்மையார் அவர்கள் பெயரில் மணியம்மை அறப்பணி கழகத்தை தொடங்கினார்; திராவிடர் கழக அறக்கட்டளையை தமிழர் தலைவர் கி.வீரமணி தொடங்கினார். கிண்டியிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப கழகத்தை டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கினார்கள்.

அறிவியல் மனப்பான்மையை உருவாக்கும் மய்யங்களுக்கு தந்தை பெரியார் பெயர் சூட்ட வேண்டும் என்று பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது.

■

# அமைப்புகளும், நிறுவனங்களும்

– துரை. சக்ரவர்த்தி –

1) **பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் மக்களை வாழவைக்கும் நோக்குடனும் தந்தை பெரியார் அவர்களால் தொடங்கப்பட்ட பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் எனும் அறப்பணிக் கழகம் எங்கே தொடங்கப்பட்டது?**

அ) சென்னை ஆ) ஈரோடு இ) வேலூர் ஈ) திருச்சி

2) **பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டது?**

அ) 1949 ஆ) 1925 இ) 1952 ஈ) 1947

3) **பெரியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட பெரியார் சுயமரி யாதைப் பிரச்சார நிறுவனத்தின் முதல் ஆயுள் செயலாளர் யார்?**

அ) நாகம்மையார் ஆ) மணியம்மையார்

இ) கி.வீரமணி ஈ) குத்தூசி குருசாமி

4) **திருச்சியில் பெரியார் மாளிகை எந்த ஆண்டு திறந்து வைக்கப்பட்டது?**

அ) 1950 ஆ) 1951 இ) 1952 ஈ) 1953

5) **திருச்சி பெரியார் மாளிகையைத் தந்தை பெரியார் அவர்கள் யாரைத் திறந்து வைக்கச் சொன்னார்?**

அ) ஈரோடு சண்முகவேலாயுதம்

ஆ) சிவகங்கை சண்முகநாதன்

இ) வேலூர் திருநாவுக்கரசு

ஈ) திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்

**6) தாம் தங்குவதற்கு திருச்சியைத் தந்தை பெரியார் தேர்ந்தெடுத்தது ஏன்?**

அ) கழகத் தோழர்கள் விரும்பியதால்

ஆ) மணியம்மையார் விரும்பியதால்

இ) பெரியார் மாளிகை வாங்கப்பட்டதால்

ஈ) தமிழ்நாட்டின் மய்யமாக இருப்பதால்

**7) பகுத்தறிவும் தொண்டுள்ளமும் கொண்ட ஆசிரியர்களை உருவாக்கும் நோக்கில் தந்தை பெரியார் அவர்களால் தொடங்கப்பட்டுள்ள பெரியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் எங்குள்ளது?**

அ) ஈரோடு ஆ) வேலூர் இ) திருச்சி ஈ) சென்னை

**8) பகுத்தறிவும் தொண்டுள்ளமும் கொண்ட ஆசிரியர்களை உருவாக்கும் நோக்கில் பெண்களின் முன்னேற்றத்திற் காகவும் பெரியார் அவர்களால் திருச்சியில் தொடங்கப்பட்ட நாகம்மை ஆசிரியை பயிற்சி நிறுவனம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?**

அ) 1957 ஆ) 1958 இ) 1960 ஈ) 1961

**9) திருச்சியில் உள்ள தந்தை பெரியார் தொடக்கப்பள்ளி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?**

அ) 1952 ஆ) 1954 இ)1956 ஈ) 1957

**10) ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்காகத் திருச்சியில் இயங்கி வரும் நாகம்மையார் குழந்தைகள் காப்பகத்தை உருவாக்கியவர் யார்?**

அ) மணியம்மையார் ஆ) தந்தை பெரியார்

இ) நாகம்மையார் ஈ) கி.வீரமணி

**11) நாகம்மையார் குழந்தைகள் காப்பகம் 1961-இல் தொடங்கப்பட்ட போது எத்தனை குழந்தைகள் இடம் பெற்றனர்?**

அ) 37 ஆ) 38 இ) 39 ஈ) 40

**12) நாகம்மையார் குழந்தைகள் காப்பகத்தில் வளரும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு என்ன முன்னெழுத்து பயன்படுத்தப்படுகிறது?**

அ) P ஆ) M இ) EVRM ஈ) EVR

**13) நாகம்மையார் குழந்தைகள் காப்பகத்தில் வளர்ந்து மிக அதிகபட்ச கல்வியாக பி.இ., படித்த பெண் யார்?**

அ) அறிவுமணி ஆ) அன்புமணி

இ) கலைமணி ஈ) அழகுமணி

**14) தந்தை பெரியார் அளித்த நன்கொடையில் கட்டப்பட்டதுதான் திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள ஈ.வெ.ரா. மணியம்மையார் குழந்தைகள் பிரிவு. அளிக்கப்பட்ட நன்கொடை எவ்வளவு?**

அ) ரூ. ஒரு லட்சம் ஆ) ரூ. இரண்டு லட்சம்
இ) ரூ. அய்ம்பதாயிரம் ஈ) ரூ. மூன்று லட்சம்

**15) திருச்சி மருத்துவமனையில் உள்ள ஈ.வெ.ரா. மணியம்மையார் குழந்தைகள் பிரிவைத் திறந்து வைத்த முதலமைச்சர் யார்?**

அ) காமராசர் ஆ) பக்தவச்சலம்
இ) அறிஞர் அண்ணா ஈ) இராசாசி

**16) பெரியாரியல் கொள்கைகளை இளைஞரிடையே பரப்புவதற்காகத் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களால் திருச்சியில் தொடங்கப்பட்டுள்ள நிறுவனம் எது?**

அ) நாகம்மை ஆசிரியை பயிற்சி நிறுவனம்
ஆ) பெரியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
இ) பெரியார் சமூகத் தொடர் கல்விக் கல்லூரி
ஈ) பெரியாரியல் பயிற்சிக் கல்லூரி

**17) பெரியாரியல் பயிற்சிக் கல்லூரியின் பயிற்சிக் காலம் எவ்வளவு?**

அ) ஒரு மாதம் ஆ) இரு மாதங்கள்
இ) மூன்று மாதங்கள் ஈ) ஒரு வருடம்

**18) திருச்சியில் தொடங்கப்பட்ட பெரியார் மகளிர் மருந்தியல் கல்லூரி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?**

அ) 1980 ஆ) 1981 இ) 1982 ஈ) 1983

**19) பெரியார் கல்வி நிறுவனங்கள் மிகுதியாக உள்ள ஊர் எது?**

அ) நெல்லை ஆ) திருச்சி இ) தஞ்சை ஈ) சென்னை

**20) "கல்வி நிறுவனங்கள் எப்படிச் சிறப்பாக நடத்தப்பட வேண்டும் என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் வீரமணியிடம் கேளுங்கள்" என்று கூறிய இந்திய முன்னாள் பிரதமர் யார்?**

அ) இந்திராகாந்தி ஆ) வி.பி.சிங் இ) சந்திரசேகர் ஈ) தேவகவுடா

**21) பல கல்வி நிறுவனங்களை உள்ளடக்கியுள்ள திருச்சி பெரியார் கல்வி வளாகத்தின் பரப்பு என்ன?**

அ) 10 ஏக்கர் ஆ) 12 ஏக்கர்
இ) 15 ஏக்கர் ஈ) 17 ஏக்கர்

**22) திருச்சியில் துவக்கப்பட்டுள்ள பெரியார் கணினி மய்யம் யாரால் தொடங்கி வைக்கப்பட்டது?**

அ) டாக்டர் முத்துக்கருப்பன் ஆ) டாக்டர் ஜெகதீசன்
இ) டாக்டர் அனந்தகிருஷ்ணன் ஈ) டாக்டர் ராஜா

**23) தந்தை பெரியார் அவர்களின் எண்ணப்படி அறிவியல் கல்வியை வளர்க்கும் வண்ணம் திருச்சி பெரியார் உயர் நிலைக் கணினிக் கல்லூரி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?**

அ) 1992 ஆ) 1993 இ) 1994 ஈ) 1995

**24) தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு நினைவாகத் தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்களால் திருச்சியில் தொடங்கப்பட்டுள்ள நிறுவனம் எது?**

அ) பெரியார் கணினி மய்யம்
ஆ) பெரியார் நூற்றாண்டு நினைவு மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி
இ) கைவல்யம் முதியோர் இல்லம்
ஈ) பெரியார் மருத்துவமனை

**25) ஆதரவற்ற 62–க்கு மேற்பட்ட முதியோர்களுக்காகச் செயல்படும் சாமி கைவல்யம் முதியோர் இல்லம் எங்கு இயங்கிவருகிறது?**

அ) புத்தூர் பெரியார் மாளிகை
ஆ) ஈரோடு பெரியார் மன்றம்
இ) வல்லம் பெரியார் மாளிகை
ஈ) திருச்சி பெரியார் கல்வி வளாகம்

**26) கிராமப்புற மாணவ - மாணவியர்களுக்கு கணினிக் கல்வியைத் தரும் வகையில் தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்களால் உரத்தநாட்டில் (தஞ்சைமாவட்டம்) உருவாக்கப்பட்ட பெரியார் கணினிக் கல்லூரியைத் திறந்து வைத்தவர் யார்?**

அ) ஜி.கே.மூப்பனார் ஆ) ஜெ.ஜெயலலிதா
இ) லெவிஃபிராகல் ஈ) ஆர்.நல்லகண்ணு

**27) பெரியார் நூற்றாண்டு வளாகத்தில் இயங்கி வரும் பெரியார் மணியம்மை உயர் நிலைப்பள்ளி (தற்போது மேல் நிலைப் பள்ளி) எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?**

அ) 1971 ஆ) 1972 இ) 1973 ஈ) 1974

**28) திராவிடர் கழகத்தின் தலைமையகம் எங்குள்ளது?**

அ) ஈரோடு ஆ) திருச்சி இ) சேலம் ஈ) சென்னை

**29) பெரியார் அருங்காட்சியகம் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?**
அ) மதுரை ஆ) சென்னை இ) கோவை ஈ) திருச்சி

**30) சென்னை பெரியார் திடலில் உள்ள அருங்காட்சியகத்தில் இருக்கும் வெள்ளி சிம்மாசனம் தந்தை பெரியாருக்கு எங்கு வழங்கப்பட்டது?**
அ) சேலம் ஆ) சென்னை இ) தஞ்சை ஈ) மதுரை

**31) தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்களால் தொடங்கப்பட்ட பெரியாரியல் - வரலாற்று ஆவணக் காப்பகம் எந்த ஊரில் அமைந்துள்ளது?**
அ) சென்னை ஆ) திருச்சி இ) தஞ்சை ஈ) ஈரோடு

**32) தந்தை பெரியார் – நூலகம் – ஆய்வகம் எங்கே இயங்கி வருகிறது?**
அ) தஞ்சை ஆ) திருச்சி இ) மதுரை ஈ) சென்னை

**33) ஒரு பன்னாட்டு நூலகமாக வளர்ந்து வரும் பெரியார் பகுத்தறிவு நூலகம் - ஆய்வகம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?**
அ) 1973 ஆ) 1974 இ) 1975 ஈ) 1976

**34) பெரியார் பகுத்தறிவு நூலக வாசகர் வட்டம் எத்தனை வாழ்நாள் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது (2001 டிசம்பர் வரை) ?**
அ) 196 ஆ) 75 இ) 200 ஈ) 250

**35) சென்னை, பெரியார் நுலக வாசகர் வட்டம் இதுவரை எத்தனை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது (2001 டிசம்பர் முடிய)?**
அ) 500 ஆ) 700 இ) 1000 ஈ) 1246 க்குமேல்

**36) வடபுலத்திலும் உலகம் முழுவதிலும் பெரியார் தத்துவக் கொள்கையைப் பரப்பும் பன்னாட்டு அமைப்பு யாரால் தொடங்கப்பட்டது?**
அ) பெரியார் ஆ) மணியம்மை இ) கி.வீரமணி ஈ) மூவருமில்லை

**37) தந்தை பெரியார் அவர்களின் கருத்துக்களைப் பரப்பும் நோக்கில் பெரியார் தத்துவம் பரப்பும் பன்னாட்டு அமைப்பினால் தொடங்கப்பட்ட அஞ்சல் வழிக்கல்லூரி எங்கே தொடங்கப்பட்டது?**
அ) ஈரோடு ஆ) சென்னை இ) மதுரை ஈ) திருச்சி

**38) பெரியார் அஞ்சல்வழிக் கல்லூரியின் முதல்வராக 1982-இல் பொறுப்பேற்றவர் யார்?**
அ) ந.இராமநாதன் ஆ) பு.இராசதுரை
இ) அ.இறையன் ஈ) ப.சுப்ரமணியன்

**39) தந்தை பெரியாரின் தத்துவங்களை விளக்கிப் பேருரை ஆற்றுவோருக்குத் தரப்படும் விருதின் பெயர் என்ன?**

அ) பெரியார் வல்லுநர் ஆ) பெரியார் பேருரையாளர்

இ) பெரியார் ஆய்வாளர் ஈ) ஆய்வறிஞர்

**40) பெரியார் பேருரையாளர் ஆய்வுச் சொற்பொழிவினை நிகழ்த்தச் செய்து விருது வழங்கும் அறக்கட்டளையின் பெயர் என்ன?**

அ) பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்

ஆ) திராவிடர் கழகம்

இ) பெரியார் மணியம்மை அறக்கட்டளை

ஈ) அருப்புக்கோட்டை கைலாசம் அறக்கட்டளை

**41) மூன்று நாட்கள் ஆய்வுச் சொற்பொழிவினை நிகழ்த்தி விருது பெற்ற முதல் பெரியார் பேருரையாளர் யார்?**

அ) நன்னன் ஆ) கு.வெ.கி ஆசான்

இ) அ.இறையன் ஈ) ந.இராமநாதன்

**42) தந்தை பெரியார் தத்துவக் கொள்கை பரப்பும் பன்னாட்டு அமைப்பினால் நடத்தப்படும் பெரியார் IAS,IPS பயிற்சி மய்யம் எந்த ஆண்டு முதல் நடத்தப்படுகிறது?**

அ) 1985 ஆ) 1987 இ) 1988 ஈ) 1989

**43) ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி மேம்பாட்டுக்காகத் தனிப்பயிற்சிகளை நடத்தும் பெரியார் பயிலகம் எங்கே இயங்கி வருகிறது?**

அ) பெரியார் கல்வி வளாகம்

ஆ) திருச்சி பெரியார் மாளிகை

இ) ஈரோடு பெரியார் மன்றம்

ஈ) சென்னை பெரியார்திடல்

**44) சாதி ஒழிப்பையும் சமூக மாற்றத்தையும் நோக்கமாகக் கொண்டு இயங்கி வரும் பெரியார் சுயமரியாதைத் திருமண நிலையம் எங்கே உள்ளது?**

அ) தஞ்சை ஆ) திருவாரூர் இ) சென்னை ஈ) மதுரை

**45) பெரியார் கொள்கைகளைத் தாங்கி வரும் புத்தகங்களை நாடெங்கும் பரப்பி வரும் பெரியார் நகர்வுப் புத்தகச் சந்தை எப்போது தொடங்கப்பட்டது?**

அ) 25.12.1996 ஆ) 21.2.1997

இ) 21.3.1997 ஈ) 21.4.1997

**46) பெரியார் கொள்கைப் புத்தகங்களை லட்சக்கணக்கில் வெளியிட்டு வரும் அமைப்பு எது?**

அ) குடிஅரசு பதிப்பகம்

ஆ) பகுத்தறிவுப் பண்ணை

இ) பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்

ஈ) திராவிடன் புத்தக நிலையம்

**47) அறிவுலக ஆசான் பெரியாரை அகிலமெங்கும் பரப்பும் வகையில் ஆண்டுதோறும் பல லட்சக் கணக்கான பெரியாரியல் புத்தகங்களை விற்பனை செய்யும் நிறுவனம் எது?**

அ) திராவிடன் புத்தக நிலையம்

ஆ) பெரியார் புத்தக நிலையம்

இ) மணியம்மையார் பதிப்பகம்

ஈ) குடிஅரசுப் பதிப்பகம்

**48) தந்தை பெரியார் முத்தமிழ் மன்றத்தைத் தோற்றுவித்தவர் யார்?**

அ) பெரியார் ஆ) மணியம்மை

இ) கி.வீரமணி ஈ) மூவருமில்லை

**49) தந்தை பெரியார் இலவச சட்ட உதவி மையம் முதன்முதலில் எங்கே தொடங்கப்பட்டது?**

அ) கடலூர் ஆ) திருச்சி இ) மதுரை ஈ) சென்னை

**50) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கான வேலை வாய்ப்பில் வழி காட்டுவதற்காக மானமிகு கி.வீரமணி அவர்களால் சென்னை – பெரியார் திடலில் தொடங்கப்பட்டுள்ள வழிகாட்டி உதவும் மையம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?**

அ) 1980 ஆ) 1984 இ) 1989 ஈ) 1990

**51) வாழ்வியல் சிக்கல்களுக்கு வழிகாட்டி, ‘நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்’ என்று கணவன் - மனைவி பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பெரியார் வாழ்வியல் மையத்தின் தலைவர் யார்?**

அ) பேரா.ஞான. அய்யாசாமி ஆ) டாக்டர் வி.எஸ்.பி.பாஸ்யம்

இ) கி.வீரமணி ஈ) நீதி அரசர் எம்.மருதமுத்து

**52) சென்னை – பெரியார் திடலில் இயங்கி வரும் பெரியார் மணியம்மை இலவச மருத்துவமனை எப்போது தொடங்கப்பட்டது?**

அ) 1978 ஆ) 1979 இ) 1980 ஈ) 1981

**53) பெரியார் நகரக் குடும்ப நல மையம் சென்னையில் எங்கே உள்ளது?**

அ) வேப்பேரி ஆ) அடையாறு

இ) ராயப்பேட்டை ஈ) தியாகராயர்நகர்

**54) பெரியார் அறப்பணிக்கழகத்திற்கு அதன் செயல்பாடுகளைப் பாராட்டி முதன்முதலில் நன்கொடை வழங்கிய தமிழக முதலமைச்சர் யார்?**

அ) சி.என்.அண்ணாதுரை ஆ) கே.காமராஜ்

இ) மு.கருணாநிதி ஈ) ஜெ.ஜெயலலிதா

**55) பெரியார் அறப்பணிக் கழகங்களின் சார்பாக எத்தனை மருத்துவமனைகள் நடத்தப்படுகின்றன?**

அ) 4 ஆ) 5 இ) 6 ஈ) 7

**56) சென்னை பெரியார் மணியம்மை மருத்துவமனையில் எத்தனை பிரிவுகள் உள்ளன?**

அ) 7 ஆ) 8 இ) 9 ஈ) 10

**57) ஈரோட்டில் உள்ள தந்தை பெரியார் வாழ்ந்த இல்லத்தைத் தமிழக அரசிடம் ஒப்படைத்தவர் யார்?**

அ) தந்தை பெரியார் ஆ) மணியம்மையார்

இ) கி.வீரமணி ஈ) மூவரும் இல்லை

**58) தந்தை பெரியார் வாழ்ந்த இல்லம் தற்போது எப்படி அழைக்கப்படுகிறது?**

அ) வெங்கட்ட நாயக்கர் இல்லம்

ஆ) பெரியார் இல்லம்

இ) பெரியார் மன்றம்

ஈ) பெரியார் அண்ணா நினைவகம்

**59) ஈரோட்டில் உள்ள தந்தை பெரியார் வாழ்ந்த நினைவு இல்லத்திற்கு அண்ணாவின் பெயரையும் சேர்த்துச் சூட்டியுள்ளமை ஏன்?**

அ) பெரியார் விருப்பம்

ஆ) மணியம்மையாரின் விருப்பம்

இ) அண்ணாவுக்கும் சொந்தமானது

ஈ) அண்ணா சில காலம் தங்கி இருந்தமையால்

**60) தந்தை பெரியார் பயன்படுத்திய பொருட்கள் அவர் வாழ்ந்த இல்லங்களில் வைக்கப்பட்டுள்ளன. எங்கு மிகுதியாக உள்ளன?**

அ) ஈரோடு ஆ) திருச்சி இ) சென்னை ஈ) ஏற்காடு





**61) பெண்கள் தொழிற்கல்வி பெறவேண்டும் என்ற பெரியாரின் எண்ணப்படி மக்களிடம் ஒரு ரூபாய் ஒரு ரூபாயாக நன்கொடை பெற்றுத் தொடங்கப்பட்ட பெரியார் கல்வி நிறுவனம் எது?**

அ) பெரியார் மணியம்மை மகளிர் பொறியியற் கல்லூரி

ஆ) பெரியார் நூற்றாண்டு மகளிர் பாலிடெக்னிக்

இ) பெரியார் சமூகத் தொடர் கல்விக் கல்லூரி

ஈ) பெரியார் மகளிர் தொழிற்பயிற்சி நிலையம்

**62) மகளிர் கல்வி வளர்ச்சி, மகளிர் மேம்பாடு, வறுமை ஒழிப்பு ஆகியவற்றைச் சிறப்பாக நிறைவேற்றியதற்காக 3.2.2000 அன்று ஆசியாவிலேயே சிறந்த கல்லூரியாகப் பெரியார் நூற்றாண்டு மகளிர் பாலிடெக்னிக் முதல் சர்வதேச சாதனை விருதைப் பெற்றுள்ளது? விருதை வழங்கிய நாடு எது?**

அ) கனடா ஆ) அமெரிக்கா

இ) பிரான்ஸ் ஈ) இங்கிலாந்து

**63) உலகின் முதல் பெண்கள் பொறியியற் கல்லூரியாகிய பெரியார் மணியம்மை பெண்கள் பொறியியற் கல்லூரி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?**

அ) 1987 ஆ) 1988 இ) 1989 ஈ) 1990

**64) ISO 9002 என்ற உலகத் தரச்சான்றிதழைப் பெற்றுள்ள முதல் பெரியார் கல்வி நிறுவனம் எது?**

அ) பெரியார் மணியம்மை மேல்நிலைப் பள்ளி

ஆ) பெரியார் மணியம்மை மகளிர் பொறியியற் கல்லூரி

இ) பெரியார் மகளிர் பாலிடெக்னிக்

ஈ) எதுவும் இல்லை

**65) உலகிலேயே முதல் பெண்கள் பொறியியற் கல்லூரியின் மணியம்மையார் விடுதிக்கு 10 லட்ச ரூபாய் நன்கொடை வழங்கிய முதலமைச்சர் யார்?**

அ) சந்திரபாபு நாயுடு

ஆ) மாயாவதி

இ) ஜோதிபாசு

ஈ) சரத்பவார்

**66) பெரியார் உயிரி தொழில்நுட்ப மற்றும் உயிர்மண்டல ஆராய்ச்சிக் கழகம் எங்குள்ளது?**

அ) திருச்சி ஆ) தஞ்சை

இ) வல்லம் ஈ) சென்னை

**67)** **பெரியார் உயிரி தொழில் நுட்ப மற்றும் உயிர் மண்டல ஆராய்ச்சிக் கழகம் உலக சுற்றுச் சூழல் காங்கிரசின் விருதினை எந்த ஆண்டு பெற்றது?**

அ) 1996 ஆ) 1997 இ) 1993 ஈ) 2000

**68)** **பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் சார்பில் அதன் ஆயுள் செயலாளர் கி.வீரமணி அவர்களால் தந்தை பெரியார் அறக்கட்டளை ஒன்று துவக்கப்பட்டு அதன் சார்பில் ஆண்டு தோறும் ஆய்வுச் சொற்பொழிவு நடத்த வழி செய்யப்பட்டுள்ளது. எந்தப் பல்கலைக்கழகத்தில்?**

அ) சென்னைப் பல்கலைக் கழகம்

ஆ) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

இ) சுந்தரனார் பல்கலைக் கழகம்

ஈ) பாரதிதாசன் பல்கலைக் கழகம்

**69)** **தமிழக அரசால் எந்தப் பல்கலைக்கழகத்தில் பெரியார் உயராய்வு மய்யம் அமைக்கப் பட்டுள்ளது?**

அ) சென்னைப் பல்கலைக் கழகம்

ஆ) மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

இ) பாரதிதாசன் பல்கலைக் கழகம்

ஈ) அழகப்பா பல்கலைக் கழகம்

**70)** **ஒடுக்கப்பட்ட மாணவர்கள் கல்வி வாய்ப்பைப் பெறும் நோக்கத்தில் நிலம், இரு கட்டடம், 5.5 லட்சம் ரூபாய் பணம் ஆகியவற்றைத் தந்து பெரியார் அவர்களால் தமிழக அரசிடம் வழங்கப்பட்டுத் தொடங்கப்பட்ட பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி எங்கு அமைந்துள்ளது?**

அ) தஞ்சை ஆ) ஈரோடு இ) திருச்சி ஈ) சேலம்

**71)** **திருச்சி பெரியார் ஈவெ.ரா. கல்லூரியில் மணியம்மையார் அவர்களால் துவக்கப்பட்ட பெரியார் அறக்கட்டளையின் மதிப்பு என்ன?**

அ) ரூ.10000 ஆ) ரூ.12000 இ) 15000 ஈ) 20000

**72)** **ஈரோட்டில் உள்ள அரசு மருத்துவமனைக்குத் தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி தலைமை மருத்துவ மனை என்று எப்போது பெயரிடப்பட்டது?**

அ) 31.8.74 ஆ) 31.7.74

இ) 31.8.75 ஈ) 30.6.75

**73) தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி அரசினர் தொழிற்பயிற்சிக் கல்லூரி எங்கே அமைந்துள்ளது?**

அ) தஞ்சை ஆ) சேலம் இ) வேலூர் ஈ) சென்னை

**74) பெரியார் பல்கலைக் கழகம் எங்கே அமைந்துள்ளது?**

அ) கோவை ஆ) மதுரை
இ) திருச்சி ஈ) சேலம்

**75) சென்னை கிண்டி பொறியியற் கல்லூரி வளாகத்தில் கோளரங்கம் அமைந்துள்ள பெரியார் அறிவியல் மையத்தின் மொத்தப் பரப்பளவு என்ன?**

அ) 20 ஏக்கர் ஆ) 21 ஏக்கர் இ) 22 ஏக்கர் ஈ) 23 ஏக்கர்

**76) தந்தை பெரியார் நெறியில் சமூக நீதிக்காகச் சிறந்த தொண்டாற்றுபவர்களுக்குத் தமிழக அரசு வழங்கி வரும் சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது எத்தனை பவுன் மதிப்பு கொண்டது?**

அ) 1 பவுன் ஆ) 3 பவுன் இ) 4 பவுன் ஈ) 5 பவுன்

**77) சமூகநீதிக்கான தந்தை பெரியார் விருது எனும் தமிழக அரசின் உயர் மட்ட விருதினை முதன்முதலாகப் பெற்றவர் யார்?**

அ) வி.பி.சிங் ஆ) சீதாராம் கேசரி
இ) கி.வீரமணி ஈ) மூவருமில்லை

**78) சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதைத் தோற்றுவித்த தமிழக முதலமைச்சர் யார்?**

அ) சி.என். அண்ணாதுரை ஆ) மு.கருணாநிதி
இ) எம்.ஜி.ராமச்சந்திரன் ஈ) ஜெ.ஜெயலலிதா

**79) டில்லியில் உள்ள 5 அடுக்கு மாளிகையாகிய டில்லி பெரியார் மய்யம் யாரால் நிர்மாணிக்கப்பட்டது?**

அ) கி.வீரமணி ஆ) வி.பி.சிங்
இ) சந்திரஜித் யாதவ் ஈ) மாயாவதி

**80) இந்தியத் துணைக்கண்ட அளவில் பெரியார் கருத்துக்களை பரப்பிடக் கட்டப்பட்ட டில்லி பெரியார் மய்யம் அமைந்துள்ள பகுதியின் பெயர் என்ன?**

அ) கன்னாட்பிளேஸ் ஆ) பாம்நோலி
இ) காந்தி நகர் ஈ) சுந்தர்நகர்

**81) டில்லி பெரியார் மய்யத்திற்கு அடிக்கல் நாட்டியவர் யார்?**

அ) ஷீலாதீட்சித் ஆ) சந்திரஜித் யாதவ்

இ) வி.பி.சிங் ஈ) கி.வீரமணி

**82) டில்லி பெரியார் மய்யக்கட்டடம் யாரால் திறந்து வைக்கப்பட்டது?**

அ) ஜி.கே.மூப்பனார் ஆ) மாயாவதி

இ) லெவிஃபிராகல் ஈ) ஷீலாதீட்சித்

**83) டில்லி பெரியார் மய்யம் அக்டோபர் 2000– த்தில் திறப்பு விழா நடந்தது! திறக்கப்பட்ட நாள் எது?**

அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4

**84) பெரியார் கொள்கைகளைப் பன்னாட்டளவில் பரப்பிவரும் டில்லி பெரியார் மய்யத்திற்கு ரூ.5 லட்சம் வழங்கிய முதலமைச்சர் யார்?**

அ) ஷீலாதீட்சித் ஆ) ஜோதிபாசு

இ) சந்திரபாபு நாயுடு ஈ) சரத்பவார்

**85) நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றத்தை உள்ளடக்கிய சென்னை பெரியார் மய்யத்தைத் திறந்து வைத்தவர் யார்?**

அ) ஜி.கே.மூப்பனார் ஆ) வி.பி.சிங்

இ) சீதாராம் கேசரி ஈ) ஜெ.ஜெயலலிதா

**86) அமெரிக்க அய்க்கிய நாட்டில் வாழும் தமிழர்களும் பகுத்தறிவாளர் களும் ஒன்று கூடி 13.11.94 இல் தொடங்கிய பெரியார் பன்னாட்டு மய்யம் எங்கு உள்ளது?**

அ) வாஷிங்டன் ஆ) நியூயார்க்

இ) சிகாகோ ஈ) சான்பிரான்சிஸ்கோ

**87) இந்தியாவில் பெரியார் வழியில் சமூகநீதிக்காகப் பாடுபடுவோர்க்குப் பெரியார் பன்னாட்டு மையக் குழுவினர் வழங்கி வரும் விருதுக்குப் பெயர் என்ன?**

அ) சமூக நீதி விருது

ஆ) பன்னாட்டுச் சமூக நீதி விருது

இ) பெரியார் சமூக நீதி விருது

ஈ) கி.வீரமணி சமூக நீதி விருது

**88) கி.வீரமணி சமூக நீதி விருதை முதன்முதலில் பெற்ற இந்திய நாட்டுத் தலைவர் யார்?**

அ) குன்றக்குடி அடிகளார் ஆ) சந்திரஜித் யாதவ்

இ) வி.பி.சிங் ஈ) சீதாராம் கேசரி

**89) பவர் என்று சொல்லப்படும் அமைப்பு எது தொடர்புடையது?**

அ) இளைஞர்கள் ஆ) மாணவர்கள்
இ) பெண்கள் ஈ) முதியோர்

**90) திருச்சியில் தொடங்கப்பட்டிருந்த "நாகம்மையார் அனாதை குழந்தைகள் இல்லம்" என்ற பெயரில் உள்ள எந்தச் சொல்லை பொதுச் செயலாளர் கி. வீரமணி அவர்கள் நீக்கினார்கள்?**

அ) நாகம்மை ஆ) அனாதை
இ) குழந்தைகள் ஈ) இல்லம்

**91) தமது கோரிக்கைகளை ஏற்காத காங்கிரசில் இருந்து வெளியேறிய தந்தை பெரியார் அவர்கள், திராவிட மக்களைத் திருத்தி மானமும் அறிவும் உள்ள மக்களாக மாற்றச் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள்; அந்த ஆண்டு எது?**

அ) 1923 ஆ)1924 இ) 1925 ஈ) 1926

**92) சுயமரியாதை இயக்கத்தின் தலைவராக இருந்த தந்தை பெரியார் அவர்களை நீதிக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுத்தபோது அவர் எங்கு இருந்தார்?**

அ) ஈரோட்டில் ஆ) வடநாட்டுப் பயணத்தில்
இ) பெல்லாரி சிறையில் ஈ) வைக்கத்தில்

**93) சுயமரியாதை இயக்கத்தையும் நீதிக்கட்சியையும் இணைத்துச் சேலத்தில் நடந்த மாநில மாநாட்டில் திராவிடர் கழகம் என்று 1944 ஆகஸ்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அது எந்த நாளில்?**

அ) 21 ஆ) 23 இ) 25 ஈ) 27

**94) அரசு ஊழியர்களும், அதிகாரிகளும் பங்கேற்கும் வகையில் தந்தை பெரியார் அவர்கள் பகுத்தறிவாளர் கழகம் என்பதைத் தொடங்கிய ஆண்டு எது?**

அ) 1971 ஆ) 1972 இ) 1973 ஈ) 1974

**95) திராவிடர் விவசாய தொழிலாளர் கழகத்தைப் பெரியார் அவர்கள் துவக்கியது எப்போது?**

அ) 1950 ஆ) 1951 இ) 1952 ஈ) 1953

**96) தந்தை பெரியார் அவர்கள் தென்பகுதி இரயில்வே தொழிலாளர் யூனியன் தொடங்கியது எந்த ஊரில்?**

அ) சென்னை ஆ) மதுரை
இ) திருச்சி ஈ) நாகை

**97) குன்றக்குடி மடத்துக்குச் சொந்தமான இடத்தில் தந்தை பெரியார் முந்திரித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தை 29.7.79 இல் தொடங்கி வைத்தவர் யார்?**

அ) குன்றக்குடி அடிகளார் ஆ) கி.வீரமணி
இ) எம்.ஜி.ராமச்சந்திரன் ஈ) மு.கருணாநிதி

**98) தந்தை பெரியார் குருதிக் கொடைக் கழகம் முதன் முதலில் தொடங்கப்பட்டுச் சிறப்பாக நடந்து வருவது நெல்லை மாவட்டத்தில் எந்த ஊரில்?**

அ) குற்றாலம் ஆ) சேரன்மாதேவி
இ) வீரவநல்லூர் ஈ) கீழப்பாவூர்

**99) மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் திராவிடர் கழகம் தந்தை பெரியார் காலத்திலேயே தொடங்கப்பட்டுத் தொண்டாற்றி வருகிறது. வட அமெரிக்காவிலும் திராவிடர்கழகம் 2001 ஜனவரியில் தொடங் கப்பட்டு உள்ளது. அமெரிக்காவில் எங்கே தொடங்கப்பட்டுள்ளது?**

அ) வாஷிங்டன் ஆ) நியூயார்க்
இ) சிகாகோ ஈ) இல்லினாய்ஸ்

**100) உலக நாத்திகர் சங்கத்தில் திராவிடர் கழகம் இணைந்தது எப்போது?**

அ) 1997 ஆ) 1994 இ) 1999 ஈ) 2000

**101) உலகத் தலைவர் பெரியார் அவர்களுக்கு 49 நாடுகளின் நாத்திகத் தலைவர்கள் எல்லாம் ஒன்றாக இணைந்து திறந்து வைத்த சிலை எங்குள்ளது?**

அ) திருச்சி ஆ) வல்லம் (தஞ்சை)
இ) திண்டுக்கல் ஈ) சென்னை

**102) பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனத்தால் நடத்தப்படும் கணினி கிராபிக்ஸ் ஆய்வு மையம் எது?**

அ) PCC ஆ) PACE
இ) PECRA ஈ) VIBGYOR

**103) தமிழகத்தில் அதிக இடங்களில் தனது கிளைகளைக் கொண்டுள்ள பெரியார் கல்வி நிறுவனம் எது?**

அ) VIBGYOR
ஆ) பெரியார் பயிலகம்
இ) பெரியார் சமூகத் தொடர் கல்விக் கல்லூரி
ஈ) ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

**104) இந்தியாவில் வெற்றி பெற்ற முதல் சமூகப் போராட்டம் நடந்த வைக்கத்தில் தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம் அமைக்கத் திட்டமிட்ட முதலமைச்சர் யார்?**

அ) கே.காமராஜ் ஆ) எம்.ஜி.இராமச்சந்திரன்
இ) அறிஞர் அண்ணா ஈ) எம்.கருணாநிதி

**105) வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகத்தில் பெரியார் உருவச் சிலை, பெரியார் நினைவுப் பூங்கா, பெரியார் படிப்பகம் ஆகிய வற்றை அமைத்துத் திறப்புவிழா நடத்திய முதலமைச்சர் யார்?**

அ) எம்.ஜி.இராமச்சந்திரன் ஆ) வி.என்.ஜானகி
இ) ஜெ.ஜெயலலிதா ஈ) எம்.கருணாநிதி

**106) வைக்கம் பெரியார் நினைவகம் திறப்பு விழாவிற்கு தலைமை தாங்கியவர் யார்?**

அ) டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன்
ஆ) ஈ.கே.நாயனார்
இ) ஜெ.ஜெயலலிதா
ஈ) எம்.கருணாநிதி

**107) வைக்கம் பெரியார் நினைவகம் எந்த ஆண்டு திறக்கப்பட்டது?**

அ) 1924 ஆ) 1994 இ) 1971 ஈ) 1997

**108) வைக்கம் போராட்டத்தைத் தந்தை பெரியார் நடத்தியபோது நம்பூதிரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தீர்ப்பதாகக் கூறி வைக்கத்திற்கு காந்தியார் வந்தபோது அவரை வீட்டிற்கு வெளியே தனிக் குடில் கட்டி மரப்பலகையில் உட்காரவைத்து தீண்டாமையைக் கடைப்பிடித்த நம்பூதிரி யார்?**

அ) பத்மநாபன் இண்டன் துருத்தி ஆ) இண்டன் துருத்தி நம்பீசன்
இ) நீலகண்டன் நம்பூதிரி ஈ) மூவருமல்லர்

**109) திருச்சி பெரியார் கல்வி வளாகத்தில் இயங்கும் கணினி மய்யத்தில் எத்தனை வயது முதல் கணினி கற்றுத்தரப்படுகிறது?**

அ) 3 ஆ)4 இ) 5 ஈ) 6

**110) அன்னை மணியம்மையார் தொடங்கிய அறப்பணிக்கழகம் எது?**

அ) பெரியார் சுயமரியாதை நிறுவனம்
ஆ) தந்தை பெரியார் அறப்பணிக் கழகம்
இ) பெரியார் மணியம்மை கல்வி அறப்பணிக் கழகம்
ஈ) மூன்றுமல்ல

**111) பெரியார் மணியம்மை கல்வி அறப்பணிக்கழகம் எந்த ஆண்டுமுதல் பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில் கல்வி நுட்ப நிறுவனம் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது?**
அ) 1999 ஆ) 1998 இ) 2000 ஈ) 2001

**112) திராவிடர் கழக அறக்கட்டளையைத் தொடங்கியவர் யார்?**
அ) தந்தை பெரியார் ஆ) அன்னை மணியம்மையார்
இ) நாகம்மையார் ஈ) கி.வீரமணி

**113) கிண்டி பெரியார் அறிவியல் மய்யம் அ.தி.மு.க. அரசு சார்பில் உருவாக்கப்பட்டது. உருவாக்கிய முதல்வர் யார்?**
அ) எம்.ஜி.ராமச்சந்திரன் ஆ) வி.என்.ஜானகி
இ) ஜெ.ஜெயலலிதா ஈ) நாவலர் நெடுஞ்செழியன்

**114) அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் பொருட்டு அமைக்கப் பட்ட அறிவியல் மய்யங்களுக்குத் தந்தை பெரியாரின் நூற்றாண்டை யொட்டி பெரியார் பெயர் சூட்டப்பட்டது. அது எந்த ஆண்டு?**
அ) 1979 ஆ) 1980 இ) 1981 ஈ) 1982

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.ஈ | 2.இ | 3.ஆ | 4.அ | 5 இ | 6.ஈ | 7.இ | 8.ஈ | 9.ஈ | 10.ஆ |
| 11.இ | 12.இ | 13.இ | 14.அ | 15.இ | 16.ஈ | 17.ஆ | 18.இ | 19.ஆ | 20.ஆ |
| 21.ஈ | 22.இ | 23.ஈ | 24.ஆ | 25.ஈ | 26.ஆ | 27.ஈ | 28.ஈ | 29.ஆ | 30.அ |
| 31.அ | 32.ஈ | 33.ஆ | 34.அ | 35.ஈ | 36.,இ | 37.ஆ | 38.அ | 39.ஆ | 40.ஈ |
| 41.ஈ | 42.ஆ | 43.ஈ | 44.இ | 45.அ | 46.இ | 47.அ | 48.இ | 49.ஈ | 50.இ |
| 51.ஈ | 52.ஆ | 53.அ | 54.ஈ | 55.ஆ | 56.அ | 57.ஆ | 58.ஈ | 59.ஈ | 60.அ |
| 61.ஆ | 62.அ | 63.ஆ | 64.ஆ | 65.ஆ | 66.இ | 67.ஈ | 68.அ | 69.இ | 70.இ |
| 71.அ | 72.அ | 73.இ | 74.ஈ | 75.இ | 76.ஈ | 77.இ | 78.ஈ | 79.அ | 80.ஆ |
| 81.இ | 82.இ | 83.அ | 84.அ | 85.ஆ | 86.இ | 87.ஈ | 88.இ | 89.இ | 90.ஆ |
| 91.இ | 92.இ | 93.ஈ | 94.அ | 95.இ | 96.இ | 97.ஆ | 98.ஈ | 99.இ | 100.ஆ |
| 101.ஆ | 102.ஈ | 103.இ | 104.ஆ | 105.இ | 106.அ | 107.ஆ | 108.ஆ | 109.அ | 110.இ |
| 111.இ | 112.ஈ | 113.அ | 114.ஆ | | | | | | |

## இயல் எட்டு

# சமகாலத்தவர்

தந்தை பெரியார் தமது பொது வாழ்வில் பல்வேறு அறிஞர்களை, சாதனையாளர்களை எல்லாம் சந்தித்துள்ளார். தமது இலட்சியம் நிறைவேற அந்த சமகாலத்தவர்களோடு இணைந்து செயலாற்றிய வரலாற்றுக் குறிப்புகளை சமகாலத்தவர் என்ற தலைப்பில தொகுத்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான நூல்களைப் படித்தால் மட்டுமே இந்த அரிய தகவல்களையெல்லாம் நம்மால் திரட்ட முடியும். ஆனால் நாம் ஓரிரு நாட்களில் எளிதாகப் படித்தறியும்படி வினா விடையாக தொகுக்கப்பட்டு உள்ளது.

இயல் 8 காலத்தவர் பகுதியில் இடம் பெற்றுள்ளவர்களைப் பற்றிய குறிப்பு:

தந்தை பெரியார் காங்கிரசில் சேர்ந்திட இராஜகோபாலாச்சார் பெரிதும் முயன்றார். பெரியார் காங்கிரசில் சேர்ந்து, அக்கட்சி பார்ப்பனர் நலம் காக்கும் கட்சி என்பதை அறிந்து அதனை மாற்ற முடியாத சூழலில், அதிலிருந்து விலகி சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

அனைவரையும் சமமாக்கப் போராட முனைந்த பெரியார் அனைவரையும் தோழர் என்றே அழைத்திடவேண்டும் என்றார். அதன்படி தந்தை பெரியாரை தோழர் என்று விளித்து பேசிய முதல் பெண் நாகம்மையார் ஆவார்.

கேரளாவில் வைக்கம் போராட்டக்களத்தில் பெரியார் வெற்றி பெற்று, ஈழவர் சமுதாய மக்களின் உரிமை காக்கப்படவும், அச்சமூகத்தின் நன்றியைக் காட்டும் வகையில், பெரியாரின் ஒரு நாள் வாழ்க்கையை இயக்குநர் ராமுகாரியத் படமாக்கினார்.

வங்கத்துப் பேரறிஞர் எம்.என்.ராய் தந்தை பெரியாரைப்பற்றி குறிப்பிடும்போது, “எனது நாத்திக ஆசான்” என்கிறார்.

பெரியார் இங்கிலாந்து சென்றிருந்தபோது அவருக்கு பெருந்துணையாய் இருந்தவர் இங்கிலாந்தின் தொழிற்சங்கத் தலைவர் சக்ளத்வாலா ஆவார்.

தந்தை பெரியாரின் ஈரோடு இல்லத்திற்கு மோதிலால் நேரு வந்துள்ளார். 6.1.1940 அன்று அன்றைய நாட்டு அரசியல் நிலவரம் பற்றி பேசியவர் முஸ்லிம் லீக் முன்னோடி முகம்மது அலி ஜின்னா ஆவார்.

சர். ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள் பெரியார் மீது கொண்டிருந்த அளவற்ற பற்றுக்கு அடையாளம், அவரது வீட்டில் எந்தப் பக்கம் திரும்பினாலும் என் கண்ணில் பெரியார் படம் படவேண்டும் என்று உத்தரவிட்டு, அதன்படி செய்யச் சொன்னார். முதல் இந்தி எதிர்ப்புப் போரில் பெரியாருடன் கலந்துகொண்டவர் தமிழ்க்கடல் என்று அழைக்கப்பட்ட சைவப் பேரறிஞர் மறைமலையடிகள் ஆவார்.

வடபுலத்திலிருந்து சென்னைக்கு வந்த டாக்டர் அம்பேத்கர் நீதிக்கட்சி தலைவர்களிடம் பேசியபோது, பெரியாரின் பேச்சைக் கேட்டு அவரைச் சரியாகப் பின்பற்றுங்கள் என்றார். திருவண்ணாமலை மாநாட்டில் தந்தை பெரியார் படத்தைத் திறந்து வைத்த பட்டுக்கோட்டை அழகிரி அவர்கள் இதோ பெரியாரில் பெரியார் என்று உரையாற்றினார். திண்டுக்கல் பெரியார் சிலை திறப்பு நிகழ்வில் விஞ்ஞானி ஜி.டி.நாயுடு தந்தை பெரியாருக்கு ஒரு புதிய வாட்சினை (கைக்கடிகாரம்) பரிசாகக் கொடுத்தார்.

சென்னை மாகாண முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஓமாந்தூர் ராமசாமியார் தந்தை பெரியாரிடம் நேரில் கூறும்போது, நீங்கள் இருக்க வேண்டிய பதவியில் தான் இருப்பதாகக் கூறினார். பெரியார் பொது

உடைமைக் கருத்துகளை பிரச்சாரம் செய்யும் பணிக்கு சிங்காரவேலர் பெரிதும் துணையாக நின்றவராவார். குலக்கல்வித் திட்டத்தை, தந்தை பெரியார் போராடி ஒழித்தபின், பெரியாரின் ஆதரவுடன் காமராஜர் முதலமைச்சர் பொறுப்பேற்றார்.

1938இல் இந்தித் திணிப்பை எதிர்த்து திருச்சியிலிருந்து புறப்பட்ட பிரச்சாரப் படையில், மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் இடம் பெற்றார். 1928இல் நீதிக்கட்சி ஆட்சியில் முத்தையா முதலியார் வகுப்புரிமை ஆணையை படைத்தமையால், தந்தை பெரியார் இனி பிறக்கும் குழந்தைகளுக்கு முத்தையா என்று பெயரிடக் கூறினார். தந்தை பெரியாருக்கு ஸ்ரீமுகம் எழுதியவர் அத்வைத மதத் தலைவர் சிருங்கேரி சங்கராச்சாரியார்.

இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலில் அய்க்கிய முன்னணி அமைத்து வெற்றி கண்ட பெரியாரை அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் எஸ்.ஏ.டாங்கே பாராட்டினார். தந்தை பெரியார் காங்கிரஸ் கட்சியில் இருந்தபோது, நீதிக்கட்சி முதல்வர் பனகல் அரசர் இந்து அறநிலையச் சட்டம் இயற்றி பெரியாரின் பாராட்டைப் பெற்றார். தந்தை பெரியாரின் இந்தி எரிப்புப் போராட்டத்தில் களம் கண்டவர்களில் ஒருவர் பன்மொழிப் புலவர் நாவலர் சோமசுந்தர பாரதியாரவர்கள் ஆவார்கள், 1944இல் அண்ணாமலைப் பல்கலையில் தமிழிசைப்பற்றி பெரியார் பேசிய கூட்டத்திற்கு தமிழறிஞர் கா.சுப்பிரமணியப் பிள்ளை தலைமை வகித்தார்கள்.

காங்கிரஸ் இயக்கத்தின் மூத்த தலைவராக, மூத்தவராக இருந்த வ.உ.சி. அவர்கள், அவருக்குப் பின் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்த பெரியாரை, “என் தலைவர்” என்று குறிப்பிட்டது மிகவும் கவனிக்கத்தக்க செய்தியாகும். சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானப்படி ஜாதி மறுப்புத் திருமணம் செய்திட உறுதி பூண்டு, இசை வேளாளர் குடியில் பிறந்த பெண்ணை (குஞ்சிதம்) பெரியார் தலைமையில் திருமணம் செய்த பட்டதாரிதான் குத்தூசி குருசாமி ஆவார். கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்னால் மூன்று மணி நேரத்திற்கு மேல் பெரியார் ஒருவரின் பேச்சை மட்டும்தான் கேட்க முடியும் என்றார்.

பெரியாரின் தொடக்க கால போராட்டங்களில் அவரது குடும்பத்துப் பெண்ணான சகோதரி எஸ்.ஆர்.கண்ணம்மாள் தீவிரமாய் பங்காற்றியவராவார்.

தேவதாசி முறையை ஒழித்திட சட்டத்தை முன்மொழிந்து பெரியாரின் பாராட்டைப் பெற்றவர்தான் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியார். ஆர்க்காடு இராமசாமி முதலியார் தந்தை பெரியாரை இந்தியாவின் ரூசோ என்று பாராட்டியுள்ளார். 1948இல் தூத்துக்குடி மாநாட்டில் பார்ப்பன எதிர்ப்பாளராக மாறிய காந்தியின் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். காந்தியவாதியான வினோபாவே தந்தை பெரியாரிடம் நேரில் கூறும்போது சம்பூகனைக் கொன்ற இராமனை நான் ஏற்கவில்லை என்றார்.

பொதுஉடைமை இயக்க முன்னோடிகளில் ஒருவரான ப.ஜீவானந்தம் அவர்கள் திருவல்லிக்கேணி கடற்கரைக் கூட்டத்தில் பேசும்போது, பெரியார் லெனினைப் போல் மாபெரும் தலைவராக வரமாட்டார் என, தான் தப்புக் கணக்குப் போட்டுவிட்டதாக ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

1968இல் ‘பிலிட்ஸ்’ ஏட்டில் கார்ல்மார்க்ஸ் உடன் பெரியாரை ஒப்பிட்டு எழுதிய அறிஞர் கே.ஏ.அப்பாஸ். இராஜகோபாலாச்சாரியார் கொண்டு வந்த குலக்கல்வித் திட்டத்திற்கு எதிரான வழிநடை படைக்கு பெரியாரால் தலைவராக நியமிக்கப்பட்டவர் நீடாமங்கலம் ஆறுமுகம் ஆவார். தந்தை பெரியார் மேலை நாட்டுப் பயணம் சென்றபோது உடன் சென்ற சுயமரியாதை இயக்க முன்னோடி எஸ்.இராமநாதன் ஆவார். தந்தை பெரியார் எழுதிய “பொன்மொழி” நூல் பற்றிய வழக்கில் பெரியார் அபராதம் கட்ட மறுத்ததால், அய்யாவின் வேன் ஏலம் விடப்பட்டது. அந்த வேனை ஏலத்தில் எடுத்து மீண்டும் பெரியாரிடம் ஒப்படைத்தவர் தான் தஞ்சை பஞ்சநாதம் பிள்ளை,

தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை ‘தமிழர் தலைவர்’ என்ற தலைப்பில் நூலாக எழுதியவர் சாமி.சிதம்பரனார். தந்தை பெரியாரின் சிலைக்கு இருபுறமும் இந்தி எதிர்ப்புப் போரில் சிறையேகி, மறைந்த





தாளமுத்து, நடராசன் இருவரின் சிலையும் வைக்கப்படும் என பேரறிஞர் அண்ணா கூறினார். பெரியாரை நேர்காணல் செய்வதற்காக வருகை தந்து, நேர்காணல் செய்தவர் மத்திய அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் என்பவராவார் முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஆதரித்த பார்ப்பனத் தலைவர் பரவஸ்து இராஜகோபாலாச்சாரி ஆவார்.

யுனெஸ்கோ மன்றத்தின் சார்பில் பெரியாருக்கு வழங்கப்பட்ட பட்டயத்தை நேரில் வழங்கிய நிகழ்ச்சியில் பங்குகொண்டவர் இந்திய அமைச்சர் திர்குன சென் என்பவர் ஆவார்.

பெரியாரின் திட்டங்களை ஆதரித்து, நேரில் கோவையில் சந்தித்து அய்யா இறைச்சி உணவு சாப்பிட்டவர்தான் ஆந்திராவைச் சார்ந்த காந்தியாரின் பார்ப்பன சீடவரான கோரா.

வைக்கம் போராட்டத்தை நடத்திய பெரியாருக்கு எதிராக நடத்தப்பட்ட சத்துருசம்கார யாகம் முடிந்ததும் இறந்துபோனார் திருவாங்கூர் மன்னர்.

வடபுலத் தலைவர் பாபு ஜெகஜீவன்ராமை கண்டனம் செய்த சுதேசமித்திரனை நோக்கி பெரியார், “வாயை அடக்குங்கள்” என்றார்.

ஆனந்த விகடன் ஆசிரியர் மணியனிடம், புத்தருக்குப் பின் இந்தியாவில் பெரும் சமுதாயப் புரட்சியை உருவாக்கியவர் பெரியார் தான் என ஜான் ரெய்லி குறிப்பிட்டுள்ளார்.

1948 ஈரோடு மாநாட்டில் திராவிட நாடு படத்தை திரு.வி.க. அவர்கள் திறந்து வைத்தார்கள். இராவண காவிய நூலை உருவாக்கியவர் புலவர் குழந்தை ஆவார். அறியாமைப் பாலைவனத்தைப் பகுத்தறிவுப் பழத்தோட்டமாக்கியவர் பெரியார் என்றார் ஏ.பி.ஜனார்த்தனம், மற்ற நடிகர்களுக்கு வழிகாட்டி எம்.ஆர்.ராதா என்று பெரியார் புகழாரம் சூட்டினார். பெரியாரின் சமுதாய சீர்திருத்தத்தில் அதிக ஆர்வங்கொண்டு காங்கிரசை விட்டு வெளியேறிவிட்டதாக வரதராஜுலு நாயுடு கூறினார். நீதிக்கட்சியின் தலைவராக பெரியார் தான் ஆகவேண்டும் என பொப்பிலி அரசர் விடாப்பிடியாய் இருந்தார்.

தந்தை பெரியார் ராஜதுரோக வழக்கில் சிறை சென்று மீண்டபோது பெரியாரை சந்திக்க ஈரோட்டிற்கு ஜெயப்பிரகாஷ் நாராயண் வந்திருந்தார். கைவல்ய சாமியாரின் இயற்பெயர் பொன்னுசாமி.

தந்தை பெரியார் கல்கத்தாவிற்கு பிரச்சாரத்திற்கு சென்றபோது, தீப்பொறி பறக்கப் பேசும் வெண்தாடி வேந்தரைக் காணும் பேரு கல்கத்தாவிற்கு கிடைத்துள்ளது என 1944இல் வான்கார்டு ஆங்கில இதழ் எழுதியது. லெனினைப் போல் நம் நாட்டில் காரியங்களைச் செய்வது சுயமரியாதை இயக்கம் என மலையாள அறிஞர் கே.அய்யப்பன் கூறினார். நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்று பார்ப்பன எழுத்தாளர் வா.ராமசாமி எழுதினார். பெரியார் முதல் பிரசங்கத்தை கேட்டதும் பிரமித்துப் போனேன் என்றார் ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார், தீண்டாமை பற்றி டெம்பிள் எண்ட்ரி எனும் ஆங்கில நூலை நாகர்கோயில் வழக்கறிஞர் பி.சிதம்பரம் என்பவர் எழுதியுள்ளார். மக்களுக்கு தொண்டு செய்வதே தமது பிறவியின் பயன் எனக் கருதுபவர் பெரியார் என்று எம்.ஆர்.ஜெயகர் இரண்டாவது சுயமரியாதை மாநாட்டிற்கு தலைமை ஏற்றுப் பேசினார்.

பெரியார் ரஷ்யாவிற்கு சென்றபோது அந்த அரசு பெரியாருக்கு கவுரவ குடியுரிமை வழங்கியது. நம் நாட்டின் சமூக பொருளாதார விடுதலைக்கு திராவிடர் கழகம்தான் தேவை என்று டெல்லி இந்திய தொழிலாளர் மன்றப் பொதுச் செயலாளர் வி.பி.கார்னிக் கூறினார். மலாய் தமிழர்கள் முன்னேற்றத்திற்கு பெரியாரே காரணம் என சீனப் பேராசிரியர் சி.எஸ்.லீ. கூறியுள்ளார். தோழர் ஈ.வெ.ரா. வில்லியம் மாரிஸ் போன்றவர் என ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பேராசிரியர் பெசில்மேத்யூ கூறியுள்ளார்.

1929இல் மலையாள உயர்நீதிமன்ற நீதிபதி எம்.கோவிந்தன் அவர்கள் குறிப்பிடுகையில், எனது நாட்டில் சுயமரியாதை விதைகள் முளைக்கச் செய்தவர் பெரியார் தான் என்றார். பாகிஸ்தானுக்கு முதல்வராக ஆக ஜின்னா அவர்களுக்கு எவ்வளவு உரிமையுள்ளதோ அவ்வளவு உரிமை தமிழ்நாட்டிற்கு முதல்வராக ஆக பெரியாருக்கு

உண்டு என சர். சி.பி.இராமசாமி அய்யர் உரைத்தார். தமக்கு சரியென்று பட்டதை கூறும் காரணத்தால் பெரியார் மீது மாறாத அன்பு கொண்டேன் என டாக்டர் பி.சுப்பராயன் கூறுகிறார். பெரியார் ஒரு போதும் அகில இந்திய தலைமைக்கு ஆசைப்படவில்லை என ஆர்.கே.சண்முகம் செட்டியார் கூறுகிறார். முதல் சுயமரியாதை மாநாட்டில் கொடியேற்றி உரையாற்றினார் நீதிக்கட்சி பி.டி.ராஜன்.

1925 காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டின்போது தனியே அங்கேயே கூட்டப்பட்ட பார்ப்பனரல்லாதார் மாநாட்டின் தலைவர் கோவை டி.ஏ.ராமலிங்கம், ஈரோட்டுப் பாதை எனும் இதழின் ஆசிரியர் சண்முக வேலாயுதம் ஆவார்கள். பெரியாரின் நிதி நில உதவி கொண்டு திருச்சியில் அரசினர் கல்லூரியை (பெரியார் ஈ.வெ.ரா.கல்லூரி) தொடங்கி வைத்தவர் முதலமைச்சர் எம்.பக்தவத்சலம். சோவியத் யூனியனில் பெரியார் இருந்த மூன்று மாதங்களே என் முழுமையான வாழ்வுக் காலமாகும் என்று பெரியார் கூறியதாய் பதிவு செய்த சோவியத் எழுத்தாளர் லூட்மில்லா. மண்டைச் சுரப்பை உலகு தொழும் என பெரியாரைப் புகழ்ந்து பாடியவர் பாரதிதாசன். பெரியார் எதில் தலையிட்டாலும் ஒரே ஓட்டம்தான் என எழுதியவர் மணவை ரெ.திருமலைசாமி. பெரியார் கண்ட கிராமம் தோன்றினால் கிராம மக்கள் விடுதலை பெற்றவர்கள் ஆவார்கள் என்று குன்றக் குடி அடிகளார் கூறினார். முதலாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முதல் சர்வாதிகாரி செ.தெ.நாயகம். குடியரசு இதழை மலேயா, சிங்கப்பூரில் பரப்பிட பெரியார் அனுப்பிய நம்பிக்கைக்குரிய தொண்டர் நாகை என்.பி.காளியப்பன்.

தந்தை பெரியாரின் அண்ணன் பெயர் ஈ.வெ.கிருஷ்ணசாமி ஆகும். 1931ஆம் ஆண்டு வீரன் பகத்சிங் பற்றி குடியரசு ஏடு தலையங்கத்தில், பலன் என்ன ஆச்சு என்பதைவிட, மனிதன் தன் கடமையை செய்தமை பாராட்டுக்குரியது என்று எழுதியது. பெரியாருக்கு மருத்துவம் செய்த டாக்டர்கள் ராமச்சந்திரா, பட், ஜான்சன் ஆகியோருக்கு தஞ்சையில் பாராட்டு விழா 18.8.1973 அன்று நடைபெற்றது. மொழிப்போரில் முதல் பரிணாமம் நடராசன் ஆவார்.



1937இல் விடுதலையை நேர்மையுள்ளவர்களுக்கு நீலோற்பல மாலையாகவும், விஷமக்காரர்களுக்கு விரியன் பாம்பாகவும் வர்ணித்து எழுதியவர் கி.ஆ.பெ.விசுவநாதம் ஆவார்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் சிறையிலிருந்தபோது நேரில் சென்று “என் கண்ணே! ஒன்றும் கவலைப்படாதே, உனக்கு ஒரு குறையும் இல்லை” என பெரியார் ஆற்றுப்படுத்தினார். கி.வீரமணி மட்டும் இசையாதிருந்தால் விடுதலையை வாரப் பத்திரிகையாக நடத்த முடிவு செய்து இருந்தேன் என்று பெரியார் குறிப்பிட்டுள்ளார். 22.4.1973 அன்று நாகையில் காயாரோகணம் பிள்ளையின் உருவச் சிலையை பெரியார் திறந்து வைத்தார். 2.12.1970இல் தமிழக சட்டமன்றத்தில் அனைத்து ஜாதியினர் அர்ச்சகராகும் சட்டம் நிறைவேறியது. “நமக்காகவே வாழ்கிறார்” பெரியார் என்று புகழ்ந்து பாராட்டிப் பேசினார் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

கோயிலில் திருநீறை வாங்க மறுத்த கல்வி அமைச்சர் நெடுஞ்செழியனை பெரியார் பலே பலே என்று பாராட்டினார். கோயிலில் தேவதாசி முறை கூடாது என சட்ட மசோதா கொண்டு வந்ததை கடுமையாக எதிர்த்தவர் சத்தியமூர்த்தி அய்யர் ஆவார். 9.12.1955இல் பெரியாரை சந்தித்து உரையாடிய வங்கத்து அறிஞர் ஹரிகிருஷ்ண கோகலே ஆவார். 23.7.1972இல் கருநாடக சட்டமன்றத்தில் நம் மாநில கிராமங்கள் ஒவ்வொன்றிற்கும் பெரியார் தேவை என்று பேசிய கருநாடக சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேகராவார். உத்திரப்பிரதேச உயர்நீதிமன்றம் பெரியாரின் இராமாயணப் பாத்திரங்கள் எனும் நூலை பறிமுதல் செய்தது செல்லாதது என்று 20.1.1971இல் தீர்ப்பளித்தது.

27.12.1972இல் கலைமகள் இதழ் சார்பில் பெரியாரை திரு.பாணன் என்பவர் பேட்டி கண்டார். 1954இல் பர்மாவில் பெரியாரைச் சந்தித்து உரையாடிய பவுத்த மதத் தலைவர் மல்லலசேகரா என்பவராவார். அறிஞர் அண்ணா, “இந்த அரசே தந்தை பெரியாருக்குக் காணிக்கை” என்றார். நான் பாராட்டுகிற இராமன் சீதாராமனோ தசரதராமனோ அல்ல என்றவர் காந்தியடிகள்.

மராட்டியத்தில் ஜோதிராவ்பூலே இயக்கம் போல் தமிழ்நாட்டில் பெரியார் இயக்கம் ஊக்கம் கொடுத்தது என்று 5.10.1929இல் நெல்லூரில் நடைபெற்ற மாநாட்டில் பி.இராமச்சந்திர ரெட்டி பேசினார். சென்னை ராபின்சன் பூங்காவில் 1950இல் பெரியாரின் 73ஆவது பிறந்த நாள் விழாவில் எஸ்.இராமநாதன் அவர்கள் பேசும்போது, அன்று காங்கிரசை தாக்கி பெரியார் கூறியது அனைத்தும் இன்று எல்லா மக்களும் சரி என்று ஏற்கும்படி ஆகிவிட்டது எனப் பேசினார். இந்நிகழ்ச்சியில் பேசிய சண்டே அப்சர்வர் பி.பாலசுப்பிரமணியம் பெரியார் தான் திராவிடர் தலைவர், அவரால் தான் திராவிடருக்கு விடுதலை கிடைக்கும் என்று பேசினார். பேரறிஞர் அண்ணா பெரியாரைப் பற்றிக் கூறும்போது, ஓய்வறியா உழைப்பு, ஒப்புவமை இல்லாத சிந்தனை, உண்மைகளை அஞ்சாது வெளியிடும் துணிவு தன்னலம் சிறிதும் புகாத தன்னேரில்லாத பொதுத்தொண்டு என்று பெரியாரைப் பற்றி புகழ்ந்து கூறினார். விடுதலை ஏட்டை பார்ப்பனரல்லாதார் நோய் அகற்றும் சஞ்சீவி என்று வழிகாட்டி இதழில் க.அ.புன்னைமுத்து எழுதினார்.

அறிஞர் அண்ணா தந்தை பெரியாரை, முதன் முதல் சந்தித்த ஊர் திருப்பூர். ஆண்டு 1938 ஆகும். தமிழர் தலைவர் கி.வீரமணி தந்தை பெரியாரை முதன் முதல் சந்தித்த ஊர் கடலூர். ஆண்டு 1944. புரட்சிக் கவிஞர் பெரியாரை 1928இல் மாயவரத்தில் சந்தித்தார். விருதுநகர் நகராட்சித் தலைவராக இருந்த வி.வி.இராமசாமி அவர்கள் நகராட்சி எல்லைக்குள் உள்ள உணவு விடுதிகளில் பார்ப்பனர் - சூத்திரர் வேறுபாடு காட்டியதை துணிச்சலுடன் நீக்கினார். டபிள்யூ.பி.ஏ. சவுந்தரபாண்டியன் ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது ஆதிதிராவிடர்களை ஏற்றிச் செல்ல மறுக்கும் பேருந்துகள் உரிமம் ரத்து செய்யப்படும் என்று 1930இல் ஆணையிட்டார்.

1938இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட பெரியாரை உடன் விடுதலை செய்யாததால் நாட்டில் ஏற்படும் விளைவுகளுக்கு முதல்வர் ராஜாஜியே பொறுப்பு என்று விருதுநகரிலிருந்து எம்.எஸ்.பி.செந்தில்குமார் நாடார் - பெ.சி.சிதம்பர நாடார் ஆகியோர் முதல்வருக்கு தந்தி கொடுத்தனர். பெரியாரைக்

காணவரும் போதெல்லாம் வி.வி.இராமசாமி அவர்கள், குலோப்ஜாமை கொண்டுவந்து கொடுப்பது வழக்கம். பெரியாருக்கு மிகவும் பிடித்த நொறுக்குத்தீனி எள்ளுருண்டை.

■

**இயல் எட்டு**

# சமகாலத்தவர்

## - அ. இறையன் -

**1) தந்தை பெரியார் இராமசாமி அவர்களைத் தோழர் என்று விளித்த பெண்மணி யார்?**

அ) நாகம்மையார் ஆ) மணியம்மையார்

இ) கண்ணம்மாள் ஈ) சின்னத்தாய் அம்மாள்

**2) காங்கிரஸ் இயக்கத்தில் பெரியாரை உறுப்பினராக்கப் பெரிதும் முயன்றவர்**

அ) மகாத்மா காந்தி ஆ) அம்பேத்கர்

இ) இராஜகோபாலாச்சாரியார் ஈ) சர்.ஏ.டி.பன்னீர்செல்வம்

**3) கேரள ஈழவர் சமுதாயத்தின் சார்பில் நன்றிக் கடமையாகப் பெரியாரின் ஒரு நாள் வாழ்க்கையைத் திரைப்படமாக்கியவர்**

அ) பிரியதர்சன் ஆ) இராமுகாரியத்

இ) ஷாகி ஈ) நெடுமுடி

**4) பெரியார் அவர்களை "என்னுடைய நாத்திக ஆசான்" என்று குறிப்பிட்ட வங்காளப் பேரறிஞர்**

அ) தார்குண்டே ஆ) கோரா இ) கோவூர் ஈ) எம்.என்.ராய்

**5) இங்கிலாந்திலிருந்து ரஷ்யாவுக்குச் செல்லப் பெரியாருக்குப் பெருந்துணை நின்ற இங்கிலாந்து தொழிற்சங்கத் தலைவர்**

அ) மோரிஸ் ஆ) சக்லத் வாலா

இ) ஸ்டுவேர்ட் ஈ) ஜேம்ஸ்வில்லியம்

6) **பெரியாரின் ஈரோட்டு இல்லத்திற்கு வந்த நேரு குடும்ப உறுப்பினர்?**

அ) இந்திரா காந்தி ஆ) ஜவகர்லால் நேரு
இ) மோதிலால் நேரு ஈ) விஜயலட்சுமி பண்டிட்

7) **நாட்டு அரசியல் பற்றிப் பம்பாயில் 6.1.40 அன்று பெரியாருடன் கலந்தாய்வு செய்த முஸ்லிம் லீக் முன்னோடி**

அ) முகமது அலி ஜின்னா ஆ) தவுலத்கான்
இ) முகமது இஸ்மாயில் ஈ) சேக் அப்துல்லா

8) **என் வீட்டில் எந்தப் பக்கம் நான் திரும்பினாலும் என் கண்ணில் படவேண்டியது பெரியாரின் உருவப்படமே என்று கூறியவர்**

அ) கருணாநிதி ஆ) சர்.ஏடி.பன்னீர் செல்வம்
இ) அறிஞர் அண்ணா ஈ) ராஜாஜி

9) **தமிழன் தொடுத்த முதலாம் இந்தி எதிர்ப்புப் போரில் பெரியாருக்கு உறுதுணையாகப் பங்கேற்ற தமிழ்க்கடல் என்று அழைக்கப்பட்ட சைவப் பேரறிஞர்**

அ) ஞானியார் ஆ) ஊரன் அடிகள்
இ) குன்றக்குடி அடிகளார் ஈ) மறைமலையடிகள்

10) **“பெரியாரின் பேச்சைக் கேட்டு அவரைச் சரியாகப் பின்பற்றுங்கள்” என்று தாம் சென்னை வந்த போது நீதிக்கட்சித் தலைவர்களிடம் அறிவுறுத்திய வடபுலத்தைச் சேர்ந்த அண்ணல்**

அ) அண்ணல் அம்பேத்கர் ஆ) பாபு ஜெகஜீவன்ராம்
இ) கான்சிராம் ஈ) காந்தி

11) **பெரியாரின் படத்தைத் திறந்து வைத்துப் “பெரியாரில் பெரியார்” என்று உரையாற்றிய அஞ்சா நெஞ்சன்**

அ) குடந்தை ஜோசப் ஆ) எம்.என்.நஞ்சையா
இ) பட்டுக்கோட்டை அழகிரி ஈ) அறிஞர் அண்ணா

12) **திண்டுக்கல்லில் நடந்த பெரியார் சிலை திறப்பின்போது பெரியாருக்கு ஒரு (புதிய) காசினை அன்பளிப்பாக வழங்கிய விஞ்ஞானி**

அ) பி.பி.நாயுடு ஆ) ஜி.டி.நாயுடு
இ) அப்துல்கலாம் ஈ) சி.வி.ராமன்

13) **“நீங்கள் இருக்க வேண்டிய முதலமைச்சர் பதவியில் நான் இருக்க நேரிட்டு விட்டது” என்று பெரியாரிடம் நேரில் கூறிய மாகாண முதலமைச்சர் யார்?**

அ) கருணாநிதி ஆ) காமராசர்
இ) பக்தவத்சலம் ஈ) ஓமாந்தூர் ராமசாமியார்

14) **பொதுவுடைமைக் கருத்துகளைப் பரப்புவதில் பெரியாருக்குப் பெருந்துணை புரிந்த சிந்தனைச் சிற்பி**

அ) மாணிக்க வேலர் ஆ) ஜீவானந்தம்
இ) கே.டி.கே.தங்கமணி ஈ) மா. சிங்காரவேலர்

15) **'குலக்கல்வித் திட்டம்' கொண்டு வந்த இராஜகோபாலாச் சாரியாரைத் தொடர்ந்து பெரியாரின் ஆதரவுடன் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஆனவர்**

அ) காமராசர் ஆ) அண்ணாதுரை
இ) ஓமாந்தூர் ராமசாமியார் ஈ) பக்தவத்சலம்

16) **1938 ஆம் ஆண்டில் திருச்சியிலிருந்து சென்னைக்கு வந்த இந்தி எதிர்ப்புப் படை முன்னோடிகளில் ஒருவரான மூதாட்டி**

அ) டாக்டர் எஸ்.தர்மாம்பாள்
ஆ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்
இ) வ.ப.தாமரைக்கண்ணி அம்மையார்
ஈ) முத்துலட்சுமி ரெட்டி

17) **"இவ்வாண்டில் பிறக்கும் குழந்தைகட்கெல்லாம் முத்தையா என்று பெயரிடுங்கள்" என்று 1928 இல் பெரியாரால் குறிப்பிடப்பட்ட அமைச்சர் முத்தையா (முதலியார்) வின் சாதனை**

அ) வகுப்புரிமை ஆணையைப் பிறப்பித்தமை
ஆ) கப்பலோட்டியமை
இ) இந்துத் திருமணச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்தமை
ஈ) அரசியல் சட்டம் செய்தமை

18) **பெரியாருக்கு ஸ்ரீமுகம் எழுதிய அத்வைத மதத்தலைவர் யார்?**

அ) காஞ்சி சங்கராச்சாரியார் ஆ) சிருங்கேரி சங்கராச்சாரியார்
இ) பூரி சங்கராச்சாரியார் ஈ) துவாரகா சங்கராச்சாரியார்

19) **1957 இல் தமிழ்நாட்டில் பெரியார் நடத்திய அரசியல் சட்ட எரிப்புக் கிளர்ச்சியின் அருமைபற்றிச் சிறப்பாகச் செய்தி வெளியிட்ட புகழ் பெற்ற அமெரிக்க இதழ்**

அ) நியூயார்க் டுடே ஆ) வாஷிங்டன் போஸ்ட்
இ) டைம்ஸ் ஈ) நியூயார்க் டைம்ஸ்

20) **இந்திய முதல் பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டில் அய்க்கிய முன்னணி அமைத்து அதன் வெற்றிக்குப் பாடுபட்ட பெரியாரை நன்றியோடு பாராட்டிய அனைத்திந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்**

அ) எஸ்.ஏ.டாங்கே ஆ) வொய்.டபிள்யூ.மேத்யூ
இ) ரணதிவே ஈ) ஏ.கே.கோபாலன்

**21) பெரியார் காங்கிரஸ் கட்சியிலிருந்த போதே இந்து அறநிலையச் சட்டம் கொண்டு வந்து பெரியாரின் பாராட்டைப் பெற்ற நீதிக் கட்சி முதல்வர்**

அ) சுப்பராயலு ரெட்டியார்
ஆ) பனகல் அரசர் ராமராய நிங்காரு
இ) கே.வி.ரெட்டி
ஈ) பொப்பிலி அரசர்

**22) காங்கிரஸ் கட்சியினராக இருந்தாலும் முதலாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரப் பங்காற்றிய பன்மொழிப் புலவர்**

அ) மறைமலையடிகள் ஆ) அப்பாதுரை
இ) நாவலர் சோமசுந்தர பாரதியார் ஈ) மறைதிருநாவுக்கரசு

**23) 1944 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழிசை பற்றிப் பெரியார் உரையாற்றிய கூட்டத்தின் தலைவர்**

அ) கா.சுப்ரமணியபிள்ளை ஆ) தண்டபாணி தேசிகர்
இ) வெள்ளை வாரணனார் ஈ) வ.சுப.மாணிக்கம்

**24) மூத்த தேசியத் தலைவராக இருந்தும் தமக்குப்பின் காங்கிரசில் சேர்ந்த பெரியாரை “என் தலைவர்” என்று குறிப்பிட்டவர்**

அ) திரு.வி.க. ஆ) வரதராஜுலுநாயுடு
இ) ராஜாஜி ஈ) வ.உ..சிதம்பரனார்

**25) பெரியாரைப்பற்றிப் ‘பகுத்தறிவின் சிகரம்’ என்னும் நூல் எழுதிய பொதுவுடைமைக் கட்சியின் முன்னோடி**

அ) பாலதண்டாயுதம் ஆ) ஏ.எஸ்.கே.
இ) ஜீவா ஈ) மணலி கந்தசாமி

**26) முதலாம் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க சாதி மறுப்புத் திருமணமாக இசை வேளாளர் குடியில் பிறந்த பெண்மணியைப் பெரியார் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்ட பட்டதாரி**

அ) குத்தூசி குருசாமி ஆ) நெ.து.சுந்தரவடிவேலு
இ) பட்டுக்கோட்டை அழகிரி ஈ) வெள்ளையன்

**27) தங்கள் கட்சியின் அனைத்திந்தியத் தலைவராகப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று தந்தை பெரியாரை வேண்டிக் கொண்ட ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கம் எது?**

அ) இந்திய கம்யூனிஸ்டு ஆ) பார்வர்டு பிளாக்
இ) இந்தியக் குடியரசுக்கட்சி ஈ) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

**28) "என்னால் மூன்று மணி நேரத்திற்கு மேலும் இவருடைய பேச்சு ஒன்றை மட்டும்தான் கேட்டுக் கொண்டிருக்க முடியும்" என்று பெரியாரைப் பாராட்டிய பார்ப்பன எழுத்தாளர் யார்?**

அ) கி.வா.ஜ. ஆ) வ.ராமசாமி

இ) எஸ்.எஸ்.வாசன் ஈ) கல்கி கிருஷ்ணமூர்த்தி

**29) பெரியாரின் தொடக்க கால நடவடிக்கைகளில் தீவிரமாய்ப் பங்காற்றிய அவரின் குடும்பத்துப் பெண் உறுப்பினர்**

அ) மரகதம் ஆ) பொன்னுத்தாய்

இ) எஸ்.ஆர்.கண்ணம்மாள் ஈ) ஈ.வெ.கிருஷ்ணசாமி

**30) தேவதாசி முறை ஒழிப்புச்சட்டத்தை முன்மொழிந்து பெரியாரின் பாராட்டுதலை ஈட்டிய பெண்மணி**

அ) டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி ஆ) மீனாம்பாள்

இ) நீலாம்பிகை ஈ) தர்மாம்பாள்

**31) 'இந்தியாவின் ரூசோ' என்று பெரியாரைப் பாராட்டிய நீதிக்கட்சி முன்னோடி**

அ) ஆர்.கே.சண்முகம் ஆ) லட்சுமணசாமி (முதலியார்)

இ) ஆர்க்காடு இராமசாமி (முதலியார்) ஈ) டி.எம்.நாயர்

**32) 1948 இல் பார்ப்பன எதிர்ப்பாளராக மாறிவிட்டார் என்ற காரணம் கொண்டு தூத்துக்குடி மாநாட்டில் தந்தை பெரியாரால் திறந்து வைக்கப்பட்ட படம் எவருடையது?**

அ) வ.உ..சி. ஆ) திரு.வி.க.

இ) வரதராஜுலு நாயுடு ஈ) காந்தியார்

**33) "சம்பூகனைக் கொன்ற அந்த ராமனை நான் ஏற்கவில்லை" என்று தந்தை பெரியாரைச் சந்தித்துக் கூறிய புகழ்வாய்ந்த காந்தியவாதி யார்?**

அ) இராஜாஜி ஆ) வினோபாவே

இ) ஜெயப்பிரகாஷ் நாராயண் ஈ) நேரு

**34) "பெரியார் லெனினைப் போல மாபெரும் தலைவராக வரமாட்டார் என்று தப்புக் கணக்குதான் போட்டுவிட்டேன்" என்று திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒப்புதல் வாக்குமூலம் தந்த பொதுவுடைமை முன்னோடி.**

அ) பி.ராமமூர்த்தி ஆ) ஏ.எஸ்.கே.

இ) ஏ.கே.கோபாலன் ஈ) ப. ஜீவானந்தம்

**35) 1968 இல் கார்ல் மார்க்ஸ் உடன் பெரியாரை ஒப்பிட்டுப் பிளிட்ஸ் இதழின் கடைசிப் பக்கத்தில் கட்டுரை எழுதிய அறிஞர்**

அ) கே.ஏ.அப்பாஸ் ஆ) ஆர்.கே.நாராயணன்
இ) குஷ்வந்த்சிங் ஈ) ஏ.ஜி.நூரானி

**36) ஆச்சாரியாரியார் 'குலக் கல்வித் திட்ட' எதிர்ப்பு வழிநடைப் படைக்குத் தலைவராக பெரியாரால் அமர்த்தப்பட்டவர்**

அ) பட்டுக்கோட்டை அழகிரி ஆ) நீடாமங்கலம் அ.ஆறுமுகம்
இ) சி.இலக்குவனார் ஈ) டி.டி.வீரப்பா

**37) பெரியாரின் மேலை நாட்டுச் சுற்றுப்பயணத்தின் போது உடன் சென்ற சுயமரியாதை இயக்க முன்னோடி யார்?**

அ) நாகை.காளியப்பன் ஆ) மணியம்மையார்
இ) ஏ.பி.தர்மலிங்கம் ஈ) எஸ்.இராமநாதன்

**38) தாம் எழுதிய 'பொன்மொழி' நூல்பற்றிய வழக்கில் தந்தை பெரியார் அபராதம் செலுத்த மறுத்ததால் அவரது 'வேன்' ஏலம் விடப்பட்டபோது அதை ஏலத்தில் எடுத்துத்திரும்ப 'வேனை'ப் பெரியாரிடம் அளித்த பெருந்தகையாளர் யார்?**

அ) தஞ்சை பஞ்சநாதம் பிள்ளை ஆ) டி.டி. வீரப்பா
இ) கா.மா.குப்புசாமி ஈ) நீடாமங்கலம் அ.ஆறுமுகம்.

**39) 'தமிழர் தலைவர்' என்ற பெரியாரின் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதிய தமிழ் அறிஞர் யார்?**

அ) சி. இலக்குவனார் ஆ) சாமி.சிதம்பரனார்
இ) குத்தூசி குருசாமி ஈ) சாமி.கைவல்யம்

**40) வருங்காலத்தில் தந்தை பெரியாரின் சிலைக்கு இருபக்கத்திலும் தாளமுத்து, நடராசன் ஆகியோரின் சிலைகளும் நிறுவப்படும் என்று இந்தி எதிர்ப்பு போரின் போது இரங்கலுரை ஆற்றியவர்**

அ) அறிஞர் அண்ணா ஆ) சர் ஏ.டி.பன்னீர்செல்வம்
இ) பட்டுக்கோட்டை அழகிரி ஈ) காமராஜர்

**41) பெரியாரைச் சந்தித்து நேர்காணல் செய்த இந்திய மத்திய அமைச்சர்**

அ) கே.டி.கோசல்ராம் ஆ) வெங்கட்ராமன்
இ) டாக்டர் சந்திரசேகர் ஈ) கிருஷ்ணமேனன்

**42) முதலாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது ஆதரவு காட்டிய பார்ப்பனத் தலைவர்**

அ) இராஜாஜி ஆ) பி.இராமமூர்த்தி
இ) வி.வி.கிரி ஈ) பரவஸ்து இராஜகோபால ஆச்சாரி





43) **பெரியாருக்கு 'யுனெஸ்கோ' மன்றத்தின் சார்பாக வழங்கப்பட்ட பட்டயத்தை நேரில் வழங்கிய நிகழ்ச்சியின் தலைவர்**

அ) வெங்கட்ராமன்

ஆ) சி.சுப்ரமணியம்

இ) டி.டி.கிருஷ்ணமாச்சாரி

ஈ) இந்திய அமைச்சர் திரிகுணாசென்

44) **பெரியாரின் நடவடிக்கைகளை ஆதரித்து அவரைக் கோவையில் சந்தித்து இறைச்சி உணவு சாப்பிட்ட ஆந்திராவைச் சேர்ந்த காந்தியாரின் பார்ப்பனச் சீடர் யார்?**

அ) கோரா ஆ) வி.வி.கிரி

இ) விஜயரெட்டி ஈ) நரசிம்மராவ்

45) **வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்ட பெரியாரும் மற்ற வீரர்களும் ஒழிய வேண்டும் என்று திருவாங்கூர் பார்ப்பனர்களால் நடத்தப்பட்ட சத்துரு சங்கார யாகம் முடிந்ததும் இறந்து போனவர் யார்?**

அ) திருவாங்கூர் ராணி ஆ) திருவாங்கூர் திவான்

இ) திருவாங்சுர் இளவரசர் ஈ) திருவாங்கூர் மன்னர்

46) **"சுதேசமித்திரன்" இதழை நோக்கி "வாயை அடக்குங்கள்" என்று அய்யா சீறியமைக்குக் காரணமாய் அமைந்த அவ்விதழின் கண்டனம் எவர் பற்றியது?**

அ) காந்திஜி ஆ) வடபுலத் தலைவர் பாபு ஜெகஜீவன்ராம்

இ) நேத்தாஜி ஈ) கக்கன்

47) **"புத்தருக்குப் பின் இந்தியாவில் பெரும் சமுதாயப் புரட்சியை உருவாக்கியவர் பெரியாரே" என்று 'ஆனந்த விகடன்' மணியனிடம் தெரிவித்த மூத்த அமெரிக்கப் போராசிரியர்**

அ) இங்கர்சால் ஆ) ஜான் ரெய்லி

இ) ஜான் கென்னடி ஈ) கிம்பர்ட் ஜோன்

48) **பெரியாரால் 1948-இல் நடத்தப்பட்ட ஈரோட்டு மாநாட்டில் திராவிட நாடு படத்தைத் திறந்து வைத்தவர் யார்?**

அ) ஜீவானந்தம் ஆ) மறைமலையடிகள்

இ) வரதராஜுலு நாயுடு ஈ) திரு.வி.கலியாண சுந்தரனார்

**49) பெரியார் என்னும் சொல்லைப் பல முறை பயன்படுத்தி இராவண காவியம் என்னும் அரிய இலக்கியத்தைப் படைத்தவர் யார்?**

அ) புலவர் குழந்தை ஆ) புரட்சிக் கவிஞர்
இ) புதுவை சிவப்பிரகாசம் ஈ) சுரதா

**50) "அறியாமைப் பாலைவனத்தைப் பகுத்தறிவுப் பழத்தோட்ட மாக்கியவர் பெரியார்". இவ்வாறு பிரெஞ்சு ஆசிரியர் சர்.சே அவர்கள் முன்னிலையில் 16.10.55 இல் கூறியவர் யார்?**

அ) குத்தூசி குருசாமி ஆ) ஏ.பி.சனார்த்தனம்
இ) இரா.நெடுஞ்செழியன் ஈ) அறிஞர் அண்ணா

**51) "மக்களைப் பகுத்தறிவாளராக மாற்றும் பணியில் மற்ற நடிகர்களுக்கு வழிகாட்டியவர்" என்று பெரியாரால் பாராட்டப்பட்டவர் யார்?**

அ) டி.கே.சண்முகம் ஆ) என்.எஸ்.கிருஷ்ணன்
இ) நடிகவேள் எம் ஆர்.இராதா ஈ) குலதெய்வம் இராஜகோபால்

**52) சமுதாயச் சீர்திருத்தங்களில் பெரியார் அளவு கடந்த ஆர்வம் கொண்டதால் காங்கிரசிலிருந்து விலகிவிட்டார் என்று அறிக்கை வெளியிட்ட தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர்**

அ) முத்துசாமி முதலியார் ஆ) கக்கன்
இ) காமராஜர் ஈ) டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு

**53) சுயமரியாதை இயக்க நிறுவனர் பெரியாரை நீதிக்கட்சியின் தலைவராக ஆக்கவேண்டுமென்று விடாப்பிடியாய் முயன்ற நீதிக்கட்சி முதலமைச்சர்**

அ) பொப்பிலி அரசர் ஆ) பனகல் அரசர்
இ) சுப்புராயலு ரெட்டி ஈ) பி.முனுசாமி நாயுடு

**54) ராஜ துவேஷக் குற்றத்திற்காகச் சிறை சென்று மீண்ட பெரியாரை ஈரோட்டில் சந்தித்த தேசிய சமதர்மவாதி**

அ) அசோக் மேத்தா ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயண்
இ) ராம்மனோகர் லோகியா ஈ) ஆச்சார்ய கிருபளானி

**55) பெரியாரின் கொள்கைகளை நூல்களின் துணை கொண்டு எண்ணற்ற நீண்ட கட்டுரைகளாகக் "குடிஅரசு" இதழில் எழுதிப் பயன்கூட்டிய கைவல்ய சாமியாரின் இயற்பெயர் என்ன?**

அ) கருப்பசாமி ஆ) முத்துசாமி
இ) பொன்னுசாமி ஈ) வெள்ளைச்சாமி

**56) தீப்பொறி பறக்கப் பேசும் வெண்தாடி வேந்தரைக் காணும் பேறு கல்கத்தாவிற்குக் கிடைக்கிறது என்று 1944 இல் எழுதிய ஆங்கில இதழ்**

அ) அமிர்தபஸார் பத்ரிகா ஆ) பிளிட்ஸ்
இ) வான்கார்டு ஈ) கேரவன்

**57) "லெனின் செய்து வைத்த வேலைகளை அடிப்படையாகக் கொண்டு நமது நாட்டில் காரியங்களைச் செய்வதற்குச் சுயமரியாதை இயக்கமே சிறந்ததாகும்" என்று கூறிய மலையாள அறிஞர்**

அ) தோழர் கே.அய்யப்பன் ஆ) கிருஷ்ணநாயர்
இ) கேளப்பன் ஈ) டி.கே.மாதவன்

**58) "மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்பதில் சந்தேகமில்லை" என்று எழுதிய புகழ் வாய்ந்த பார்ப்பன எழுத்தாளர் யார்?**

அ) எஸ்.எஸ்.வாசன் ஆ) வ.இராமசாமி
இ) இராஜாஜி ஈ) ஏ.எஸ்.கே.

**59) "முதல் முறை அவர் பிரசங்கத்தைக் கேட்டபோது நான் பிரமித்துப் போனேன்" என்று எழுதிய புகழ் வாய்ந்த 'ரசிகமணி' எழுத்தாளர் யார்?**

அ) ஆ.முத்துசிவன் ஆ) மயிலை சிவமுத்து
இ) டி.கே.சிதம்பரநாத முதலியார் ஈ) அ.மு.பரமசிவானந்தம்

**60) பெரியாரின் கொள்கையைப் பரப்புவதில் தீவிரம் காட்டிய நாகர்கோவில் வழக்கறிஞர் பி.சிதம்பரம் தீண்டாமைபற்றி எழுதிய ஆங்கில நூல்:**

அ) டெம்பிள் எண்ட்ரி ஆ) டெம்பிள் இன் தமிழ்நாடு
இ) டெம்பிள் சிட்டி–மதுரை ஈ) தஞ்சாவூர் டெம்பிள்ஸ்

**61) "திரு ஈ.வெ.ராமசாமியார் சட்டசபைகளைப் பற்றியோ, அரசாங்கத்தைப் பற்றியோ கவலை கொள்ளாமல் ஏழை மக்களுக்குத் தொண்டு செய்வதே தமது பிறவியின் பயன் என்று கருதியிருப்பவர்" இச்சொற்களை மொழிந்த இரண்டாம் மாகாண சுயமரியாதை மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய தேசியவாதி யார்?**

அ) ஆர்.கே.சண்முகம் ஆ) எம்.ஆர்.ஜெயகர்
இ) டபிள்யூ.பி.ஏ.சவுந்தரபாண்டியன் ஈ) பி.டி.ராஜன்

**62) பெரியார் எந்த நாட்டிற்குச் சென்றிருந்த போது அவ்வரசால் கவுரவக் குடியுரிமை அவருக்களிக்கப்பட்டது?**

அ) ஜெர்மனி ஆ) இலங்கை

இ) ரஷ்யா ஈ) இங்கிலாந்து

**63) "தொன்னாட்டைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான பார்ப்பனர் அல்லாத மக்களின் சமூக - பொருளாதார விடுதலைக்குத் தக்க பலம் பொருந்திய சிறந்த ஆயுதம் திராவிடர் கழகம் என்னும் பெரியாரின் பேரியக்கமே" என்று கணித்த டில்லி இந்தியத் தொழிலாளர் மன்றப் பொதுச்செயலாளர்**

அ) வி.பி.கார்னிக் ஆ) இராமானுஜம்

இ) ரணதிவே ஈ) ஜவகர்லால் நேரு

**64) "மலாய் நாட்டில் வாழும் தமிழர்கள் அதிதீவிர முன்னேற்றம் அடைந்திருப்பதற்குக் காரணம் தமிழகப் பெரியார்தான்" என்றுரைத்த சீனப்பேராசிரியர்:**

அ) சி.எஸ்.லீ ஆ) சன்யாட்சென்

இ) மா.சே.துங் ஈ) சிங்–ஹி–ஹவாங்டி

**65) "தோற்றத்தில் மட்டுமின்றி உள்ளுணர்ச்சியிலும் தோழர் ஈ.வெ.ரா. வில்லியம் மாரிஸ் போன்றவரே" என்று ஒப்பிட்ட ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர்:**

அ) பெசில் மேத்யூ ஆ) லாஸ்கி

இ) பி.டால்டன் ஈ) சில்வர்மேன்

**66) "எனது நாட்டில் சுயமரியாதை விதைகள் முளை கண்டிருந்த தானது பெரியாரால் போற்றிப் புரக்கப்பட்டது" என்று 1929-இல் கூறிய மலையாள உயர் நீதி மன்ற நீதிபதி யார்?**

அ) கோவிந்த மேனன் ஆ) கோவிந்த ரெட்டி

இ) எம்.கோவிந்தன் ஈ) சஞ்ஜீவ மேனன்

**67) "பாகிஸ்தானுக்கு முதலமைச்சர் ஆவதற்கு ஜின்னாவிற்கு எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு உரிமை தமிழ்நாட்டின் தனி ஆட்சியில் பெரியாருக்கு உண்டு" என்றுரைத்த திருவாங்கூர் திவான்**

அ) ராகவய்யா ஆ) மாதவய்யா

இ) ஆர்.கே.சண்முகம் செட்டியார் ஈ) சர்.சி.பி.ராமசாமி அய்யர்

**68) "தமக்குச் சரி என்று பட்டதை வலியுறுத்தி வந்த ஒரு காரணத் தாலேயே நான் அவரிடம் மாறாத அன்பு கொண்டேன்" என்று மொழிந்த முன்னாள் முதல்அமைச்சர்**

அ) டாக்டர் பி.சுப்பராயன் ஆ) பக்தவச்சலம்

இ) குமாரசாமி ராஜா ஈ) காமராஜர்

**69) "பெரியார் அகில இந்தியத் தலைமை என்னும் பேராசையால் எக்காலத்திலும் இழுக்கப்பட்டதே இல்லை" என்ற கூற்றுக்கு உரிய பார்ப்பனர் அல்லாத இயக்கம் சார்ந்த பொருளாதார மேதை**

அ) சந்திரசேகர்

ஆ) ஆர்.கே.சண்முகம் செட்டியார்

இ) ஜான்மேத்யூ

ஈ) டாக்டர் பா. நடராஜன்

**70) சுயமரியாதை முதல் மாகாண மாநாட்டில் கொடியேற்றி உரையாற்றிய நீதிக்கட்சி முன்னோடி**

அ) ஏ.டி.பன்னீர்செல்வம் ஆ) என்.ஆர். சாமியப்பா

இ) வரதராஜுலு நாயுடு ஈ) பி.டி.ராஜன்

**71) 1926-இல் நடந்த முதலாம் பார்ப்பனர் அல்லாதார் மாநாட்டின் தலைவர் யார்?**

அ) ஏ.பி.பாத்ரோ ஆ) ஏ.எல்.முதலியார்

இ) டாக்டர் சி.நடேசன் ஈ) அண்ணாமலை செட்டியார்

**72) 1925-இல் காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டின் போது தனியே அங்கேயே கூட்டப்பட்ட பார்ப்பனரல்லாதார் மாநாட்டின் தலைவர்:**

அ) பி.ராமராய நிங்கார் ஆ) கோவை டி.ஏ.ராமலிங்கம்

இ) எம்.ஆர்.காளிங்கராயர் ஈ) ஏ.சி.பார்த்தசாரதி நாயுடு

**73) பெரியாரியல் பரப்பும் நோக்கத்துடன் ஈரோட்டுப் பாதை என்னும் இதழை நடத்தியவர்**

அ) அ.பொன்னம்பலனார் ஆ) ந.இராமநாதன்

இ) சண்முக வேலாயுதம் ஈ) பாரதிதாசன்

**74) பெரியாரின் நிதி - நில உதவி கொண்டு திருச்சியில் நிறுவப்பட்ட அரசினர் கல்லூரியைத் திறந்துவைத்த முதலமைச்சர்**

அ) எம்.பக்தவத்சலம் ஆ) காமராசர்

இ) ராஜாஜி ஈ) அறிஞர் அண்ணா

**75) "சோவியத் ஒன்றியத்தில் நான் கழித்த அந்த மூன்று மாதங்களே என் முழுமையான வாழ்வுக் காலமாகும்" என்று பெரியார் கூறக்கேட்ட சோவியத் எழுத்தாளர்**

அ) மிஸ்.மேயோ ஆ) லூட் மில்லா

இ) கார்பசேவ் ஈ) லெனின்

**76) "மண்டைச் சுரப்பை உலகு தொழும்" என்று அய்யா பற்றி அன்றே பாடியவர்**

அ) கண்ணதாசன் ஆ) பாவலர் பாலசுந்தரம்

இ) பாரதிதாசன் ஈ) பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

**77) "பெரியார் எதில் தலையிட்டாலும் பிறர் பின் தொடர முடியாத ஒரே ஓட்டம்தான்" இவ்வாறு எழுதிய 'நகரதூதன்' ஆசிரியர்**

அ) மணவை ரெ.திருமலைசாமி ஆ) குத்தூசி குருசாமி

இ) கி.வீரமணி ஈ) அறிஞர் அண்ணா

**78) "பெரியார் கண்ட கிராமம் தோன்றினால் கிராமமக்கள் விடுதலை பெற்றவர்களாவார்கள்" இக்கூற்று எவருடையது?**

அ) ஞானியார் ஆ) மறைமலை அடிகள்

இ) கிருபானந்த வாரியார் ஈ) குன்றக்குடி அடிகளார்

**79) முதலாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முதலாம் சர்வாதிகாரி:**

அ) செ.தெ.நாயகம் ஆ) தாளமுத்து

இ) நடராஜன் ஈ) இராஜேந்திரன்

**80) 'குடி அரசு' இதழை மலேயா சிங்கப்பூர் நாடுகளில் பரப்பும் முகத்தான் பெரியாரால் அனுப்பி வைக்கப்பட்ட நம்பிக்கைக் குரிய தொண்டர்**

அ) க.இராஜாராம் ஆ) சிங்கப்பூர் எஸ்.கோபால்

இ) நாகை என்.பி.காளியப்பன் ஈ) கே.சாரங்கபாணி

**81) பெரியாரின் சுயமரியாதை நடவடிக்கைகளில் உற்ற துணையாக விளங்கிய ஈ.வெ.கிருஷ்ணசாமி அவர்கள் பெரியாருக்கு என்ன உறவு?**

அ) அண்ணன் ஆ) தம்பி இ) மைத்துனர் ஈ) சிற்றப்பா

**82) "ஒரு மனிதன் தன் கடமையைச் செய்தானா? இல்லையா? என்பதுதான் கேள்வியே தவிர, பலன் என்ன ஆச்சுது என்பது அல்ல". 1931 குடிஅரசு தலையங்கத்தில் இடம் பெற்றிருந்த இக் கூற்று எவரைப் பற்றியது?**

அ) லாலா லஜபதிராய் ஆ) சுகதேவ்

இ) ராஜகுரு ஈ) வீரன் பகத்சிங்



**83) அய்யாவின் நோய்க்குப் பண்டுவம் பார்த்த மருத்துவர்கள் ராமச்சந்திரா, பட்,ஜான்சன் ஆகிய மூவருக்கும் 18.8.73 அன்று நடந்த பாராட்டு எந்த ஊரில் இடம் பெற்றது?**

அ) தஞ்சாவூர் ஆ) திருச்சி இ) வேலூர் ஈ) ஈரோடு

**84) முதலாம் மொழிப் போராட்டத்தின்போது முதலில் சாவைத் தழுவியவர்:**

அ) ராஜேந்திரன் ஆ) நடராசன்
இ) மஜித் ஈ) தாளமுத்து

**85) "நேர்மையுள்ளவர்களுக்கு நீலோற்பல மாலையாகவும் விஷமக் காரர்களுக்கு விரியன் பாம்புக் குட்டியாகவும் விடுதலை காட்சியளிக்கும்" என்று 1937இல் குறிப்பிட்டவர் யார்?**

அ) பெரியார் ஆ) க.அ.புன்னைமுத்து
இ) கி.ஆ.பெ.விசுவநாதம் ஈ) பண்டித முத்துசாமி பிள்ளை

**86) "என் கண்ணே! ஒன்றும் கவலைப்படாதே, உனக்கு ஒரு குறையும் இல்லை" என்று சென்னைச் சிறையில் எவரைப் பெரியார் ஆற்றுப் படுத்தினார்?**

அ) எம்.கே.தியாகராஜ பாகவதர்
ஆ) கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்
இ) எம்.ஆர்.ராதா
ஈ) வி.நாராயணசாமி

**87) "தோழர் . . . . . . . இந்த முழு நேரத் தொண்டிற்கு இசையாதிருந் தால் தினசரி விடுதலையை வாரப் பத்திரிகையாக நடத்த முடிவு செய்திருந்தேன்". பெரியாரின் இப்பாராட்டு மொழியில் கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ) ஆனைமலை நரசிம்மன் ஆ) குருசாமி
இ) கோ.இமயவரம்பன் ஈ) கி.வீரமணி

**88) 22.4.73 அன்று நாகையில் பெரியார் திறந்து வைத்த உருவச் சிலைக்கு உரியவர்**

அ) காயாரோகணம் பிள்ளை ஆ) மறைமலை அடிகள்
இ) திரு.வி.க. ஈ) காயிதே மில்லத்

**89) 2.12.1970 அன்று சென்னைச் சட்டமன்றத்தில் எவ்வகை எதிர்ப்பும் இன்றி நிறைவேறியது எந்தச் சட்டம்?**

அ) நில உச்சவரம்புச் சட்டம்
ஆ) தமிழில் அர்ச்சனை செய்யும் சட்டம்
இ) (அனைத்துச் சாதியினர்க்கும் வாய்ப்பளிக்கும்) அர்ச்சகர் சட்டம்
ஈ) தமிழ் ஆட்சி மொழியாகும் சட்டம்

**90) “நமக்காகவே வாழ்கின்றவர்” - படத்துறை வேலுமணி இல்ல மணவிழாவில் பெரியாரை இவ்வாறு பாராட்டியவர்:**

அ) எம்.ஜி.ஆர். ஆ) ஏ.வி.எம்.

இ) மதுரை சோமு ஈ) நேஷனல் பெருமாள்

**91) கோயில் பிரசாதமாகத் தமக்கு அளிக்கப்பட்ட திருநீற்றை அணியாமல் தவிர்த்த கல்வி அமைச்சர் நெடுஞ்செழியனுக்கு அய்யா கொடுத்த பாராட்டு மொழி:**

அ) பலே பலே ஆ) நன்று நன்று

இ) மிக்க மகிழ்ச்சி ஈ) அருமை அருமை

**92) தேவதாசி முறை ஒழிப்பு மசோதா சென்னைச் சட்டமன்றத்தில் வந்த போது இந்து மதத்தின் பெயரால் அதை மிகக் கடுமையாக எதிர்த்த தேசியப் பார்ப்பன வகுப்பினர் யார்?**

அ) ராஜாஜி ஆ) சத்தியமூர்த்தி

இ) டி.எஸ்.எஸ்.ராஜன் ஈ) சாம்பமூர்த்தி

**93) 9.12.1955 அன்று பெரியாரைச் சந்தித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்த வங்காள அறிஞர்:**

அ) கோபால கிருஷ்ணகோகலே ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) சுபாஸ் சந்திர போஸ் ஈ) ஹரி கிருஷ்ண கோகலே

**94) “நம் மாநிலத்தின் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பெரியார் தேவை என்று 23.7.72 இல் கர்நாடகச் சட்டமன்றத்தில் பேசிய உறுப்பினர்:**

அ) தேவராஜ்அர்ஸ் ஆ) எஸ்.எம்.சந்திரசேகர்

இ) நிஜலிங்கப்பா ஈ) சி.வி.இராமன்

**95) உத்திரப்பிரதேச உயர்நீதி மன்றம் பெரியாரின் . . . . . . . . . . . என்னும் நூலைப் பறிமுதல் செய்தது செல்லாது என்று 20.1.1971-இல் தீர்ப்பளித்தது. கோடிட்ட இடத்தை நிரப்புக**

அ) பாரத ஆராய்ச்சி ஆ) கடவுளும் மனிதனும்

இ) மனிதனும் மதமும் ஈ) இராமாயணப் பாத்திரங்கள்

**96) 27.12.1972-இல் எந்த இதழின் சார்பில் பெரியாரைத் திரு. பாணன் என்பவர் பேட்டி கண்டார்?**

அ) ஆனந்த விகடன் ஆ) நவசக்தி

இ) கலைமகள் ஈ) தேசபக்தன்

**97) பர்மாவில் 1954-ஆம் ஆண்டில் பெரியாரைச் சந்தித்து உரையாடிய பவுத்த மதத் தலைவர் யார்?**

அ) தலாய்லாமா　　ஆ) மல்லல சேகரா
இ) ராஜ்போஜ்　　ஈ) சித்தார்த்

**98) "இந்த அரசே தந்தை பெரியார் அவர்கட்குக் காணிக்கை"என்று தமிழகச் சட்டமன்றத்தில் அறிவித்த முதல்வர்**

அ) காமராசர்　　ஆ) பக்தவத்சலம்
இ) அறிஞர் அண்ணா　　ஈ) எம்.ஜி.ராமச்சந்திரன்

**99) " நான் பாராட்டுகிற இராமன் சீதாராமனோ தசரத ராமனோ அல்ல" என்று திராவிடர் கழக இராமாயண எதிர்ப்பின் போது குறிப்பிட்ட தலைவர்**

அ) சோமசுந்தர பாரதியார்　　ஆ) காந்தியடிகள்
இ) அம்பேத்கர்　　ஈ) பாபு ஜெகஜீவன்ராம்

**100) மராட்டியத்தில் ஜோதிராவ் புலேயின் சத்தியஷோடக் இயக்கத்தைப் போலத் தமிழ்நாட்டில் சமூக சீர்திருத்தத்திற்கு ஈ.வெ.ராமசாமி நாயக்கர் அளித்த உணர்ச்சி நிறைந்த ஊக்கம் நம்மை நாமே அன்பு பாராட்டுவதற்கு வழி செய்தது என்று நெல்லூரில் 5.10.1929 அன்று நடைபெற்ற பார்ப்பனரல்லாதார் மாநாட்டில் உரைத்தவர் யார்?**

அ) பி.இராமச்சந்திர ரெட்டி　　ஆ) சர்.ஏ.டி.பன்னீர்செல்வம்
இ) ஆர்.கே.சண்முகம்　　ஈ) சவுந்தரபாண்டியனார்

**101) "உலக அறிவு இயக்கப் பிரச்சாரத் தலைவர்களில் மிகச்சிறந்தவர் நம் பெரியார்தாம். அவர் காங்கிரசில் இருக்கும்போதே காங்கிரஸ் காரர்கள் வெள்ளையனுடைய ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முற்பட்ட போது பெரியார் அதை விட முக்கியமாகக், காங்கிரஸில் தேசியம் என்ற பெயரால் ஒரு கூட்டம் மக்களை ஏய்த்து இந்நாட்டு மக்களை முட்டாள்களாக்கி இந்நாட்டின் சர்வ சுதந்திரங்களையும் தாங்களே அனுபவித்து வருவதை எதிர்த்து அதன் காரணமாகக் காங்கிரசை விட்டு வெளியே வந்தார். அவர் எந்தக் கொள்கையை 30 ஆண்டுகளுக்கு முன் கண்டித்தாரோ அதே கொள்கையை இன்று எல்லா மக்களும் சரி என்று கண்டிக்கும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டுவிட்டது" என்று சென்னை ராபின்சன் பூங்காவில் 1950 இல் நடைபெற்ற தந்தை பெரியார் 73-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் உரையாற்றியவர் யார்?**

அ) எஸ்.இராமநாதன்　　ஆ) ந.இராமநாதன்
இ) கி.வீரமணி　　ஈ) இரா.நெடுஞ்செழியன்

**102) "பெரியார் அவர்கள் திராவிட நாட்டின் தலைவர். அவர் ஒருவருக்குத்தான் திராவிடநாட்டின் இறுதி விடுதலைப் போரை நடத்தி வெற்றிகாணும் சக்தி இருக்கிறது. அவரின் தலைமையின் கீழ்தான் திராவிட மக்கள் ஒன்று திரண்டு திராவிடத்தைச் சுரண்டிக் கொழுத்துவரும் பார்ப்பனீய எதேச்சதிகாரத்தை ஒழிக்க முடியும். எல்லாத் திராவிடர்களும் அவர் தலைமையின் கீழ் ஒன்று திரள வேண்டும்" என்று சென்னை ராபின்சன் பூங்காவில் 1950 இல் நடைபெற்ற தந்தை பெரியார் 73 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் உரையாற்றியவர் யார்?**

அ) குடந்தை வி. சின்னத்தம்பி
ஆ) 'சண்டேஅப்ஸர்வர்' பி.பாலசுப்ரமணியம்
இ) ஏ.வி.பி.ஆசைத்தம்பி
ஈ) தினத்தந்தி சி.பா.ஆதித்தனார்

**103) "ஓய்வறியாத உழைப்பு, ஒப்புவமை இல்லாத சிந்தனை, உண்மைகளை அஞ்சாது வெளியிடும் துணிவு, தன்னலம் சிறிதும் புகாத தன்னேரில்லாத பொதுத் தொண்டு" என்று பெரியாரைப் பற்றிக் கூறியவர் யார்?**

அ) அண்ணாதுரை ஆ) காமராசர்
இ) கி.வீரமணி ஈ) வி.பி.சிங்

**104) 'விடுதலை' யைப் பார்ப்பனரல்லாதார் அடிமை வாழ்க்கை நோயகற்றும் சஞ்சீவி என்றே கூறுவோம். 'விடுதலை' என்ற சஞ்சீவி ஒவ்வொரு பார்ப்பனரல்லாதார் கைவசமும் இருக்கவேண்டியதவசியம்' - மேற்கண்ட மதிப்புரை 1935 ஆகஸ்ட் மாதச் சுயமரியாதை இயக்க இதழ் ஒன்றில் வெளிவந்தது. இந்த மதிப்புரையை எழுதிய ஆசிரியர் பெயர், அவர் பத்திரிகையின் பெயர் இவைகள் யாவை?**

அ) மணவை திருமலைசாமி – 'நகர தூதன்'
ஆ) க.அ.புன்னைமுத்து –' வழிகாட்டி'
இ) எம்.என் முத்துக் குமாரசாமிப் பாவலர் – 'சீர்திருத்தம்'
ஈ) கோ.சாரங்கபாணி – 'தமிழ் முரசு'

**105) அறிஞர் அண்ணா தந்தை பெரியாரை முதல் முதலில் சந்தித்த ஊர் எது?**

அ) மயிலாடுதுறை ஆ) திருப்பூர்
இ) சென்னை ஈ) தஞ்சை





106) **அறிஞர் அண்ணா தந்தைபெரியாரை முதன்முதலில் சந்தித்த ஆண்டு எது?**

அ) 1937 ஆ) 1938 இ) 1939 ஈ) 1940

107) **திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி முதன்முதலில் பெரியாரைச் சந்தித்த ஊர் எது?**

அ) கடலூர் ஆ) திருப்பாதிரிப்புலியூர்
இ) புதுப்பேட்டை ஈ) நெல்லிக்குப்பம்

108) **அவ்வூரில் அவர் சந்தித்த ஆண்டு எது?**

அ) 1943 ஆ) 1944 இ) 1945 ஈ) 1946

109) **புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தந்தை பெரியார் அவர்களை முதன் முதலில் எந்த ஊரில் சந்தித்தார்?**

அ) மாயவரம் (இன்றைய மயிலாடுதுறை)
ஆ) புதுச்சேரி
இ) காரைக்கால்
ஈ) கடலூர்

110) **புரட்சிக் கவிஞர் தந்தை பெரியாரை முதன்முதலில் சந்தித்த ஆண்டு எது?**

அ) 1926 ஆ) 1927 இ) 1928 ஈ) 1929

111) **தம் பரப்பில் உள்ள உணவு விடுதிகளில் பார்ப்பனர் – சூத்திரர் இவர்களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டதைத் துணிச்சலுடன் நீக்கிய விருதுநகர் நகராட்சித் தலைவர் யார்?**

அ) எம்.எஸ்.பி. செந்திற் குமார நாடார்
ஆ) பெ.சி.சிதம்பர நாடார்
இ) வி.வி.இராமசாமி
ஈ) எம்.எஸ்.பி.நாடார்

112) **ஆதிதிராவிடர்களை ஏற்றிச் செல்ல மறுக்கும் உந்துவண்டிகளின் உரிமம் 'ரத்து' செய்யப்படும் என்று 1930 இல் ஆணை பிறப்பித்த இராமநாதபுரம் மாவட்ட நாட்டாண்மைக் கழக (ஜில்லா போர்டு) தலைவர் யார்?**

அ) ஊ.பு.அ. சவுந்தரபாண்டியன்
ஆ) உடையப்பா
இ) எஸ்.இராமச்சந்திரன் சேர்வை
ஈ) எஸ்.இராமசாமி நாயுடு

**113) 1938 இந்திப் போராட்டத்தின்போது கைது செய்யப்பட்ட தந்தை பெரியாரை உடனே விடுதலை செய்யவேண்டும் என்றும், அப்படி விடுதலை செய்யாவிட்டால் நாட்டில் ஏற்படும் விளைவுகளுக்குச் சென்னை மாகாண முதல் அமைச்சர் சி. இராஜகோபால ஆச்சாரியும் பிரதம காரியதரிசியுமே பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும் விருதுநகரிலிருந்து தந்தி அனுப்பிய நீதிக்கட்சி - சுயமரியாதை இயக்க முன்னோடிகள் மூவர் யார்?**

அ) எம்.எஸ்.பி.செந்தில்குமார நாடார் – பெ.சி.சிதம்பர நாடார் – வி.வி.சண்முக நாடார்

ஆ) எஸ்.உத்தண்டன் – கூ.பொ.மகாலிங்கம் – டி.சி.கே. மாரியப்பா

இ) வா.அ.மு.வெள்ளையப்பன் – தொண்டர் எஸ். இரத்தினம்; சம்பந்தம்

ஈ) எம்.எஸ்.பி.நாடார் – ஆ.வ.பழனியப்பன் – வ.பெ. வடிவேல்

**114) பெரியாரைக் காணவரும்போதெல்லால் குலோப்ஜாமை மறக்காமல் கொண்டு வந்து அவரிடம் அளிப்பவர் யார்?**

அ) வி.வி.இராமசாமி
ஆ) குடந்தை வி.சின்னத்தம்பி
இ) செ.தெ.நாயகம்
ஈ) ஓ.வி.கே.நீர்காத்தலிங்கம்

**115) பெரியாருக்கு மிகப் பிடித்தமான நொறுக்குத் தீனி எது?**

அ) எள்ளுருண்டை
ஆ) ஒம்பிட்டு (போளி)
இ) மைசூர்பாகு
ஈ) முறுக்கு

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.அ | 2.இ | 3.ஆ | 4.ஈ | 5.ஆ | 6.இ | 7.அ | 8.ஆ | 9.ஈ | 10.அ |
| 11.இ | 12.ஆ | 13.ஈ | 14.ஈ | 15.அ | 16.ஆ | 17.அ | 18.ஆ | 19.ஈ | 20.அ |
| 21.ஆ | 22.இ | 23.அ | 24.ஈ | 25.ஆ | 26.அ | 27.இ | 28.ஈ | 29.இ | 30.அ |
| 31.இ | 32.ஈ | 33.ஆ | 34.ஈ | 35.அ | 36.ஆ | 37.ஈ | 38.அ | 39.ஆ | 40.அ |
| 41.இ | 42.ஈ | 43.ஈ | 44.அ | 45.ஈ | 46.ஆ | 47.ஆ | 48.ஈ | 49.அ | 50.ஆ |
| 51.இ | 52.ஈ | 53.அ | 54.ஆ | 55.இ | 56.இ | 57.அ | 58.ஆ | 59.இ | 60.அ |
| 61.ஆ | 62.இ | 63.அ | 64.அ | 65.அ | 66.இ | 67.ஈ | 68.அ | 69.ஆ | 70.ஈ |
| 71.அ | 72.ஆ | 73.இ | 74.அ | 75.ஆ | 76.இ | 77.அ | 78.ஈ | 79.அ | 80.இ |
| 81.அ | 82.ஈ | 83.அ | 84.ஆ | 85.இ | 86.ஆ | 87.ஈ | 88.அ | 89.இ | 90.அ |
| 91.அ | 92.ஆ | 93.ஈ | 94.ஆ | 95.ஈ | 96.இ | 97.ஆ | 98.இ | 99.ஆ | 100.அ |
| 101.அ | 102.ஆ | 103.அ | 104.ஆ | 105.ஆ | 106.ஆ | 107.அ | 108.ஆ | 109.அ | 110.இ |
| 111.இ | 112.அ | 113.அ | 114.அ | 115.அ | | | | | |

இயல் ஒன்பது

# பட விளக்கம்

## – கலி. பூங்குன்றன் –

1) கள்ளுக்கடை மறியலைத் தொடர்ந்து நடத்துவதா, கைவிடுவதா என்பதை முடிவு எடுக்கும் அதிகாரம் ஈ.வெ.ரா.வின் மனைவி மற்றும் அவரது தங்கையின் கைகளில் இருக்கிறது என்று சொன்ன தலைவர் யார்?

2) பெரியாரும், பெரியாரின் 'விடுதலை' ஏடும் என் அன்பார்ந்த எதிரிகள் என்று கூறிய தலைவர் யார்?

3) 1940-இல் பம்பாயில் நாட்டுப் பிரிவினை குறித்தும் சமுதாய, மத இயல் குறித்தும் பெரியார் விரிவாக ஆலோசனை நடத்தினார். அந்தப் பேச்சு வார்த்தையில் பங்கு கொண்டவர்கள் யார் - யார்?

4) ருசியாவில் லெனின் அவர்களுடன் இணைந்து பணியாற்றியவர்; சிறந்த பகுத்தறிவுவாதி; கல்கத்தாவில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் தந்தை பெரியாரை எனது நாத்திக ஆசான் என்று அவைக்கு அறிமுகப் படுத்தியவர் - அவர் யார்?

5) தமக்குப் பிறகு இயக்கத்திற்கு ஏற்பாடு என்கிற பெயரில் பெரியார் யாரைத் தெரிந்தெடுத்தார்?

6) பச்சைத் தமிழர் என்று தந்தை பெரியாரால் அறிமுகப்படுத்தப்பட்டவர் - தமிழகத்தில் கல்விப் புரட்சிக்குக் காரியமாக இருந்தவர். அவர் யார்?

7) தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாறான "தமிழர் தலைவர்" என்ற நூலை எழுதியவர் யார்?

8) 1938 முதல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் முதல் சர்வாதிகாரியாக தந்தை பெரியாரால் நியமிக்கப்பட்டவர் யார்?

9) இந்த அரசே பெரியாருக்குக் காணிக்கையாக்கப்பட்ட அரசுதான் என்று தமிழகச் சட்டப் பேரவையில் அறிவித்த முதல் அமைச்சர் யார்?

10) தந்தை பெரியாரின் கட்டளையை ஏற்றுத் தமது வழக்கறிஞர் தொழிலைத் துறந்து பத்திரிகை, இயக்கப் பொறுப்புகளை ஏற்க முன் வந்தவர் யார்?

11) சோவியத் ருசியா சென்றபோது பெரியாரின் உடை மற்றும் தோற்றம் எப்படி இருந்தது?

12) பெரியார் மேல் நாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, அவர் நடத்தி வந்த 'குடிஅரசு' இதழ் மற்றும் இயக்கப் பொறுப்புகளைக் கவனித்துக் கொண்ட பெண்மணி யார்?

13) சென்னை வேப்பேரியில் இயக்கத் தலைமை இடத்துக்கும், பத்திரிகை நடத்துவதற்கும் ஒரு இடத்தை வாங்குவதற்கு (இன்றைய பெரியார் திடல்) உற்ற துணையாகப் பெரியாருக்கு இருந்தவர் யார்?

14) 'வைக்கம் வீரர்' என்ற பட்டத்தைப் பெரியாருக்கு அளித்தவர் யார்?

15) தந்தை பெரியாரின் கருத்துக்களைக் கவிதை வடிவமாக்கித் தந்ததோடு அல்லாமல், பெரியார் கண்ட திராவிடர் கழகத்திலேயே தம்மை ஒப்படைத்துக் கொண்டு பாடுபட்ட கவிஞர் யார்?

16) பெரியார் சோவியத்து நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது 1932 மே தினத்தன்று பெரியாருக்கு அறிமுகப்படுத்தப்பட்ட தலைவர் யார்?

17) நான் ஏற்றுக் கொண்டிருக்கும் சுயமரியாதைக் கருத்துகளுக்கு ஞானகுரு பெரியார் ஈ.வெ.ராமசாமி என்று காந்தியாரிடம் ஒரு பொருளாதார நிபுணர் கூறினார். அவர் யார்?

18) தந்தை பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைச் சட்டப்படி அமல்படுத்திய தமிழக முதல் அமைச்சர் யார்?

19) நாயக்கர் (பெரியார்) தமிழ்நாட்டில் எல்லாத் தலைவர்களையும்விடப் பெரிய தியாகி; அவர் உருவப் படத்தைக் காலை, மாலை, பகல் முதலிய வேளைகளில் வணங்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன் - இப்படிச் சொன்னவர் யார்?

20) தந்தை பெரியாரால் துவக்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் முதல் தலைவர் யார்?

21) தந்தை பெரியாரின் 'விடுதலை' நாளேடு தமிழர்களின் இல்லங்கள் என்பதற்கு அறிவிப்புப் பலகை என்று சொன்னவர் யார்?

22) நீங்கள் முதலமைச்சராக இருக்க வேண்டிய நாற்காலியில் நான் உட்கார்ந்திருக்கிறேன் என்று பெரியாரிடம் சொன்ன முதல் அமைச்சர் யார்?

23) மருத்துவக் கல்லூரியில் சமஸ்கிருதம் படித்திருக்க வேண்டும் என்றிருந்த நிபந்தனையை நீக்க வேண்டும் என்று பெரியார் எழுதியதை ஏற்று, அவ்வாறே ஆணை பிறப்பித்த சென்னை மாகாணப் பிரதமர் யார்?

24) 1954-இல் பெரியார் நடத்திய புத்தர் மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டுத் தலைவர்கள் யார் யார்?

25) மகத் என்ற இடத்தில் தாழ்த்தப்பட்டவர்களை அழைத்துக் கொண்டு குளத்தில் இறங்கி நீர் குடிக்கும் உரிமைப் போராட்டத்துக்குத் தூண்டுகோல் பெரியார் நடத்திய வைக்கம் போராட்டம்தான் என்று கூறிய தலைவர் யார்?

26) மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்துவதாக நாடாளுமன்றத்தில் அறிவித்தபோது பெரியார் பெயரை மறக்காமல் நினைவுபடுத்திய பிரதமர் யார்?

27) இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியார் சிறையில் இருந்தபோது அவர் தலைமை தாங்க இருந்த நீதிக்கட்சி மாநாட்டுக்குத் தலைமை தாங்கி, தமது தோளுக்குப் போட்ட மாலையைப் பெரியாரின் தாளுக்குப் போடுகிறேன் என்று கூறிப், பெரியார் உருவப்படத்துக்கு அந்த மாலையைச் சூட்டிய நீதிக் கட்சித் தலைவர் யார்?

28) தமிழ்நாட்டின் ரூசோ என்று பெரியாரைக் கணித்தவர் யார்?

29) தந்தை பெரியாரின் 'குடிஅரசு' இதழில் வேத, சாஸ்திர புராண இதிகாச வண்டவாளங்களை ஆணித்தரமாக வெளிப்படுத்திய எழுத்தாளர் யார்?

30) பெரியார் அனுப்பிய வேலைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு ஆதரவு அளித்த நீதிக்கட்சியைச் சேர்ந்த தமிழக முதல் அமைச்சர் யார்?

31) பெரியாரை ஈரோட்டுக்கு வந்து வீட்டில் சந்தித்து மீண்டும் காங்கிரஸ் கட்சியில் சேருமாறு வற்புறுத்தினார் ஒருவர். அவர் யார்?

32) இந்தப்படம் எந்த நிகழ்ச்சியைக் குறிக்கிறது?



33) இந்தப் படம் காட்டும் குறிப்பு என்ன?



34) இது - எந்த ஊர்? எந்த இடம்?



35) ஈரோடு சமதர்மத் திட்டத்தைத் தயாரிப்பதற்குப் பெரியாருக்கு உற்ற துணையாக இருந்த தோழர் எவர்?

36) தந்தை பெரியாரின் தனிச் செயலாளராகக் கடைசி 15 ஆண்டு காலம் இருந்தவர் - இவர் யார்?

37) தந்தை பெரியாரின் பச்சைஅட்டைக் "குடிஅரசு" இதழே எனது குருநாதன் என்று சொன்ன கலைஞர் யார்?

38) பட விளக்கம் தருக



39) இவர் பெயரை வீடுதோறும் ஒருவருக்கு வைக்க வேண்டும் என்று பெரியார் கூறினார் - அவர் யார்?

40) தந்தை பெரியாரைச் சந்தித்த ஈழத் தந்தை யார்?

41) பகைவர்க்குங்கூட அவர் பார்ப்பனரல்லாதாராயிருந்தால் உதவுவார் என்று பெரியாரைப்பற்றிக் கூறிய தமிழ் அறிஞர்.

42) தந்தை பெரியாரின் 'குடிஅரசு' இதழுக்குப் பதிப்பாளராக இருந்த பெண் யார்?

43) பட விளக்கம் தருக



44) பெரியார் கொடுத்த கருத்துரைப்படி திராவிடர் கழகக் கொடியை உருவாக்கியவர் யார்?

45) பெரியார் இயக்கத்தில் அஞ்சா நெஞ்சன் என்ற அடைமொழியோடு கடைசிவரை கட்டுப்பாட்டுடன் கருஞ்சட்டை வீரராக இருந்து மறைந்தவர் - அவர் யார்?

46) பெரியாரின் அணுக்கச் சீடராக இருந்தவர் - சிவகங்கை தாலுகா போர்டு தலைவராகவும் இருந்தவர் - இது ஒரு பார்ப்பனருக்கு உத்தியோகம் தரக் கையொப்பம் போடாத கை என்று கூறியவர். அந்த நீதிக் கட்சித் தலைவர் யார்?

47) பெரியார் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியின் விளக்கம் தருக!



48) பெரியாரின் மேலை நாட்டுச் சுற்றுப் பயணத்தின்போது உடன் சென்றவர் யார்?

49) பெரியாரின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்ட குடியரசுத் தலைவர் யார்?

50) குடும்ப நலம் தொடர்பாகத் தந்தை பெரியாரைச் சந்தித்துக் கருத்துக்களைக் கேட்டறிந்தவர் யார்?

51) தந்தை பெரியாருக்கு அரசு மரியாதை அளித்து அடக்கம் செய்த முதலமைச்சர் யார்?


52) பட விளக்கம் தருக



53) இவர் பெயரால் தந்தை பெரியார் ஒரு மன்றமே அமைத்தார் – அவர் யார்?

54) தந்தை பெரியாரின் சமூக நீதிக் கொள்கைக்கு வெறும் ஆணையாக இல்லாமல் சட்ட வடிவம் கொடுத்து, அரசியல் சட்டத்திருத்தம் வரை கொண்டுவரக் காரணமாயிருந்த முதலமைச்சர் யார்?

1)



காந்தியார்

2)



சி.ராஜகோபாலாச்சாரியார்
(ராஜாஜி)

3)



'சண்டே அப்சர்வர்' பாலசுப்பிரமணியம், டி.ஏ.வி. நாதன்,
முகம்மதலி ஜின்னா, தந்தை பெரியார், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

4)



எம்.என். ராய்

5)



ஈ.வெ.ரா. மணியம்மையார்

6)



கு. காமராசர்

7)



சாமி. சிதம்பரனார்

8)



சி.டி.நாயகம்

9)



சி.என். அண்ணாதுரை

10)



கி. வீரமணி

11)




மாஸ்கோவில் பெரியார்

12)




ஈ.வெ.ரா. நாகம்மையார்

13)




ஜி.டி. நாயுடு

14)



திரு. வி. கலியாணசுந்தரனார்

15)



புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

16)




ஸ்டாலின்

17)



ஆர்.கே. சண்முகம்

18)



எம்.ஜி. இராமச்சந்திரன்





19) 

வ.உ. சிதம்பரனார்

20) 

ஊ.பு.அ. சவுந்தரபாண்டியன்

21) 

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

22)



ஓமாந்தூர் ராமசாமி ரெட்டியார்

23)



பி. ராமராய நிங்கர் (பனகல் அரசர்)

24)



டாக்டர் மல்லல சேகரா, ராஜ்போஜ்

25)



டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

26)



விசுவநாத் பிரதாப்சிங் (வி.பி. சிங்)

27)



ஏ.டி. பன்னீர்செல்வம்

28)



டாக்டர் ஏ. இராமசாமி முதலியார்

29) 

சாமி. கைவல்யம்

30) 

ராவு ஸ்வேதா சலபதி ராமகிருஷ்ண ரெங்கராவ் (பொப்பிலி அரசர்)

31) 

ஜெயப்பிரகாஷ் நாராயண்

32) 

தஞ்சாவூரில் பெரியாருக்கு எடைக்கு எடை ரூபாய் நாணயம் வழங்கப்பட்ட நிகழ்ச்சி (3.11.1957)

33)



கிரீஸின் தலைநகரான ஏதென்ஸில் சாக்ரடீஸ், பிளாட்டோ ஆகியோரின் சிலைகளின் முன்னர் ஈ.வெ.ரா. குழுவினர் 1932

34)



வைக்கத்தில் தீண்டாமையை எதிர்த்துப் பெரியார் போராட்டம் நடத்திய வீதி

35)



மா.சிங்காரவேலர்

36)



புலவர் கோ. இமயவரம்பன்

37)



கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்

38)



சென்னையில் பெரியாரின் இறுதிப் பேருரை – வேனில் அமர்ந்தபடி பெரியார் பேசினார் – கூட்டத்தில் மலேசியத் திராவிடர் கழகத் தலைவர் "திருச்சுடர்" கே.ஆர். இராமசாமி பேசிக் கொண்டிருக்கிறார்.

39)



எஸ். முத்தையா முதலியார்

40)



செல்வநாயகம்

41)



மறைமலை அடிகளார்

42) 

தந்தை பெரியாரின் தங்கை
எஸ்.ஆர். கண்ணம்மாள்


43) 

தந்தை பெரியார் பிறந்த இல்லம்

44) 


ஈரோடு சண்முகவேலாயுதம்

45)



பட்டுக்கோட்டை கே.வி. அழகிரிசாமி

46)



சிவகங்கை எஸ். இராமச்சந்திரன்

47)



ரெங்கூனில் உலகப் புத்தர் மாநாட்டில் டாக்டர் அம்பேத்கர்,
தந்தை பெரியார், ஈ.வெ.ரா. மணியம்மையார் (5.12.1954)

48) 

எஸ். இராமநாதன்

49) 

கியானி ஜெயில்சிங்

50) 

மத்திய அமைச்சர் டாக்டர் சந்திரசேகர்

51)



மு. கருணாநிதி

52)



தந்தை பெரியாரின் குடும்பம் – பெரியார், பெரியாரின் தாயார் சின்னத்தாய் அம்மையார், சகோதரர் ஈ.வெ. கிருஷ்ணசாமி, அண்ணி ரெங்கநாயகி அம்மாள், மைத்துனர் ராமசாமி, தங்கை எஸ்.ஆர். கண்ணம்மாள், தங்கை மகள் அம்மாயி, அண்ணன் மகன் ஈ.வெ.கி சம்பத் முதலியோர்.

53)



நடிகவேள் எம்.ஆர். இராதா

54)



செல்வி ஜெ. ஜெயலலிதா



# இனிவரும் உலகம்?



70 ஆண்டுகளுக்கு முன்னால் 1942ஆம் ஆண்டு செய்யாறு அருகில் உள்ள திருவொத்திபுரத்தில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரை





# முன்னுரை

இன்றைய உலகமானது, பழங்கால உலகம் என்பதிலிருந்து நாளுக்கு நாள் எப்படி மாறுதலடைந்து வந்திருக்கிறது? இனி சில நூற்றாண்டுகளில் எப்படிப்பட்ட மாறுதலை அடையும்? என்பனவாகிய விஷயங்கள் பகுத்தறிவுவாதிகளுக்குத்தான் ஏதாவது தெரியக்கூடுமே தவிர, புராண இதிகாச பண்டிதர்கள் என்பவர்களுக்கு அதுவும் நம் "கலை காவிய"ப் பண்டிதர்களுக்கு தெரிவது சுலபமான காரியமல்ல.

ஏனெனில், நமது பண்டிதர்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாத புராணங்களையும், ஆராய்ச்சிக்குப் பொருந்தாத இலக்கியங் களையும், பிரத்தியட்ச அனுபவத்திற்கு சம்பந்தப்படுத்த முடியாத கலை காவியங்களையும் படித்து உருப்போட்டு, அவைகளிலிருப் பவைகளை அப்படியே மனதில் பதிய வைத்துக் கொண்டிருப்ப தோடல்லால், அவைகளில் சம்பந்தப்பட்ட கதை கற்பனைகளை உண்மையாக நடந்தவைகள் என்றும் நம்பிக் கொண்டிருப்பவர்கள் ஆவார்கள்.

பகுத்தறிவுவாதிகள் அந்தப் படிக்கில்லாமல், அனுபவத் தையும், தங்கள் கண்களில் தென்படும் காட்சிகளையும் வஸ்துகளின் குணங்களையும், அவற்றின் மாறுதல்களையும் இயற்கையின் வழிவழித் தன்மைகளையும், அவற்றால் கண்டுபிடிக்கப்பட்டு வரும் புதுமை அதிசயங்களையும், மனிதனக்குமுன் காலத்தில் இருந்து வந்த அறிவாற்றலையும் சிந்தித்து, இன்று உள்ள அறிவையும், ஆற்றலையும் இனி ஏற்படும் அறிவாற்றலையும், சாதனங்களையும் மற்றும் இவை போன்றவைகளையும் ஆராய்ச்சிக் கண்களோடு பார்ப்பவர் களாவார்கள்.

பண்டிதர்கள் பழங்காலத்தையே சரியென்று கருதிக் கொண்டு, அதற்கே புது உலகம் என்று பெயர் கொடுத்து அங்கே செல்லவேண்டுமென்று அவாவுடையவர்கள். பகுத்தறிவு வாதிகள்

எவரும் ஓரொரு விநாடியையும் புதிய காலமாகக் கருதி புதிய உலகத்திற்குப் போவதில் ஆர்வமுள்ளவர்கள். பண்டிதர் கள் என்பவர்கள், “எந்த நாட்டிலும் இப்படித்தான் இருப்பார்கள்” என்று நாம் சொல்ல வரவில்லை. நம் நாட்டு பண்டிதர்கள் என்பவர்களில் பெரும்பாலோரைக் கருதித்தான் நாம் இப்படிச் சொல்கின்றோம்; ஏனெனில், நம் நாட்டுப் பண்டிதரென்பவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படவோ அது வளர்ச்சியடையவோ முடியாமல் தடை செய்யத் தகுதியான மாதிரியிலேயே அவர்களது படிப்பும், பரீட்சையும் இருக்கிறது. ஆதலால், நம் பண்டிதர் என்பவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது அவர்களது படிப்பே ஒழிய, அவர்களது அறிவுக் குறைவன்று, தவறிக் கீழே விழுந்த பிள்ளைக்கு அரிவாள் எதிரில் இருந்தால், எப்படி அதிகக்காயம் ஏற்படுமோ, அதுபோல புராண இதிகாச கலைச் சேற்றில் விழுந்த நம் பண்டிதர்களுக்கு இயற்கை வாசனை அறிவால் ஏற்படக் கூடிய பகுத்தறிவையும் பாழ்படுத்தத் தக்க வண்ணம், மூட நம்பிக்கைச் சமய (மத)ங்கள் என்னும் விஷப்பாம்புகள் அவர்களைக் கரையேற விடாதபடி சுற்றிக் கொண்டிருக்கின்றன.

நம் மதவாதிகள் சிறப்பாக “இந்து” மதவாதிகள் என்பவர்கள் பண்டித மதவாதிகளைவிட மோசமானவர்கள். பண்டிதர்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் இருந்த உலகத்துக்குப் போகவேண்டுமென்றால், மதவாதிகள் பதினாயிரக்கணக்கான வருஷங்களுக்கு பல யுகங்களுக்கும், முன்னால் இந்த உலகத்துக்குச் செல்ல வேண்டுமென்பார்கள். இவர்கள் இருவருக்கும் பகுத்தறிவுக்குப் பொருத்தமில்லாததும், மனித சக்திக்கு மீறினதுமான காரியங்களிலும், அசாத்தியமான கற்பனைகளிலுந்தான் நம்பிக்கையும், பிரியமும் இருக்கும். ஆகவே, இப்படிப்பட்ட இவர்களால் கண்டறியப்படும் புது உலகம், காட்டுமிராண்டிகள் வசிக்கும் உலகமாக இருக்கும் என்பதையும், அவர்களை மதிக்கும் மக்கள் பெரும்பாலும் மூட நம்பிக்கையில் மூழ்கிய காட்டுமிராண்டிகளாய் இருப்பார்கள் என்பதையும் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஆதலால் தான் “பழையவைகளுக்கே மதிப்பும், மரியாதையும் வைத்திருப்பவர் களால், மாறுதலின் சக்தியும், அம்மாற்றத்தின் தன்மையும், அதனால் ஏற்படும் பயனும் உணர்ந்துகொள்ளவோ, எதிர்பார்க்கவோ கூட முடியாது” என்று சொல்ல வேண்டியதாயிற்று.

பழையவைகளை ஏற்கும் அளவுக்கு, நற்பயன் தரவேண்டிய அளவுக்கும் உபயோகித்துக் கொள்ளவேண்டியது அவசியம் என்பதை நாம் வலியுறுத்துவதில் பின்வாங்கமாட்டோம். ஆனால், புதியவற்றிலேயே முயற்சியும், ஆராய்வதில் ஆர்வமும் இருக்கவேண்டியது அவசியமாகும். ஏனெனில், அவற்றில்தான் இயற்கையைப் படிப்பது என்பதோடு புதியவற்றைக் கண்டுபிடிப்பதும், முற்போக்கு அடைவதும் (இன்வென்ஷன் ப்ராக்ரஸ்) சுலபத்தில் சாத்தியமாகலாம்.

இன்று உலகத்தின் வேறு பல பாகங்களில் உள்ளவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பல அற்புதங்களும், அப்பாகங்கள் அடைந்துள்ள முற்போக்குகளும் முதலாகியவை எல்லாம் அந்நாட்டவர்கள், பழையவற்றோடு திருப்தி அடைந்து, அதுவே முடிவான பூரண உலகம் என்று கருதி, அப்பழையவற்றையே தேடிக்கொண்டு திரியாமல், புதியவற்றில் ஆர்வங்கொண்டு, நடுநிலைமை அறிவோடு முயற்சித்தான் பலனாலேயே ஏற்பட்டவைகளாகும். அவை இன்று எல்லா மக்களாலும் ஆதரவோடு அனுபவிக்கப்படுகின்றன.

ஆகவே, இதை உணர்ந்தவர்கள் தான் இனி சில நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் எப்படிப்பட்ட உலகத்தைக் காணலாம்; அதற்கு என்ன முற்சி செய்யலாம் என்பதை ஒருவாறு கற்பனைச் சித்திரமாகவாவது தீட்ட முடியும்.

**– ஈ.வெ.ரா.**

# இனிவரும் உலகம்?

உலகத்தை ஒருவாறு படித்தறிந்த பல பெரியோர்களின் அபிப்பிராயங்களையும், உலகின் பல பாகங்களில் இதுவரை ஏற்பட்டு வந்திருக்கும் காரியங்களையும் ஊன்றிப் பார்ப்போமானால், இனி வரும் உலகமாவது அரசனது ஆட்சி அற்றதாகவே இருக்கும்; ஏனெனில், உலகத்தில் தங்கம், வெள்ளி முதலிய (உலோக) நாணயங்களும் தனிப்பட்டவர்களுக்கென்று சொத்து உடைமையும், உரிமையும் இருக்காது. ஆதலால் அப்படிப்பட்ட உலகத்துக்கு அரசனோ, இன்றுள்ளது போன்ற ஆட்சியோ எதற்காக வேண்டியிருக்கும்? மக்களின் உயிர் வாழ்க்கைக்கும், ஓய்வுக்கும், அனுபவிப்புக்கும் இன்றுள்ள உழைப்புகள், கஷ்டங்கள், கட்டுக்காவல்கள் இருக்காது.

இன்றுள்ள பெருவாரியான மக்கள் கஷ்டப்பட்டு உழைத்து வேலை செய்யும் நேரம் அதிகம்; பயன் அனுபவிக்கும் நேரமோ குறைவு.

உண்ணும் உணவுப் பொருள்களுக்கும், அனுபவிக்கும் பொருள்களுக்கும் வசதி அதிகம். போதிய உணவில்லாமலும், குறைந்தபட்ச சுகபோக அனுபவமில் லாமலும் பட்டினிக் கிடக்கும் மக்களும், வறுமையை அனுபவிக்கும் மக்களும் அநேகம்!

சுயேச்சைக்கு வசதியும், சுய நிர்ணயத்துக்கு மார்க்கமும் தாராளமாய் இருக்கும். சுயேச்சை யோடு இருப்பவர்களோ, தன்னம்பிக்கையோடு இருப்பவர்களோ மிகக் குறைவு.

பொருள் செய்வகைகளும், அவற்றிற்கு வேண்டிய மூலப் பொருள்களும் ஏராளமாயிருக் கின்றன. குறைந்த அளவுஅதாவது இன்றியமை யாத தேவையான பொருள்கூட இல்லாமல் கஷ்டப்படும், வேதனையும் படுகிற மக்கள் அநேகர்.

நிலப்பரப்பு ஏராளம். நிலமில்லாதவர்கள் என்பவர்கள் அநேகர். இப்படிப்பட்ட சர்வ செல்வமும் நிறைந்து உள்ள

*உலகில் பட்டினி, வறுமை, மனக்குறைவு வாழ்வுக்கே போராட்டம் ஏன் உண்டாகவேண்டும்?*

*இவைகளுக்கும், கடவுளுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?*

*இவைகளுக்கும், மதங்களுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?*

*அல்லது இவைகளைக் கடவுளர்களுக்குச் சம்பந்தப்படுத்திக் கொண்டிருக்கும் மக்களில் எந்தக் கடவுளையாவது, எந்த மதத்தையாவது நம்பிப் பின்பற்றி, வழிபடுகிற மக்களில் யாருக் காவது மேலே கண்ட குறைபாட்டுணர்ச்சி இல்லை என்று கூற முடியுமா?*

*அல்லது கடவுள், மதம் முதலியவை களைப்பற்றி இலட்சியப் படாவிட்டாலும், மனிதனுக்கு மேற்கண்ட குறைகளை நீக்கிக் கொள்ள அறிவு இல்லை என்றாவது சொல்ல முடியுமா?*

*உலக ஜீவராசிக்குள்ளே மனிதனே அதிக அறிவு பெற்றவன். கடவுள்களையும், மதங்களையும், ஞான மார்க்கங்களையும், ஆத்மார்த்த அரிய தத்துவங்களையும், மனிதன்தான் கண்டுபிடித் திருக்கிறான். எத்தனையோ மனிதர்கள் தெய்வீகச் சக்தி பெற்று தெய்வீகத்தோடு கலந்தும், தெய்வமாகியும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர் களாலும் மேற்கண்ட குறைபாடு, பட்டினி, அவரவர் உணவுக்கே கஷ்டப்படுவது முதலாகிய சாதாரணத் தன்மைகள் கூட நீங்கப்படவில்லை என்றால், இவற்றிற்கு முக்கியக் காரணம் மேலே குறிப்பிட்ட கடவுள், மதம், ஞான மார்க்கம், நீதி, ஒழுக்கம், அரசாட்சி என்பவைகளும், மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட அதிக அறிவை மேற்கண்டவற்றின் கட்டுப்பாடுகளிலிருந்து வேறுபடுத்தித் தனித்திருந்து சிந்தித்துப் பார்க்காததும்தான் காரணங்களாகும் என்பது விளங்க வில்லையா?*

*இப்போது மக்களில் ஒரு சிலர் மேற்கண்ட "ஆத்மார்த்தம்" முதலிய "சூட்சமங்களில்" உள்ள கவலையையும், மூட நம்பிக்கை யையும் விட்டு, தம் அறிவையும், அனுபவத்தையுமே நம்பிச் சிந்தித்ததன் காரணமாகவே பல அற்புதங்களும், அதிசயங்களும் காண முடிந்த பின், மேல்நாடுகளிலே அதிகம்பேர் அந்தப்படி சிந்திக்க முன்வந்துவிட்டார்கள். பழைய உலகம் இனி*





நிலைக்காது என்று முடிவு கட்டுகிறார்கள். புதிய உலகத்தைப் பற்றியே சிந்திப்பதும், சித்தரிப்பதும், எதிர்பார்ப்பதுங்கூட இன்று பல அறிஞரின் கவலையாகப் போய்விட்டது.

ஏன் பிறக்கவேண்டும்? சகல சவுகரியங் களுமுள்ள இப்பரந்த உலகில் உணவுக்காக என்று ஒருவன் ஏன் பாடுபடவேண்டும்? ஏன் சாகவேண்டும்? என்கின்ற பிரச்சினைகள் சிந்தனைக்கு மயக்க மளித்து வந்த சிக்கலான பிரச்சினைகளாக இருந்தவை. இன்று தெளிவாகப்பட்டுப் பரிகாரம் தேடப்பட்டு வருகிற காலம் நடக்கிறது. இந்தப் போக்குச் சீக்கிரத்தில் மக்களின் பொதுவாழ்விலேயே பெரியதொடு புரட்சியை உண்டாக்கும் படியான புதிய உலகத்தை உண்டாக்கித்தான் தீரும். அப்போதுதான் நான் முன் சொன்ன பணம், காசு என்ற உலோக நாணயமே இருக்காது. அரசு ஆட்சி இருக்காது; இழிவான வேலை என்பது இருக்காது; அடிமைத்தனம் இருக்காது; ஒருவரை யொருவர் நம்பிக் கொண்டு வாழவேண்டிய அவசியம் இருக்காது; பெண்களுக்குக் காவல் கட்டுப்பாடு, பாதுகாப்பு என்பவையான அவசியம் இருக்காது.

காந்தியாரைப் போலவும், மடாதிபதி களைப் போலவும், அரசர்கள், ஜமீன்தார்கள் முதலிய பெரும் பெரும் செல்வவான்கள், போக போக்கியம் அனுபவிப்போர் போலவும், பார்ப்பனர்கள் போலவும், உலக மக்கள் யாவரும் உயர்வாழ்வு வாழ வேண்டுமானாலும், அவ்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய சவுகரியங்கள் ஏற்படவும், நிலைக்கவுமான காரியங்கள் ஏற்பட ஒரு மனிதனுக்கு ஒரு நாள் ஒன்றுக்கு ஒரு மணிநேரம் அல்லது இரண்டு மணிநேரத்துக்கு வேலை செய்யவேண்டிய அவசியமே இருக்காது. ஒரு மனிதன் தன் காலுக்கோ, காதுக்கோ, நாசிக்கோ, நயனத்துக்கோ, வயிற்றுக்கோ, எலும்புக்கோ வலி இருந்தாலும், அவன் “எனக்கு வலிக்கிறது” என்று சொல்லுவதுபோல், உலகில் வேறு எந்தத் தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் சங்கடத்தையும், குறைபாடுகளையும், ஒவ்வொரு (சமூகமே) தங்களுக்கு ஏற்பட்டது போல் நினைக்கும்படியும், அனுபவிப்பது போல் துடிக்கும்படியும், அவ்வளவு கூட்டு வாழ்க்கையும், ஒற்றுமை உணர்ச்சியும் ஏற்படும்.

உலகில் எந்த பாகத்திலும் இன்றைய மாதிரியான போர் நடக்காது. மக்கள், மக்களால், யுத்தம், கொள்ளை, கொலை முதலியவற்றின் பேரால் மடியமாட்டார்கள். உணவுக்காக வேலை செய்யவேண்டிய வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது. மக்கள், உடற்பயிற்சிக்காக வேலை செய்ய வேண்டுமே என்கின்ற கவலைகொண்டு உழைப்பு வேலைக்காக அலைவார்கள்.

அதிசயப் பொருளும், அற்புதக் காட்சி களும், அவற்றின் அனுபவங்களும் மக்கள் எல்லோரும் ஒன்றுபோல அனுபவிப் பார்கள். லேவாதேவிக்காரர்கள், தனிப்பட்ட வியா பாரிகள், தொழிற்சாலை, இயந்திரச்சாலை, முதலாளிகள், கப்பல், இரயில், பஸ் சொந்தக்காரர்கள், கமிஷன் ஏஜென்ட்கள், இன்ஷியூரன்ஸ் ஏஜென்ட்கள், தரகர்கள், விளம்பரங்கள் மற்றும் வேறு எவ்விதமான தனிப்பட்ட இலாபமடையும் மக்களும், தொழில்களும் எவையுமே இருக்காது. சண்டைக் கப்பல், யுத்தப்படை, யுத்த தளவாடங்கள் வேண்டி இருக்காது என்பதோடு, மக்களைக் கொன்று குவிக்கும் சாதனமோ, அவசியமோ எதுவுமே இருக்காது.

வாழ்வுக்காக எப்படி எப்படி உழைப்பது என்கின்ற கவலையும், முயற்சியும் மிகச் சிறிய அளவுக்கு வந்துவிடும். சுகம் பெறுவதிலும், போக போக்கியமடைவதிலும், நீண்ட நாள் வாழ்வதிலும், ஆராய்ச்சியும், முயற்சியும் வளர்ந்துகொண்டே போகும். மக்களின் தேவைகள் எவ்வளவு வளர்ந்தாலும், அவற்றை உற்பத்தி செய்வதற் காக மனிதன் செலவழிக்க வேண்டிய நேரம், மிகமிகக் குறைவாகவே இருக்கும்.

உதாரணமாக, மக்கள் முன்பு கொஞ்சம் உடை அணிந்து கொண்டிருந் தார்கள். அக்காலத்தில் துணி நெய்பவர்கள், ஒரு நிமிடத் திற்குச் சுமார் 150 இழைகள் தான் கோத்து வாங்க (நெய்ய) முடிந்தது. இன்று மக்கள் முன்னைவிட பல மடங்கு அதிகமாகத் துணியை அணிகிறார்கள் என்றாலும், அவ்வளவும் கிடைக்கும் படியான அளவுக்கு மேலே நெசவுத் துறையில் விஞ்ஞானம் அபிவிருத்தி அடைந்து,ஒரு நிமிஷத்துக்கு 45,000 இழைகள் கோத்து வாங்கும்படியான இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.





*சிகரெட்களைப் பற்றிச் சற்று சிந்திப்போமானால், அக்காலத்தில் ஒரு நிமிடத்துக்கு இரண்டு மூன்று சிகரெட்கள்தான் சுற்ற முடிந்திருக்கும். ஆனால், இன்று ஒரு நிமிடத்திற்கு 2500 சிகரெட்கள் ஓர் இயந்திரத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதுவும் ஒரு பக்கம் புகையிலையைப் போட்டால் மறுபக்கம் ரயிலில் ஏற்றும்படியான மாதிரியில் சிகரெட் பேக்குகள் கொண்ட பெட்டிகள் கட்டாகக் கட்டப்பட்டுவிடுகின்றன என்பதோடு, அந்தச் சிகரெட் கம்பெனியின் பெயர் அந்த ஒவ்வொரு சிகரெட்டின்மீதும் சரியாகப் பதியவில்லையானால், பதியாத சிகரெட்டை இயந்திரம் கீழே தள்ளி விடுகிறது. இப்படிப்பட்ட நுட்பமான இயந்திரங்கள் இப்போதே கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் போது, இனி வருங்கால இயந்திர உலகம் எப்படி இருக்கும் என்பதை விளக்கவும் வேண்டுமா! இம்மாதிரியாகவே வாழ்வுக்கு வேண்டிய எல்லாத் தேவைத் துறைகளிலும் இயந்திர சாதனங்கள் பெருகும்போது நாட்டு மக்களில் ஒவ்வொருவரும் வருஷத்திற்கு இரண்டு வாரம் வேலை செய்வதனாலேயே மக்களுக்கு அவசியமான எல்லாத் தேவைகளும் பூர்த்தியாகிவிடலாம்.*

**வேலை இல்லாமற் போகாது**

*ஆகவே, ஓர் ஆண்டில் மீதியுள்ள 50 வாரங்களும் மக்களைச் சும்மா, சோம்பேறிகளாய் இருக்க செய்யுமே என்று யாரும் பயப்பட வேண்டிய தில்லை.*

*வாழ்க்கைச் சாதனங்களுக்கு எப்படிக் காலமும், யோசனை யும், கண்டுபிடிப்புகளும் தேவை இருக்கி றதோ அதுபோலவே மக்களின் ஓய்வுக்கும், உடற்பயிற்சிக்கும், மகிழ்ச் சிக்கும், போக போக்கியத்துக்கும் யோசனைகளும், ஆராய்ச்சிகளும், சாதனங்களும், அவற்றைச் சுலபமாகச் செய்ய வசதிகள் கண்டுபிடிப்பதும், அவை நாளுக்கு நாள் மாற்றமடைவதும் ஆகிய காரியங்களில் மீதி நாள்கள் செலவழிக்கப்படவேண்டி இருக்கும்.*

*அக்கால நிலை நாம் வரையறுக்க முடியாத அற்புதங்களையும், அதிசயங்களையும் கொண்டிருக்குமென்று சொல்லுவது, மிகைபடச் சொன்னதாக ஆகாது. ஆதலால்*

மக்கள் குறிப்பாக, அறிவாளிகள், சிந்தனையாளர்கள், முற்போக்கில் கவலை உள்ளவர்கள் ஆகியவர்களுக்கு இவற்றின்மூலம் சதா வேலை இருந்துகொண்டே இருக்கும். அப்படிப்பட்ட வேலைகள் இன்று உள்ளதுபோல் கூலிக்கு வேலை செய்வது போலவோ, இலாபத்துக்கு வேலை செய்வது போலவோ இல்லாமல் உற்சாகத்துக்காகவும், போட்டிப் பந்தய உணர்ச்சி போன்ற தூண்டுதலுக்காகவும் ஊக்கத்துடன் வேலை செய்வதாக இருக்கும்.

அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் தனது வாழ்நாளில் தன்னை என்ன காரியத்தைச் செய்து முடித்து உலகுக்குப் பயன்படச் செய்துகொள்ளுவது என்ற கருத்தே வளரும்.

**சோம்பேறிகள்**

இப்படியானால் சோம்பேறிகள் வளர்ந்து விடமாட்டார்களா என்று கேட்கலாம். இப்படிப்பட்ட காலத்தில் சோம்பேறிகள் இருக்க முடியாது; இருப்பார்கள் என்றே வைத்துக்கொண்டாலும், இவர்களால் சமூகத்துக்குத் தேவையான எந்த வேலையும் குறைந்து போகாது. அதனால் ஒரு கெடுதியும் ஏற்பட்டுவிடாது. ஆதலால் அப்படிப்பட்ட இவர்கள் வேலையில் ஈடுபடுவதைவிட சும்மா இருந்து சாப்பிடுவது அவர்களுக்கே கஷ்டமாயிருக்கும்.

பொதுவாக அந்தக் காலத்தில் மனிதர்கள் உண்மையிலேயே தங்களுக்கு “வேலை செய்ய சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே, வீணாக நேரம் கழிகிறதே” என்று வேலைக்குப் போராடிக் கொண்டு இருப்பார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு இச்சோம்பேறிகளால் அனுகூலம் ஏற்படுமே தவிர, கவலை இருக்காது. எல்லா மக்களுக்கும் அவர்கள் ஆசை தீர வேலை கொடுக்க முடியாத காலமாக இருக்குமே ஒழிய அந்தக் காலம் வேலைக்கு ஆள் தேட வேண்டியதாகவோ, அவன் வேலை செய்யவில்லை இவன் வேலை செய்யவில்லை என்று கருதுவதாகவோ, குறை கூறுவதாகவோ இருக்காது.

**“இழிவான” வேலை**

“இழிவான” வேலைகளுக்கு ஆள் கிடைக்குமா? என்ற கேள்வி பிறக்கலாம். இழிவான வேலை என்பது வருங்காலத்தில்

இருக்க முடியாது. சரீரத்தால் செய்யப்படவேண்டிய எல்லாக் காரியங்களும் அநேகமாக இயந்திரங்களாலேயே செய்யும் படியாக ஏற்பட்டுவிடும். கக்கூஸ் எடுக்க வேண்டியதும், துலக்க வேண்டியதும், வீதி கூட்ட வேண்டியதும் கூட இயந்திரத்தினாலேயே செய்து முடித்துவிடும்... மனிதனுக்கு பாரம் எடுக்கவேண்டியதோ, இழுக்க வேண்டியதோ ஆன காரியங்கள் இருக்கவே இருக்காது. அக்காலத்தில் கவுரவம் வேண்டும் என்பவர்கள் பொதுஜன நன்மை சவுகரியம் ஆகியவைகளைச் செய்ய வேண்டி இருக்கும் என்பதோடு, அதில் ஏற்படும் போட்டியினால் “இழிவான’’ வேலைக்கு எப்போதும் கிராக்கி இருந்து கொண்டே இருக்கும்.

கவிகளும், இதர சித்திரக்காரர்களும், நாவலர்களும், சிற்பிகளும் போட்டி போட்டுக்கொண்டு புதிய உலகை (தோற்றத்தை) உண்டாக்குபவர்களாகவே இருப்பார்கள். திறமையானவர்களுக்குத் தான் வேலையும், மதிப்பும் கிடைக்கும்; மற்றவர்கள் அலட்சியப்படுத்தப்படு வார்கள்.

**ஒழுக்கக் குறைவு**

அக்காலத்தில் “ஒழுக்கக்குறைவு’’ என்பதற்கு இடமே இருக்காது. ஒழுக்கக் குறைவாய் ஒருவன் நடக்கவேண்டுமானால், அதனால் அவனுக்கு ஒழுக்கமாய் நடப்பதன்மூலம் கிடைக்கப்படாத ஏதாவது லாபமோ, திருப்தியோ, ஆசைப் பூர்த்தியோ ஏற்படவேண்டும். புதிய உலகில் தனிப்பட்டவர் தேவைக்கும் தனிப்பட்டவர் மனக்குறைக்கும் ஏங்கித் திரியும் ஆசைக்கும் இடமே இருக்காது. தன்னிலும் மேலாகவோ தன்னிடமிருப்பதைவிட அதிகமாகக் கொண்டோ வேறொருவன் இருக்கிறான். அனுபவிக்கிறான் என்கிற உணர்ச்சி ஏற்படும்போதுதான் அதிருப்தியும் மனக்குறையும் ஏற்படும்; அதை நிவர்த்திக் கொள்வதற்குத்தான் எந்த மனிதனும் ஒழுக்கக் குறைவாய் நியாய விரோதமாய் கட்டுத் திட்டத்துக்கு மீறி நடக்கவேண்டியவனாகலாம். பொதுவாக இன்று ஒழுக்கம், நியாயம், கட்டுத் திட்டம் என்பவைகளே பெரிதும் உயர்வு தாழ்வு களையும், தனிப்பட்டவர்கள் உரிமை களையும், சவுகரியங்களையும் நிலை நிறுத்த ஏற்படுத்தப்பட்டவை களேயாகும். ஆகையால், இவை இரண்டும் இல்லாத இடத்தில்

அவை இரண்டிற்கும் இடமிருக்காது. அது போலவே, திருட்டுக்கும் இடமிருக்காது. கங்கைக்கரை ஓரத்தில் குடியிருப்பவர்கள் கங்கை நீரைத் திருடவேண்டிய அவசியம் ஏற்படுமா? அல்லது அவர்களது தேவைக்கு மேல் அதிகமாக எடுப்பார்களா? “நாளைக்கு வேண்டுமே’’ என்று சேகரித்து வைக்க முயற்சிப்பார்களா? ஆதலால், தேவை உள்ள சாமான்கள் தாராளமாய் வழிந்தோடும் போது, திருட்டுக்கு இடமே இருக்காது. அதிகமாய் எடுத்துக்கொள்ள அவசியமும் இருக்காது. எதற்கும் ஏதாவது இலாபம் இருந்தால்தானே பொய் பேச நேரிடும்? குடியினால் மக்களுக்கு எவ்விதக் கெடுதியும் ஏற்பட இடமிருக்காது. கொலை செய்யும்படி தூண்டத்தக்க காரியமும் இல்லாமல் போய்விடும். சூதாடுவது என்பதும், பந்தயப் போட்டியாய் இருக்கலாமே தவிர, பண நஷ்டமாக இருக்காது.

**விபச்சாரம்**

விபச்சாரம் என்பது இருக்க நியாய மில்லை. ஏனெனில், பணத்துக்காகவும், பண்டத்துக்காகவும் விபச்சாரம் என்பது அடியோடு மறைந்தே போகும். மக்களுக்குத் தன்மான உணர்ச்சி ஏற்பட்ட காலத்தில் ஒருவரையொருவர் அடக்கி ஆள முடியாது. ஒருவர் தயவைக் கோரி ஒருவர் இணங்கிவிட முடியாது. ஒருவரையொருவர் அதாவது, ஆணும், பெண்ணும் மனப்பூர்வமாக சமவிருப்பமின்றிக் காதல் அனுபவிக்கமாட் டார்கள். கல்வி விஷயத்தில் யாவருக்கும் தேர்ந்த அறிவும், கல்வியும் ஏற்படும். ஆனதால் மனமொத்த உண்மைக் காதல் வாழ்க்கை என்பதைத் தவிர புதுமைக்காக, மாறுதலுக் காக அடிக்கடி மாறும் தன்மை சுலபத்தில் ஏற்பட்டுவிடாது. அன்றியும், உடல்நலம் பற்றிய அறிவும், கவலையும் ஒவ்வொரு வருக்கும் ஏற்பட்டிருக்கும். தன்மான உணர்ச்சியும் இருக்கும். “விருப்பமில்லாத இடத்தில் சம்பந்தமில்லாத இடத்தில் இச்சை வைப்பதும், தனது சுயமரியாதைக் குறைவு’’ என்றே ஆண் - பெண் இருபாலரும் கருதுவார்கள். பெண் அடிமையோ, ஆண் ஆதிக்கமோ இல்லாமலும், பலாத்காரமோ, வற்புறுத்தலோ, உடல்நலத் திற்குக் கேடோ இல்லாமலும் ஒத்தக் காதல், ஒத்த இன்பம், ஒன்றுபட்ட உள்ளம்கொண்ட கல்வியால் சமுதாயத்திற்கோ தனிப்பட்ட நபர்களுக்கோ எவ்வித கெடுதியும்

ஏற்பட்டுவிடாது. ஆதலால் விபச்சாரம் என்பதற்கு இட மில்லாது போகும்.

மூளைக் கோளாறான குணங்கள் என்பவைகளை இயற்கையாக உடையவர்கள் யாராவது இருந்தால், அதற்கு மாத்திரம் பரிகாரம் தேடவேண்டிய அவசியமிருக் கலாம். அதுவும் அப்படிப்பட்டவர்கள் பிறருக்கோ, தங்களுக்கோ கேடு ஏற்படுவதாய் இருந்தால்தானே? ஆதலால் பஞ்சேந்திரியங் களும் ஒரே துறையில் ஒரே சமயத்தில் இன்பம் தரக்கூடிய இவ்வின்பத் துறையில் இயற்கைக் கேடு, சமுதாயக் கேடு அல்லாமல், வேறு காரியத்திற்குக் கட்டுப்பாடு இருக்காது.

**மற்ற சவுகரியங்கள்**

போக்குவரவு எங்கும் ஆகாய விமானமும், அதிவேக சாதனமுமாகவே இருக்கும்.

கம்பியில்லாத் தந்தி சாதனம் ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்.

ரேடியோ ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப் பட்டிருக்கும்.

உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து, ஆளுக்காள் உருவம் காட்டிப் பேசிக் கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும்.

மேற்கண்ட சாதனங்களால் ஓர் இடத்தில் இருந்துகொண்டே பல இடங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கச் சாத்தியப்படும். உணவுகளுக்குப் பயன்படும் படியாக உணவு, சத்துப் பொருள்களாகச் சுருக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு ஒரு சிறு குப்பியல் அடங்கக்கூடிய உணவு ஏற்பட்டுவிடும்.

மனிதனுடைய ‘‘ஆயுள் நூறு’’ வருஷமென்பது இரட்டிப்பு ஆனாலும் ஆகலாம். இன்னும் மேலே போனாலும் போகலாம்.

பிள்ளைப்பேறுக்கு ஆண் - பெண் சேர்க்கை என்பதுகூட நீக்கப்படலாம். நல்ல திரேகத்துடனும், புதிய நுட்பமும், அழகும், திடகாத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும் படியாக பொலிகாளைகள்போல் தெரிந் தெடுத்து மணி போன்ற பொலி மக்கள் வளர்க்கப்பட்டு, அவர்களது வீரியத்தை இன்ஜெக்ஷன் மூலம் பெண்கள் கருப்பைகளுக்குள் செலுத்தி நல்ல

குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும். ஆண் - பெண் சேர்க்கைக்கும், குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும். மக்கள் பிறப்பு கட்டுப்படுத்தப்பட்டு ஓர் அளவுக்குள் கொண்டுவந்துவிடக் கூடும்.

**அநுபோகப் பொருள்கள்**

அநுபோகப் பொருள்களும் வெகுதூரம் மாற்றமடைந்துவிடும். அதற்காக ஏற்படும் செலவும் அதை அனுபவிக்கும் முறையும் வெகு சுருக்கமாக மாற்றமடைந்துவிடும்.

ஒரு டன்னுள்ள மோட்டார் கார், ஓர் அந்தர் வெயிட்டுக்கு வரலாம்; பெட்ரோல் செலவு குறையலாம்; பெட்ரோலுக்குப் பதில் மின்சார சக்தியே உபயோகப்படுத்தப் படலாம்; அல்லது விசை சேகரிப்பாலேயே ஓட்டப்படலாம்.

மின்சாரத்தின் உபயோகம் எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய விதமாகவும், மக்கள் வாழ்க்கை வசதிகளுக்குத் துணை செய்யும் விதமாகவும் விரியும் - பெருகும். விஞ்ஞானம் வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கப் பயன்படும்படியான அதிசயப் பொருள்களும், கண்டுபிடிப்புகளும் தனிப்பட்டவர்களின் இலாபத்துக்காக என்று முடங்கிக் கிடக்காமல் சகல மக்களும் சவுகரியம் தருகிற பொதுச் சாதனங்களாக அமையும்.

இவ்வளவு மாறுதல்களோடு இனிவருங் காலம் இருக்குமாகையால், இன்றைய உலக அமைப்பிலே உள்ள அரசு, உடைமை, நீதி, நிருவாகம், கல்வி முதலியன பல துறை களிலும் இப்போது எவையெவைப் பாதுகாக் கப்பட என்னென்ன முறைகள் கையாளப் பட்டு வருகின்றனவோ, அம்முறைகளுக் கெல்லாம் அவசியமில்லாமல் போய்விடும் என்பதோடு அவை சம்பந்தமாக இன்று நிலவும் பல கருத்துகள் அர்த்தமற்றதாகவும் போய்விடும்.

**கடவுள்**

இனிவரும் உலகத்தில் கடவுள் தன்மை எப்படி இருக்கும் என்று அறிய மக்கள் கண்டிப்பாக ஆசைப்படாமல் இருக்கமாட்டார்கள்.

கடவுள் தானாக யாருக்கும் தோன்றுவதில்லை. பெரியோர்களால், சிறியோர்களுக்குப் போதிக் கப்பட்டு காட்டப்பட்டுமே தோற்ற மான எண்ணமும் உருவமுமாகும். ஆதலால், இனிவரும்

உலகத்தில் கடவுளைப்பற்றிப் பேசுகிறவர்களும் காட்டிக் கொடுப்பவர்களும் மறைந்துவிடுவார்கள். யாராவது இருந்தாலும் அவர்களுக்கும் கடவுள் மறக்கப்பட்டுப் போகும். ஏனெனில், கடவுளை நினைக்க ஒரு மனிதனுக்கு ஏதாவது ஓர் அவசியம் இருந்தால்தான் நினைப்பான் - சகல காரண காரியங்களுக்கும் மனித னுக்கு விவரம் தெரிந்துவிடுவ தாகவும், சகல தேவைகளுக்கும் மனிதனுக்குக் கஷ்டப்படாமல் பூர்த்தியாவதாகவும் இருந்தால், எந்த மனிதனுக்கும் கடவுளைக் கற் பித்துக் கொள்ளவோ, நினைத்துக் கொள்ளவோ அவசியம் ஏன் ஏற்படும்? மனிதன் உயிரோடு இருக்கும் இடமே அவனுக்கு மோட்சமாய்க் காணப்படுமானால், விஞ்ஞானத்துக்கும், ஆராய்ச்சிக்கும் பொருத்தமில்லாத மோட்சம் ஒன்றை ஏன் கருதுவான்? அதற்கு ஏன் ஆசைப்படுவான்? தேவை அற்றுப் போன இடமே கடவுள் செத்துப்போன இடமாகும் என்பது அறிவின் எல்லையாகும். விஞ்ஞானப் பெருக்கம் ஏற்பட்ட இடத்தில் கடவுள் சிந்தனைக்கு இடம் இருக்காது.

சாதாரணமாக மனிதனுக்கு இன்று கடவுள் நிச்சயத்திற்கு ஒரே காரணம்தானே இருந்து வருகிறது. அக்காரணம் என்ன? காரணபூதமாய் இருப்பது எது? அதுதான் “கடவுள்” என்று சொல்லப்படுகிறது. இது விஞ்ஞானிக்குச் சுலபத்தில் அற்றுப்போன விஷயம். நம்முடைய வாழ்வில், நாம் எதைக் கடவுள் செயல் என்று உண்மையாய்க் கருதுகிறோம்? நம் அனுபவத்திற்கு வந்த ஒவ்வொன்றுக்கும் நாம் சமாதானம் தெரிந்து கொள்கிறோம்; தெரியாதவற்றைத் தெரியாது என்று ஒப்புக்கொள்கிறோம். இதுவேதான் உலகத் தோற்றத்துக்கும், உலக நடப்புக்கும் கொள்ளவேண்டிய முறையாகும். ஒரு சமயம் உலக நடப்புக்குக் காரணம் தெரியா விட்டாலும், அதற்கான ஒரு காரியத்திற்கும் தேவை இல்லாத கடவுளை எவனும் வணங்கமாட்டான்.

**மோட்சம் - நரகம்**

புதிய உலகத்தில், மோட்சம், நரகத்துக்கு இடம் இருக்காது. நன்மை தீமை செய்ய இடமிருந்தால்தானே மோட்சமும், நரகமும் வேண்டும்? எவருக்கும் யாருடைய நன்மையும் தேவை இருக்காது. புத்திக் கோளாறு இருந்தால் ஒழிய, ஒருவனுக்கு ஒருவன் தீமை செய்யமாட்டான். ஒழுக்கக் கேட்டுக்கும் இடமிருக்காது. இப்படிப்பட்ட நிலையில், மோட்ச நரகத்துக்கு வேலை ஏது? ஆள் ஏது?

*எனவே, இப்படிப்பட்ட நிலை புதிய உலகத்தில் தோன்றியே தீரும். தோன்றாவிட்டாலும் இனிவரும் சந்ததிகள் இந்த மாறுதல்களைக் காண வேண்டுமென்றும், இவைகளால் உலகில் மக்களை இப்போது வாட்டிவரும் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, வாழ்க்கை என்றால் பெருஞ்சுமை என்று சலித்துக் கொண்டும் வாழ்க்கை என்றால் போராட்டம் என்று திகைத்துக் கொண்டும் இருக்கிற நிலைமை போய், வாழ்க்கை என்றால் மக்களின் இன்ப உரிமை என்ற நிலைமை உண்டாக வேண்டுமென்றும் ஆவலுடன் பணியாற்றி வருவார்கள்.*

*"நம்மால் என்ன ஆகும்? அவனன்றி ஓரணும் அசையாதே" என்று வாய் வேதாந்தம் பேசமாட்டார்கள். நம் கண்முன் காணப்படும் குறைபாடுகளைப் போக்க, நாம் எப்படி உழைக்க வேண்டும் என்பதே அவர்களின் கவலையாகவும், அவர்களின் எண்ணமாகவும் இருக்கும் என்றோ, யாரோ, எதற்காகவோ எழுதி வைத்த ஏட்டின் அளவோடு நிற்கமாட்டார்கள். சுய சிந்தனையோடு கூடியதாகவே அவர்களின் செயல்கள் இருக்கும். மனித அறிவீனத்தால் விளைந்த வேதனைகளை மனித அறிவினாலேயே நீக்கவிட முடியும் என்ற ஆசையும், நம்பிக்கையும் கொண்டு உழைப்பார்கள். அவர்களின் தொண்டு மனித சமுதாயத்தை நாளுக்கு நாள் முன்னுக்குக் கொண்டு வந்த வண்ணமாகவே இருக்கும். சுய சிந்தனைக்கு இலாயக்கற்றவர்களே இந்த மாறுதல்களைக் கண்டு மிரள்வதும், காலம் - வரவரக் கெட்டுப் போச்சு என்று கதறுவதுமாக இருப்பவர்கள் இன்றைய மக்களிலே பலருக்கு, பழைமையிலே இருக்கும் மோகம், அறிவையே பாழ் செய்துவிடுகிறது. புதிய உலகத்தோற்ற வேகத்தைத் தடை செய்துவிடுகிறது. பழைய முறைப்படி உள்ள அமைப்புகளால் இலாபமடையும் கூட்டம், புதிய அமைப்பு ஏற்படுவதைத் தடுக்க முயற்சிப்பது இயற்கை. ஆனாலும், பாமரனின் ஞானசூன்யம் சுயநலக்காரரின் எதிர்ப்பு என்னும் இரண்டு பெரிய விரோதிகளைக் கண்டு கலங்காமல், வேலை செய்வோரே, இனிவரும் உலகச் சிற்பிகளாக முடியும். அந்தச் சிற்பிகளின் கூட்டத்திலே நாமும் சேர்ந்து நம்மாலான காரியத்தைச் செய்யவேண்டு மென்று வாலிபர்கள், பகுத்தறிவாளர்கள் ஆசைப்பட்டு உழைக்க முன்வரவேண்டி இதை முடிக்கிறேன்.*

புதிய இணைப்பு 1

# பெரியாரின் தமிழ்த் தொண்டு

**பேரா.இரா.கலைச்செல்வன், M.A., M.Ed., M.Phil.**

தந்தை பெரியார் அவர்கள் மொழி என்றால் என்ன? அது எதற்காகப் பயன்படுகிறது? ஒருவனுடைய கருத்தை மற்றொருவனுக்குத் தெரிவிக்க மொழி முக்கிய சாதனமாக இருந்து வருகிறது. அது ஒலி மூலமாகவே பெரிதும் இருந்து வருகிறது. மேலும், இச்சாதனம் மனிதர்களுக்கே சிறப்புடையதாக அமைந்திருக்கிறது. மிருகங்களும், பட்சிகளும் கூட சில செய்கைக் குறிப்புகளாலும், சிலவித சப்தங்களாலும் தம் கருத்தைத் தமக்குள் பரிமாறிக் கொள்கின்றன என்று குறிப்பிடுகிறார்.

தமிழ் எழுத்துகளில் மாற்றம் கொணர வேண்டும் என்று விரும்பிய தந்தை பெரியார் அதற்கான தேவைகளையும், காரணங்களையும் பற்றிக் குறிப்பிடும் போது, தமிழ் மிகுதியும் நம் முற்போக்குக்கு ஏற்றபடி செம்மைப்படுத்தப்பட வேண்டும். மக்கள் கற்க மேலும் இலகுவாக்கப்பட வேண்டும். பயனுள்ள பரந்த மொழியாக்கப்பட வேண்டும். "இன்றைய தமிழ் மிகவும் பழைய மொழி, வெகுகாலமாகச் சீர்திருத்தம் செய்யப்படாதது, மற்ற மொழிகளைப் போல திருத்தப்படாதது" என்பதான இவைகள் ஒரு மொழிக்குக் குறையாகுமே தவிர, பெருமையாகாது என்பேன். ஏன்? பழமை எல்லாம் அநேகமாக மாற்றமாகி இருக்கிறது; திருத்தப்பட்டிருக்கிறது. மாற்றுவதும், திருத்துவதும் யாருக்கும் எதற்கும் இழிவாகவோ, குற்றமாகவோ, ஆகிவிடாது. மேன்மையடையவும், காலத்தோடு கலந்து செல்லவும், எதையும் மாற்றவும் திருத்தவும் வேண்டும். பிடிவாதமாய்ப்

பாட்டி காலத்தில், பண்டைக் காலத்திய பெருமைகளைப் பேசிக் கொண்டிருந்தால், சுழிபட்டுப் போவோம். பின்தங்கிப் போவோம். மொழி என்பது உலகப் போட்டிப் போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். போர்க் கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும். சுலபமாகத் தமிழ்மொழியைக் கற்றுக் கொள்வதற்காகவும், சுலபமாக அச்சுக் கோர்க்கவும், டைப் அடிக்கவும், தமிழ் எழுத்துக்களில் சில சீர்திருத்தங்கள் செய்யப்படுவது நலம் என்று நினைக்கிறேன்.

ஒரு மொழியின் சிறப்புக்கும், வளர்ச்சிக்கும் மற்றொரு காரணம் உண்டு. ஒரு மொழியை எவ்வளவுக்கெவ்வளவு சுலபமாகக் கற்றுக் கொள்ள முடிகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது வளர்ச்சியடைவதும் சுலபமாகிறது. சுலபமாகக் கற்றுக் கொள்ளப்படுவதற்கு எழுத்துகள் சுலபத்தில் எழுதக் கூடியனவாகவும் எண்ணிக்கையில் குறைவாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

தமிழ் எழுத்துக்களின் வேறுபட்ட வடிவங்களையுடைய எண்ணிக்கை நூறுக்கு மேலாக இருப்பதைக் குறைத்து 54 எழுத்துக்களுக்குள் அடக்கி விடலாம் என்பதை விளக்கிக் காட்டி, இன்றைய தமிழ் எழுத்துக்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் பல என்பதைப் பற்றிப் பலருக்கும் அபிப்பிராயம் இருந்தாலும் எவரும் தைரியமாய் முன்வராமலே இருக்கின்றார்கள். இவ்வளவு பெரிய காரியத்துக்கு பாஷை ஞானம், இலக்கண ஞானம், பொதுக் கல்வி இல்லாத ஒரு சாதாரண மனிதன் முயற்சிக்கலாமா என்பது ஒரு பெரிய கேள்வியாக இருக்கலாம். அது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் தகுந்த புலமையும், பாஷா ஞானமும் இலக்கண அறிவும் உள்ளவர்கள் எவரும் முயற்சிக்காவிட்டால் என்ன செய்வது? அதனால் நான் செய்கிறேன் என்று தந்தை பெரியார் கூறுகின்றார்.

தந்தை பெரியார் அவர்கள் மேலும் விளக்குகையில், சாதாரணமாகத் தமிழ் உயிர் எழுத்துக்களில் ஐ, ஔ ஆகிய இரண்டு எழுத்துக்களைக் குறைத்து விடலாம். இந்த இரண்டும் தேவையில்லாத எழுத்துக்கள். மேலும், இவை சுட்டெழுத்துக்களே ஒழிய, தனி எழுத்துக்கள் அல்ல.

எவ்வாறு எனில், ‘ஐ’ என்பதை அய் என்றும், ஔ என்பதை அவ் என்றும் எழுதலாம் என்று பெரியார் விளக்குகிறார். மேலும் நடைமுறையில்

இருந்த ‘ஐ’ முதலிய எழுத்துகளை ணா, றா, னா, ணை, லை, ளை, னை, ணொ, றொ, னொ, ணோ, றோ, னோ முதலிய எழுத்துகளை ணா, றா, னா, ணை, லை, ளை, னை, ணொ, றொ, னொ, ணோ, றோ, னோ என்றவாறு மாற்றம் செய்து தனது பத்திரிகைகளான ‘விடுதலை’, ‘குடிஅரசு’, ‘உண்மை’ போன்ற இதழ்களில் 1935ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தினார். தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவினையொட்டி தமிழக முதல்வராக இருந்த மாண்புமிகு எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் 19.10.1978 ஆம் ஆண்டு முதல் தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்த அரசாணை பிறப்பித்துப் பெருமை தேடிக் கொண்டார்.

**“தமிழ் மொழியானது ஏன் காட்டுமிராண்டி மொழி என்று சொல்லுகின்றேன்? எதனால் சொல்லுகிறேன் என்று இன்று கோபித்துக் கொள்ளும் யோக்கியர்கள் ஒருவர் கூட சிந்தித்துப் பேசுவதில்லை. வாய் இருக்கிறது எதையாவது பேசி வயிறு வளர்ப்போம் என்று நினைப்பது.**

அறிவையோ, மானத்தையோ, ஒழுக்கத்தைப் பற்றிக் கூடச் சிந்திக்காமல் பேசி வருகிறார்கள். இப்படிப்பட்ட இவர்கள் போக்குப்படியே சிந்தித்தாலும் தமிழ் மொழி மூவாயிரம், நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட மொழி என்பதை தமிழின் பெருமைக்கு ஒரு சாதனையாய்ச் சொல்லிப் பேசுகிறார்கள்.

நானும் **‘தமிழ் காட்டுமிராண்டி’ மொழி என்று அதைத்தானே முக்கிய காரணமாய்ச் சொல்லுகின்றேன்.** பிரிமிட்டிவ் (Primitive) என்றால் அதன் தத்துவம் என்ன? பார்பேரியன், பார்பேரியனிசம் என்றால் அதன் பொருள் என்ன? 3000, 4000 ஆண்டுகளுக்கு முன் என்பது பிரிமிட்டிவ், பார்பேர்யனிசம் என்பதற்கு அக்கால மக்கள் அறிவு, அக்கால மக்கள் நிலை முதலியவை என்பதற்கு என்ன பேதம் கற்பிக்க முடியும். ‘நாகரிகம் அடையாத கூட்டம் என்றுதானே பொருள்’ என்று விளக்குகிறார்.

தமிழ்ப்புத்தாண்டு கதை சொல்லுகிறார்கள். 60 ஆண்டுகள் என்று பிரபவ, விபவ, குரோதி, விரோதி ஆண்டுகள் என்று சொல்லுகின்றார்களே. இந்த 60 ஆண்டுகளை எடுத்துப் பார்த்தால் ஒரு ஆண்டாவது தமிழ்ச் சொல் பெயர் உண்டா? தமிழ் வருஷப் பிறப்பு என்று சொல்லுகிறார்கள். தமிழர் ஆண்டு என்று சொல்லுகிறார்கள் வெட்கப்பட வேண்டாமா?

வெறும் புராணங்களும் இதிகாசங்களும் மட்டும் கொண்ட ஒரு மொழி வளர்ச்சி அடையாது, அறிவியல் கருத்துக்களை, உலக மாற்றங்களை,





பொருளாதார நடைமுறைகளை உடனுக்குடன் அறிய முடிவெடுக்க ஆங்கில அறிவு கட்டாயம். என்பதே பெரியார் கொள்கை.

தமிழும், தமிழ்ப் புலவர்களும் எப்படி காலத்திற்கு ஏற்பத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பெரியார் அளவுக்கு அதிக அக்கறையோடு கூறுகிறார்.

“இந்த நாட்டுத் தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நம்மைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள ஏதாவது சாதனமிருக்கிறதா?

பள்ளியில் படிக்கும்போது தெரிந்து கொள்ளலாம் என்றால் அங்கு தமிழர்களைப் பற்றி ஒரு சேதியும் இல்லை. எவ்வித பாடப் புத்தகமும் இல்லை. அய்யர் பிராமணன் போன்ற வார்த்தைகள் காணப்படுகின்றனவே அன்றி, “தமிழர் – திராவிடர்” என்ற வார்த்தைகளுக்கு அங்கு இடம் கிடையவே கிடையாது. மேல் வகுப்புக்கு வந்தால் தமிழ்நாட்டு சரித்திரம் இல்லை. இராமாயணம், மகாபாரதம், அசோகன், முஸ்லீம், வெள்ளையர் ஆட்சியும்தான் விளக்கப்படுகிறதே தவிர திராவிடர் தமிழர் என்கிற ஆட்சியைப் பற்றி காண்பது மிகவும் அருமை. அப்படி ஏதாவது காணப்பட்டாலும் அது பெரும் பித்தலாட்டமும் மோசடியுமாய் இருக்கும்.

ஆகவே, நமது (தமிழ்) பிள்ளைகள் நம்மைப் பற்றித் தெரிந்து கொள்ள வழியில்லை. ஆரியருக்குமுன் தமிழன் என்ன சமயத்தவன் அவன் கடவுள் எப்படிப்பட்டது. அவன் வாழ்க்கை முறை எப்படிப்பட்டது என்ற சரித்திர ஆதாரம் ஏதும் இல்லை. தமிழர்கள் காட்டுமிராண்டியாக இருந்தார்கள் என்பதற்கே ஏராளமான ஆதாரங்கள் கற்பிக்கப்படுகின்றன. நம் பிள்ளைகளுக்கு நம்மைப் பற்றி கீழ் வகுப்பிலிருந்து தெரிந்து கொள்ள வழி செய்தால் ஒழிய, எப்படி அவர்கள் தங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

பாட புத்தகக் கமிட்டியில் உள்ளவர்கள் தமிழர்களுக்கு மான உணர்ச்சி, நாட்டு உணர்ச்சி, இன உணர்ச்சி இருக்குமானால் இராமாயண, மகாபாரதக் கதைகளைச் சரித்திரத்தில் சேர்க்கச் சம்மதிப்பார்களா?

பண்டிதர்கள், உபாத்தியாயர்கள் இவற்றை நாம் சொல்லும் போது நம்மீது பாய்கிறார்களே தவிர, தமிழர்களுக்கு இழிவு தரக் கூடிய, நமக்குத் தொடர்பில்லாத, நமது முற்போக்கைத் தடுக்கக் கூடிய, பகுத்தறிவுக்கு ஒவ்வாதவற்றை கற்பிப்பது குறித்து கவலைப்படுவதில்லை. இனியாவது

தமிழ்ப் பண்டிதர்கள் இதில் கவனம் செலுத்த மாநாடு கூட்டி, இவற்றைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தமிழிலே, தமிழ்மொழி இலக்கியத்திலே, தமிழர் நல்வாழ்விலே, தமிழர் தன்மானத்திலே, தமிழர் தனி ஆட்சியிலே கவலையுள்ள நம் செல்வர்களுக்கு (கல்வி நிலையம் நடத்துகின்றவர்களுக்கு) இந்தக் காரியமெல்லாம் முக்கிய கடமையல்லவா என்று கேட்கிறோம்.

நிலைகுலைந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, உணர்ச்சி ஊட்டி அவர்களுக்குத் தன்மான உணர்வும், விடுதலை உணர்வும் ஊட்ட வேண்டாமா? தமிழ் மக்களை (அவர்கள் படித்தவர்களானாலும், பண்டிதர்களானாலும், மந்திரி, கவர்னர், வைசிராய், நிர்வாக சபை மெம்பர் ஆனாலும் பகுத்தறிவு விஷயத்தில் மரக்கட்டையாக்கிவிட்டு) தமிழர் அல்லாதவர்கள் அடிமைப்படுத்திச் சுரண்டிக் கொள்ளை கொள்வதைத் தடுக்க வேண்டாமா?

தமிழ் மக்களின் நலத்தில் கவலையுள்ளவர்கள் எது எதற்கு என்றுதான் அழுவது? தமிழர்க்குத் தொண்டாற்றுவது என்றால் என்னதான் அர்த்தம்? ஆகவே, பிள்ளைகளில் மூடக்கருத்துக்களை, தமிழர் விரோதக் கருத்துக்களை நீக்கி, அறிவு வளர்ச்சிக்கு, மான உணர்ச்சிக்கு உகந்த பாடங்களை வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நமக்குச் சுதந்திரம் உள்ள கல்வி இலாகாவில் இம்மாற்றம் செய்யாமல் வேறு எதில் விடுதலை பெறப் போகிறோம்?

**(‘குடிஅரசு’ 12.02.1944)**

“நம்முடைய தமிழ்ப்புலவர், பண்டிதர், தமிழறிஞர்களுக்கு இலக்கிய, இலக்கண அறிவு இருக்க முடியுமே தவிர உலகம், சரித்திரம், பூகோளம், பகுத்தறிவு, விஞ்ஞானம் என்னும் துறைகளில் அறிவோ, ஆராய்ச்சியோ இருக்க முடியுமா? இதைச் சொன்னால் நம் புலவர்களுக்குக் கோபம் வருவதில் குறைவில்லை. ஆனால் அப்புலவர்கள் தங்களைப் பற்றிச் சிந்திக்கட்டும். சமூகப் பயனுள்ள காரியம் ஏதாவது அவர்கள் செய்கிறார்களா? செய்யத் தகுந்த சக்தியோ, அறிவோ அவர்களுக்கு இருக்கிறதா? (புராண, இலக்கிய அறிவு தவிர வேறு துறை அறிவு பெற்றுள்ளார்களா?)

புலவன், வித்வான் என்றால் அறிவுடையவன் என்பதாகும். நம் புலவர்களுக்குப் பொது அறிவோ, பொதுமக்களுக்கு வழி காட்டும் திறமையோ, முன்னேற்றத்திற்கு வழிகோலவோ, புதுமைகள் செய்யவோ இன்றைய புலவர்களுக்குப் புலமை உள்ளதா? அதற்கு அவர்களுக்குப் பயிற்சி உண்டா?......

புலவர்கள் அல்லது அறிஞர்கள் என்பவர்களுக்கு உலக மாறுபாட்டை அறிந்து, அதற்கேற்ப வாழ்வியலை அமைத்துக் கொடுக்க வேண்டியது அவர்கள் கடமையாகும். ஆனால், நம் புலவர்கள், பண்டிதர்கள் மாறுபாட்டை விரும்பாதவர்கள். 3000 வருஷத்திற்கு முன்பிருந்ததை, மூடச் செய்திகளைப் பரப்பவும், நிலைநாட்டவும் முயற்சிப்பவர்கள்.

இப்படிப்பட்ட கல்வியைக் கல்வியாளர்களைக் கொண்ட நாடோ, மக்களோ எவ்வாறு முன்னேற்றமடைய முடியும்? புலவர்களைக் குறை கூறுவதாகக் கொள்ளாமல், பாராட்டும்படியாக அவர்கள் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே இதைச் சொல்கிறோம் என்று கொள்ளவேண்டும்.இளம் புலவர்கள் சிலர் நம் கருத்தை ஏற்றுச் சமுதாய மாற்றத்திற்குப் பாடுபடுவது மகிழ்ச்சியைத் தருகிறது. என்றாலும், இன்னும் துணிவாய் வெளியில் வர வேண்டும்.'' **('குடிஅரசு' 15.01.1944)**

மேலும்,

**"மொழி என்பது உலகப் போட்டிப் போராட்டத்துக்கு ஒரு போர்க் கருவியாகும். போர்க் கருவிகள் காலத்துக்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும். அவ்வப்போது கண்டுபிடித்துக் கைக்கொள்ள வேண்டும்''**

**மொழியைப் பற்றிய தெளிவான சிந்தனையாக இது விளங்குகின்றது; உலகில் மக்கள் வாழ்க்கையென்பது போட்டியும் போராட்டமும் நிறைந்தது என்பதை யாவரும் அறிகின்றோம்.**

இந்தப் போட்டிப் போராட்ட வாழ்வில் வெற்றியோ, தோல்வியோ அடைவதற்கு மொழி ஒரு பெரிய காரணமாக இருக்கின்றது. இங்குப் போராட்டம் என்பது ஆயுதங்கள் கொண்டு சண்டையிடுவது மட்டும் இல்லை. ஆனால், அறிவு கொண்டு வாய்ப்புகளை மற்றவருக்கு விடாமல் உள்ள வாய்ப்புகள் அவ்வளவையும் தமக்கே பயன்படுத்திக் கொள்ளுதலும் போராட்டம்தான். தொடர்ந்து அதனையே நிலைபெறச் செய்வது என்பதும் இப்போராட்டத்தின் வெற்றிதான். சான்றாக, நம் நாட்டுப்

பார்ப்பனர் இந்தியா முழுமையிலும் கல்வி வாய்ப்புகளையும் உத்தியோக வாய்ப்புகளையும் தங்களுடையதாகத் தொடர்ந்து பல நூறு ஆண்டுகளாக வைத்துக் கொண்டிருக்கின்றனர். இது ஆயுதம் தாங்கிப் போர் புரிந்து பெற்ற வெற்றியல்ல. இது அறிவு அடிப்படையில் சூழ்ச்சியையும், தந்திரத்தையும் பயன்படுத்தி வென்ற வெற்றியாகும். இன்றும் அந்த வெற்றியை அடைந்து கொண்டிருக்கின்றனர். இந்த நீண்ட நெடிய போராட்டத்தில் உள்ள உண்மைகளை நன்குணர்ந்த நம் பெரியார், **தம்முடைய அறிவார்ந்த போராட்டத்தால் வென்று,** மொழி என்பது (கல்வி என்பது) உலகில் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை வெல்லவும், வீழ்த்தவும் அதை ஒரு கருவியாய்ப் பயன்படுவதால் அதை ஒரு கருவியாய் அவ்வப்போது புதுப்பித்துப் பயன்படுத்த வேண்டும். மாறாக, பூசிப்பதற்குரியதாகக் கொள்ளக் கூடாது என்றார். வாழ்வில் பல துறைகட்குப் பயன்படும் அறிவியல், பொறியியல், கணிதம், சட்டம் போன்றவை தமிழில் நிறைய ஆக்கப்பட வேண்டும், மொழிபெயர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் தமிழால் இப்போட்டி உலகில் போட்டியிட்டு நிலைக்கமுடியும் என்றார் பெரியார்.

தமிழிலும், தமிழ்ப் புலவர்களிடமும் உள்ள குறைகளைச் சுட்டி, மேம்படுத்த கடுமையாகப் பேசிய பெரியார் தமிழை உயர்த்திப் பேசத் தவறவில்லை.

1. "தமிழ்மொழி செய்யுள் தன்மையில் கிரேக்க மொழியை விடவும், இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியையும் வெல்லக்கூடியது" என்று வின்ஸ்ஸோ கூறுகிறார்.

2. கால்டுவெல், "தமிழ்மொழி பண்டையது, நலஞ்சிறந்தது, உயர்நிலையில் உள்ளது, இதைப் போன்ற திராவிட மொழி வேறெதுவும் இல்லை" என்று சிறப்பித்துக் கூறுகிறார்.

3. சிலேட்டர் என்பவர், "திராவிட மொழி எல்லாவற்றுள்ளும் மக்கள் பேசும் மொழிக்கு உரிய தன்மையைப் பெற்றுள்ள மொழி தமிழ் மொழியே; தக்க அமைப்புடையதும் தமிழ்மொழியே" என்கிறார்.

4. மர்டாக் என்பவர், "துராணிய மொழிகள் பலவற்றுள்ளும் மிகச் சீரிய மொழியாயும், அழகிய இலக்கியங்களைப்

பொருந்தப் பெற்றதாயும் விளங்குவது தமிழே என்றும் கூறியுள்ளார்.

தாய்மொழியிடத்து அன்பில்லாதவர்களுக்குத் தாய்நாட்டின் மீதும் அன்பிராது. எனவே, ஒவ்வொரு தமிழ் மாணவனும் தமிழ் கற்க வேண்டும்.

ஜாதிபேதம் தமிழரிடம் இல்லை. எகிப்து, கிரேக்கம், ரோம் முதலிய நாடுகளோடு அன்றைக்கே வணிகத் தொடர்பு கொண்டவர்கள் தமிழர்கள்.

தமிழ்ப் பெண்களும் கல்வியில் புலமை பெற்று விளங்கினர்.

தமிழ் மன்னர்கள் நீதியோடு ஆண்டனர்.

தமிழர்கள் அஞ்சாது வீரப்போர் புரியும் ஆற்றல் உள்ளவர்கள்.

நம் தாய்நாட்டுத் தமிழர்கள் ஒவ்வொருவரும் தாய்மொழியாம் தமிழைக் கட்டாயம் கற்று சிறப்புப் புலமை அடைய வேண்டும். இதனால் தமிழ் வளர்ச்சி அடையும், தாய் நாடான தமிழ்நாடு சிறப்புற்றோங்கும்.

**(‘குடிஅரசு’ 18.12.1943)**

என்று தமிழ் தமிழர் மேன்மையை எடுத்தியம்பும் கட்டுரையைக் குடிஅரசு இதழில் வெளியிட்ட பெரியாரா தமிழுக்கும், தமிழர்க்கும் எதிரானவர்? தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

இவை மட்டுமல்ல, தமிழுணர்ச்சியைத் தமிழைப் பரப்ப வழிகளையெல்லாம் குடிஅரசில் வெளியிட்டார்.

1. தமிழர் தமிழ்ப் பெயர் இட வேண்டும்.
2. தமிழ்நாட்டுப் பிரிவு, ஊர், தெரு, வீடு பெயர்கள் தமிழில் இருக்க வேண்டும்.
3. வீட்டிலும் கடைத்தெருவிலும், அலுவலகங்களிலும், வழிப் போக்கிலும் ஆங்கிலச் சொல்லும், சமஸ்கிருதமும் தமிழில் கலப்பதைத் தவிர்க்க வேண்டும்.
4. தமிழில் இல்லாதவற்றிற்கு ஆங்கிலச் சொல்லைக் கலக்கலாம்.
5. தமிழில் இல்லாதவற்றிற்குப் புதிய சொல் உருவாக்க வேண்டும். அறிஞர்கள் உருவாக்கும் புதுச் சொல்லைப் பொது மக்கள் பயன்படுத்த வேண்டும்.
6. கோயில்களிலும், விழாக்களிலும் தமிழே ஒலிக்க வேண்டும்.
7. தமிழைப் பிழைபட வழங்குபவரைத் திருத்த வேண்டும்.

என்று சென்னை தமிழறிஞர் கழகத்தின் கோரிக்கைகளை 04.12.1943 ‘குடிஅரசு’ ஏட்டில் பெரியார் வெளியிட்டு தமிழைத் தூக்கி நிறுத்த முயன்றார்.

சென்னை சாந்தோம் சாலையில் அமைந்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அமைத்த ‘முத்தமிழ் நிலையம்’ அழைப்பை ஏற்றுச் சென்ற பெரியார் ஆற்றிய உரையில்,

“நீங்கள் ஆரம்பித்திருக்கும் இந்த அமைப்பிற்கு தமிழனிடத்தில் உண்மைப் பற்றும், தமிழும் தமிழரும் மேன்மை அடைய வேண்டும் என்ற உண்மை கவலையும் உள்ள ஒவ்வொரு சுத்தமான தமிழ் மகனும் ஆதரிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

உங்களுக்கு நண்பர் பாரதிதாசன் அவர்கள் கிடைத்திருப்பது உங்கள் நல்வாய்ப்பிற்கும் உங்கள் வெற்றிக்கும் அறிகுறியாய் இருக்கும். இன்று இந்த நாட்டில் தமிழும், தமிழ்க் கல்வியும், தமிழ் இசையும் தமிழர்களுடைய முன்னேற்றத்திற்கும், தன்மானத்திற்கும் பயன்படும்படி மக்கள் உணர உழைக்க ஏற்ற கவிகள் செய்து மக்களை ஊக்குவிக்க அவர் ஒருவரே என் கண்ணுக்குத் தென்படுகிறார். அவரை நாம் பயன்படுத்திக் கொள்வதில் நம் வெற்றித் தன்மையிருக்கிறது.

உங்கள் கழகம் வெற்றியடைய தளராத முயற்சி, ஒற்றுமை, கட்டுப்பாடு என்பவைகளோடு, ஒழுக்கம், நாணயம் என்பவைகளும் தக்கபடி கவனித்துப் பின்பற்ற வேண்டியதாகும். இம்மாதிரி பணிகளுக்கு என்னாலான உதவியைச் செய்ய எப்போதும் காத்திருக்கிறேன்.

தமிழ்நாட்டு இளைஞர்களும், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, தன்மானப் பற்று உண்மையாய்க் கொண்ட செல்வவான்களும் உங்களுக்கு உதவ வேண்டியது அவர்களது கடமையாகும் என்று பேசினார் பெரியார்.

**(‘குடிஅரசு’ 08.01.1944)**

தமிழன் தலை நிமிர்ந்து தன்மானத்தோடும், கல்வியும், அறிவும், உயர்வும் பெற்று வாழ வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் தட்டியெழுப்பிக் கொண்டேயிருந்தார்.

“ஏ தமிழா! உன்னுடைய நாட்டில் நீ தாசி மகனா? உனது செல்வத்தாலும், உழைப்பாலும் கட்டப்பட்ட பொது இடங்களில் உனக்கு உரிமை இல்லையா? உனது நாட்டில் உன்னை நம்பி வைத்திருக்கும் உணவுச்

சாலையில் நீ தீண்டப்படாதவன் என்று உனக்கொரு தனியிடம் ஒதுக்கி வைப்பதா?'' என்று அடிக்கடி உணர்வூட்டினார். **('குடிஅரசு' 04.12.1943)**

தமிழ் மொழிக்கு மட்டுமல்ல தமிழர் தழைக்கவும் பெரியார் பாடுபட்டார். திராவிடர் இயக்கம் பாடுபட்டது.

கே.பி. சுந்தராம்பாள் என்ற கீழ் ஜாதிப் பெண் புகழ் பெறுவது விரும்பாத ஆரிய கூட்டமும், ஆரியப் பத்திரிகைகளும், அவரது இசைப் புலமையை இழித்துப் பேசியபோது, அந்த அம்மையாருக்கு ஆதரவாக குரல் கொடுத்தவர் பெரியார். இத்தனைக்கும் அந்த அம்மையார் சுயமரியாதை இயக்கத்திற்கு எதிராகச் செயல்பட்டவர்.

``தமிழ்நாட்டில் தமிழ்ப் பாட்டுக்கள் பாடப்பட வேண்டும்; தமிழில் இசை இருக்க வேண்டும் என்று கூறுபவர்களை முட்டாள்கள் எனக் கூறுவோருக்குத் தமிழ்நாடு இடங் கொடுத்துக் கொண்டிருக்கிறது. தமிழர்களிடையில் தமிழ்நாட்டில் தமிழ் இசைக்கு எதிராக இருப்பவர்கள், எதிராக வேலை செய்பவர்கள், தமிழில் பாட மறுப்பவர்கள், தமிழர்களின் இக்கோரிக்கையை ஏளனம் செய்பவர்கள் யார்? ஆரியர்கள்தானே. இவர்களைத் தவிர, இத்துணிவுடன் தமிழர்களின் உப்பைத் தின்றுவிட்டு, தமிழ்நாட்டில் வாழ இடம் பெற்று, தமிழர்களின் உழைப்பால் உடலை வளர்த்துக் கொண்டு, தமிழர்களையும் அடிமைப்படுத்தி, தாழ்ந்தவர்களாக்கி, தமிழ் கலைகளுக்கு ஆரிய மேற்பூச்சிட்டு, தமிழோடு வடமொழியைக் கலந்து கெடுத்து, தமிழர்களின் வாழ்வைச் சீர்குலைத்து, தமிழ்நாட்டைத் தங்களுடைய அடிமை நாடாக ஆக்கி வைத்துக் கொள்வதற்கு (பன்னூற்றாண்டு காலமாக) பெரும் துணிவு ஆரியர்களைத் தவிர்த்து வேறு யாருக்கு இருக்க முடியும்?

இந்த ஆரிய வர்க்கத்தார் தமிழரிடையே தங்கள் சதிச் செயல்களை நிறைவேற்றி, தமிழர்களையும் தமிழ்நாட்டையும் அடிமைப் படுகுழியில் ஆழ்த்திக் கொண்டு வருவதற்கு, இவ்வளவு துணிவாக அவர்கள் செயல்படுவதற்குத் தமிழர்களின் தைரியம் இன்மையே காரணம். ஓரிரு எதிர்ப்புகள் இருப்பினும் அது போதிய அளவு இல்லை. படித்த தமிழர்கள்கூட ஆரியத்திற்கு அடிவருடிகளாகவே இருந்து வருகின்றனர்; தமிழர்க்குத் துரோகமும் செய்கின்றனர். ஒரு சிலர் விலாங்குமீன்போல் இரு பக்கமும் நடிக்கின்றனர்.





தங்கள் தாய்நாட்டிற்கும், தாய்மொழிக்கும் எதிராக உள்ளவர்கள் எவராயினும் அவர்களை வீழ்த்த, விரட்டியடிக்க முன்வர வேண்டும். எவர் பாராட்டுக்கும், புகழ் மொழிக்கும் இச்சை வைக்காமல் உழைத்தால்தான் இதைச் சாதிக்க முடியும்.

1. தமிழ்ப் பாட்டுக்கள் முழுக்க முழுக்க தமிழ் மொழியில் இருக்க வேண்டும். 100க்கு 99 வடமொழி வார்த்தைகள் கலந்ததாக இருக்கக் கூடாது.
2. புராண மூடநம்பிக்கைகளைக் கொண்ட பாடல்களாக இருக்கக் கூடாது.
3. நல்ல தமிழில், இயற்கை எழில்களையும், தமிழரின் வீரத்தையும், அன்பையும், சமத்துவத்தையும், மானத்தையும், நேர்மை, நீதி நெறிகளையும், தமிழ்நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றையும், ஒற்றுமையையும், வரலாற்று அறிவையும் உள்ளடக்கி இருக்க வேண்டும்.
4. வாழ்வியல் கேடுகளை அகற்றி, அறிவூட்டக் கூடியதாக இருக்க வேண்டும்.

இவற்றைச் செய்ய தமிழர்கள் துணிவு கொள்ளாதவரை, தமிழ்நாட்டுச் செல்வர்கள் இதற்குத் தொண்டாற்ற முன்வராத வரையில் நம் முயற்சி வெற்றி பெறாது.

தமிழர்கள் இனியேனும் உணர்வு பெற்று, உற்சாகமடைந்து, துணிவு கொண்டு, தங்கள் மொழியையும், நாட்டையும் நயவஞ்சகர்களிடமிருந்து காக்க வேண்டும். தமிழ் இசையின் பெயராலும், பிற வகையிலும், தமிழர்களையும் தமிழ் மொழியையும் குலைப்பதற்குச் செய்யப்படும் முயற்சிகளை வேருடன் களைந்து, தமிழ் உயர்வு பெறும் வகையில் வழிகாண வேண்டும். முன் வாருங்கள் தமிழர்களே! அதற்குத் தருணம் இதுதான். **(25.12.1943 ‘குடிஅரசு’ தலையங்கம்)**

**இப்படியெல்லாம் பெரியார் தமிழுக்கும் தமிழர்க்கும் நாள் தவறாது ஓயாது உழைத்ததால்தான், அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ்ப் பேரவை இலக்கிய மன்றத்தார் அவருக்கு சிறந்ததொரு பாராட்டு மடல் வரவேற்பிதழாக அளித்தனர்.**

‟தமிழகத்தின் தனிப் பெருந் தலைவர், பெருந்தகை, பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்

பேரவை, தமிழ் இலக்கிய மன்றத்தார் ஆகியோர் இன்புடன் படித்து அன்புடன் அளித்த,

**வரவேற்பிதழ்**

**தமிழ்நாடு தந்த தக்கோய்!**

**வருக! வருக!**

**தங்கள் வரவு நல்வரவாகும்!**

வண்டமிழ் நாட்டு வளர்ச்சி எண்ணி உடல் வாட்டமுறினும் உள்ளம் வாட்டமுறாது. உழைத்திடும் உண்மைத் தலைவர் வருக! முன்னோர் மொழி பொருளேயன்றியவர் நிலையும் பொன்னே போற்றுவோம் போற்றுவோம் என்றெண்ணிப் புரிந்து வரும் செயல்களே, கீழ்நாட்டைக் கீழ்நாடாக்கிற்று என்ற உண்மையை உணர்த்திய உணர்வின் வடிவோய் வருக! தமிழரின் மேன்மையைத் தடுத்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன் என்று வஞ்சினக் காஞ்சி கொண்டு தமிழ் மொழியின் வளர்ச்சியைக் குலைப்பதற்குத் தறுகனோடு புகுத்தப்பட்ட இந்தியைத் தடுத்து நிறுத்திய செயற்கறிய செய்த செம்மலே வருக! அவரவர் தம் நாகரிகத்தை அளந்து காட்டவல்லது அவரவர் தம் பொருளறி இசையே எனப் புகன்று தனித் தமிழிசையே தமிழ்நாட்டிற்குத் தக்கதென்று அன்று முதல் புகன்று வரும் தமிழர் தலைவரே வருக! வருக!

அறிவுத்துறை வல்ல அண்ணலே! அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மாணவ மாணவிகளாகிய யாங்கள் அளப்பிலா உவகை கொள்கிறோம். (எங்களுக்கு முன்னும் பின்னும் பயில்வோருக்கு தங்களைச் சந்திக்கும் வாய்ப்பு இல்லை)..........................................................

திராவிட நாட்டுச் சீர்சால் கிழவ! மனிதன் மனிதனாக வாழ வேண்டும், அதற்கு அறிவைப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தினை வழங்கிய கருவூலமே வருக! ஆணும் பெண்ணும் அமைப்பால் வேறுபட்டோராயினும் வாழ்வில் ஒன்றுபட்ட உயர்வுடையரே எனும் நம் பொன்மொழி தழைக்க! வேற்றுமையை வளர்த்து வீணர்களை வரவேற்பது, விளக்கமற்ற மதவுரைகளே எனும் நம் விரிவுரை செழிக்க! ஆக்கந்தருவன மக்களின் தொண்டேயாகும் என்று, ஆண்டுகளாக ஆண்மையிழந்த தமிழ்நாட்டிற்கு, அடுக்கடுக்காய்ச் செய்து வரும் அரும்பெரும் பணிகள் வாழ்க! சோர்வைப் போக்கும் சுடரொளி வழங்கும் தோன்றால் வாழ்க!

பெருநலம் பயக்கப் புதுநெறி வகுத்த இருபதாம் நூற்றாண்டு பெரியோய் இனிது வாழ்க!

சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

07.02.1944 **('குடிஅரசு' 26.02.1944)**

உலகில் உயர் தகுதி பெற்று அன்றைக்கு விளங்கிய, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையே பெரியாரை தமிழர் தலைவர், தமிழுக்கும், தமிழர்க்கும் தொண்டாற்றி ஏற்றம் பெறச் செய்த ஏந்தல் என்பதிலிருந்து பெரியார் எந்த அளவிற்குத் தமிழுக்குத் தொண்டாற்றினார் என்பதை அறியலாம், தமிழை உயர்த்திப் பிடித்தார் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

தமிழ் உயர்வு பெற, மேன்மை பெற, இவ்வளவு முயன்ற பெரியார், தமிழுக்கு இடுக்கண் வரும் போதெல்லாம் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்தார். தமிழ்மொழி மீது இந்தி ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்று எண்ணிய பெரியார் 1926 லே இந்தி மொழியைப் பரப்ப முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது, அதை எதிர்த்து, தமிழுக்குத் துரோகமும் இந்தி மொழியின் இரகசியமும் என்று சித்திரபுத்திரன் என்ற பெயரில் கட்டுரை எழுதினார் பெரியார்.

இந்திக்குப் பெருந்தொகை செலவிடப்படுவதால் எந்தப்பயனும் இல்லை. 100க்கு 97 பேர் ஆரியப் பார்ப்பனர்களே அதைப் படிக்கின்றனர். எந்தத் தமிழரும் அதைப் படிக்கவில்லை. அப்படியிருக்க தமிழ் மொழி வளர்ச்சிக்கு இந்திக்குச் செலுத்தும் அக்கறையில் 100 இல் ஒருபங்குகூட செலுத்தவில்லை என்று கடுமையாகச் சாடினார் பெரியார்.

1938இல் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த சி. இராஜகோபாலாச்சாரியார் கட்டாய இந்தித் திணிப்பைக் கொண்டு வந்த போது, அதை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டு இரண்டாண்டு சிறைத்தண்டனை பெற்றார். பின்பு, 1948ஆம் ஆண்டு மறுபடியும் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் (ஓ.பி.ஆர்) முதலமைச்சராக இருந்த போது கட்டாய இந்தித் திணிப்பு ஏற்பட்ட போது, தந்தை பெரியார் போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றி கண்டார். 1952, 1953, 1954 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து இந்தித் திணிப்பிற்கு எதிராக இரயில் நிலையங்களில் உள்ள பெயர் பதாகைகளில் உள்ள இந்தி எழுத்துகளை தார் கொண்டு அழித்துப் போராட்டம் நடத்தினார். 1955ஆம் ஆண்டு கட்டாய இந்தித் திணிப்பை

எதிர்த்து தேசியக் கொடியை எரிக்கும் போராட்டத்தை அறிவித்தார். உடனே, தமிழக முதலமைச்சராக இருந்த கல்வி வள்ளல் காமராசர் அளித்த உறுதிமொழியின் காரணமாக போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. தமிழ் நாட்டு மக்கள் விரும்புகிறவரை இந்தி திணிக்கப்படமாட்டாது என்று இந்திய பிரதமர் நேரு அவர்கள் உறுதி அளித்தார். அதன்பேரில் இந்தி திணிப்பு போராட்டம் கைவிடப்பட்டது.

தமிழர் இல்லத் திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் தமிழ் மொழியிலும், கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்தல், தமிழ் இசை, அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக உரிமை போன்ற பல உரிமைகளைத் தமிழனுக்குப் பெற்றுத் தந்து தமிழுக்கும் பெருமை சேர்த்தவர் தந்தை பெரியார் ஆவார்கள்.

தமிழன் வீட்டுத் திருமணத்தில், துக்க நிகழ்வுகளில் சமஸ்கிருத மந்திரம் ஒலிப்பதை எதிர்த்த ஒரே ஒருவர் பெரியாரையன்றி வேறு யார்? தமிழ்ப் பற்றில்லாமலா பெரியார் இதற்காகக் காலமெல்லாம் போராடினார்? ‘குடிஅரசு’ ஏட்டில் தமிழுக்காக எழுப்பப்பட்ட உணர்வு பொங்கும் முழக்கங்களை கீழே காணுங்கள்.

“ஓ, தமிழனே! தமிழன்னை உன் கடமையைச் செய்ய அழைக்கிறாள். ஆரியக் கொடுமையிலிருந்து தன்னை விடுவிக்கும்படி ஓலமிட்டுக் கொண்டிருக்கிறாள். தாய் நன்றி கொன்ற மகனும், தாய்ப் பணிக்கடமை கொன்ற மகனும் மனிதனாவானா? **(‘குடிஅரசு’ 29.8.1937)**

“தமிழன்னை மானபங்கம். தமிழ்த்தாயின் துகிலை (சேலையை) ஆச்சாரியார் உரிகிறார். தமிழர்கள் ஆதரவால் துகில் (துணி) வளர்ந்து கொண்டே போகிறது. உண்மை தமிழர்களே என்ன செய்யப் போகிறீர்கள்?”

**(‘குடிஅரசு’ 19.12.1937)**

“நம் தமிழ்த்தாய் தமிழுணர்வுக் குறைவால் வருந்திக்கொண்டிருக்கும்போது, அயல்நாட்டினனான இந்தி என்னும் பெண்ணை அழைத்து வந்து கட்டாயமாக நுழைப்பதைத் தமிழ்த் தாயின் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.”

**(‘குடிஅரசு’ 30.11.1938)**

மொழியை பெண்ணாக, தாயாக, சேலை உடுத்திக் கொண்டிருப்பதாக உருவகப்படுத்திப் பார்ப்பது பெரியாருக்கு உடன்பாடில்லாத செயல்கள்

என்றாலும், தமிழ்மொழியின் பாதுகாப்புக்காக வேண்டி, தமிழரிடையே உணர்ச்சி ஊட்டுவதற்காக, இவற்றைக் 'குடிஅரசு' ஏட்டில் வெளியிட்டார்.

தமிழ் மொழிக்காக அவர் பகுத்தறிவு பார்வையைக்கூட சற்று தள்ளி வைத்தார் என்றால் இது பெரியாரிடம் எதிர்பார்க்க முடியாத ஒன்று. எதற்கும் சமரசம் செய்து கொள்ளாத பெரியார் தமிழுக்காக இதைச் செய்தார் என்னும்போது, அவர் தமிழ்மீது கொண்ட பற்றுக்கு வேறு என்ன சான்று வேண்டும்.

அவர் தமிழைப் பழித்தது, திட்டியது, கடுமையாக விமர்சித்தது எல்லாம் தமிழை வெறுத்ததல்ல. தமிழ் நன்றாக வர வேண்டும் என்பதற்காக. பாசமுள்ள பிள்ளையைத் தாய் திட்டுவதில்லையா? உன்னைப் பெற்றதுக்கு ஒரு கல்லைப் பெற்றிருக்கலாம், நீ ஏன் மண்ணுக்குப் பாரமாய் இருக்கிறாய்?, செத்துத் தொலையேன்! என்கிறாள் என்றால் பிள்ளை நன்றாக வர வேண்டும் என்ற பாசத்தால், பற்றால், வெறுப்பால் அல்ல.

தமிழில் காலத்திற்கேற்ற கருத்தேற்றம் இல்லை, ஆக்கங்கள் இல்லை, நடைமுறைக்கு வாழ்க்கைக்கு வேண்டிய, முன்னேற்றத்திற்கு, தொழில் வளர்ச்சிக்கு, அறிவியல் வளர்ச்சிக்கு, பொருளாதார வளர்ச்சிக்கு, வேலை வாய்ப்பிற்கு வேண்டியவை எழுதப்படவில்லை என்பதாலும், அது காலத்திற்கேற்ப பயன்படும் தகுதியுடையதாக இருக்க வேண்டும் என்பதற்காகவும்தான் தமிழை விமர்சித்தார்.

தன் நிலைப்பாட்டை தந்தை பெரியார் அவர்களே வெளிப் படையாக வெளியிட்டும் உள்ளார்.

**"தாய் பாஷை (மொழி) என்பதற்காகவோ, நாட்டுப் பாஷை என்பதற்காகவோ, எனக்குத் தமிழ்ப் பாஷையின்மீது எவ்வித பற்றும் இல்லை. அல்லது தமிழ் தனிப் பாஷை என்பதற்காகவோ, மிகப் பழைய பாஷை என்பதற்காகவோ, அகஸ்தியரால் உண்டாக்கப்பட்ட பாஷை என்பதற்காகவோ எனக்கு அதில் பற்றில்லை. குணத்தினாலும், குணத்தினால் ஏற்படும் நற்பயனுக்காகவும் நான் எதனிடத்திலும் பற்று வைக்கக்கூடும்.** எனது பாஷை, எனது தேசம், எனது மதம் என்பதற்காகவோ, எனது பழமையானது என்பதற்காகவோ ஒன்றையும் நான் பாராட்டுவதில்லை.

எனது நாடு, எனது லட்சியத்திற்கு உதவாது என்று கருதினால், உதவும்படி (பயன்படும்படி) செய்ய முடியாது என்று கருதினால், உடனே விட்டுவிட்டுப் போய் விடுவேன். அதுபோலவே எனது பாஷை என்பதானது எனது லட்சியத்திற்கு, எனது மக்கள் முற்போக்கடைவதற்கு, மானத்துடன் வாழ்வதற்குப் பயனளிக்காது என்று கருதினால், உடனே அதனை விட்டுவிட்டுப் பயனளிக்கக் கூடியதைப் பின்பற்றுவேன்... அதேபோல் மற்றொரு பாஷை (இந்தி) நம் நாட்டில் புகுத்தப்படுவதைப் பார்த்து, அதனால் நமக்கு ஏற்படும் நஷ்டம் அறிந்து, சகிக்க முடியாமல் எதிர்க்கிறேனே ஒழிய, புதியது என்றோ, வேறு நாட்டினது என்றோ நான் எதிர்க்கவில்லை.”

தமிழ் இந்த நாட்டு மக்களுக்கு சகல துறைக்கும் முன்னேற்றமளிக்கக் கூடியதும் சுதந்திரத்தை அளிக்கக் கூடியதும், மானத்துடனும், பகுத்தறிவுடனும் வாழத்தக்க வாழ்வை அளிக்கக் கூடியதும் என்பது என் அபிப்பிராயம்.

ஆனால், அப்படிப்பட்டவை எல்லாம் தமிழில் இருக்கிறதா என்று சிலர் கேட்கலாம். எல்லாம் இல்லையென்றாலும், அநேக இந்திய பாஷைகளைவிட அதிகமான முன்னேற்றத்தைத் தமிழ் மக்களுக்கு அளிக்கக்கூடிய கலைகள், பழக்கவழக்கங்கள், அதற்கேற்ற சொற்கள் தமிழில் இருக்கின்றன என அறிகிறேன்.”

**(‘குடிஅரசு’ 06.08.1939)**

இப்போது சொல்லுங்கள், இந்திய மொழிகளிலே உயர்ந்தது தமிழ் என்று கூறும் பெரியாரா தமிழைக் கேவலப்படுத்தியவர்? தமிழில் இன்னும் வேண்டும், காட்டுமிராண்டி கால மொழியாகவே அதைக் காப்பாற்றி வருவதால் பயனில்லை என்பதை உணர்த்தவும் தமிழ்மீதுள்ள பற்றாலுந்தான் அவர் தமிழை விமர்சித்தார் என்பதை இப்போதாவது தமிழ் மக்கள், இளைஞர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்!

●





**வினா-விடை**

# பெரியாரின் தமிழ்த் தொண்டு

**பேரா.இரா.கலைச்செல்வன்,** M.A., M.Ed., M.Phil.

1. **ஒருவருடைய கருத்தை மற்றொருவருக்கு தெரிவிக்க முக்கிய சாதனமாக இருப்பது எது?**

   அ) மொழி ஆ) வானொலி இ) தொலைக்காட்சி ஈ) வலைதளம்

2. **“ஒரு மொழி எவ்வளவு எளிதாக இருக்கிறதோ அவ்வளவு விரைவாக வளர்ச்சியடையும்’’ என்று கூறியவர் யார்?**

   அ) கால்டுவெல் ஆ) பெரியார்
   இ) மு. வரதராசனார் ஈ) தேவநேய பாவாணர்

3. **மொழி என்பது உலகப்போட்டி போராட்டத்திற்கு ஒரு போர்க் கருவி, இப்போர்க் கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும் என்று கூறியவர் யார்?**

   அ) திரு.வி.க. ஆ) மறைமலையடிகள்
   இ) பெரியார் ஈ) பொற்கோ

4. **அண்ணா, புரட்சிக் கவிஞர், புலவர் குழந்தை மற்றும் பலர் பெரியாரின் தமிழ்மொழிக் கொள்கையின் தாக்கத்தினால் படைத்த படைப்புகள் எதைச் சார்ந்து இருந்தன?**

   அ) புராணங்கள் ஆ) காப்பியங்கள்
   இ) வாழ்க்கை வரலாறு ஈ) சமூக சீர்திருத்தம்

5. **தமிழ் ஆண்டு 60இல் ஏதாவது தமிழில் உள்ளதா? என்று கேட்டவர் யார்?**

அ) அண்ணா ஆ) பெரியார்

இ) க. அன்பழகன் ஈ) இரா. நெடுஞ்செழியன்

6. **பாவாணர், சோமசுந்தர பாரதியார், மறைமலை அடிகளார் போன்றோர் மொழி எதைக் கொண்டதாக இருக்க வேண்டும் என விரும்பினர்?**

அ) இலக்கியம் ஆ) சுயமரியாதை

இ) பகுத்தறிவு ஈ) புராணங்கள்

7. **வெறும் புராணங்களும் இதிகாசங்களும் மட்டும கொண்ட ஒரு மொழி வளர்ச்சியடையாது என்றவர் யார்?**

அ) அறிஞர் அண்ணா ஆ) குன்றக்குடி அடிகளார்

இ) பெரியார் ஈ) பாரதிதாசன்

8. **தமிழர் விரோதக் கருத்துக்களை நீக்கி அறிவு வளர்ச்சிக்கு, மான வளர்ச்சிக்கு உகந்த பாடங்களை வைக்கக் கேட்டது யார்?**

அ) திரு.வி.க. ஆ) மறைமலைஅடிகள்

இ) பெரியார் ஈ) காமராசர்

9. **அறிவியல், பொறியியல், கணிதம், சட்டம் போன்றவை தமிழில் ஆக்கப்பட வேண்டும் என்றவர் யார்?**

(அ) கக்கன் (ஆ) சிங்காரவேலர்

(இ) பெரியார் (ஈ) வ.சுப.மாணிக்கம்

10. **மொழி பூசிக்கப்படக் கூடிய ஒன்றல்ல என்றவர் யார்?**

(அ) வ.உ.சி (ஆ) காமராசர்

(இ) பெரியார் (ஈ) எம்.ஜி.ஆர்

11. **தமிழ் இலக்கியங்களில் அறிவியல் வளர்ச்சிக்கான முற்போக்குக் கருத்துக்கள் இல்லாததால் தமிழை என்ன மொழி என்று தந்தை பெரியார் அழைத்தார்?**

அ) காட்டுமிராண்டி மொழி ஆ) தேவமொழி

இ) நாகரீகமொழி ஈ) பண்பட்ட மொழி





**12. தமிழ் இலத்தின், கிரேக்க மொழிகளைவிடச் சிறந்தது என்று கூறியவர் யார்?**

(அ) பெரியார் (ஆ) அண்ணா (இ) வின்ஸ்லோ (ஈ) காமராசர்

**13. தமிழ் எழுத்துக்களை எத்தனையாகக் குறைக்கலாம் என்றார் பெரியார்?**

(அ) 64 (ஆ) 50 (இ) 200 (ஈ) 54

**14. எந்த ஆண்டு முதல் பெரியார் தனது சீர்திருத்த எழுத்துக்களை தனது பத்திரிகைகளான பகுத்தறிவு விடுதலை, குடிஅரசு, உண்மை போன்றவற்றில் கடைப்பிடித்து வந்தார்?**

அ) 1925 ஆ) 1935 இ) 1945 ஈ) 1933

**15. பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள் உருவாக்கிய தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை தமிழக அரசு ஏற்று அதனை நடைமுறைப்படுத்த ஆணைப்பிறப்பித்த முதலமைச்சரின் பெயர் என்ன?**

அ) அண்ணா ஆ) காமராஜர் இ) மு. கருணாநிதி ஈ) எம்.ஜி.ஆர்.

**16. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்த தமிழக அரசு அக்டோபர் மாதம் 19ஆம் நாள் எந்த ஆண்டு அரசு ஆணைப்பிறப்பித்தது?**

அ) 1978 ஆ) 1968 இ) 1958 ஈ) 1988

**17. ணா, றா, னா, ணை, லை, ளை, னை, ணொ, றொ, னொ, ணோ, றோ, னோ போன்ற எழுத்துக்களை அறிமுகப்படுத்தி தமிழுக்கு எளிமை சேர்த்த சீர்திருத்தச் செம்மல் யார்?**

அ) ஜி.யு. போப் ஆ) வீரமாமுனிவர்

இ) தந்தை பெரியார் ஈ) சோமசுந்தர பாரதியார்

**18. எந்த இரு எழுத்துக்கள் தமிழ் மொழிக்கு தேவை இல்லை என பெரியார் கூறினார்?**

அ) க, ச ஆ) த, ம இ) ந, ப ஈ) ஐ, ஔ

19. **பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுகொண்ட முதல் வெளிநாடு எது?**

அ) இலங்கை ஆ) அமெரிக்கா இ) சிங்கப்பூர் ஈ) ஜப்பான்

20. **பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுகொண்ட 2ஆவது வெளிநாடு எது?**

அ) சீனா ஆ) பர்மா இ) தாய்லாந்து ஈ) மலேசியா

21. **கோயில்களிலும், விழாக்களிலும் தமிழே ஒலிக்க வேண்டும் என்றவர் யார்?**

(அ) கண்ணதாசன் (ஆ)சத்தியமூர்த்தி
(இ) ஆறுமுகநாவலர் (ஈ) பெரியார்

22. **முத்தமிழ் மன்றத்திற்கு யார் கிடைத்திருப்பது நல்வாய்ப்பு என்று பெரியார் சொன்னார்?**

(அ) பாரதியார் (ஆ) கவிஞர் வாலி
(இ) பாரதிதாசன் (ஈ) மருதகாசி

23. **எந்தப் பாடகருக்கு ஆதரவாக பெரியார் குரல் கொடுத்தார்?**

(அ) பி.சுசீலா (ஆ) ஜானகி
(இ) கே.பி.சுந்தராம்பாள் (ஈ) பானுமதி

24. **அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பெரியாருக்கு வரவேற்பிதழ் படித்து பாராட்டியது எந்த நாளில்?**

(அ) 10.03.1943 (ஆ) 16.11.1957
(இ) 07.02.1944 (ஈ) 21.06.1947

25. **இராஜகோபாலாச்சாரியார் கட்டாய இந்தித் திணிப்பு கொண்டு வந்த ஆண்டு**

(அ) 1925 (ஆ) 1930 (இ) 1929 (ஈ) 1938

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அ | 2. ஆ | 3. இ | 4. ஈ | 5. ஆ | 6.ஆ | 7. இ | 8. இ | 9. இ | 10. இ |
| 11. அ | 12. இ | 13. ஈ | 14. ஆ | 15. ஈ | 16.அ | 17. இ | 18. ஈ | 19. இ | 20. ஈ |
| 21. ஈ | 22. இ | 23. இ | 24. இ | 25. ஈ | | | | | |

**புதிய இணைப்பு 2**

# தந்தை பெரியாரும் தாழ்த்தப்பட்டோரும்

**பேரா.மஞ்சை வசந்தன், M.A., M.Ed., M.Phil.**

## பெரியாரின் அறிவாயுதம்

தலைவர் தந்தை பெரியார் அவர்கள், அறிவு ஆசானாக நின்று போதித்த பொழுது சொன்னார். என்னுடைய இயக்கம் மக்கள் இயக்கம், மனிதநேய இயக்கம், பகுத்தறிவு இயக்கம், இந்த இயக்கத்தினுடைய தத்துவம் இரண்டே வார்த்தைகளில் சொல்லுகிறேன். "அனைவருக்கும் அனைத்தும்" அதாவது "எல்லார்க்கும் எல்லாமும் இருப்பதான இடம் நோக்கி நடக்கட்டும் இந்த வையகம்" என்று புரட்சிக் கவிஞர் அவர்கள் அழகாகச் சொன்னார். அதற்குப் பெயர்தான் சமதர்மம். அதற்குப் பெயர்தான் மனித தர்மம். அதற்குப் பெயர்தான் சுயமரியாதை. இன்னாருக்கு இதுதான் என்று சொல்லுவதிருக்கிறதே அது மனுதர்மம்.

அந்த மனுமர்மத்திற்கு எதிரான போரைத்தான் பெரியார் நடத்தினார். தந்தை பெரியார் சாதிக் கொடுமைகளை எதிர்க்கத் தொடங்கிய காலத்தில், தாழ்த்தப்பட்டோரின் நிலை எப்படியிருந்தது என்பதையும், அதற்கு எதிராய் பெரியார் நடத்திய போராட்டங்களையும் இளைஞர்கள் அறிய வேண்டியது கட்டாய கடமையாகும்.

# தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான கொடுமைகளும் தந்தை பெரியாரின் போராட்டங்களும்

## நாடகம் பார்க்க பஞ்சமனுக்கு இடமில்லை

தலைநகரம் சென்னை இந்த இயக்கம் தொடங்குவதற்கு முன்னால் - பெரியார் பிறப்பதற்கு முன்னால் - சுயமரியாதை இயக்கம், திராவிடர் இயக்கம் தொடங்கப்படுவதற்கு முன்னால் 1899ஆம் ஆண்டில் என்ன நிலை?

சென்னை வால்டேக்ஸ் சாலையில் ஒற்றை வாடை நாடகக் கொட்டகை இருந்தது. அந்த நாடகக் கொட்டகையில் சுகுணவிலாஸ் சபா சார்பில் அபிதான சுந்தரி நாடகம். அந்த நாடகத்திற்கு பெரிய நோட்டீஸ். அந்த நோட்டீசை பெரியார் நூலக ஆவணக் காப்பகத்தில் நீங்கள் காணலாம். அதைப் பதிவு செய்திருக்கிறோம். சென்னை தலைநகரில் அந்தக் காலத்தில் நடைபெற்ற நாடகம், ஒரு நூற்றாண்டுக்கு முன்னாலே இருந்த நிலை. தள்ளியிருக்கின்ற ஊரிலே அல்ல. சென்னையிலே, தலை நகரிலே இருந்த நிலை.

அந்த நாடகத்திற்கு விளம்பரம் கொடுத்திருந்தார்கள். அதில் சேர் கட்டணம் ஒரு ரூபாய், காலரி 50 காசுகள். என்றெல்லாம் போட்டுவிட்டு பாய் 2 அணா. அந்த நோட்டீசிலே நிபந்தனை எழுதியிருக்கின்றார்கள். **பஞ்சமர்களுக்கு இடம் இல்லை** என்று.

இந்த நாட்டின் குடிமக்கள், உழைக்கக்கூடிய மக்கள் பாடுபடக் கூடிய மக்கள், மண்ணின் மைந்தர்கள். அவர்கள் இல்லாவிட்டால் இந்த சமூகம் இயங்காது. யாரும் சோற்றிலே கைவைக்க முடியாது. அப்பேர்ப்பட்ட ஒரு சமுதாயத்தைப் பற்றி என்ன சொல்லுகிறார்கள் பாருங்கள். அவன் காசு கொடுத்து நாடகம் பார்க்கத் தகுதி பெற்றிருந்தாலும் கூட அனுமதி இல்லை.

இதிலே ஒரு தத்துவம் அடங்கியிருக்கிறது. பொருளாதாரத்திலே அவன் உயர்ந்திருந்தால் கூட பொருளாதாரம் வளர்ந்தால் எல்லாம் சரியாய்ப் போய்விடும் என்று ஒரு கணக்குப் போட்டுச் சொல்லுகிறார்கள் அல்லவா? அது இந்த நாட்டைப் பொறுத்தவரையில் - சமூக அநீதி களத்திலே சுட்டிக்காட்டப்பட வேண்டிய செய்தி.

அவன் நாடகம் பார்க்க காசு கொடுத்து டிக்கெட் வாங்கக் கூடிய சக்தி படைத்தவனாக இருந்தாலும், பஞ்சமன் என்று சொன்னால் இடமில்லை என்று சொன்னார்கள்.

•••

## நாட்டுப்புறப் பள்ளிக்கூடங்களில் ஆதி திராவிடர் பிள்ளைகளைச் சேர்க்கவே மாட்டார்கள்

அறிவுடையார் எல்லாம் உடையார் : அவ்வறிவினைப் பெறும் வழி கல்வி. இப்படி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் அறுதி இட்டுக் கூறினார். ஈ.வெ. ராமசாமி தம் வாழ்நாள் முழுவதும் இவற்றைப் பொது மக்களுக்கு எடுத்துரைத்து வந்தார்.

**பெரியார் பொது வாழ்க்கைக்கு வந்த காலத்தில், எத்தனையோ பள்ளிக் கூடங்களில், அதுவும் நாட்டுப்புறப் பள்ளிக் கூடங்களில், ஆதி திராவிடர் பிள்ளைகளைச் சேர்க் கவே மாட்டார்கள்.** ஆகவே, அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பு தாழ்த்தப்பட்டவர்கள் சிலராவது படித்தால்தான், பள்ளிக்கூடம் அங்கீகரிக்கப்படும் என்று அரசு ஆணையிட நேர்ந்தது. அது பல்லாண்டு ஏட்டளவில் நின்றது. ஏன்? சிற்றூர்களில் ஆதி திராவிடப் பிள்ளைகள் மற்றவர்களோடு இருந்து படிக்க முயன்றால், பல பகுதிகளில், மற்ற ஜாதிக்காரர்கள் தாழ்த்தப்பட்டவர்களை பலவகையான துன்பங்களுக்கு ஆளாக்குவார்கள். ஆசிரியர்கள், சிலவேளை, சில ஆதிதிராவிடர்களை பதிவேட்டில் எழுதி வைப்பார்கள். ஆனால், பள்ளிக்கு வரவிடுவதில்லை. ஆய்வாளர் ஆண்டு தணிக்கைக்கு வரும்போது, அப்பிள்ளைகளைக் கொண்டு வந்து எவரையும் தொடாமல், ஒரு மூலையில் உட்கார வைத்து அனுப்பி விடுவார்கள். **பெரும்பாலான ஆய்வாளர்கள் அதற்கு உடந்தையாக இருப்பார்கள்.**

•••

## பார்ப்பனத் தெருவழியே பிள்ளைகள் போகக்கூடாதென்று விரட்டினார்கள்

**கோவைக்கு அருகில் உள்ள சிங்காநல்லூரிலும், இருகூரிலும் பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட பிள்ளைகளை 1930ஆம் ஆண்டு தொடக்கம் வரையில் சேர்க்காமல் இருந்தார்கள்.** பிறகு, கோவை சமூகத் தொண்டு சங்கத்தாரின் **தலையீட்டால், சில பிள்ளைகள் சேர்ந்தார்கள். பார்ப்பனர்கள், உள்ளூர் பார்ப்பனரல்லாத காவல்துறை ‘சப்-இன்ஸ்பெக்டரை’ வசப்படுத்திக் கொண்டு, பார்ப்பனத் தெரு வழியே பிள்ளைகள் போகக் கூடாதென்று விரட்டினார்கள்.**

திரு. ஆர்.கே. சண்முகம், எம்.எல்.ஏ., சிங்காநல்லூர் சென்று சப்-இன்ஸ்பெக்டரிடம் பேசினார். பலனில்லை. கோவை, டெப்டி சூப்ரின்டெண்டை அழைத்து வந்து ஆணையிடச் செய்தார். இருப்பினும்

பழமை தொல்லை கொடுத்தது. திரு. ஆர்.கே. சண்முகம் கட்டி வந்த நூற்பாலை கட்டுமான வேலைக்கு ஆள் போகாதபடி கட்டுதிட்டம் செய்தார்கள். மீண்டும் ஆர்.கே. சண்முகம் சிங்காநல்லூருக்கு வந்தார். ‘பார்ப்பனத் தெருவில் தீண்டப்படாதவர்கள் நடந்ததற்காகச் செய்யப்படும் கட்டுப்பாட்டால், நீங்கள் கூலி இழந்து பட்டினி கிடக்கப் போகிறீர்களே ஒழிய, எந்தப் பார்ப்பனனாவது தன் வேலையை விட்டுவிட்டு சும்மா இருக்கப் போகின்றானா?’ என்று ஆர்.கே. சண்முகம் கேட்டார். அப்புறம் பார்ப்பனரல்லாதவருக்குத் தெளிவு ஏற்பட்டது; வேலைக்கு வந்தார்கள்.

தொடக்கப் பள்ளியில் ஆதி திராவிடர்களைச் சேர்ப்பதற்கே இத்தனைப் பாடு!

•••

**19.1.36இல் வெளியான குடிஅரசு தலையங்கம்** தாழ்த்தப்பட்டோர் நிலையை தெளிவுபடுத்துகிறது. அத்தலையங்கம் எதையும் மிகைப்படுத்தவில்லை. உள்ளதை உள்ளபடியே உரைக்கிறது. அது காட்டும் கசப்பான உண்மைகள் இதோ :

**தாழ்த்தப்பட்டோர் சமைக்கக்கூடாதா? ஏன்?**
**தட்டிக்கேட்டார் தந்தை பெரியார்.**

எந்த காங்கிரசு கூட்டத்திலாவது, பிராமணர்கள் வேறு; மற்றவர்கள் வேறு என்கிற பிரிவு இல்லாமல், உட்கார்ந்து சாப்பிட்டு இருக்கிறார்களா?

‘காங்கிரசு கான்பர்னஸ்’ முதலிய எந்தக் கூட்டங்களிலும் பார்ப்பனர்களைக் கொண்டுதான் சமையல் செய்திருக்கிறார்களே ஒழிய, மற்ற ஜாதிக்காரர்களை சமையல் கட்டில், நுழைய விட்டிருக்கிறார்களா?

‘சுயமரியாதை மகாநாடுகளையோ, கூட்டங்களையோ எடுத்துக் கொள்ளுங்கள். நாடார், நாயுடு, முஸ்லீம், தீண்டப்படாதார் என்கின்றவர்கள் எல்லோரும் கலந்து சமையல் செய்கிறார்கள். இவர்கள் எல்லோருமே கலந்து பரிமாறுகிறார்கள். சைவர் முதல் பெரிய ஜாதிக்காரர்கள் என்பவர்களும் ஒன்றாய் உட்கார்ந்துதான் சாப்பிடுகிறார்கள்.’

மனிதர்களை மனிதர்களாக நடத்தியதோடு, அந்நிலை சமுதாயத்தின் பொது நடைமுறையாகிவிட வேண்டுமென்பதற்காக, **ஏச்சையும் பேச்சையும் தாங்கிக் கொண்டு, தொண்டு புரிந்தது தன்மான இயக்கம். பல்லாண்டு காலம் அவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளாத, ‘தாழ்த்தப்பட்டோர் அல்லது ஆதி திராவிடர்’ நடத்தும் நிகழ்ச்சிகள் இல்லையெனலாம்.**

•••

## சொக்காய் அணியக் கூடாது!
## தோளில் துண்டு போடக் கூடாது!

தீண்டாமையின் தீக்கரம் அருங்கலைகளையும் சுட்டெரிக்கத் தயங்கவில்லை என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இதோ :

நாயனக் கலைநுட்பமான கலை; தமிழர்களுக்கே உரிய தனிக்கலை. இதைக் கற்க, நீண்ட, கடுமையான பயிற்சி தேவை. இக்கலையில் தேர்ச்சி பெற்று, பெரிய இடங்களில், நாயனக் கச்சேரி நடத்தும் நிலைக்கு உயர, அரும்பாடு தேவை. அத்தனை பாடுபட்டு, கடுமையான பயிற்சி பெற்று, சிறந்து விளங்கிய நாதசுர கலைஞர்கள் சிலர் ஒவ்வொரு தலைமுறையிலும் ஒளிவிட்டார்கள். இருபதாம் நூற்றாண்டின் இருபதுகளில் மதுரை சிவக்கொழுந்து என்னும் கலைஞர் புகழ்பெற்று விளங்கினார். எனவே, பெருஞ் செல்வர்களே, அவரை அழைக்க முடியும்.

1924ஆம் ஆண்டு, கானாடுகாத்தான் என்னும் ஊரில், ஒரு தன வணிகர் வீட்டில் திருமணம். திருமண ஊர்வலத்தில், சிவக்கொழுந்து வாசித்துக் கொண்டு வந்தார். மக்கள், இசையின் நயத்தில் மயங்கியிருந்தார்கள்.

சிவக்கொழுந்து இடுப்பில் விலை உயர்ந்த சரிகைக்கரை வேட்டி அணிந்திருந்தார். உடம்பில் சொக்காய் இல்லை. ஏன்? நாயனக் கலைஞர்கள், வாசிக்கும்போது, **சொக்காய் அணியக் கூடாது என்பது மரபு. சிவக்கொழுந்துவின் தோளில் மட்டும், சிறிய துண்டொன்று இருந்தது.**

குறிப்பிட்ட அந்த நாள், பெரியார் ஈ.வெ. ராமசாமி, டாக்டர் வரதராசுலு, திரு. வை.சு. சண்முகம், திரு. ஏ.வி. தியாகராசன் ஆகியோர், கானாடு காத்தானில் திரு. வை.சு. சண்முகம் வீட்டில் கூடியிருந்தார்கள். எதற்காக? முன்னர் குறிப்பிட்ட சேரன் மகாதேவி குருகுல போராட்டத் திட்டமிட.

ஈ.வெ. ராமசாமியோடு, அஞ்சா நெஞ்சன், தன்மான இயக்கத்தின் பெருந்தூண், சொல்லின் செல்வர், பட்டுக்கோட்டை அழகிரிசாமி சென்றிருந்தார். பொதுவாக, தஞ்சை மாவட்டத்தாருக்கு இசைப்பித்து அதிகம். அழகிரிசாமியோ, நல்ல நாயனக் கச்சேரி கேட்க நெடுந்தூரம் போகக் கூடியவர். கானாடு காத்தானில் நடந்து கொண்டிருந்த, சிவக்கொழுந்துவின் நாயன இசைப் பொழிவைக் கேட்கச் சென்றார். சில மணித்துளிகள் சென்றன.

வாலிபர் ஒருவர், சிவக்கொழுந்துவை அணுகினார். தோளில் மேல் போட்டுள்ள சிறு துண்டை எடுத்து இடுப்பில் சொருகிக் கொள்ளச்



சொன்னார். ‘போட்டிருப்பதோ சிறு துண்டு, வாசிப்பு, வியர்வையைத் தள்ளும். அதைத் துடைக்க, தோளில் கிடப்பதே வசதி. மேல் துணியையல்ல; துண்டையே போட்டுள்ளேன்’ என்று கூறி அமைதிப்படுத்த முயன்றார் சிவக்கொழுந்து.

‘பெரிய ஜாதி’ என்னும் நினைப்போடு நாலு காசும் சேர்ந்தால், அட்டகாசம் இயற்கை. வாலிபர் ஒப்பவில்லை. துண்டைத் தோளில் போட்டபடி வாசிக்கவிட மாட்டேன் என்று மிரட்டினார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த பெரியாரின் பெருந்தொண்டர் அழகிரிசாமி, சிவக்கொழுந்துவிடம் போனார். உரத்த குரலில், ‘துண்டை எடுக்க வேண்டாம்; இடுப்பில் கட்ட வேண்டாம்; இப்படியே வாசியுங்கள். கேட்கிறவர்கள் கேட்கட்டும்; விரும்பாதவர்கள் போகட்டும்’ என்று ஆணையிட்டார். **பெரியார் தந்த உணர்வு அப்படி ஆர்த்தெழச்செய்தது.**

எதிர்ப்புத் தெரிவித்த வாலிபரோடு, மேலும் சிலர் சேர்ந்து கொண்டு மிரட்டினார்கள். திருமண ஊர்வலம் நடுத்தெடுவில் நின்றது.

இதற்குள், அழகிரிசாமி, யார் என்பதை அடையாளம் கண்டு கொண்டார்கள். **அவருடைய தலைவர் பெரியார் ஈ.வெ. ராமசாமி,** வை.சு. சண்முகம் வீட்டில் தங்கியிருப்பது தெரிந்துவிட்டது. தூது பறந்தது. மானுடத்தின் பேருருவை, சமத்துவத்தின் மேருவை, ஈ.வெ. ராமசாமியைக் கண்டு முறையிட்டார் தூதுவர். **செய்தியைக் கேட்பதில் பொறுமையைக் காட்டினார் பெரியார். பதிலில் சமத்துவப் பெருந் தீச்சுடர் விட்டது.** இதோ அந்த பதில் :

‘உங்களுக்கிருக்கின்ற பணக்கொழுப்பை காட்டுவதுதானே, இம்மாதிரியான அவமரியாதை எல்லாம். ஆனதினால்தான் நாங்கள் சிவக்கொழுந்துவை அழைத்துக் கொண்டு வந்து விடுகிறோம். நீங்கள் பாட்டிலே ஊர்வலம் போங்களேன்’ என்று கடுமையாகச் சொல்லி அனுப்பி விட்டார்கள். இதிலே பெரியாருக்கு என்ன ஆதாயம்? என்ன பெருமை? **சமத்துவக் கொள்கையிலிருந்த பற்றன்றோ எரிமலையாக, அப்போதும் எப்போதும் வாழ்நாள் முழுவதும் முழங்க வைத்தது.**

இப்போது திருமண ஊர்வலத்திற்குச் செல்வோம். வைத்த மேளத்தை நிறுத்திவிட்டு, திருமண ஊர்வலம் வருவது பெரும் இழிவு. எனவே, திருமண வீட்டுச் செட்டியார், துணிச்சலை, வலிந்து வரவழைத்துக் கொண்டார். **‘நாயனக்காரர் விருப்பப்படி துண்டை போட்டுக் கொண்டே**

**வாசிக்கட்டும். விருப்பமுள்ளவர்கள் கேட்கலாம்; போகிறவர்கள் போகட்டும்’ என்று அறிவித்து விட்டார்.**

**இழிவு துடைக்கப்பட்டது. மக்கள் ஒருநிலை நிலை நாட்டப்பட்டது. கலைஞர் சிவக்கொழுந்து, இன்பப் பெருக்கில், இனிமையின் சிகரத்திலே நடமாடி வாசித்துப் பெருமைப்பட்டார்.**

(**நெ.து. சுந்தரவடிவேலு** நூல் : புரட்சியாளர் பெரியார்)

## உணவு விடுதிகளில் நுழைய முடியாது

- சென்னையில் அன்றைய மவுண்ட் ரோட்டிலும், ஜார்ஜ் டவுனிலும் இருந்த உணவு விடுதிகளில் பறையர்களும், நாய்களும், குஷ்ட ரோகிகளும் உள்ளே நுழையக் கூடாது என்று போர்டு வைத்திருந்தார்கள். உணவு விடுதிகளில் பிராமணாள் மட்டும் என்று எழுதப்பட்டிருக்கும். சூத்திரரும் பஞ்சமரும் உள்ளே நுழைய முடியாது. தங்கும் விடுதிகளில் பிராமண மாணவர்களுக்கு மட்டுமே 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அனுமதி கிடைத்து வந்தது. பிராமணரல்லாத மாணவர்கள் அந்த விடுதிகளில் தங்கிப் படிக்க அனுமதி கிடையாது. உணவகத்திற்குச் சென்றாலும் தனி இடம்தான். பரிமாறுகிற முறையிலும் வேறுபாடுகள் உண்டு. சில விடுதிகளின் உணவகங்களில் கூட பிராமணரல்லாத மாணவர்களுக்கு அனுமதி கிடைக்காது.

  டாக்டர் சி. நடேசனார் திருவல்லிக்கேணி அக்பர்சாகிப் தெருவில் பிராமணரல்லாத மாணவர்களுக்காக திராவிடர் சங்க விடுதி (Dravidian Association Hostel) உணவு மற்றும் தங்கும் விடுதி ஒன்றை அமைத்தார். இதில் ஏழை மாணவர்களுக்கு உணவும் இடமும் இலவசம். பணக்கார மாணவர்களுக்கு இவையிரண்டும் குறைந்த கட்டணம். உயர் படிப்பிற்காக சென்னை வந்த பிராமணரல்லாத மாணவர்கள் பலர் இங்கே தங்கிப் படித்தனர். இந்த நல்ல வாய்ப்பு கிடைத்ததால், எதிர்காலத்தில் முக்கியப் பதவிகளுக்கு வந்த மாணவர்களும் உண்டு.

•••

## இவை மட்டுமா? தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக இன்னும் என்னென்ன கொடுமைகள் தெரியுமா?

- 1938 ஆம் ஆண்டு நீடாமங்கலத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் மூன்று ஆதிதிராவிட தோழர்கள் சரிசமமாக உட்கார்ந்து விருந்து

சாப்பிட்டார்கள் என்பதற்காக அவர்களை மொட்டை அடித்து மரத்தில் கட்டி வைத்து அடித்தார்கள்.

- 1935ஆம் ஆண்டில் கும்பகோணம் நகராட்சியில் அக்கிரகாரத்தில் கக்கூஸ் எடுக்க தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்கக்கூடாது - அதற்குப் பதிலாக சூத்திரர்களை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினர். பார்ப்பான் மலத்தைக்கூட தாழ்த்தப்பட்டவன் தொடக் கூடாது என்ற கொடுமை அப்போது நிலவியது.
- ராஜகோபாலாச்சாரியார் சேலம் நகரசபைத் தலைவராக இருந்தபோது தண்ணீர்க் குழாய்களைத் திறந்து விடும் வேலைக்கு ஒரு ஆதி திராவிடர் நியமிக்கப்பட்டதால் சேலத்தில் பார்ப்பனர்கள் கடும் எதிர்ப்பையும், கூக்குரலையும் கிளப்பினார்கள்.
- 1935ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பேருந்துகளில் 'பஞ்சமருக்கு இடமில்லை' என்று எழுதியதோடு டிக்கட்களிலும் அவ்வாறு அச்சிட்டார்கள். ராமநாதபுரம் மாவட்ட ஆட்சிக்குழு தலைவராக இருந்த W.P.A. சவுந்தர பாண்டியன்தான் அதை ஒழித்தார்.
- நாடார் சமூகப் பெண்கள் மேலாடை அணியக்கூடாது என்று 1829ஆம் ஆண்டு திருவாங்கூர் அரசாங்கமே உத்தரவிட்டது.
- 1940ஆம் ஆண்டுகளில் - சென்னை வில்லிவாக்கத்தில் - தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் வசித்தவர்களுக்கு வந்த கடிதங்களை - அஞ்சல்காரர்கள் ஊர் எல்லையிலே உள்ள ஒரு கோயிலிலே வீசி எறிந்துவிட்டுப் போனார்கள்.
- தாழ்த்தப்பட்ட சகோதரர்களை "பறையன்" என்றே அரசு ரிக்கார்டுகளில் குறித்து வந்ததை எதிர்த்து "ஆதி திராவிடர்" என்றே குறிக்க வேண்டும் என்று சென்னை மாநகராட்சியில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி, பிறகு அதை அரசே ஏற்கச் செய்தவர் நீதிக்கட்சி தலைவரான டாக்டர் சி. நடேசனார்.
- 1932ஆம் ஆண்டுகளில் நெல்லை மாவட்டத்தில் "புரதவண்ணான்" என்ற ஜாதியினரை கண்ணால் பார்த்தாலே தீட்டு என்று பகல் பொழுதில் அவர்கள் வீட்டை விட்டு வெளியே வரவேக் கூடாது என்று ஜாதிக் கட்டுப்பாடு இருந்தது.
- 19ஆம் நூற்றாண்டின் துவக்க காலங்களில் நாடார் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள், நகை அணியவோ, மாட்டிடமிருந்து பால் கறக்கவோ, இரவிக்கை அணியவோ, இடுப்பில் தண்ணீர்க்குடம் எடுத்துச் செல்லவோ பார்ப்பனர்கள் தடை போட்டிருந்தார்கள்.

- பிற்காலத்தில் சென்னை மாகாண முதலமைச்சராக வந்த ஓமந்தூர் பி.ராமசாமி (ரெட்டி)யாரின் மகனுக்கே சேரன்மாதேவி குருகுலத்தில் பார்ப்பனர் பானையில் தண்ணீர் குடிக்க அனுமதி மறுக்கப்பட்டது.

- சென்னை கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்துவமனையில் கூட பார்ப்பன மனநோயாளிகளுக்குத் தனிப்பிரிவு இருந்து வந்தது. மற்ற ஜாதிக்காரர்கள் செல்லமுடியாது

- “டாக்டர் சுப்பராயன் முதலமைச்சராக இருந்த காலத்தில், பட்டுக்கோட்டை தாலுகா போர்டுக்கு, பட்டுக்கோட்டை மேலத் தெருவைச் சேர்ந்த மாரிமுத்து என்ற தாழ்த்தப்பட்ட தோழரை நியமனம் செய்த காரணத்தால், போர்டு கூட்டத்தைக் கூட்டினால், அந்தத் தாழ்த்தப்பட்ட தோழரும் சமமாக உட்காருவார் என்ற காரணத்திற்காக, தாலுகா போர்டு தலைவர் கூட்டத்தைக் கூட்டாமல் காலம்கடத்தி வந்தார். இதனை எதிர்த்து பட்டுக்கோட்டை சுயமரியாதை இயக்கத்தவர்கள் கண்டனக் கூட்டங்கள் நடத்தி கடுமையாக எதிர்ப்புக் காட்டியதைத் தொடர்ந்து முதலமைச்சர் சுப்பராயனே தலையிட்டு தாலுகா போர்டு கூட்டத்தைக் கூட்டாவிட்டால் போர்டையே கலைத்து விடுவேன் என்று எச்சரித்ததன் பேரில் போர்டு கூட்டம் கூட்டப்பட்டது, அந்தக் கூட்டத்தில் அந்தத் தாழ்த்தப்பட்ட தோழர் சமமாக அமர்ந்தார்.

- பட்டுக்கோட்டை அழகிரி, நெடும்பலம் சாமியப்பா போன்றவர்கள் அடக்கம் செய்யப்பட்ட - தஞ்சை நடவாற்றுக் கரையில் உள்ள இடுகாட்டில் ‘சூத்திரர்கள் இடம்’ என்று தனியாக ஒரு கல் செதுக்கி வைக்கப்பட்டிருந்தது என்பதும் 1954 இல் தந்தை பெரியார் முயற்சியால் அது அகற்றப்பட்டது.

- எட்டயபுரத்திலே நடந்த பாரதி விழா ஒன்றில் மேடையில் நாற்காலியில் ஆச்சாரியார், எம்.எஸ். சுப்புலட்சுமி, சதாசிவம் அய்யர் ஆகியோர் அமர்ந்து கொண்டு முதலமைச்சராக இருந்த ஓமந்தூராரையும் டாக்டர் சுப்பராயனையும் தரையில் பாய் போட்டு உட்கார வைத்தார்கள்.

- 50 ஆண்டுகட்கு முன்பு ரயில்வே துறை நடத்திய சிற்றுண்டி விடுதிகளில் கூட பார்ப்பனருக்கும் - பார்ப்பனரல்லாதாருக்கும் தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

- 1943லும் குடந்தை அரசினர் கல்லூரியில், பார்ப்பன மாணவர்களுக்குத் தனியாகவும், பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குத் தனியாகவும் குடி தண்ணீர் பானைகள் வைக்கப்பட்டிருந்தன.

- புளியங்குடியில் ஒரு பார்ப்பனர் மீது வந்த கொலை வழக்கை விசாரித்த நீதிபதி 'பிராமணன் கொலை செய்திருக்கவே மாட்டான்' என்று சாட்சிகளைப் பார்க்காமல் இனத்தை மட்டுமே பார்த்து தீர்ப்பளித்தார்.

•••

மேலும்,

ஆதிதிராவிடர்கள் பார்ப்பனத் தெருக்கள், முன்னேறியவர்கள் வாழும் தெருக்கள், கோயில்களைச் சுற்றியுள்ள தெருக்கள் ஆகிய எதிலும் நடந்துகூடச் செல்லமுடியாது.

ஆதிதிராவிடர்கள் முழங்காலுக்குக் கீழ் வேட்டி கட்டக்கூடாது.

தாழ்த்தப்பட்டோர் தங்க நகைகள் அணியக்கூடாது.

மண் குடத்தில்தான் நீர் மொள்ள வேண்டும்.

ஆதிதிராவிடர் வீட்டுக் குழந்தைகள் படிக்கக்கூடாது.

அடிமையாக இருக்க வேண்டும்.

சொந்த நிலம் வைத்திருக்கக் கூடாது.

திருமணக் காலங்களில் மேளம் வாசிக்கக் கூடாது.

பூமி குத்தகைக்கு வாங்கி சாகுபடி செய்யக்கூடாது.

குதிரைமீது ஊர்வலம் செல்லக்கூடாது.

வண்டி ஏறிச் செல்லக் கூடாது.

பொதுக்கிணற்றில் நீர் எடுக்கக் கூடாது.

சுடுகாட்டிற்குச் செல்லும் பாதையே வேறு.

பறையன் சுடுகாடு என்றே தனி சுடுகாடு.

மேல் அங்கியோ, துண்டு அணிந்துகொண்டோ செல்லக் கூடாது.

பெண்கள் ரவிக்கைகள் அணியக்கூடாது என்பதோடு மேல் ஜாதியினர் வரும்போது மேலே அணிந்திருக்கும் வேறு துணியையும் எடுத்து அக்குலில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நீதிமன்றங்களில் சாட்சி சொல்ல நேர்ந்தால் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் நின்றுதான் சாட்சி சொல்ல வேண்டும் என்று எழுதி இருந்தது. இவற்றை மாற்றவே பெரியார் போராடினார்.





பஞ்சமனும் (தாழ்த்தப்பட்டவர்களும்) நாய்களும், பெருநோயாளிகளும் (தொழுநோயாளிகள்) நுழையக் கூடாது என்று உணவு விடுதிகளிலும் பேருந்துகளிலும் எழுதி வைத்தனர். நாடக சபாவில் பஞ்சமர்களுக்கு இடமில்லை என்று எழுதி வைத்தனர்.

தாழ்த்தப்பட்டவன் வண்டியிலேறி வீதிக்கு வந்துவிட்டான் என்பதற்காக கட்டிவைத்து அடித்து அபராதம் போட்டனர். அதைப் பெரியார் வன்மையாகக் கண்டித்து, கொடுமை! கொடுமை! என்ற தலைப்பில் 24.11.1929 குடிஅரசில் எழுதினார்.

அந்தோணிராஜ் என்ற மாணவன் அக்கிரகார வீதியில் நடந்துவந்தான் என்பதற்காக, அவனை ரங்கசாமி அய்யர் செருப்பாலடித்தார். இதை வன்மையாக எதிர்த்து 24.4.1926 குடிஅரசில் பெரியார் எழுதினார்.

ஆதித்திராவிடர், தீயர், தீண்டாமை விலக்கு மாநாடுகளை பெரியார் நடத்தினார்.

21.07.1929இல் சென்னையிலும், 25.08.1929இல் இராமநாதபுரத்திலும், 10.06.1930இல் திருநெல்வேலியிலும், 16.05.1931இல் சேலத்திலும், 07.06.1931இல் லால்குடியிலும், 05.07.1931இல் கோவையிலும், 04.07.1931இல் தஞ்சையிலும், 07.12.1931இல் கோவையிலும், 07.02.1932இல் லால்குடியிலும், 28.08.1932இல் அருப்புக்கோட்டையிலும், 07.08.1933இல் சென்னையிலும், 1.07.1938இல் சீர்காழியிலும், 07.03.1936இல் திருச்செங்கோட்டிலும், 23.05.1936இல் கொச்சியிலும், 02.09.1936இல் சேலத்திலும், 06.05.1937இல் சிதம்பரத்திலும், 04.07.1937இல ஆம்பூரிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மாநாடுகளை நடத்தி கண்டன தீர்மானங்களையும், உரிமைக்கான தீர்மானங்களையும் பெரியார் நிறைவேற்றினார்.

மனித உரிமை பெற அரசின் தடையை மீறுவோம். தாழ்த்தப்பட்டோரை ஒதுக்கி வைப்போரை திராவிடர் இயக்கத்தின் எதிரிகளாய் எண்ணி எதிர்போம் என்று திருமங்கலத்தில் பேசினார்.

ஜாதிகளை ஒழிப்பதே திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை, திராவிடர் கழகமும் பழங்குடி மக்கள் (தாழ்த்தப்பட்டோர்) நகமும் சதையும்போல என்று திருச்சியில் பேசினார் பெரியார்.

தாழ்த்தப்பட்டோரை ஜனாதிபதியாக்கு! என்று 09.02.1982இல் விடுதலை தலையங்கம் தீட்டியது. இப்படி ஆயிரக்கணக்கான போராட்டங்களை திராவிடர் கழகம் தாழ்த்தப்பட்டோருக்குச் செய்துள்ளது. இவற்றை மேலும் விரிவாய் அறிய குடிஅரசு, விடுதலை, உண்மை, தலித்திய ஏடுகள் போன்றவற்றை படியுங்கள்.

பெரியார் பேசுகிறார்: நானோ திராவிடர் இயக்கமோ தாழ்த்தப்பட்டோருக்காக என்று இதுவரை தனியாக ஒதுக்கி வேலை செய்தது கிடையாது. வேண்டுமானால் திராவிடர் இயக்கத் திட்டமானது யார் யார் தாழ்த்தப்பட்டுள்ளார்களோஅவர்களுக்கு உரிமை வாங்கிக் கொடுக்கும் முறையில் இருக்கிறது என்று கூறுங்கள். யான் தாழ்த்தப்பட்டோருக்காகத் தனியாக உழைக்கிறேன் என்று உங்களிடையே பொய் கூற முடியாது. அவ்வித எண்ணம் எனக்கில்லை. இருக்கவேண்டிய அவசியமுமில்லை. ஏன் இவ்வாறு கூறுகிறேன்? நீங்கள் வேறுவிதமாக கருதவேண்டாம். ஆதிதிராவிடன் திராவிடன் என்ற பிரிவையே நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது எல்லோரும் திராவிடர்கள் என்பதே எங்களது திட்டமாகும்.

**திராவிடர்களில் ஜாதி ஆணவம் படைத்த உயர் ஜாதிக்காரர்களும் இல்லாமலில்லை. இனி அவர்களை எப்படி வழிக்குக் கொண்டுவருவது என்பதும் எனக்குத் தெரியும்.**

**ஆகவே ஒரு இனத்தைச் சார்ந்த நாம் நமக்குள் பிரிவுகளாக சொல்லளவிலும் இருக்கக் கூடாதென்பதே எனது தீவிர எண்ணமாகும்.**

**இன்னும் விளக்கமாக கூறுகிறேன். திராவிடர் இயக்கத்திற்கு முக்கிய கொள்கை என்னவென்பதை இந்த நாட்டில் பறையன் என்றும், பார்ப்பனர் என்றும், உயர்ந்த ஜாதிக்காரன், தாழ்ந்த ஜாதிக்காரன் என்றிருப்பதையும், சூத்திரன், பஞ்சமன் என்று மிருப்பதையும் அறவே ஒழித்து எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஒரே சமுதாய மக்கள், என்னும் கொள்கையை நடைமுறையில் செய்வதேயாகும். எனவே, நானோ, திராவிடர் கழகமோ நமக்குள்ளாக இருந்துவரும் ஜாதிகளுக்காக இதை செய்தோம் என்று வீண் பெருமை பேசிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.**

ஆரியரும் அவர்களின் ஸ்தாபனமாகிய காங்கிரசும் அம்மாதிரி வேண்டுமானால் சொல்லி ஏமாற்றிப் பெருமையடையலாம். காரணம் வேறு இனத்தைச் சார்ந்தவர்கள் அவர்கள், வேறு நாட்டினர் அவர்கள் நம்மைக் கடவுள் பேரால் அடிமைப்படுத்தி, நம் நாட்டில் நமக்கு வாழ்வில்லாமல் செய்து கறையான் போன்று அவர்கள் இங்கிருப்பதால் ஏதோ தானம் செய்வதுபோன்று அக்கூட்டம் ஆதிதிராவிடர்களுக்கு இதைச் செய்தேன்,





அதைச் செய்தேன் என்று கூறி ஆதிக்கத்தின் பித்தலாட்ட சூழ்ச்சியை மறைக்கச் செய்யலாம். நாம் ஏன் நமது திராவிடர் இயக்கம் அவ்வித கீழ்நிலையில் செல்லவேண்டும்? எனவே, **தோழர்களே, இனி நமக்குள் ஆதிதிராவிடர், திராவிடர் என்ற வித்தியாசங்கள் வேண்டாம். பறையன் என்று சொல்லாதே, சூத்திரன் என்று கூறாதே என்று உணர்ச்சியை அடையச் செய்யுங்கள். தவிர தாழ்த்தப்பட்டோர் சங்கத்திற்கு என் அருமை நண்பரும் அறிஞருமான டாக்டர் அம்பேத்கர் தலைவராக இருந்து வருகிறார். தாழ்த்தப்பட்டோர் இந்துக்களல்ல என்ற மிக ஆதாரத்தோடு ஆரியத்தின் முதுகில் தட்டி ஆணவத்தைக் குறைத்தவர்களில் அவரும் ஒரு முக்கியஸ்தர்; பேரறிஞர். நான் மிக எதிர்பார்த்திருந்தேன். அவரின் ஒத்துழைப்பை இவ்வாரியத்தின் கொடுமைகளை ஒழிக்க.**

**தோழர்களே! திராவிடர் இயக்கம் தனது கடைசி மூச்சிருக்கும் வரையில் இந்நாட்டில் பள்ளன், பறையன் என்று இழி ஜாதிகளை ஒழித்து அவர்களை முன்னேற்றவே உழைக்கும் என்ற உறுதியைத் தருகிறேன்.**

தாழ்த்தப்பட்டோர் பெடரேஷனில் சேருவதை நான் இன்னும் வேண்டாமென்று கூறவில்லை. அதில் வரும் நன்மைகளையும் நீங்கள் அடையுங்கள்.

திராவிடர் கழகத்தில் தாழ்த்தப்பட்டோர் சேர்ந்தாலும் சேராவிட்டாலும் அதன் உழைப்பின் பலனைத் தாழ்த்தப்பட்ட தோழர்களுக்கு அனுபவிக்க உரிமையுண்டு என்றார் பெரியார்.

**('விடுதலை' 8.7.1947)**

## விழிப்பும் எழுச்சியும்

"ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து உள்ளத்தை திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி **ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு** இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை" என்று அறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரின் சாதனையை வரலாற்றை பதிவு செய்துள்ளார்கள்.

“மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது; கண்ணில் படக்கூடாது; தெருவில் நடக்கக்கூடாது; கோயிலுக்குள் போகக்கூடாது; குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்கிறவை போன்ற கொள்கை தாண்டவமாடும் ஒரு நாட்டைப் பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக் குழம்பால் எரிக்காமலோ, சமுத்திரம் பொங்கி மூழ்கச் செய்யாமலோ, பூமிப் பிளவில் அமிழச் செய்யாமலோ, சண்டமாருதத்தால் துகளாக்கமாலோ விட்டிருப்பதைப் பார்த்த பிறகும் கூட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் நீதிமான் என்றும், சர்வ தயாபரர் என்றும் யாராவது சொல்லவந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். **இம்மாதிரி கொடுமைப்படுத்தித் தாழ்த்தப்பட்ட ஒரு மாபெரும் மக்கள் சமூகம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமையோடும், சாந்தத்தோடும், அஹிம்சா தர்மத்தோடும் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றீர்கள்?** இம்மாதிரியான மக்கள் இன்னும் ஒரு நாட்டில் இருந்துகொண்டு உயிர்வாழ்வதைவிட அவர்கள் இம்முயற்சியில் உயிர்துறப்பதை உண்மையிலேயே தப்பு என்று யாராவது நினைக்கின்றீர்களா?

**(நூல் : தமிழர் தலைவர்)**

“தீண்டாமையை ஒழிக்க வைத்தியர்கள் டாக்டர்கள் போல் முயன்று, தீண்டப்படாதவர் என்பவர்களுக்கு எல்லா இடங்களிலும் சமத்துவம் அளிக்க வேண்டும் என்பது போன்ற சீர்திருத்தங்கள் செய்பவர் பலர். ஆனால், நாங்கள் தீண்டாமை ஏன்? எப்படி வந்தது? என்று பார்க்கிறோம். மதத்தால் அவர்கள் தீண்டப்படாதவர்கள் என்று பதில் வருகிறது. மதத்தால் ஏன் தீண்டப்படாதவர்கள் என்று கேட்கிறோம்? அது சாஸ்திர சம்மதம் என்கிறார்கள். இந்த சாஸ்திரம் எப்படி வந்தது என்றால், அது ‘ஆண்டவன் ஆணை’ என்கிறார்கள். அப்படியானால், தீண்டாமையை நிலைக்கச் செய்யும் மதத்தையும், அதற்கு ஆதரவு அளிக்கும் சாஸ்திரத்தையும், அதை ஏற்படுத்திய கடவுள்களையும் ஒழித்தால்தான் தீண்டாமை ஒழியும் என்கிறோம்.”

**(‘விடுதலை’ 16-04-1950)**

•••

“ஜாதியின் கொடுமையால் நாற்றமெடுத்த மலத்தைவிட மனிதன் கேவலப்படுத்தப்படுகிறான். இது உண்மை. வாய்ப் பேச்சுக்காக நான் சொல்லவில்லை. எப்படியெனில், மல உபாதைக்குச் சென்றவன் அந்த பாகத்தை மட்டும் ஒரு செம்பு தண்ணீரைக் கொண்டு சுத்தம் செய்கிறான். மலத்தைக் காலால் மிதித்துவிட்டால் அந்தக் காலை மட்டும் தண்ணீரை விட்டுக் கழுவிவிட்டால் அந்தக் குற்றம் போய்விடுவதாகக் கருதப்படுகிறது. ஒரு மனிதனை மற்றொரு மனிதன் தொட்டுவிட்டால் அவனைத்





தொட்டதால் ஏற்பட்ட தோஷம், தன் உடலை உச்சிமுதல் உள்ளங்கால் வரை நனையக் குளித்தால் ஒழியப் போவதில்லை என்கிறார்கள். ஆகவே, **மலத்தைவிட மனிதன் எவ்வளவு கேவலமாக மதிக்கப்படுகிறான் என்பதைப் பாருங்கள்.** மனிதனை மனிதன் தொடுவதால் ஏற்படும் கெடுதல் என்ன? தோஷமென்ன? எதுவுமில்லை. ஆனால் அது தோஷம் எனப்படுகிறது. ஒருவரை ஒருவர் ஏமாற்றி வாழ்வதற்கே இப்படிக் கூறப்படுகிறது. இதைவிட வேறு இரகசியமில்லை. **('திராவிடன்' 5-10-1929)**

•••

இன்று தீண்டாமை விலக்கு வேலையிலும், ஜாதி வேறுபாடு ஒழிப்பு வேலையிலும் ஈடுபட்டிருப்பவர்களில் 100-க்கு 100 பேரும் கீதை, மனுதர்மம், சாத்திரம் ஆகியவற்றை நம்பும், ஆதரிக்கும் மதவாதிகளேயாவார்கள். இவர்கள் எவ்வளவு நாளைக்குப் பாடுபட்டாலும், அடியற்ற ஓட்டைக் குடத்தில் தண்ணீர் இறைப்பது போல் பயனற்றே போகும். ஆகவே, தீண்டாமை ஒழிப்புக்கோ, ஜாதி ஒழிப்புக்கோ நீங்கள் முதலில் உங்கள் மதத்தை ஒழித்தாக வேண்டும். மதத்தை ஒழிக்க உங்களால் முடியவில்லையானால் மதத்தை விட்டு நீங்களாவது விலகியாக வேண்டும். உங்கள் மதம் போகாமல் ஒரு நாளும் உங்களது தீண்டாமைத் தன்மையோ, பறைத் தன்மையோ ஒழியவே ஒழியாது என்பது கல்லுப் போன்ற உறுதி. உதாரணம் வேண்டுமானால், இது வரையில் தீண்டப்படாதவர்களாய் இருந்து, மனிதச் சமூகத்தில் தீண்டக்கூடியவர்களாக ஆன எவரும் தீண்டப்படாதவர்களாய் இருந்தபோது அவர்களின் மீது சுமத்தப்பட்டிருந்த மதத்தை உதறித் தள்ளிவிட்ட பின்புதான் தீண்டத்தக்கவர்கள் ஆகியிருக்கிறார்கள். ஆதலால் மதத்தைக் காப்பாற்றிக் கொண்டு தீண்டாமையை விலக்கி விடலாம் என்று முயற்சித்து ஏமாற்றமடையாதீர்கள்.

**('குடிஅரசு' 28-7-1935)**

மலம் எடுப்பவன் இல்லாவிட்டால் ஊர் நாறிவிடும். துணி வெளுப்பவன் இல்லாவிட்டால் சுத்தமான துணி கட்ட முடியாது. சிரைப்பவன் இல்லாவிட்டால் முகம் தெரியாது. வீடு கட்டுபவன் இல்லாவிட்டால் குடியிருக்க வீடு இருக்காது. நெசவாளி இல்லாவிட்டால் நிர்வாணம்தான். குடியானவன் இல்லாவிட்டால் மக்கள் பட்டனி கிடக்க வேண்டும். இந்த இன்றியமையாத தொழிலாளிகள் இழி ஜாதிகளாம்; நாட்டுக்குப் பயனற்ற பார்ப்பான் மேல் ஜாதியாம்; இது நியாயந்தானா? **('விடுதலை' 23-6-1962)**

•••

உண்மையிலேயே ஜாதியின் பேரால் இந்தத் தொழிலாளி வர்க்கம் என்பது சிருட்டிக்கப்படவில்லை என்று சொல்லப்படுவது உண்மையானால் கக்கூசு எடுக்கிற தொழிலாளி மக்களிலும் நாலு பார்ப்பனர்கள் இருக்க வேண்டுமே. ஆனால் எந்தப் பார்ப்பானாவது கக்கூசு எடுத்ததாக யாராவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தாழ்த்தப்பட்ட மகன்தானே அந்த வேலையைச் செய்கிறான்! **('விடுதலை' 17-5-1954)**

விடிய விடியத் தெருவில் பன்றியும் கோழியும் என்ன தின்கின்ற தென்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவை வீதியில் தாராளமாக வர அனுமதிக்கிறோம். அவற்றைத் தின்பவர்களுக்குத் தீண்டாமை இல்லை. ஆனால், பச்சைப் புல்லையும் பருத்திக் கொட்டையையும் தின்னும் மாட்டைத் தின்பவர்களுக்குத்தானா தீண்டாமை? பன்றி, கோழி, எருமை வரும் இடத்தில் மனிதர் வரத் தடை ஏன்? **('விடுதலை' 20-5-1963)**

•••

மக்களின் சுயமரியாதைக்காகத்தான், மக்கள் மானத்தோடு வாழ்வதற்காகத்தான் அரசாங்கமும், தேசியமும் வேண்டுமே ஒழிய, மற்றபடி கேவலம் இவை மனிதன் வயிறு வளர்க்க மாத்திரம் வேண்டியது என்றால், அதற்காக எந்த அரசாங்கமும், அரசியலும், தேசியமும் கண்டிப்பாய் வேண்டியதில்லை என்றே சொல்லுவோம். **('குடிஅரசு' 17-02-1929)**

•••

போலீசு உத்தியோகங்களைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கே கொடுக்க வேண்டும். அவர்களை அக்கிரகாரத்தில் குடியிருக்கச் செய்ய வேண்டும். தீண்டாமை பாராட்டாத சிறந்த கிராமங்களுக்குப் பரிசளிக்க வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று தனியாகச் சேரி கட்டி அங்கே அவர்கள் குடியேறுவதை மாற்ற வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று தனியாக சேரிகள் இருக்ககூடாது. **(95ஆம் ஆண்டு பெரியார் பிறந்தநாள் விடுதலை மலர்)**

காரியத்தில் உறுதியாய் நிற்காமல் வாயளவில் தீண்டாமையை ஒழிப்பதாகப் பேசுவதான அயோக்கியத் தனத்தால் ஒருபோதும் நாடு முன்னேற முடியாது. புண்ணில், கண்ணில்பட்டால், அதை (வலியை) உடனே தொலைக்க மருந்து முதலியன போட்டு சிகிச்சை செய்யவில்லையா? (அப்படித்தான் இதுவும்) ஆனால், அது வலிக்கக்கூடாது, எரியக்கூடாது என்று மூடி வைத்துக்கொண்டு வாய்ச்சமாதானம் சொல்வது புழுத்துச் சாவதற்கு வழியாகும் என்றார் பெரியார். **('குடிஅரசு' 17-2-1929)**

•••

"தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட, மிருகங்கள்போல் நடத்தப்படுகிற பாட்டாளி, கூலி, ஏழை மக்கள்தான் எனக்கு கண் வலியாய் இருப்பவர்கள். அவர்களைச் சம மனிதர்களாக ஆக்குவதுதான் எனது கண்நோய்க்குப் பரிகாரம்."

என்று தாழ்த்தப்பட்டோருக்காக பேசியும், எழுதியும், தனது தொண்டினை புரட்சியாகச் செய்தார் பெரியார். அதில் வெற்றியும் பெற்றார்.

**('விடுதலை' 15-10-1967)**

•

வினா-விடை

# தந்தை பெரியாரும் தாழ்த்தப்பட்டோரும்

பேரா.மஞ்சை வசந்தன், M.A., M.Ed., M.Phil.

1) **பஞ்சமனுக்கு இடமில்லையென்று சொன்ன நாடக சபாவின் பெயர்**

(அ) நாரதகானசபா (ஆ) தர்மர் சபா

(இ) சுகுணவிலாஸ் சபா (ஈ) முத்துவேல் சபா

2. **தாழ்த்தப்பட்டவர்களை பள்ளிகளில் எந்த ஆண்டுவரைச் சேர்க்காமல் இருந்தார்கள்?**

(அ) 1952 (ஆ) 1940 (இ) 1920 (ஈ) 1930

3. **மேல்துண்டு போடக்கூடாது என்று எதிர்க்கப்பட்ட நாயனக் கலைஞர் பெயர்?**

(அ) மாரிமுத்து (ஆ) பழனிவேல்

(இ) அருணாசலம் (ஈ) சிவக்கொழுந்து

4. **நாயனக் கலைஞர் சிவக்கொழுந்து துண்டை தோளிலிருந்து எடுக்கக் கூடாது என்று தீவிரமாய் நின்றவர்?**

(அ) அழகிரிசாமி (ஆ) குப்புசாமி

(இ) துரைசாமி (ஈ) நாகலிங்கம்



5. **திராவிடர் சங்க விடுதி திருவல்லிக்கேணியில் யாரால் அமைக்கப்பட்டது?**
(அ) பனகல் அரசர் (ஆ) தியாகராயர்
(இ) பெரியார் (ஈ) டாக்டர் சி.நடேசனார்

6. **அக்ரகாரத்தில் தாழ்த்தப்பட்டவர் மலம் எடுக்கக் கூடாது, அவர்களைவிட உயர் ஜாதியினர் எடுக்க வேண்டும் என்ற தீர்மானம் கும்பகோணம் நகராட்சியில் எந்த ஆண்டு போடப்பட்டது?**
(அ) 1935 (அ) 1948 (இ) 1920 (ஈ) 1941

7. **தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புக்கு தபால்காரன் வராது கடிதங்களை ஊர் எல்லைக் கோயிலில் வீசிவிட்டுப் போனது எந்த இடத்தில்?**
(அ) மதுரை (ஆ) சென்னை வில்லிவாக்கம்
(இ) சேலம் (ஈ) சென்னை எழும்பூர்

8. **தஞ்சை நடுவாற்றங்கரையில் உள்ள இடுகாட்டில் ‘சூத்திரர் இடம்’ என்று இருந்த கல்வெட்டு பெரியார் முயற்சியால் அகற்றப்பட்டது எந்த ஆண்டு?**
(அ) 1951 (ஆ) 1954 (இ) 1915 (ஈ) 1931

9. **தாழ்த்தப்பட்டோர் வண்டியில் ஏறி வந்ததற்கு அபராதம் விதிக்கப்பட்டதைக் கண்டித்து “கொடுமை! கொடுமை!” என்று பெரியார் குடிஅரசில் எழுதிய நாள்?**
(அ) 19.05.1930 (ஆ) 24.03.1930
(இ) 14.06.1941 (ஈ) 24.11.1929

10. **“தாழ்த்தப்பட்டோரை ஜனாதிபதியாக்கு” என்று ‘விடுதலை’ தலையங்கம் எழுதிய நாள்?**
(அ) 09.02.1982 (ஆ) 06.11.1989
(இ) 11.07.1913 (ஈ) 10.04.1980

11. **திராவிடர் இயக்கம் பள்ளன், பறையன் என்ற இழிவை ஒழித்து அவர்களை முன்னேற்ற உழைக்கும் என்று கூறியவர்?**
(அ) அறிஞர் அண்ணா (ஆ) கலைஞர் மு.கருணாநிதி
(இ) புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் (ஈ) தந்தை பெரியார்

12. **“மலத்தை மிதித்தால் அதை மட்டும் அலும்புகிறான், மனிதனைத தொட்டால் தலைமூழ்கிக் குளிக்கிறான்! எவ்வளவுபெரிய கொடுமை!” என்றவர் யார்?**

(அ) பெருந்தலைவர் காமராசர்

(ஆ) நாவலர் நெடுஞ்செழியன்

(இ) அறிஞர் அண்ணா

(ஈ) தந்தை பெரியார்

13. **மதத்தை ஒழித்தால்தான் ஜாதியை ஒழிக்க முடியும் என்றவர்**

(அ) சிங்காரவேலர்  (ஆ) பெருஞ்சித்திரனார்

(இ) பெரியார்  (ஈ) அண்ணா

14. **பன்றியும் நாயும் நடமாடும் தெருவில் தாழ்த்தப்பட்டவன் வரக்கூடாதா? எவ்வளவு பெரிய அநீதி? என்று கொதித்துக் கேட்டவர்**

(அ) நெ.து.சுந்தரவடிவேலு  (ஆ) பக்தவத்சலம்

(இ) பாரதிதாசன்  (ஈ) பெரியார்

15. **“தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மிருகங்களைப் போல் நடத்தப்படுகிற பாட்டாளி, கூலி, ஏழை மக்கள்தான் எனக்குக் கண்வலியாய் இருப்பவர்கள். அவர்களைச் சமமனிதர்களாய் ஆக்குவதுதான் எனது வலிநீக்கும் வழி” என்றவர்**

(அ) அம்பேத்கர்  (ஆ) பெரியார்

(இ) காமராசர்  (ஈ) அண்ணா

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. இ | 2. ஈ | 3. ஈ | 4. அ | 5. ஈ | 6.அ | 7. ஆ | 8. ஆ | 9. ஈ | 10. அ |
| 11. ஈ | 12. ஈ | 13. இ | 14. ஈ | 15. ஆ | | | | | |

செப். 17 : தந்தை பெரியார் 137ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

# பெரியார் 1000

**பள்ளி மாணவர்களுக்கான மாபெரும் வினா-விடைப் போட்டி - 2015**

---

# மாணவர்கள் கவனத்திற்கு...

1. 90 வினாக்களைக் கொண்ட வினாத் தாளில், ஒவ்வொரு வினாவிற்கும் 4 விடைகள் ( A, B, C, D ) கொடுக்கப்பட்டிருக்கும். சரியான விடையைத் தெரிவு செய்து, விடைத்தாளில் அதற்குரிய எழுத்தை முழுமையாக நிழலிட்டு நிரப்ப வேண்டும். (மாதிரி இணைக்கப்பட்டுள்ளது)

2. விடைத்தாள் ‘Coding Sheet’ வடிவமைப்பில் கொடுக்கப் பட்டிருக்கும். (மாதிரி இணைக்கப்பட்டுள்ளது)

3. நிழலிடப்பட வேண்டிய வட்டங்களைக் கொண்டதாக விடைத்தாள் இருக்கும். பென்சில் அல்லது பேனா மூலம் வட்டத்தினை முழுமையாக நிழலிட வேண்டும்.

4. இதில் காணப்படும் பதிவு எண்ணே (Register No.) மாணவர்களுக்குரிய அடையாளப் பதிவு எண்ணாகும்.

5. மாணவர்கள் அந்த எண்ணை தனியே குறித்து வைத்துக் கொள்ளவேண்டும். இந்தப் பதிவு எண் மூலம்தான் தேர்வு முடிவை அறிந்து கொள்ள முடியும்.

6. மாணவர்கள் தங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, இல்ல முகவரி, கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை உரிய இடத்தில் நிரப்பி, நிழலிட்டு கையொப்பம் இடவேண்டும்.

7. ஒருங்கிணைப்பாளர் அறிவிக்கும் மாவட்ட குறியீட்டு எண்ணை '2. District Code' என்ற இடத்திலும், மய்ய குறியீட்டு எண்ணை '3. Centre Code' என்ற இடத்திலும் நிரப்பி, நிழலிட வேண்டும்.

8. வினாத்தாளிலுள்ள குறியீட்டு ( A, B, C, D, ...... T ) எண்ணை '4.Question Paper Code' என்ற இடத்தில் நிரப்பி, நிழலிட வேண்டும்.

9. தவறான விடைக்கு மதிப்பெண் குறைப்பு இல்லை.

10. வினாத்தாளை தேர்வு முடிந்தவுடன் விடைத்தாளுடன் இணைத்து கொடுக்கவும்.

11. இணையதளத்தில் 'www.periyarquiz.com' தேர்வு முடிவு முடிவுகள் வெளியிடப்படும்.

12. அந்தந்த பகுதியில் நடைபெறும் தந்தை பெரியார் பிறந்தநாள் விழாவில் முதல் மூன்று மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

■

# விடைத்தாள் மாதிரிப் படிவம்



செப். 17: தந்தை பெரியார் 137ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

## பெரியார் 1000

பள்ளி மாணவர்களுக்கான மாபெரும் வினா-விடைப் போட்டி – 2014




பெரியார் 1000
6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை

**ANSWER SHEET** Register No : **200001**

1. Name of the Candidate in CAPITAL LETTER (initials in last with space): **RAMASAMY V**

2. District Code: **15**

3. Centre Code: **012**

4. Question Paper Code: **E**

4. MOBILE No.: **9710945243**

| Q.No. | Answers | Q.No. | Answers | Q.No. | Answers |
|---|---|---|---|---|---|
| 1 | Ⓐ Ⓑ ● Ⓓ | 31 | Ⓐ ● Ⓒ Ⓓ | 61 | ● Ⓑ Ⓒ Ⓓ |
| 2 | ● Ⓑ Ⓒ Ⓓ | 32 | Ⓐ Ⓑ Ⓒ ● | 62 | Ⓐ Ⓑ ● Ⓓ |
| 3 | Ⓐ Ⓑ ● Ⓓ | 33 | Ⓐ ● Ⓒ Ⓓ | 63 | ● Ⓑ Ⓒ Ⓓ |
| 4 | ● Ⓑ Ⓒ Ⓓ | 34 | Ⓐ Ⓑ Ⓒ ● | 64 | Ⓐ Ⓑ Ⓒ ● |
| 5 | Ⓐ ● Ⓒ Ⓓ | 35 | Ⓐ Ⓑ ● Ⓓ | 65 | ● Ⓑ Ⓒ Ⓓ |
| 6 | Ⓐ Ⓑ ● Ⓓ | 36 | Ⓐ ● Ⓒ Ⓓ | 66 | Ⓐ Ⓑ Ⓒ ● |
| 7 | ● Ⓑ Ⓒ Ⓓ | 37 | Ⓐ Ⓑ Ⓒ ● | 67 | ● Ⓑ Ⓒ Ⓓ |
| 8 | Ⓐ Ⓑ ● Ⓓ | 38 | Ⓐ ● Ⓒ Ⓓ | 68 | Ⓐ ● Ⓒ Ⓓ |
| 9 | Ⓐ ● Ⓒ Ⓓ | 39 | Ⓐ Ⓑ ● Ⓓ | 69 | Ⓐ ● Ⓒ Ⓓ |
| 10 | Ⓐ Ⓑ ● Ⓓ | 40 | Ⓐ ● Ⓒ Ⓓ | 70 | ● Ⓑ Ⓒ Ⓓ |
| 11 | Ⓐ Ⓑ Ⓒ ● | 41 | ● Ⓑ Ⓒ Ⓓ | 71 | Ⓐ Ⓑ ● Ⓓ |
| 12 | ● Ⓑ Ⓒ Ⓓ | 42 | Ⓐ Ⓑ Ⓒ ● | 72 | ● Ⓑ Ⓒ Ⓓ |
| 13 | Ⓐ Ⓑ Ⓒ ● | 43 | ● Ⓑ Ⓒ Ⓓ | 73 | Ⓐ Ⓑ Ⓒ ● |
| 14 | Ⓐ Ⓑ ● Ⓓ | 44 | Ⓐ ● Ⓒ Ⓓ | 74 | Ⓐ ● Ⓒ Ⓓ |
| 15 | Ⓐ Ⓑ ● Ⓓ | 45 | Ⓐ ● Ⓒ Ⓓ | 75 | Ⓐ Ⓑ Ⓒ ● |
| 16 | Ⓐ Ⓑ Ⓒ ● | 46 | ● Ⓑ Ⓒ Ⓓ | 76 | Ⓐ Ⓑ ● Ⓓ |
| 17 | Ⓐ ● Ⓒ Ⓓ | 47 | Ⓐ Ⓑ ● Ⓓ | 77 | Ⓐ Ⓑ ● Ⓓ |
| 18 | Ⓐ Ⓑ Ⓒ ● | 48 | ● Ⓑ Ⓒ Ⓓ | 78 | Ⓐ Ⓑ Ⓒ ● |
| 19 | ● Ⓑ Ⓒ Ⓓ | 49 | Ⓐ Ⓑ Ⓒ ● | 79 | ● Ⓑ Ⓒ Ⓓ |
| 20 | Ⓐ Ⓑ ● Ⓓ | 50 | Ⓐ ● Ⓒ Ⓓ | 80 | Ⓐ Ⓑ Ⓒ ● |
| 21 | ● Ⓑ Ⓒ Ⓓ | 51 | Ⓐ Ⓑ Ⓒ ● | 81 | ● Ⓑ Ⓒ Ⓓ |
| 22 | Ⓐ ● Ⓒ Ⓓ | 52 | Ⓐ Ⓑ ● Ⓓ | 82 | Ⓐ ● Ⓒ Ⓓ |
| 23 | Ⓐ ● Ⓒ Ⓓ | 53 | Ⓐ Ⓑ ● Ⓓ | 83 | Ⓐ Ⓑ ● Ⓓ |
| 24 | ● Ⓑ Ⓒ Ⓓ | 54 | Ⓐ Ⓑ Ⓒ ● | 84 | ● Ⓑ Ⓒ Ⓓ |
| 25 | Ⓐ Ⓑ Ⓒ ● | 55 | Ⓐ Ⓑ Ⓒ ● | 85 | Ⓐ Ⓑ ● Ⓓ |
| 26 | ● Ⓑ Ⓒ Ⓓ | 56 | Ⓐ ● Ⓒ Ⓓ | 86 | Ⓐ ● Ⓒ Ⓓ |
| 27 | Ⓐ Ⓑ Ⓒ ● | 57 | ● Ⓑ Ⓒ Ⓓ | 87 | ● Ⓑ Ⓒ Ⓓ |
| 28 | ● Ⓑ Ⓒ Ⓓ | 58 | Ⓐ Ⓑ Ⓒ ● | 88 | Ⓐ Ⓑ ● Ⓓ |
| 29 | Ⓐ Ⓑ ● Ⓓ | 59 | Ⓐ ● Ⓒ Ⓓ | 89 | ● Ⓑ Ⓒ Ⓓ |
| 30 | ● Ⓑ Ⓒ Ⓓ | 60 | Ⓐ Ⓑ Ⓒ ● | 90 | Ⓐ Ⓑ ● Ⓓ |

Co-ordinator Signature:

## INSTRUCTIONS FOR MARKING OMR SHEET

1. Use Only HB dark Pencil for shading the Circle.
   Ⓐ Ⓑ ● Ⓓ
2. Use Ballpoint Pen for writing (Blue or Black) inside the Rectangular Boxes
3. Shade the circle completely without leaving any space, the correct method of shading is as shown below

| | | |
|---|---|---|
| CORRECT METHOD | Correct Method | Ⓐ Ⓑ ● Ⓓ |
| DO NOT SHADE LIKE THIS | Wrong Method | ✓ ✗ ⊕ ⦿ |

Standard : **VII**

School : **Govt. Boys Hr. Sec. School, Chrompet.**

Res. Address : **15, Gandhi Street, Nehru Nagar, Tambaram (West), Chennai - 600 045.**

Email id: **ramasamyv@gmail.com**

V. R[illegible] — Student Signature

# மாதிரி வினாத்தாள்

## செப்.17: தந்தை பெரியார் 137ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா



பெரியார் ஆயிரம் வினா-விடை எழுத்துப் போட்டி-2015

**நேரம் : 90 நிமிடங்கள்** **மதிப்பெண் : 90**

**குறியீடு**

**C**

குறிப்பு : 1. வினாத்தாளின் குறியீடை விடைத்தாளில் குறிப்பிடவும்
2. மிகவும் சரியான விடையை தேர்ந்தெடுத்து கொடுக்கப்பட்டுள்ள விடைத்தாளில் சரியான வட்டத்தை பென்சிலால் நிரப்பவும்

---

**1) தந்தை பெரியாரின் அன்னையின் பெயர் என்ன?**

A) சின்னத்தாயம்மாள் B) கண்ணம்மாள்

C) பொன்னுத்தாயம்மாள் D) நல்லம்மாள்

**2) பெரியார் அவர்கள் 10 வயதுச் சிறுவனாக இருந்தபோது இரண்டு கால்களிலும் விலங்குக் கட்டைகள் பூட்டப்பட்டதற்கான காரணம்**

A) மரங்களின் உச்சியிலும் வீட்டின் மாடியிலும் ஏறி விளையாடியமையால்

B) புழங்கக்கூடாத சாதியினருடன் புழங்கி, அவர்களின் வீட்டுத் தின்பண்டங்களைத் தின்று அவர்களோடு விளையாடியமையால்

C) ஊரைவிட்டு அடிக்கடி ஓடிப்போனமையால்

D) பெற்றோரையும் ஆசிரியர்களையும் மதிக்காமையால்

**3) கடவுள் இல்லை என்று கூறிய பெரியார் பல தேவஸ்தானங்களுக்குத் தலைவராக இருந்ததற்குக் காரணம்**

A) அவர் மறைமுகமாகக் கடவுளை வணங்கினார்

B) தெய்வ குற்றத்திற்குப் பயந்து

C) தந்தையின் பணியாதலால் அதை ஏற்றுக்கொண்டார்

D) நல்ல வருமானம் வந்ததால் ஏற்றுக்கொண்டார்

**4) "ஆணுக்குப் பெண் அடிமையில்லை" என்று சொன்ன பெரியார் தமது குடும்பத்தில் 1909 ஆம் ஆண்டிலேயே யாருக்கு விதவைத் திருமணம் நடத்தி வைத்தார்?**

A) சகோதரிக்கு B) தங்கையின் மகளுக்கு

C) மகளுக்கு D) அண்ணனின் மகளுக்கு

**5) 8.1.1940 அன்று பம்பாயில் பெரியார், முகமது அலி ஜின்னா, அம்பேத்கர் ஆகிய மூவரும் கலந்து பேசிய உரை எது குறித்து?**

A) இந்து முஸ்லிம் ஒற்றுமைபற்றி B) இன இழிவை ஒழிப்பதற்காக

C) நாட்டுப் பிரிவினை பற்றி D) கடவுளை ஒழிப்பது பற்றி

**6) பெரியாருக்குப்பின் பெரியார் இயக்கத்திற்குத் தலைமையேற்றவர் யார்?**

A) குத்தூசி குருசாமி B) அண்ணாதுரை

C) கி. வீரமணி D) மணியம்மையார்

**7) தங்கநிறத் தந்தைக்கு 76 வயதில் 76 பவுன் தங்கம் வழங்கிய ஊர் எது?**

A) காஞ்சிபுரம் B) சேலம் C) நாகப்பட்டினம் D) தஞ்சை

8) **முதன் முதலாகப் பெரியார் அவர்களுக்கு எடைக்கு எடை வெள்ளி நாணயம் கொடுத்த ஊர் எது?**

A) திருச்சி B) சேலம் C) ஈரோடு D) தஞ்சை

9) **“விடுதலையும் பெரியாரும் எனது அன்பார்ந்த எதிரிகள்" - எழுதியவர் யார்?**

A) கருணாநிதி B) காமராசர் C) சங்கராச்சாரியார் D)இராசகோபாலாச்சாரியார்

10) **சிக்கனமாக வாழ்ந்த பெரியார் தம் சொத்துக்களைத் தம்உறவினர்களில் யாருக்கு எழுதி வைத்தார்?**

A) அவரது சகோதரர் கிருஷ்ணசாமிக்கு B) அண்ணன் மகன் ஈ.வெ.கி சம்பத்துக்கு

C) மணியம்மையின் சகோதரருக்கு D) அனைத்தும் தவறானவை

11) **சமதர்ம சமுதாயத்தைப் படைக்கப் பெரியார் அவர்கள் தம் வாழ்நாளில் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை எத்தனை?**

A) 9989 B) 3074 C) 10700 D) 10600

12) **‘விடுதலை’ ஏடு நடத்திட பொருளாதார ரீதியாக உதவி செய்த பெருமகன் யார்?**

A) அரசர் அண்ணாமலையார் B) ஆர். கே. சண்முகம்

C) பழையகோட்டை அர்ச்சுனன் D) அழகப்பர்

13) **காசிக்குச் சென்று திரும்பிவந்த பெரியாரிடம் ‘அடே ராமசாமி இவ்வளவு நாளாய் எப்படியடா சாப்பிட்டாய்? ’ என்று கேட்ட? தந்தைக்குப் பெரியார் அளித்த பதில் என்ன?**

A) உணவு விடுதியில் சாப்பிட்டேன் B) உறவினர் வீட்டில் சாப்பிட்டேன்

C) நண்பர் வீட்டில் சாப்பிட்டேன்

D) நாம் ஈரோட்டில் கொடுக்கும் சதாவிருத்தியை (பிச்சை) எல்லாம் வசூல் பண்ணிவிட்டேன்.

14) **சாதி அமைப்பின் அடித்தளம் என்ன?**

A) பிறப்பினால் உயர்வு தாழ்வு B) பணிச்சிறப்பால் உயர்வு தாழ்வு

C) பொருட்சிறப்பால் உயர்வு தாழ்வு D) தோற்றப் பொலிலால் உயர்வு தாழ்வு

15) **“இரண்டாம் முறையாகக் கவுன்சிலில் முறையாக ஒரு மனுவைப் படைத்தேன். அன்றைக்கு கவுன்சிலிலிருந்த ஏறத்தாழ எல்லாச் சவர்ணா உறுப்பினர்களும் எல்லா இந்துக்களுக்கும் கோயில் நுழைவு தரத் திவானை வேண்டிக் கையெழுத்திட்டு ஒரு மனுவை அவரிடம் அளித்தனர்" என்கிறார் டி.கே.மாதவன், அப்போது திவானாக இருந்தவர் யார்?**

A) ஸ்ரீமத் மன்னத் கிருஷ்ணன் நாயர் B) திவான் பகதூர் கிருஷ்ணன் நாயர்

C) திவான்பகதூர் இராகவய்யா D) சி.பி.இராமசாமி அய்யர்

16) **ஈழவ சமுதாயத் தலைவர்களான டி.கே. மாதவன், வக்கீல் மாதவன் இவர்களோடு கே.பி.கேசவமேனன் போன்றோரும் சேர்ந்து கோயிலைச் சுற்றி நான்கு சாலைகள் உள்ள ஓர் ஊரில் சத்தியாக் கிரகத்தைத் தொடங்க முடிவு செய்தார்கள் அந்த ஊர் எது?**

A) வைக்கம் B) கொல்லம் C) திருவனந்தபுரம் D) சங்கணாச்சேரி

**17) தலைமையில்லாமல் போராட்டம் நின்று விடும் நிலை ஏற்படவே பெரியர் ஈ.வெ.ரா வந்து போராட்டத்தை நடத்தவேண்டும் என்று கோரி அவருக்கு ஒரு கடிதத்தை இரு தலைவர்கள் கையெழுத்திட்டு அனுப்பினார்கள். அத்தலைவர்கள் யார்?**

A) பாரிஸ்டர் ஜார்ஜ்ஜோசப், கேசவமேனன்
B) டி.கே.மாதவன், வக்கீல் மாதவன்
C) ஏ. கே. பிள்ளை, வேலாயுதமேனன்
D) கேளப்பன், திருமதி டி.கே.மாதவன்

**18) நாயர் ஈழவர் கூட்டுக் கூட்டத்தில் போராட்டம் குறித்த தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அளிக்கப் பெரியார் ஈ.வெ.ரா, டாக்டர் எம்பெருமாள் நாயுடு, மன்னத் பத்மநாப பிள்ளை, எம்.மத்துண்ணி, சித்தேடு சங்குப்பிள்ளை, இராமகிருஷ்ணதாஸ், அய்யாமுத்துக் கவுண்டர், ஏ.கே.கோவிந்தன் சாணார் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது. இக்கூட்டம் எப்போது நடைபெற்றது?**

A) 8.5.24 B) 9.5.24 C) 10.5.24 D) 11.5.24

**19) திருமதி ஈ.வெ.ரா. நாகம்மையார், திருமதி முத்துசுவாமி, திருமதி கோவிந்தன் சாணார் உள்ளிட்ட மகளிர் ஆறுபேர் சத்தியாக்கிரகம் செய்த நாள் எது?**

A) 2.6.24 B) 3.6.24 C) 4.6.24 D) 5.6.24

**20) 22.12.1924 அன்று நடைபெற்ற பெல்காம் காங்கிரஸ் மாநாட்டில் தம்மைச் சந்தித்த டி.கே.மாதவன் முதலியவர்களிடம் "என் பெயரையோ காங்கிரஸ் பெயரையோ சொல்லாமல் நீங்கள் எங்கிருந்தும் பணத்தை வசூலித்துக் கொள்ளலாம்" என்று சொன்னவர் யார்?**

A) காந்தியார் B) இராசகோபாலாச்சாரியார்
C) மாளவியா D) மோதிலால்

**21) தமிழ் குருகுல வித்யாலயா நிலையத்தை நிறுவியவர் யார்?**

A) பாரதியார் B) சத்திய மூர்த்தி அய்யர்
C) மதுரை வைத்திய நாதய்யர் D) வ.வே.சு.அய்யர்

**22) சேரன்மாதேவி குருகுலத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பிற்காலத்தில் விளங்கிய ஒருவரின் பிள்ளையும் மாணவராயிருந்தார். அவர் யார்?**

A) பி.எஸ். குமாரசாமி ராஜா B) எம்.பக்தவத்சலம்
C) ஓ.பி.இராமசாமி ரெட்டியார் D) டாக்டர் பி.சுப்பராயன்

**23) தஞ்சையில் 1921 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் மாநாடு நடந்தபோது பார்ப்பனரல்லாதார் பிரதிநிதிகள் தங்கியுள்ள இடத்தில் ஒரு கூட்டம் நடைபெறும் எனப் பெரியார் ஈ.வெ.ரா. அறிவித்தார். எதற்காக இக்கூட்டம் அவரால் கூட்டப்பட்டது?**

A) இந்திய விடுதலை குறித்து ஆராய B) மொழிச்சிக்கல் குறித்து முடிவு எடுக்க
C) பார்ப்பனரல்லாதார் குறித்துப் பேச D) தேர்தல் குறித்து ஆய்வு நடத்திட





**24) பிரதிநிதி ஸ்தான தீர்மானத்தை வழிமொழிந்தவர் யார்?**

A) ஆரியா மேனன் B) தஞ்சாவூர் வெங்கடகிருஷ்ணபிள்ளை
C) சர்க்கரைச் செட்டியார் D) எஸ். இராமநாதன்

**25) தந்தை பெரியாரைக் காங்கிரசில் ஈடுபடத் தூண்டியவர்கள் யார்?**

A) இராஜகோபாலாச்சாரியார் B) காந்தி-நேரு
C) பாரதியார்-சத்தியமூர்த்தி D) தியாகராயர் செட்டியார்-டி.எம்.நாயர்

**26) காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்தின் நீதிமன்றப் புறக்கணிப்புக் கொள்கையின்படி தந்தை பெரியார் துறந்த தொகை எவ்வளவு?**

A) 12000 B) 16000 C) 19000 D) 50000

**27) தந்தை பெரியார் ஈரோட்டில் 1922 முதல் 1924 வரை 30 மாணவர்களுக்கு . . . . . . . கற்பிக்கும் பள்ளியினைத் தம் சொந்தச் செலவில் நடத்தி வந்தார்**

A) தமிழ் B) மலையாளம் C) சமஸ்கிருதம் D) இந்தி

**28) வைக்கம் போராட்டத்தில் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை பெற்ற பெரியார் எந்தச் சிறையில் அடைக்கப்பட்டார்?**

A) அருவிக்குத்தி B) திருவாங்கூர் சென்ட்ரல் ஜெயில்
C) பெல்லாரி சிறை D) அந்தமான் சிறை

**29) தந்தை பெரியார் கலந்து கொண்ட வைக்கம் வெற்றிவிழாக் கூட்டம் நடைபெற்ற நாள் எது?**

A) 29.11.1920 B) 29.11.1925 C) 29.11.1927 D) 29.11.1929

**30) பெரியார் நடத்திய "குடிஅரசு" இதழின் தலைப்புப் பகுதியில் இடம் பெற்ற படம் எது?**

A) பகுத்தறிவுச் சுடர் B) பெரியாரின் படம் C) குத்து விளக்கு D) ராட்டினம்

**30) பெரியார் நடத்திய "குடிஅரசு" இதழின் தலைப்புப் பகுதியில் இடம் பெற்ற படம் எது?**

A) பகுத்தறிவுச் சுடர் B) பெரியாரின் படம்
C) குத்து விளக்கு D) ராட்டினம்

**31) சேரன்மாதேவியில் வ.வே.சு. அய்யர் நடத்திய குருகுலம் மாணவர்களிடையே . . . . . .**

A) தேசிய உணர்வை ஏற்படுத்தியது B) ஜாதிபேதத்தை ஏற்படுத்தியது
C) பகுத்தறிவு உணர்வை ஊட்டியது D) தீவிரவாத உணர்ச்சியை உண்டாக்கியது

**32) திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பார்ப்பனத் துவேஷப் பிரச்சாரம் செய்துவருவதாய்க் கூறிக் கண்டனத் தீர்மானம் யார்மீது கொண்டுவரப்பட்டது?**

A) தந்தை பெரியார் B) டாக்டர் வரதராஜுலு
C) எஸ்.இராமநாதன் D) தண்டாயுதபாணிப் பிள்ளை

**33) இந்தியாவுக்குப் பிரிட்டிஷார் செய்த கெடுதியைவிடப் பிராமணர்கள் செய்த கெடுதி குறைவானதல்ல - இது யார் கூற்று?**

A) காந்தி B) விவேகானந்தர் C) காஞ்சி சங்கராச்சாரியார் D) நேரு

**34) "குடிஅரசு" ஏட்டின் பதிப்பாளர் யார்?**

A) நாகம்மையார் B) ஈ.வெ. கிருட்டினசாமி
C) பெரியார் D) தங்கப்பெருமாள்

**35) தந்தை பெரியார் தலைமையில் முதன்முதலில் பார்ப்பன ரல்லாதார் கூட்டம் எங்கு எந்நாளில் கூட்டப்பட்டது?**

A) மதுரையில் 1926 டிசம்பர் 25,26இல்
B) காஞ்சிபுரத்தில் 1925 நவம்பர் 22இல்
C) கோவையில் 1927 சூலையில்
D) செங்கற்பட்டில் 1929 பிப்ரவரி 17,18இல்

**36) தந்தை பெரியார், திரு.வி.க., எஸ். இராமநாதன், சிதம்பரம், தண்டபாணி (பிள்ளை) ஆகியோர் கலந்துகொண்ட இசை வேளாளர் மாநாடு 1925இல் நடத்தப் பெற்ற இடம் எது?**

A) திருவாரூர் B) திருக்குவளை C) மயிலாடுதுறை D) திருக்கோகர்ணம்

**37) "இந்தி திராவிட நாட்டில் புகுத்தப்படுவதை அடியோடு எதிர்க்க முன்வரவேண்டும் என்று மானமுள்ள பார்ப்பனர் அல்லாதோர் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்" என்று தந்தை பெரியார் அறைகூவல் விடுத்தது எப்போது?**

A) 1937இல் B) 1948இல் C) 1926இல் D) 1927இல்

**38) இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தக் குழுத்தலைவர் யார்?**

A) பி. இராமமூர்த்தி B) ம. சிங்கார வேலர்
C) நாகை காளியப்பன் D) டி. கிருஷ்ணசாமி

**39) 1927இல் கோயில் குருக்கள் பார்ப்பனரல்லர்; ஆதிசைவர் எனும் கருத்தை மறைமலை அடிகள், கா.சு. பிள்ளை ஆகியோர் தெரிவித்த போது எதிர்த்து குருக்கள் பார்ப்பனரே என நிறுவியவர் யார்?**

A) திரு. வி. க. B) குன்றக்குடி அடிகளார்
C) பெரியார் D) ஞானியார் அடிகள்

**40) கருத்தடையை (குடும்பக் கட்டுப்பாடு) ஆதரித்துக் 'கர்ப்ப ஆட்சி' எனும் தலைப்பில் பெரியார் எழுதிய ஆண்டு எது?**

A) 1925 B) 1928 C) 1931 D) 1940

**41) தாழ்ந்த ஜாதியாராகக் கருதப்பட்ட நாடார்களால் சமையல் செய்யப்பட்ட உணவு வழங்கப்படும் என்று சிறப்பாக விளம்பரப்படுத்தி எல்லா ஜாதியினரும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்டு தமிழ்நாட்டுச் சமூக இயலில் குறிப்பிடத்தக்க பெருமாற்றத்தை ஏற்படுத்திய இயக்கம் எது?**

A) காங்கிரசு B) நீதிக்கட்சி C) சுயமரியாதை இயக்கம் D) பொது உடைமை இயக்கம்

**42) பெண்களின் திருமணவயது 16 ஆக இருக்கவேண்டும் (அன்றைய சட்டப்படி14) திருமண விலக்கு உரிமை, மறுமண உரிமை, ஆசிரியப் பணிக்கு பெண்கள் மட்டுமே நியமிக்கப்படவேண்டும் என்பன போன்ற பெண்ணுரிமைத் தீர்மானங்களை முதலில் நிறைவேற்றிய மாநாடு எது?**

A) 1938 பெண்கள் மாநாடு
B) 1929 சுயமரியாதை மாநாடு
C) 1931 சுயமரியாதை மாநாடு
D) லால்குடி சுயமரியாதை மாநாடு

**43) அன்னை நாகம்மையார், எஸ். இராமநாதன், அ. பொன்னம்பலனார், சாமி.சிதம்பரனார், என். பி. காளியப்பன், மாயவரம் நடராசன் ஆகியோருடன் தந்தை பெரியார் மலேசிய சுற்றுப்பயணம் செய்தது எப்போது?**

A) 15. 12. 1929
B) 10. 12. 1931
C) 7. 11. 1930
D) 2. 12. 1931

**44) "பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குச் சற்று அளவுக்கு மீறிய நாணயமும் கட்டுப்பாடும் உறுதியும் தியாகபுத்தியும் வேண்டும். உத்தியோகத்திலிருப் பவர்களுக்கு இவை வேண்டியது இல்லை என்பதோடு, இவை உள்ளவர்கள் உத்தியோகத்தில் வெற்றிபெறவும் முடியாது" என்று பொது வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தவர் யார்?**

A) காந்தியடிகள்
B) பெரியார்
C) டி.எம். நாயர்
D) சர். தியாகராயர்

**45) அய்ந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மாநிலத்தில் தொடங்கப்பட்டு, மக்களால் நெடுங்காலமாக மரியாதை செய்யப்பட்டு வந்த கருத்துகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் அடிப்படையில் ஆட்டம் காணச் செய்து விட்டது" எனச் சுயமரியாதை இயக்கத்தை 1931இல் வருணித்த வெளிநாட்டு இயக்கம் எது?**

A) இலண்டன் ரேஷனலிஸ்ட் பிரஸ் அசோஷியேஷன்
B) பெர்லின் நாத்திக சங்கம்
C) மாஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சி
D) அமெரிக்க உண்மை நாடுவோர் சங்கம்

**46) விருதுநகர் சுயமரியாதை மாநாட்டுத் தலைவர் யார்?**

A) சர். ஆர். கே. சண்முகம்
B) வி. வி. இராமசாமி
C) ஏ.வி. பி. ஆசைத் தம்பி
D) பெரியார்

**47) ஆதி திராவிடர் கோயில் நுழைவை ஏற்பது சாத்திர நம்பிக்கையாளர்களை மனம் நோகச் செய்யும் இம்சையாகும் என்று 1927இல் காந்தியாரிடம் கூறியவர் யார் ?**

A) எம். கே. ஆச்சாரி
B) இராசகோபாலாச்சாரி
C) காஞ்சி சங்கராச்சாரி
D) சிருங்கேரி சங்கராச்சாரி

**48) "அவர்களுடைய குடும்பங்கள் மக்களின் சராசரி வாழ்க்கைத் தரத்துக்கு மேல் வாழக்கூடாது, வாழவே கூடாது" - இங்கு யாருடைய குடும்பங்களைப் பற்றிப் பெரியார் கூறுகிறார் ?**

A) அலுவலர்கள்
B) பொதுத் தொண்டர்கள்
C) அரசியல்வாதிகள்
D) ஆசிரியர்கள்

**49) ஒழுக்கம் எனப் பெரியார் குறிப்பது எதை ?**

A) கடவுள் பக்தி அற்றவர்களாக இருக்க வேண்டும்

B) எந்த மதத்திலும் சாராதவர்களாக இருக்க வேண்டும்

C) மற்றவர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று நினைக்கிறோமோ, அதன்படியே நாம் மற்றவரிடத்தில் நடந்துகொள்ளவேண்டும்

D) பொய் பேசாமை, திருடாமை, நாணயம்

**50) உண்மையான இன்பம் என்பதாகப் பெரியார் எதைச் சொல்கிறார்?**

A) பிறர்க்குத் தொண்டு செய்வதால் ஏற்படும் இன்பம்

B) ஒருவனும் ஒருத்தியும் இல்லறம் நடத்தும் இன்பம்

C) உயர்ந்த இலக்கியங்களில் இருந்து பெறும் இன்பம்

D) தெளிந்த கொள்கையாளர்களின் கூட்டுறவு தரும் இன்பம்

**51) மனிதருக்கு அழகு எது என்கிறார், பெரியார்?**

A) எளிய உடை
B) உடல் தூய்மை
C) மானமும் அறிவும்
D)அடக்க ஒடுக்கம்

**52) கர்ப்பத் தடைக்குப் பெரியார் கூறும் தலையாய காரணம் என்ன?**

A) பெண்கள் விடுதலையும் சுயேச்சையும் பெறல் B) பெண்களின் உடல்நலம்

C) நாட்டின் பொருளாதார உயர்வு
D) குடும்பச் சொத்துக் குலையாமல் இருக்க

**53) இந்து மதத்தை ஏற்க மறுப்பதற்கு அடையாளமாக 1953 மே 27 இல் கணபதி அல்லது விநாயகர் எனப்படும் கடவுள் சிலையைச் சொந்தச் செலவில் வாங்கி உடைக்கும் போராட்டத்தைப் பெரியார் நடத்தினார். அப்போழுது அவர் வெளிப்படுத்திய கருத்தின் ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது. அதில் கோடிட்ட இடத்தில் இட வேண்டிய சொற்றொடர் யாது? "எந்த நாட்டிலும் இல்லாத, நாட்டு நலனுக்காகவோ கல்வி நலனுக்காகவோ ஆட்சி நலனுக்காகவோ மக்கள் நலனுக்காகவோ அல்லாமல், பார்ப்பன நலனுக்கும் சர்வ ஆதிக்க நலனுக்கும் ஆகவுமே ஏற்படுத்தப்பட்டு இருந்து வருகிற ............... புதுப்பிப்புக்காகவே இந்த ஜனநாயக ஆட்சி என்பது இருக்கிறது"**

A) மனுதர்மம்
B) வருணாசிரம தர்மம்
C) சனாதன தர்மம்
D) வேதிய புராண தர்மம்

**54) மதக் கொள்கைகளைப் பற்றி மதவாதிகளால் வலியுறுத்தப்படுவன எவை எனப் பெரியார் கூறுகிறார்?**

A) அவற்றை மாற்ற முடியாது, மாற்றக்கூடாது, எக்காலத்திற்கும் ஏற்றது

B) பழங்காலத்தில் பெரியோர்களால் மக்கள் நன்மையை முன்னிட்டுச் சொல்லப்பட்டவை.

C) கடவுள், அவருடைய அவதாரம், அவருடைய பிள்ளை, அவரால் அனுப்பப்பட்ட நபர்கள் ஆகியவர்களின் அறிவுரைகள்; அவற்றை நம்பித்தான் ஆகவேண்டும்

D) மேலே குறிப்பிட்டுள்ள எல்லாம்

**55) பின் வரும் பெரியார் வாசகத்தில் உள்ள கோடிட்ட இடங்களுக்கான உரிய ஒரு சொல் யாது? "..... மற்றும் சுதந்திரம் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல; ...... அற்றவர்களுக்குச் சுதந்திரம் பலனளிக்காது".**

A) பொருளாதாரச் சமத்துவம் B) பகுத்தறிவு
C) சுயமரியாதை D) ஆங்கிலப் படிப்பு

**56) தமது மூடநம்பிக்கை ஒழிப்புக் கொள்கைக்கு வெற்றியளிப்பவை எனப் பெரியார் கூறியவை எவை?**

A) இயற்கை போக்கு, விஞ்ஞான வளர்ச்சி
B) மக்களின் கூர்ந்த அறிவும் ஆர்வமும்
C) அரசாங்கத்தின் ஆதரவும் சட்டமும் D) கல்விக் கூடங்கள் அதிகரித்தல்

**57) கொடுக்கப்பட்டிருக்கும் பெரியார் கூற்றில் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு வேண்டிய தகுந்த சொல் யாது? "உலகில் எதுவானாலும் அதைப் பற்றிய உண்மையை ஆராய்ந்து அறிந்து அதனை முழுமையாகத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். இது தான்........... . ."**

A) கல்வி கற்றதன் பயன் B) படிப்பாளிக்கு அடையாளம்
C) பகுத்தறிவின் வேலை D) நாத்திகத்தின் சிறப்பு

**58) பெரியார் கருத்தில் அதிகாரிகளின் கடமை யாது?**

A) மக்களுக்கு நாணயமாக, நடுநிலையாகத் தொண்டாற்றுவது.

B) தயவு, தாட்சண்யம், அனுதாபம் ஆகியவைகளுடன் மக்களிடம் நடந்து கொள்வது.

C) மேற்சொன்ன இரண்டும்

D) நேரம் பார்க்காமல் காலம் கருதாமல் கடமையாற்றுவது

**59) சீர்திருத்தம் என்பதற்குப் பெரியார் அளிக்கும் ஒரு பொது விளக்கம் யாது?**

A) தேவையற்றதை நீக்கிவிட்டுத் தேவையுள்ளதை மட்டும் வைத்துக் கொள்ளுதல்
B) மூடநம்பிக்கைகளை விட்டுவிடல்
C) வருணாசிரமத்தை ஒழித்தல்
D) கடவுளையும் மதத்தையும் மறுத்தல்

**60) பொதுத் தொண்டில் உள்ளவர்களுக்குப் பெரியார் கருத்தில் உரைகல்லாகப் பயன்படுவது யாது?**

A) சிறைத் தண்டனை பெறுவது B) தொல்லையை ஏற்பது
C) பிறருடைய தூற்றுதலைச் சகிப்பது D) புகழ் பெறுவது

**61) ஒரு குடும்பத் தலைவியின் சிறப்புகளைப் பற்றிய தந்தை பெரியாரின் நூல்**

A) குடும்ப விளக்கு B) குடும்பத் தலைவி
C) குடும்பச் சுடர் D) வாழ்க்கைத் துணைநலம்

**62) மனுதர்ம சாத்திரத்தின் கொடுமையை விளக்கத் தந்தை பெரியார் எழுதிய நூல்**

A) மனுதர்மம் B) ஆரிய அநீதி
C) மனுநீதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி D) மனு அநீதி

**63) பேராசிரியர் டாக்டர் மு.சிங்காரவேலன் பெரியார் பற்றி எழுதிய சிற்றிலக்கிய வகையில் அமைந்த நூல் எது?**

A) பெரியார் தூது B) பெரியார் பிள்ளைத்தமிழ்
C) பெரியார் அந்தாதி D) பெரியார் உலா

**64) "நாத்திகக் கோட்பாட்டில் இங்கிலாந்தின் பெர்ட்ரண்டுரசல், மெக்சிகோவின் சிக்எய்ரோஸ் (Siqueiros in Mexico)" எனப் பெரியாரைப் புகழ்ந்து எழுதிய ஆங்கில வார ஏடு எது?**

A) சங்கர்ஸ் வீக்லிஎ B) இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி
C) பிளிட்ஸ் D) ஆன்லுக்கர்

**65) தந்தை பெரியார் குறித்து சர்.ஏ.இராமசாமி முதலியார் இவ்வாறு கூறினார்?**

A) தமிழ்நாட்டின் சாக்ரடீஸ் B) தமிழ்நாட்டின் ரூசோ
C) தமிழ்நாட்டின் இங்கர்சால் D) தமிழ்நாட்டின் லெனின்

**66) "பார்ப்பான் நீதிபதியாய், ஆட்சியாளனாய் இருக்கும் நாடு கடும்புலி வாழும் காடேயாகும்" என்ற பெரியாரின் கருத்து இடம் பெற்ற நூல் எது?**

A) நியாயம் எங்கே? B) நீதி எது?
C) நீதியின் நிழல் D) நீதி கெட்டது யாரால்?

**67) "பெரியார் ஒரு முழுப் புரட்சியாளர்" என்னும் நூலின் ஆசிரியர் யார்?**

A) புலவர் மா.நன்னன் B) புலவர் ந.இராமநாதன்
C) பேராசிரியர் இறையன் D) புலவர் தங்கப் பிரகாசம்

**68) "தலைகீழாக இருந்த சமுதாயத்தை நேராக நிற்கச் செய்தவர் பெரியார்" எனப் பாராட்டி எழுதியவர் யார்?**

A) ஜி.டி.நாயுடு B) கே.வி.ரெட்டி நாயுடு
C) எஸ்.முத்தையா முதலியார் D) ஊ.பு.அ. சவுந்தரபாண்டியன்

**69) "வான் தவழும் வெண் மேகத் தாடி ஆடும்; வளமான சிந்தனைக்கோர் ஆட்டம் இல்லை" எனப் பெரியாரைப் புகழ்ந்து பாடியுள்ள கவிஞர் யார்?**

A) நாரா.நாச்சியப்பன் B) கவிஞர் முடியரசன்
C) கவிஞர் வாணிதாசன் D) கவிஞர் கண்ணதாசன்

**70) எஸ்.வி.இராசதுரை – வ.கீதா இவர்கள் எழுதிய பெரியார் கொள்கை பற்றிய திறனாய்வு நூல் இது?**

A) பெரியாரும் சமதர்மமும் B) பெரியாரின் சுயமரியாதைக் கொள்கை
C) பெரியார் கண்ட சமதர்மம் D) பெரியார்-சுயமரியாதை-சமதர்மம்

**71) பெரியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் முதல் ஆயுள் செயலாளர் யார்?**

A) நாகம்மையார் B) மணியம்மையார்
C) கி.வீரமணி D) குத்தூசி குருசாமி

72) நாகம்மையார் குழந்தைகள் காப்பகத்தில் வளர்ந்து முதன் முதலாக பி.இ., படித்த பெண் யார்?

A) அறிவுமணி B) அன்புமணி C) கலைமணி D) அழகுமணி

73) தந்தை பெரியார் அவர்களின் எண்ணப்படி அறிவியல் கல்வியை வளர்க்கும் வண்ணம் திருச்சி பெரியார் உயர் நிலைக் கணினிக் கல்லூரி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

A) 1992 B) 1993 C) 1994 D) 1995

74) ஒரு பன்னாட்டு நூலகமாக வளர்ந்து வரும் பெரியார் பகுத்தறிவு நூலகம் - ஆய்வகம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

A) 1973 B) 1974 C) 1975 D) 1976

75) ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி மேம்பாட்டுக்காகத் தனிப்பயிற்சிகளை நடத்தும் பெரியார் பயிலகம் எங்கே இயங்கி வருகிறது?

A) பெரியார் கல்வி வளாகம் B) திருச்சி பெரியார் மாளிகை
C) ஈரோடு பெரியார் மன்றம் D) சென்னை பெரியார்திடல்

76) பெரியார் நகரக் குடும்ப நல மையம் சென்னையில் எங்கே உள்ளது?

A) வேப்பேரி B)அடையாறு C) ராயப்பேட்டை D) தியாகராயர்நகர்

77) உலகின் முதல் பெண்கள் பொறியியற் கல்லூரியாகிய பெரியார் மணியம்மை பெண்கள் பொறியியற் கல்லூரி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

A) 1987 B) 1988 C) 1989 D) 1990

78) தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி அரசினர் தொழிற்பயிற்சிக் கல்லூரி எங்கே அமைந்துள்ளது?

A) தஞ்சை B) சேலம் C) வேலூர் D) சென்னை

79) டில்லி பெரியார் மய்யம் அக்டோபர் 2000- த்தில் திறப்பு விழா நடந்தது! திறக்கப்பட்ட நாள் எது?

A) 1 B) 2 C) 3 D) 4

80) சுயமரியாதை இயக்கத்தையும் நீதிக்கட்சியையும் இணைத்துச் சேலத்தில் நடந்த மாநில மாநாட்டில் திராவிடர் கழகம் என்று 1944 ஆகஸ்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அது எந்த நாளில்?

A) 21 B) 23 C) 25 D) 27

81) கேரள ஈழவர் சமுதாயத்தின் சார்பில் நன்றிக் கடமையாகப் பெரியாரின் ஒரு நாள் வாழ்க்கையைத் திரைப்படமாக்கியவர் யார்?

A) பிரியதர்சன் B) இராமுகாரியத் C) ஷாகி D) நெடுமுடி

82) "நீங்கள் இருக்க வேண்டிய முதலமைச்சர் பதவியில் நான் இருக்க நேரிட்டு விட்டது" என்று பெரியாரிடம் நேரில் கூறிய மாகாண முதலமைச்சர் யார்?

A) கருணாநிதி B) காமராசர் C) பக்தவத்சலம் D) ஓமாந்தூர் ராமசாமியார்

**83) 1944 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழிசை பற்றிப் பெரியார் உரையாற்றிய கூட்டத்தின் தலைவர் யார்?**

A) கா.சுப்ரமணியபிள்ளை B) தண்டபாணி தேசிகர்
C) வெள்ளை வாரணனார் D) வ.சுப.மாணிக்கம்

**84) "சம்பூகனைக் கொன்ற அந்த ராமனை நான் ஏற்கவில்லை" என்று தந்தை பெரியாரைச் சந்தித்துக் கூறிய புகழ்வாய்ந்த காந்தியவாதி யார்?**

A) இராஜாஜி B) வினோபாவே
C) ஜெயப்பிரகாஷ் நாராயண் D) நேரு

**85) பெரியாருக்கு 'யுனெஸ்கோ' மன்றத்தின் சார்பாக வழங்கப்பட்ட பட்டயத்தை நேரில் வழங்கிய நிகழ்ச்சியின் தலைவர்**

A) வெங்கட்ராமன் B)சி.சுப்ரமணியம்
C) டி.டி.கிருஷ்ணமாச்சாரி D) இந்திய அமைச்சர் திரிகுணாசென்

**86) சுயமரியாதை இயக்க நிறுவனர் பெரியாரை நீதிக்கட்சியின் தலைவராக ஆக்கவேண்டுமென்று விடாப்பிடியாய் முயன்ற நீதிக்கட்சி முதலமைச்சர் யார்?**

A) பொப்பிலி அரசர் B) பனகல் அரசர்
C) சுப்புராயலு ரெட்டி D) பி.முனுசாமி நாயுடு

**87) "தென்னாட்டைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான பார்ப்பனர் அல்லாத மக்களின் சமூக - பொருளாதார விடுதலைக்குத் தக்க பலம் பொருந்திய சிறந்த ஆயுதம் திராவிடர் கழகம் என்னும் பெரியாரின் பேரியக்கமே" என்று கணித்த டில்லி இந்தியத் தொழிலாளர் மன்றப் பொதுச்செயலாளர் யார்?**

A) வி.பி.கார்னிக் B) இராமானுஜம்
C) ரணதிவே D) ஜவகர்லால் நேரு

**88) பெரியாரியல் பரப்பும் நோக்கத்துடன் ஈரோட்டுப் பாதை என்னும் இதழை நடத்தியவர் யார்?**

A) அ.பொன்னம்பலனார் B) ந.இராமநாதன்
C) சண்முக வேலாயுதம் D) பாரதிதாசன்

**89) அய்யாவின் நோய்க்குப் பண்டுவம் பார்த்த மருத்துவர்கள் ராமச்சந்திரா, பட்,ஜான்சன் ஆகிய மூவருக்கும் 18.8.73 அன்று நடந்த பாராட்டு எந்த ஊரில் இடம் பெற்றது?**

A) தஞ்சாவூர் B)திருச்சி C) வேலூர் D) ஈரோடு

**90) 9.12.1955 அன்று பெரியாரைச் சந்தித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்த வங்காள அறிஞர் யார்?**

A) கோபால கிருஷ்ணகோகலே B) ரவீந்திரநாத் தாகூர்
C) சுபாஸ் சந்திர போஸ் D) ஹரி கிருஷ்ண கோகலே

■



2015 செப்.17: தந்தை பெரியார் 137ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

# பெரியார் 1000

பள்ளி மாணவர்களுக்கான மாபெரும் வினா-விடைப் போட்டி

## விண்ணப்பப் படிவம்

**போட்டிப்பிரிவு - 1 : 6 - 8 வகுப்பு மாணவர்கள்**

பதிவு எண் :

1. பெயர் : ______________________

ஒளிப்படம்

2. தாய் பெயர் : ______________________

3. தந்தை பெயர் : ______________________

4. முகவரி : ______________________

______________________________________

______________________________________

______________________________________

5. பிறந்த தேதி : ______________________

6. வகுப்பு : ______________________

7. பள்ளியின் பெயர் & முகவரி : ______________________

______________________________________

______________________________________

8. குருதிப் பிரிவு : ______________________

9. தொடர்பு எண் : ______________________

10. மின்னஞ்சல் : ______________________

11. தந்தை பெரியாரைப் பற்றிய அறிமுகம் உண்டா? :

ஆம் / இல்லை ______________________

12. ஆம் எனில், எதன் / யார்மூலம் அறிந்துகொண்டீர்கள்?

☐ பெற்றோர் ☐ ஆசிரியர் ☐ நண்பர்கள்

☐ பாடம் ☐ இதர புத்தகங்கள்

☐ ஊடகங்கள் (தொலைக்காட்சி, திரைப்படம், பொதுக்கூட்டங்கள்)

13. கடந்த ஆண்டுகளில் ஆண்டு நடைபெற்ற போட்டியில் பங்கேற்றவரா? : ஆம் / இல்லை ______________________

நாள் :

கையொப்பம்